27052


ஜெர்மனி
ரஷ்யா
இட்டாலி
இங்கிலாந்து
திருக்குறள்
பிரான்ஸ்
தருமபுர ஆதீனம்
ஸ்பெயின்
சைனா
BALU BROS
வள்ளுவன் தன்
கினுக்கே தந்து
வான்புகழ் கொண்

# திருக்குறள் - உரைவளம்

(காமத்துப்பால்)

காலிகோ பைண்டு விலை ரூ. 6—0—0

தபாற் கூலி வகையரு ரூ. 1—0—0

விலாசம்:-

மானேஜர்,

தருமபுர ஆதீனம்,

தருமபுரம், மாயூரம் போஸ்ட்,

தஞ்சை ஜில்லா.

# திருக்குறள் - உரைவளம்
# காமத்துப்பால்

தருமபுர ஆதீனம்



தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

# ஜன்மநக்ஷத்திரவிழா அணிமலர்

**28—10—51**

**கர, ஐப்பசி**

வெளியீடு எண். 268.

# திருக்குறள் - உரைவளம்

## காமத்துப்பால்

தருமபுர ஆதீனம்.

பதிப்புரிமை பெற்றது.

# திருக்குறள் - உரைவளம்

## காமத்துப்பால்

*தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்*

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

*ஆணையின்வண்ணம் வெளிவருவது.*

1952

**வெளியிடுவோர்:**

*தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான*
*திருச்சி மலைக்கோட்டை மௌனமடம் கட்டளைவிசாரணை*
வித்துவான், ஸ்ரீமத், மௌன இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள்

**தொகுப்பாசிரியர்:**

வித்துவான், திரு, ச, தண்டபாணி தேசிகர்
*தமிழ்த்துறைத் தலைவர்*
*தருமபுர ஆதீனக் கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரி,*
*தருமபுர ஆதீனம்.*

**ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.**

# இதில் அடங்கியவை


| | | பக்க எண், |
|---|---|---|
| முகவுரை | ... | I |
| அதிகார அட்டவணை | ... | V |
| எடுத்தாண்ட நூல்கள் | ... | VI |
| மதிப்புரைகள் | ... | VII |
| திருக்குறள் ஆராய்ச்சி | .. | க-ாஉஅ |
| திருவள்ளுவமாலை | ... | ாஉகூ |
| பழம்பாடல்கள் | ... | ாகூசு |
| **காமத்துப்பால் - உரைவளம்** | . | 1-354 |
| குறள் முதற்குறிப்பகராதி | ... | 355 |
| குறள் சொல்லகராதி | ... | 357 |
| ஆதீன வெளியீடுகள் | .. | 369 |
| செய்தித்தாள்கள் | .. | 377 |
| ஆதீனப்பரிசுகள் | ... | 384 |

# இனிது முடிந்தது

"தாளுடைய திருச்சிலம்பு புலம்பநடம் புரியும்
தன்மைஅர னுக்கிசைந்த பேர்வழியி னாலும்
ஆளுடைய பிள்ளையார் அவதரித்த நாளும்
அவரமுது திருஞானம் அமுதுசெய்த நாளும்
சூளுடைஆ திரைநாளாம் சித்திரைஆ திரைநாள்
தொடங்கிஎதி ராம்ஆண்டு சித்திரைஆ திரையின்
நாளுடைய கதைமுடிப்பம் எனக்குன்றை வேந்தர்
நடத்தஅனை வருமிருந்து கேட்டனர்நாள் தோறும்"

—சேக்கிழார் புராணம்.

தெய்வத்தமிழ் திருத்தொண்டர்புராணம் அதனை இயற்றிய சேக்கிழார் அரங்கேற்றத் தொடங்கினர் ஓராண்டு சித்திரைத் திருவாதிரையிலே தொடங்கி, அடுத்த ஆண்டு சித்திரைத் திருவாதிரையிலே முடித்தார். ஓராண்டிலே அந்த இலக்கியம் எல்லோருடைய செவிவழியாகச் சிந்தையிலே நிறைந்தது. அந்தத் திருவாதிரையின் மாண்பைப்பற்றி, சந்தானசாரியர்களில் நாலாமவராகிய உமாபதி சிவாசாரிய சுவாமிகள் உரைக்கின்றார். ஆடலரசு ஆனந்தக்கூத்தாடும் நாள் - ஆளுடையபிள்ளையார் அவதரித்தநாள் - அவர் அமுது ஞானப்பால் அருந்திய நாள்; அந்நாளிலே திருத்தொண்டர் புராணம் செவ்விதின் முடிந்தது என்று. இது அன்றை வரலாறு

இன்று திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் இருபத்தைந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அவதாரத் திருநாள் சென்றவிக்ருதி ஆணடு அவதாரத் திருநாளில தொடங்கி கர ஆண்டு அவதாரத் திருநாளாகிய இன்று இந்நூல் இனிது முடிந்து வெளிவருகிறது இன்று அஸ்தத் திருநாள். அறத்தில் தொடங்கி, அறவழியாகப் பொருளீட்டி, அதனைக்கொண்டு உலக இன்பத்தோடு பேரின்பத்தையும் எய்துவதே மக்கள் வாழ்க்கையின் குறிக்கோள் ஆதலின், ஸ்ரீ ல ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடைய ஓராண்டு ஆட்சியின் அருள், இந்த முப்பால் நூலை எப்பாலவர்க்கும் எளிதில் வழங்கும் இன்பப்பணியாக நிறைவேறியது. எல்லாம் அஸ்த விசேஷம்.

அறத்துப்பால் வெளியீடும், அருள்வடிவாகிய அபிராமியம்மையின் திருமுன் நடந்தேறியது. பொருட்பால் எல்லாம்வல்ல சொக்கலிங்கப் பெருமான் திருமுன், அவர் கருணையால் மண்சுமந்து அடிபட்ட ஆவணிமூலத் திருநாளில்

வெளிவந்தது மூன்றாவதாகிய காமத்துப்பால் மீட்டும் அபிராமியம்மன் சந்நிதியில் வெளிவருகின்றது பொருட்பால குருஞானசம்பந்தப் பெருமானின் குருபூஜை மலராக வெளிவந்தது. அறமும், இன்பமும் இருபத்தைந்தாவது குருஞான சம்பந்தப்பெருமானின் அவதார அணிமலராக வெளிவருகின்றன. நடுவிலுள்ள பொருள், ஆதி குருஞானசம்பந்தப் பெருமான் விழாமலராக எய்த, அறமும் இன்பமும் 25-வது குருஞானசம்பந்தப் பெருமானின் ஜன்ம நக்ஷத்திர விழா மலராக எய்துவது 'நடுவணது எய்த இருதலையும் எய்தும்' என்ற வாக்கிற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருத்தல் மகிழ்தற்குரியது

காமம் என்பது உலகியலில் பிணைப்பு உண்டுபண்ணும் பெருங்குணம். அதுவே அநுபவ முதிர்ச்சியால ஆனந்த வடிவாய் உலகங்கடந்த உயர் நிலையை விளக்குவதாயும் முடியும். காமம் காதல் என்பன ஒருபொருட் கிளவிகள் காமத்தின் பயன் இன்பம். வள்ளுவர், ஊடிய காமத்தின் பயனாக இன்பத்தைக் கூறுவதிலிருந்தே காமம் காரணமும் அதன்பயனாகிய இன்பம் காரியமும் ஆம் என்பது தெளிவு. அன்றியும் வள்ளுவர் காதலைக் காமம் என்றபெயராலே அப்பகுதிமுழுவதும் வழங்கி இருத்தலும் உற்று நோக்குதற்குரியது, அதனாலேயே பரிமேலழகரும் வேறு சிலரும் இன்பப்பால் என்று அழையாது காமத்துப்பால் என்றே கூறினர். இப்பகுதி களவும் கற்பும் என இருபிரிவையுடையது ஏனைய பொருள்நூலைப்போல இருகைகோள்களையும் எடுத்து விரித்துக் கூறுது களவிற்கு முன் நிகழ்வதாகிய கைக்கிளையை முதல் இரண்டு அதிகாரங்களானும், ஏனைய களவின் நுகர்ச்சிகளை ஐந்து அதிகாரங்களானும் அறிவித்தனர். கற்பியலில் இன்பம் சிறப்பது புணர்ச்சிக்காலத்திலன்றிப் பிரிவுக்காலத்திலேயே ஆதலின் பிரிவாற்றாமை முதல் பதினெட்டு அதிகாரங்களான் கற்பை உணர்த்தினர்.

காமம் என்ற அளவிலே உலகியல் என்று எண்ணுவது கூடாது. காமம் என்ற சொல், சென்று பற்றிவிடாது நின்று வளரும் ஆசையை அறிவிப்பதாகும். ஒருவனோடு ஒருத்தியிடை நிகழ்வது உலகியற்காமம்; உயிரோடு இறைவனுக்கு உளதாவது அறிவியற் காமமாகிய பேரின்பக் காதல் பெரியோர்கள் உலகியற் காமத்தைக்கொண்டே அறிவியற் காமத்தை உவமை அளவையால் விளக்குவர். உலகியற் காமம் உருவும் உருவும் சென்று இயைதலால் தோன்றி, உள்ளப் புணர்ச்சியாய் முறுகி, அநுபவ இன்பமாய் அகத்தில் அமைவது. அறிவியற் காமம் அருவும் அருவும் இயைவதால் எழுந்து, ஆனந்தவடிவாய் அது தான் என்னும் பரிசு வேறு இன்றி, அவனே தானேயாய் நிற்பது அந்த உயர்ந்த நெறியை விளக்க உலகியல் நெறியாகிய காமம் உவமை அளவைக்கு உறுதுணையாய் நிற்கின்றது.

இதனை எண்ணியே வள்ளுவர் பெருமான், துறவறமாகிய காரண வகையால் உபாயங்களைமட்டும் கூறி, உபாயப் பயனாகிய ஆனந்த அநுபவத்தைச் சிற்றின்பத்தோடு பேரின்பத்தையும் சேர்த்துச் சிந்தித்து, உலகம் தெளியும் வண்ணம் காமத்துப்பாலால் உரைத்தார். ஆதலின் காமத்தில் இல்லறத்தின்

பயனாகிய இன்பமும், துறவறத்தின் பயனாகிய பேரின்பமும் ஒருசேர விளக்கப் பெற்றன. இன்றும் அவ்வொற்றுமை விளக்கவே ஞானபீடத்து அதிபருடைய அவதாரத் திருநாளில் இவ் இன்பம் வெளிவருவதாகக் திருவருள்வாய்ப்புக் கிட்டியது,

இப்பதிப்பு வெளிவர எல்லா வகையானும் ஆக்கம் தந்து ஊக்குவித்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடைய பெருங்கருணைத் திறத்துக்கு அடியேன் செய்யும் கைமாறு யாதுளது! இப்பதிப்பில உபகாரமாகும்படி, பலநூற் கருத்துக் களையும் குறித்துதவிய அவர்களுடைய அருங்கலைததிறன் அடியேனுக்குப் பெரிய அதிர்ஷ்டமாகும்.

இந்தப்பதிப்பு இவ்வண்ணம் நன்கமைய உதவியாக இருந்தன, ஒப்பு நோக்கக் கிடைத்த ஏடுகள். அவற்றின் தொகையையும், கிடைத்த விதத்தையும் அறத்துப்பால் முகவுரைக்கண்ணே மொழிந்தேனாயினும், செய்யாமற் செய்த உதவியையுடைய ஏடுதேடித்தந்த இன்றமிழ்ப் பெருமக்களை மீண்டும் ஞாபகப் படுத்துகிறேன்

1. வே. ரா, தெய்வசிகாமணிக் கவுண்டர், பரிதியார் உரை 1
2. ௸ காளிங்கர் உரை 1
3. இலக்கண விளக்கம் சோமசுந்தர தேசிகர் வீட்டுப்பிரதி (கையெழுத்து) (A. கல்யாணசுந்தர தேசிகர் மூலம்) பழைய உரை 1
4. சைவ எல்லப்ப நாவலர் மாளிகைப் பிரதி பரிமேலழகர் உரை 1
5. தருமபுர ஆதீனத்துப் புததகசாலைப் பிரதி ௸ உரை 1

இங்ஙனம் ஏடுகள் அளித்துத் தமிழாக்கத்திற்கு உதவிய அனைவருக்கும் அடியேன் செய்யும் கைம்மாறு யாதுளது!

இவையன்றி, காலஞ்சென்ற தமிழ்ப்பேரறிஞர் தி பொ பழநியப்ப பிள்ளை அவர்கள் பதிப்பித்த பரிப்பெருமாள், காளிங்கர் உரைப்பிரதியும் ஒப்பு நோக்குதற்குப் பெரிதும் உதவின. அவர்களுக்குக் கிடைத்தது மிகச்சிதைந்த ஒரு ஏட்டுப்பிரதியே, அதனை வைத்து அவர்கள் வெளியிட்ட பெருமை மிகமிகப் பாராட்டற்குரியது. அப்பதிப்பில் அவர்கள் புள்ளியிட்டு விடுத்த பல பகுதிகள் இப்பதிப்பில் விளக்கம் பெற்றுள்ளன. விடுபட்டதும் சிதைந்ததுமாக உள்ள அறத்துப்பால் பகுதிமுழுமையுமே ஆதீன வெளியீட்டில் மிகத் திருத்தமாக வெளிவந்துள்ளது

இப்பதிப்பில் ஏனைய பால்களைப்போல ஐவர் உரைகளும், மற்றும் மேற்கோள் பகுதி, ஒப்புமைப்பகுதி, முதுமொழி வெண்பாக்கள் ஆகியனவும் ஆங்காங்கே அழகு செய்கின்றன அடியேனது குறிப்பும் தேவையான இடங்களில்

சேர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வோரதிகாரத் தொடக்கத்திலும் தொகுப்புரை எழுதப்பட்டுள்ளது.

திருக்குறள் ஆராய்ச்சி என்ற தலைப்பில் திருக்குறள்மணியைப் பல கோணங்களிலிருந்து பார்த்து அதனொளி அடியேனது உள்ளங்கவர்ந்த முறைகளை ஒருவாறு தொகுத்தெழுதியுள்ளேன் மொழிபெயர்ப்பு என்பார் தம்கருத்துக்குக் கச்சைகட்டிச் சாதிக்கும முறையால் திருக்குறள் எழுந்த காலத்திற்கும் அதனை அடியொற்றி எழுந்த ஆசிரியர்களின் கருத்திற்கும் மாறாக மனம் போனபோக்கில் உரை கண்டு அவ்வப்போது தேவைப்படும் அரசியல் மேடைப்பேச்சிற்குத்தக ஆளும் நிலைமை இன்றைக்கு வந்திருக்கிறது அந்நிலைக்கு இடங்கொடாமல் உலகிலுள்ள எந்த மொழியும் குறிக்கோளின்றி இயங்காது; மக்கள் எங்கு வாழ்ந்தாலும் குறிக்கோள் ஒன்றாகவே இருக்கும் என்பதை எண்ணி அந்தந்தமொழியின் இலக்கியங்களுக்குள்ள முதன்மையைக் கெடுக்காது ஒழுகுதல் வேண்டும்; இதுவே இந்த ஆராய்ச்சியின் நோக்கம் விளங்கச் சொல்லின் திருக்குறள் வழிநூல், இல்லை! இல்லை! முதனூலே என்றெல்லாம் சாதிக்கு முறையில் எத்தனையோ புதுக் கருத்துக்களைப் புகாத இடத்திலும் புகுத்தக்காண்கிறோம். அத்தகைய முயற்சி, பொதுமறையின் பொதுமையாகிய பெருமையைக் கெடுப்பதாகும். கருத் தொற்றுமை யிருக்கலாம் அதனைக்கொண்டு இதனையாக்கினர் என்றல் கூடாது. வள்ளுவர் வினையின் நீங்கி விளங்கிய அறிவினராகிய முனிவர் என்பது உலகம் உணர்ந்ததே. ஆதலின் அவர்நூலும் முதனூலாதற்கு ஐயம் இன்று.

வழக்கம்போல இப்பகுதிக்கும் வேண்டிய குறிப்புகளை உடனிருந்து ஆராய்ந்துதந்த அறிஞர் பெருமக்களாகிய வித்துவான் M. ஆறுமுகம், வித்துவான் ந சிவப்பிரகாச தேசிகர், வித்துவான் V S குருசாமி ஆகியோர்களுக்கு நல்லன எல்லாம் நல்கும்படிச் சொக்கலிங்கப் பெருமானை மனம்மொழி மெய்களால் வணங்குகிறேன். இலக்கண உரைக் குறிப்புகள் சிலவற்றைத் தொகுக்க உடன் இருந்து உதவிய சென்னை புலவர் S. சீனுவாசன் அவர்களுக்கும் தமிழன்னை எல்லா நலனும் நல்குவாளாக!

இவ்வெளியீட்டைத் தமது மதிப்புரையால் அழகுபடுத்திய திரு. ரஸிகமணி அவர்களுக்கு அடியேனுடைய நன்றி.

ஒன்றுக்கும் பற்றாத அடியேனை இப்பெரும்பணியில் ஈடுபடுத்தி முற்று வித்த அபிராமித்தாயின் அடிமலரில் இவ்வணிமலர் என்றும் விளங்குவதாக,

குற்றம் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

**வாழிய செந்தமிழ் !** **வாழிய தமிழ்மறை !!**
**வாழிய தருமை !** **வாழிய வள்ளுவர் !!**

தருமபுரம்,
28—10—51.

**ச. தண்டபாணி**

# அதிகார அட்டவணை


| | | பக்க எண் |
|---|---|---|
| அலரறிவுறுத்தல் | ... | 108 |
| அவர்வயின்விதும்பல் | ... | 264 |
| உறுப்புநலனழிதல் | ... | 227 |
| ஊடலுவகை | ... | 341 |
| கண்விதுப்பழிதல் | ... | 151 |
| கனவுநிலையுரைத்தல் | ... | 201 |
| காதற்சிறப்புரைத்தல் | ... | 78 |
| குறிப்பறிதல் | ... | 23 |
| குறிப்பறிவுறுத்தல் | ... | 277 |
| தகையணங்குறுத்தல் | ... | 4 |
| தனிப்படர்மிகுதி | ... | 177 |
| நலம்புனைந்துரைத்தல் | ... | 62 |
| நாணுத்துறவுரைத்தல் | ... | 93 |
| நிறையழிதல் | ... | 252 |
| நினைந்தவர்புலம்பல் | ... | 189 |
| நெஞ்சொடுகிளத்தல் | ... | 239 |
| நெஞ்சொடுபுலத்தல் | ... | 303 |
| பசப்புறுபருவரல் | ... | 164 |
| படர்மெலிந்திரங்கல் | ... | 137 |
| பிரிவாற்றாமை | ... | 121 |
| புணர்ச்சிமகிழ்தல் | ... | 41 |
| புணர்ச்சிவிதும்பல் | ... | 291 |
| புலவி | ... | 315 |
| புலவிநுணுக்கம் | ... | 327 |
| பொழுதுகண்டிரங்கல் | ... | 213 |

# எடுத்தாண்ட நூல்கள்

அடியார் - அடியார்க்கு நல்லார்.
இ-கொ - இலக்கணக்கொத்து.
இரங் - இரங்கேசவெண்பா.
இலக்-சூரு - இலக்கணவிளக்கச் சூறாவளி
இளம் - இளம்பூரணம்.
இறையனார் - இறையனார்அகப்பொருள்.
இன் - இன்னிலை.
ஐங் - ஐங்குறு நூறு.
கந்த - கந்தபுராணம்.
கம்ப - கம்பராமாயணம்.
கலி - கலித்தொகை.
கலிங் - கலிங்கத்துப்பரணி.
காஞ்சி - காஞ்சிபுராணம்,
கார் - கார்நாற்பது.
காரி - காரிரத்தினகவிராயர்.
காளிங் - காளிங்கர்.
குண - குணசாகரர்.
குணவீர - குணவீரபண்டிதர்.
குறுந் - குறுந்தொகை.
கோடீச் - கோடீச்சுரக்கோவை.
சங்கர - சங்கரநமச்சிவாயர்.
சிவசிவ - சிவசிவவெண்பா.
சிவஞான - சிவஞானமுனிவர்.
சிலப் - சிலப்பதிகாரம்.
சீவக - சீவகசிந்தாமணி.
சுவாமி - சுவாமிநாததேசிகர்.
சூ - சூத்திரம்.
சூளா - சூளாமணி.
சேனா - சேனாவரையம்.
சொக்கப் - சொக்கப்ப நாவலர்.
சோமேசா - சோமேசர்முதுமொழி வெண்பா.
தக்க - தக்கயாகப்பரணி.
தஞ்சை - தஞ்சைவாணன் கோவை.
தமிழ் - தமிழ்விடுதூது.
தா - தாழிசை.
திரு-உலா - திருக்கயிலாய ஞானஉலா.
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்.
திருஞா - திருஞானசம்பந்தர் தேவாரம்.
திருத் - திருத்தொண்டர் வெண்பா.
திருவாய் - திருவாய்மொழி,
திருவிளை - திருவிளையாடல்.
திருவெங் - திருவெங்கைக்கோவை.
தினகர - தினகரவெண்பா.
தெய்வச் - தெய்வச்சிலையார்.
தொல் - தொல்காப்பியம்.
தொல்-விருத - தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தி.
நச் - நச்சினார்க்கினியர்.
நம்பி - நம்பியகப்பொருள்.
நற் - நற்றிணை.
நன் - நன்னூல்.
நாலடி - நாலடியார்.
நுண் - நுண்பொருண்மாலை.
பக் - பக்கம்.
பரிதி - பரிதியார்.
பரிப் - பரிப்பெருமாள்.
பரிபா - பரிபாடல்.
பரிமே - பரிமேலழகர்.
பழ-நா - பழமொழிநானூறு.
பழைய - பழையவுரை.
பா - பாடல்.
பாண்டிக் - பாண்டிக்கோவை.
பிரபு - பிரபுலிங்கலீலை.
பெரிய - பெரியபுராணம்,
பெருங் - பெருங்கதை
பெருந்தே - பெருந்தேவனார்.
பேரா - பேராசிரியர்.
பொருள் - பொருளதிகாரம்.
மணக் - மணக்குடவர்.
மயிலை - மயிலைநாதர்.
மாற - மாறனலங்காரம்.
முத்தொள் - முத்தொள்ளாயிரம்.
முதுமொழி - முதுமொழிமேல்வைப்பு,
முருகேசர் - முருகேசர் முதுநெறி வெண்பா.
யா-கா - யாப்பருங்கலக் காரிகை.
யா-வி - யாப்பருங்கல விருத்தி.
வளை - வளையாபதி.
விநா - விநாயகபுராணம்.
வில்லி - வில்லிபாரதம்.
வீர - வீரசோழியம்.

# மதிப்புரை

திருக்குற்றாலம்,

**ரசிகமணி, திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்.**

தற்கால இலக்கிய உலகில், இன்று பிரமாதப்படுவது நாலை தேடிப் பிடிக்கவேண்டிய காரியமாய்ப் போய்விடுகிறது. மேலைநாட்டு இலக்கிய சரித்திரத்தில் இதற்கு வேண்டியமட்டும் சான்றுகள் உண்டு.

விஷயம் இப்படியிருக்க இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னுள்ள ஒரு நூலை நம்மவர் நெடுகிலும் கற்று மதித்துவந்திருக்கிறார்கள் என்றால் நம்மவருக்கு நல்ல பாராட்டுதான்; நூலும் பாக்கியம்செய்தது என்றுதான் சொல்லவேண்டும்.

திருக்குறள்தான் அத்தகைய நூல். இப்போதுகூடத் திருக்குறளை பக்தி சிரத்தையோடு படிக்கிறவர்கள் ஆயிரக்கணக்கானபேர். அத்தனைபேரும் ஒரு இனத்தார் ஆகிவிடுகிறார்கள். எவ்வளவு பெரியலாபம் இது மக்களுக்கு!

தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மகா சந்நிதானம் அருளிய கட்டளையின்படி திருக்குறளுக்கு என்றும் இல்லாத, சகல சார்புகளையும் உள்ளடக்கிய பதிப்பு ஒன்று வெளிவந்திருக்கிறது. மூன்று பால் களுக்குமான உரைகளை எல்லாம் கொடுத்திருக்கிறது.

திருவள்ளுவரது இதயத்தோடு ஒட்டித் தினைத்தவர்களுக்கு குறள் களையும் உரைகளையும் துருவி ஆராய ஆத்திரமே உண்டாகும். அந்த ஆத்திரத் தைத் தீர்க்கக்கூடிய பதிப்பு இது.

நூல் சம்பந்தமாகவும் உரைகள் சம்பந்தமாகவும் எத்தனையோ கேள்வி கள் எழுகின்றன; அவைகளைக் குறித்த விரிவான ஆராய்ச்சி ஒன்று பதிப்பாசிரியர் வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் உதவியிருக்கிறார்கள். தமிழ் மக்களுக்கு நிலையான துணை. வாழ்க தமிழ்!

உ

குருஞானசம்பந்தர் திருவடி வாழ்க.

# திருக்குறள் ஆராய்ச்சி

## தோற்றுவாய் :

உலகமக்களின் நாகரிகவளர்ச்சி மொழிவளர்ச்சியைப் பொறுத்தே துணியப்பெறும். நாகரிகம் வாழ்வியல்நாகரிகம் என்றும், அறிவியல் நாகரிகம் என்றும இருவகைப்படும. வாழ்வியல் நாகரிகம் வாழ்விற்கு வேண்டிய தேவைகளைப் பெருககுவதிலும அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதிலும் வளர்ச்சியடைவது. தேவைகள் பெருக அவைகள் வளர்வது இயற்கையே. அறிவியலநாகரிகம் அமைவஃது இலேசானதல்ல. வாழ்வியல் நாகரிகம் வளர்ந்து, வாழ்ந்து, அவற்றால் விளையும் துன்ப இன்ப அநுபவங் கள் முற்றி, உண்டான உணர்வே அறிவியல் நாகரிகம். இந்நாகரிகத்தை எத்தனையோ மககள் உணர்ந்திருந்தார்கள். உணர்ந்தவற்றை அவ்வப் போது தமமிடையே பழகும் மககளிடையே வாயுரையாக வழங்கினர்கள். அவைகள் அவர்கள்காலத்தே - அவர்களிடம்கேட்ட சிலர்காலத்தே மட்டும் சிந்தனையில் தவழ்ந்து பின்னர் மறைந்துபோயிருககும். அவ்வண்ணம் இன்றிச் சில பேரறிஞர்கள் தம் அநுபவ சிந்தனைக் கருவூலங்களின் கணக்குகளை அழியாத எழுதநோவியங்களாக - எல்லார்வாயிலும் எளிமை யில் தவழும் பாட்டோவியங்களாக - கருத்தில் நடக்கும கவிதைகளாக ஆககிவைத்தார்கள். அவர்களாலேயே மொழி வளர்ந்தது - வளர்கின்றது. இதுவே இலககிய வளர்ச்சி.

இலககியங்கள் பல வளர்ந்ததும் அவற்றிலெல்லாம் ஒருங்கே பரவியிருக்கும் ஒரு பண்பைப்பற்றி ஆராயும் ஆராய்ச்சி மககட்குப் பிறந்தது. பலநிறப்பசுக்கள் கறந்த பாலில் ஒருசேரப் பரவியிருககும் பண்புகளாக வெண்மையையும் சுவையையும் நாம் அநுபவிப்பதுபோல அவர்களும் பல இலககியங்களிடம பரவியிருக்கும் பண்பை உணர்ந் தார்கள். அப்பண்புதான் அழகு; அதுதான் இலக்கணம்.

இவ்வண்ணம், பல இலக்கியங்களை இயற்றிய ஆசிரியர்களும், கற்ற ஆசிரியர்களும் "இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇயிருந்து" காழ்ப் பின்றிக் கண்ட கவிதை அமைதிகளையே இலககணமாகத் • தந்தனர்.

இதனால் போந்தபயன் போலிப் புலவரும், புரட்சிப் புலவரும், தம் அறிவையே பெரிதெனமதித்துத் தான்றோன்றித்தனமாக இலக்கியங்களை எழுப்பும் ஏழைப் புலவர்களும் இயற்றும் மனம்போன போக்கிற்கு இடங் கொடாமல் எல்லாக் கவிதையும் ஒரு வரம்பில அடங்கிநடக்கச் செய்ததே யாம். இருகரைக்குள் அடங்கிச் செல்லும் யாறே பாய்ச்சலுக்குப் பயன் படும்; தூசியும் துப்பும் விழாதபடி பாதுகாக்கும் உணவு வகைகளே உண்ணத்தக்கன. அவைபோல வரம்பிற்குட்பட்டு எழும் இலக்கியங்களே மொழியை உள்ளபடி வளர்ப்பன. இங்ஙனம், மொழி மேலும் மேலும் வளருதற்காகவே இலக்கணங்கள் உண்டாயின. இலக்கியக் கற்பகங்களை வளரவிடாது தடுக்கின்ற வேர்ப்புழுக்கள் அல்ல இலக்கணங்கள். அம் மரங்களை ஒடித்து ஒழுங்காக்கி உருவாக்கிப் பருக்கவைக்கும் பண்பாடுகளே இலக்கணங்கள். அடித்து வளர்க்காத பிள்ளையும், முறுக்கி வளர்க்காத மீசையும் பயன்படாதவாறுபோல இலக்கணங்களால் சோதிக்கப்படாத-தூய்மையுறுத்தப்படாத இலக்கியங்களும் அழகும் பயனும் உடையன ஆகா. சுருங்கக்கூறின் இலக்கணம் உயிர்; இலக்கியம் உடல். இலக்கணம் ஒளி; இலக்கியம் விளக்கு. இலக்கணம் மணம்; இலக்கியம் பூ. ஆதலால் உலகத்திலுள்ள எந்த மொழிகளும் இலக்கிய உடலில் இலக்கண உயிரை இயற்கையேபெற்று விளங்கும் என்பது முடிபு. "எள்ளினின் றெண்ணெய் எடுப்பதுபோல இலக்கியத்தினின்று எடுபடும் இலக்கணம்." என்பது அகத்தியம்.

## மொழிக்கலப்பும் இலக்கணச் சீர்திருத்தமும் :

ஒவ்வொரு மொழியையும் பேசும்மக்கள் சமுதாயவாழ்வாகிய கூட்டுவாழ்வைத் தொடங்கிய காலத்துத் தமமுள்கலந்தனர். அவரவர்கள் மொழியும் கலந்தன. கருத்துக்களும் அவ்வண்ணமே. அப்போது கலப்பு, வாழவில்மட்டுமன்றி இலக்கியங்களிலும் எழுந்தன. மொழி களைத் தத்தமது மொழியியற்கைக்கு ஏற்ப உருமாற்றி அமைத்துக் கொண்டனர். கருத்துக்களையும் பரிமாறிக்கொண்டனர். ஆனால் அவை களில் தங்கள் பண்பாட்டிற்கு ஏற்றவைகளையே கொண்டனர் என்பது மட்டும் தெளிவு. கலந்த மொழிகள் எல்லாவற்றிற்குமே இந்தவிதி பொது. ஆதலால் இன்னகருத்து இன்னமொழியிலிருந்து வந்தது. இந்த அமைப்பு இன்னுரை அடியொற்றி அமைக்கப்பட்டது என்று முடிவுகட்டுதல் அத்துணைச் சிறந்ததன்று. இங்ஙனம் கூறுவார் கூற்று இன்ன இன்ன நூல்களில் நிரம்பிய புலமையுடையர் என்று நாம் அறிந்துகொள்ள ஏதுவாகுமேயன்றி, ஓர் ஆசிரியர் இதனைக்கொண்டுதான் இதனைச் செய்தார் என்று அவர் அறிவை அளவுபடுத்தவியலாது. 'தான் கண்டனைத் திவ்வுலகு', என்ற அறிவுரையே இத்தகையார்க்கு ஏற்றதாகும்.

## கவிஞர் கருத்துலகம் ஒன்றே :

ஆயிரககணககான நூல்களைப் படித்தவனும் கவிஞனாக முடியவில்லை. ஒன்றுமே படியாதவனும் கவிஞனாக முடியாது. கவித்துவம் என்பது கருவிலே வாய்தத திரு. 'காரிகை கற்றுக் கவிபாடுதலிலும பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று' என்பது பழமொழி. இலககணம் படித்து, எதுகை மோனைக்கு இடர்ப்படுமபோது கருத்து, கால்வாங்கி ஓடிவிடும். கருத்தின்வழி சொல் அமைவதில்லை. இலககணம் படித்தவன் கவி இயற்ற முடியாது அச்சக கடலில் ஆழ்கிறான். ஆதலால இயற்கையில் கவிதைவெள்ளம பெருகவேண்டும; எழுந்த கவிதைவெள்ளத்தின் அழகை அளககும் அளவுகோலாக இலக்கணம பயன்படவேண்டும்.

கவிஞன், கருத்துலகில் பறந்து திரியும் இனிய குயில். குயில்கள் ஒன்று கூவுவதைக்கேட்டு ஒன்று கூவுவதில்லை. எல்லாம் ஒரேமாதிரி யாகத்தான் கூவுகின்றன. அதுபோலவேதான் கவிககுயில்களும்.

கம்பன் கருத்துக்கள் பல காளிதாசனிடத்தில் காணப்படுகின்றன. காளிதாசன் கருத்துககள் பல செகப்பிரியரிடம் திகழ்கின்றன. கம்பன் வால்மீகத்தை மொழிபெயர்த்துச்சொல்ல அதனை வாங்கிக்கொண்டு கற்பனையமுதம் குழைத்து, கவிதையமுதத்தைப் பரிமாறினான் என்பது வரலாறு. ஆகவே கதை மொழிபெயர்ப்பு; கற்பனை சொந்தம். ஆதலால் கற்பனையால் கம்பன் காளிதாசனைப் பின்பற்றினான் என்று சொல்ல முடியுமா ?

கவிஞர் கருத்துக்கள் அவரவர்கள் வாழக்கை அநுபவங்களால் உலக ஏட்டிலிருந்து உணர்ந்து கொள்ளப்பட்டவை என்று துணிதல் வேண்டும். ஆதலால் கருத்துக்களெல்லாம் ஒன்றுயிருத்தல் இயல்பே; ஏன் சொற்களுங்கூட அமைந்துவிடலாம். காலத்தின் முற் பிற்பாடோ பழமை புதுமையோ இதனைத் தடுத்துவிடமுடியாது. ஒருவர் கருத்தையோ அமைப்பு முறையையோ பின்பற்றியே மற்றொருவர் கூறினரென்றல் ஒரு போதும் பொருந்தாது என்று துணியலாமல்லவா? இநதச் சில எண்ணங் களைககொண்டு செந்தமிழ் மொழியினையும் சிந்தித்தல்வேண்டும்.

## இருபெரு நூல்கள் :

வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றபடி கடல்கோளுக்கும் படை யெடுப்பிற்கும் தப்பி, இன்று பழமையைப் பாதுகாத்து நிற்பன தொல் காப்பியமும் திருககுறளும் என்பதை யாவரும ஒப்புவர். தொல்காப்பியம்

மொழியமைதியை முன்னர்க்கூறிப் பின் அம்மொழியைப் பேசும் மக்களுடைய அகவாழ்வு புறவாழ்வின் இயல்புகளை எடுத்து விளக்குகிறது. அடுத்து பாக்களில் அமைந்துள்ள அழகுகள், அவைகளால் மனிதன் அனுபவிக்கும் சுவைகள், சுவைகளை உணருமபோது உளவாகும் உடல் நிலைகள் முதலான சிறந்த கவிதைப் பண்புகளைக் காட்டுகிறது. பின்னர் அவ்வாழ்வுகளை உணர்த்தும இலககியங்கள் எந்த எந்தப் பாக்களால் இயற்றப்பட்டிருந்தன? அப்பாக்களின் தன்மைகள் யாவை? என்பதைக கூறுகிறது. இறுதியாகச் சொல்லாட்சிபற்றியும் நூல்களின் பொது இயல்புபற்றியும அமைந்துள்ள சில மரபுகளையும் தெரிவிககின்றது. இங்ஙனம் தொல்காப்பியம் தமிழர் மொழி இயல்புகளையும், வாழ்க்கை இயல்புகளையும், வாழ்கவகையை மொழிகளில் வைத்துககாட்டும் இலககிய இயல்புகளையும் அறிவிககின்றது. அதனுல் அது இலக்கணம்.

திருக்குறளோ மககளின் வாழ்க்கை இயல்புகளைமட்டும் அறிவிக்கிறது. அதனுல் இலக்கியமாயிற்று. ஒருலட்சிய வாழ்வின் இலககணங்களை அறிவிப்பதால் இதனை இலக்கிய இலக்கணம் என்றுகூடக் கூறிவிடலாம். இதனைககொண்டு தமிழ்மக்கள் தமது வாழ்கவகையைத் திருத்திககொள்வர் என்பதே ஆசிரியர் திருவுள்ளக்கிடக்கையாதல்வேண்டும்.

எந்த மனிதனும் ஒரு லட்சியத்தை நோக்கியே வாழ்க்கைப் பாதையில் இன்பப் பயணம் செல்லுதல் வேண்டும். அந்த லட்சியம் தமது நிலையினும் மேலானதாக இருத்தல்வேண்டும. எத்துணை இடையூறுகள் நேரினும் அதனைநோககியே அவன் செல்லுதல் வேண்டும். இதனையே வள்ளுவர் 'உள்ளுவதெல்லாம உயர்வுள்ளல்' என்று ஊக்குகின்ருர் பாருங்கள். இத்தகைய திருக்குறளும், தொல்காப்பியம்போல கருத்தும் அமைப்பும தமிழுககே சொந்தமானதாய், தமிழுககு உயர்வளிப்பதாய் இருப்பது.

## செந்தமிழைவிடத் திருக்குறளே விளக்கமானது :

மொழியைவிட மொழியிலுள்ள ஒரு நூல் விளக்கம் பெற்றது ஒரு புதுமையே. செந்தமிழின் அமைப்பையும போக்கையும் அறியாதநாடுகளும் திருககுறளை அறிந்திருககின்றன. திருவள்ளுவரை அறிந்திருக்கின்றன. இதன் கருததுமணிகளைத் தமது இலககியப் பொன்னுபரணங்களில பதித்து அழகு பார்ககின்றன. அப்படியே இந்நூலை மொழி மாற்றித் தமதாக்கிக்கொண்டும் இருககின்றன. அப்படித் தமதாக்கினுலும், கருத்தை அப்படியே எடுத்துத் தம் இலக்கியத்தில் பொதிந்து வைத்துக் கொண்டாலும வள்ளுவர் குறள் என்ற உரிமையை மாற்றவில்லை.

தமிழ் தந்த வளன் என்ற நிலையை அழிக்கவில்லை. எமது கருத்தே வள்ளுவருக்கு வந்தது என்ற வறட்டுப்பெருமையும பேச முற்படவில்லை. நம் நாடுகளிலுள்ள சில பேரறிஞர்கள்தாம் வள்ளுவருக்குச் சொந்தக் கருத்து இல்லை என்று சொல்வதில இன்புறக கூடியவர்கள். மேலை நாட்டார் மேலைநாட்டாரே. வள்ளுவர் கருத்தை வள்ளுவரதாகவே வைத்துச் சுவைத்துப் பாராட்டி மகிழ்கின்றார்கள். தமிழும் இந்தத் திருககுறளைப் பெற்றதால் தன்மதிப்புடன் விளங்குகிறது.

## திருக்குறள் அழியாப்பெருமையுடன் விளங்குவது ஏன்?

பொதுவாக இலககியத்தோற்றத்தில் நம்நாட்டு இலக்கியங்களுக்கும் பிறநாட்டு இலக்கியங்களுககும் பெரிதும் வேறுபாடுண்டு. பிறநாட்டிலக்கியங்கள் கவிஞனுடைய அகவாழவு புறவாழ்விலுண்டான துன்ப இன்பங்களை அடிப்படையாகக கொண்டு மலர்ந்து, விருப்பு வெறுப்புக்களாகிய மணங்களை வீசுவன. மலர்ந்த காலத்தில மனத்தைக் கொள்ளை கொள்ளும் மலர்களைப்போல, தோன்றிய காலத்தில் உலகத்தைச் சொக்க வைககும. காலங் கழிந்த பின்பு வாடிய பூப்போல பழங்கதை தெரிந்து கொள்ளும் அளவிற்குப் பயன்படும். நம் நாட்டு இலக்கியங்களோ உலகியல் தத்துவங்களை அடியொற்றி எழுதப்பெறுவன. கவிஞன் வாழ்ககைத்தாம் அவற்றில் பிரதிபலிப்பதில்லை எனலாம். கவிஞனின் வாழ்க்கை, வறுமையால் வயிறு ஒட்டி நிற்கும்; அவன் கவிதையில் அதனைக காணமுடியாது. கவிஞன் அறிவுலகத்தில தான் ஒரு அரசனாகி ஆனையும தானையும புடைசூழ அவனியெல்லாம் உலாவந்து படிப்பவர்களையும் பககம் நின்று கேட்பவர்களையும் அந்த நிலையில் ஆககி விடுவான். கவிஞன ஒரு அரசிளங் குமரனாக இருப்பான். அவன் மேனியில் சுருங்கிய தசையையோ காண இயலாது. ஒட்டிய கன்னமும் குழிந்த கண்ணும் அவன் முகத்தை அழகுசெய்யமாட்டா. ஆனாலும், ஒரு துறவுக் காவியம் செய்வான். அது, உடும்புபோல உற்றார் உறவினரைப்பற்றிநின்று பெண்டிரும் உண்டியும் இன்பம் என்றிருக்கும் பெருமக்களையும், அரசபதவியைச் சதமென வாழும மன்னாதி மன்னர்களையும், சீவகன் துறவுகொண்டது போல ஒரு நொடியில் மாற்றிவிடும். ஆகவே நம் நாட்டுப் புலவர்கள் வாழக்கைக்கும் கவிதைககும் இயைபு இருப்பதில்லை. அவர்கள் தம் வாழ்ககையையோ – அதில்விளையும கோபதாபக் கனலையோ – பகைமைப் புகையையோ – நட்புத் தென்றலையோ வைத்துக் காவியம் எழுதுவதில்லை. உலகம் உணர்ச்சி நிலையில் உயரவேண்டும. அதற்காகத் தம் உணர்வைத் தம் வாழ்க்கையினின்றும் பிரித்து உயர்ந்தோருடைய லட்சிய வாழ்வில் வைத்து அதுவே எங்கும் பிரதிபலிக்கவேண்டும என்று இலககியங்களை எழுதுகிறார்கள். அதனால்தான் நம்நாட்டுககாவியங்களைககொண்டு கவிஞன்

வாழ்க்கை வரலாற்றைக் கண்டுபிடிக்கமுடிவதில்லை. பிறநாட்டிலக்கியங்களைப் படித்து ஊறிய அறிஞர்கள் சிலரும் பிறநாட்டு அறிஞர்கள் சிலரும் நம்நாட்டு இலககியங்களை அந்தமுறையில் ஆராயப்புகுந்து முழுத்தோல்வியுற்றிருககிறார்கள். நமது வள்ளுவர் வாழ்ந்த வாழ்க்கையும் குடிசைவாழ்க்கையோ மாளிகைவாழ்கக்கையோ அறியமுடியவில்லை. ஆனாலும் அவர் சொல்லும் கருத்துக்களில் அரசன் ஆண்மை தொனிககிறது. அமைச்சர் அறிவு அலைபாய்கிறது. ஒற்றருடைய அரசியல்தந்திரம் ஆழங்காற்படுகிறது. தூதருடைய சொல்வன்மை தோன்றுகிறது. பதினாறுண்டு பருவத்தினராக எழில்நிறைந்த இளமங்கையோடு நுகரும் இன்பத்தேன் எங்கும் களியூட்டுகிறது. அறவோராகவும் துறவோராகவும் இருந்து செய்யும் உபதேச மொழிகள் ஒளிவிடுகின்றன. செம்பொருள் திகழ்கிறது. இதிலிருந்து இவர் எத்தகைய வாழ்க்கையினர் என்று துணியக்கூடும்? முடியாது. இதனாலேயே இந்நூல் எல்லார் வாழ்வோடும் ஒட்டி எல்லார்க்கும் இன்பம் பயப்பதாக-பொது நூலாக அழியாப் பெருமையுடன் விளங்கிக்கொண்டிருக்கிறது.

## சட்டநூலா? தத்துவநூலா?

சட்டம், இது செய் இது செய்யாதே என்று மக்களை ஒரு வரையறைக்கு உட்படுத்துவது. கட்டாயப் படுத்துவது. எல்லோருக்கும் ஒரு தன்மையாயிராமல் மக்களின் வயது, இனம், இடம், அறிவு, ஆண்மை, முதலியவற்றிற்கு ஏற்ப மாறுபடுவது. தத்துவம் உண்மை. உண்மைக்கு மாற்றமில்லை; அழிவில்லை; என்றும் எங்கும் யாருக்கும ஒருபடித்தாகவேயிருக்கும். தத்துவம் ஒரு கண்ணாடி. எல்லோரும் அதனைக்கையிலெடுத்துப் பார்க்கலாம். அவரவர்களுடைய பரிபாகத்திற்கும் அநுபவத்திற்கும் ஏற்ப அது விளககம் காட்டும். சட்டத்தைக் கண்டு அஞ்சுவார் சிலர். மீற வேண்டுமென்று வீறுகொண்டெழுவார் சிலர். தத்துவத்தைக கண்டு யாரும் தயங்கமாட்டார்கள். கடக்கக் கருதவும் மாட்டார்கள். அவர்களை அறியாமலே அவர்களை அது அகப்படுத்திநிற்கும்.

இந்நூல் விதிவிலக்குகளைக் கட்டாயப் படுத்தாமலும், அறங்களின் அடிப்படையான தத்துவங்களை எடுத்துககாட்டி அவரவர்களும் தாங்களே தங்கள் வாழ்க்கையைப் புனிதப்படுத்திககொள்ளச் செய்கிறது. ஆதலால் இது தத்துவநூலே.

நாட்டில் உயர்வு தாழ்வு கற்பித்து, ஒரு கண் வெண்ணெயும் ஒரு கண் சுண்ணும்புமாகப் பார்க்கும் மக்கள் இகழப்படுகிறார்கள். வேற்றுமையாகிய விஷவித்தை விதைப்பவர்கள் வெறுக்கப்படுகிறார்கள். ஒற்றுமையை

வளர்ப்பவர்கள் மேலும் உயர்த்தப்படுகிருர்கள். அதுபோலவே திருக்குறள் இனவேற்றுமை, மனவேற்றுமை, பணவேற்றுமை, குணவேற்றுமை இவைகளுக்குப் பகையாய் எங்கும் பரவிநிற்கும் ஒற்றுமையாகிய தத்துவத்தை விளக்குகிறது. அதனுல் இது தத்துவப் பொது நூலாக விளங்குகிறது. அமரத்துவம் பெற்றிருக்கிறது.

## இந்நூலின் பெயர் :

இந்நூலுக்குப் பெரும்பாலோரால்வழங்கப்படும்பெயர் திருக்குறள் என்பது. இளங்கோவடிகள் 'சிலப்பதிகாரம் என நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்' என்று கம்பீரமாக நூற்பெயரைச் சொல்கிருரே. அதுபோல வள்ளுவர் எங்கேயாவது தம்நூலுக்கு இது பெயர் என எடுத்துக் கூறியுள்ளனரா ? ஒரு ஆங்கிலப் புலவர் சொல்கிருர்; தனக்கு ஒரு இயற்பெயர் இல்லாமல், தான்செய்த நூலுக்கும் ஒரு பெயர் சூட்டாமல் உயர்ந்த நூல் ஒன்றைச் செய்துதவிய வள்ளலை நாம் எப்படிப் பாராட்டவேண்டும் என்று. நூலுக்குத் திருக்குறள் என்ற பெயர் அவர் வைத்ததன்று; அது உலகம் சூட்டிய உயர்ந்தபெயர் என்று அவர் கருதுகிருர்போலும். இதுநிற்க,

பெயர் எப்படி வந்ததாயினும் குறட்பாவினுலாகிய இந்நூல் திருக்குறள் என அழைக்கப்பெற்றது என்பதற்கு ஐயமின்று. நூலுக்குப் பெயர் அமைக்க விதிகூறும் சூத்திரங்களும் பாவினுல் பெயரமையும் என்று பேசவில்லை.* அங்ஙனமிருக்கவும் இது பாவினுல் பெயரமைந்திருப்பது ஆழ்ந்து ஆராய்ந்தறிதற்குரியது. ஆனுலும் பழந்தமிழ் அகப்பொருளிலக்கியமாகிய கலித்தொகை பாட்டாலேயே பெயர் பெற்றது என்பது தமிழுலகு நன்கறியும். அதுபோல இந்நூற்பெயரும் திருக்குறளென அமைந்தது என்று துணியலாம். ஆசிரியர் ஐவரால் ஆக்கப்பெற்று நேரிசையொத்தாழிசை முதலிய எல்லாக் கலிவகையினுலும் இயல்கின்றமையின் கலித்தொகை எனப் பெயர்பெற்றது. இந்நூல் ஒருவராலேயே ஆக்கப்பெற்று, குறட்பா ஒன்ருனே இயங்குகின்றமையின் திருக்குறள் என வழங்குவதாயிற்று. இதில் திரு என்பது அடைமொழி; இதன் சிறப்புநோக்கிச் சேர்க்கப் பெற்றது. இங்ஙனமே திருவாசகம், திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் முதலிய நூல்களும் வழங்குகின்றன.

ஊர்ப்பெயர்களில் திருவாரூர் என்பதில் திரு அடைமொழியன்ருதல் போலத் திருவாசகம் திருக்குறளிலும் வெறும் அடைமொழியன்ருய்ப்

---

* தண்டியலங்காரம் 'பாட்டினும் பொருளினும் கூட்டியவாகும்' என்கின்றது.

பிரிந்து நில்லாததாகச் சிறப்புப்பொருளைத் தந்துநிற்கும். வாசகம் குறள் என்பன திருவோடு கூடாதவழி, சொல் எனவும் பாட்டு எனவும் பொருள் பட்டு நிற்குமேயன்றி நூலைக்காட்டுவதாகாது. ஆதலால் இந்நூலைத் திருக் குறள் என வழங்குதலே தொன்மையும் செப்பமும் ஆகும். 'வாசகம் தொல்காப்பியமே' எனவும், 'குறள்' எனவும் வழங்கக் காண்கின்றேமே எனின் செய்யுளாதலின் சீர்தளைகளின் கட்டுப்பாட்டிற்காகக் குறைக்கப் பட்டதன்றி அதுவே மரபாதல் இயல்பாகாதன்றோ?

## பெயர்க்காரணம் :

திருக்குறள் என்பது அழகிய குறள்வெண்பாவாலாகியநூல் எனப் பொருள்படும். குறள் என்னும் பாவின்பெயர் அதனாலாகிய நூலிற்கானது கருவியாகுபெயர். அது திரு என்னும் அடைமொழி அடுத்துவந்தமையின் அடையடுத்த கருவியாகுபெயராயிற்று என்பது இலக்கணவுரையாசிரியர் கருத்து.

அழகிய குறள் வெண்பாக்களையுடைய நூல் எனப் பொருள்பட்டு அன்மொழித்தொகையாய் நூலுக்குக் காரணக்குறியாயிற்று என்பர் தமிழ்வரலாறு எழுதிய ச. பூபாலப்பிள்ளை அவர்கள்.

திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்று திருக்கோவையார் உரையில் பேராசிரியர் கூறுகிறார். வள்ளுவரும் அவர் மொழியும் திரு என்னும் அடைமொழியை அடுத்து இருப்பது மிகப் பொருத்தமானதே. குறளுக்கும் அதன் ஆசிரியர்க்கும் கண்டவர்கள் கருத்தை எல்லாம் பிணித்துநிற்கும் பெருமையிருக்கின்றதல்லவா என்பார்கள் எனது ஆசிரியப் பெருந்தகையாகிய மகாமகோபாத்யாய ஐயரவர்கள்.

நாற்சீரும் மூச்சீரும் கொண்ட குறள்வெண்பாக்களாலாகியது எனப் பொருள் காண்பர் தமிழிலக்கியம் சங்ககாலம் எழுதிய துரைசாமிப் பிள்ளை அவர்கள். சிறந்த குறள் வெண்பாவாலாகிய நூல்; அடையடுத்த ஆகுபெயர் என்பர் சடகோபராமாநுஜாசாரியர்.

'கண்டாரால் விரும்பப்படும் தன்மைநோக்கமாகிய அழகினை யுடைய குறட்பா எனப்பொருள்படும். இது வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய் நூலுக்குக் காரணப்பெயராயிற்று' என்பர் நாகை தண்டபாணிப்பிள்ளை. இவர்களில் ஆகுபெயராகக் கொள்பவர்கள் திரு என்னும் அடைமொழி குறளை விசேடியாமல் ஆகுபெயர்ப்பொரு ளாகிய குறள்நூலை விசேடித்துவந்ததாகக் கொள்வர். அப்போது குறள் வெண்பாவாலாகிய அழகியநூல் எனத் திரு நூல்முழுவதையும் விசேடித்து

வந்தது தெளிவு. அன்மொழித்தொகை என்பார் திரு என்பது அழகு; அது பண்புப்பெயர்; அது அதனை அடுத்துநின்ற பண்பியாகியகுறளைவிசேடித்து வந்தது; திருவும் குறளுமாகிய இருசொற்களும் அழகாகிய குறள் எனப் பொருள்தரும் தொகைச்சொலலாய்ப் பண்புத்தொகையாயிற்று. பின்னர் அந்ததொகைச்சொல்லின் ஆற்றலால் நூல் என்னும் அலலாதமொழியும் விரிக்கப்பெற்று, பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை யாயிற்று என்பர். இப்பொருளில திரு என்னும அடைமொழி ஒவ்வொரு குறளையும விசேடித்துநின்றமை காண்க.

## மறுபெயர்கள் :

இந்நூல தோன்றியகாலம்முதல், தமிழ் உள்ளவரையில், வாடாது அழியாது வளரும் தனிப்பெருமைபடைத்தது. இதனிடம் கவிஞரும், புலவரும், பிறரும் அளவற்ற மதிப்புவைத்தனர். ஆதலால் இதன் தன்மை நோககிப் பலபெயர்களைப்படைத்து வழங்கலாயினர். பெருமைமிகுந்த பொருளகளுககுப் பெயர்களும மிகுதல் இயல்புதானே. வள்ளுவமாலையில் முப்பால், குறள, பொய்யாமொழி, வாய்மொழி, வாயுறைவாழ்த்து, முதுமொழி என்ற பெயர்கள் வழங்குகின்றன. இவற்றோடு உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், தமிழ்மறை, பொதுமறை, திருவள்ளுவப்பயன், பொருளுரை என்ற பெயர்களும் உள்ளனவாகத் திருககுறள் ஏடுகளும், பதிப்புககளும் கூறுகின்றன.

*முப்பால்* :— மூன்று பகுதியாக ஆக்கப்பெற்றமையின் வந்த பெயர். அறம, பொருள, இன்பம் என்னும் முப்பால் உடைமையின் முப்பால்நூல என்பர் சபாபதிநாவலர். இப்பெயரே வள்ளுவமாலையில் பதின்மூன்றுககு மேற்பட்ட பாடல்களில் எடுத்தாளப்படுகின்றது.

*பொய்யாமொழி* :— பொய்யாமொழியாக நடத்தலின் பொய்யாமொழி ஆயிற்று என்பர் சபாபதிநாவலர். பொய்யில்லாத சொற்களை உடைய நூல என்பர் சடகோப இராமாநுஜாசாரியார். பொய்த்தல் என்பது இல்லையாதல், தவறுதல், எதிர்பார்த்ததை ஈயாமை முதலிய பல பொருள்களைக் காட்டும். காலமாற்றத்தானும, மக்களின் கருத்துமாற்றத்தானும், கருதியபொருளைத் தரமுடியாமல் ஒழிகின்ற ஏனைய மொழிகளைப் போல் அல்லாமல், கருதியதைக் கருதியவண்ணம் தரும் மொழியாதலின் பொய்யாமொழி ஆயிற்று எனவும் பொருள்சொல்லலாம். பொய்யாமொழி சத்தியம்; என்றும் உள்ளபொருள். அதனை உணர்த்தும் நூலாதலின் பொய்யாமொழியாயிற்று எனவும பொருந்தும். பொய்யில் புலவனது மொழியாதலின் பொய்யாமொழி ஆயிற்று எனவும் ஆம்.

*வாயுறைவாழ்த்து* :— இது ஒரு புறப்பொருள்துறை. இதன் இலக்கணம் தொல்காப்பியத்துள் "வாயுறை வாழ்த்தே வயங்க நாடின், வேம்புங்கடுவும் போலவெஞ்சொல், தாங்குதலின்றி வழிநனிபயக்குமென்று, ஓம்படைக் கிளவியின் வாயுறுத்தற்றே" என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு உரைகண்ட பேராசிரியர், "வாய்-வாய்மொழி, உறை-மருந்து, வாயுறை-சொல்மருந்து எனப் பண்புத்தொகையாம்; இனி வாய்க்கண் தோன்றிய மருந்து என வேற்றுமைத்தொகையும் ஆம் மருந்துபோறலின் மருந்தாயிற்று" என்பர். ஆதலால் வள்ளுவர்வாய்க்கண் வாய்மொழியாகத் தோன்றி, பயிலுகின்ற மக்களுக்கு மருந்தாகப் பயன்படுதலின் வாயுறை வாழ்த்து ஆயிற்று என்றல் மிகப்பொருந்துவதாம். வேம்பும் கடுக்காயும் உண்ண முடியாதன; உண்டாலுளதாகும்பயன் மிகுதி. அதுபோலக் கேட்டவுடன் இன்னாதனவாய், பயன் பெரிதுபயத்தலின் இது வாயுறைவாழ்த்தாயிற்று. களவழி, முதுமொழிக்காஞ்சி என்ற புறத்துறைகளின் பெயர், அவற்றையுணர்த்தும் ஒருநூலுக்கே பெயரானாற்போல வாயுறைவாழ்த்தை உணர்த்தும் இந்நூலும், வாயுறைவாழ்த்தெனவே வழங்கலாயிற்று.

*உத்தரவேதம்* :— வேதம் விதிவிலக்குகளை விளக்குவது. இதுவும் அங்ஙனமாதலின் வேதமே எனத்தகும் சிறப்பினது. தொன்மை நான்மறைகளைக்காட்டிலும் காலத்தாற்பிற்பட்டதாதலின் உத்தரவேதம் எனப்பட்டது. வேதத்தின் முற்பகுதி விதி. பிற்பகுதி தத்துவ உண்மைகள். அது உபநிடதம் என்று பேசப்பெறும். உபநிடதங்களைப்போல அறத்தத்துவங்களைத் தெரிவிப்பதால இது உத்தரவேதம் என்றாயிற்று எனலும் ஆம்.

*தெய்வநூல்* :— தெய்வத்தன்மை எங்கும், எப்பொருளிலும ஒரு படித்தாய்ப்பரவியிருந்துஎல்லார்மனத்தையுமகவர்ந்திருபபது. அழியாதது. மாற்றம இல்லாதது. மாற்றம்மனமகழிய நினற மகிமையது. அங்ஙனமே இந்நூலும இருததலின் தெய்வநூல எனப்பட்டது. அன்றி இநநூலைப் படித்து, பலகால்பயின்று, நெஞ்சிற்பதித்தமனிதன் கவலையில்லாமையாய தெய்வத்தன்மையை அடைதலின் தெய்வத்தன்மையை அளிககும நூல், தெய்வநூலாயிற்று எனலும சிறந்த உரையாகலாம.

*திருவள்ளுவர்* :— இலக்கணங்களில் நூல்களுககுக கருத்தனாற் பெயர்வருதலை அறிவிகக அகத்தியம தொலகாப்பியம என்பன எடுத்தாளப் பெற்றுள்ளன. இவைகள் கருத்தனாற் பெயர்பெற்றனவேயன்றிக் கருத்தன் பெயரையே தம்பெயராகக்கொண்டனவல்ல. இந்நூலோ திருவள்ளுவர் பெயரையே தம்பெயராககொண்டு விளங்குகிறது. இலககண உரைகள் தோன்றியகாலந்தொட்டு இன்றுவரை கருத்தாவாகுபெயர்க்குத்

"திருவள்ளுவர் படித்தான்" என்ற உதாரணமே போட்டியின்றிக் காட்டப் படுகிறது. இதிலிருந்து இந்தச் சிறப்பு வேறு எந்தநூலுக்கும் கிடைக்க வில்லை என்பதுதானே துணிபு.

தமிழ்மறை :— மறைவாய பொருள்களைத் தமிழாற் கிளத்தலின் வந்தபெயர் என்பர் சபாபதிநாவலர். மறை என்பதற்கு மறைந்தபொருளை உடையது என ஆன்றோர் உரைகாண்பர். திருக்குறள் ஒழுக்கக் கருத்துக் களை வெள்ளிடைமலையாய் விளக்கிக்காட்டுதலின் அந்தக்காரணம்பற்றி வந்த பெயராகுமா என்பது ஆராயத்தக்கது. மறை-மறுத்தலைச் செய்வது. தன்னைப் பயின்றார், தீய ஒழுக்கத்தின்கண் செல்ல மறுத்தலின் மறை என்றாயிற்று என்றலே சிறப்புடைத்துப்போலும். மறை என்பது இடுகுறி அளவாய் வடமொழி வேதத்திற்காகி அதுபோன்ற தமிழ் நூலுக்கும் ஆதலின் தமிழ்மறை என்றாயிற்று என்பாரும் உளர். இங்ஙனம் பொருள் காண்பார் வடமொழிவேதக்கருத்துக்களை இது தாங்கிநிற்கின்றது என்ற எண்ணத்தாலும், ஆரியவேதம் அனைவராலும் எடுத்தாளப்படுவதுபோல இதுவும் எடுத்தாளப்படுகின்ற சிறப்பாலும் எனக்கருதுவார். தனக்கெனச் சிறப்பில்லாத ஒன்று சார்பினால் உயர்ந்தது என்றல் அத்துணைச் சிறப்பின்மையறிக.

பொதுமறை :— வேதம் ஓதுதற்குரியார் அந்தணர், அரசர், வணிகர் என்ற முதன் மூன்றுவருணத்தாரும். "ஓதற்றொழில் உரித்து உயர்ந்தோர் மூவர்க்கும்" என்று தொல்காப்பியம் சொல்கிறது. அந்த வேதம்போலன்றி, ஆண் பெண், உயர்ந்தோர் இழிந்தோர் என்ற வேறு பாடின்றி, எல்லாச்சமயத்தாரானும் எல்லாச்சாதியாரானும் எக்காலத்தும் பயிலப்படுதலின் பொதுமறை எனப்பெற்றது. பொது என்பது ஒருவர்க்கு உரிமை என்னும் சிறப்பிற்கு அப்பாற்பட்டதாய், கடந்துநிற்பது. இது காலம், இடம், இனம் முதலிய எல்லாவற்றையும் கடந்துநிற்றலின் பொது மறை என்றாயிற்று என்பதே இதன் தனிப்பெருமையை விளக்குவதாம். அங்ஙனமன்றி வடமொழிவேதம்போலன்றி எல்லார்க்கும் பொதுவாமென வேறொன்றோடு ஒப்பித்து உயர்வு தாழ்வு கருதும் நிலையில் இல்லை என்பது இந்நூலால் எண்ணித் துணிதற்குரியது.

திருவள்ளுவப்பயன் :— ஆசிரியராகிய திருவள்ளுவரது அறிவு அனுபவங்களும் வாழ்க்கையின் பயனுமாகிய இவற்றின் வடிவமே இந்த இலக்கியம். ஆதலால் திருவள்ளுவரதுபயன் திருவள்ளுவப்பயன் ஆயிற்று.

பொருளுரை :— பொருள் பொதிந்த உரை. "பயனில் சொல் பாராட்டுவானை மகன்எனல் மக்கட் பதடி எனல்" என உலகிற்கறிவுறுத்திய

வள்ளுவர் உரை, பொருள்பொதிந்ததல்லாமல் வேறு எப்படியிருக்கமுடியும். எல்லார்க்கும் பொருள் நான்கே. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன, அப்பொருள்களை உணர்த்தும் உரை பொருளுரை. இதனை இப்பெயரால் அழைத்தவர் சீத்தலைச் சாத்தனர். மணிமேகலையில் மறக்க முடியாத இடத்தில் கற்பின்பொற்பைக் காட்டும்போது 'தெய்வந்தொழாள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப்பெய்யும் பெருமழை என்ற அப், பொய்யில் புலவன் பொருளுரை தேராய்' எனப்பாராட்டுகிறார் பாருங்கள்.

முதுமொழி:— முதுமை என்பது தொன்மையையும், பேரறிவுடைமையையும் காட்டும் பண்புச்சொல். தமிழில் இன்றுள்ள நூல்களில் தொன்மையானதாக, பேரறிவுபயப்பதாக இருக்கும் நூல் இதனையன்றி வேறொன்றும் இல்லையாதலின் முதுமொழி என்று போற்றப்படுவதாயிற்று. அன்றியும் இதனைக் கற்றவன் ஆண்டில் இளையனுயினும் அநுபவ அறிவால் பண்பட்ட முதியோனுதலால் முதுமையைப் பயக்குமொழி முதுமொழி ஆயிற்று எனலுமாம். இங்ஙனம் அறிவுதிருத்தும் மொழிகளை முதுமொழி என்றல் முதுரை, முதுமொழிக்காஞ்சி முதலானவற்றுலும் அறியலாம், சோமேசர் முதுமொழிவெண்பா, முதுமொழிமேல்வைப்பு என்ற நூற்பெயர்கள் முதுமொழி என்ற திருக்குறளின் பெயராலேயே அமைந்தன. முதியோர்மொழி முதுமொழியாயிற்று என்றலும் பொருந்தும். திருவள்ளுவரைவிட முதியோர் யார்?

அறம்:— அறம் இந்நூல். அடிமுதல் முடிவுகாறும் அறமே உணர்த்துகிறது. முதற்கண் தனி அறம். அடுத்து, பொருளீட்டற்கண்ணும், தொகுத்தற்கண்ணும், அழித்தற்கண்ணும் மேற்கொள்ளவேண்டிய அறங்கள்; இன்பத்திற்குபாயமாய அறங்கள் எல்லாம் அறமாகவே உணர்த்தப்படுகின்றன. "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும், அறத்துவழிப் படூஉம்" என்பதும் ஆன்றோர் அருண்மொழி. ஆதலால், இந்நூல் நாற்பாலை முப்பாலாக மொழிந்தாலும், ஏனைய திரிவர்க்க சாத்திரங்களைப் போல, அறம் பொருள் இன்பங்களாகிய திரிவர்க்கங்களைப்பற்றிக் கூருமல் அவற்றின் அறத்தத்துவங்களைமட்டும் அறிவிப்பதால் அறம் என்ற ஒன்றையே அறிவிப்பதாகும். இதுவே திருவள்ளுவர் கருத்து என்பதனைப் பாயிரத்துள் அறன்வலியுறுத்தல் ஒன்றையேகூறிச் "சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும், அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு" என்றும், "அறத்தினூங்கு ஆக்கம் இல்லை" என்றும், அறவழி ஈட்டிய பொருளியல்பை எடுத்துக்காட்டி "அறத்தாறிதுவெனவேண்டா சிவிகை பொறுத்தானேடூர்ந்தானிடை' எனச் சிவிகைமுதலான புற இன்பங்களும் அறத்தான் வருவனவே என்று எடுத்துக்காட்டி அறத்தான் வருவதே இன்பம் எனக் களவும் கற்புமாகிய கைகோள் நெறியால் அறத்தொடுபட்டு

ஆவதே இன்பம் என்று வலியுறுத்திக்கூறுமுறையால் பொருளும் இன்பமும் அறமாகவே அடங்கும் முறைமையைக்கண்டு தெளிக. இங்ஙனமன்றி, திருவள்ளுவர் திரிவர்க்கம்கூற முற்பட்டிருப்பாராயின் அறன்வலியுறுத்தல் என்றாற்போலப் பொருளின் இன்றியமையாமை, இன்பப்பயன் என்பனவற்றையும் பாயிரத்துள் கூறியிருப்பர். வள்ளுவர் கருத்தின் உண்மை உணர்ந்த ஆலத்தூர்கிழார் என்னும் புலவர் புறநானூற்றில் மலை விளக்காக விளங்கும் ஓரிடத்தில் "ஒருவன் செய்திகொன்றோர்க்கு உய்தி இல்லென, அறம் பாடிற்றே ஆயிழை கணவ" என அறம் என்ற பெயராலேயே இந்நூலை அழைத்துள்ளமை காண்க.

நூல்வகை :

இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்வகையைச் சார்ந்தது. கீழ்க்கணக்காவது பெரும்பாலும் ஐந்தடியின் மிகாத பாடல்களால் ஐம்பதுக்குக் குறையாத ஐந்நூறுக்கு மிகாத பாடற்றொகைபெற்று அறம் பொருள் இன்பம் உணர்த்திவருவது. "அடிநிமிர்வில்லாச் செய்யுட்டொகுதி, அறம் பொருளின்பம் அடுக்கி அவ்வத், திறம்பட வருவது கீழ்க்கணக்காகும்" என்பது பன்னிருபாட்டியற் சூத்திரம். அவ்வத்திறம்பட உரைப்பது என்பதால் ஐம்பது முதல் ஐந்நூறீறு என்ற பாடற்றொகையைக் கொள்ள வைத்தனர். ஆனால் "அகவலும் கலிப்பாவும்" என்னும் மேற்கணக்கு இலக்கணம் கூறும் சூத்திரத்து, "வெள்ளைத் தொகையும் அவ்வகை எண்பெறின் எள்ளரும் கீழ்க்கணக்கு எனவும் கொளலே" என்று கூறுவதால் ஐம்பதில் குறையாத - ஐந்நூற்றில் மிகாத வெண்பாநூல் கீழ்க்கணக்காகக் கொள்ளப்பட்டமை தேற்றம். இங்ஙனம் இருமுறை பாடற்றொகை வரையறுத்திருக்கும்போது இந்நூல் ஐந்நூற்றில் மிகுந்த ஆயிரத்து முந்நூற்று முப்பது பாடல்களாலானமை சிந்தித்தற்குரியது

முப்பொருள்களைக் கூறுதலானும் சிறியசெய்யுட்களால் ஆனமையானும் கீழ்க்கணக்காம் தகுதியை இது பெற்றிருப்பினும் பாடற்றொகையால் மேற்கணக்கினும் விஞ்சியிருக்கின்றது.

அன்றியும் கணக்கிலக்கணங்களைக்கூறும் பன்னிருபாட்டியற் சூத்திரம் பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்த இலக்கணம்கூறும் பகுதியில் இதனையும் சேர்த்திருக்கிறது. கீழ்க்கணக்கு நூல்களாவன நாலடியார்முதல் கைந்நிலை ஈறாகச் சொல்லப்பட்ட பதினெட்டு. இவற்றுள் சங்கநூல்களும் சங்கமருவிய நூல்களும் இருக்கின்றன. களவழிமுதலியன சங்கநூல்கள். திருக்குறள், நாலடியார் முதலியன சங்கமருவிய நூல்கள். திருக்குறள் கடைச்சங்கத்தில் அரங்கேற்றப்பட்டதாக வரலாறு. நாலடியார் கடைச் சங்ககாலத்திற்குப் பின்பு உண்டான வச்சிரநந்தி சங்கத்தில் அரங்கேற்றப்

பெற்றது என்பது ஆராய்ச்சியாளர் முடிபு. "பெருமுத்தரையர் பெரிது வந்தீயும்" என்ற செய்யுள் அதற்கு ஆதாரம். அங்ஙனமிருக்க இந்நூல் கீழ்க்கணக்கில் முதன்மைத்தானம் பெற்றிருக்கிறது. ஆசாரக்கோவை என்றநூல துயிலெழுதலில் தொடங்கி தூங்குதல் வரையிலுள்ள அன்றாட நாள்வாழ்க்கைவிதிகளைச் சொல்லுகிறது. இவ்விதி தேய இயற்கையானும் கால இயற்கையானும் மாறுபடும். சிறுபஞ்சமூலத்தில் சொத்துரிமைபற்றிய மூன்றுபாடல்கள் இருக்கின்றன. அவை கன்னிவயிற்றுப் பிள்ளை, கணவனிருக்க வேறொரு கணவனுக்குப் பிறந்தவன், விதவைக்குப் பிறந்தவன், இவர்களுடைய சொத்துரிமையைப்பற்றிப் பேசுகின்றன. இது கற்பையே லட்சியமாகக் கொண்டு வாழ்ந்த தமிழ்நாட்டு விதியாக ஆகமுடியாது. இதுவும் கீழ்க்கணக்கு நூலே. இவற்றை எண்ணிப் பார்க்கும்போது கீழ்க்கணக்கு நூல்களைத்தொகுத்ததும் 'நாலடி நான்மணி' என்றபாடல் இயற்றியதும பிற்காலத்திலே என்பது துணியப்படும். மற்ற நூல்களின் பழமையையும் கருத்தையும் உயர்த்தவே திருக்குறள் இவைகளோடு இணைக்கப்பெற்றுள்ளது என்பது வெள்ளிடைமலை; அதிலும் முப்பால என்ற பெயரால் புணர்க்கப்பெற்றுள்ளது. பிற்கால ஆராய்ச்சியாளர்கள் சிலர் கீழ்க்கணக்கிலுள்ள முப்பால்நூல வேறு; திருக்குறள் வேறு என்று வாதாடுவதும் இதுபற்றிப்போலும. "இத்துணைப் பெருமை வாய்ந்த திருக்குறளையும் பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாக்கிக் கார் நாற்பது, களவழி நாற்பது என்னும சிறுநூல்களில ஒன்றாய்க் கூறுகின்றனர். இங்ஙனம் கூறுதல் ஏட்டில எழுத்தேயோ எழுதினவர் கைப்பிழையோ என்னென்றுரைக்க இயலுவதில்லை" என்கின்றது தமிழ் இலக்கியம சங்ககாலம.

முப்பால் என்பது திருக்குறளே என நாம் கொள்ளினும் "நாலடி நான்மணி" என்னும் பாட்டில் இதற்குத் தக்க ஒரு இடமின்றி வகையுளியால் துண்டாடப்பெற்று "ஐந்திணைமுப், பால்கடுகம்" என உருக்குலைத்து இரண்டடியில் ஒட்டிநிற்கவைத்தது எண்ணுதற்குரியது. ஆனாலும தொகைபற்றித் திருக்குறள் தனி நூலாயினும் பொருள்பற்றிக் கீழ்க்கணக்கில் சேர்க்கப்பெற்றுள்ளது என்று அமைத்துக்கொள்ளலாம்.

ச. பூபாலப்பிள்ளை அவர்கள், "நாலடி, நான்மணி என்னும் வெண்பாவால் எடுத்தோதப்பட்ட முப்பால் என்றது திருக்குறளாமெனக் கொண்டு, அது பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்றுமென்று அதனை அவற்றோடு ஒப்பிப்பார் ஒருசாரார்; திருக்குறள் தமிழ்வேதமாதலின், அதனை நாலடி முதலிய சிறு நூல்களோடு உடன் எண்ணித் தொகை கோடல் சாலாமையின், ஆண்டு முப்பால் என்றது திருக்குறள் அன்று என்று எடுத்துரைப்பர் ஒரு சாரார்" என்று தமிழ் வரலாற்றில் கூறுகிறார்.

## குறட்பாவைக்கொண்டது ஏன்?

"பாவில் வெண்பாப் புலியாம்" என்பது பழம்பாடற் பகுதி. புலியினிடம்பழகுவது சஞ்சலபுத்தியுள்ள தலைவனிடம் பழகுவது போல மிகப்பொல்லாதது தேவைகளுக்குக் 'கொலவோம்' தின்போம் எனபது புலிககு வழக்கமில்லை. புலியினிடம் பழகுவோர் எப்பொழுதும எச்சரிக்கையாய் இருத்தல வேண்டும. அதுபோலவேதான் வெண்பாவினிடத்திலும். இப் பாவில் வேற்றுத்தளை வேற்றுச்சீர்கள் கலந்துவிட்டால ஓசை கெட்டே போகும். ஒழுககத்தில் சிறிது இழுக்கு வந்தால தீமை பெரிதாகிவிடும். 'இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும' என்பது வள்ளுவர் ஆணை. அத்தகைய உயர்ந்த ஒழுககத்தை வரையறுக்கும நூலுக்கு வேற்றுச்சீர் விரவினும் ஓசைகெடும் வெண்பாவைககொண்டது எவ்வளவு இயைபுடையது.

வெண்பா பாடுபவனுக்குக கஷ்டம்; படிப்பவனுககு எளிது. "வெண்பா இருகாலிற் கல்லானை" என்ற பாடல் வெண்பா இருமுறை படித்தாலே பாடம்வந்துவிடும என்ற எளிமையைககாட்டுகிறது. சிறந்த கருத்துககளைத் தாங்கிநிற்கும் பாக்களும பயிலவார்மனததில எளிதில் பதியவேண்டும என்பது வள்ளுவர்கருணை. அதனால், வெண்பாயாப்பு அவரால் விரும்பப்பெற்றது.

வெண்பாவகையில் குறள் வெண்பாவைப்போலச் சுருககமானது ஒன்றுமில்லை. "உருவுகண்டு எள்ளாமைவேணடும" என்றுரைதத வள்ளுவர் உருவிற்சிறிய குறள்வெண்பாவை மேற்கொண்டது மிகப்பொருத்தமே.

வெண்பாவுக்கு உரிய ஓசை செப்பலோசை. செப்பலாவது ஆசிரியன் மாணவனை அனபுடன் அழைத்து அருகிருத்தி அறிவுரை வழங்குவது. இத்தகைய தகுதி முழுவதும இப்பாவிற்கு இருத்தலின் இதனையே கொண்டார் என்பது.

## பாராட்டுரைகள் :

பிறந்தநாளிலேயே இந்நூலைப்பாராட்டியஉரை திருவள்ளுவமாலை. இது திருக்குறட் சிறப்புப்பாயிரமாகத தொன்றுதொட்டுப் போற்றப்படு கிறது. கடைச்சங்கப்புலவர்கள் பலரால் இயற்றப்பட்டது என்பது செய்தி. இதில் கவிதைநலம்சொட்டக் கற்பனையால குறளைச் சிறப்பிக்கின்றன சில; திருக்குறளின் அளவும பொருளாழமும்பற்றி வியககின்றன சில. வந்திக் கின்றன சில. வடவேதத்திற்கும் இதற்கும் வேற்றுமைகாட்டி ஏற்றம் கூறு கின்றனசில. வள்ளுவரைப் பாராட்டுகின்றன சில. முப்பாலின இயற் பகுப்புக்களை எடுத்தோதுகின்றன சில. 'திருககுறளைத் தான் அநுபவிககும்

தோறும் விளைந்த இன்ப அனுபவங்களை எடுத்தோதுகின்றன சில. இவை இந்நூலின் பாகுபாடு.

வள்ளுவமாலையைப்பற்றிப் பேராசிரியர், கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள "திருவள்ளுவ மாலையானது வெவ்வேறு காலத்திருந்த பலபுலவர்களாலியற்றப்பட்ட பாடல்களின் தொகுதியாகத்தோன்றுகிறது. நாமகள்முதலியோரால் பாடப்பட்டதாகக்கூறப்படும் பாடல்கள பிறரால் சேர்க்கப்பட்டனவோ என்ற ஐயம் நிகழக்கூடியதே. திருவள்ளுவமாலை முழுவதுமே ஒரேபுலவரால் பலபுலவர்கள் பாடியதுபோலப் பாடப்பெற்ற நூல் என்று கருதுகிறார்கள், எவ்வாறாயினும திருவள்ளுவரைப்பற்றி அறிதற்கு அஃதோர் பண்டைக் கருவிநூலாகத் திகழ்கிறது" என்று கூறுகிறார்கள்.

நாவலர் ந மு. வேங்கடசாமிநாட்டார் அவர்கள், "திருவள்ளுவமாலையின் தொடக்கத்திலுள்ள இருசெய்யுட்களையும் அவைபற்றிய கதைகளையும் கழித்துவிட்டு, மூப்பால் பாண்டியன் அவைக்களத்து அரங்கேற்றப்பட்டது என்றும், அப்போது உடனிருந்துகேட்ட புலவர்கள்பலரும் அதனைப் பாராட்டினர் என்றும் கொள்வதில் இழுக்கொன்றுமில்லை. வள்ளுவமாலையில்வரும் 'வைவைத்த கூர்வேலவழுதி' 'தாதவிழ்தார் மாற' 'வாளார் நெடுமாற' என்ற தொடர்கள் பாண்டியர்முன் பாடப்பட்டன என்பதற்குச் சான்றாகும். குலபதிநாயனார்என்றாற்போலும சிலபெயர்கள்எழுதுவோரால் திரிபுற்றிருத்தலும கூடும். கபிலர் பரணர் நக்கீரர் முதலியோர் சிறிது முற்பட்டகாலத்தே விளங்கினர் எனபது புலப்படினும் உக்கிரப்பெருவழுதி ஆட்சிசெய்திய காலம்வரையில் அவர்கள்வாழ்ந்திருந்து, திருக்குறள் அரங்கேறியஞான்று அதனைப் புகழ்ந்துரைத்தனர்என்றுகோடல பொருத்தமேயாகும. மாறுபட்டகருத்தினர்கூறும் சில ஏதுக்கள் இக்கருத்தை மாற்றும் வலியுடையன அல்ல" என்றுதம் துணிவுகூறிச்செல்கின்றனர். இவைகளைக் கொண்டு சிலகருத்துக்களைத் தெரிவித்துக்கொள்வது இன்றியமையாததாகின்றது.

வள்ளுவமாலையில் திருக்குறளைப்பாராட்டிய தெய்வப்புலவர்கள் அசரீரியும் சரீரியுமாக ஐம்பத்துமூவர். வள்ளுவர் உடன்பிறந்தார் என்று கருதப்படுகின்ற ஔவையார் இடைக்காடர் இவர்களையும்சேர்க்க ஐம்பத்தைவர். இவர்களில் அசரீரி 'வான்முதற் பூதமெல்லாவற்றையும் தமது வடிவாகக்கொண்டிருக்கும் கடவுள் வார்த்தையாகிய வானொலியாதல் வேண்டும். அது சங்கப்பலகையில் திருவள்ளுவரோடு உருத்திரசன்மனை ஒக்க இருக்க என்ற ஆணைதந்தவளவில் அமைகிறது. உருத்திரசன்மர் இறையனிர் அகப்பொருளுரையைக்கேட்டு மெய்ம்மயிர்சிலிர்த்து ஆனந்தக்

கண்ணீர்சொரிந்த ஐந்தாண்டுநிரம்பிய ஒருமூங்கைப்பிள்ளை; உப்பூரிகுடி கிழான் மகன் என்பது களவியலுரைதரும வரலாறு. இதனால் திருவள்ளுவருக்குச் சங்கப்பலகையில இடந்தருமவகையில் புலவர்க்குச் சிறிது மனக்கசப்புநிகழ அதனை அசரீரிநீக்கியதாக அறியலாம். இந்தவரலாற்றை வைதது இந்தப்பாட்டு எழுதப்பெற்றிருத்தல்வேண்டும். அடுத்தபாடல் நாமகள் தந்தது. அதில் நாமகளே நவில்கிருள்; நான்முகன் நாவிலிருந்து நான்குவேதங்களை ஆதியில் தந்தேனை; இடையில் வியாசர் நாவிலிருந்து பாரதமபகர்ந்தேன்; இன்று என்வாககு வள்ளுவர் வாயதாயிற்று என்று. இந்தககருத்து வேதத்திற்கு முதன்மைதந்து, "பாரத: பஞ்சமோ வேத:" என்ற கருத்தை உட்கொண்டு, அதனோடு ஒருங்கு எண்ணத்தக்கது திருக்குறள் என்பதை வற்புறுத்துகிறது. நான்முகன் வாயினிடமாக விளங்கும் நாமகளே, வளளுவர் நான்முகன் அவதாரம் என்பதை உணராதிருக்க முடியாது. அங்ஙனமிருந்தும் நாவிலிருந்து பாரதம வரையில் பகர்ந்த நாமகள் 'என் வாககு அவன் வாயது' என்றுமட்டும் கூறுவது, வள்ளுவர் நான்முகன் அவதாரம் என்று பேசுவது ஒரு உபசாரம்பற்றிய வழக்கே என்பதை வலியுறுத்தக்கூடும். இவை இரண்டும் கடவுளர்தந்த பாயிரங்கள். இவை நமக்குக கிடைத்த வரலாறு செவிவழிச் செய்தியாகக்கூட இன்றளவும் கிடைத்திலது.

இவர்கள் ஒழிய ஏனைய புலவர்கள் ஐம்பத்தொருவர். இவர்கள் பெயர்களை அறிதற்குரிய ஆதாரங்கள் கடைச்சங்க நூல்களையன்றி வேறொன்றுமில்லை. அங்ஙனம் நோக்கும்போது வள்ளுவமாலையில் காணப்படும புலவர்களின் பெயர்களுட்சில சஙக இலககியங்களில் காணககிடைக்கவில்லை. இறையனர் களவியலுரை "கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம் பூதனும், அறிவுடையரனும், பெருங்குன்றூர்கிழாரும், இளந்திருமாறனும, மதுரையாசிரியர் நல்லந்துவனரும், மருதனிளநாகனரும், கணக்காயனர் மகனர் நககீரனருமென இத்தொடககத்தார் நாற்பத்தொன்பதின்மர்" எனக கூறுகிறது. இவர்களில் சேந்தம் பூதனர், அறிவுடையரனர், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மருதனிளநாகனர் ஆகிய இவர்கள்பெயர் வள்ளுவமாலையில் காணப்படவிலலை. வள்ளுவமாலையில் காணப்படும் உருத்திரசன்மர், நத்தத்தனர், முகையலூர்ச் சிறுகருந்துமபியார், எறிச்சலூர் மலாடனர், போக்கியார், நாகன்தேவனர், செங்குன்றூர்க்கிழார், கவிசாகரப் பெருந்தேவனர், செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனர், வண்ணககஞ்சாத்தனர், களத்தூர் கிழார் நச்சுமனர், அக்காரக்கனிநச்சுமனர், குலபதிநாயனர், தேனீக்குடிக்கீரனர், கொடிஞாழன் மாணிபூதனர், கௌணியனர், மதுரைப்பாலாசிரியனர் என்பவர்களைச் சங்க இலககியங்களில் தேடிக்கண்டுபிடிக்க முடியவில்லை.

வள்ளுவமாலைகூறிய புலவர்கள் ஒருகாலத்தவரல்லர். உதாரணமாக உக்கிரப்பெருவழுதி அவையில் இந்நூல் அரங்கேறியதாகச் செய்தி நிலவுகிறது. சீத்தலைச்சாத்தனார் செய்யுள் வள்ளுவமாலையில் திகழ்கிறது. சாத்தனார் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலத்தவர். குறளையே எடுத்து மணிமேகலையில் இவர் ஆளுகின்றார் என்பது தமிழுலகம் அறிந்த உண்மை. இவர் நெடுஞ்செழியன் காலத்து இருந்தார் என்பதைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. அவன் அரசுகட்டிலில் துஞ்சியபிறகு வெற்றிவேற்செழியனும், அவனுக்குப்பிறகு தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனும், அவனுக்குப்பிறகு உக்கிரப்பெருவழுதியும் ஆட்சியேற்றனர். வெற்றிவேற்செழியன் காலத்துச் சிலப்பதிகாரம் மணிமேகலைகள் இயற்றப்பட்டன என்பது வரலாற்றுத்துணிவு. பின் நாலாவது தலைமுறையில் அரசாட்சி ஏற்கப்போகின்ற உக்கிரப்பெருவழுதி சபையில் அரங்கேற்றப்படப்போகின்ற திருக்குறளிலிருந்து வெற்றிவேற் செழியன் காலத்தேயே சாத்தனார் எடுத்தாண்டனர் என்பது ஆய்வாளர்க்கு எப்படி அமைவதாகும்? இதுபோல் பொருந்தாத வரலாறுகளைக் குறிக்கும் ஆசிரியர் பெயர்கள் பல வள்ளுவமாலையில் காணப்படுகின்றன. குலபதி நாயனாரைக் கேட்டவுடன் புராண வரலாற்றுக்காலத்தில் இருக்கவேண்டிய இவர் இங்கு எப்படி வந்தார் என்று வியப்பு விளையக்கூடும். ஒரு சமயம் குளம்பாதாயனார் என்ற புலவர் பெயர்தான் ஏடு எழுதுவோராலும் பதிப்போராலும் இந்நிலை அடைந்ததோ என்ற ஐயம் எழக்கூடும். அவ்வாறே மதுரைத்தமிழ்க்கூத்தன் நாகன்றேவனார்தான் மதுரைத்தமிழ் நாகனார் என ஆயினரோ எனவும், சிறுமேதாவியார் என்பவர் நல்லூர்ச் சிறுமேதாவியார் ஆயினரோ எனவும், நல்வெள்ளியாரே நல்கூர் வேள்வியார் ஆயினரோ எனவும் எண்ண இடம் தருகின்றன. ஆய்வாளர் ஆய்ந்து முடிவுகாண்க. கவுணியனார் என்பது கவுண்டின்ய கோத்திரத்து உதித்த புலவராயிருத்தல் வேண்டும். அது பிற்காலத்து ஞானசம்பந்தப் பெருமானைக் குறிப்பதேயன்றி, சங்கப்புலவர் ஒருவர் இருந்ததாக அறியக் கூடவில்லை. மதுரைக் கவுணியன் பூதத்தனார் என்றபெயர் குறுகி இவ்வாறாயிற்றோ? அதுவும் ஐயமே.

பெருந்தேவனாரில் பாரதம் பாடிய பெருந்தேவனாரும் கவிசாகரப் பெருந்தேவனாரும் என இருவர் காணப்படுகின்றனர். பாரதத்தைப் பாடிய பெருந்தேவனார் கடைச்சங்கச் செய்யுட்களுக்குக் காப்புச் செய்யுள் பாடிய பெருந்தொண்டர். அவர்பாடிய பாரதம் ஆசிரியப்பாவால் ஆனது. கி. பி. எட்டாம் நூற்றாண்டில் நந்திவர்மன் காலத்தில் ஒரு பெருந்தேவனார் பாரதம் பாடியுள்ளார். இவ்விருவரினும் பிற்கூறிய கவிசாகரப்பெருந்தேவனார் வேறு என்பது அறியக்கூடவில்லை. பெருந்தேவனார் என்பவர் ஒருவர்

அகப்பாடலில் இரண்டியற்றியுள்ளார். அவரே கவிசாகரர் என அழைக்கப் பெற்றிருப்பின் பொருந்துவதாம். அன்றயின் இவர்பாடல் திருவள்ளுவ மாலையில் இடம்பெறுவது யாங்ஙனம்? இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது வள்ளுவமாலை கடைச்சங்கப்புலவர்களாலேயே இயற்றப் பட்டதென்பது துணியக்கூடவில்லை.

இலக்கணப் பேரறிஞராக விளங்கிய மன்னார்குடி நா. சோம சுந்தரம் பிள்ளை அவர்கள் திருவள்ளுவமாலை தொன்மையானதே என்ப தற்கு ஐந்துகாரணங்கள் காட்டியுள்ளார்கள், ஒன்று வள்ளுவமாலையுள் நல்கூர்வேள்வியார் பாடலாகிய "உப்பக்கநோக்கி" என்பது நேமிநாத உரையில் எடுத்தாளப்பெற்றமை. இரண்டாவது வெள்ளிவீதியார் பாட் டாகிய "செய்யாமொழிக்கும்" என்பது பிரயோகவிவேக உரையில் எடுத் தாளப்பெற்றது. மூன்றாவது "கல்லாட மாமூல சீத்தலைச்சாத்தனர்" "கபில பரண நக்கீரர்" என்ற சொற்றொடர்கள் "உயர்திணை மருங்கின் உம்மைத்தொகையே' என்ற சூத்திரத்தில் சேனாவரையராலும், நச்சினார்க் கினியராலும் காட்டப்பெறுவதால் இந்தமுறைவைப்பு வள்ளுவமாலையிற் கண்ட முறைமையென்றல். நான்காவது "திணையளவு," "பனையளவு" "மனையளகு வள்ளைக்குறங்கும்", முதலியன சங்கநூற்கருத்தே யெனல். ஐந்தாவது பாலியலதிகாரத்தொகை கூறும் பாடல்கள் பிறபாடல்கள் விரவாமலும், இருக்கிறபாடல் அழியாமலும் பாதுகாத்துப் பாவலர்க்குத் துணைக்கண் கொடுத்தது போலும் என்றல். இவைகளால் தொன் மையைச் சங்ககாலமாகிய அரங்கேற்றுக்காலம் என்றே அறுதியிடமுடியுமா என்பதை ஆராய்தல் இன்றியமையாதது. நேமிநாதம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது என்பதும், பிரயோக விவேகம் வடநூல் இலக்கணத்திற்கு முதன்மை கற்பிக்க கி. பி. 1685 க்குமேல் குருகூர்ச் சுப்பிரமணிய தீட்சிதரால் செய்யப்பெற்றது என்பதும் தமிழ்வரலாற் றாசிரியர்கண்டமுடிவு. ஆதலால் வள்ளுவமாலை 12ம் நூற்றாண்டிற்குமுன்பே வழக்கிருந்தது வெளியாகலாம். இரண்டாவதாகக் கூறிய கபிலபரண நக்கீரர் என்ற தொடராட்சியிருப்பினும் கடைச்சங்க காலத்தவராதற்கிழுக் குரைப்பார் யாருமில்லை; அவர்கள் பாடல்தாமா இவை என்பது ஆராய்ச்சி. ஆதலால் உரைகளின் தொடர்முறைவைப்பு வள்ளுவமாலை முறைவைப் பென்றற்கு ஆதாரம் என்னை என்று ஆராய்தற்குரியது. அங்ஙனமே நச்சருரையில் இத்தொடர் இருப்பினும், முறைவைப்பு வள்ளுவமாலையை அடியொற்றியதே எனக்கொள்ளினும் சேனாவரையர் நச்சினார்க்கினியர் காலத்திற்கு முன்னையது வள்ளுவமாலை என்பது பெறப்படுமேயன்றிச் சங்க காலத்ததாதற்குச் சான்றாமா? நான்காவதான நடையமைப்பு சங்க காலத்தின்பின் சங்கநூலையோதினார் யார்க்கும் அமைதல் * இயல்பே.

அதிலும் சங்கப்புலவர் பேரால் இயற்றுவார் ஏமாறுவார்களா என்பதும் சிந்தித்துத் தெளிக. இயற்பாகுபாடு, அதிகார எண், குறளெண் கூறியது நுழைக்காமலிருக்கப் பயன்படலாமாயினும் அதனால் சங்க காலத்ததாதல் யாங்ஙனம்? நுழைக்கின்றவர் பிறர் ஐயப்படா நிலையில் இப்போது நுழைப்பதுதான் மிக எளிமை. தங்கருத்துக்கு மாறுபட்டவற்றை எடுத்துவிட்டுப் புதிதாகச் சேர்த்தல் கெட்டிக்காரப் புளுகாக வன்மையுறும். இவற்றை நன்காராய்ந்து வள்ளுவமாலை தொன்மையதாயினும் எங்ஙனமாயினும் திருக்குறளின் சிறப்பை நன்கு சுவைத்துப் பிறரையும் சுவைக்கச் செய்கின்றது என்பதில் ஐயம் இல்லை. ஆதலின் இவர்கள் பாராட்டுரையைச் சிந்திக்க வேண்டியது இன்றியமையாதது.

சிறுகருந்தும்பியார் சொல்லுகிறார் திருக்குறளைக் காட்டிலும் சிறந்த நூல் உண்டென்று சொல்லுகிறவர்கள் எப்புலவரிலும் இல்லை; அதனைச் சிந்தித்துப் பிறருக்குச் சொல்லித் தாமும் தெளிதலே கடமை என்று. வேதத்திற்கும் திருக்குறளிற்கும் பொருள் ஒன்றே; ஆனால் அது அந்தணர்க்கே உரியது; இது அனைவர்க்கும் உரியது என்கின்றார் வெள்ளிவீதியார். படிக்க எளிமையாய், உணர அருமையாகி, நினைக்குந் தோறும் நினைக்குந்தோறும் நெஞ்சத்தை உருக்குகின்றது என்கின்றார் மாங்குடி மருதனார். எல்லாப் பொருள்களும் இதன்கண் உள்ளன; இதனிடத்து இல்லாத பொருளே இல்லை; சொல் பெருகிய பாக்களால் என்ன பயன்? என்கின்றார் மதுரைத் தமிழ் நாகனார். பாரதம் பாடிய பெருந்தேவனார் தம் பெயருக்கேற்பத் திருக்குறளுக்குப் பாரதம், இராமாயணம், மனுதர்ம சாத்திரம், வேதம் இவைகளே ஒப்பாகும்; வேறொன்றும் ஒப்பாகாது என்று உறுதிகூறுகிறார்.

மணற்கேணி தோண்ட நீர் சுரக்கும்; குழந்தைகள் வாய் வைத்துக் குடிக்க தாய்முலை பால் சுரக்கும்; திருக்குறள் புலவர்கள் ஆராய ஆராய அறிவு சுரக்கும் என்கின்றார் உருத்திர சன்மகண்ணர். எல்லாரினும் இவர் சொன்னது ஏற்றம் உடையது. உலகத்தில் திருவள்ளுவரே புலவரன்றி வேறு சிலரையும் புலவர் என்றல் நிலவோடு கூடிய அழகான அந்திப்பொழுதையேயன்றி, இருள்சூழ்ந்த அந்தியையும் மாலையென்றதுபோலும் என்று எடைபோடுகிறார் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார்.

வடமொழி தென்தமிழ் என்ற இரண்டிலும் இதுதான் மிகச் சிறந்தது என்று சொல்லமுடியாது; வடமொழி வேதம் உடையது; தமிழ் திருக்குறளை உடையது என்பது வண்ணக்கஞ் சாத்தனார் வாய்மொழி. மனத்தாமரையை மலர்த்துதலாலும், இருளைப் போக்குதலாலும், திருக்

குறளும் செஞ்சூரியனும் ஒக்கும் என்கிறார் குளம்பாதாயனார். திருக்குறள் சிந்தைக்கும், செவிக்கும், வாய்க்கும் இனிய மருந்தென்கிறார் கவுணியனார். திருக்குறள் தேவாமுதத்தைவிடச் சிறந்தது; அதனை உண்பார் தேவர்களே; இதனை அனைவரும் உண்பார்கள் என்கிறார் ஆலங்குடிவங்கனார்.

கம்பர் ஏரெழுபதில்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாரும்
தொழுதுண்டு பின்செல்வார் என்றேயித் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றோ."

என்று குறளை வேதமாகக்காட்டுகிறார். கல்லாடர்,

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவன்"

என்று திருக்குறள் பொதுநூல் என்பதைப் பாராட்டுகிறார். சேரமான் பெருமாள் 'கண்டு கேட்டு' என்ற பாடலை எடுத்துக் காட்டி 'பண்டையோர் கட்டுரை' என்று பகர்கிறார். திருமங்கைமன்னன் பெரியதிருமடலில்,

"அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்
மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும்
தென்னுரையில் கேட்டறிவ துண்டு"

என்று தென்னுரையாகவே செப்பினார்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் திருக்குறள் 'அறமுதல் நாற்பொருளையும் மூன்றனுளடக்கிச் செந்தேனை ஒழுகவிட்டாற் போல இனிய ஓசையோடு, பெரிய மலையைத் தன்னகத்து அடக்கிக் காட்டும் கண்ணாடிபோலச் சில சொல்லில் பல பொருளும் சிறந்து விளங்கச் செய்யப் பெற்றது. சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க் கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், விழுமியது பயத்தல், விளங்குதாரணத்ததாகுதல், முறையின் வைப்பு, உலகமலையாமை என்ற பத்தழகும் விளங்க வேதங்கள் அருளிச்செய்த இறைவனே வாய்விண்டு துதிசெய்யும்படியாக உலகம் உவப்பத் தோன்றியது என்று பாராட்டுகிறார்கள்.

சிவப்பிரகாச சுவாமிகள், "என்னடிகள் வெண்குறள்நேர் அடியிரண்டும் என் தலையில் இருத்தும் இறை" என்று திருவடிகள் இரண்டினையும் குறளாக உருவகித்தார். இதில் திருவடியோடு ஒத்த மதிப்பு திருக்குறளுக்குத் தரப்பட்டிருத்தல் காண்க.

தியாகராசச் செட்டியார் அவர்கள் திருவள்ளுவர் திருக்குறள் என்னும் செந்தமிழ் வேதத்தைத் திருவாய் மலர்ந்தார்; அதனால் உலக மக்கள் அறமுதலான உறுதிப்பொருளை அறிந்தனர்; எங்கும் நன்மைகள் மலிந்தன; புன்மைகள் அண்டத்தின் புறம்போய் ஒழிந்தன; செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அகத்தியர் சிந்தைகளித்தார்; ஏனைய புலவர் நூல்களெல்லாம் தூலமாய் விரும்புவாரற்றுப் போயின; இந்நூல் அளவிற் சிறியதாய், பொருளில் அகன்றதாய், ஆழ ஆழ இன்பந் தருவதாய், சொற்சுவையும் பொருட்சுவையும் செறிந்ததாய்த் திகழ்கிறது; இதனை உணர்ந்த மக்கள் அணுவில் மேருவை அடக்கலாம் என்ற துணிவு கொண்டனர்; செந்தமிழ்ச் செல்வமாகிய திருக்குறளைப்பார்த்து ஏனைய நாடுகளெல்லாம் உடையார்முன் இல்லார்போல என் செய்வோம் என ஏக்கற்று நின்றன; ஐந்திலக்கணங்களும் பழுத்து இனிதுறங்கும் பள்ளி இந்நூல் என்று வாயாரப் பாராட்டுகிறார்.

'மலைகளிற்சிறந்த மேருமலைபோல எல்லா நூல்களிலும் சிறந்தது இத் தெய்வத் திருக்குறளே' என்பர் தெய்வநாயகம்பிள்ளை அவர்கள். அறமுதற்பொருள்கள் அமிர்தினும் இனிய தமிழால் தரப்பெற்றுள்ளன என்றும், திருக்குறள் என்னும் தெய்வமாமறை என்றும் போற்றுவர் சோடசாவதானம் சுப்பராயச்செட்டியார். திருக்குறள் பொருள் இன்பம் அகப்படக்கொண்டு அறம்கூறி வீட்டியல்பு நன்று காட்டிய தத்துவ ஞானநூல் என்கிறார் சபாபதி நாவலர். 'வள்ளுவர் நூலிலே யாவர்க்கும் அங்கீகாரமாய பொருட்சிறப்பும் இலக்கிய இலக்கண வனப்பும் அமைப்பும் அமைந்துகிடப்பதனால் வள்ளுவர் காலத்திலேயே பிரமாண நூலாகத் தொடங்கிவிட்டது.........கண்ணுதல் கவியினும் குற்றம் கற்பித்த நக்கீரரே தம் இறைவனார் களவியலுரையில் குறளைப் பிரமாணமாக எடுத்து ஆண்டார்......முன்னரும் புலவர் பலர் அறம் பொருள் இன்பம் முப்பாற் பொருளும் ஒருவாறு எடுத்துக்கூறினாரேனும் அவரெல்லாம் திருவள்ளுவரைப் போல நெஞ்சினுள் பாய்ந்து பதிகொள்ளுமாறு சொல்லும் சொல்வன்மையும் சாதுரியமும் உடையவர் அல்லர் என்கிறார் ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை. பெருந்தொகையில் பொய்யாமொழிப் புலவர் வாக்காக 'குறுமுனிவன்' என்றபாடல் காணப்படுகிறது. இன்னும் புலவர் பலர் கூறியதாகத் திருக்குறள் பெருமையை அறிவிக்கும் (1999, to. 2003 முடிய) ஐந்துபாடல்களும் காணப்படுகின்றன.

இந்நூலின் நல்லுரைகள் திருவள்ளுவர் காலத்தின் சந்தர்ப்பங்களுக்குச் சம்பந்தமுள்ளன என்பதுமாத்திரம் அல்ல; நிகழ்காலத்திலும் அதிசமயோசிதமாய் இருக்கின்றன என்பதற்கு ஐயம் இன்று என்பர் ரெவரெண்டு எச். ஏ. பாப்ளி, எம். ஏ.

திருக்குறள் வாழ்வில் ஆக்கமதரும் மெய்ம்மைப் பொருளைக் கூறுவது; மற்றைப் பொய்மை சிறுமைகளைக கூறுவதன்று.. ......திருககுறள் தமிழ்மறையில் பிறந்ததொரு பெரும புதுமறை; உலகைக கூறுபடுத்தும் பொருள்கள அதன்கண் இலலை; உலகை ஒருமைப்படுததும செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன, ... ..... யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பது பழந்தமிழர் கொள்கை; இககொள்கை திருககுறளாகப் பரிணமித்தது; திருககுறள் வீட்டுநால; நாட்டுநால; உலகநூல்; இத்தகைய நூல் இதுகாறும் யாண்டும் வெளிவந்ததில்லை எனபர் திரு வி. க. அவர்கள்.

## முதனூலா? வழிநூலா?

இத்துணைச்சிறப்புவாய்ந்த திருககுறள் திருவள்ளுவரது சொந்தக் கருத்தாயின்–அவர் உலக ஏட்டிற்கண்ட உண்மையுரையாயின்–அநுபவப் பயனாயின், விளங்கிய அறிவிற்கண்ட முதனூலாகும். அங்ஙனமன்றி முன்னோர்நூல் ஒனறை அடியொற்றியாககப்பெற்றதாயின் வழிநூலாகும். இந்த ஆராய்ச்சியில் தமிழறிஞர் தொன்றுதொட்டே தலையிட்டு, தத்தம் அறிவினெல்லையின்னின்று முடிவுகட்டியுள்ளனர். தொல்லாசிரியர் சிலர் இதன் மேன்மையைப் புலப்படுத்த ஒப்பித்துககூறிய சிறப்புரைகளை ஆதாரமாககக்கொண்டு வழிநூல் என்பாரும உளர். ஆதலின் அதற்குத் துணைசெய்யும பாடல்களை முதற்கண் நினைவுகூர்தல் இன்றியமையாதது.

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தநதுரைத்த—நூன்முறை."
—உக்கிரப்பெருவழுதி.

"சாற்றிய பல்கலையும தப்பா வருமறையும
போற்றி யுரைத்த பொருளெல்லாம—தோற்றவே
முப்பான் மொழிநத முதற்பாவலர்". —ஆசிரியா நல்லந்துவனர்.

"செய்யா மொழிக்கும திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே". —வெள்ளிவீதியார்.

"ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கி". —மாங்குடி மருதனர்.

"மெய்யாய வேதப்பொருள் விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
அநதா மரைமேலயன்". —காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனர்.

"... ......... ..முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்". —பாரதம்பாடிய பெருந்தேவனார்.

"..............தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன". —பெருஞ்சித்திரனார்.

"வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓதஅழுக் கற்ற துலகு". —மதுரைப் பெருமருதனார்.

"வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார்". —செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்.

"... ......... ..அருமறைகள்
ஐந்தும் சமயநூ லாறுமநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்" —களத்தூர்கிழார்.

என்பன அந்தப் பாடல்கள். இவற்றில் பிரமனே நான்முகனாக அவதரித்து நான்மறைப்பொருளை முப்பாலாக மொழிந்தார் என்ற கருத்தும், நான்மறைப்பொருளையே தமிழ்செய்தார் என்ற கருத்தும் வலியுறுக்கப்பெறுகின்றன என்பர்.

பரிமேலழகர் வடநூற்கருத்து எனக் கூறுபவைகளும், இந்நூல் கருத்துத் தொகுத்து ஆக்கப்பெற்ற வழிநூல் என்பதற்கு ஏற்ற சான்று என்பர். அவை வருமாறு:—

'பகுத்துண்டு' (322) "எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு".

'படைகுடி கூழமைச்சு' (381) "வடநூலார் இவற்றிற்கு அங்கம் எனப் பெயர்கொடுத்ததும அதுநோக்கி".

'குற்றமே காக்க' (431) "இவைபற்றியல்லது பகைவர் அற்றந் தாராமையின் இவையே பகையாவன என்றும் வடநூலார் மதம்பற்றிக குற்றமே அற்றந்தரும் பகை என்றும...... ..கூறினர்".

'கொடுத்தலும் இன்சொலும்' (525) "இவ்வுபாயங்களை வடநூலார் தானமும காமமும் என்பர்".

'கொலையிற் கொடியாரை' (550) "இவரை வடநூலார் ஆததாயிகள் என்ப".

'கருவியுங் காலமும்' (631) "இவை ஐந்தனையும் வடநூலார் மந்திரத்திற்கு அங்கம என்ப".

'ஊறு ஒரால்' (662) "தேவர்க்கும் அசுரர்க்கும அமைச்சுப்பூண்ட வியாழவெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதி நூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்...... ..".

'கடனறிந்து' (687) 'வடநூலார் இவ்விருவகையாருடன் ஓலை கொடுத்து நிற்பாரையும் கூட்டித் தூதரைத் தலை, இடை, கடை என்று வகுத்துக் கூறினாராகலின் அவர்மதமும தோன்றத் தலை என்றார்.'

'அருங்கேடன்' (732) "இவற்றை வடநூலார் ஈதிகள் என்ப".

'தொல்படை' (762) "இவற்றை வடநூலார் மௌலம் என்ப".

'அறம் பொருள் இன்பம்' (501) "இவ்வடநூற்பொருண்மையை உட்கொண்டோதியது அறியாது பிறரெல்லாம் இதனை உயிரெச்சம் எனப் பாடந்திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்".

'நாணென்னும் நல்லாள்' (924) "பெண்பாலாக்கியது வடமொழி முறைமைபற்றி".

"ஈண்டு இன்பம் என்றது காம இன்பத்தினை..............இது புணர்ச்சி பிரிவு என இருவகைப்படும். ஏனை இருத்தல் இரங்கல் ஊடல் என்பனவோ எனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழககுப்பற்றி ஓதுதலான் அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடககினார் என்க". (களவியல் அவதாரிகை).

'தமமுச் செறுப்ப' (1318) "எம்மை..............இசையெச்சம். இதனை வடநூலார் காகு என்ப".

(1330) "ஈண்டுப் பிரிவினை வடநூல் மதம்பற்றிச் செலவு ஆற்றாமை விதுப்புப் புலவி என நால்வகைத்தாக்கிக் கூறினார். அவற்றுள் செலவு பிரிவாற்றாமையுள்ளும, ஆற்றாமை படர்மெலிந்திரங்கலமுதல் நிறையழித லீறாயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின் விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பலீறாயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடுபுலத்தல்முதல் ஊடலுவகை ஈறாயவற்றுள்ளும் கண்டுகொள்க. அஃதேல் வடநூலார் இவற்றுடனே சாபத்தினையும நீககத்தினையும் கூட்டிப் பிரிவினை ஐந்தென்றாரால் எனின், அஃது அறம் பொருள் இன்பம் என்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவன்மையானும், முனிவராணையான் ஒருகாலத்து ஓர் குற்றத்து உளதா வதல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டு ஒழிக்கப்பட்டது என்க".

இவைகள் பரிமேலழகர் வள்ளுவர் வடநூற்கருத்தை ஒத்து அவற்றைத் தொகுத்துக் கூறியனவாகக் குறித்த பகுதிகள். இன்னும், உரைச் சிறப்புப்பாயிரத்தும், காமத்துப்பால் தொடக்கத்தின்கண் குறித்தனவும் இக்கருத்தை வற்புறுத்துவனவாகும்.

இதனை ஒட்டிப் பிற்காலப் பெரும்புலவராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, தியாகராசச் செட்டியார், சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார், தெய்வநாயகம்பிள்ளை முதலிய பேரறிஞர்களும் கூறுகின்றனர்.

திரு. மு. இராகவையங்கார் அவர்கள் தமது ஆராய்ச்சித் தொகுதியிலே 'திருவள்ளுவரைப்பற்றிய சில குறிப்புக்கள்' என்ற பகுதியில் "மகாபாரதம் சாந்திபருவம் 58-ம் அத்யாயத்தில், உலகம் ஒருகாலத்தே தர்மம் குன்றி அதர்மத்தால் தலைதடுமாறிகின்றபோது தேவர்கள் பிரமதேவரிடம் சென்று முறையிட, அப்பகவான் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, லட்சம் அத்யாயமுள்ள பெருநூல் ஒன்றைத் தம்புத்தியால் இயற்றினர் என்றும், அதனில் அறம் பொருள் இன்பங்களான திரிவர்க்கங்கள் அவரால் உரைக்கப்பட்டன என்றும், அம்மகா சாஸ்திரத்தில் அடங்கியுள்ள விஷயங்கள் இன்ன இன்ன என்றும், பின்பு அத்திரிவர்க்கம் என்னும் தண்டநீதியைச் சுருக்கி வைசாலாக்ஷம், பாகுதந்தகம், பார்ஹஸ்பத்யம், சுக்ரநீதி என்ற நூல்கள் முறையே சிவபிரான் இந்திரன் வியாழன் வெள்ளி என்பவர்களால் இயற்றப்பட்டன என்றும், விரிவாகக் கூறப்படுகின்றன. இவ்வரிய செய்தியினின்று பிரமதேவர் இயற்றிய திரிவர்க்கம் முப்பாலாக முதன்முதல் தோன்றியது என்பதும், அதிலிருந்தே ஏனைய நீதிநூல்கள் எல்லாம் கிளைத்தன என்பதும் தெரியலாம். இவ்வாறு வள்ளுவனார், பிரமதேவாது திரிவர்க்கநூலைச் சுருக்கி முப்பால் என்ற பெயரால் தம் அரியபெரியநூலைத் தமிழுலகுக்கு அருளிய சிறப்புப்பற்றியே முன்னோர் 'நான்முகன் அவதாரமான திருவள்ளுவர்' என்று கூறலாயினர் என்று கொள்ளுதல் பெரிதும் பொருந்துவதாதல் காண்க' என்கின்றனர்.

வடநூலார் அறஞ்செயல் முறையை இஷ்டம், பூர்த்தம், தத்தம் என மூன்றுவிதமாக வழங்குவர்; அவற்றுள் இஷ்டமாகிய தெய்வங்களைத் தொழுஞ்செயலை வள்ளுவனார் தம்நூலில் விரித்துரைக்க ஒருப்பட்டிலராயினும் 'தென்புலத்தார்' என்ற குறளால் அவ்வறச்செயல்கள் இவை எனக் குறித்தார்; பொதுநன்மையாகிய பூர்த்தத்தை ஒப்புரவறிதலானும், ஏற்றார்க்கு மாற்றாதீதலாகிய தத்தத்தை ஈகையானும் விரித்தனர் என்று வள்ளுவர்குறள் வடநூல்வழிவகுக்கப்பெற்றது எனக் காட்டிப்போந்தனர்.

செந்தமிழ் மூதற்றொகுதியில், அவர்களே 'வடமொழியிலுள்ள சுருதி இதிகாச புராணங்களையும், தர்க்க வேதாந்தங்களையும், தெய்வப் புலவர் வழிக்கொண்டுள்ளார் என்பது அவ்வந்நூற் கருத்துக்களோடு ஒற்றுமையுடைய திருக்குறளால் அறியப்படுகின்றது' என்றுகூறி அதற்குப் பிரமாணங்களாக 'அகரமுதல எழுத்தெல்லாம்' என்ற குறளில் தலைமை பற்றி அகரத்தை ஆதிபகவற்கு உவமையாகக்கொண்டது கௌடபாத காரிகையில் காணப்படும் ஆதிஸாமாந்யம் என்பதுபற்றியே. இதனைப் பரிமேலழகர் தலைமைபற்றிவந்த 'எடுத்துக்காட்டுவமை' என்றார். நச்சினார்க்கினியர் 'மெய்யினியக்கம்' என்ற சூத்திர உரையில் ஆப்திசாமாந்யமாகக் கொள்வர். மேலும், மணவாளமாமுனிகள் சுலோகத்தோடும் முழுதும் ஒத்திருக்கிறது இக்குறள் என்பார்கள். 'பெற்றாற் பெறின்' (58) என்னும் குறள் மனு 5 அத், 155ம் சுலோகப்பொருளையும், வீட்டினைச் 'சிறப்பு' (31) 'சிறப்பென்னும் செம்பொருள்' (358) என்றது 'சிரேயஸ்' என்னும் (கடோப. அத். 1, வல்லி. 2, மந். 1-2.) உபநிடதப் பிரயோகம் என்றும், 'அகனமர்ந்தீதலின்' (92) என்பது காமந்தகம் அத். 3, சு. 23-ல் கண்டது என்றும், 'ஒருமையுள்' (126) என்பது கீதை. அத். 2, சு. 58ன் கருத்து என்றும், 'கொடுப்பது' (166) என்பது தானசந்திரிகையிலுள்ளது என்றும், 'தினற்பொருட்டால்' (256) என்பது பாரதம் பீஷ்மபருவத்திற் கண்டது என்றும், சிறப்பென்னும் செம்பொருள் என்பதில் செம்மை தலைமைப்பொருளதாதல் 'பரமார்த்தம்' என்னும் வடமொழிப் பிரயோக மொழிபெயர்ப்பு என்றும், 'படைகுடி' (381) என்பது முறைபிறழினும், அதிகார அமைப்பிற் சரிசெய்ததை காமந்தகம் அத். 1, சு. 16-ல் காணலாம் என்றும், 'இயற்றலும் ஈட்டலும்' (385) என்பது காமந்தகம் அத். 1, சு. 18-ன் கருத்தென்றும் இங்ஙனம் பல மேற்கோள்களைக்காட்டி எங்கும் வடநூற்கருத்துக்கள் விரவியுள்ளன என்பதை நிலைபெறுத்துவார்கள். (தொகுதி. 1,பக். 243 முடிய.)

பின்னர்வந்த சடகோபராமாநுஜாசாரியார் அவர்கள் இத் திருக்குறள் இன்னநூலின்வழியே தோன்றியது என்று கொள்ள இடம் இல்லாமையின் முதனூற்பாற்பட்டது என்பர். இனித் தருமசாஸ்திரம், அர்த்தசாஸ்திரம், காமசாஸ்திரம் முதலியவற்றின் கருத்தைத் தழுவியது இந்நூல் என்பதை நோக்குமிடத்து வழிநூலெனக் கொள்ளுதலே பொருந்தும் என அறுதியிட்டு உறுதிகூறுவர்.

வழிநூலன்று முதனூலே என்பார் சிந்தனைகளையும் சேர்த்துச் சிந்திப்போம். வள்ளுவமாலையில், நான்முகன் தேவியாகிய நாமகள் வாய்மொழியாகவந்த பாட்டு பண்டு நான்முகன் நாவிலிருந்து வேதம் பகர்ந்தேன்; இடையில் வியாசர் நாவிலிருந்து பாரதம் பகர்ந்தேன்; இன்று

என்வாக்கு வள்ளுவன்வாயது என்ற அளவில் விட்டது. நான்முகனே வள்ளுவராக அவதரித்திருப்பின் நாமகளுக்குத்தெரியாமல் இராது; வள்ளுவன் வாயிலிருந்து திருக்குறள் பகர்ந்தேன் என்று உறுதிசெய்து கொடுத்திருப்பள்.

மேலும்பரணர்,

"...............வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தார் ஓர்ந்து"

என்கிறார். இதில் உலகத்தார் நினைப்பனவற்றை எல்லாம் தாம் ஆராய்ந்து சொன்னார் என்பதனால் தம்காலச்சூழலைககருதி மக்கள் மனப்பண்பை மதித்துககொடுத்தார் என்பதே கருதப்பெறுகின்றது. நககீரரோ உண்மையை ஒளிககாது வாதாடிவெல்பவர்; அவர்கூறுகிறார் தானே முழுதுணர்ந்து உரைத்தான் என்று. பரந்தபொருளெல்லாம் பாரறியத் தெரிந்து விரித்துச்சொன்னதாக அரிசில் கிழார் அறிவிக்கின்றார். 'வள்ளுவனார் சுரந்தபா' என்பது தமிழ் நாகனார் தந்தகருத்து. 'உள்ளி யுணரவுரைத்தார்' என ஓதுகிறார் இளவேட்டனார். வண்ணக்கஞ்சாத்தனார் வடமொழி வேதம்உடையது; தமிழ் குறளுடையது; ஆதலால் எதுசிறந்தது என்று யாரும் சொல்லமுடியாது என்கிறார். இவை முதனூல் என்பார் கையாளும் மேற்கோள்கள்.

செந்தமிழ்ப்பேரறிஞராகிய பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் 'வடமொழிப் பற்றுடையவர்கள் சிலர் வேதக் கருத்துக்களை மிகத்தெளிவுபட ஆசிரியர் கூறியிருக்கிறார் என்பர். தானே முழுதுணர்ந்து என்றமையின் அது பொருந்தாது' எனத் துணிவார்கள்.

பேரறிஞர் சுந்தரம்பிள்ளை அவர்கள் இருமொழியிலும் நீதிநூல் போக்குகள தனியென்று புலப்படுப்பாராகத் திருககுறளின் முதன்மையை நிறுவுகிறார்; 'வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள், உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்திற்கு ஒருநீதி' என்று.

மனுநூலிலும் மற்ற சாஸ்திரங்களிலும கூறும் மூடப்பழக்கங்களை நீககிக் குறள் மேம்பாட்டுடன் விளங்குகின்றது என்கிறார் ரெவரண்ட் W. H. Droo.

இவற்றையெல்லாம் ஒருங்கே மனத்துள்நிறுத்தி 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற வள்ளுவர் ஆணைககடங்கி நாம் சிந்திக்கவேண்டுவன சில உள.

வள்ளுவமாலை ஆசிரியர்கள் குறளின் பெருமையைப் புலப்படுத்தி வேதத்தோடு ஒப்பித்தும், உயர்த்தியும் போற்றினர். அவர்கள் யாரும் மொழிக்காய்ச்சல் உண்டான பிற்காலத்தார் நிலையில், வள்ளுவர் நூற்கு முதன்மை வழங்கலாகாது என்ற நோக்குடன் கூறினவர்கள் அல்லர் என்பது தெளிவு. பின்வந்த உரையாசிரியர் திருவள்ளுவர் நூல்செய்த காலத்திற்கும் ஓராயிரம் ஆண்டு பிற்பட்டுப்போனர். ஆகையால் அவருடைய சூழலும், அவருடைய கல்வியும் பிறமொழியிலும் இக்கருத்துக்கள் உள என்று காட்டுவதாலும், ஒன்றிரண்டிடத்திலேனும் இந்நூல் அந்நூல்களைப் பின்பற்றித் தொகுத்தெழுதப்பெற்றன என்பதாலும் புகழோங்கும் என்று எண்ணினர். ஆதலால் வழிநூல் என்று கூறியும் கூறுமல் கொள்ளவைத்தும் சென்றூர். அவர் கூறியவற்றுள் 434, 662, 1330-ம் குறளுரைகளிற் கூறியனவே வடநூலார் கருத்துப்பற்றிக் கூறியதாகக் கொள்கின்றூர். ஏனைய கருத்தொற்றுமை காட்டியனவேயன்றி வழிநூல் என்று துணிந்து கூறவில்லை.

சாணக்கியம் முதலிய வடமொழி நீதிநூல்களினின்றும் அறங்களைத் திரட்டித் திருவள்ளுவர் நூலைச்செய்திருக்கவேண்டும் என்றும், ஆதலால் சாணக்கியர் முதலியோருக்கு வள்ளுவர் பிற்காலத்தவராக இருக்க வேண்டும் என்றும் சிலர் கூறுவர்; இதற்குப் பரிமேலழகர் 662ம் குறளின் விசேடக்குறிப்பில், 'வியாழ வெள்ளிகளது துணிபு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்' என்று எழுதியுள்ள வாக்கியத்தை ஆதாரமாகக்காட்டி. அவ்வாக்கியத்திற்கண்ட 'பின் நீதி நூலுடையார்' என்ற சொற்றூடர் சாணக்கியர் முதலாயினுரைச் சுட்டுவதாகச் சொல்கின்றனர். இதுவே பரிமேலழகர் கருத்தாயின், அவர் விசதமாக்கியிருப்பர்; அன்றியும், பின் நீதிநூலுடையார் யாரேயாயினும், அவர்தம் வழிநூல்களுக்குக் குறள் சார்புநூலாகும் என்னும் கருத்தைப் பரிமேலழகர் இவ்வாக்கியத்தால் குறித்ததாக ஏற்படுமாறில்லை. ஆழச் சிந்தித்தால் வியாழ வெள்ளிகளது நீதிநூலுங்கூட, குறளுக்கு முதல் நூல் எனப் பரிமேலழகர் இவ்வாக்கியத்தில் சுட்டினர் என்பது தெற்றெனை விளங்கும். வியாழ வெள்ளிகளின் துணிபுகளைத் தொகுத்த ஆரிய நீதி வழி நூலுடையார் முறைக்கும், குறளாசிரியர் அறம்வகுத்த முறைக்கும், எடுத்துக்கொண்ட குறட் பொருள்பற்றிய ஒப்புமையை இவ்வாக்கியத்தாற் கூறியதன்றி ஈண்டுப் பரிமேலழகர் காலமுறையால் முதல் வழி சார்பு நூல்களாமாறு வகுத்துக் கூற வந்தாரில்லை என்பது சோமசுந்தர பாரதியார் அவர்களுடைய துணிபு; ஆதலால் பரிமேலழகர் தாம் பயின்ற வடமொழி நீதிநூல்களோடு இதற்குள்ள கருத்தொற்றுமையைக்காட்ட வந்தனரேயன்றி வழிநூல் என்பதை விளக்க வந்தவரல்லர் என்பது துணிபு.

வழிநூலுக்கு இலக்கணம் வகுக்கும் நூல்களும், வழியின் வகையை நான்காகப்பகுத்து அவற்றில் தொகுத்தலை முதற்கண் கூறுகின்றது. தொகுத்தல் என்பது, முதல் நூலுள் விரிந்ததனைச் சில்வாழ்நாள் சிற்றறிவினர்க்கு அறியத் தொகுத்துக் கூறல் என்று இலக்கணம் எழுதுகிறது. அங்ஙனமாகப் பலநூல்களில் பரந்து கிடந்தனவற்றைத் தொகுத்து முடித்தலும் வழியின்வகை ஆகுமா என்பது ஆராயத்தக்கது. அன்றியும் இராகவையங்கார் அவர்கள், பிரமன்செய்த திரிவர்க்கத்தையே சுருக்கி முப்பாலாகச் செய்தார் என்று துணிவு கூறும்பொழுது அதற்கு ஆதாரமாகத் திரிவர்க்கம் என்னும் தண்டநீதியைச் சுருக்கிச் செய்யப்பட்டன வைசாலாட்க்ஷம் முதலிய நூல்கள் எனக் குறிப்பிடுகின்றார்கள். திரிவர்க்கம் என்பது தண்டநீதியாயின் பரிமேலழகர் கூறும் அறத்தின் வகையாகிய தண்டமாக எண்ணப்பெறும். 'அத்தண்டம், உலகநெறி நிறுத்தற் பயத்தவாவதல்லது விதிபயத்தற் சிறப்பிலவாதலானும், அவைதாம் நூலானேயன்றி உணர்வு மிகுதியானும் தேயவியற்கையானும் அறியப் படுதலானும், அவற்றை ஒழித்து வள்ளுவரால் ஒழுக்கமே அறம் என எடுத்துக்கொள்ளப்பட்டது' என்கின்றார். ஆதலால், பிரமன் செய்த தண்டநீதி வேறு, வள்ளுவர் கூறும் முப்பால் வேறு என்று எண்ணக் கிடக்கின்றதல்லவா?

அவ்வடநூலார் கூறிய அறஞ்செயல் முறையாகிய இஷ்டம், பூர்த்தம், தத்தங்களில் இஷ்டம் ஒழிந்தவற்றை எல்லாருக்கும் ஒத்த தர்மங்கள் என்றும், அவற்றுள் சிறந்தது இஷ்டமே என்றும், எல்லா அறநூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதலே இயல்பாகவுடைய வள்ளுவனார் தம்நூலில் விரித்துரைக்க ஒருப்பட்டிலராயினும், 'தென்புலத்தார் தெய்வம்', 'இல்வாழ்வான் என்பான்' என்ற குறள்களால் இஷ்டத்தையும், ஒப்புரவு ஈகைகளால் தத்தம் பூர்த்தங்களையும் விளக்கினார் என்கின்றார்கள். அறத்தின் வகையாயினவற்றை அப்படியே பிரித்து உணர்த்த வேண்டியிருக்க, ஒரு குறளானும், ஓர் அதிகாரத்தானும் உணர்த்தினார் என்பதில் என்ன சிறப்பிருக்கிறது. உலகப்பொருள் எல்லாவற்றையும் ஒருங்கெடுத்தோதிய வள்ளுவர் நூலில் ஏதோ வாய்ப்பாக இக்கருத்து அடங்கியிருக்க, அது வடவர்வழியை வள்ளுவர் பின்பற்றினார் என்பதற்கு எங்ஙனம் சான்றாகும்?

சாணக்கியர் தமிழ்நாட்டுச் சோமிய அந்தணர் ஆதலாலும், மௌரிய அரசனுக்காகப் பொருள்நூலைச் செய்தார் ஆதலானும், அவர் நூலுக்கும் குறளுக்கும் ஒன்றிரண்டிடங்களில் கருத்து ஒத்திருத்தல் பிறப்பிடத்தின் பயிற்சியால்விளைந்த அறிவு ஒற்றுமை என்றே கொள்ளத்தகும்.

கருத்தொற்றுமையைக் கொண்டு மேல்நாட்டு இலக்கியங்களை ஆராயப் புகின், எத்தனையோ ஒற்றுமைகள் எளிதில் கிடைக்கக்கூடும் ஆகவே அந்த இலக்கியப் பண்பாட்டைவைத்து இவர் இலக்கியம் ஆக்கினர் என்று கொள்ளலாகாது என்பது முன்னரே துணியப்பெற்றது.

## நூலமைப்பு :

இந்நூல் பெரும்பிரிவு பால் எனவும், சிறுபிரிவு இயல் எனவும், அதனிற் சிறுபிரிவு அதிகாரம் எனவும் அமைக்கப்பெற்றுள்ளது. அவற்றுள் பால் என்பது பகுதி, பண்பு முதலிய பல பொருளில் வழங்கும் பெயர்ச்சொல். ஈண்டு, பகுதி என்னும் பொருளிலேயே அமைந்துள்ளதைப் பின்னர் ஆராய்வாம். இயல் என்பது இலக்கணம், தன்மை என்னும் பொருளது. பாலின் உட்பகுதியாகிய இல்லறம் முதலாயவற்றின் இலக்கணம் உணர்த்துதலின் இயல் என்றாயிற்று. இதனானும் இது புருஷார்த்தங்களின் வழிவகைகளைக் கூறாது அவற்றின் இலக்கணம் ஒன்றுமே உணர்த்துவதாதல் காண்க. அதன் உட்பிரிவாகிய அதிகாரம் என்பது அதிகரித்தலையுடைய பகுதி எனப் பொருள்படும். ஏனைய நூல்களில் இப்பெயர் பெரும்பிரிவிற்கே வழங்கியிருத்தல் காண்க. குறித்த பத்துக் குறளிலும் அந்தப்பொருள் அதிகரித்து நிற்பதால் இப்பெயர் சூட்டப்பெற்றதுபோலும். இதனைத் தொல்லாசிரியர் யாரும் எடுத்தாளவில்லை. ஆனால் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் மட்டும் 'ஐயாறு நூறும் அதிகார மூன்றுமா' என்றருளுகிறார். ஆதலால் வள்ளுவமாலை ஆசிரியர் காலத்தேயே அதிகாரவழக்குள்ளமை அறியலாம்.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பால்களை உடையது. பாயிரத்தையும் சேர்த்து நான்கு பகுதிகளாகக் கொள்வர் பூபாலப்பிள்ளையவர்கள். அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 75 அதிகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் ஆகநூல் 133அதிகாரங்களையுடையது. பால் என்பது பகுதி என்னும் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது. அங்ஙனமன்றிப் பால்போறலின் உவமையாகுபெயராக வந்தது என்பர் பிற்காலத்து ஆராய்ச்சியாளர் சிலர். ஒவ்வொரு அதிகாரத்திற்கும் பப்பத்துப்பாடலாக 1330 பாடல்களை உடையது.

இதனைப் பெரும்பிரிவாகப் பாலெனப் பிரித்தது, அறமே மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டு ஒழுக்கம்பற்றிய அறமும், பொருளீட்டல்பற்றிய அறமும், இன்பம்பற்றிய அறமுமாக இயற்றப்பட்டமை விளக்கவேயாம்.

'இந்நூலிற்கு உரையாசிரியராகிய பதின்மருள் பிந்தினோர் சிலர் அறப்பால் பொருட்பால் இன்பப்பால் என மூப்பாலாக வகுத்து முறையே அறத்திற்கு மூப்பத்துநான்கு பதிகங்களும், பொருட்கு எழுபது பதிகங்களும், இன்பத்திற்கு இல்வாழ்க்கையுணர்த்தும் இருபத்தைந்து பதிகங்களை இடம்பிறழ இறுதியில்வைத்து இந்நூல் முழுமையும் அறநூலாகவேயிருக்க அதனுட் சில பதிகங்களை மட்டும் அறத்திற்குரிய என்ற குற்றமும், அறத்திற்குப் புறம்பாய பொருளை அநேக பதிகங்களாலும் இன்பத்தைச் சிலபதிகங்களாலும் கூறிய குற்றமும், அறம் பொருள் இன்பங்களிற் சிறந்த வீடுகூறாத குற்றமும் நூலாசிரியர்க்கேற்றினர். அது எவ்வாற்றானும் எவர்க்கும் பொருத்தமின்மையானும், அறம் பொருளோடு இன்பமும் நாற்பயனேயன்றி நூலினுறுப்பாகுதலின்மையானும், காமப்பால் என வைத்த இருபத்தைந்து பதிகங்களுக்கும் காமநோக்கமாகப் பொருள் செய்தோரும் இதற்கு வேறுமொரு பொருளுளதெனக் கூறியிருத்தலானும், அவை இயன்முறை அறத்திற்கு ஏற்பப் பொருள்தந்து நிற்றலானும், அவ்வியன்முறையின் கடையில் அமைக்கலாயின' என்பர் சுகாத்தியர்.

இதனால் திருக்குறள் முழுதுமே அறநூல் என்பதும், முதலிற் கூறிய இல்லறப்பயனாகிய இன்பமே இறுதியிற் கூறப்பெறுகின்றது என்பதும், துறவறப்பயனாகிய பேரின்பப்பயனும் இன்பப்பாலுக்கு வேறு ஒருபொருள் உளதெனக் கூறுவதால் உணரலாம் என்பதும் பெறப்படுகின்றன.

இந்நூல் அறம் என்ற பெயராலேயே அழைக்கப்பட்டதை முன்னர்க்காட்டினும். ஏனைய நீதிநூல்களைப்போல இது ஆட்சிமுறையைப் பற்றியும், இன்பங்களைத் துய்க்கும் முறையைப்பற்றியும் கூறாது எல்லாவற்றிலும் ஒழுக்கம் கலந்த விளக்கமே வேண்டும் என அறிவிப்பதால் இது அறத்தின் பகுதியவாகிய மூன்று எனவே கொள்ளப்படும். இந்த நூலோடு ஒத்த காலத்தவரும் தமிழ் முனிவராய் வடமொழி அர்த்த சாஸ்திரம் இயற்றியவருமாகிய சாணக்கியர் தமது நீதிசூத்திரத்தில் இன்பங்களுக்கு எல்லாம் அடிப்படை அறம் என்றும், அறத்தின் அடிப்படை பொருள் என்றும், பொருளின் அடிப்படை அரசியல் என்றும், அரசியலின் அடிப்படை பொறியடக்கம் என்றும், அதுவும் வினயத்தின் வழியது என்றும், வினயம் பெரியோரைத் துணைக்கோடலால் வருவது என்றும், அதனால் ஞானத்தை எய்தலாம் என்றும் கூறுகிறார். இதனால் பொருளும் இன்பமும் அறத்தின் வழியனவாக இருந்தால் பெருமை எய்தும் என்று பேசப்படுகிறது. வள்ளுவரும் முதற்கண் தத்தமக்கு ஏற்றவகையில் பொறி அடக்கமாகிய இல்லற துறவறங்களைக்கூறி, பொருள்கூறுவான் தொடங்கி முதற்கண் அரசும் பின் முறையே அதன் அங்கங்களும்கூறி இறுதியில்

இன்பத்தில் முடிக்கிறார். இது இன்பத்தின்மூலம் அறம் என்ற சாணக்கியர் சூத்திரத்தோடு ஒத்திருக்கிறது.* ஆதலால் ஏனைய அர்த்தகாம சாஸ்திரங்களைப்போல ஈட்டும் துய்க்கும் உபாயங்களைமட்டும் கூறாது அவற்றின் ஒழுக்கங்களைக் கூறுவதால் அறமே முப்பாலதாகப் பிரிக்கப்பட்டது என்பது தெளிவு.

திரு ஐயர் அவர்கள் இதனுடைய அமைப்பைப்பற்றி, 'மிக அரிய விஷயங்களை வரையறைப்படுத்திச் சுருக்கமாகச் சொல்லுதலும், ஒரு பொருளின் இலக்கணத்தைக் கூறுதலும், அதன் இன்றியமையாமையைக் கூறுதலும், பயன் அறிவுறுத்தலும், மேற்கொள்ளுதற்குரிய தந்திரத்தை உரைத்தலும், உலகப்பொருளின் வாயிலாக உண்மையை நிரூபித்தலும், உவமைகள் வாயிலாகப் பொருள்புலப்படுத்தலும் இந்நூலின் சிறந்த அமைப்புக்களாம்' என்பர்.

பாயிரம்:— பாயிரம் என்பது வரலாறு. அது நூலைப்பற்றிய இன்றியமையாத பொருள்களை அறிவிப்பது. பாயிரம் என்ற சொல் தமிழ்ச்சொல்லா பிறசொல்லா என்ற ஆராய்ச்சி நெடுங்காலமாக உண்டு. பாயிரம் நூலுக்கு முகம்போல்வது. முகத்தானன்றி மனிதன் இன்னன் என்று அறியப்படாதவாறுபோல, பாயிரத்தானன்றி நூற்போக்கு அறியப் பெறுமையின் முகவுரையாயிற்று என்பர் வெள்ளியம்பலவாணமுனிவர். அங்ஙனமன்றி நூல்முதலிய பொருளைத் தொகுத்துச் சொல்வதாகிய பொருளடக்கம் என்பாரும் உளர். இப்பாயிரம் இருவகைப்படும்; பொதுவும் சிறப்பும் என. சிறப்புப்பாயிரம் தற்சிறப்பும், சிறப்பும் என இருவகைப் படும். அவற்றுள் இது தற்சிறப்பாகும் என்பர் சிலர். 'தெய்வவணக்கமும் செயப்படுபொருளும், எய்த உரைப்பது தற்சிறப்பாகும்' என்பது அதன் இலக்கணம். அதனைக்கொண்டு மேற்போக்காக அளக்கின் கடவுள் வாழ்த்தாகிய தெய்வவணக்கமும், அறன்வலியுறுத்தலாகிய செயப்படு பொருளும் எய்தவுரைத்தலின் தற்சிறப்பாயிற்று எனலாம். ஆயினும் இந்நூல் கடவுள் வாழ்த்திற்கும், ஏனையநூல்களின் கடவுள் வாழ்த்திற்கும் வேறுபாடுண்டு. ஏனையநூல்களில் எடுத்துக்கொண்டநூல் இனிது நிறை வேறுதற்பொருட்டும், நின்று நிலவுதற்பொருட்டும் கவிஞர் கடவுளை வாழ்த்துவர். இந்நூலில் கடவுளின் பொது இயல்பும், (தடத்த இலக்கண மும்) சிறப்பியல்பும் (சொரூப இலக்கணமும்) கூறி, அவரை வாழ்த்துதல் கற்றறிந்த மாந்தர் கடன் என்றும், கடவுளை வாழ்த்துதலின் பயனும் கூறப்படுகின்றன. இதனை ஊன்றியாராயின் கடவுளை வாழ்த்துதலும்,

* கருத்தொற்றுமை காட்டப்பட்டதேயன்றி வழிநூல் என்பது எமது கருத்தன்று.

தலையாய அறம் அல்லது ஒழுக்கம் என்பது உணர்த்தப்பெற்றதேயன்றி ஏனைய நூல்களைப்போலக் கடவுளை வாழ்த்தவில்லை.

இதனையடுத்து வான்சிறப்பு, நீத்தார் பெருமைகள் வைக்கப் பெற்றுள்ளன. இந்த முறைவைப்பைப்பற்றி ஆய்வாளர் கருதுவன பல. தொல்காப்பியத்துள் பாடாண்திணைப்பகுதியாக 'அமரர்கண் முடியும் அறு வகையானும்' என்னும் சூத்திரத்து, தெய்வங்களிற் சிறந்தாரை வாழ்த்தும் தெய்வவாழ்த்தும், தெய்வத்தைப்போலக்கொண்டு வாழ்த்தும் நிறைமொழி மாந்தர், உயர்ந்த அந்தணர், ஆனிரை, மழை, முடியுடைவேந்தர், உலகம் இவற்றை வாழ்த்துதலாகிய அறுமுறை வாழ்த்துக்களும் அறிவிக்கப் பெறுகின்றன. இவற்றுள் தெய்வவாழ்த்துக் கடவுள்வாழ்த்திலும், நிறை மொழி மாந்தர் அந்தணர் வாழ்த்துக்கள் நீத்தார்பெருமையிலும், மழை வாழ்த்து வான்சிறப்பிலும், வள்ளுவரான் அமைக்கப்பெறுகின்றன என்பர் சிலர். ஏனையவற்றையும் வலிதிற்பிடித்து இதனுள் அடக்க முயல்வாரோடு அறம்வலியுறுத்தலையும் ஒரு தெய்வவாழ்த்தாகக் காட்டுவர் மு. ரா. அவர்கள் தமது பொருளதிகார ஆராய்ச்சியில். கடவுள் வாழ்த்து முதலிய நான்கு அதிகாரங்களைமட்டும் பாயிரமாக வள்ளுவனார் தனியே கொண்டது எக்காரணம்பற்றி என்றகேள்வி நெடுக நிகழ்ந்து வருவதுண்டு. இதற்குத்தக்க விடை இதுகாறும் கேட்டதில்லை. ஆயினும் தொல்காப் பியனார் கூறும் 'கொடிநிலை கந்தழி வள்ளி என்ற மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணியவருமே' என்னும் சூத்திரத்தில் உயர்பின் வழிவரும் ஒரு சொல்லைக் கடவுள் வாழ்த்தொடு கூறுதலால் அவ்வாழ்த்து முதற்கட் கூறும் சிறப்புடையது என்பதும், மற்றவை அதன்பின்னர் வைத்து வாழ்த்தப்படுதற்குரியன என்பதும் அறியத்தக்கன. இவற்றுட் கொடிநிலை மேகத்தை உணர்த்தும். கிழ்த்திசைக்கண்ணே நிலைபெறுதலையுடையது நீடனிலையுடையது என்பன இதன்பொருளாம். நச்சினார்க்கினியரும் இவ் விருபொருள்களைபற்றிச் சூரியனுக்கு இப்பதத்தை இணக்குதல்காண்க. மேகவாகனனாகிய இந்திரனுக்குரிய திசையாதலின் அத்திசை மேகத்திற்கு உரியது என்பதும், அங்குநின்றெழுந்த கொண்டல்களே உலகதாபந்தீரப் பெய்வன என்பதும் அறியத்தக்கன. இவ்வாறன்றி மின்னற்கொடிக்கு நிலைக்களனுதல்பற்றி மேகம் கொடிநிலை எனப்பட்டது என்றுமாம். கந்தழி-பற்றழிவு. அஃதாவது பற்றழிந்தார் தன்மை என்றவாறும். வள்ளி என்பது அறம். நச்சினார்க்கினியருக்கும் இக்கருத்தாதல் 'வெண் கதிர் தேவர்க்கு அமிர்தம் வழங்கலான் வள்ளி என்பதூஉம் ஆம்' என்று அவர் கூறுவதிலிருந்து வண்மையடியாகவே இச்சொல் வழங்கியது ஆதல் தெளிவு. ஆகவே இந்நான்கும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருவனவாகிய இம்மூன்றையுமே ஆதல் தெளியலாம் என்பார்கள். பரிமேலழகர் கூறும் பாயிர அமைப்பை அவர் உரையுட் காணலாம்.

பிற்கால ஆராய்ச்சியாளர் சிலர் பாயிரம் பின்னர்ச் சேர்க்கப் பெற்றது என்பர். வள்ளுவர் வாழ்க்கையியலை வகுக்கவந்தவர் கடவுளையும் வான் முதலியவற்றையும் வாழ்த்தத் தேவையில்லை என்பர். ஊன்றி நோக்கின், தமிழ்நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்கள் 'அகரமுதல் னகர விறுவாய் முப்பஃதென்ப' என்ற தமிழ்நூல்விதிக்கேற்ப 'அகரமுதல' என்று தொடங்கி 'பெறின்' என முடிதலே பாயிரமும் வள்ளுவர் வாக்கே யென்பதை வற்புறுக்கும் சான்ருகும். அன்றியும் அறவழிநின்று பொருளீட்டியும் இன்பந்துய்த்தும் வாழும் வாழ்வெல்லாம் சாவா மூவாப் பேரின்பம் எய்தலே என்பது அவரது முடிந்தகொள்கை. அதனை முதற்கண் வற்புறுத்திக்கூறலே நூல்செய்ய எடுத்துக்கொண்ட புலவர் கடமை. அதனைப் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர்' என்ற குறளால் முடித்துக் காட்டுகிருர். மாமழை போற்றும் வான்சிறப்பால் மழையின் இன்றியமையாமையும், அதன் பயனும், வன்மையும் வகுத்துச் சொல்கிருர்.

அறன்வலியுறுத்தல் என்பது வருபொருளுரைத்தலாகிய செயப்படுபொருள் உணர்த்தியது. இதில் அறத்தின் பொதுவிலக்கணம் கூறி ஏனைய பொருளும் இன்பமும் இது தர வருவனவே என்கின்ருர். பாயிரம் நூற்குப் பாயிரமாதலின் பின்னர்க்கூறும் முப்பாலுக்கும் இதில் தோற்றுவாய் செய்தல் வேண்டும். அறத்துப்பாலுக்குத் தோற்றுவாயாக அறனை வலியுறுத்தியவர் ஏனைப்பாலையும் தனிச்சிறப்போடு விதந்து கூறுபவராயின் பொருள்செயல்வகை, இன்பநலன் என்று தனித்தனியே செயப்படுபொருளைப் பாயிரத்துள் சொல்லுதல் வேண்டும். அங்ஙனம் அன்றி அறன்வலியுறுத்தல் ஒன்றேஉரைத்தலின் இவர் நுதலிப்புகுந்தது அறமொன்றுமே என்பதும், ஏனைய இரண்டும் இதனுள் அடங்கியனவே என்பதும், அதனுலேயே அறத்தின் பகுதியாகவே ஏனைய இருபாலையும் ஓதினுர் என்பதும் நுனித்தறியத்தக்கன. அதற்கு ஆதாரமாக 'சிறப்பீனும் செல்வமுமீனும் அறம்' எனவும், 'அறத்தாறிதுவென வேண்டா சிவிகை பொறுத்தானேடு ஊர்ந்தானிடை' யறியப்படும் எனவும் வருவனவற்ருல் பொருளறத்தையும், 'அறத்தான் வருவதே யின்பம்' என்பதால் இன்ப அறத்தையும் தோற்றுவித்துத் தான்கூறும் அறம், அறம் எனவும், பொருளறம் எனவும், இன்ப அறம் எனவும் முப்பாற் படுதலையும் தெரிவித்தார். இதனை யுட்கொண்டுதான் ஆலத்தூர் கிழார் 'அறம்பாடிற்றே' என்று சிறப்பித்ததும் என்னலாம். அன்றியும் 'சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்துவழிப்படூஉந் தோற்றம் போல' என்ற புறப்பாட்டுக்கருத்தும் இதனை ஒருவாறு விளக்குதல் காண்க. இதனை முன்னர் எடுத்துக்காட்டிய சுகாத்தியர் உரையில்கண்ட 'இந்நூல் முழுதும் அறநூலாயிருக்க' என்ற பகுதியால் நன்கு தெளியலாம்.

ஆகவே இப்பாயிரம் இந்நூற்குத் தனிச்சிறப்பென்பதும், இது ஆசிரியராலே ஆக்கப்பெற்றதென்பதும், இயல் கூறுவார் தன் நூல் முடியுங் கருத்தின் கடவுளைத் தான் வாழ்த்தாமல் கடவுளை வாழ்த்துதல் கற்றவர் கடமை என்று அதனையும் ஒரு ஒழுக்க இயலாகக் கூறிவைத்தார் என்பதும், இது அறநூலே என்பதும், அதனாலேயே அறன்வலியுறுத்த லிலேயே முப்பாலுக்கும் இயல் தோன்றச் செயப்படுபொருள் உரைத்தார் என்பதும் விளக்கப்பெற்றன.

பாயிரத்தைப் பற்றிச் சுகாத்தியர் கூறுவன:— 'இந்நூலிற்குப் பாயிரம் நான்கு முகமாகத் தந்தனர். அவற்றுள் முதலாமுகத்தில் முதற் பொருள் வாழ்த்துரை யான் எனல் அறுதலால் ஆணவமல நீக்கமும், இரண்டாமுகத்தில் மறைத்துணை வாழ்த்துரை எனதெனல் அறுதலால் மாயாமல நீக்கமும், மூன்றாமுகத்தில் துறவுரன் வாழ்த்துரை விருப்பமறுத லால் காமியமலநீக்கமும், பொதுவாற்கூறிச் சிறப்பாகிய நான்கா முகத்தில் அறமுறைவாழ்த்துரை, இயல், இயை, இறை என்னும் உலகமுறையின் முயல்பவர் மும்மலமும் அறுதலால் தத்தம் நிலையில் வழுவாதொழுகும் அறத்தின் ஊக்கமுங் கூறினர்' என்பர். இவர் பாயிர இயல்பு கூறும் பகுதியும் பயனும் மிகநுணுகி ஆராயத்தக்கன. இவர் ஒரு கிறித்தவப் பாதிரியார் என்பதையும் 1889-ம் ஆண்டில் திருக்குறளைச் சுருக்க உரையுடன் பதிப்பித்தார் என்பதையும் மறத்தலாகாது.

அறம் :— இச்சொற்கு இதுதான் பொருள் என யாரும் வரையறுக்க முடியாது. அறவியலை அறிவிக்கும் நூல்களாவது, அறத்தை முற்ற வகுத்தனவோ எனின், அதுவும் இல்லையெனவே துணிந்து கூறலாம். அறம் மிகப் பரந்தது. அதனை அறிவிக்கப் புகுந்த பலர் விதிவகையான் விளக்கிப்போந்து முடியாமையின் விலக்குவகையானும் (எதிர்மறையானும்) விளக்கினார்கள். அப்படியும் அதனிலக்கணம் முற்றியபாடில்லை. அது அறு + அம் அறம் என இயைந்து விதியானும் விலக்கானும் செய்வன தவிர்வனவற்றை வரையறுப்பது எனப் பொருள் படும். அம் — வினைமுதற் பொருளில்வந்தவிகுதி. ஆதலால் மனிதவாழ்வில் கொள்ளத்தக்கனவும் தள்ளத்தக்கனவும் இவையென வரையறுப்பது அறம் எனலாம். உலகில் உள்ள நல்லன எல்லாம், தகுதியாயின எல்லாம், புண்ணியமெல்லாம், நோன்பெல்லாம், ஞானமெல்லாம் அறம். எச்செயல் யாவரானும் பாராட்டப் பெறுகின்றதோ அது அறமாகும். விலக்கத் தக்கது ஒன்றும், உலகத்துப் பலராலும் பாராட்டப்பெறுமாயின் அறமாகலாம் என்கிறது சுக்கிரநீதி. (அத். 5. சு. 35)

இத்தகைய அறத்திற்கு- சிறந்தாரும் வரைவிலக்கணங் கூற முடியாத அறத்திற்கு வள்ளுவர் சிலசொற்களால் மிகச் சீரிய முறையில் இலக்கணங்கூறிமுடித்தார். முற்கூறிய மனு, சுக்ரன் முதலாயினர்கூட நல்லன செய்தல் அறம் என்றார்கள். வள்ளுவர் செயல் சிந்தையின் வழியது ஆகலின் அறம் அங்கேயே அமைதல்வேண்டும் என்கிறார். செயற்கண் வெளிப்படின் சிந்தித்துச் செயலுக்கு வருவதற்குள் அறமல்லாதன உள்ளத்தையும், உணர்ச்சியையும் ஏன் உடலையுங் கூடக் கெடுத்து விடுகின்றன. ஆதலால் அதனை அகத்திலேயே அமைகக வேண்டும் என்று கருதிய வள்ளுவர் அறமாவது 'மனத்துககண் மாசிலனாதல்' என்றார். மனமாசு இவையென அவரே உணர்த்தாவழி நாம் உணர்வது எப்படி? அதற்காக 'அழுககாறு அவா வெகுளி' இவை மனக்குற்றம் என்றார்; இவற்றாலும், மொழிக்குற்றமாகிய கடுஞ் சொற்கூறலானும் அறம் தவறும். இந்நான்கினும் தவறாததே அறம் என வரையறுத்தார். சொல்லால் நேரும் அறவழுவைக் காத்த அவர் மீட்டும் வற்புறுத்த 'இன்சொலினதே யறம்' என உடன்பாட்டுமுகத் தானும் ஓதினார். இங்ஙனம் அறமாவது மன மொழி மெய்கள் தூயனாதல் என வரையறுத்தோதியது வேறு எந்த நீதிநூலாரும் சொலல இயலாத பெருமையது. இந்த அறம என்ற சொலலுககு ஒத்த சொல் வடமொழியில்தான் உண்டு. அது தருமம என்பது. ஆங்கிலத்தில் இதற்கொத்த—இதன் பொருள் முழுமையும் அடககிக்காட்டக்கூடிய சொல் ஒன்றுமில்லை எனப் பாராட்டியிருககிறார்கள் கனம் ராஜாஜி அவர்கள். (C. R. மொழிபெயர்ப்பு பக். 2).

இத்தகைய அறத்தை இல்லறம் துறவறம் என இரண்டாகப் பிரித்தார் வள்ளுவர். பிரமசரியம் முதலிய நால்வகை நிலையுள் இரண்டனையே சிறப்புப்பற்றி எடுத்தனர். பிரமசரியம் விரதங்காத்துக் கல்வி முற்றிய பின்னர் இல்லறத்தில் முடிவெய்துவதாதலின் அதனை இல்லறத்தினும், வானப்பிரத்தம் துறவிற்கு முதற்படியாதலின் அதனை அதிலும் அடக்கி இரண்டென்றார் என்பர் சிலர். பிரமசரியத்தைப் புதல்வர்ப்பேற்றிலடக்கினார் என்பர் சிலர். பரிமேலழகர் 'நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித்து எல்லார்க்கும் ஒத்தலிற் பெரும்பான்மை யாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறமென இரண்டாகக் கூறப் பட்டது' என்பர். V. R. தீட்சிதர் அவர்கள் அறத்துப்பாலில் முதல் இருபத்துநான்கு அதிகாரங்களில் பிரமசரிய கிருகஸ்த ஆச்சிரமங் களையும், பின்வரும் 25 முதல் 34 வரையுள்ள அதிகாரங்கள், வானப் பிரத்தாச்சிரமத்தையும், பின்னுள்ள 4 அதிகாரங்கள் சந்யாசத்தையும்

குறிப்பன என்பார்கள். இதற்கு விளக்கம் காட்டி அடக்கிக் கூறினார்களில்லை. தமிழ்மரபு இல்நிலையும், மிக்க காமத்து வேட்கை தீர்ந்தழி எய்தப் பெறுவதாய துறவு நிலையும் ஆகிய இரண்டுமேயாதலின் இரண்டாக ஓதினார் என்பர் இன்றைய ஆராய்ச்சியாளர் பலர்.

அறங்கூறும் பிறநூல்களாகிய நாலடியார் போன்றவற்றுள்ளும் அறம இரண்டாகப் பிரிக்கப் பெற்றுள்ளமையும், ஏனைய இருநிலைகளை யும் ஒன்றனுள் அடக்காமையும் நோக்குங்கால் சங்க நூல்களில் இல்லறமும் துறவறமுமே கூறப்படுதல் தெளிவு. அன்றியும் நாலடியார் துறவியலில் தொடங்குகிறது. இவ்வியலை அடுத்து வைத்துள்ளது; அது சைன மரபு. வள்ளுவர் 'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்ப தாலும், இல்வாழ்க்கை யறத்தாற்றின் ஆற்றின் புறத்தாற்றிற்போய்ப் பெறுவதொன்றில்லை எனக் கூறுவதாலும இல்லறமே சிறந்தமை தெரி விக்கப் பெறுகின்றது. ஔவையும் 'இல்லற மல்லது நல்லறமன்று' என்று சொல்வது இதற்குத்துணை. ஊழைத்தனியே ஓரியலாக ஆண்டார். அவ்வூழ் அறத்தின் பயனாய் விளைந்து, பின்வரும் பொருளுக்கும் இன்பத்திற்கும் வழியாதலின் அறத்துப்பாலினிறுதில் காரண காரிய இயைபுபற்றி வைக்கப்பெற்றது. ஊழ் காரணமாகப் பின்வரும் பொருளும் இன்பமும் விளைவது உறுதியாதலின் பொருளுக்கு முதற் கண் அமைத்தார். ஊழ் ஒரேயதிகாரமாக இருந்தமையின் ஊழியல் எனக்குறியாது விட்டனர்போலும்.

"பாயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றாழாக—ஆய
அறத்துப்பால் நால்வகையா ஆய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து."

என்ற பாடலால் அறத்துப்பால் நான்காகப் பகுக்கப்பட்டமை அறியலாம.

இல்லறவியல் இல்வாழ்க்கை தொடங்கிப் புகழ் ஈறாக இருபது அதிகாரங்களையுடையது. அதில் இல்வாழ்க்கையே நல்ல வாழ்க்கை; இல்வாழ்வானுக்குரிய இன்றியமையாத கடமைகள் எல்லார்க்கும் துணை யாதலும், உழைப்பின்வந்த ஊதியத்தைப் பகுத்துண்டலும் முதலாயின. இல்வாழ்க்கைக்குப் பண்பு அன்பு. பயன் அறம். இவ்வண்ணம் அன்பின் பயனாக அறம் அமைதலை 'அறத்திற்கே அன்புசார்பு என்ப' என்ற பகுதியாலும் பின்னர் வற்புறுத்தல் காண்க. இல்வாழ்க்கையை விடச் சிறந்தது ஒன்றும இல்லை; அமரவாழ்வெய்தலே அதன் பயன். இத்தகைய இல்வாழ்க்கைக்குத் துணை யின்றியமையாது. துணையும நல்ல குணமும், நல்ல செய்கையும் உடையதாக இருத்தல் வேண்டும்.

வருவாய் அறிந்து வழங்கிவாழும் இயல்பினதாக இருத்தல்வேண்டும். துணை நல்லதுணையாக இல்லாவிட்டால் எல்லாம இருந்தும் பயனில்லை. துணைக்குக் கற்பே யணி எனப் பெண்ணியல்பு பேசப்படுகின்றது. இங்ஙனம் இல்வாழ்வார்கரு 'இவனைப்பெற இவன் தந்தை என்ன தவஞ்செய்தானே' என்ற சொல்லை உலகில் நிலைநாட்டும் மககளைப் பெறுதல் இன்றியமையாதது. மக்களில்லா வாழ்வு எககளிப்பில்லாதது. மக்கள் குழப்பிய உணவையுண்டலும், மககள் மேனியைத் தீண்டலும், அவர் உரை கேட்டலும், மிகஇனிமை பயப்பன. தந்தையின் கடமை சிறந்த முறையில் கல்வியளித்தல். படித்த மகனைக் கண்டால் தாய்க்கும் பெருமகிழ்ச்சி. மகன்கடமை தனது நெறியாலும் ஒழுககத்தாலும எல்லாரும் தன் தந்தையைப் பாராட்டச் செய்தல். இவ்வண்ணம நன் மக்களைப்பெற்ற இல்வாழ்வார்க்கு அமையவேண்டிய இன்றியமையாத குணம் அன்பு. அந்த அன்பு தமக்கு உரிமையுடையார் துன்பங்கண்ட காலத்து வெளிப்படும். எல்லார்க்கும் உபகாரியாக்கும் இயல்பு அன்பால் விளைவதே. அன்பாலே உலகில் நன்பு வளர்கிறது. அன்பு அகத்துறுப்பு. அன்பில்லாத வாழ்வு வற்றியமரம் தளிர்த்ததுபோலத்தான். அன்பு உடையார், தம்மைப்போல அனைவர்க்கும் பசியுண்டு தாகமுண்டு துன்ப முண்டு என எண்ணுவார்கள். அதனல் புதியராய் வந்தவர்களையும் தமர் போலப் பேணத்தலைப்படுவர். அவர்களே உண்மையில் இல்வாழவார் ஆவார். என்ன இடையூறு நிகழினும், எவ்வளவு பஞ்சகாலமாயினும், எவ்வளவு உயர்ந்த உணவாயினும் விருந்துபசரியாது உண்டல் கூடாது. விருந்து உபசரிப்பவர்க்கு விளையுள்பெருகும். செல்வம்வளரும். மறுமையில் வானவர் விருந்தாக வரவேற்பர். விருந்துபேணுச்செல்வர் மடையர். விருந்துபேணுமுறையோ இன்முகத்தோடு வரவேற்று இன்சொல் சொல் லுதல். இன்சொல்லே இல்வாழ்விற்கு அணி. இன்சொல்லே புண்ணியம் பெருக்கும.

மக்களுக்குச் செய்நன்றியறிதல் இன்றியமையாதது அது காலத்திற்செய்ததும், மாற்றுப்பயன் கருதாது செய்ததும், யாதொரு தொடர்புமின்றியேசெய்ததும் என மூவகைப்படும். நன்றிக்கு மதிப்பு செயப்பட்டவர் தகுதிநோககியே அமைகின்றது. செய்நன்றி காரண மாகவும், அன்பு முதலிய காரணமாகவும் நடுவுநிலை தவறக்கூடாது. நடுவுநிலை தவறின் கேடுவரும் என்பது உறுதி அதுவும் வாணிகர்க்கு நடுவுநிலை இன்றியமையாதது. தீயன மனம்மொழி மெய்களால் நிகழும். அங்ஙனம் நிகழாதவாறு அடங்கியிருத்தல் புகழையும், புண்ணியத்தையும், அமரவாழ்வையும் அளிக்கும். எவ்வளவிற்கெவ்வளவு செல்வத்தாலும் சீர்த்தியாலும் சிறப்பாலும் உயர்கிறேமோ அவ்வளவுக்கவ்வளவு அடக்கம்

இருத்தல் வேண்டும். நாவடக்கம் மிக நல்லது. நாவடங்காமையால் விளையும் தீமைகள் பல.

ஒழுக்கந்தான் ஒருவனுக்கு உயிர்; அதுதான் குடிப்பிறப்பு; அதுதான் உயர்வளிப்பது; அதுதான் நன்மைக்கெல்லாம் அடிப்படை. ஏட்டில் எழுதப்பெற்றதெல்லாம் ஒழுக்கமல்ல. உலகத்தோடு ஒத்ததே ஒழுக்கம். ஒழுக்கத்தவறு மெய்யுணர்ச்சியால் விளைவது. கண்டு கேட்டு உற்று உண்டு உயிர்த்து அறியும் ஐவகை இன்பங்களையும் தன் மனைவியிடமாகப் பெறுதல் ஒழுக்கம்; பிறனில்லாளை விரும்பியடைதல் ஒழுக்கக் கேடு. பிறர் மனைவியை விரும்புவார் அறம் பொருள் இவற்றையிழப்பர். அவர்களே பேதை. அவர்கள் இறந்தவர்களே. அவர்களே பழிகாரர்கள். பாவிகள். பிறர் மனைவியை ஏறெடுத்தும் பார்க்காதவர்களே வீரர்கள். ஒழுக்கமுடையார். தருமவான்கள். அவர்களே உலகில் எல்லா நல்லகாரியங் களுக்கும் தலைமைதாங்க உரியவர்கள்.

இங்ஙனம் இந்திரியங்களை வென்று விளங்குபவன் மனத்தையும் வென்றவன்தானே. அவனிடம் பொறுமையிருக்கும். பொறுமையாவது குறைசெய்பவர்களை மன்னித்து விடுவதுமட்டுமல்ல. மறந்தேவிடுவதுதான். பொறுமை சால்புடைமையைத்தரும். அழியாப்புகழைத் தருவதும் அது. துறவிகளைக்காட்டிலும் பெருமையைத்தருவதும் அதுவே. பொறுமைக்கு மறுதலை பொறாமை. இது பிறர் செல்வம் புகழ் பதவி முதலியன கண்டவழி விளைவது. இது பகைவனைப்போலத் தன்னையுடையவனுக்கு அழிவுண்டு பண்ணும். பொறாமையுடையவனைப் புண்ணியம் பொருந்தாது. செல்வம் சேராது. சுற்றமுங்கெடும். உணவுக்கும் உடைக்குங்கூட வருந்துவன். ஒருபோதும் அவனுக்கு ஆக்கமில்லை. ஆதலால் மக்களனைவரும் அழுக்காறில்லாமையை ஒழுக்கமாகக்கொள்ளுதல்வேண்டும். பொறாமைப்பட்டவன் பிறர்பொருளை கவரக்கருதுதல் இயல்பு. அங்ஙனம் விரும்பின் அவன் ஆக்கம் கெடுதலேயன்றி அவனும் கெடுவன். குலம் அழியும். குற்றமிகும். ஆதலால் பிறன்பொருளை விரும்பியாகும் செல்வத்தை விரும்பற்க.

சிலருக்கு வெஃகியபொருளை அடையமுடியாதாயினும் — இவன் செய்யும் சூழ்ச்சிகள் பலிக்காதாயினும் ஆக்கமுடைய பிறரைப்பற்றிப் புறங்கூறநேரும். அவ்வண்ணம் புறங்கூறுதல் பாவஞ்செய்தலைக்காட்டிலும் கொடிது. புறங்கூறி வாழ்வதைக்காட்டிலும் இறத்தல் நல்லது. மக்கள் அனைவரும் நண்போடுவாழப் பிறந்தவர்கள். அவர்கள் புறம்பேசி உறவினரைப் பிரித்தல்கூடாது. தன்னோடு உயிரொத்த சினேகிதர் குறைகளையும் தூற்றுவார் பிறரைப்பற்றிப் பேசுவதைச் சிந்திப்பானேன்? பிறரிடம் குறைகாண்பதைப்போலத் தன்னிடமும் கண்டால் புறங்கூற வருமா? புறங்கூறத் தலைப்பட்டவன் வெற்றுரைபேசவும் பின்வாங்கான்.

பயனிலபேசுபவர்களை எல்லாரும் இகழ்வர். பயனில பேசுதல் சிறப்பைக் கெடுக்கும். புகழைக் கெடுக்கும். ஆதலால் நேர்மையற்ற பேச்சைப் பேசினும் பேசலாம். பயனற்றவைகளைப்பேசுதல் கூடாது. இவ்வாறு புறங்கூறி வெற்றுரைபேசிக்காலங்கழிப்பவர்கள் தீவினைசெய்ய அஞ்சார். எப்போதும் தீயனநினைக்கத் தொடங்கியவர் சொல்லத் துணியாமலிரார். சொல்லத் துணிந்தவர்கள் செய்யாமலிரார். பலகால் சொல்லிச் சொல்லிப் பக்கபலம் சேர்த்தன, செயல்முறையில் நிகழ்ந்தே தீரும். ஆதலால் தீவினை நெருப்பைக்காட்டிலும் கொடிது. பகைவர்க்கும் தீமைசெய்தல்கூடாது. பிறர்க்கு நாம் கேடெண்ணினால் தெய்வம் நமக்குக் கேடு எண்ணும். பகைக்குத் தப்பலாம்; தீவினைக்குத் தப்பமுடியாது. தன்னிழல் தன்னைவிட்டுப் பிரியாததுபோல, தான்செய்தவினை தன்னைவிட்டு நீங்காது. தன்னுயிரில் தனக்கு ஆசையிருக்குமானால் பிறருயிர்க்குக் கெடுதிசெய்தலாகாது. இவ்வாறு பிறர்க்குக் கேடுசெய்யாதவன் செய்யக்கூடியது ஒன்றுண்டு. அதுதான் உலகம் நல்லன என்று ஒத்துக்கொள்ளக்கூடிய காரியங்களைச் செய்தல். இது ஏட்டிற்கண்டது அன்று; உலகியலில் அமைந்தது. இவ்வண்ணம் உலகியற்கொத்தது உணர்பவனே வாழ்பவன். உழைத்தபொருளெல்லாம் உபகாரம்செய்வதற்கே. உதவுபவன் செல்வம், நீர்நிறைந்த ஊருணி போலவும், மருந்துமரம் போலவும், ஊர்நடுவே பழுத்த பொதுமரம் போலவும் எல்லார்க்கும் எக்காலத்தும் பயன்படும். அவனுக்கு வறுமையில்லை; துன்பமில்லை. ஆதலால் தன்னை விற்றாவது ஒப்புரவாற்றவேண்டும் இந்த ஒப்புரவு அனைவர்க்கும் செய்யப்படும் உதவி. ஏழைகட்குச் செய்யப்படும் உதவி ஈகை எனப்படும். குறிப்பறிந்தீதலே கொடை. ஈகையும் துன்பந்தான்; வாங்கியவன் மகிழும்வரையில். ஏழையின் பசியைப் போக்குதலே சேமநிதியைச் சேர்த்துவைக்குமிடம். பசிவேண்டாதவன் பகுத்துண்ண வேண்டும். கொடுப்பதில் ஒரு இன்பமுண்டு. அது லோபிகட்குத் தெரியாது. நம்மாற் கொடுக்கமுடியாத காலத்துச் சாதலே நலம். கொடையால் விளைவது புகழ். உலகத்து அழியாதது புகழ் ஒன்றே. புகழில்லா உடலைச் சுமந்தநிலங்கூட வளங்குன்றும். இகழின்றிப் புகழ் பெற்று வாழ்வாரே வாழ்வார் என்று இல்லறத்தின் இன்றியமையாத கடமை, தன்னடக்கமும், பகுத்துண்டலும், ஈகையுமே என்பதும், பயன் புகழ் என்பதும் வலியுறுக்கப்பெறுகின்றன.

**துறவறம்:** இல்வாழ்ந்து நுகர்வன நுகர்ந்து உவர்ப்புக்கண்ட காலத்து, உண்மை ஞானத்தால் உயர்வற உயர்ந்த நலத்தை எய்த விரும்புதல் எவர்க்கும் இயல்பு. புகழ்படவாழ்ந்த பேரறிவாளன் அகப்பற்றும் புறப்பற்றுமாகிய இருவகைப் பற்றையும் அறுக்க முற்படுவன். பற்றறுத்தல் பற்று, செல்லுமிடத்திற் செல்லவிடாது தடுத்துநிறுத்தலும்,

இது செல்லுமிடம் இது செல்லாதவிடம் என்ற வேறுபாடின்றி உலகம் முழுவதையுமே உறவாகக்கொண்டு செலுத்துதலுமாகிய இருநெறியால் நிகழும். அவற்றுள் முன்னது ஓடுநீரை அணையிட்டதுபோல, முட்டவரும் மாட்டைக் கட்டிப்போட்டதுபோலத் தடுத்தலாகும். அணைமெலிந்தாலும், கயிறு அறுந்தாலும் நீரும் மாடும் பொருட்கேடு விளைத்தல்போலப் பற்றறுதியும் தடைநீங்கியவரிடத்துப் பெருந்துன்பம் செய்யும். உலகம் முழுவதையுமே தம்பற்றின் நிலைக்களமாக்கிவிட்டால் சிறப்பன்பு செய்யப் பெருமையால் தீமை நிகழுவே நிகழாது. அதனை எண்ணியே அருள் என்ற விரதம் துறவறத்தின் தலையாயமைந்தது. தன்மாடு தன்வீடு என்ற உரிமையாகிய செல்வம் பூரியார்கண் பொருந்துவது. அனைத்தையும் பொது நோக்குடன் அன்புசெய்தலாகிய அருளுடைமை உயர்ந்தோர்களிடமே உண்டாவது. ஆதலால் அருளையே மேற்கொள்ளவேண்டும். அருளுடையார் உயிர்க்கு அச்சமில்லை. துன்பமில்லை. அருளிலார்க்கு மறுமை இன்பம் இல்லை. இவர்களுக்கு விடுதி என்றுமேயில்லை. அருணிலையில் நழுவுதல் நேர்ந்தகாலத்துத் தம்மின் வலியார்முன் தான் அஞ்சிநிற்கும் நிலையை நினைத்தால் தானே அருளுதிக்கும். மனிதன் வாய்க்கு அடிமையாகா திருத்தல் முடியாது. ஆதலால் புலாலுண்டாவது வாய்க்கு அடிமையாவான். அது அருளுக்கு இழுக்காகும். ஆதலால் புலால் உண்டல் கூடாது. புலால் உண்பவனிடம் அருளிராது. அவன் மனம் எப்போதும் நல்லன எண்ணாது. இவர்களுக்கு நரகம் நிச்சயம். இவர்களை விழுங்கிய நரகம் மீட்டும் விடுதலை செய்யாது. நாம் கொல்லவில்லையாயினும், தின்பவர்களாகிய நாமில்லை யானல் கொல்பவர்களும் இல்லை ஆதலால் புலாலுண்டல் கூடாது. புலால் பிறவுடம்பின் ஊன். புலாலுண்ணாமை ஆயிரம் யாகம் செய்தலினும் மேல். கொல்லாமலும் புலாலுண்ணாமலும் இருப்பவனை எல்லாவுயிர்களும் தொழும். உணவு ஒழுக்கமுடையார்க்கே தவம் நிலைக்கும்.

தவம் என்பது பொறிகளையடக்குதலும், நீர் பலகால் மூழ்கி நிலத் தசை இதோலுடீஇ சோர்சடைதாழச் சுடரோம்புதலும் அன்று. தனக்கு வந்த நோயைத்தாங்கிக் கொள்ளுதலும், பிறவுயிர்கட்குத் துன்பஞ் செய்யாமையுமே. அத்தவமும் தவமுடையார்க்கே சித்திக்கும். தவத்தால் பகைவரை வெல்லலாம். அடுத்தவர்களை ஆக்கலாம். வேண்டியவற்றை வேண்டியபடி எய்தலாம். காலத்தை வெல்லலாம். ஆனால் தவம் தன் னலத்திற்காகச் செய்யப்படுவதல்ல. காமியத்தவம்கூடாது. அத்தவத்தைக் கெடுப்பது ஒழுக்கக்கேடு. தவசிபோல வேடந்தாங்கித் தவிர்வனசெய்தல் பசு புலித்தோல் போர்த்தி மேய்ந்ததுபோலாம். இத்தகையவர்களே கொடியவர்கள். இவர்களால் உண்டாகும் துன்பங்கள் பல. உருவத்தால் யாரையும் துணிதல்கூடாது. தொழிலால் துணிதல்வேண்டும். கடியத் தக்க பாவங்களுள் திருட்டும் ஒன்று. திருட்டு மக்கட்சமுதாயத்தில்

மதிப்பை இழக்கச்செய்யும். ஆதலால் சிறிய திருட்டும் கூடாது. அதனை மனத்தாலும் எண்ணுதல் கூடாது. களவு ஒழியாத் துன்பத்தை உறுவிக்கும். பொருளை அகற்றும். அழிவை உண்டாக்கும். கள்வார்க்கு வானுலக வாழ்க்கை பொருந்தாது. திருட்டு நிலைத்துநிற்பது பொய்யால். பொய்யென்பது நடந்ததைக் கூறாமையும் நடவாததைக் கூறுதலும் அன்று. ஒருசிறிதும் யார்க்கும் தீமை இல்லாதவற்றைச் சொல்லுதலே வாய்மை என்பது வள்ளுவர் கருத்து. பிறர் யாரும் அறியாமையினலே பொய்சொல்லலாம் என்பதில்லை. தன்னுடனிருக்கும் உள்ளமே வருத்தும் ஆதலால் மனச்சாட்சிக்கு அறிய, பொய்சொல்லுதல் கூடாது. வாய்மையைப் போன்றதொரு அறமும் வணக்கமும் தூய்மைமிகுப்பதும் வேறொன்றில்லை. பொய்மை திருட்டு கூடாஒழுக்கம் வெளிப்படினும் விரும்பியபொருள் கைகூடாவிடினும் அகங்காரத்தின் ஆதிக்கத்தால் கோபம் எழுதல் இயல்பு. அதிலும் ஆற்றலில் குறைந்தாரிடத்தேயே சினம் செல்லும். அங்கும் சினத்தைச் செலுத்துதல் ஆகாது. சினம் தீமைக்கு எல்லாம் பிறப்பிடம். சிரிப்பை அகற்றும்; மனமகிழ்ச்சியைக் கொல்லும். சுற்றத்தையும் சேர்த்துச் சுடும். ஆதலால் துறவிக்குக் கொஞ்சமும் பொருந்தாது அது. சினம் முற்றினல் பிறருக்குத் தீமைதான் செய்யத் தோன்றும். எவ்வளவு பெரிய செல்வம் பெற்றாலும் பிறருக்குத் துன்பம் செய்தல் கூடாது. அதுதான் அறிவுடைமை.

துன்பம் செய்தோர்க்கும் துன்பம் செய்தல் கூடாது. மக்களுக்கு மட்டுமல்ல பிறவுயிர்களுக்குங்கூட. பிறஉயிர் அனுபவிக்கும் துன்பத்தைத் தனக்கு வந்ததுபோல எண்ணுதல் வேண்டும். துன்பம் பிறர்க்கு முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் ஆதலால் அறிவுடையவன் துன்பம் செய் தார்க்கும் இன்பமே செய்தல் வேண்டும். பிறர்க்குத் துன்பம் செய்து பழகியவன் தனக்காகப் பிறவுயிர்களைக் கொல்லவும் தலைப்படுவான். இந்தக்கொலையின் வாயிலாகவே எல்லாப் பாவங்களும் விளைகின்றன. கொலை யென்பது உயிரைப்பிரித்தல்மட்டுமன்று; தான்மட்டும் தொகுத் துண்டு, பிறரைப் பசியால் வாடவிடுதலும் கொலையேயாம். கொலைக்கு அஞ்சுபவனே துறவிகட்குத் தலைவன். தன்னுயிர் போனாலும் பிறவுயிர் களைக் கொல்லுதல் கூடாது. கொலை பூண்டவர் என்றும் பிறவித் துன்பத் திலேயே பேதுறுவர். இங்ஙனம் கொலைமுதலியன செய்வார் தம் உடம்பு நித்தியம்; இடம் பொருள் ஏவல் எல்லாம் நித்தியம் என்ற புத்தியினலே இயற்றுகிறார்கள். இதுமடமை. செல்வம் கூத்துமேடைக்கூட்டம்போலக் கூடி ஒருசேர அழியும். நாளும் கோளுமோ நம்முடைய வாழ்நாளை அறுத்துவீழ்த்தும் வாளின்பல். போகத்துக்குரியதாக விளங்கும் உலகமோ அதில் வாழும் மனிதனே இருந்தது அழிந்தது இருந்தான் இறந்தான் என்ற நிலையிலேயே இயங்கக்காண்கின்றோம். தூக்கந்தான்* இறப்பு.

விழிப்புத்தான் பிறப்பு. ஆகவே உடல் பொருள் உலகு மூன்றும் நிலையற்றன என்றறிந்து பற்றை அறத் துறத்தலே துறவு எனப்படுவது. உண்மைத் துறவால் உளதாகும் பயன்கள் பல. விடயசுகங்களை வெறுத்தலும் விருப்பத்தை ஒருசேர ஒழித்தலுமே துறவெனப்படுவது. பிறப்பு அறுப்பேனென்று உறுதிகொண்ட துறவிக்குத் தொடர்ச்சி எதற்காக? உடற்பற்றும் உடைமைப்பற்றும் அறுத்தவனே உயர்ந்தவன். அவனுக்கே முத்தி. பற்றுவிடாதவனைத் துன்பங்களும் இறுகப்பற்றி விடமாட்டா. ஆதலால் பற்றறுக்க ஒரேவழி உண்டு. அதுதான் சாவா மூவாப் பேரின்ப உருவினைப் பற்றுதல். அங்ஙனம் பற்றிய பற்று முறுகிப் பற்றுவானும் பற்றப்படும் பொருளும் பற்றும் வேறின்றி ஒன்றான நிலையிலேதான் உண்மை ஞானம் சித்திக்கும. அப்போதுதான் இது பொருள், இது பொருளல்ல என்ற உண்மைஞானம் உண்டாகும். அதனல் பிறவியறும். காமவெகுளி மயக்கங்களே உண்மைஞானத்தின் தடைகள். அவற்றின் பெயரும்கூடக்கெடுதல் வேண்டும். அப்பொழுதுதான் செம்பொருளைக் காணலாம். ஐயமின்றி உள்ளத்தால் நித்தியப்பொருளைத் தியானித்தால் மறுபிறவி இல்லை. இங்ஙனம் உண்மை உணர்ந்தோர்க்கும் அவா அறுது. அவாதான் பிறவிககு வித்து. அவா இன்மைதான் தூய்மை. அது உண்மையை அடிப்படையாகக் கொண்டது. ஆசையைத் துறந்தாரே துறந்தார். அவா அற்றார்க்குத் துன்பமிலலை. இன்பம் இடையறு தீண்டும். அவர்களுக்கே பேரா இயற்கைப் பெருவாழ்வு சித்திக்கும்.

ஊழ்: மனிதனுடைய வாழ்வும் தாழ்வும் விளைவது ஊழால். ஊழ் - முறைமை. அதாவது ஒருவன்நிழல் அவனையேபற்றிநிற்பதுபோல அவனவன் செய்த இருவினைகளும் அவனவனையே பற்றிநிற்கச் செய்வதாகிய முறை. இன்பத்துன்பங்கள் எல்லார்ககும் பொது. அவற்றின் காரணமாகிய ஊழ்வினையும் இல்லறத்தானுககும் துறவறத்தானுக்கும் பொது. இல்லறத்தானுககுப் பொருள் இன்பங்கள் விளைவதும், துறவிக்குத் தவமும் ஞானமும் சித்திப்பதும் ஊழ் துணைநின்றவழியே. ஊழ் வினை, பால், தெய்வம், விதி என்றபெயர்களால் குறளில் அமைக்கப்பெறுகின்றது. ஊழ் பயனேககி ஆகூழ், போகூழ் என இருதிறப்படும். போகூழை இழவூழ் எனவும் வழங்குவர் வளளுவர் பெருமான். மடியும், மடியின்மையும் விளைவது ஊழால். முட்டாளாககுவது ஊழ். அறிவாளியாககுவது ஊழ். பலநூல் படித்தாலும ஊழ்வயத்தானமைந்த மறிவே உளவாம. உலகத்தில் அறிவாளிகள வறியராகவும், ஏனையர் செல்வராகவும் காண்பதற்குக் காரணம் அறிவுடையராதற்கு ஊழ் வேறு. திருவுடையாதற்கு ஊழ்வேறு. ஊழவினை வயததால் நல்லது செய்தாலும் செல்வம் அழியும். தீயனவற்றால் செல்வம் 'செழிப்பதும் உண்டு. வருநதியழைத்தாலும் வாராதன வாரா;

பொருந்துவன போமின் என்றால் போகா. செல்வராயினும் ஊழ்வகுத்த படியே நுகர்ச்சியுளவாம். துறந்தாலும மனம் வருந்துவது ஊழால்; சாந்திகள் செய்யினும ஊழின் வலிமை மாற்றமுடியாதது.

இங்ஙனம் அறத்துப்பால் நான்கு பகுதியாக முப்பத்தெட்டு அதிகாரங்களால் முடிவுறுகிறது. இல்லறம் துறவறங்களிரண்டினும் ஒத்த கருத்துடைய அதிகாரங்கள் சில உள்ளன.

| இல்லறத்தில் : | | துறவறத்தில் : |
|---|---|---|
| அன்புடைமை | — | அருளுடைமை |
| இல்வாழ்க்கை | — | துறவு |
| பிறனில்விழையாமை | — | கூடாஒழுக்கம் |
| வெஃகாமை | — | கள்ளாமை |
| பொறையுடைமை | — | வெகுளாமை |
| இனியவைகூறல் | — | இன்னாசெய்யாமை |

இல்வாழ்க்கை எல்லாப் பொருட்டொடர்பும் உடையதாய், தனக்கும் பிறர்க்கும் உதவுவது. துறவு தன்னின் வேறாகாத யான் என்பதையும், தன்னின் வேறாகிய எனது என்பதையும் விடுத்தல். அன்பு - தொடர்புடையார்கண் காதலுடையராதல். அருள் - வரைவின்றி உலகமுழுதும் பரந்த கருணையையுடையராதல். பிறனில்விழையாமை தன் மனையாளைத் தக்க காலத்து விழைதலும் ஆம் என்பதுணர்த்துகிறது. துறவி உவர்த்து வந்தவராதலின் இல்லறத்தில் தன் மனைவியாக இருந்தவளை விழைதலுங்கூடத் தவறு என்பது விளங்க மனமொழி மெய்களால் போகம் விரும்புதலே தீமை ஆதலின் கூடா ஒழுக்கம் என விளக்கப் பெறுகின்றது. அவ்வாறே இல்வாழ்வான் பொறாமை காரணமாகப் பிறன் பொருளைக கவரவிரும்புதல் கூடாதென்பதை வெஃகாமை விளக்குகிறது. துறவி தான் துறந்துவந்த பொருளிற் பற்றுத்தோன்ற, தான் உழைத்துத் தேடமுடியாமல் திருட எண்ணந் தோன்றும. துறவி அதனையும் நினைத்தலாகாது எனக கள்ளாமை விளக்குகிறது. இல்வாழ்வான் பிறர் தனககு இன்னாதன செய்யினும் பொறுத்துக கொள்ளவேண்டும் என்பதனைப் பொறையுடைமை புகல்கிறது. பொறுமை என்பது பிறன் செய்த தீமையால் மனத்தில் கோபம் பிறக்க அதனால் தீயன செய்ய நினைவு வரும; அந்த நினைவை செயற்கண் வெளிப்படாதவாறு பொறுத்துக கொள்ளுதலே பொறையுடைமை. வெகுளாமை தீயன செய்துழியும கோபமே எழாதவாறு மனநிகழ்ச்சியிலேயே அடக்குதல. இது துறவிககுச் சிறந்தது. அங்ஙனமே இல்வாழ்வான இனியவைகளைப் பேசவேண்டும். துறவிககுப் பகை முதலியன இல்லாமையால் இனியவை பேசுதல்மட்டும்* அன்றி

இன்னுதனவற்றைச் செய்யாமையும வேண்டும் என்பது வலியுறுத்தப் பெறுகின்றது. ஏனையன இருவருக்கும் தனித்த ஒழுக்கங்கள்.

இதில் வெஃகாமை பிறன்பொருளை விரும்பி வெளவக்கருதாமை. கள்ளாமை - திருடாமை. வெஃகாமை - வெஃகுதல் என்பதன் எதிர்மறை. வெஃகுதல் - விரும்புதல். ஆகவே வெஃகாமை விரும்பாமை எனப் பொருள் படும. விரும்பாமை மனத்தின் ஒழுகக‌ம். கள்ளுதல் - திருடுதல். இது நினைவு முற்றிய பின் விளையும் முயற்சி. இவ்விரண்டில் நினைப்பிலேயே தடுக்கும் நிலை துறவிக்கு வேண்டும். செயலில் நிகழாதவாறு காக்கும் வன்மைதான் எல்லாப் பொருளையும் பற்றிநிற்கும் இல்லறத்தானுக்கு இயலும். ஆதலால் வெஃகாமை துறவறத்திலும், கள்ளாமை இல்லறத்திலும் இருத்தலே இயையும் என்பது கல்குளம் குப்புசாமிமுதலியார் கருத்து (செந்தமிழ் தொகுதி 2, பக்கம் 27). அவர் எழுதும் குறிப்புக்கள். நீத்தார் பெருமையில் பரிமேலழகர் 'செயற்கெளியவாவன மனம் வேண்டிய வாறே அதனைப் பொறிவழிகளாற் புலன்களின்மேற் செலுத்துதலும், வெஃகலும் வெகுடலும் முதலாயின' எனக் கூறியுள்ளார்'. ஆதலால் இவற்றின் எதிர்மறையாகிய பொறியடக்கமாகிய தவமும் வெகுளாமையும வெஃகாமையும் நீத்தவராகிய துறவிக்கே ஒழுககமாதல் துணிவு. இதனையே யடியொற்றி 'இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற ...காட்சியவர்' என்ற குறளும் பொறியடக்கிய முனிவர் எனக் கூறுதல் காண்க. புலம்வென்ற பெருமை இல்லறத்தார்க்கு இன்மை 'ஐம்புல இன்பங்களும் ஆரத்துய்க்கும் பெருமை இல்லறத்தார்க்குண்டு' என்ற பரிமேலழகர் எழுத்தே இனிது விளக்கும். ஆதலால, உரையாசிரியர் களுக்குள் குறள் முறைவைப்பு மாறியிருத்தல்போல அதிகாரமும் பிறழ்ந்திருக்கலாம் என்பர். இதனை மறுத்தெழுதிய ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் 'புலம்வென்ற புன்மையில் காட்சியவர்' என்றது இல்லறத் தார்களையும் குறிப்பதாகலாம். அன்றியும் 'அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமைவேண்டும் பிறன்கைப்பொருள்' என்றது செல்வம் குறையாமைககு ஏது சொல்கிறது. இந்தக் குறளமைநத வெஃகாமை முதலியார் கூறுவதுபோலத் துறவற இயலில அமைவதாயின் முற்றுந் துறந்த துறவிக்குப் பொருள்வளர்ச்சி அறமாவது எங்ஙனம்? அங்ஙனமே 'குடிபொன்றி' என்பதும் துறவிககுக குடியுண்மை பெறப்படவைககுமே. ஆதலால் இது இலலறததிலேயே அமைந்தது பொருத்தம் என்பர். அங்ஙனமாயின் துறவற இயலிலுள்ள களளாமையில் கூறிய 'களவினால் ஆகிய ஆக்கம அறவிறந்து ஆவது போலக் கெடும்' என்ற குறள் துறவிக்குச் செல்வம உண்மையைச் சொல்வது ஆகாதா என்பதும் சிந்திகக இடந்தரும். இவைகளை ஓர்ந்துள்ள, வெஃகாமை மனநிகழ்ச்சி யாய், கள்ளாமை முயற்சியின் மறுதலையாய் அமைதலின் நினைப்பிலே

கடியவேண்டியவன் துறவியும், செயலிலே தடுக்கவேண்டியவன் இல்லறத்தானுமாக அமைதலே பொருத்தம்போலத் தோன்றுகிறது.

பொருள்: நம்முடைய அன்றாட வாழ்விற்கு இன்றியமையாதனவாகப் பலவேறு வடிவங்களில் பயன்படுவன யாவும் பொருளே. 'பொருள் என்பது பொன், வெள்ளி, மணி, முத்து, நெல் முதலியன' என்பது சிலர் கருத்து. இவைகளும் வாழ்விற்குப் பயன்படுவனவே ஆதலானும், இவையல்லாதன பலவும் உண்மையானும் இவைதாம் பொருள் என வரையறுத்தலியலாது. இளம்பூரணர் 'பொருளொடு புணர்ந்த பக்கம்' என்ற பகுதிக்கு உரை எழுதும்போது 'பொருளாவது நாடும், பொருளும், அரணும், அமைச்சும், நட்பும், படையும் ஆம்' என்பர். நச்சினார்க்கினியர் 'பொருள் எனப் பொதுப்படக்கூறவே அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும், காட்சிப்பொருளும், கருத்துப்பொருளும், அவற்றின்பகுதியாகிய ஐம்பெரும் பூதமும், அவற்றின் பகுதியாகிய நிலத்திணையும் இயங்கு திணையும் பிறவும் பொருளாம்' என்பர். பரிமேலழகர் 'இருமையும் பயப்பதாகிய பொருள்' எனப் பயன்வகையால் குறிப்பர். மணக்குடவர், பரிப்பெருமாள் ஆகிய இருவரும் 'பொருள் என்பது மக்களையுடைத்தாகிய நிலம். பால் என்பது பகுதி. அதாவது அந்நிலத்தை ஆளுதற்குரிய அரசரது தன்மையும், அவர் ஆளுதற்குச் செய்யும் திறன்களும், அதற்குத் துணையான அமாத்யர் இலக்கணமும், அவர்செய்யும் திறன்களும், அவ்விருவரானும் உண்டாக்கப்பெற்ற நாடும் அரணும் பொருளும் படையும் ஆகிய இவற்றினது திறன்களும், அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றற்கும் துணையாகிய நட்பினது திறன்களும், அவ்வாறுண்டாகிய பொருட்கும், பொருள் உடையார்க்கும் கேடுவரும் திறன்களும், அந்நிலத்துண்டான மக்களியல்பும், அவர் பொருள்செய்யுமாறும் கூறுதல்' என்பர். இத்தனை உரைகளாலும் பொருள் என்பது நிலமும் - பொன் முதலிய பொருள்களுமே என்பது வலியுறுத்தப்பெற்றது. திரு. ரா. க. சண்முகஞ்செட்டியார் அவர்கள் 'பொருள் என்பதற்கு என்னபொருளென்றால் உலகம் முழுதும் - உலகவாழ்க்கை முழுவதுந்தான் என்று பொருள்கொள்ளவேண்டும்' என்றார்கள். மேலும் திருக்குறளிற் கூறப்படும் பொருளுக்கும் - பொருள் ஆதாரத்திற்கும் உள்ள இயைபு பொருள் என்ற ஒரு சொல்தான் என்றும் சொன்னார்கள். இவற்றாலும் பொருள் என்பது இடமும் - அதில் வாழும் வாழ்க்கையுமே என்பது வெளியாகும். பொருட்பால் என்பது அவற்றை உணர்த்தும் பகுதி எனப் பொருள்படும்.

பொருட்பாலைப் பரிமேலழகர் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்றாகப் பிரித்தனர். மணக்குடவர் பரிப்பெருமாள் அரசியல்

அமைச்சியல், பொருளியல், நட்பியல், துன்பியல், குடிஇயல் என ஆறு வகையாகப் பிரித்தனர். மணக்குடவர் மறுப்புரையால், இவற்றோடு படையியல் அரணியல் என்பனவும் சேர்க்கப்பெற்று எட்டாக அமைந்தமையும் அறியப்பெறும். போகஇயார் பாடல்,

"அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உருவல் அரணிரண்டொன் றொண்கூழ்—இருவியல்
திணபடை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை"

என்பது. இதனால் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழியல், நட்பியல், படையியல், குடியியல என ஏழாதல் தெளிவு. மணக்குடவர் மறுப்புரையில் காணும் எட்டு என்ற பாகுபாட்டை "அறம் நான்கு அறிபொருள் ஏழொன்று காமத்திறம மூன்று எனப் பகுதிசெய்து" என்ற தொடித்தலை விழுத்தண்டினர் பாட்டு அறிவிக்கிறது. இதற்கு உரை எழுதிய சரவணப் பெருமாளையர் ஒன்றுகாமம் என காமத்துக்கடைமொழியாக்கி, பொருட்பால பகுதிகளைப் போகஇயாரை ஒட்டி ஏழாகவே உரைகண்டார். ஆனாலும் பாடலமைதி அங்ஙனம பொருள்செய்ய இடந்தராமை எண்ணித் துணிதற் குரியது. போகஇயார் காலத்து ஏழியலாகப் பகுக்கப்பட்ட பொருட்பால், தொடித்தலைவிழுத்தண்டினார் காலத்து எட்டாகப் பிரிந்திருத்தலைக் காணும் பொழுது மணக்குடவரால் மறுக்கப்பெறும் உரையாசிரியரும் தொடித்தலை விழுததண்டினரும் ஒருகருத்தினராதல் தெளிவு

அதிகாரப் பாகுபாட்டில், அரசியல் இறைமாட்சி முதல் இடுக்கணழியாமை ஈறாக இருபத்தைந்து அதிகாரங்களை உடையது. அங்கவியல் அமைச்சு முதல் மருந்து ஈறாக முப்பத்திரண்டு அதிகாரங்களை உடையது. ஒழிபியல் குடிமை முதல் கயமை ஈறாகப் பதின்மூன்று அதிகாரங்களை உடையது. இத்தகைய பாகுபாட்டைப் பரிமேலழகர் எந்தமுறையை ஒட்டி அமைத்தார் என்பது அவர் எழுத்துக்களால் அறியக்கூடவில்லை. மணக்குடவர் பரிப்பெருமாள் இருவரும் இறைமாட்சி முதல் இடுக்கணழியாமை ஈறாக இருபத்தைந்தையும் அரசியல் என்றும், அமைச்சு முதல் அவையஞ்சாமை ஈறாகக் கூறிய பத்தையும் அமைச்சியல் என்றும், நாடு முதல் படைச்செருக்கு ஈறாகக் கூறிய ஐந்தையும் பொருளியல் என்றும்; நட்பு முதல் கூடாநட்பு ஈறாகக் கூறிய ஐந்தையும் நட்பியல் என்றும், பேதைமை முதல் மருந்தீறாகக் கூறிய பன்னிரண்டையும் துன்ப இயல் என்றும், குடிமை முதல் கயமை ஈறாகக் கூறிய பதின்மூன்றையும் குடியியல் என்றும் பகுத்துக் கூறினர். ஏழாகப்பிரித்த போக்இயார் அரசியலைப் பரிமேலழகியார் போல இருபத்தைந்து அதிகாரங்களாகவேகொண்டார்.

அமைச்சியலை-அமைச்சு முதல் அவையஞ்சாமை ஈறாகப் பத்து அதிகாரங்களாகக்கொண்டார். நாடு அரண் இரண்டையும் அரணியல் என்றும், பொருள்செயல்வகை ஒன்றையும் கூழியல் என்றும், படைமாட்சி படைச்செருக்குகளைப் படையியல் என்றும், நட்பு முதல் மருந்தீறாய பதினேழு அதிகாரங்களையும் நட்பியல் என்றும், குடிமை முதல் கயமை ஈறாகப் பதின்மூன்றையும் குடியியல் என்றும் கொண்டார். சுருங்கக்கூறின் பொருட்பாலியல்கள் ஏழாக ஆறாக மூன்றாக அவ்வப்போது உரையாசிரியர்களாலும், பழம் புலவர்களாலும் பகுக்கப்பட்டமை நன்கு உணரப்படும். அரசியலைப் பொறுத்தவரையில் இவர்களில் யாருக்கும் வேற்றுமை இன்று. அமைச்சு முதலிய அங்கங்கள் ஆறையும் அங்கமென ஒன்றாகக் கொண்டு ஓதினார் பரிமேலழகர். வள்ளுவர் 'படை குடி கூழமைச்சு நட்பரணாறும் உடையான் அரசருள் ஏறு' என்ற குறளில் அரசற்குரிய ஆறு அங்கங்களையும் தொகுத்துச் சுட்டி அவற்றையே பின்னர் சிறப்பதிகாரங்களாகத் தெரிவித்துப் போகின்றார். இவ்வாறனோடு இவற்றை அங்கமாக உடைய அரசனியல்பையும் சேர்த்து ஓதினார்கள் தொல்லாசிரியர்கள். இக்குறளின் உரையில் 'அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும் செய்யுளாதலின் பிறழவைக்கப்பட்டுள்ளது' என்றும், 'ஈண்டுக் குடி என்றது அதனை உடைய நாட்டினை' என்றும் பரிமேலழகர் குறித்துப்போந்தார். குறளில் குடி என்றதற்குக் குடிமக்களை என்று கொள்ளினும் இழுக்காகாது. இதுவே வள்ளுவர்க்கும் கருத்தாதலை நாடு என்ற அதிகாரத்து நாட்டியல்பைக் கூறினாராயினும் குடிகளைப் பற்றியும்கூறாமலில்லை. ஆளப்படுவது குடிகளே அன்றி நாடன்று. நாடாண்டான் என்ற வழியும் குடியோம்பினான் என்பதே கருத்தாதல் தெளிவு. அவ்வதிகாரத்து முதற்குறளில் 'தள்ளாவிளையுளும் தக்காரும் செல்வரும் சேர்வது நாடு' என்றமையால் நாட்டுக்குக் குடிகள் இன்றியமையாதன என்றது வற்புறுத்தப்பெற்றது. தக்கார் என்றதால் சுட்டப்படும் குடிமக்களது இயல்பு குடிமை என்ற அதிகாரத்தாலேயே உணர்த்தப்படுகிறது. குடிகளது இயல்பைப் பொதுவகையில் கூறி அதில் குறிப்பிடப்பெற்ற நாணம் முதலிய குணங்களை மானம் பெருமை முதலிய சிறப்பு அதிகாரங்களால் முறையே உணர்த்திச் செல்கின்றார். அதனாலேயே தொல்லாசிரியர் அனைவரும் அதனைக் குடியியல் என விதந்தோதினர். பரிமேலழகர் குடியை நாடெனக்கொண்டமையால் அங்கவியலிலேயே அஃதடங்கியதாக எண்ணி, குடிமை என்பதற்குக் குடிப்பிறந்தாரது இயல்பு கூறுதல் எனப் பொருள் கண்டு, ஒழிபியல் என ஒரு புதுப்பெயர்தந்து அரசு, அங்கம் என்பனவற்றுள் அடங்காதொழிந்தவற்றைக் கூறுவதாக இயற்பாகுபாடுசெய்தார். அக்குடிமையதிகாரம் குடிகளதியல்பே உணர்த்துகின்றது என்பது மணக்குடவர் முதலியோருடைய துணிபு. நாட்டிற்கு வரைவிலக்கணம்

எழுதப்போந்த மணக்குடவர் 'முற்படப் பொருளாக்குதற்கு இடமாகிய நாட்டியல்பு ஓரதிகாரத்தால் கூறினர்' எனக்கூறி நாட்டைப்பொருளியலில் ஒருபகுதியாக அடக்கினர். இன்னும் நிலமும பொலமுமே பொருள் எனற் குரியசிறப்புடைமை வழககானும தெளிக. சுக்கிரநீதியுள் கூறப்பட்ட முறைவைப்பின்படி குடி கூறப்படாதிருத்தலை உணர்ந்த பரிமேலழகர் ஈண்டும் குடி அங்கமாக இருத்தலாகாது என எண்ணி, குடிமையைக் குடிப்பிறந்தாரது பொது இயல்பாக வைககப்புகுந்தார். அதற்குப் 'படை குடி' என்ற குடி குடிமக்களை உணர்த்துவதாக இருக்கவே அதனை நாட்டு நலத்தினை உணர்த்திற்றாகக் கொண்டார். இங்ஙனம் கொண்டவர் 'கொடையளி செங்கோல் குடியோம்பல்' என்ற விடத்துக் குடி என்பதற்குக் குடிமக்கள் எனப் பொருள்கொண்டதும் காண்க. அன்றியும் குடி என்பது பொருட்பாலில் இருபத்தெட்டு இடஙகளில் எடுத்தாளப்பெற்றுள்ளது. அவற்றுள் பன்னிரண்டு இடங்களில குடிமக்கள் என்ற பொருளையே பரிமேலழகர் கொண்டனர்.

அரசியலுக்கு இறைமாட்சி தொகை. பின்வரும் அதிகாரங்கள் வகையும் விரியும். இறைமாட்சியில் அரசனதிலக்கணமாக அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை, அறனிழுக்காமை, அல்லவைநீக்கல், இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல், காட்சிக்கெளிமை, கடுஞ்சொல்லனன்மை, ஈதல், செங்கோல, குடியோம்பல், முறைசெய்தல் முதலிய குணங்கள் விதக்கப்பெறுகின்றன. இவைகளே பின்வரும் அரசியல் அதிகாரங்களுக்கு வித்தாக அமைந்துள்ளன. இவற்றை முன்னும் பின்னுமாக விளக்குமுறையில் அதிகாரங்கள் அமைந்திருப்பதை உற்றுநோக்கின் அறியலாம். அஞ்சாமை இடுக்கணழியாமையினும், ஈகை கொடைசுற்றந்தழாலினும், அறிவு காலமறிதல் இடமறிதல் வலியறிதல் அறிவுடைமைகளினும, ஊக்கம் ஊக்கமுடைமையினும், தூங்காமை மடியின்மை ஆள்வினையுடைமைகளினும், கல்வி கல்லாமை கேள்விகளினும, அறனிழுககாமை குறறங்கடிதலினும, இயற்றல் தெரிந்து தெளிதல தெரிந்துவினையாடல்களினும, காட்சிககெளிமை கடுஞ்சொல்லன் அன்மை இரண்டும கண்ணோட்டத்தினும், ஈதல் அளித்தல் என்பன சுற்றந்தழாலினும, செங்கோல் செங்கோன்மை கொடுங்கோன்மைகளினும், குடியோம்பல் வெருவந்தசெய்யாமையினும், முறைசெய்தல் பெரியாரைத் துணைகோடல் ஒற்றாடல்களினும், அல்லவை நீக்கல சிற்றினஞ்சேராமை பொச்சாவாமைகளினும் விளங்கநிற்றல் காண்க.

அமைச்சியலில் முதல் அதிகாரமாகிய அமைச்சு அமைச்சர்க்கு உரிய இலக்கணமாக வினைசெய்யுங்கால் வேண்டப்படும் கருவிகள், காலம், செய்கை, அறிந்தாற்றுதல், வன்கண், குடிகாத்தல்,

கற்றறிதல், ஆள்வினைகளையுடையனாதல், பகைவனுக்குத் துணையாவாரைப் பிரித்தல், வேண்டியவர்களைப் பிரியாமற்பேணுதல், முன்னேபிரிந்தாரைக் கூட்டிக்கொள்ளுதல், ஆராய்ந்து எதனையும் இயற்றுதல், சொல்வனவற்றை உறுதியாகச் சொல்லுதல், செய்யப்படுவனவற்றை அறிந்து செய்தல், உலக இயற்கையறிந்து செய்தல், அரசன் அறியானாயினும் உறுதியைச் சொல்லுதல், அரசற்குப் பழுதெண்ணுமை, எதனையும் தீர எண்ணி முடிவுபோகச்செய்தல் ஆகிய இவைகள் கூறப்படுகின்றன. இவற்றைப் பின்வரும் பத்ததிகாரங்களிலும் விளங்கவிதந்தமை காண்க.

'செய்யும் அருவினை' என்பதற்கு உரையாசிரியர்கள் சிறு முயற்சியால் பெரும்பயன் தருவது என்றும், மறுமண்டலங்கோடல் என்றும், செய்யும் பெருமையால் அரியவினை என்றும் உரைகண்டார்கள். ஆகவே சிறுமுயற்சியால் மறுமண்டலங்கோடலாகிய அரியவினை என்ற பொருள் இதனாற்போந்தது. இதுவே வேண்டியவெல்லாம் ஒருங்கு ஈவ தாகிய வினைநலம் என்னும் வினைத்தூய்மையால் விரிக்கப்பெறுகின்றது. சொல்வதை உறுதியாகச் சொல்லுதலும், கற்றறிந்தடங்கிச்சொல்லுதலும் உலகத்தியற்கையறிந்து சொல்லுதலும் ஆகிய மூன்றமைச்சியல்புகளும், சொல்வன்மையிலும், அவையறிதலிலும் விரிக்கப்பெற்றன. பிரித்தல், பிரிந்தாரைப் பொருத்தல், பேணிக்கொளல் ஆகிய மூன்றும் சந்திவிக்கிர கங்கட்கு வேந்தரிடைச்செல்லும் தூதில் விரித்துரைக்கப்பெற்றன. இங்ஙனமே ஆள்வினை வினைசெயல்வகையிலும், மதிநுட்பமுடையமந்திரிக்கு முன்னிற்பன இல்லை என்பது அவையஞ்சாமையிலும், எதனையும் முறை யானாராய்ந்து முற்ற முடித்தலை வினைத்திட்பத்திலும், திறனறிதலை மன்னரைச் சேர்ந்தொழுகல் குறிப்பறிதல்களிலும் வைத்து விளக்கப் பெற்றன. இவற்றையும் நோக்கும்போது அரசியல்போலவே அமைச் சியலும் தொகை விரியாக அமைந்தமை ஒருவாறு உணரப்பெறும்.

மூன்றாவதாகிய அரணியல், முதற்கண், விளைவும், விளைவிப்பாரும் பொருந்தி எத்தகைய சுமை வந்தாலும் தாங்கும் வன்மையதாய், உட்பகை முதலியன இல்லாததாய், அரண்களோடு அமைந்திருப்பது நாடு என நாட் டியல்புகூறி, வல்லரண்வகைகளும், அவற்றின் அமைப்பும்விளக்கி முடிவுறு கிறது. கூழியல் என்பது பொருள்செயல்வகை என்ற வொன்றானே அமைந்தது. படையியலும் இரு அதிகாரங்கள் உடையது. அது படை மாட்சியும், அதனால் விளைந்த செருக்கும் விளக்குவது. அடுத்தது நட்பியல். நட்பு செய்தற்கு எளியதன்று. நன்னட்பு வளரும். தீ நட்பு தேயும். நட்டல் நகுதற்காகவன்று; தவறுகண்டுழித் திருத்துதற்காக. உணர்ச்சி ஒத்ததே நட்பு. வந்ததீமைகளை வழிவிலகச்செய்து அழிவில் தானும் உடன்வருந்து வதே நட்பாம். நட்பினர் இருவரும் இவர் எமக்கு இன்னதன்மையர் இன்ன

முறையர் என்றுசொன்னாலே நட்பினுயர்வுகுறையும் எனப் பொதுவகையில் நட்பிலக்கணங்கூறி, செய்தற்கெளியதன்மையை விளக்க நட்பாராயும் வகைகளையும், தவறு கண்டுழி திருத்துந்தன்மையும், திருந்தும் தன்மையும் பொறுக்குந் தன்மையும், பழமை காரணமாக விளைவதையும், தீ நட்பு தேயும் என்பதை உணர்த்த தீ நட்பு கூடா நட்பு என்ற இரண்டனையும் அமைத்து, நட்பிலக்கணமாகக் கூறியவற்றையே பின்னர் நான்கதிகாரங்களான் விரித்து ஐந்ததிகாரங்களான் நட்பியல் விளக்கப்பட்டது.

துன்பியல் பேதைமை முதல் மருந்தீறாகச் செல்லப்பட்ட பன்னிரண்டு அதிகாரங்களால் உணர்த்தப்பெறுகிறது. இவை பன்னிரண்டும் மக்களுக்குப் பேதைமைகாரணமாக நிகழ்வதாதலின் அதனை முதற்கண் வைத்து அடுத்து முறையே புல்லறிவாண்மை, இகல், பகைமாட்சி, பகைத்திறந்தெரிதல், உட்பகை, பெரியாரைப்பிழையாமை, பெண்வழிச்சேறல், வரைவின்மகளிர், கள்ளுண்ணாமை, சூது, மருந்து என்பவற்றால் விதக்கப் பெறுகிறது. இவற்றுள் பகைத்திறந் தெரிதலும், பெரியாரைப் பிழையாமையும், கள்ளுண்ணாமையும், மருந்தும் துன்பமாதல் அவை நிகழாவழியெனக்கொள்க.

குடியியல் குடிமை முதல் கயமை ஈறாகிய பன்னிரண்டதிகாரங்களும். குடிக்கு நாணம், ஒழுக்கம், வாய்மை, நகை, ஈகை, இன்சொல், இகழாமை முதலியன இன்றியமையாது வேண்டப்பெறுங் குணங்கள். பழங்குடி பண்பிற் பிரியாது. பணிவு, பழிப்படுவசெய்யாமை முதலியன குடிப்பிறந்தாரியல்புகள் என விதக்கப்பெறுகின்றன. இவற்றையே பின்னர், பழிப்படுவ செய்யாமையாகிய குன்றுவசெய்யாமையை மானத்தாலும், சால்பிலசெய்யாமையைப் பெருமையாலும், ஒழுக்க முதலிய குணங்களைச் சான்றாண்மையாலும், பழங்குடி பண்பில் திரியாமையைப் பண்புடைமையாலும், கோடி பெற்றாலும் கோடிப்பெறார் என்பதை நன்றியில்செல்வத்தாலும், நாணுடைமைவேண்டும் என்பதை நாணுடைமையாலும் விதந்து. அத்தகைய குடியை உயர்த்தும்வகையை விளக்கி, அதற்குரிய தொழில் உழவே என்பதும், உழுதொழில் செய்யாதவனே வறியன் நல்குரவாளன் என்பதும், நல்குரவால் வருந்தீமையும், முடியாதார் இரப்பினும் அது தவறாகாது ஆனால் இரத்தக்காரைக்கண்டு இரக்கவேண்டும் என்பதும், எங்ஙனமாயினும் இரவாமையே சிறந்தது என்பதும், குடிப்பிறந்தார்க்கு மறுதலையாகக் கீழ்மக்களியல்பும் உணர்த்தப்பெறுகின்றன. இவ்வண்ணம் பொருட்பால் ஒன்பது இயல்களாக, ஒவ்வொரு இயலிலும் முதற்கண் அதன் பொதுவிலக்கணங்களைத் தொகுத்துக்கூறி அவற்றை அடுத்து விரித்துக்கூறி முடித்தல் ஓர்ந்து உணர்தற்குரியன.

## காமத்துப்பாலா ? இன்பத்துப்பாலா ?

இந்த ஆராய்ச்சி இந்தக்காலத்து மிக முற்றியநிலையிலிருப்பது. காமம் வடசொல். இன்பம் தமிழ்ச்சொல். காமம் தர்மார்த்தகாமம் என்ற வரிசையில் மூன்றாவது. இன்பம் அறம் பொருள் இன்பம் என்ற முறையில் மூன்றாவது. ஆதலால் ஏனைய பால்களை அறத்துப்பால் பொருட் பால் என எண்ணிவந்த ஆசிரியர் இதனை இன்பப்பால் என்றே கொண் டிருப்பர். அல்லாமலும் அவர் எண்ணும்போது 'அறம்பொருளின்பம் உயிரச்சம்' (501) எனவும், 'அறத்தான் வருவதே இன்பம்' எனவும் கூறுவதால் இன்பம் என்றே கொண்டிருப்பர். வள்ளுவமாலைச் செய்யுட் களில் 'அறம் பொருள் இன்பம் வீடென்னும் அந்நான்கின்' எனவும், 'இன்பம் பொருள் அறம் வீடு என்னும் இந்நான்கும்' எனவும், 'இன்பத் திறம் இருபத்தைந்து' எனவும், 'இன்பு சிறந்த நெய்' எனவும், 'இன்பின் திறம் தெரிந்தோம்' எனவும் வருவன இன்பப்பால் என்ற வழக்குண்மை யையே விளக்கும். அங்ஙனமாக காமத்துப்பால் என்ற வழக்கு எவ்வாறு வந்தது என்பது ஆராய்தற்குரியதொன்றேயாம். வ. உ. சிதம்பரம்பிள்ளை போன்ற பெரியார்கள் இன்பப்பால் என்றே கொண்டனர். ஆயினும் பரிமேலழகரும், பிற்காலத்து ஆசிரியரும், வள்ளுவமாலையுள் காமத்துப்பால் இயல் வரையறுக்கும் செய்யுளாகிய "காமத்தின் பக்கம் ஒருமூன்றாக" என்னும் மோசிகீரனார் பாட்டும் காமம் என வழங்கியமைக்குப் பெரியதோர் காரணம் இருத்தல்வேண்டும். அது வள்ளுவர் பெருந்தகை இன்பப்பாலுள் காமம் என வழங்கியதே என்க. காமம் என்றே இதனைக் குறிப்பித்தலை முப்பத்துநான்கிற்கு மேற்பட்ட இடங்களிற்காணலாம். இங்ஙனமே மக்கள் என்றசொல் பெரும்பான்மையாக வழங்கியதைக்கொண்டு புதல்வரைப் பெறுதல் மக்கட்பேறு என்றே இருத்தல்வேண்டும் எனக் கருதப்பெறு வதைப்போல இன்பப்பால் காமத்துப்பால் எனவே வள்ளுவர் கருதியிருக்க வேண்டும் என்பது துணியலாம். அல்லாமலும் காமம் காரணமும், இன்பம் அதன் பயனுமாகவே கொண்டனர் வள்ளுவர் என்பதை "ஊடுதல் காமத் திற்கு இன்பம்" என்ற சொல்லாட்சி நன்குவிளக்கும். காமம் என்பது காதன்மீதூர்தலும் நுகர்தலுமாகிய இவற்றைக் காட்டும். இன்பம் என்பது நுகர்தலாகிய தொழிலானுறுபயன். ஏதுவிற்கும் பயனுக்கும் உள்ள ஒற்றுமைநயம்பற்றிக் காமமே இன்பம் என உபசரிக்கப்படுமேயன்றிக் காமம் ஏதுவும், இன்பம் அதன்பயனும் ஆகவே கொள்ளப்பெறும் என்பது. ஆதலால் தகையணங்குறுத்தல் முதலிய இருபத்தைந்து அதிகாரத்தானும் கூறப்பட்டன காமநிகழ்ச்சி. அதன் பயன் மகிழ்தல். அது களவின் கிளவி யாகிய புணர்ச்சி மகிழ்தல் என்ற ஒன்றானே உணர்த்தப்பெற்றது. ஆகவே காமம் இருபத்துநான்கு அதிகாரத்தானும் இன்பம் ஓரதிகாரத்தானும்

கூறப்பட்டமையின் இன்பப்பால் என்னாது காமத்துப்பால் என்றே வழங்குவது தெளிக. அன்றியும காமம் வடசொல்லா என்பது ஆய்தற்குரியது. காமம் வடசொல்லாயின், அது உடல்கொள் உயிர்குணமாதலின் அக்குணத்தைத் தமிழர் என்னசொல்லால் வழங்கினர் என்பது வினவப்பெறும். இச்சொல தொலகாப்பியம்போன்ற பழந்தமிழிலக்கணத்தும பெருவரவிற்றாக வழங்கிவருதலானும், தமிழ்ச்சொல்லேயாகலாம் என்பதும் தெளியப்பெறும. வள்ளுவமாலையுள் பொதுவகையால் நான்கு பயனை உணர்த்தும் பாடல்களைக்காட்டினும் காமத்துப்பால் இயல்வரையறைமட்டும் காட்டவந்த மோசிகீரனர் பாட்டு வலியுடைத்தாதலும் கொள்ளத்தகும்.

காமம தவறுயவழியிற் செல்லும்போது ஐம்பெரும் பாதகங்களில் ஒன்றாக மதிக்கப்பெறும். இது அன்னதன்றாதலின் சிறந்ததாயிற்று. தர்மார்த்தகாமம் என்ற வரிசையிலுள்ள காமம், விருப்பமும் அதன்வழி நிகழும் இன்பமுமாகிய இரண்டையும் உணர்த்தும். தொல்காப்பியரும், வள்ளுவரும் சொல்லும காமம் இல்லறவாயிலாகிய களவும் இல்லறமாகிய கற்பும் இவற்றின்பயனாகிய இன்பமும ஆம். ஆதலால் இந்த காமம் வேறு எனறே துணியப்பெறும்.

இன்பம் என்ற சொற்குப் பொருள்வரையறுத்து உரைத்தல் இயலாததொன்று. வள்ளுவரே இன்பத்தின் நிலைகளைத் தேடத் தொடங்கி, 'அறத்தான் வருவதே இன்பம்' (39), 'மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்' (65), 'சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும்' (98), 'ஒறுத்தார்க் கொருநாளையின்பம்' (156) 'சிற்றின்பம் வெஃகி' (173), 'ஈத்துவக்குமின்பம்' (228), 'இருணீங்கி இன்பம் பயக்கும் (352), 'இன்பம் இடையறாது ஈண்டும அவா என்னும் துன்பத்துள் துன்பங் கெடின்' (369), 'அறம்பொருளின்பம உயிரச்சம்' (501), 'இன்பம் விழையான்' (615), 'இன்பம விழையான் இடும்பை யியல்பென்பான்' (628), 'இன்பத்துள் இன்பம் விழையாதான்' (629), 'இன்னாமையின்பம் எனக கொள்ளின்' (630), 'இன்பம் பயக்கும் வினை' (669), 'பிணியின்மை......... விளைவு இன்பம' (738), 'இன்பத்துள் இன்பம் பயககும இகலென்னும் துன்பத்துள் துன்பங்கெடின்' (854), 'செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா அஞ்சும் பகைவர்ப் பெறின்' (869), 'இழிவறிந்து உண்பான்கண் இன்பம்' (946), 'இன்பம் ஒருவர்க்கு இரத்தல் இரந்தவை துன்பம் உறுவரின்' (1052), 'இன்கண் உடைத்தவர்' (1152) என்று பலவாற்றான் வருவது என வகுத்தார். ஆகவே இன்பப்பால் எனப் பொதுப்படக் கூறின் இவற்றுள் எதனை என்று உணரலாகாமையான், காமம் என்ற ஏதுவைக் கொண்டே இன்பமாகிய பயனை எய்தவைத்தனர் வள்ளுவர் என்பதே தெளிவு. சுருங்ககூறின் காமத்துப்பாலென்றலே வள்ளுவர் கருத்தாதல் வேண்டும என்பதற்குரிய காரணங்களாவன:—

1. காமம் என்ற சொல்லைப் பலவிடங்களில் எடுத்தாண்டிருப்பது.

2. காமம் காரணமாகவும் அதன் பயன் இன்பமாகவும் கூறுதல்.

3. இன்பம் பல்வேறுவகையான் வரும் என்றல்.

4. இன்பம் என்ற சொல் காம இன்பத்தைமட்டும் குறியாது ஏனைய இன்பங்களிலும் செல்லுதல்.

5. வள்ளுவமாலையுள் காமத்துப்பால் பாகுபாட்டைக் கூறும் மோசிகீரனர் காமம் என்றேயாளுதல்

இன்பப்பால் என்பார் காட்டும்மேற்கோள்கள் பொருத்தமின்மை:-

1. அறம் பொருள் இன்பம் என்ற முறையில் கூறிய இன்பம் காம இன்பத்தைமட்டும் உணர்த்தாமல் அறத்தானும், பொருளானும் எய்தும் இன்பத்தையும் உணர்த்தும் என்பது.

2. 'அறம் பொருள் இன்பம் உயிர் அச்சம்' (501) என்றதிலுள்ள இன்பமும் அங்ஙனமே என்பது.

3. திருவள்ளுவமாலைச் செய்யுட்களில் இன்பம் என்ற ஆட்சி காரண காரியங்களுக்குள்ள ஒற்றுமைநயம்பற்றி உரைக்கப்பட்டனவே யன்றி இதுதான் ஆட்சி என வரையறுக்கவந்தன அன்று என்பது.

4. காமம் என்ற சொல் வடசொல்லாகாமை முகம் என்ற சொல் மூன், மூஞ்சு என்ற பொருளைக்காட்டி இருமொழியிலும் ஒரே பொருளில் வழக்குடையதாதல்போலக் காமம் என்ற சொலலும தமிழ்ச் சொல்லாயும் வடசொல்லாயும் ஒலியானும் பொருளானும் வேற்றுமை இன்றி வழங்குகிறது எனல்.

இவற்றானும் இந்தக் காமம் வேறு என்று துணியப்பெறும்.

*இயற்பாகுபாடு:* இப்பால் களவியல் கற்பியல் என இருபகுக்கப் படும். களவியல் தகையணங்குறுத்தல் முதல் அலரறிவுறுத்தலீறாக ஏழு அதிகாரங்களை உடையது. கற்பியல் பிரிவாற்றாமை முதல் ஊடலுவகை ஈறாகப் பதினேழு அதிகாரங்களை உடையது. இவற்றுள், தகையணங் குறுத்தல் முதலாக நலம்புனைந்துரைத்தல் இறுதியாகக்கூறிய கிளவிகள் நான்கும் தலைவன் கூற்றாக அமைந்தன. அதன்மேலுள்ள மூன்றும் தலைவன் தலைவி இருவர்நிலையும் அறிவிப்பன. கற்பியலுள் பிரிவாற்றாமை முதல் குறிப்பறிவுறுத்தல் இறுதியாக உள்ளன தலைவிநிலை கூறுவன,

புணர்ச்சிவிதும்பல முதலாக ஊடலுவகை இறுதியாக உள்ளன இருவர் நிலையும் இயம்புவன. இந்தநிலைப் பாகுபாடு பரிமேலழகர் உரையை ஒட்டிக் கருதப்பெற்றது. திருவள்ளுவமாலை,

"ஆண்பால்ஏழ் ஆறிரண்டு பெண்பால் அடுத்தன்பு
பூண்பால் இருபால்ஓர் ஆறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு"

என்கின்றது. இதனால திருவள்ளுவர் ஆண்பாற்காமம் கூறுவன ஏழு அதிகாரங்களும், பெண்பாற்காமம் கூறுவன பன்னிரண்டு அதிகாரங்களும், இருபாற்காமம் இயம்புவன ஆறு அதிகாரங்களும் அமைத்தார் என்று மோசிகீரனார் சான்று சொல்லுகின்றார். அந்த அமைப்பைப் பரிமேலழகரே மாற்றி அமைத்தார் என்பது அவர் ஒவ்வோரதிகாரத்துத் தலைப்பினும் எழுதும வரைவிலக்கணங்களால் அறியலாகும்.

தொல்காப்பியத்து மணஒழுக்கம் களவு கற்பு என இரண்டாகப் பகுக்கப்பெற்றுள்ளது அவற்றுள் களவு காமப்புணர்ச்சியும், இடந்தலைப் பாடும், பாங்கற்கூட்டமும், பாங்கியிற்கூட்டமும் என நால்வகைப்படும் எனவும் கூறுகின்றது. இவற்றுள காமப்புணர்ச்சி பால்வகையால் எதிர்ப் பட்ட தலைவனும் தலைவியும் கொடுப்பாரும் அடுப்பாரும இன்றித் தம்முட் கூடுங்கூட்டம். இது காதல்காரணமாக நிகழ்வதாகலின் காமப்புணர்ச்சி என்றார் ஆசிரியர். இதனானும காதலாகிய காமமே இன்பத்திற்குக் காரணம் என்பதும், அதனால் இன்பக்காரணமாகிய புணர்ச்சியும அதன் காரணமாகிய காமநிலையுணர்ததுதலுமே இப்பாலின் குறிககோளாதலின் காமத்துப்பால் எனப்பட்டது என்பதும தெளிவுறுதல காண்க. காமப் புணர்ச்சி காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிதல்களை வாயிலாகக்கொண்டு நிகழ்வது. இதனை இயற்கைப் புணர்ச்சி எனப் பின் நூல்கள் பேசும். வள்ளுவர் இந்நான்கு வாயிலையும தகையணங்குறுத்தல் குறிப்பறிதல் என இரண்டாககிக கூறினார்.

தகையணங்குறுத்தலாவது தலைவியினுடையதகுதி தன்னைமிகவும் வருத்துவதாகக் கூறியது. இவ்வதிகாரத்தின் முதற்குறள் ஐயங்கூறுவது. பின்வரும் குறள்களில் பெண்தகையால், பெண்தகை, மடவரல்நோக்கம், ஒண்ணுதல் என்று பேசப்படுவதால் ஐயத்தின்நீங்கித் துணிந்தானாயிற்று. ஆதலால் இவ்வதிகாரத்து ஐயமும் துணிவும் அடக்கிக் கூறப்பட்டன. குறிப்பறிதல் அடுத்துநிற்கின்றது. இதில் நோய் நோக்கத்தையும் நோய்க்குமருந்தாம் நோககத்தையும் கொண்டு உள்ளக்குறிப்பை உணர்ந்த தலைமகன், சிறக்கணித்தாள்போலத் தலைவி நகுதலைக்கண்டு தெளிந்தான்.

பின்னர், காதலின் உச்சியை அடைந்த அவள் மீட்டும் பொதுநோக்கு நோக்குதலை, சிறப்புள்ளத்தைத் தெரிவிக்கும் சான்றாகக்கொண்டு 'கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒக்கின் வாய்ச்சொற்கள் என்னபயனும் இல' என்று குறிப்பினை அறிந்தான் என்கின்றார். அடுத்து நிற்பது காமப்புணர்ச்சியின் பயனாகிய புணர்ச்சியின் மகிழ்தல். மகிழ்ந்த நிலையில் காமம் குறைபடாமைப்பொருட்டுத் தலைவியின் நலன்களைப் புனைந்துரைக்கின்றான். இவ்வாறு காமப்புணர்ச்சி முடிந்த பின்னர், காதற்சிறப்புரைத்தல் முதலிய மூன்றதிகாரங்களான் இருவர்க்குமட்டும் தெரிந்த காதல், வெட்கத்தை விட்டுப் பேசியமையால் வெளிப்பட்டு, அலராக ஆயிற்று எனப் பின்வரும் கற்பிற்கு வழிவகுக்கப்படுகிறது. தொல்காப்பியர் கூறும் இடந்தலைப்பாடு முதலிய ஏனைய மூன்றும் இதனுள் விரித்துக்கூறப்பெறவில்லை.

கற்பியலில் அவர்கள் வரைந்துகொண்டமையும் இல்லறம் நடத்தியமையும் ஆகிய புணர்ச்சிவகைகள் பேசப் பெறவில்லை. தலைவன், பிரிவு வகையுள் ஏதோ ஒன்றை மேற்கொண்டு பிரிந்தவிடத்துப் படர் மெலிந்திரங்கல் முதலாக அவர்வயின்விதும்பலீறாகத் தலைவியின் பிரிவுத் துன்பநிலைகள் விரித்துரைக்கப்படுகின்றன. பின் இரண்டு அதிகாரங்களால் ஒருவர் குறிப்பை ஒருவர்க்கு அறிவுறுத்தலும், இருவரும் புணர்ச்சிக்காக விழைதலுமாகிய புணர்ச்சிநிமித்தம் அறிவிக்கப்பெறுகின்றது; கற்புக் காலத்துக் கூடியிருக்கும் புணர்ச்சியைக்காட்டிலும் பிரிவே கூடிய காலத்திய நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி இன்புறச்செய்யுமாகலின். ஆகவே குறிப்பறிவுறுத்தலையும் புணர்ச்சிவிதும்பலையும் இருவர் நிகழ்ச்சியாக உரையாசிரியர்கள் பலர் அறிவிக்கின்றார்கள். பின்னர் அமைந்துள்ள நெஞ்சொடுபுலத்தல், புலவி, புலவிநுணுக்கம் என்ற மூன்றதிகாரங்களும் தலைவனது பரத்தைமைகாரணமாக உண்டான ஊடலை உணர்த்துவன. இறுதியதிகாரமாகிய ஊடலுவகை ஊடிப்புணரும் புணர்ச்சியின்பம் கற்பொழுக்கத்தில் கருத்தைப் பிணித்து நிற்பதொன்று என்று அறிவிக்கப்படுகிறது.

இங்ஙனமாகப் பரிமேலழகர், காமத்துப்பால் பொருளைத்துணைக் காரணமாகவுடைத்தாய் இம்மையேபயப்பதாய இன்பம் கூறுவது என்றும், இன்பம் என்ற பொதுச்சொல் காமஇன்பத்தையே உணர்த்தும் என்றும், இது புணர்ச்சி பிரிவு என இருவகைப்படும் என்றும் கூறினர். மேலும் ஐந்திணையொழுக்கங்களுள் இவை இரண்டும்போக, ஏனை இருத்தல் இரங்கல் ஊடல்களைப் பிரிவின்கண் அடக்கினர் என்பர். புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் வள்ளுவர் வகுத்ததாகவும் கூறுவர்;

பரிப்பெருமாள் தகையணங்குறுத்தல் முதலாகப் புணர்ச்சி மகிழ்தல் ஈறாக அருமையிற்கூடலும் அதற்கு நிமித்தமும், நலம்புனைந் துரைத்தல் முதலாகப் புணர்ச்சிவிதும்பல் ஈறாகப் பிரிந்துகூடலும் அதற்கு உரிய நிமித்தமும், நெஞ்சொடுபுலத்தல் முதலாக ஊடலுவகை ஈறாக ஊடிக்கூடலும் அதன் நிமித்தமும் வள்ளுவரால் வகுக்கப்பட்டன என்பர்.

இவற்றுள் வள்ளுவமாலையில் மோசிகீரனார் கூறியவண்ணம் காமத்துப்பால் மூன்றியல்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தமையை "காமத் திறம் மூன்றெனப் பகுதிசெய்து" என்ற தொடித்தலை விழுத்தண்டினார் பாட்டும் வலியுறுக்கும். அந்த மூன்று இயல்கள் ஆண்பாலியல் பெண்பாலியல் இருவர்பாலியல்கள் என்பனவாம். ஆண்பால் இயல்கள் தகையணங்குறுத்தல் முதலாக அலரறிவுறுத்தலீறாகவுள்ள ஏழுமாம். இதனைக் காளிங்கர் உரைப்பகுதி நன்கு விளக்குகிறது.* இதனால் ஏனைய பெண்பாலியல் இருவர்பாலியல்களும் இந்த அதிகார அடைவினாலேயே பிரிவாற்றாமைமுதல் அவர்வயின்விதும்பலீறாகவும், குறிப்பறிவுறுத்தல்முதல் ஊடலுவகையீறாகவும் அமைந்திருக்கவேண்டும் என்பதை ஊகிக்கலாம்.

மணக்குடவர் ஆண்பாலியலாகக் குறிப்பறிதல், புணர்ச்சியின் மகிழ்தல், நலம்புனைந்துரைத்தல் என்ற மூன்றையுமே குறிக்கின்றார். பெண்பாலியலாக அலரறிவுறுத்தல் முதல் அவர்வயின்விதும்பல் ஈறாக உள்ள பதின்மூன்றதிகாரங்களோடு பின்வரும் நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவிநுணுக்கம் என்ற மூன்றையும் கூட்டிப் பதினாறாகக் கொள்வர். இருவர்பாலியலாகத் தகையணங்குறுத்தல், காதற்சிறப்புரைத்தல், நாணுத் துறவுரைத்தல், குறிப்பறிவுறுத்தல், புணர்ச்சிவிதும்பல், ஊடலுவகை என்ற ஆறையும் குறிப்பர். இவற்றுள் தகையணங்குறுத்தலைத் தலைவனது தகுதி தலைவியையும், தலைவியது தகுதி தலைவனையும் அணங்குறுத்தியதாகக் கொண்டு இருவர்பாலியலின் பிரிவாகக் கொண்டார். தலைவி தலைநாட் காட்சியிலேயே அணங்குற்றதாக வருகின்ற கிளவி கைக்கிளையுள் காணக் கிடையாது. பெண்பாற் கைக்கிளையுண்டேனும் அவை இலக்கிய வழக்கில் உரையாகப் பயின்றுவாரா என வரையறுக்கப் பெற்றுள்ளது. ஆதலால் ஆண்பாலியலதாக ஆக்கிய ஏனைய உரையாசிரியர்களின் உரைநயம் உணர்ந்து இன்புறுதற்குரியது.

---

* காமத்துப்பால் 121-ம் பக்கம் பார்க்க.

இங்ஙனம் குறளின் பால் இயற்பாகுபாடுகளை உரையாசிரியர்கள் தத்தம் போக்கிற்கேற்ப மாற்றி அமைத்துக்கொண்டனர் என்பது வெளிப்படை. 1889-ல் கருத்துயர் அட்டவணை யெழுதிய சுகாத்தியர் என்னும் அயல்நாட்டுப் பாதிரியாரும் தம் எண்ணப்படி இறைமுறை, இலைய முறை, இயல் முறை எனப் பிரித்து அதிகாரங்களையும் மாற்றி அமைத்துளார். குறள் முறைவைப்பில் பண்டைய உரையாசிரியர்கள் அனைவருமே மாறியிருத்தல் ஆங்காங்குக் காட்டப்பெற்றது. ஆகவே குறள் அமைப்புமுறை பின்னர் மாறியிருக்கவேண்டும் என்ற எண்ணமே வலியுறுகின்றது.

## மர இயற்கை :

திருக்குறள் உலகமலரிலிருந்து ஊறியெழுந்த தேன் துளியாதலின் உலகத்திலுள்ள எல்லா மணமும் இதனிடத்தில் இருப்பது இயல்பே. இதனிடத்து எல்லா இயற்கை நுணுக்கங்களும் எடுத்து விளக்கப் பெறுகின்றன. முறையே அவற்றை அகச்சான்றுகளுடன் தெரிதலே இப்பகுதியின் நோக்கமாம்.

திருக்குறளில் அனிச்சம் மூங்கில்மரம் வற்றல்மரம் முள்மரம் நச்சுமரம் மருந்துமரம் பழுமரம் முதலிய மரவகைகளும், தாமரை குவளை முதலிய நீர்ப்பூக்களும், நெருஞ்சி பசும்புல் முதலிய படர்செடி களும், கரும்பு எள் முதலிய செடிவகைகளும், குன்றியாகிய கொடியு பேசப்படுகின்றன.

இவற்றுள் அறத்துப்பாலில் அனிச்சப்பூவின் இயற்கையை 'மோப்பக் குழையும் அனிச்சம்' என மொழிகின்றார். தொட்டாற்சுருங்கி போல இதன் மலர் மோந்தவுடனே வாடிவிடும் என்பது அதனால் அறிவிக்கப் படுகிறது. பூ மிகவும்மென்மையானது. இது கருதியே அரசர்கள் தம் படுக்கையில் பரப்பிக் கொள்வது வழக்கம். வள்ளுவர் இதன் இயல்பை நன்கு வலியுறுத்த, தலைவியின் மென்மையைக் கருதுகின்றகாலத்து 'நின்னினும் மென்னீரள்' என்றும், மாதரடிக்கு நெருஞ்சிப்பழம்போல உறுத்துவது என்றும் கூறுகிறார். காம்பு கிள்ளாமல் அனிச்சப்பூவை அணிந்ததால் தலைவியின் இடை ஒடிந்தது என்று, இதன் மென்மை மூலமாக இடையின் மென்மை விளக்கப்பெறுதல் காண்க. அனிச்சம் கோட்டுப் பூவா ? நீர்ப்பூவா ? என்பதே பலர்க்கு ஐயம். இதனைப்பற்றி மன்னார்குடி இலக்கண ஆசிரியர் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் இது கோட்டுப்பூவே என்றும், குறவப்புலம் புகைவண்டி நிலையத்தின் பக்கத்திலுள்ள ஐயனார் கோயிலில் இருக்கிறதென்றும் கூறினார்கள்.

தோற்றம் இலை கிளை இவற்றால் இது சிறுசண்பகம்போல இருக்கும்; மாசி பங்குனியில் பூக்கும்; பூ சரமாகத் தொங்கும்; மாலையில் மலரும்; விடியலில் பொடியாக உதிர்ந்துவிடும்; மலர் வெண்கடம்புபோல மணம் உள்ளது; சிவந்த கோடுகள் படர்ந்த வெள்ளைப்பூ; காயின் மேலோடு வலியது என்பன அவர்கள் எழுத்தால் அறியக்கிடப்பன.

**மூங்கில் மரம்:** இது இலக்கிய உலகில் மாதர்களது தோளுக்கு உவமையாக எடுத்துக் காட்டப்படுவது. அங்ஙனமே இந்நூலினும் 'அமையார்தோள்' 'வேய்த்தோள்' என்று எடுத்தாளப்பட்டுள்ளது. அமை என்பது மூங்கிலின் மறுபெயராயினும் அதனுள் ஒருசாதி என்று அறியப் படுகிறது. 'அமையொடு வேய்கலாம் வெற்ப' என்று பழமொழி நானூறு பேசுகிறது. அதன் பழையஉரை அமை என்பது முள்ளில்லா மூங்கில் என்று அறிவிக்கிறது.

**முள் மரம்:** இது ஒரு மரப்பெயரன்று. முள்ளுள்ள மரங்கள் எல்லாவற்றையுமே அறிவிக்கும். பகையை முளைக்கும்போதே களைய வேண்டும் என்பதற்குப் பிறிது மொழிதலாக 'இளைதாக முண்மரம் கொல்க' என்கின்றார். முற்றின் வயிரங்கொண்டு கீறியும் குத்தியும் கையை வருத்தும் என்று அதன் இயற்கை அறிவிக்கப்படுகிறது.

இவ்வாறே மருந்துமரங்கள், பழமரங்கள், நச்சுமரங்கள் முதலியனவும் அறிவிக்கப்படுகின்றன. மருந்து மரத்தைப்பற்றித் 'தப்பாமரம்' என்று அதன் இலை, தளிர், பட்டை, வேர் முதலிய எல்லாம் மருந்தாகப் பயன்படுவதை அறிவிக்கிறார். பழமரங்களும் ஊர்நடுவில் பழுத்துவிட்டால் எல்லார்க்கும் எஞ்ஞான்றும் பயன்படும் என்று அறிவிக்கப்படுகின்றது. அதிலும் 'கனிந்த மரத்தில் கல்லடி சில்லடி' என்றாற்போல அம் மரம் வருந்தியும் அனைவர்க்கும் பயன்படும் அருமைப்பாடு இதில் அடங்கிக் கிடக்கின்றது.

இங்ஙனமே நச்சுமரத்தைப்பற்றி நன்றியில் செல்வம் என்னும் அதிகாரத்து, பலர்க்குப் பயன்படாதவன் செல்வம் நடுவூருள் நச்சுமரம் பழுத்ததுபோல யாவர்க்கும் பயன்படாது என்கின்றார்.

குவளைப்பூக்கள் மேல்நோக்கி மலர்தலையும், 'வெள்ளத் தனைய மலர் நீட்டம்' என்பதால் நீர்ப்பூக்கள் அனைத்துமே நீரளவாக வளர்ந்து மலர்தலையும் குறிப்பிடுகின்றார். நெருஞ்சிமுள்ளை நெருஞ்சிப் பழம் என்றல் மரபு என்பது விளக்கப்படுகிறது. நசுக்கிப் பயன்கொள்ளும் கரும்பு, கீழ்மக்கட்கு உவமிக்கப்படுகிறது. சிறப்பாக 'உரம் ஒருவர்க்கு'

என்றகுறளில் 'உள்ள வெறுக்கையில்லார் மரம்' என்று, மரத்திற்கு உள்ள மின்மை உணர்த்தப்படுகின்றது. ஊறுணர்ச்சி அதற்கு உண்டாயினும் அதனுன்விளையும் நன்மை தீமைகளை உள்ளி ஒதுங்கிநடக்கும் உள்ளம் மரங்களுக்கு இல்லை என்பது வெளிப்படை. அதனுலேயே உள்ளமில்லா மக்களுக்கு மரம் ஒப்பாகிறது.

மற்றும் மரத்தின் உறுப்புக்களாகிய கொம்பு, மலர், இணர், காய், வித்து, தளிர் என்பவைகளும் குறிக்கப்படுகின்றன.

## விலங்கு இயற்கை :

விலங்குகளில் யானை, குதிரை, பசு, காளை, ஆடு, நரி, புலி முதலியன குறிக்கப்படுகின்றன. அவற்றுள் யானையே திருக்குறளில் பெரும்பாலான இடங்களில் பேசப்படுகின்றது. யானை மக்களுக்குப் பெரிதும் பயன்படும் விலங்கு. அதனைப் பிடிப்பதற்காகக் காடுகளில் படுகுழி வெட்டி அதன்மேல் மெல்லியகுச்சிகளைப்பரப்பி மண்ணிட்டு மூடி வாழை முதலிய உணவுப் பொருள்களை நட்டுவைப்பார்கள். அதன் பக்கத்தில் பழக்கப்பட்ட யானையொன்றை உலாவவிடுவார்கள். அதனைக்கண்டகாட்டுயானை நம்மினம் வாழையை உண்கிறதே என்றெண்ணித் தானும் உண்ண விரைந்துவந்து படுகுழியில் விழுந்துவிடும். அதன்பிறகு இதனைக்கொண்டே அதனைப் பழக்கிப் படுகுழியை இடித்துக் கரையேற்றிப் பிடிப்பார்கள். அதனைத் திருக்குறள் 'யானையால் யானை யாத்தற்று' என்று அறிவிக்கிறது. இந்த யானைகளுக்குள் காட்டிலே கடுமையானபோர்வந்துவிடும். அப்போது யாரும் அந்த இடத்தில் அணுகமுடியாது. பெரிய மலைகளின்மேலிருந்துதான் பார்க்கவேண்டுமாம். யானை பெரியவலியுள்ள விலங்காயினும் சேற்றில் அகப்பட்டுக்கொள்ளுமாயின் நரி அதனைப் பிடுங்கித் தின்றுவிடும். புலி தாக்கினுல் யானை அஞ்சும். வேடர்கள் யானையை அம்பாலும், வேலாலும் வேட்டையாடுவர். அம்பு தைத்தாலும் யானை சோராது; கடமையில் தவருது; பெருமையை நிலைநாட்டும்.

நன்கு பயிற்றப்பட்ட குதிரை போரில் சளைக்காது என்பதும், பயிற்றப்பெருத குதிரையே கடும்போரில் தலைவனை வீழ்த்திவிட்டு ஓடும் என்பதும் குதிரையின் இயல்புகளாக உணர்த்தப்பெறுகின்றன.

மான் வகைகளில் ஒன்ருகிய கவரிமானுக்குப் பின்பக்கத்தில் மயிர் நிறைந்திருக்கும். அதில் ஒன்று எங்காவது மாட்டி வீழினும் தன்னுயிரையே விட்டுவிடும். தகர் சண்டையிடும்போது முட்டுவதற்காகப் பின்வாங்கி முன்னேறிச்சென்று தாக்கும் தன்மையது. நரி தானுகக்

கொல்லும் வலியின்மையால் சேறுமுதலியவற்றில் அகப்பட்டுக்கொண்ட யானை முதலியவற்றைப் பிடுங்கித்தின்னும் தந்திரமுள்ளது.

பசு வீட்டில்வளரும் விலங்கு. இதற்கு நீர் உணவு முதலியன கொடுக்காமலிருத்தல் கூடாது என்ற இன்றியமையாமையும், காளை வண்டியிழுக்கப் பயன்பெறுவதும் குறிக்கப் பெறுகின்றன. ஊர்வன வற்றுள் பாம்பு மிகக்கொடியது. அதற்கு என்ன நன்மைசெய்தாலும் அதனுடன் இருக்கவே முடியாது. அது எலியை விரும்பித்தின்னும். புழு என்பில்லாதது வெயிலைக் கண்டால் வாடியிறக்கும் என்பன விளக்கப்பெறுகின்றன.

நீர்வாழ்வனவற்றுள் ஆமை, முதலை, மீன் முதலியனவும் குறிக்கப்பெறுகின்றன. அவற்றுள் ஏதாவது இடையூறு நேரின் தன் கால்களையும் தலையையும் ஓட்டுக்குள் அடக்கிக்கொண்டு தன்னைக் காத்துக் கொள்ளும் இயல்புடையது ஆமை என்பதும், உணவு விருப்பால் தூண்டிற் புழுவை விழுங்கி மீன்கள் உயிரைவிடும் என்பதும் பேசப்படுகின்றன.

பறவைகளில் கோட்டான், காகம், கொக்கு முதலியன குறிக்கப் பெறுகின்றன. கோட்டானுக்கும் காகத்திற்கும் பிறவிப்பகை. கோட் டானுக்குப் பகலில் கண் தெரியாது. காகம் அதனைப் பகலில் வென்று விடும். இரவில் கோட்டான் காகத்தை வெல்லும். காகத்தினிடம் உள்ள ஐந்து அருமையான குணங்களில் ஒன்றான, சிறிதுணவு கிடைப்பி னும் தன்னினத்தாரை அழைத்துப் பகுத்துக் கொடுத்து உண்டலைத் திருவள்ளுவர் பாராட்டுகிறார். கொக்கு நல்ல வாய்ப்பான உணவு கிடைக்கும்வரை ஒற்றைக்காலில் நின்றுகொண்டிருக்கும். கிடைத்தால் ஒரேகுத்தாகக் குத்தித் தின்றுவிடும். பறவைக் குஞ்சுகள் இறக்கை முளைக்கிறவரையில் கூட்டில் இருக்கும்; பறக்கக்கூடிய நிலைவந்தால் பறந்து விடும் என்று பறவைகளின் பொதுக்குணமும் பேசப்பெற்றுள்ளது. பீலி. அன்னத்தின் தூவி முதலியனவும் அறிவிக்கப்பெறுகின்றன.

## மக்களியற்கை:

வள்ளுவர் மக்களை மக்கள் மாக்கள் என இருவகையாகப்பிரித் தனர். தொல்காப்பியரும் 'மக்கள் தாமே ஆறறிவுயிரே, மாவும் மாக்களும் ஐயறிவினவே' என்பர். மக்களோடு மாக்களுக்குள்ள வேறுபாடு அறிவை ஆராய்ச்சியால் வளர்த்து, நன்மை தீமைகளைப் பகுத்து, பயன்படுத்தும் முறையாலேயே அமைகின்றது. இயற்கை யறிவும் கல்வியறிவும் இருந்தாலும் அவற்றிற்கு ஒளிதந்துவிளக்குவது கேள்விஞானமே என்பர். 'செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும்

என்' என்று மாக்கள் இயல்பை விளக்குகிறார். இதனோடு 'கொலைவினைய ராகிய மாக்கள்' என்பதனையும் நினைவுகூர்ந்தால் மக்களியற்கை, கொலையும் புலையும் இன்றி எல்லா உயிர்களிடத்தும் இரக்கக் குணமுடையரா யிருத்தல் என்பதும், அஃது இல்லாதார் பிற உயிர்களின் துன்பங்கண்டு வருந்தாத - அதனை மனங்கொள்ளவும் செய்யாத விலங்கியற்கை உடையார் என்பதும், விலங்கு மறுபிறப்புண்டு புண்ணிய பாவம் உண்டு என்று கருதும் மனவன்மையில்லாதது என்பதும் விளக்கப் பெறுகின்றன.

மக்களுக்குள்ள இயற்கையறிவை விளக்கச்செய்வது கல்வியறிவு. அஃது இல்லாதார் மக்களாகார்; மாக்களாகுவர் என்று கூறவந்த வள்ளுவர் மாக்கள் என்பது மக்கட்பண்பு இழந்து உருவத்தால் மக்களாகியவர்களையே உணர்த்தும் என்பதை உள்ளத்துக்கொண்டு அந்த நிலைமையும் அவர்களுக்கு அளிக்கலாகாது என்ற கருணையால் 'விலங் கனையர்' என்று விதந்தார். எல்லாரையும் சிந்திக்கச்செய்வது ஊக்க முடைமை; அதனையுடையவரே மக்கள். இதனை விளக்குவது 'உரம் ஒருவற்கு உள்ளவெறுக்கை அஃதிலார் மரம் மக்களாதலேவேறு' என்ற குறள். மக்களுக்கென்று தனித்த பண்பாடுகள் உண்டு. அவை இன்ன என்றும் இத்துணைய என்றும் வரையறுக்க முடியாதபடி, எல்லார் இயல்புகளையும் அறிந்துகொண்டு, அவற்றோடு ஒத்து ஒழுகுகிற வன்மையாக விளங்குவன. நல்ல குணங்களெல்லாம் பண்பு அல்லது இயற்கை என்ற பொதுச்சொல்லுக்கு இலக்காவன. வள்ளுவர், அன்புடைமையும் குடிப்பிறப்புமே பண்புடைமை என்று உலகம் உரைப்பதாகத் தான் உரைக்கின்றார். இதனை ஊன்றி நோக்கும்போது அன்பு புதிதாகக் கொள்ளும் பொருளென்றால் உயிர்க்குணமாய் அறுதியே அமையாது. குடிப்பிறத்தல் முற்பிறவியிற் செய்த புண்ணிய பாவங்கட்கு ஈடாக நலமுற்ற குடியிலே தோன்றுதல். இதுவும் வேண்டுமென்றே எய்தப்படுவது அன்று, இயற்கையிலே அமைவது. பொதுவாகக்கூறினால் பலர் வெறுக்கத்தக்க குணங்களை அடையாமல், நடுநெறி பிறழாமல், கண்டொன்று சொல்லாமல். எல்லார்க்கும் இன்பம் பயப்பதே மக்கட்பண்பு என்பது வள்ளுவர் கூறும் வரையறை. இந்தப் பண்பு இல்லாதவர் கயவர் என அழைக்கப் படுவார்கள். 'மக்களே போல்வர் கயவர்' என்கிறது இந்நூல்.

மக்கள் பால்வேறுபாட்டால் ஆண் பெண் பேடி என முத்திறப் படுவர். ஆண்மக்கள் தன்னையும் தன் இந்திரியங்களையும் பிறரையும் ஆளும் வன்மையினாலேயே இப்பெயர் பெறுவர். எல்லாவற்றிலும், தன்னையும் தன் பொறிகளையும் ஆளுதலே சிறந்த ஆணியற்கை என்பார், 'பிறன் கடைநோக்காத பேராண்மை' என்றார். இவ்வாறே 'பேராண்மை' என்ப தறுகண்' என்று அஞ்சாமையை ஆணியற்கையாக வழங்குவர். புகழுக்காக

எதனையும் செய்வது ஆண்மையாகாது பழியொடு படாதவற்றைச் செய்வதே ஆண்மை என்பது 'பேராண்மை வேண்டுபவர் சீரினும் சீரல்ல செய்யார்' என்பதால் வலியுறும். இவ்விலக்கணங்களால் ஆணியற்கையானது இந்திரிய வயப்பட்டுத் தனக்கு உரியள் அல்லாதாரை நோக்காமையும், பழிப்படுவ செய்யாமையும், அஞ்சாமையுமே என்பது தெளியப்பெறும். ஆண்மைக்கழகு பெண் விரும்ப நடத்தலேயன்றிப் பெண்ணுக்கு ஏவல் செய்வது அன்று என்பது வள்ளுவர்முடிவு.

விருப்பால் வாழவைப்பவள் பெண். பெண்ணுக்குக் கற்பு அணி. பெண்ணின் கடமை தன்னைக் காப்பாற்றிக் கொள்வதும், கணவனைப் பாது காப்பதும் அனைவரும் புகழ நடப்பதுமாம். 'இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர் மனம்போல வேறுபடும்' என்ற குறளில், மகளிர் மன நிலையைத் தெள்ளிதின் அறிவிக்கிறார். இதனை 'ஓராயிர மனத்தவாகும்' என்ற சிந்தாமணிச் செய்யுளாலும் தெளியலாம். தற்காத்துக் கொள்ளும் கற்புடை மகளிர்க்கு ஒருமை மகளிர் என வள்ளுவர் சிறப்புப்பெயர் தந்து அழைப்பர். இவர்களை ஒருமைமகளிர் என்றமையான் இனம்பற்றி இருமை மகளிரும் இருத்தல் வேண்டும். அவர்களை இருமனப் பெண்டிர் என்பர்.

மகளிர்களின் நல்லியல்புகளை விளக்கவந்த ஆசிரியர் அதனை வற்புறுக்க, இருமை மகளிராகிய வரைவின்மகளிரைப்பற்றியும் சொல்கின்றார். அவர்கள் நோக்கம் முழுவதும் பொருளிலேயே. அவர்களுக்கு மன ஒருமைப்பாடு இல்லை. அன்பு இல்லை. அவர்கள் வாழ்வே வஞ்சனை. இவர்களுக்கு வள்ளுவர் இடும் பெயர்கள் மாயமகளிர், பொதுநலத்தார், பொருட்பெண்டிர், பண்பில் மகளிர் என்பன. இங்ஙனம் ஒருமைமகளிர் இயல்புகள் பணிபூண்டு கணவனைக் காத்து, அளவறிந்து வாழ்தல் என்பதும், இருமனப் பெண்டிர் இயல்பு பொருளுக்காகப் பொருளல்லாதாரிடத்தும் புன்னலம் விற்று அவர்களையும் நரகத்தில் அழுத்தி நலிவு செய்தல் என்பதும் விளக்கப்படுகின்றன. பெண்ணியல்பாவன நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்பன. இவையில்லாதாள் பெண்ணல்லாள் என்பதும் வற்புறுத்தப்படுகிறது.

ஆண்மை குறைந்து பெண்மை மிகுந்திருப்பவள் பேடி. பேடிக்கு வீரமும் ஆண்மையும் இரா. இந்த நிலைமையைப் 'பேடிகை வாளாண்மை போலக் கெடும்' என்றும், 'பகையகத்துப் பேடிகை ஒள்வாள்' என்றும் திருக்குறள் தெரிவிக்கிறது.

மக்களுடைய பொது இயல்பைத் தனித்தனியே விதந்தெடுத்துக் கூறியன்போக, எல்லாவற்றையும் தொகுத்து, கடமையறிந்தியற்றலும்,

நற்குணமுடைமையும், அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை யாகிய இவைகளை உடைமையும் வேண்டும் என்கின்றார். மேலும் கொல்லாமை, புறங்கூறாமை, பொறையுடைமை, இன்னாசெய்யாமை, நிலையிற் கலங்காமை முதலியனவும் இன்றியமையாதெனக் கூறுகின்றார். இவற்றைத் தனித்தனியே அவ்வவ்வதிகாரங்களில் பரக்கக்காணலாம்.

## பழக்க வழக்கங்கள் :

மக்களுடைய நாகரிகம் பழக்கவழக்கங்களால் அறியப்படுவது. குடித்தனம் செய்பவர்களுக்குக் குடும்பப்பொருள் தட்டுப்படுவது வழக்கம். அவற்றை மகளிர் ஓர் அளவுகுறித்து வாங்கித் திரும்பவும் கொடுத்து விடுவார்கள். இதற்குக் குறியெதிர்ப்பை என அருமையான பெயர் சூட்டுகிறார். இது எளியகுடும்பத்து வாழ்க்கை. அவ்வாறே வீடில்லாத எளியவர்கள் ஒண்டுகுடி இருப்பது வழக்கம் உண்டு. அதிலும் வீட்டுக்கார னோடு இருந்துவிட்டால் வேறு வினையே வேண்டாம். அதிலும் அவன் பொல்லாத் துணைவர்களை உடையனாயின் ஒண்டுகுடித்தனக்காரன் பாடு திண்டாட்டந்தான். வேறு வீடு கிடைக்காவிட்டால் சொல்லவேண்டிய தில்லை. அந்த நிலையைப் 'புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு' என்ற குறளால் சித்திரிக்கிறார்.

நெடுந்தூரத்திலுள்ள காதலர்கள் நினைத்தால், நினைக்கப்பட்டவர் களுக்குத் தும்மல் வருவது வழக்கமாம். தலைவன் தலைவியுடனிருந்த காலத்துத் தும்மல் வர, அதனைக்கண்டு தலைவி 'என்னைக்காட்டிலும் உம்மைக் காதலிப்பவர் யார்? அவர் நினைப்பதனாலேயே உமக்குத் தும்மல் வருகின்றது' எனச் சொல்லி அழுதாளாம். இதனைக்கண்ட தலைவன் மற்றொருகால் அவள்முன் தும்மல்வர, மூக்கைக் கசக்கி அதனை அடக்கிக் கொண்டானும். அதற்கும் அவள் புலந்தாள் என்று இரு குறள்களால் தும்மல் உண்டாவதன் அடிப்படைக் காரணத்தையும் தலைவி ஊடுதலையும் அறிவிக்கின்றார். இந்தத் தும்மல் முன்குறிப்பு இன்றியே தானாகத் தோன்றுவது என்பதனைக் 'குறிப்பின்றித் தும்மல்போல் தோன்றிவிடும்' என்ற பகுதி அறிவிக்கிறது. காதலர் தும்மினால் காதலி காதல்மிகுதி யினால் 'நீடு வாழ்க' என வாழ்த்துதல் மரபு. இக்காலத்தும் தாய்மார்கள் குழந்தைகள் தும்மினால் ஒரு தும்மலை நூறாக வாழ்த்துவார்கள்.

'இருட்டறையில் ஏதில்பிணம் தழீ இயற்று' என்பது ஒருநாட்டில், மணமாகாத பெண்களை எரித்தல் கூடாது என்னும் மரபுபற்றிக் கூலிக்காக மணந்துகொண்ட கணவன் அவளைத் தழுவுவதுவழக்கம் என்ற உண்மையைப் 'பொருட்பெண்டிர்' என்ற திருக்குறளுக்குக் கல்குளம்

குப்புசாமி முதலியார் செந்தமிழ்த் தொகுதியில் எழுதிய குறிப்புத் தெரிவிக்கின்றது. அதன் உண்மை எம்போலியர்க்கு அறியப்படாத ஒன்று. நினைவுறுத்தத்தக்கவைகளைச் சுவரில் கோடிட்டு வைத்து அதனை விரலால் தொட்டு எண்ணி வரையறுத்தல் மகளிருடைய இயல்பு. அதனை 'நாளொற்றித் தேய்ந்த விரல்' என்கின்றது குறள்.

## தொழில்கள் :

இந்நூல் உழவும் வாணிகமுமாகிய இருதொழில்களையே விரித்துச் சொல்கின்றது. அவற்றுள்ளும் உழவுக்கே தனிமதிப்புத் தந்திருக்கிறது. பொருள்களை உற்பத்திசெய்வது உழவு. அந்தப்பொருள்களை எங்கும் எடுத்துச்சென்று அனைவர்க்கும் பகிர்ந்தளித்துப் பயனுறச்செய்வது வாணிகம். உழவிற்கு இன்றியமையாத கருவி ஏர், நீர், எரு, பகடு என்பன. இவற்றைப்பற்றி வள்ளுவர் 'ஏரின் உழார் உழவர் புயல் என்னும் வாரிவளம் குன்றிக்கால்' என்ற குறளால் ஏருக்கு நீர் இன்றியமையாதது என்பதை எடுத்துக்காட்டுகிறார். அல்லாமலும் 'மடுத்தவா யெல்லாம் பகடன்னான்' என்றதால் எத்துணைச் சேற்றுநிலத்தில் உழுதாலும் சளைக்காமல் செல்வது காளை எனப் பேசப்படுகிறது. உழவில் சேற்றுழவைக்காட்டிலும் புழுதி உழவை வள்ளுவர் போற்றுகின்றார். புழுதியை உழுதபிறகு நிலத்தை நன்றாகக் காயவைக்கவேண்டுமாம். ஒருபலப்புழுதி காற்பலப்புழுதியாகக் காயவைக்கவேண்டும் என்றால் மண்ணை எவ்வளவு அணுக்களாகப் பிரிக்கவேண்டும். உழவு இறுகிய மண்ணை உடைத்துவிடுவதற்கு. காய்ச்சல் உடைந்த மண்ணணுக்களில் சூரிய வெப்பமும் பிராணவாயுவும் ஊடுருவிச்செல்வதற்கு. மேல் மண் கீழ்மண்ணாகப் புரண்டு கலந்திருக்குமானால் தழையும் வண்டலும் படிந்து மக்கிய எருமண் எங்கும் கலந்து பயிருக்கு நல்லுரமாகும். அதனால் எரு இடவேண்டாம்.

ஏரைக் காட்டிலும் எரு இடுதலும், பிறகு களைபிடுங்குதலும், நீர்பாய்ச்சுதலும், நீர் பூமி சாரத்தோடு பக்கங்களில் வழிந்தோடாதவாறு பாதுகாத்தலும் மிக இன்றியமையாதன. உழவன் நாள் தவறாமல் நிலத்தைச் சுற்றிப் பார்த்துவரவேண்டும். அப்படி இல்லாவிட்டால் நிலம் ஊடிவிடும். உழவு உலகிற்கு ஆணிபோல்வது. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றையோரெல்லாம் அடிமைகள். உழவர் கைம்மடங்கினால் துறவிகளுக்கும் சோறில்லை. ஆதலால் தொழிலால் உயர்ந்தது உழவே. எருவும் நீரும் பயிருக்கு இன்றியமையாதன என்பதைப் பின்வரும் 'ஊரவர் கவ்வை' என்ற குறள் அறிவிக்கிறது. நீராலேயே வளரும் பயிர் மேலும் வளரும் என்பதனை 'வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்தற்று' என்பதனாலும், 'மரப்பினுள் அட்டிய நீர்' என்பதனாலும் அறியலாம்.

### வாணிகம் :

வாணிகத்திற்கு முதல் இன்றியமையாதது. இதனை 'முதலிலார்க்கு ஊதியம் இல்லை' என்பது விளக்குகிறது. அளவுகடந்த ஊதியத்திற்கு ஆசைப்பட்டு முதலையே இழக்கும்படியாக வாணிகம் செய்தல் ஆகாது. பிறர் பொருளையும் தமது பொருள்போல் எண்ணிக் கொள்முதல் செய்யும் போது மத்தளம் மரக்காலாகவும், விற்றுமுதல் செய்யும்போது உழக்கு மரக்காலாகவும் ஆக்காமல், நேர்மையான இலாபத்தோடு வாணிகம் செய்ய வேண்டும். முதல் என்பதால் கைம்முதலாகிய பொன்னையும் மணியையுமே கொடுத்துக் கொண்டும் விற்றும் வந்தமை குறிக்கலாம்.

இவையன்றி அமைச்சு, ஒற்று, தூது, பரத்தைமை என்ற தொழில்களும் குறிக்கப்பெறுகின்றன

ஆட்சிக்கு அமைச்சு மிக இன்றியமையாதது. அது அரசினுடைய பொருளாக்கத்திற்குக் காரணமாதலேயன்றி நாட்டு நலத்திற்கும் வேண்டப் படுவது. உயிருக்குப் பயந்தோ பொருள்விருப்பாலோ பொறியுணர்ச்சி யாலோ நாட்டிற்கும் அரசுக்கும் பழுது எண்ணுதல் ஆகாது. இத்தகைய அமைச்சை, அரசன் வேண்டிய பொருளைக்கொடுத்து அயர்ச்சி இன்றி ஐயப்படாது நடாத்துதல் வேணடும்.

அமைச்சுப்போலவே தூதும் அரசுக்கு இன்றியமையாதது. அதுவும் தன்னரசனுக்குக் கேடுவராமல் பகையரசன் நாட்டுள் புகுந்து அவன் பண்புகள் யாவற்றையும் அறிந்துவந்து சொல்லும் பொறுப்பு வாய்ந்த தொழிலாம். அவனுக்குத் தூய்மையும், சொல்வன்மையும், அன்பும், அறிவும், ஆராய்ந்த கல்வியும் இருத்தல்வேண்டும். தம்முயிர்க்கே அழிவு வந்தாலும் அரசுக்கு அழிவுவாராமல் பாதுகாப்பது அவன் கடமை. அங்ஙனமே ஒற்றும்.

### மக்கள் நாகரிகம் :

நாகரிகம் வேறு; நாகரீகம் வேறு. வள்ளுவர் பெயக்கண்டும் நஞ்சுண்டமைவதாகிய கண்ணோட்டம் நாகரிகம் என்பர். நாகரீகம் மக்கள் சமுதாய வாழ்வில் வளர்ந்த ஆடை, அணி முதலியவற்றைத் தரித்தலால் விளைந்த சீர்திருத்தம். அவைகளைப்பற்றியும் வள்ளுவர் கூறாமல் இல்லை. 'கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்' 'அணியல்ல மற்றுப்பிற' 'மாறுநீர் வையக்கணி' என்பன அணியின் இன்றியமையாமையை விளக்குவன. நல்ல மக்களை நல்ல கலமாக உருவகித்தார். அதனுலும் பெண்களுக்கே

அணிகள் இன்றியமையாதன என்பது காட்டப்பெறுகின்றது. 'மங்கலம் என்ப மனைமாட்சி' என, கற்புடைமகளிர்க்குத் தாலியின் இன்றியமை யாமையைத் தெரிவிக்கிறார். தாலி அடிமைச்சின்னம்; மகளிரை அடிமைப் படுத்த அமைத்த அடையாளம் என்று இக்காலத்துச் சிலர் கூறுவர். பழந்தமிழ்நூல்களில் மறக்குடிக் காளையர் தாம் கொன்ற புலிப்பல்லைத் தாலியாகக்கட்டி மகிழ்ந்தனர் என்று சிலம்பு பேசுகின்றது. அப்பகுதி "புலிப்பல் தாலி நிரைபூட்டி" என்பது. தாலி என்பதற்குத் தொங்குதலை யுடையது என்பது பொருள். தான் ஒரு வீரனுக்கு வாழ்க்கைப்பட்டவள் என்று தன் கணவனது வெற்றிச் சின்னமாகவே மகளிர் அணிந்து மகிழ்ந்தனர். ஆதலால் இது சிறந்த மங்கலப்பொருளாக மதிக்கப்பெற்றது. மங்கலமென்றே வழங்குவதாயிற்று. அதனாலேயே வாழ்க்கைத்துணைநலம் என்று கற்புடை இல்லாளது நலத்தைப் பேசவந்த வள்ளுவர் இறுதியாக 'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு' என்றார். நல்லபிள்ளைகளை நல்லணியாகக் கண்ட வள்ளுவர் மனையாளது மாட்சியையும் அதனோடொருங்குவைத்து எண்ணத்தக்க அணியாகவே கருதியிருக்க வேண்டும் என்பது தெளிவு. ஆதலால் மனையாளது மாட்சியைத் தாலியாக உருவகித்தார். தாலி யணிந்தவளுக்கு மற்றைய அணிகளும் இன்றியமை யாதன ஆதலின் நன்மக்களை வளையும் தோடும் கழுத்தணியும் சீதேவியு மாகக் கண்டார் என்பதே சிறந்த பொருளாதல் காண்க. மங்கலம் என்பது தாலியையுணர்த்தும் என்பதைக் கம்பரும் உருக்காட்டுப் படலத்தில் "மற்றைநல்லணிகள் காண நின் மங்கலங்காத்த மன்னோ" என்று கூறுகிறார். இளங்கோவடிகளும் 'மறுவின் மங்கல அணியே அன்றியும் பிறிதணி யணியப் பெற்றதை எவன்கொல்' என்று கூறியுள்ளார்.

ஆகவே வள்ளுவர் என்றும் பிரியாத நலம்பயக்கும் குணங்கட்குத் தாலியை ஒப்பிட்டதிலிருந்து மகளிர்க்கு அணிக்கெல்லாம் அணியாக இருப்பது தாலியே என்பது கருத்தாதல் தெளியலாம். வீரசுவர்க்கம் விரும்பும் வீரர்கள் கழலணிதல் அழகுக்கே என்பதால் வீரர்கள் கழலணி தலை விளக்கியவாறு.

வேந்தர்கள் தமது ஆட்சியின் நேர்மைக்கு அறிகுறியாகச் செங் கோலை ஏந்துவர் என்பது பல இடங்களிற் குறிக்கப்பெறுகின்றது. உடை யினது இன்றியமையாமையை 'உடுக்கை இழந்தவன் கைபோல' என்ற உவமையால் விளக்குவர்.

**மக்களின் பாகுபாடு:**

மக்கள் அனைவரும் பிறப்பால் ஒப்பர்: தொழிலால் மாறுபடுவர் என்பது குறளின் பொதுக்கருத்து. ஆகவே தொழிலால் மக்களுள் பாகு

பாடுகள் ஏற்பட்டன. இந்நூலில் பார்ப்பார், அந்தணர், உழவர், அரசர், ஆயர் முதலிய பெயர்கள் குறிக்கப்பெறுகின்றன. இவற்றுள் அந்தணர் என்ற சொல்லாட்சி மக்களைக் குறிப்பதாக இரண்டிடங்களில் வந்துள்ளன. முதலாவது அந்தணரியல்பு இதுவென இலக்கணம் வரையறுக்கின்றது. 'அந்தணர் என்போர் அறவோர்' என, இச்சொல் காமவெகுளி மயக்கங்களை முற்றத்துறந்த முனிவர்களையே குறிப்பதாகும். பின்பாதியில் அதன் காரணத்தை விளக்குகிறார் 'எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக லான்' என. இவ்வுயிர் எம்போன்ற மக்களுயிர், மாட்டுயிர் என வேறுபாடு கருதாது எல்லா வுயிர்களிடத்தும் ஒத்த கருணையைக்காட்டி ஒழுகுதலால் அந்தணர் எனப்பட்டனர் என்று தெரிகிறது. இவ்வந்தணர்கள் தற்காப் பிற்காகவாவது தன்னலத்தைச் சிறிதும் பேணாது உலக உயிர்களையே கருணையால் காப்பவர்களாதலின் அவர்களையும், அவர்களால் வரையறுக்கப் பெற்ற அறநூல்களையும் பாதுகாக்க மன்னன் வேண்டும். இதனை 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்' என்கிறார். இரண்டிடங்களிலுமே அந்தணர் முனிபுங்கவர்களே என்பதும், அவர் களது சிறப்பியல்பு தண்ணளியுடையராதல் என்பதும் தெரிவிக்கப் பெற்றன. நச்சினார்க்கினியர் 'அந்தத்தை அணவுவார் அந்தணர் என்றா யிற்று' என்பர். அங்ஙனமாயின் அந்தம் என்ற மகர ஈற்று வடசொல் மகரம் கெட்டு அந்த அணர் என்பன தமிழ் விதிப்படிப் புணருமாயின் அந்த வணர் என்றும், வடமொழிவிதி பெறுமாயின் அந்தாணர் என்றும் புணர வேண்டும். ஈண்டு வருமொழி அகரம் விகாரத்தாற்றொக்கு அந்தணர் என்றாயிற்று என அமைதி எண்ணத்தகும். எல்லார் கருத்திலும் அந்தணர் ஞானுபூதி யுடையவர்களையே உணர்த்தி நிற்றல்தெளிவு. இச்சொல் பிறர் யாருக்கும் இல்லாத அழகிய தட்பத்தினை யுடையவராதல்பற்றியே கடவுளுக்கும் பெயராயிற்று. 'கடவுளை அறவாழி யந்தணன்' என்றது காண்க.

பார்ப்பான் என்பது சாதிப் பெயராகவே காட்டப்பெறுகின்றது. அவர்களுக்குரிய கடமைகள் வேதமோதுதலும், ஒழுக்கமுடையராதலும். வேதத்தை மறந்தாலும் ஓதிக்கொள்ளலாம்; ஒழுக்கந்தவறின் பிறப் பானும் உரிமை இல்லை. ஆகவே பார்ப்பான், அரசன், வணிகன் முதலியன பிறப்பினால்வந்தன என்பதும், அவை ஒழுக்கம்தவற இழிவுபடும் என்பதும் தெளிவுறுத்தப்படுகின்றன.

ஆயர் குழுஉ தும் இயல்பினர். உழவரே உலகத்திற்கு அச்சாணி யாக இருப்பவர்கள். மன்னனின் கடமைகள்பல அரசியலில் அறிவிக்கப் பெறுகின்றன. அவனுடைய தொழில்பற்றியும் தன்மைபற்றியும் அரசன், வேந்தன், மாநில மன்னன் என்ற பெயர்கள் வழங்குகின்றன.

சடங்கு :

மக்கள் உயிர்வாழ்வையும் உலகியல்வாழ்வையும் ஒன்றுபடுத்தியே நாள்வாழ்க்கையை நடத்தியவர்கள். இவையே சடங்காயின. அன்றுட வாழ்விலும் அவர்கள் கடவுணிலையைக் கலந்தமையால் அவர்கள் உணவு நைவேத்யமாயிற்று. பண்டிகைகள் கடவுள் வணக்கத்திற்குரிய சிறந்த நாள்களாயின. சடங்கு மனவமைதிக்கும், மகிழ்ச்சிக்கும், தமது வருங் கால விளைவுக்கும் வழியாகப் போற்றப்பெற்றன. அத்தகைய சடங்கு களில் வேள்வி, தென்புலத்தாரைப்பேணல் இரண்டும் சிறந்தன. இவற்றையே வள்ளுவர் குறிக்கின்றார்.

அவற்றுள், வேள்வி என்பது தெய்வங்கள் விரும்ப இயற்றப் பெறுவது. தேவர்கள் தீயை வாயாக உடையவர்கள். அவர்களை மகிழ் விக்க வேண்டுமாயின் அவர்களுக்கு விருப்பமான அவி முதலிய உணவுப் பொருள்களை நெருப்பிலிட்டு அவர்களுக்கு ஆக்கவேண்டும். இந்த வேள்வி களால் இம்மைக்கு வேண்டிய பொன்னும் புகழும், மறுமைக்கு வேண்டிய புத்தேளுலகமும் சித்திக்கும். இந்த வேள்விகளில் யாகப்பசுக்களைக் கொன்று செய்வதும், அவி முதலியன அளித்துச் செய்வதும் என இரு வகையுண்டு. இங்ஙனம் இயற்றும் ஆயிரம் வேள்விகளின் பயனைக் காட்டிலும் ஒருயிரையும் கொன்றுதின்னுமை நன்று என்கிருர் வள்ளுவர். இதனுல் வேள்விகளையும் அவற்ருல் எய்தும் பயனையும் உட்கொண்டு அவற்றைக்காட்டிலும் கொல்லாவிரதத்தின் மேன்மையைக் குறித்துக் கொள்ளச் செய்கிருர். அந்தக்குறள் 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத் துண்ணுமை நன்று' என்பது. இக்குறட்குச் சிலர் ஆயிரம் யாகங்கள் செய்வதைப்போலக் கொல்லாமையும் நன்று எனப் பொருள் காண்பர். 'கொலைவினையராகிய மாக்கள்' என்ற பகுதிக்கு விசேடவுரை எழுதிய பரிமேலழகர் 'கொலைவினையர் என்றதனுல் வேள்விக் கட் கொலையன்மை அறிக' என்பர். இதனுல் வேள்விக்கட் கொலையுண்டு என்பதும், அது பாவமன்றென்பதும் அறிவிக்கப்பெறுகின்றன. கொலை நிகழ்த்துவது கடவுட்காயின் பாவமாகாது என்பதைக்காட்டிலும், கொலையே இல்லாமலிருக்கும்நிலை பெரிது என்பதே வள்ளுவர் துணிவு.

**தென்புலத்தாரோம்பல்:** இதுவும் இறந்தாரைக் குறித்து அவ ரவர்களுடைய மக்களால் செய்யப்படும் கடன். இதனைச்செய்யும் வழிகள் பல உண்டு. இறந்த வீரனுக்காக நடப்பட்ட கல்லுக்கு இறந்தநாளில் பூச்சூட்டி, புகைகாட்டி, பொங்கலிட்டு எல்லாருடனும் இருந்து உண்டதாக வரலாற்றுச்செய்தி வழிவழிவருகிறது. அதுவும் இறந்தார்க்குச் செய்யும் கடனே. பரிமேலழகர் தென்புலத்தார் என்பதற்கு 'அயனால் படைக்கப்

பட்டதோர் கடவுட்சாதி' என்று உரைகாண்பர். இக்காலத்துச் சிலர், இறந்தார்க்குச்செய்யும் இந்தக் கடனை வள்ளுவர் கூறியிருக்க முடியாது தென்புலத்தார் என்ற சொல் தென்னாட்டிலுள்ள அறிஞரையே உணர்த்தும் ஆகவே அறிவாளிகட்குச் செய்வதும் ஒரு வேள்வியே என்பர். வேள்வி என்ற சொற்கு வள்ளுவர் காணும்பொருள் உபகாரம் என்பது. அதனை 'விருந்தோம்பி வேள்வி தலைப்படாதார்' என்ற குறளில் விளக்குவர். இதனை விருந்தில் அடக்கலாமாதலால் வேறு கூறவேண்டுமோ என்று மறுப்பர் சிலர்.

## ஆசிரமப் பாகுபாடுகள் :

மக்களுடைய ஒழுக்கத்தைப்பற்றி நால்வகை நிலைகள் பிரிக்கப் பட்டுள்ளன. அவை பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சன்யாசம் என்பன. பழந்தமிழ் நூல்களிலும், தொல்காப்பியத்தும், இல்லறநிலையும் துறவறநிலையும் காணப்படுவதால் வள்ளுவரும் இரண்டாக வகுத்தனர். பரிமேலழகர் 'அதுதான் நால்வகைநிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடு உடைமையின் சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித்துப் பொது இயல்புபற்றி இல்லறம் துறவறம் என இருவகைநிலையாற் கூறப்பட்டது' என்பர். இவ்விருநிலையும் தவிர பிரமசரியமும், வானப்பிரத்தமும் பெரும் பான்மைபற்றிய வழக்கு அன்று என்றும், வருணந்தோறும் வேறுபாடு உடையது என்றும் பரிமேலழகரே கூறுகிறார்.

## தெய்வப்பெயர்கள் :

புத்தேள், புத்தேளிர், வானோர், வானத்தவர் என்ற பெயர்களால் தேவர்கள் குறிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தலைவன் இந்திரன் என்பதும், அவன் சாபமடைந்த வரலாறும் 'இந்திரனே சாலும் கரி' என்பதனால் அறியப்பெறும். மக்களுக்கு இச்சைவளர்க்கும் தெய்வமாகக் காமன் விளங்குகிறான் என்பதை 'காமன் ஒருவர்கண் நின்றொழுகுவான்' என்றபகுதி காட்டுகிறது.

திருமால் அடியளந்தான் என்றபெயரால் அழைக்கப்படுகின்றார். ஊக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் தெய்வமாகத் திருமகளும், சோம்பலுக்கும் பொருட்கேட்டிற்கும் தெய்வமாகத் தவ்வையும் குறிப்பிடப்படுகிறார்கள். மக்கள் துன்ப இன்பங்களை நுகர்வது அவரவர்கள்செய்த நல்வினை தீவினை களால் என்பதும் அவைகளை அவ்வவர்களுக்கே வகுத்தளிப்பது ஊழ்வினை என்பதும் 'தெய்வம்' 'வகுத்தான்' என்றபெயர்களால் அறிவிக்கப்படுகிறது. மக்கள் செய்யும் அறங்களுக்கு அளந்து பயன்கொடுப்பது அறக்கடவுள்

என்பது 'அறம் சூழும்' என்பதால் அறிவிக்கப்பெறுகின்றது. வினை யுலந்தபோது உடலையும் உயிரையும் கூறுபடுத்தும் கடவுள் கூற்றம் என்பது இந்நூலில் ஐந்து இடங்களில் அறிவிக்கப்படுகின்றது. வருத்தும் தெய்வங்களாகிய பேய், அலகை, அணங்கு முதலியவைகளும் குறிப்பிடப் படுகின்றன. இவற்றால் வானுலகம் உண்டு என்பதும், மக்கள் தாம்செய்த புண்ணியப் பயனைமட்டும் நுகருமிடம் அது என்பதும், இச்சைத்தெய்வம் காலத் தெய்வம் ஊழ்த்தெய்வம் பேய்த்தெய்வம் பொருள்தெய்வம் முதலிய தெய்வங்கள் உண்டென்பதும் குறளால் குறிக்கப்படுகின்றன.

செம்பொருள் :

தொல்காப்பியத்து 'மாயோன்மேய' என்ற சூத்திரத்தால் திணைக் கடவுள் தெரிவிக்கப்பட்டது. கந்தழி என்பதால் ஒளிவடிவாய் ஒருபற்று மற்றுத் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருளாகிய பரம்பொருள் உணர்த்தப்பெற்றது. அவ்வாறே வள்ளுவரும் பிற தெய்வப்பெயர்களை உணர்த்தி, பரம்பொருளைச் செம்பொருள் என்ற பெயரால் சிந்திக்கச் செய்கிறார். அறியாமை நீங்க அறிவு உண்டாகும். அவ்வறிவு சிறப்பு என்னும் செம்பொருளைக் காண்பதற்கு ஏதுவாகும் என்பது அவர் முடிபு. அந்தச் செம்பொருள் அறிவாய் - அருவாய் இருப்பதால் அழிவற்றது என்பதை உணர்த்த மெய்ப்பொருள் என்றும் பெயர் சூட்டுகின்றார். செம்பொருளைக் கண்டவர்க்குப் பிறப்பில்லை என்பதும், பேரின்பம் நிலைபேறுனது என்பதும் அவரது முடிபுகள். அத்தகைய கடவுளுக்கு உணர்த்த உணராத இயற்கையறிவுடைமையும், விருப்பு வெறுப்பு இன்மையும், இயல்பாகவே பாசங்களின் நீங்கியமையும், தூய அறிவினை ஞுதல் முதலிய எட்டுக் குணங்களை உடைமையும் இயல்பு என்பது கடவுள் வாழ்த்தில் பேசப்படுகிறது. பரம்பொருளின் பெயராக ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினன், இறைவன், பொறிவாயிலைந்தவித்தான், உவமையில்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான் என்பன அறிவிக்கப்படுகின்றன. இறைவன் என்றபெயர் உலகியலில் அரசனுக்கும் வழங்குகிறது. அப்பொழுது ஆறிலொருபங்கை அரசிறையாக வாங்குவ தால் உண்டானது. கடவுளுக்கோ எல்லா ஆன்மாக்களிடத்தும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் தங்குதலையுடையவர் என்ற காரணத்தால் வந்தது. இறுத்தல் - தங்குதல். இறை - தங்குதலையுடையது. ஐ - வினைமுதற்பொருள் விகுதி. இன்னும் இறைவனது முழுமுதற்றன்மையும் எளிமையும் இரு குறள்களால் உணர்த்தப்படுகின்றன.

போர்க்கருவிகள் :

மக்களுடைய அரசியல் வாழ்க்கையில் தற்காப்புமுறை மிக இன்றியமையாதது. அவற்றிற்குத் தேவையாவன போர்க்கருவிகளும்,

படையமைக்கும் முறையும், வில், அம்பு, தோட்டி, வாள், வேல், புதை, எஃகு என்ற கருவிகளும குறிப்பிடப்படுகின்றன. படையினியல்பு படைமாட்சி படைச்செருக்கு என்ற இரண்டு அதிகாரங்களால் உணர்த்தி, படையின் வகைகளாகத் தூசிப்படை தொல்படை என்ற இருபெயர்களைக் குறிப்பிடு கின்றார். தொல்படையை மூலபலம என வழங்குவர் பிற்காலத்தார். இது வழிவழியாக ஒரு வேந்தனுக்கே உரிமைபூண்டுவரும் படை.

உணவு:

உணவு, கூழ் என்ற பெயரால் வழங்கப்பெறுகிறது. உபசார வழக்கால் சாவாமருந்து, அமிழ்தம் என்ற பெயராலும் பல இடங்களில் அறிவிககப்படுகின்றன. சுவை மிகுதிக்காகவும், செரிப்பதற்காகவும் உணவைச் சமைத்துண்டலாகிய வழக்கத்தைப் பல இடங்களில் காட்டிச் செல்கிறார். புலவியைப்பற்றிப் பேசும்போது 'உப்பு அமைந்தற்றாற் புலவி' என்கின்றார். உப்பு மிகுந்தால் சுவைக்கேடு; குறைந்தால் சுவைகுறைவு. ஆகவே அளவோடிருத்தல் வேண்டும். இதனால் சுவைபடச் சமைத்தல்முறை குறிப்பிடப்படுகின்றது. புலால்மறுத்தல் என்கின்ற அதிகார அமைப்பே புலாலும் உணவுவகையில் ஒன்றாக இருந்தமையைத் தெற்றெனககாட்டும். ஏழைகள் தண்ணீரில் புல்லரிசையையிட்டுக் கஞ்சி யாகக்காய்ச்சி உண்பதை 'தெண்ணீர் அடுபுற்கை' என்ற சொற்றொடர் காட்டும். புற்கை - புல்லரிசி உணவு. இக்காலத்து, குழைத்தமாக்கூழுக்குப் பெயராக வழங்குகிறது.

கனி, காய் உணவுகளும் குறிப்பிடப்படுகின்றன. கள் பழங் காலத்து வீரபானமாகவும் காமபானமாகவும் கருதப்பெற்று வந்தது. இது எல்லை கடந்து எல்லாராலும் குடிக்கப்பெற்ற காலத்து அறிவையுங் கெடுத்து ஆண்மையையும் அழித்தலின் நீதிநூல்கள் பெரும்பாலும் தடை செய்வவாயின. அளவுககு மீறிய கள்ளுண்டலால் ஒளியழியும்; நாணங் கெடும்; அறிவழியும்; மனத்தில் உள்ள மறைகள் எல்லாம் வெளிப்படும்; ஆதலால் கள்ளுண்பவனைத் தாயும் விரும்பாள்; பெரியோர் வெறுப்பர். அன்றியும் அவர்கள் இறந்தவர்களேயாவர் என்று குறள் இழித்துரைக் கிறது. கள் குடிப்பது பெரும்பாலும் தன்னை மறந்து களிப்படையவே என்பதை 'களிமகிழ் செய்தலாற் கள்ளினும் காமம் இனிது' என்ற பகுதி அறிவிக்கிறது. ஆகவே கவலையை மறந்து களிப்பதற்கே இது உண்ணப் பட்டமை தெளிவு. மேலும் ஒருமுறை உண்டு களித்தவன் மேலும்மேலும் உண்ண விரும்புவான் என்பதைக் 'களித்தார்க்குக் கள்ளற்று', என்ற உவமை நன்கு விளக்கும்.

தேவர்களுக்குக் கொடுக்கப்பெறும் உணவு அவியென்ற பெயரான் அழைக்கப்பெறுகின்றது. 'அவியுணவின் ஆன்றோர்' என வழங்குதல் காண்க. அவி - அவிக்கப்பெற்ற உணவு. உப்பின்றி யிடப்பெற்ற சோற்றிற்கு இப்போது வழங்கப் பெறுகின்றது. சிலர் ஹவிஸ் என்பது தமிழில் அவியாயிற்று என்பர்.

காடியென்பது புளிப்பேறிய பழஞ்சோற்றுநீர். இதில் உப்பிட்டுக் குடித்தல் மரபு.

ஊர்திகள் :

வள்ளுவர் குறிப்புக்களால் மக்கள் நிலத்திலும் நீரிலும் இயங்கியமை அறிவிக்கப்பெறுகின்றன. நிலத்தில் மக்கள் ஊர்ந்தன தேர், வண்டி, சிவிகை என்பன. நீரில் ஊர்ந்தது தோணி. இவற்றுள் தேர் அரசரும் பிறரும் ஊர்வன. அரசர் ஊருந்தேர்க்கு நெடுந்தேர், உருள்பெருந்தேர் என்பன அவரால் ஆளப்படும் தொடர்கள். தேர் உறுப்பாக அச்சு, ஆணி, கால் (சக்கரம்) என்பன குறிக்கப்பெறுகின்றன. நீரில் இயங்குவன நாவாய், தோணியென அழைக்கப்பெறுகின்றன. தோணிகட்கு அபாயம் வந்தபோது மக்கள் தப்ப ஏமப்புணை பயன்படுத்தப் பெற்றது. ஏமப்புணையை இக்காலத்தார் Life Boat என்பர். இது உருவத்திற் சிறியதாக ஒவ்வொரு தோணியிலும் நாலைந்து இருக்கும். சிவிகை மக்கள் சுமக்க இயங்குவது. வளை மூங்கிலாலானது. கீழ் தொட்டில்போன்ற உருவமுடையது. இதனை ஊர்வோர் முற்பிறவிகளிற்செய்த புண்ணிய மிகுதியுடையார் என்பது வள்ளுவர் கருத்து. சாகாடு அல்லது வண்டி பாரமிழுப்பதற்குப் பயன்பட்டமையே குறளில் குறிக்கப்பெறுகின்றது.

விளையாட்டு :

உழைத்துக் களைத்த மக்களுக்கு உல்லாசமானதொரு செயல் வேண்டப்பெறும். அதுவே விளையாட்டு. அவற்றுள் சூதாட்டத்தைப்பற்றி மிகப் பேசுகிறது குறள். சூதாடல், வட்டாடல், கவறு என்ற பெயர்களால் அழைக்கின்றது. விளையாட்டிற்காகத் தொடங்கப்பெற்ற இது வினையாகப் பொருளழிவிற்கும், பகைக்கும், காலக்கொலைக்கும் காரணமானபோது நீதிநூல்கள் அவற்றைக் கடியவேண்டியதாயிற்று. ஆதலால் சூதினை மிக வன்மையாகக் கண்டிக்கிறது இந்நூல்.

கலை :

கருத்து வளர்ச்சி கலையில் இருக்கிறது. மன ஒருமைப்பாடு வளர்வது கலையாலேயே. அதனால் கூத்தியற்கைகளும் இசைக்கலையும் அவற்றிற்குரிய கருவிகளும் அவற்றின் அமைப்புங்கூட அங்கங்கே உவமானமாக

எடுத்துரைக்கப் பெறுகின்றன. அவற்றுள் கூத்து இசையமுதமுடையதாக எல்லோரையும் பிணிப்பது. மக்களனைவரும் அதனை விரும்புவர். உலகில் செல்வம் குவிதற்கு உவமையாகக் 'கூத்தாட் டவைக்குழாத் தற்றே' எனக்கூட்டம் கூடுதலை உரைக்கின்றார். இதனால் நாடகத்தை மக்கள் விரும்புவதும் கூடுவதும் உணர்த்தப்பெறுகின்றன. அதில் பொம்மையாட்டம் என்னும் பாவைக்கூத்து விதந்து கூறப்பெறுகின்றது.

## இசை :

பாடலும் பண்ணும் பருந்தையும் நிழலையும் போலப் பிரிவில்லாதன என்று ஆன்றோர் கூறுவர். பாடல் பா என்பன ஒரு பொருட் கிளவிகள். 'பா என்பதற்குப் பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை' எனப் பொருள்காண்பர். ஒருவன் பாடும்போது ஓரெழுத்திற்கும் மற்றோரெழுத்திற்கும் இசைவிப்பதாக இருக்கும் இசையே பா. அத்தகைய பாவை நன்குபண்ணி உயர்த்தித்தாழ்த்தி மட்டஞ்செய்து பாடும்போது உண்டாகின்ற அலங்காரங்கள் பண். பண் அணி என்ற பொருளில் வருவதைப் பலரும் அறிவர். ஆகவே பண் என்பது செவிக்கினிமையாகப் பண்ணப்படுவது என்பது வெளிப்படை. 'பண்ணென்னும் பாடற்கியைபு இன்றேல்' என்னும்போது பாடற்கு இயைபுடையது பண் என்பது வற்புறுத்தப்பெறுகின்றது. இப்பண்ணை அமைத்துப்பாடும் கருவி குழலும் யாழும். குழல் யாழ் என்ற சொல்லிலேயே ஒரு குழைவு இருக்கின்றது.

யாழ் சகோடயாழ், பேரியாழ், சீரியாழ் முதலாகப் பலவகையாக அமைக்கப்பெற்றிருந்தது. இரண்டுமே கருவியிசை. யாழ் உருவத்தில் வளைவாயினும் இசையில் இனிமை பயப்பது. 'குழலினிது யாழினிது என்ப' என்று பிறர்கூற்றாகவைத்து இவையிரண்டுமே இனிமையான இசைக்குப் பேர்போனவை என்கின்றார். பறையைக் கேட்டவுடன் அசுணம் மயங்கி வீழ்ந்திறக்கும் என்பது குறிப்பிடப்பெற்றுள்ளது. 'பறைபட வாழா அசுணமா' என்பது அதற்கு மேற்கோள். அசுணப் பறவை பிடிப்பவர்கள் முதற்கண் இனியயாழை வாசிப்பர். இசையில் மெய்ம்மறந்து இருக்கும்போது பறையைக்கொட்டுவர். இன்னிசையில் மயங்கியிருந்த அது பறையோசைகேட்டு ஆற்றாது வீழ்ந்திறக்கும்.

## சித்திரம் - சிற்பம் :

நுண்கலைகளில் சித்திரம் சிற்பம் ஆகிய இவையிரண்டும் மிகச் சிறந்தன. இவை கண்விருந்தாய்க் கருத்தைக் கவர்வன. ஆதலால் இவை செய்வாரைக் கண்ணுள்வினைஞர் என்று பெயரிட்டழைத்தனர் பழந்தமிழ் மக்கள். இந்தக் கலைகளின் நுட்பங்களையும் வள்ளுவர் குறிப்பிடாமலில்லை.

'எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல்' என்ற உவமையால் சித்திரக் கலையின் ஒரு நுட்பத்தை விளக்குகிறார். ஓவியம் எழுதுபவன் ஓவியம் தீட்டும்போது கருத்து கைவழியே சென்று தூரிகையால் வழிவதைச் சரிபார்க்கக் கண்ணேட்டத்தைச் செலுத்துவானேயன்றி, எழுதுங்கோல் இயக்கத்தைக் கவனியான். இதனுல் மனப்படத்தைக் கை எழுதக் கண் சரிபார்த்து ஒத்துக்கொள்ள இயங்குவதே சித்திரக்கலை என்பது தெரிவிக்கப் பெறுகின்றது.

சிற்பம் என்பது கருத்தை முழு உருவாக்குவது. அதற்குப் பண்டையோர் மண்ணையும் மரத்தையும் பயன்படுத்திவந்தனர். 'மரப் பாவை நாணுல் உயிர்மருட்டியற்று', 'மரப்பாவை வந்தற்று' என்பதால் மரத்தாற் பாவைசெய்து கைகால்மூட்டுக்கள் அமைத்துக் கயிறுகட்டி ஆடி அசையவைத்த சிற்பத்திறன் தெரிவிக்கப்பெறுகின்றது. மண்ணுல் பாவைசெய்தலை 'மண் மாண் புனை பாவை' என்ற குறட்பகுதி நன்கு விளக்கும். மண் என்பதற்குச் சுதையெனப் பொருள்கொண்டார் பரிமேலழகர். சுதைப்பாவைகள்செய்வோர் பாவை உறுதியாகநிற்க, உள்ளீடாக மரங்களைச்சீவி இணைத்து மேல்சுதையப்பி அழகுசெய்வது வழக்கம். இதனை 'மண்ணேடியைந்த மரத்தனையர்' என்றபகுதியால் அறியலாம். இதற்குப் பரிமேலழகர் வேறுரைகண்டாராயினும், மணக்குடவர் பரிப்பெருமாள் கருத்துப்பற்றி இது அறியப்பெறுகின்றது. கண்ணின் தன்மை கண்ணேட்டம்; அஃதில்லாதவர் மரப்பாவையை ஒப்பர். மண்பூசிய மரப் பாவைக்கும் அழகிய கண் இருக்கும். இருந்தும் பயனில்லை; அதுபோலவே இவர்கட்கும் என்பது தெளிந்த பொருளாகின்றது.

**உடை :**

மக்களுக்கு உணவைவிடச் சிறந்த தேவை உடை. மனிதனுடைய மானங்காப்பதற்கே மிகத் தேவை என்பது வள்ளுவர் கருத்து. ஆடை அழகுக்காக உடுத்தப் படுவதன்று. இதனை, சீரிய நட்பிற்கு உவமையாக எடுத்தாளுமிடத்து 'உடுக்கையிழந்தவன் கைபோல' என்று காட்டுகிறார்.

**இடவகைகள் :**

விலங்குகள் பதுங்குமிடம் புதல். விலங்குகளையும் பறவைகளையும் பிடிக்கும் வேடர்கள் இதனையே தமக்கு உறைவிடமாகக் கொள்ளுவர். இது புதர் எனவும் வழங்கும். இதனையே திருவள்ளுவர் 'புதல் மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த்தற்று' என்கின்றார். பலரால் மிதிக்கப்படும் வீட்டு முற்றம் அங்கணம் என்று அழைக்கப்படுகிறது. ஏழைமக்கள் வாழும் இட நெருக்கமான குடிசையைக் குடங்கர் என்றழைக்கின்றார். குடங்கம்

'என்பது வளைந்த இடம். அது குடங்கர் எனப் போலியாயிற்று: இவையன்றி நிலப்பாகுபாட்டை ஒட்டி வன்பால் என்றும், குன்று என்றும், கடல் என்றும், புலம் என்றும், களர் என்றும் பெயர் வழங்குகின்றார். அணி நிழற் காடு என்ற சொற்றொடர் அரண் என்ற அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. அது பகைவர் உட்புகாதவாறு தடுத்து நிற்கும் காவற் காட்டை உணர்த்துவது. அவை என்பது அறிஞர் பலர் கூடியிருக்கும் இடம். அவைக்கு மதிப்பு அதிற் கூடியிருப்பவர் தகுதியைப்பொறுத்தே யமையும். அதனை நல்லவை புல்லவை என் இரண்டாகப் பிரிக்கின்றார்.

## காலப் பெயர்கள் :

காலப் பெயர்களாக நாள், காலை, பகல், மாலை, இரா, யாமம் முதலிய சிறு பொழுதுகளின் பெயர்களும், கணம் என்னும் கால அளவையும் குறிக்கப்பெறுகின்றன.

## அளவைப் பெயர்கள் :

வள்ளுவர் சிற்றளவு பேரளவுக்குத் தினை பனை என்ற பெயர்களைப் பெரும்பாலும் எடுத்தாளுகிறார். நிறுத்தலளவைப் பெயர்களாகத் தொடி, கஃசு, குன்றி என்பன குறிக்கப்படுகின்றன. அவற்றுள் தொடி என்பது ஒருபலம். கஃசு என்பது காற்பலம். குன்றி என்பது நிறுத்தலளவையுள் மிகச் சிறிய அளவு. நிறுத்தலளவைக்குப் பயன்படுத்தப்பட்ட கருவி தராசு. இதனைச் 'சமன் செய்து சீர்தூக்கும் கோல்' என்று வழங்குகிறார். நீட்டலளவைக்கும் கோல் என்ற பெயர் வழங்கப்பெறுகின்றது. 'நீட்டியளப்பதோர் கோல்' என்ற பகுதி அதனை அறிவிக்கும்.

## நீரும் நீர்நிலைகளும் :

நீர் உயிர்களுக்கு இன்றியமையாதது. மக்கள் வாழ்வு ஐம்பெரும் பூதங்களையும் கொண்டியங்குவதாகலின் நிலம் நீர் முதலிய பூதப்பெயர்கள் யாவும் தமிழ்ச்சொற்களேயாதல் தெளிவு. நீரின் இன்றியமையாமையை உணவாகவும், அமிழ்தாகவும், ஒழுக்கச் சாதனமாகவும் பயன்படுவதை, வான் சிறப்பில் காட்டுகிறார். உணவுத் தானிய வளர்ச்சிக்கு இது பயன் படுவதை, நீரில்லையானால் உழுதொழில் நடவாது என்று காட்டிய வள்ளுவர், தாவர வளர்ச்சிக்கு நீர் இன்றியமையாதது என்றும், நிலவளம் மட்டும் தனியாகப் பயிரை வளர்க்காது; நிலத்திலுள்ள சத்துப் பொருள்களைக் கரைத்துக்கொடுக்க நீர் இன்றியமையாதது என்பதை விளக்க 'நிலத்தொடு நீரியைந்தன்னார்' என்றும் கூறியன அறிந்து இன்புறுதற்குரியன.

குறளிற் குறிக்கப்பெறும் நீர்நிலைகள் கடல், ஊருணி, மணற்கேணி, குளம் என்பன. இன்னார் குடிக்கலாம் இன்னபோது குடிக்கலாம் என்ற வரையறையில்லாது எப்போதும் எல்லார்க்கும் பயன்படுந்தன்மை ஊருணிக்கு உண்டென்றும், தோண்டிய அளவாக நீர் சுரப்பது மணற்கேணி என்றும் அவற்றினியல்புகள் நன்கு விளக்கப்பெறுகின்றன. கடல் பெரிதாயிருப்பினும் மழையில்லையாயின் வற்றும் என்பது வகுக்கப்பெறுகின்றது. அவற்றையன்றி பெரிய மடுக்களை 'நெடும் புனல்' என்கிறார். குடிநீருக்கும் விளைநீருக்குமாக 'மூப்புனல்' கூறப்பெற்றுள்ளது. ஒன்று ஊற்றுநீர்; மற்றொன்று மழைநீர்; மற்றொன்று மலையிலிருந்து வரும் ஆற்றுநீர். நாடு காவலுக்கு வேண்டிய நீர் மணிநீர் எனப் பெறுகின்றது. மணிநீருக்குப் பரிமேலழகர் காணும் உரை எஞ்ஞான்றும் வற்றாதநீர் என்பது. ஆகவே வற்றாத அகழும் குறிக்கப்பெற்றதாம்.

நீரிற்குத் தனியான சுவையும், நிறமும் இல்லை; கலந்த நிலத்தின் தன்மையால் அவற்றை எய்துகின்றது என்பதை 'நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும்' என்பதால் விளக்குகிறார்.

## உடலுறுப்புக்கள் :

அறிதற் கருவிகளாகிய பொறிகள் தொகைப்பெயராகவும், மெய் செவி நா மூக்கு வாய் எனத் தனித்தனியாகவும் எடுத்தாளப் பெறுகின்றன. செய்தற் கருவிகளில் அடி, கை தோல் முதலியனவும், முகம் கன்னம் நுதல் முலை வயிறு தோள் என்பு மயிர் முதலியனவும் இடமிடங்கடோறும் வந்த உறுப்புப் பெயர்கள்.

## பலவகைப்பொருள்கள் :

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாய் ஆட்சியிலிருந்த பொருள்கள் பல வழங்கப்படுகின்றன. அவை கல், உடைமை, எரி, மழை முதலியனவும் சேர்ந்தாரைக்கொல்லியாகிய தீயும், செல்வமும், கோபமும் ஆகிய இவை. சங்கு, விளக்கு, வலை, மேகம், காவுதண்டு, புணை, ஊன்றுகோல், வைக்கோல், உரைகல், கயிறு, மண்கலம், செப்பு, பட்டடை, தூண்டில், நஞ்சு, பள்ளி, பளிங்கு, பிணம், பொன் முதலியனவும் ஆங்காங்கு குறிக்கப்பட்டுள்ளன.

இவையன்றி அகத்துறுப்பாகிய மனம் அகம், நெஞ்சு, உள்ளம் என்ற பெயர்களால் பேசப்படுகின்றது. அறிவு மதி யென்பனவும் ஆளப்படுகின்றன.

மனிதனை மனிதன் என்ற பெயருள்ளவனாக ஆக்கியது மனம். மனத்தின் தொழில் நினைத்தலும் அறிதலும். இந்த இரண்டு வன்மையுமே விலங்கினின்று மனிதனைப் பிரித்து உயர்த்தியது. அந்த மனத்தை மனிதன் அடக்கி அறிவுநெறியில் பலர் போற்றும் பாதையில் நீதியிற் செலுத்தவேண்டும். 'மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்பது உலகநீதி. உலகிலுள்ள நீதிநூல்களும், தத்துவநூல்களும் சொல்வதெல்லாம் மனப்பண்பாட்டிற்குரிய வழிகளையே வகுக்கின்றன; வள்ளுவர் குறளும் அதனையே செய்கின்றது. ஆனால் மாணவன் தகுதியறிந்து உபதேசிக்கும் ஆசிரியன்போல அவரவர்கள் நிலையறிந்து அறிவுறுக்கும் ஆற்றல் தனிச்சிறப்பு. உதாரணமாக மனிதன் துன்பக்காலை யழுவான்; இன்பக்காலை நகுவான் இது இயற்கை; துன்பம் மனிதனுடைய வலியை—உறுதியை யழிக்கும். இன்பம் எல்லாவற்றையும் வளர்க்கும். ஆனால் இரண்டும் கலந்தே வாழ்க்கைப்பாதையில் எதிர்ப்படுகின்றன. மனிதன் துன்பத்தை வெல்லவேண்டும். இன்ப நிலையை எய்தவேண்டும். அதற்குரிய உபாயம் துன்பம் வந்தகாலத்தும் மகிழ்தல் ஒன்றே. இதனை வள்ளுவர் 'இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வது அஃதொப்பதில்' என்கின்றார். அமெரிக்கர் சிரித்துப் பழகுவதையே ஒரு கலையாகக் கொண்டவர்கள். சிரிப்பே பல துன்பங்களை வெல்லும் உபாயம் என்பது அவர்கள் கொள்கை என்கிறார் ஏ. கே. செட்டியார்.

பிறர் தீமைசெய்தவழி யாருக்கும் சினம்வருதல் இயல்பு. அதனால் எதிரியைத் தண்டிக்க எழுவான். அதிலும் அவன் வலி குன்றியவனாயின் சொல்லவேண்டுவதில்லை. அந்த நிலையில் தன்னை அடக்கிக்கொள்ளும் உபாயம் சொல்லுகிறார் வள்ளுவர். 'வலியார் முன் தன்னை நினைக்க' என்று. எவ்வளவு சிறந்த உபாயம் பாருங்கள்.

யாருக்கும் தன்னறிவு உயர்ந்தது என்ற எண்ணங்கூடாது. தன்னிற்பெரியாரைத் துணையாகக்கொள்ளவேண்டும். அவரைப் பொருள் கொடுத்து விலைக்குவாங்கிவிடமுடியாது. அடக்கியாண்டு பணிகொள்ளவும் முடியாது. அவர்களைப் பிணிக்கும்வழி யாது என்பதை வள்ளுவர் 'திறனறிந்து தேர்ந்துகொளல்' என்ற அளவிற் பொதுவாகச் சொன்னார். திறனறிதலாவது அவர்களைப் பாராட்டுதல், அவர்களை உயரச்செய்தல், அவர்கள் வார்த்தைகளைக்கேட்டு மதிப்புக்கொடுத்து நடத்தல், அவர்கள் சொல்லும் ஆலோசனைகளின்படி நிற்றல், அவர்களிடம் உள்ளும் புறம்பும் ஒத்த அன்புடையராக நடத்தல் முதலியன. இதனாலல்லது பெரியோர்கள் பிணிப்புண்ணார் என்பதை உணர்த்தப் பொதுவகையான் 'திறனறிந்து தேர்ந்துகொளல்' எனக் கூறியது எவ்வளவு நுணுக்கமானது.

ஒரு பிச்சைக்காரன் பிச்சைக்குப் போகின்றான். பல்லெல்லாம் தெரியக்காட்டிக் கேட்கின்றான். அந்தவீட்டில் உள்ளவர்கள் இல்லை என்கிறார்கள். அவனுக்கு என்னகோபம் வருகிறது தெரியுமா? வாயில் வந்தபடியெல்லாம் வசவுமொழிகளை வாரி வழங்குகிறான். இங்ஙனம் அவன் செய்தல் அவனுக்குத் தீமையாகிறது. இத்தகைய மனத்தைமாற்றவேண்டும். அதற்கு வள்ளுவர் 'இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை தானேயும் சாலுங் கரி' என்கின்றார். பணம்தேட நாம் எவ்வளவு துன்பப்படுகிறோம். அவ்வளவு துன்பத்தைச் செல்வரும் சில காலத்திலேனும் அடைந்திருப்பாரல்லவா என்று எண்ணிப்பார்த்தால் சினமே வராது என்று சிந்தையைப் பண்படுத்தச் சொல்லுகிறார். பழந்தமிழாசிரியர் ஒருவரும் 'இரவலர், தாம்புறப்பட்டு வரும்போது சகுனம் சரியில்லை காலம் சரியில்லை என்று அவற்றைப் பழிப்பார்களேயன்றிச் செல்வரைப் பழியார்' என்கின்றார். இங்ஙனம் மனப்பண்பாட்டிற்கு வழிசொல்லும் வள்ளுவர் பண்பாடற்ற உள்ளத்தினியல்பும் உரையாமலில்லை. 'இருமனப் பெண்டிர்' என்று பரத்தையரைக் காட்டுகிறார். துன்ப இன்பங்களிலும் துணையாய் நின்று உள்ளும் புறம்பும் ஒத்துக்கொண்டானுக்கு இன்பஞ் செய்யும் மகளிர் ஒன்றுபட்டமனம் உடையவர்கள். கருத்தில் காசாசையும், முகத்தில் காதன்மகிழ்ச்சியுங்காட்டி மனம்வேறு செயல்வேறுபட்ட மகளிர் இருமனப் பெண்டிர். இது பண்பாடில்லாத உள்ளத்தின் படம்.

மனச்சோதனை 'அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின் திறந்தெரிந்து தேறப்படும்' என்றகுறளில் கூறப்படுகின்றது. மனிதன் மறுபிறப்பில் உளதாகும் இன்பத்திலும் புகழிலும் வைத்த ஆசையால் அறத்தில் ஆசை வைப்பான்; இம்மை மறுமை இன்பங்களுக்காகப் பொருளில் ஆசைவைப்பான். இன்பத்துறையில் எளியனாகாத மனிதன் மிக அருமை. எதிலும் ஆசையில்லாவிட்டாலும் உயிரில் ஆசையில்லாதவன் இருக்கமுடியாது. இந்நான்கில் ஒன்றற்கு அரசன் கேடுசூழ்கிறான் நீ அவனுக்குக் கேடுசெய்தாவது-பிரிந்தாவது வந்தால் அவற்றை எய்தலாம் எனின், எவனும் ஏமாந்தேபோவான், இதனால் அவன் நிலைமை ஆராயலாம் என்பது எவ்வளவு சிறந்தசோதனை. இங்ஙனம் பல மனத்தத்துவங்கள் ஆங்காங்குக் காணப்படுகின்றன.

## நலவழிகள் :

மக்கள் மகிழ்ச்சி உடல்நலத்தைப் பொறுத்தது. உடல்நலம் உணவு, நீராடுதல், மனத்தூய்மை, ஒழுக்கம் இவற்றைப்பொறுத்து வளர்ச்சி அடைகிறது. மக்கள் உண்ணும்போது அளவறிந்து உண்ணவேண்டும். உண்டது செரித்தபின் உண்ணல்வேண்டும். அறிவுழைப்பாளன் சிறிது

உண்ணல்வேண்டும் என்ற நியதிகள் வலியுறுக்கப்பெறுகின்றன. உடல் தூய்மையைப்பற்றிப் 'புறந்தூய்மை நீரான் அமையும்' என்கிறார். உடல் உளத்தாற் பாதிக்கப்பெறுமாதலின் மனத்தூய்மையின் இன்றியமையாமையை 'வாய்மையாற் காணப்படும்' என்றார். வாய்மையான் அமையும் என்னாது காணப்படும் என்றதால் வாய்மைவாயிலாக ஏனைய பழிபாவங்கள் எய்தா என்பதும், பொய்யே எல்லாக்குற்றங்களுக்கும் உறைவிடம் என்பதும், அதனை நீக்கவே உளம் தூய்தாம் ஒழுக்கம் தூய்தாம் உடல் நலம்பெறும் என்பனவும் உரைக்கிடக்கின்றன. படுக்கைக்குப் போகும் போது கால்கழுவியே போதல்வேண்டும் என்றது எவ்வளவு சிறந்த சிந்தனை. காலில் நம்மையறியாமலே அசுத்தம் ஒட்டும்; அதனையகற்றியே படுக்கப் போதல் இன்றியமையாதது. நலவழிகளைப்பேணுதலோடு நோய் வருமானால் நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்செய்தல் வேண்டும் என்பது அவர்கூறும் மருந்து.

மகளிர் நிலை :

வள்ளுவர் நேராக மகளிரைப்பற்றிக் கூறும் அதிகாரங்கள் வாழ்க்கைத் துணைநலமும், வரைவின் மகளிரும் ஆகிய இரண்டும். வாழ்வு இயலில் வைத்துக் கூறுவன காமத்துப்பாற் பகுதிகள். ஒருவன் இல்லறத்தை மேற்கொள்வது குடும்ப விளக்கத்திற்காகப் புதல்வரைப் பெறவே என்பதை 'நன்கலம் நன்மக்கட்பேறு' என்றபகுதியால் நயம்பட நவில்கின்றார். கணவனுக்குப் பொருளும், புகழும், புண்ணியமும் பொருந்துவது மகளிராலேயே. ஆதலால் இல்லரசியர் மகளிரே. கணவனுடைய கவலையைத்தீர்க்கும் மருந்து காரிகையார். அவர்களுக்கு நிறையென்னும் படையே தற்காப்புக்கருவி. இத்தகைய பெண்கள்மனம் என்னதானிருந்தாலும் உறுதியற்றது என்பதை 'இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர் மனம்போல வேறுபடும்' என்று உவமையில்வைத்துக் காட்டுதல் சிந்தித்தற்குரியது. வரைவின்மகளிர் என்னும் அதிகாரத்தால் பொது மகளிரியல்பு பேசப்படுகின்றது. வள்ளுவர் மகளிரின் அறிவைப்போற்றுமிடங்கள் பல. மக்களுக்குள்ள பொது அறிவால் எல்லாவற்றையும் நுனித்தறியும் ஆற்றல் அவர்களுக்கு உளதாயினும் தம்மக்கள் அறிவுடைமையைப் பிறர்வாயிலாகக்கேட்டுப் பெரிதும் மகிழ்வர் என்பது அறிவுடைமையின் எல்லையாகும். வாரம்பட்டுழித் தீயவும் நல்லவாய்த் தோன்றுதல் இயற்கை. வாரத்துள் தாய்மையிற் சிறந்ததொன்றில்லையல்லவா? ஆதலால் மக்களிடம் காணும் பெருங்குற்றமும் அன்பால் மூடப்பட்டு, குணமாகப் பாராட்டத்தோன்றும். அறிவுடைய பிறரோ சிறுகுற்றங்காணினும் பெரும் புகழை மறைப்பர். அறிஞர்பெருமக்களுக்குக் 'குற்றமே தெரிவார்' என்பது அருமையாக அமைந்த பெயர் அன்றோ? தமது மக்கள்

அவர்களாலேயே பாராட்டத்தகுந்த அறிவுடையராயிருப்பின் அஃது எவ்வளவு அருமையாகப் போற்றத்தகுந்தது.

**உவமைகள்.**

அருமையான கருத்துக்களை மனத்தைவிட்டகலாமல் செய்தற்குச் சிறந்த சாதனம் அணிகள். இயற்கையெழில் மிகுந்த நங்கைக்கும் அணி இன்றியமையாதது. கருத்தாழம் நிறைந்த கவிதைக்கும் அணி இன்றியமையாதது. அணியில்லாப் பாடல் ஒளியில்லா உடல்போன்றது. அணிகளுக்குத் தாயகம் உவமை. இதன் சிறப்பை உணர்ந்தே அளவை நூலாரும் அளவைகளுள் ஒன்றாகக் கருதினர். எல்லாரும் தம் கருத்தை எளிதில் உணரவேண்டும் என்ற தெய்வப்புலவர்களின் எளிவந்த கருணை இந்த உவமைகளாலேயே இனிது விளங்கும். வள்ளுவர்பெருமான் திருக்குறளில் நூற்றிருபதுக்கு மேற்பட்ட உவமைகளை எடுத்தாண்டிருக்கிறார்.

**அறத்துப்பாலில் குறிக்கப்படுவன :**

இறைவனுக்கு அகரம் 1.

துறந்தார் பெருமையை எண்ணுதற்கு உலகத்து இறந்தாரை எண்ணுதல் 22.

அன்பில்லாத உயிரை அறம் காய்தலுக்குப் புழுவை வெயில் காய்தல் 77.

அன்பில்லாவாழ்க்கைக்குப் பாலையில் வற்றல்மரம் தளிர்த்தல் 78.

இன்சொல் இருக்க வன்சொல் வழங்குதற்குக் கனியிருப்பக் காய் கவர்தல் 100.

பயன்கருதார் செய்த உதவியின் நன்மைக்குக் கடல் 103.

சான்றோரின் நடுவுநிலைமைக்குத் துராசுக்கோல் 118.

பொறியடக்கமுடையார்க்கு ஆமை 126.

செய்தாரை விடாத தீமைக்கு அடிநீங்கா நிழல் 208.

பேரறிவாளன் திருவுக்கு நீர் நிறைந்த ஊருணி 215.

நடுநிலையுடையான் செல்வத்துக்கு உள்ளூரில் பழுத்த மரம் 216.

பெருந்தகையான் செல்வத்துக்குத் தப்பா மருந்து மரம் 217.

அருளாதான் அறம் செய்தலுக்குத் தெருளாதான் மெய்ப் பொருள் காணுதல் 249.

ஊன் உண்பார் மனத்துக்குப் படைகொண்டார் மனம் 253.

துன்பத்தால் வருந்தித் தவஞ் செய்வார்க்குச் சுடச்சுட ஒளிவிடும் பொன் 267.

கூடாஒழுக்கமுடையானுக்குப் பசுத்தோல் போர்த்த புலி 273.

தவத்தில் மறைந்து அவம்செய்வார்க்கு, புதலில்மறைந்து புள் சிமிழ்க்கும் வேட்டுவன் 274.

அகத்தூய்மை தருகின்ற வாய்மைக்குப் புறத்தூய்மையளிக்கும் நீர் 298.

கோபங் கொள்பவன் கேடுறுதலுக்கு நிலமெறிந்தவன் கை நிலத்தில் படுதல் 307.

இன்னைமக்கு எரி 308.

பொருளினது ஆக்கத்துக்கும் அழிவுக்கும் கூத்துமேடையின் கூட்டம் 332.

வாழ்நாளுக்கு வாள் 334.

உடலுயிர் நட்புக்குக் குடம்பையைவிட்ட புள் 338.

பிறப்பு இறப்புகட்கு உறக்கமும் விழிப்பும் 339.

இகழ்வாரைப்பொறுத்தலுக்கு அகழ்வாரை நிலம் தாங்குதல் 151.

விருந்தினருக்கு அனிச்சப்பூ 90.

பொருட்பாலில் குறிக்கப்படுவன :

அறிவாலும் பேசும் பொருளாலும் தமக்கு ஒப்பில்லாதார் அவையிற் பேசுதற்குச் சாக்கடையிற் சிந்திய அமுதம் 720.

நட்டாற்றில் கைவிடுவார்க்குப் போரில் கைவிடும் குதிரை 814.

படிப்பில்லாமல் அவையில்பேசுதற்குக் கோடின்றி வட்டாடுதல் 401.

மக்கட்பண்பு இல்லாதவர்க்கு மரம் 997.

உட்பகையுற்ற குடிக்கு அராவப்பெற்ற பொன் 888.

அவையில் பயன்படாக் கல்விக்குப் அஞ்சுபவன் கைவாள் 727.

அறிவில்லாதவன் அழகுக்கு மண்பாவையின் அழகு 407.

இரகசியங்களை வெளிப்படுத்தும் கயவர்களுக்குப் பறை 1076.

மெலிந்தான் வலிந்தானுக்கு ஊறு செய்தற்கு எமனைக் கையால் அழைத்தல் 894.

விலைமாதர் புணர்ச்சிக்குப் பிணத்தைத் தழுவுதல் 913.

ஒழுக்கம் உடையார் கூறும் உறுதிமொழிக்கு ஊன்றுகோல் 415.

மக்களின் அறிவு இனத்தால் திரிதற்கு நிலத்தியல்பால் நீர் திரிதல் 452.

ஒவ்வாதாருடன் இருத்தற்குப் பாம்போடு குடியிருத்தல் 890.

நட்பினர்க்கு விளையும் துன்பங்களை நீக்கும் நட்பிற்கு உடை யிழந்தவனுடைய கை 788.

ஓயாது அலைக்கும் உட்பகைக்கு மட்பகையாகிய திகிரி 883.

சொல்வதை ஏற்பவரிடம் சொல்லுதற்கு வளர்கின்ற செடிகள் நிறைந்த பாத்தியுள் நீரைச் சொரிதல் 718.

நாண் சால்பிற்கு இன்றியமையாது என்பதற்கு உயிருக்கு இன்றியமையாத ஊண் 1013.

புண்ணுக்கஞ்சா வீரர்க்கு அம்பிற்கஞ்சா யானை 597.

மக்கள் மனம்போல் உயர்வர் என்பதற்கு நீரளவே யாகும் நீராம்பல் 595.

சொல்வன்மையில்லாதாற்கு மணமில்லாமல் பூத்த மலர் 650.

சிறிய அளவிற்கு எள்ளின் பிளவு 889.

முன் எச்சரிக்கை யில்லாதான் வாழ்விற்கு நெருப்பு முன்னர் அழியும் வைக்கோற்போர் 435.

கண்ணோட்ட மில்லாத மக்களுக்கு மரம் 576.

கண்ணோட்டமில்லாத கண்ணுக்குப் பாடலுக்குப் பொருத்த மில்லாத பண் 573.

கல்லாதவர்க்குக் களர் 406.

கல்லாதான் பேசவிரும்புதலுக்குப் பேடிப்பெண் இன்பத்தை விரும்புதல் 402.

மானமழிய வாழாப்பெரியோர்க்கு மயிருதிர்ந்தால் வாழாத கவரி மான் 969.

நிலையினிழிந்த மனிதருக்குத் தலையினின்றுமிழிந்த மயிர் 964.

அறிவாளிகளினவையில் அறிவிலான் புகுதற்கு அலம்பாத காலை படுக்கையில் வைத்தல் 740.

குடிகாரனைத் தெருட்டுதற்கு நீருக்குள் முழுகினவனை விளக்கேற் றிக்கொண்டு தேடுதல் 929.

கல்லாதாருக்கும் கற்றாருக்கும் உள்ள வேறுபாடு விலங்குக்கும் மக்களுக்கும் உள்ளது 410.

கீழோருக்குக் கரும்பு. (1078)

குடிப்பிறந்தார்கண் குற்றத்திற்கு மதிக்கண் மறு 957.

உட்பகையுற்ற குடி கூடியும் கூடாமைக்குச் செப்பின் புணர்ச்சி 881.

சூதில் வெல்லுதற்குத் தூண்டிற் பொன்னை மீன் விழுங்கல் 931.

ஏழைக்குதவாச் செல்வத்திற்கு மணந்துகொள்ளாத அழகி 1007.

முயற்சியில்லாதான் உபகாரத்திற்குப் பேடி கை வாள் 614.

மன்னரைச் சேர்ந்து ஒழுகுவார்க்குத் தீக்காய்வர் 691.

வினைக்குறை பகைக்குறைக்குத் தீப்பொறி 674.

முயற்சியை விரும்புவார்க்குத் தூண் 615.

கயவர்க்குத் தேவர் 1073.

கேள்வியாளர்க்குத் தேவர்கள் 413.

வெட்கமில்லாத மக்களுக்கு மரப்பாவை 1020.

குடிப்பிறந்தார் சொல்லுக்கு மூளை 959.

நிலத்திற்கு மனைவி 1039.

பெரியோர் நட்பின் வளர்ச்சிக்குப் பிறைமதி. பேதையார் நட்பின் தாழ்ச்சிக்கு நிறைமதி 782.

பெரியோர் நட்பிற்கு நூல்நயம் 783.

வஞ்சனையாற் பொருள் செய்தற்குச் சுடாச்சட்டியில் தண்ணீர் ஊற்றுதல் 660.

பகைவர் நட்பிற்குப் பட்டடைக்கல் 821.

முகத்திற்குப் பளிங்கு 706.

பொருட் பெண்டிர் தோளிற்கு நரகம் 919.

பெருமைக்குக் கற்புடைப் பெண்கள் 974.

பேதைபெற்ற செல்வத்திற்குப் பித்தன் கள்ளுண்டது 832.

காட்சிக்கெளிய னல்லாதான் செல்வத்திற்குப் பேய்காத்த பெருஞ் செல்வம் 565.

பகைவர் நட்பு மாறுபடுதற்கு மகளிர் குணம் மாறுபடுதல் 822.

அறிவிற்கு மணற்கேணி 396.

அறிவில்லாதாற்கு மரம் 600.

அவையஞ்சுவார் நூலாற் பயன்பெறுதலின்மைக்குப் பேடி வாளாற் பயன் பெறுமை 726.

தன்குடியிற் பிறந்தாரைப் பொறுப்பவர்க்குப் போரின் வீரர்கள் 1027.

செங்கோல் நோக்கி வாழும் குடிக்கு வான் நோக்கி வாழும் உலகு 542.

ஒரு காரியத்தால் மற்றொரு காரியத்தை முடிப்பதற்கு யானையால் யானையைப் பிடித்தல் 678.

கலந்த உணர்வில்லாதான் வாழ்க்கைக்குக் கரையில்லாக் குளம் 523.

பண்பிலான் செல்வத்துக்குக் கலத்தின் தீமையால் திரிந்தபால் 1000.

பலருக்குப் பயன்படாத செல்வத்திற்கு நச்சுமரம் 1008.

கொடையாளிகளின் வறுமைக்கு வறண்ட மேகம் 1010.

காமத்துப்பாலில் குறிக்கப்படுவன :

கற்புடைமாதர் புணர்ச்சிக்குத் தனதுழைப்பால் வந்த உணவை வீட்டிலிருந்துண்டல் 1107.

கணவன் பிரிவைப் பார்த்திருக்கும் பசப்பிற்கு விளக்கு அவிதலைப் பார்த்திருக்கும் இருள் 1186.

கணவனைக் கண்டவிடத்து அவனது பழிதோன்றாமைக்கு எழுதுங் கால் கோல்காணக் கண் 1285.

புலவிக்கு உப்பு 1302.

காமத்திற்கு வெள்ளம் 1167.

பேருடலுக்குக் கனியும் சிறு ஊடலுக்குக் காயும் 1306.

காமம் வெளிப்படுந்தோறும் மேலும் விரும்பப்படுதற்குக் களித்தொறும் கள்ளுண்டல் 1145.

காமத்துக்குக் காழில் கனி 1191.

மாலைக்கு அழலும் குழலும் கொல்லும் கருவியும் 1228.

அலரால் காமத்தை அவிப்பதற்கு நெய்யால் நெருப்பை அவிப்பது 1148.

நெஞ்சிற்குத் தீயில் இட்ட நிணம் 1260.

மறைத்தாலும் வெளிப்படும் காமத்துக்குக் குறிப்பின்றித் தும்மல் தோன்றல் 1253.

பெண்ணின் புன்னகைக்குப் போதில் மணம் 1274.

புலவிக்கு நிழல்நீர் 1309.

தலைவன் தலைவியர் நட்புககு உடம்பும் உயிரும் 1122.

தலைவியின் புணர்ச்சிப் பொலிவிற்கு மணியுள் திகழும் நூல் 1273.

முலைமேல் துகிலுக்குக் களிற்றின் முகபடாம் 1087.

பிரிவுக்காலத்து மாலைக்குக் கொலைக்களத்துப் பகைவர் 1224.

முடிவுபோகாமை அறிந்தும் புலவி கொள்ளுவார்க்கு ஈர்ப்புச் சத்தியுடைமை அறிந்தும் நீருட்குளிப்பார் 1287.

மகளிர் மேனிக்குத் தளிர், முறுவலுக்கு முத்து, கண்ணுக்கு வேல், தோளுக்கு மூங்கில் 1113.

ஊடியவரை ஊடலுணர்த்தாமைக்கு வாடிய கொடியை வேரரிதல் 1304.

காதலருககுக் காதலர் காட்டும் அன்பிற்குக் குடித்தனக்காரனுக்கு அளவறிந்து பெய்யும் மழை 1192.

தலைவன் தலைவியர்க்கு உள்ள இயைபிற்கு நிலத்தொடு நீர் 1323.

பிற அணிகள்: உவமையை அடியாகக்கொண்டு பிறந்த இல்பொருளுவமை, எடுத்துக்காட்டுவமை, தொழிலுவமம், ஐயநிலை உவமங்களும், குறிப்புருவகம், அவயவ உருவகம், ஏகதேச உருவகம, முதலியனவும், தெரிதருதேற்றம், ஏதுவணி, பிறிது மொழிதல், பின்வரு நிலை, குறிப்புமொழி, வேற்றுமையணி முதலியனவும் இந்நூலில் எடுத்தாளப் பெற்றுள்ளன. அவற்றுள் பிறிது மொழிதல் அணியே வள்ளுவராற் பெரிதும போற்றப்படுகிறது. அது பொருட்பாலிலே எட்டுக்கு மேற்பட்ட இடங்களில் ஆளப்படுகின்றன. அவ்வாறே மிகுதியாக வரும் அணி ஏகதேசு உருவகமாம். அது பன்னிரண்டு இடங்களில் விளங்குகின்றன. பின்வருநிலையணி சொல்லணியாகும். செவிக்கினிய ஓசையதாக வருவது.

அது ஆறிடங்களில் அமைந்துள்ளது. ஏனையணிகள் ஒவ்வோரிடத்தே அருமையாக அமைந்துள்ளன.

புறப்பொருள் துறைகளில் நெடுமொழிவஞ்சி, தழிஞ்சி, நூழிலாட்டு என்பனவும் குறிக்கப்பெறுகின்றன.

ஒருநீதிக்கு ஒருநீதி :

உலகப் பொருள்களையும் அவற்றின் நிகழ்ச்சிகளையும் பண்பு களையும் எடுத்து உவமங்காட்டுதலேயன்றி, ஒருகல்லில் இரண்டு மாங்காய் விழ எறிகின்ற வீரம்போல – கண்ணன் கன்றைக்கொண்டு விளவெறிந்து இருபயன்கொண்டதுபோல, ஒருநீதிக்கு ஒருநீதியையே உவமமாகக்காட்டி இருபயனை எல்லாரும் எய்தவைப்பர் வள்ளுவர். அவற்றைப் பின்வரும் குறிப்புக்கள் நன்குவிளக்கும்.

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை - அருளாட்சி ஊன் தின்ப வர்க்கு இல்லை (252). பொருளில்லார்க்கு இவ்வுலகத்தின்பம் இல்லை - அருள் இல்லார்க்கு மறுமையின்பம் இல்லை (247). தெளிவில்லாதவன் மெய்ப் பொருள் காணமுடியாது, கண்டாலும் பயனில்லை – அருளாதான் செய்யும் அறமும் அப்படியே (249). களவறிந்தார் நெஞ்சிற்கரவு-அளவறிந்தார் நெஞ்சத்தறம் (288). அழுக்காறு உடையான்கண் ஆக்கம் இன்மை-ஒழுக்கமிலான்கண் உயர்வு இன்மை (135). அச்சமுடையார்க்குஅரணில்லை-பொச்சாப்பு உடையார்க்கு நன்கு இல்லை (534). முயற்சி குன்றும் செயல் களைச் சிந்தியாமை - ஆபத்துக்கு உதவாநட்பைக் கொள்ளாமை (798). வறுமை அறிவைக்கொல்லும் - மறதி புகழைக்கொல்லும் (532). இழிவறிந்து உண்பான்கண் இன்பம் - கழிபேரிரையான்கண் நோய் (946). கற்புடை மகளிர் முயக்கு - தம்மில் இருந்து தமது பாத்துண்டல் (1107). உண்பதிலும் உண்டதறல் இனிது - புணர்தலின் ஊடல் இனிது (1326). பேரவைக்கண் சொல்லிழுக்குதல் - ஆற்றின் நிலைதளர்தல் (716). பொருளிழக்க இழக்க விரும்பப்படும் சூது - துன்பப்படப்பட விரும்பப்பெறும் உடல் (940).

புராண வரலாறுகள் :

திருக்குறளில் புராணவரலாறுகளும் சில குறிக்கப்பெறுகின்றன. அவைகளுள் வெளிப்படையானவை சில. குறிப்பாகவுள்ளன சில. 'ஐந்தவித்தான்' (25) என்றகுறளில் அகலிகையை வஞ்சனையால் புணர்ந்த இந்திரன் கௌதமரால் சாபம் எய்திய வரலாறு வெளிப்படையாகவே குறிக்கப்பெறுகிறது. 'மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான், தாஅயது எல்லாம் ஒருங்கு' (610) என்பது திருமால் நெடுமாலாய் உலகளந்தவரலாறு

குறிக்கப்பெறுகின்றது. 'ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து வேந்தனும் வேந்துகெடும்' (899) என்பது இந்திரனாகிய நகுஷன் ஏந்திய கொள்கையினரான அகத்தியரால் சாபம் எய்தியமையைக் குறிப்பது. 'கூற்றங் குதித்தலும கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு' என்பது மார்க்கண்டேயர் வரலாற்றையும், 'என்பும் உரியர் பிறர்க்கு' என்பது ததீசி அல்லது சிபி வரலாற்றையும் உட்கொண்டு கூறியனவே என்பது வெளிப்படை. இவை வள்ளுவர் கருத்திலேயே அமைந்துகிடந்த வரலாறுகள். இவையன்றி உரையாசிரியர்கள் ஆங்காங்கு எடுத்து இயைய புறுத்தும் வரலாறுகளும் மிகப்பல. அவை ஈண்டுக குறிக்கப்பெறவில்லை.

## வடசொற்கள் :

வடமொழி தமிழுடன் மிகப் பழையகாலத்தே கலக்கத் தொடங்கியது என்பதை வரலாறுணர்வார்யாவரும் ஒப்புவர். அன்றியும், பேச்சு மொழிகளில் பிறதேயமொழிகள் கலத்தல் இயல்பே. இலக்கிய மொழிகளில் மிகுதியான கலப்புஇராது. அங்ஙனமே தமிழ்பேச்சுமொழி, வடமொழி இலக்கியமொழி. ஆதலால் தமிழில் வடசொற்கள் கலத்தல் இயல்பே. ஆனாலும் குறைவாகக் கலப்பதாலேயே கவிஞன் தமிழ்ப்பற்றும் மொழி வன்மையும நுனித்தறியப்பெறும். வள்ளுவர் ஆயிரத்துமுந்நூற்றுமுப்பது குறள்களை ஆக்கியவர். *நூற்றுக்குப் பத்து விழுக்காடாவது பிறமொழிச் சொற்களைக் கலந்திருக்கலாம். ஆனால் ஐம்பதே சொற்கள் கலந்திருக்கின்றன. இதுவே இவருடைய தமிழ்மொழிப்பற்றை விளககுவதாம். அவை அவி, அந்தம, அமரர், அமிர்தம், அங்கணம், சாதி, ஆதி, ஆகுலம், ஆசாரம், ஆயம், இந்திரன், இலக்கம், கருமம், கனம், காமம், காரணம், குணம், குலம், கோடி, சலம், ஞானம், தண்டம், தவம், தானம், துலை, தெய்வம, தேயம், தேவர், நாகம், நாகரிகம், நாமம், பருவம், பாக்யம், பாகம், பாவம், புரந்தரன், புருவம், பூதம, மங்கலம், மந்திரி, மதி, மணி, மாத்திரை, மாயம், மானம, முகம், முத்தம், யாமம, வித்தகர் என்பன. இவற்றுள் முகம், காமம், மணி, மானம என்பன இருமொழியிலும் உள்ள சொற்கள் என்பன முன்னர்க் காமத்துப்பால் ஆராய்ச்சியிற் குறித்தாம்.

## பலமுறைவந்த சொற்றொடர் :

வள்ளுவரிடம் சொற்பஞ்சம் இல்லை. சொற்கள் வேண்டிய இடம் அறிந்து தானே அமையும். அங்ஙனமிருந்தும் சில சொற்களும் சொற்றொடர்களும் குறளில் பலகாற் பயின்று வந்துள்ளன. சில கருத்துக்களும்

* ஆசிரியர் இந்நூலில் எடுத்தாண்டன பன்னீராயிரம் சொற்கள். அவற்றுள் ஐம்பதுகூட வடசொற்கள் இல்லை என்கிறார். Dr. J. Lazarus.

அங்ஙனமே. அவைகளை எடுத்துக்காட்டுதலும் இன்றியமையாததே. ஒரேயதிகாரத்து, 'கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கணி' (115) 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல அமைந் தொருபாற் கோடாமை சான்றோர்க்கணி' (118) என ஈற்றடிமுழுதும் இரண்டிடங்களில் ஒத்துள்ளன. சிற்றளவைக்கும், பேரளவைக்கும் வள்ளுவர் எடுத்தாளும உவமை தினை, பனை என்பன. இதனை மூன்றிடங் களில் எடுத்தாளுகிறார் வள்ளுவர். 'தினைத்துணை நன்றிசெயினும் பனைத் துணையாகக்கொள்வர் பயன்தெரிவார்' (104) 'தினைத்துணையுந்தேரான்' (144) 'தினைத்துணையாம் குற்றம் வரினும பனைத்துணையாகக்கொள்வர் பழிநாணு வார்' (433) என்பன. 'தீயுழி உய்த்துவிடும்,' 'ஆரிருள உய்த்துவிடும்' என்பன துணிவுணர்த்தும் தன்மையன 'பண்புடைமையென்னும் வழக்கு' என்பது அடுத்தடுத்து 991, 992 இருகுறளில் வந்துள்ளது. 'கண்ணோட்ட' மில்லாத கண்' 'துன்பமுறுதல் இலன' என்பனவும் அங்ஙனமே. வள்ளுவ னார் தலையாயதென்று முடிக்கும ஒழுக்கங்கள் இருபது காட்டப் பெறு கின்றன. கடையென்று ஓதுக்கப்பெறுவன நான்கு. கோடி என்று கூறப்பெறுவன எட்டு. இந்த எண் பல என்னும் பொருளிலேயே ஆளப் படுகின்றது. அடிப்படையான ஒழுக்கத்தையும, ஒழுக்கமுடையவனையும் வித்தெனப் பாராட்டுவர். அதனை 'நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்' 'தவாப் பிறப்பீனும் வித்து' 'வரனெனனும் வைப்பிற்கோர் வித்து' என்பனவற்றால அறியலாம். 'பாத்தியுள் நீர் சொரிந்தற்று' 'பாத்திப் படுப்பதோராறு' என்பன உழவின்பகுதியான பாத்தியைப்பற்றியன. பேராண்மையாகப் பேசப்பெறுவன 'சீரினும் சீரல்ல செய்யாமையும்' 'பிறர்மனை நோக்காமையும்' ஆகிய இரண்டே என்று வரையறுக்கப்பெற் றுள்ளது. கட்டளைக்கல 'தத்தங் கருமமே கட்டளைக்கல்' என்றவிடத்தும், 'சால்பிற்குக் கட்டளை யாதெனின்' என்ற இடததும ஆளப்பெற்றுள்ளன. ஊதியம் என்ற சொல் நான்கிடங்களில் ஆளப்படுகின்றது. நிலத்திற்குச் சுமையாய்ப் பயனின்றியிருப்பன கல்லாதாரைப் பிணியாத கடுங்கோன் மையும், கண்ணோட்டமில்லாதவரும், இசைவேண்டா ஆடவரும் ஆம் என்பர். (570, 572, 1003).

இங்ஙனம் சொல்லும் சொற்றொடராட்சியுமேயன்றி, ஒரே கருத்து பின்னர் வேறொரு பொருள் புலப்படுத்த ஆளப்படுகின்றது. 'தீயினாற் சுட்ட புண் உள்ளாறும்' 'எரியால் சுடப்படினும உய்வுண்டாம்' என்பனவும், 'நிழல் நீரும இன்னாத இன்னா' 'நீரும் நிழலது இனிதே' என்பனவும் ஒருவகையான் ஒத்த கருத்தனவே.

எதிர்மறையாற்கூறிய ஒத்த கருத்துகள், 'பயன் மரம உள்ளூர்ப் பழுத்தற்று' 'நடுவூருள் நச்சுமரம் பழுத்ததுபோல' என்பனவும், 'ஊருணி

நீர் நிறைந்தற்றே யுலகவாம் பேரறிவாளன் திரு' 'அளவளாவில்லாதான் வாழ்க்கை குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று' என்பனவும் அத்தகையனவே.

முன்னொடுபின் முரணபாடுடையனபோன்ற கருத்துடைய குறள்களும் சிலஉள்ளன. அவை 'தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறுமறிவு', 'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மையறிவேமிகும்' என்பதும, 'ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும் தேர்ந்துசெய்வஃதே முறை' 'கண்ணோட்டத்துள்ளது உலகியல் அஃதிலார் உண்மை நிலக்குப் பொறை' என்பதும், 'கொலையிற் கொடியாரை வேந் தொறுத்தல் பைங்கூழ் களைகட்டதனொடு நேர்' 'கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேற் செல்லா துயிருண்ணுங் கூற்று' என்பதும். 'ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று சூழினும தான்முந்துறும' 'ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்' என்பதும் ஆம். இவைகள் மலைவின்மை அவ்வக குறள்களின் குறிப்புரையில் விரித்துக் காட்டப்பெற்றுள்ளன.

'உடைமையுளின்மை' 'இன்மையுளின்மை' 'அறிவின்மை இன்மையுளின்மை' 'வன்மையுள்வன்மை' 'இன்மையின் இன்னாதது' 'துறந்தாரின் தூய்மையுடையர்' 'நோற்பாரின் நோன்மையுடைத்து' என்பனவும் இவைபோன்ற சில ஆட்சிகளும் வள்ளுவரிடம் மிகுதியாகக் காணப் பெறுவன.

## பிற சிறப்புக்கள் :

தொல்காப்பியர் அகரமுதல் னகர இறுவாய் முப்பதும் எழுத்தென்றார். அங்ஙனமே வள்ளுவர் 'அகரமுதல எழுத்தெல்லாம்' என்று தொடங்கி 'கூடி முயங்கப்பெறின்' என னகாரவிறுதியாக முடித்தார். தமிழ் முதலெழுத்துககளால் முடிந்தமைக்கு இந்நூல் சிறந்த எடுத்துக் காட்டாகும். மகாமகோபாத்யாய ஐயரவர்கள் குறளின் சிறப்பாகத் 'தமிழ் என்னுஞ் சொல்லில் சிறப்பெழுத்தாகிய ழகரம் இருத்தல்போலக் குறள் என்ற பெயரிலும் ளகரம் அமைந்திருக்கின்றது' என்பார்கள். 'குறள் பருவத்தில் பெற்ற பிள்ளையைப் போன்றது' என்று சி. தியாகராசச் செட்டியாரவர்கள் கூறுவார்கள் என்றும் எடுத்துக்காட்டியுள்ளார்கள். காமத்துப்பாலை எழுதியும் வள்ளுவர் அல்குல் என்ற சொல்லை ஆளாமை தனிச்சிறப்பு. ஏனைய பொருணூல்களைப்போலன்றி மிகவும் சீரியமுறையில் காமத்துப்பாலை அமைத்தது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது. ஓரதிகாரத்தில் கூற எடுத்துககொண்ட பொருளின் இயல்பைப் புலப்படுத்தி, வகைசெய்து,

அதன் இன்றியமையாமையைக் கூறி, பயன்கூறி, அதனை அனைவரும் மேற்கொள்ளுதற்குரிய உபாயம்கூறி, உவமைவாயிலாக உண்மையை நிலை நாட்டி, உடன்பாட்டுமுகத்தானும் எதிர்மறுத்தும் வலியுறுத்திச் செல்வது இவர்வழக்கம். ஒரேகருத்துத் திரும்பவருமாயினும அதனாற்போந்தபயன் வேறாக உணரும்வகையில் அமைப்பதும் இவர்வழககம்.

இதன் தனிச்சிறப்பையுணர்ந்தே பெரியோர்கள ஏழில் ஒன்றாக-ஆறில் ஒன்றாக-நான்கில் ஒன்றாக-மூன்றில் ஒன்றாக-இரண்டில் ஒன்றாகப் போற்றியிருக்கிறார்கள் என்று டாகடர் ஐயரவர்கள் தொகுத்துப் பேசியுள்ளார்கள்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவா தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்."

"திருத்தக்க மாமுனிசிந் தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம—உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் குறளனுகேம்
எங்கெழிலென் ஞாயி றெமக்கு."

"தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினும் முழங்கும்."

"நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி."

## ஆசிரியர் வரலாறு :

தமிழ்நூல் ஆசிரியர்களின் வரலாறுகள் ஒன்றுமே வரையறைப் படுத்தி அறியக்கூடியதாயில்லை என்பது தமிழுலகு நன்கு அறிந்ததே. ஆயினும் வள்ளுவர் வரலாற்றை அறியக கபிலரகவலும், ஞானமிர்தமும் ஒரு சிறிது துணைசெய்கின்றன. அவற்றை அடிப்படையாக வைத்தும் வள்ளுவமாலைச் செய்யுட்களைச் சிந்தித்தும ஒருவரலாறு உருவாகியிருக்கிறது. அது வருமாறு:—

வள்ளுவர் தந்தை பகவன்; தாய் ஆதி; உடன் பிறந்தார் அவ்வை, உப்பை, உறுவை, வள்ளி, அதிகமான், கபிலர். தாயாகிய ஆதி, பகவனது கட்டளைப்படி பெற்றமக்களை பெற்ற இடத்திலே விட்டுச்சென்றனர். ஆங்காங்குள்ள பல்வேறு சாதிமக்கள் குழந்தைகளை எடுத்துப் பாதுகாத்து வந்தனர். இதனால் வள்ளுவர் முதலாயினோர் பல்வேறு சாதியினராகக் கருதப்பட்டனர். வள்ளுவர் உரியகாலத்து வாசுகியம்மையாரை மணந்து நெய்தற்றொழிலால் வாழ்கையை நடத்திவந்தனர். தம்முடைய வாழ்வின் அனுபவங்களையும், உலகம கொடுத்த உயர்ந்த கருத்துக்களையும் ஒரு சேரத் திரட்டி உருவாககி இந்நூலைச்செய்து மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேற்றச் சென்றார். அங்கிருந்த புலவர்களுக்குள் இவரது புலமை காரணமாகச் சிறிது ஐயப்பாடு தோன்ற, அசரீரியே அதனை நீக்கி வைத்தது. திருக்குறளை அரங்கேற்றினார். சீத்தலைச்சாத்தனார் முதலிய புலவர்கள் இருந்து கேட்டு இன்புற்றனர் என்பது.

கபிலரகவலில் ஆதியென்பவள் கருவூர்ப் புலையனால் வளர்க்கப் பட்டவள் என்றும், பகவன் திருவாரூர்ப்பார்ப்பனன் என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளது, ஞானமிர்தம் யாளிதத்தன் என்னும் பார்ப்பனனுக்கும், பார்ப்பனி எனக கருதப்பட்ட ஒரு புலைச்சிக்கும் பிறந்தவள் எனப் பேசு கிறது. வள்ளுவர்களால் எடுத்து வளர்க்கப்பட்டமையால் வள்ளுவர் எனப் பட்டார் என்றும், வேளாளன் கொண்டுபோய் வளர்த்தான் என்றும் செவிவழிச் செய்திகள் பலவேறு காணப்படுகின்றன. இத்தகைய வர லாறுகள் எந்த ஆதாரங்கொண்டு உண்டாயின என்று துணியக்கூட வில்லை. ஆயினும பிறப்பால் சிறப்பை விரும்பாத வள்ளுவரது பிறப்பு வரலாற்றிலும் தாய் புலைச்சி, தந்தை அந்தணர், வளர்த்தவர்கள் பலர், உடன் பிறப்பாளர்களில் ஒருவர் அந்தணர், ஒருவர் அரசர், ஒருவர் பாணர், ஒருவர் வேடர் என்ற இத்தகைய சாதிககலப்புக்கள் காணப்படு கின்றன. இதுவே அவரது வாழ்வும் சொல்லும் ஒத்தநிலையால் வளர்ந்து வந்த வரலாறாகும்.

'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற இவரது ஆணை மொழியே இவருக்கு வாசுகியம்மையாரை மணம்செய்வித்த வரலாற்றுக்கு அடியாகின்றது. 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' என்ற வாய்மொழி வாசுகியம்மையார் பழையமுது ஆற விசிறிகொண்டு வீசியவரலாற் றிற்கும், கிணற்றில நீர்முத்துப் பாதியிலேயே விட்டுவந்த பகுதிக்கும் அடியாயிற்று. 'பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை' 'எழுபிறப்பும் தீயவை தீண்டா' என்ற குறள்களே இவர்கரு மக்களின்மையால் உண்டான மனவருத்தத்தைத் தெரிவிக்கும் பகுதிக்கு அடியென்றும் கூறுவர்.

இந்நிலையிலிருந்து எண்ணிப்பார்க்க வரலாறு முழுவதுமே திருக்குறளி லிருந்து உண்டான சிந்தனையின் சேர்க்கை என்பது தெளிவு. இன்னும் சிலர் வள்ளுவர் அகத்தியர் மரபினரென்றும, ஏலேலசிங்கன் இவருக்கு நெருங்கிய நட்பினன் என்றும் கூறுவர். இவ்வரலாறுகளின் உண்மை யைக் காண்பது முடியாததொன்று.

பழைய பதிப்புக்களில் காணப்படும் வள்ளுவர் வரலாறு திருக் கயிலையில் பரமசிவன் பார்வதிக்குச் சொன்னதாகத் தொடங்குகிறது. அதுவும் இல்வாழ்ககையிலிருந்து ஐம்புல இன்பங்களை ஆரத்துய்த்துக் கொண்டே வீட்டின்பத்தை அடைந்தவர் யார் என்று உமையமமைகேட்க இறைவன் சொன்னதாக வரலாறு தோன்றுகிறது. இதற்கு ஆதாரம் வள்ளுவர் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்ற திருக்குறள் என்பது வெள்ளிடைமலை

காவேரிப்பாககத்திருந்த மார்க்கசகாயர் என்ற வேளாளர் வேளாண்மையைப் பாழ்படுத்திய பிரமராட்சதனை ஓட்டக்கருதி, திருமூலர் முதலிய தெய்வமுனிவரிடம் விண்ணப்பித்துக்கொண்டார். திருமூலர் திருவள்ளுவர் பெருமையை எடுத்துக்கூறி அவரிடம் அனுப்பினர். அவர் அவ்வாறேசென்று விண்ணப்பிகக வள்ளுவரும் பஞ்சாக்ஷர ஜபத்தால் போக்கினர் என்பது வரலாறு. இது 'நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்ற குறள் தந்த வளமாகும்.

பேய்நீங்கப் பெருமகிழ்வெய்திய மார்ககசகாயர் தம்மகளையும் தம் செல்வத்திற் பாதியையும் ஏற்றுககொள்ளுமாறு வேண்டினர். வள்ளுவர் 'இம்மணலைச் சோறாககித்தரின் நும்மகளை ஏற்போம்' என்றார். உடனி ருந்த வாசுகியார் அவ்வாறே செய்ய மணந்தார். இதில் வாசுகியமமை யாரைச்சோதித்தது மனைமாட்சி இல்லாள்கண் இருககவேண்டியது என் பதையும், அவர்கொடுத்த பெருஞ்செலவத்தை மறுத்துப் பெண்ணைமட்டும் ஏற்றுக்கொண்டது 'இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென் இல்லவள் மாணுக்கடை' என்பதையும் அமைத்து ஆக்கப்பெற்ற வரலாறுகள்.

இல்லறம் இனிது நடைபெற நெய்தற்றொழிலை மேற்கொண்டார் என்றும், அத்தொழிலுககு வேண்டிய நூலை ஏலேலசிங்கரிடம் விலைக்கு வாங்கிககொண்டார் என்றும், அதுகாரணமாக அவரிடம நட்பு ஏற்பட்டது என்றும், நெய்தற்றொழிலால் கிடைககும் சிறுவருமானத்தைக்கொண்டு வாழ்க்கைநடத்தி மகிழ்ந்தார் என்றும் வரலாறுகூறுகிறது. இவர் நூலில் உழவும் வாணிகமும் அரசும் அமைச்சுமே சொல்லியிருக்க இவரால்

கூறப்பெறுத செய்தற்றெருழிலே இவர்மேற்கொண்டார் என்பதற்கு ஏற்றகாரணம் அமையககூடவில்லே.

சிவபெருமான் ஆணைப்படி தேவர்கள் வள்ளுவரிடம் வந்து 'ஆனந்ததாண்டவம் செய்துகொண்டிருந்த பெருமான் திடீரென ஊர்த்துவ தாண்டவம் ஆடினுர்; அதன் காரணம் தெரியாமல் விழித்தோம்; தங்களேககேட்டுக காரணம் தெரிந்துகொள்ளுமாறு பணித்தார்' என்றனர். வள்ளுவர் திருவருள் நிலேயையுணர்ந்து 'பூவில் அயனும்' என்ற பாடலால் கூத்தப்பிரான் திருவிளேயாடலேக் குறிப்பித்தனர். இது 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்பதை ஒட்டி எழுந்ததாகும்.

ஒருநாள் நூல்வாங்க ஏலேலசிங்கரின் வீட்டிற்குச் சென்ற திருவள்ளுவர் 'ஏலேலசிங்கர் எங்கே?' என்றுவினுவ, அங்குள்ளார் 'செட்டியார் சிவபூசை செய்கிறுர்' என்றுர்கள். பொய்யாமொழிப்பெருமான் 'செட்டியார் சிவபூஜை செய்கிறுரா? குப்பத்தில் இருக்கிறுரா?' என்றுர். பத்தினிவாயிலாக அதனே உணர்ந்த ஏலேலசிங்கர் தமதுள்ளககருத்தை வள்ளுவர் உணர்ந்து கூறியதைப் பாராட்டி அவரை வணங்கினுர் என்பது வரலாறு. இது உள்ளத்தால் பொய்யாது ஒழுகுவார் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் இருந்து எல்லாம் அறியுந்தன்மையை எடுத்துக் காட்டுவதாகும்.

ஏலேலசிங்கரைப்போன்ற மாணுக்கரின் பக்குவநிலேமை அறிய ஒருநாள்'பெருக்கெடுத்த ஆறறில் அழைததுககொண்டுசெல்ல ஏலேலசிங்கர் தவிர ஏனேயோர் வாராதொழிந்தனர். இது உயிருக்கஞ்சுவானே எந்தக் காரியத்திலும தெளிதல்கூடாது என்பதை விளககவந்த வரலாறு.

ஒருநாள் கப்பல் கரை தட்டிப்போகக் கவலேயுற்ற ஏலேலசிங்கர் வள்ளுவரிடம் விண்ணப்பிக்க, வள்ளுவர் தம் திருக்கரத்தால் தொட்டு 'ஏலேயா' என்று இழுக்க உத்திரவிட்டார். அவர்கள் அவ்வாறே செய்யக் கப்பலும் மிதந்தது.

பஞ்சகாலத்தில் ஏலேலசிங்கரை நோக்கி நீர் கொள்முதல்செய்த தான்யங்களேக கொண்டவிலேக்குக் குறுணி கூடவிற்க எனக்கட்டளே யிட்டார். அவரும் அவ்வாறே செய்யச் செல்வம் பெருகிற்று. இது 'வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோல் செயின்' என்ற குறளே அடியொற்றி அமைக்கப்பட்டது என்பது துணிவு.

மற்றொருநாள் இங்ஙனமே சேகரித்த பொருளெல்லாவற்றையும் உருக்கித்திரட்டி ஒன்றாக்கி ஏலேலன் முத்திரையிட்டுக் கடலில் போட உத்திரவிட்டார். போட்ட ஏலேலசிங்கரும் மறந்தார். பாசிபிடித்த அக்கட்டி வலைஞர் வலையிற் சிக்கி இவரிடமே வந்தது. ஏலேலர் தன் வாயிற்படிக்குக் கல்லாக இட்டார். பாசிதேய்ந்து ஏலேலன் என்ற முத்திரையும் ஒளியும் புலப்பட, வள்ளுவரிடம் தெரிவித்துக்கொண்டார். 'பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச் சொரியினும் போகா தம' என்ற வள்ளுவர் வாக்கை விளக்க எழுந்ததே இவ்வரலாறு என்னலாம்.

இல்லறம்பெரிதா துறவறம்பெரிதா என்று ஐயுற்றுவந்த சிலர்க்கு உண்மை உணர்த்துவதற்காக வாசுகியை விசிறிகொண்டு பழைய அமுதை வீசச்செய்வித்தும், பாதிகிணற்றிலேயே குடம்நிற்கும்போது அழைத்தும் காட்டி 'ஆற்றினொழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மையுடைத்து' என்பதனை பழையமுதிலிருந்து புகையெழும்பவும் தண்ணீர்க்குடம் விட்டபடியே இருக்கச்செய்தும் காட்டினார்.

இவருடைய சொல்லும் செயலும் ஒத்திருக்குமாற்றை அறிந்து கொள்ளவந்த சிலர், இவர் விற்க எடுத்துப்போன சேலையைக் கிழித்துக் கிழித்து விலைகேட்க, அவர் அந்தந்தப்பகுதிக்குரிய விலையையே கூறினார் என்ற வரலாறு 'இணரெரி தோய்வன்ன இன்னா செயினும் புணரின் வெகுளாமை நன்று' என்ற குறளை அடியொற்றி எழுந்ததாகலாம்.

சின்னாட்கழித்து மீட்டும் அவர்கள்வந்து வாசுகியம்மையாருடைய ஆடையைப்பற்ற, அறிந்த வள்ளுவர் அவர்களைச் சபித்தார். சாபமேற்ற அவர்கள் 'இதுதானோ வெகுளாமை புணரின் நன்று' என்ற விந்தை என்று எள்ளி நகையாடினர். அதற்கு வள்ளுவர் 'ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து வேந்தனும் வேந்துகெடும்' என்பதை அறிகிலீரோ என்றனராம்.

வாசுகியம்மையார் இறந்தபோது வள்ளுவர் வருந்தி 'அடிசிற் கினியாளே' என்ற பாடலைப் பாடினர் என்பது, 'தெய்வம் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள்' என்பதை விளக்கவந்த வரலாறாகும்.

இன்னும் சிலர் வள்ளுவர் அகத்தியர் மரபினரென்றும் கூறுவர். இவ்வரலாறுகளில் உண்மை காண்பது முடியாததொன்று.

ஆசிரியர் பெயர்கள் :

வள்ளுவர் என்பது சாதிபற்றிய இயற்பெயர் என்பர். வள்ளுவர் என்பார் தமிழ்நாட்டில் பறையர்களுக்குக்குருவாய், சோதிடநூல்வல்லாராய்,

தமிழுறவு மிக்கவராய் இன்றும் இருத்தல் கண்கூடு. அக்குடியினரால் இவர் வளர்க்கப்பெற்றமையால் இப்பெயர்பெற்றார். இங்ஙனம் கூறுபவர் தமது கூற்றுக்கு ஆதாரமாக 'தேவை மறந்தேயும் வள்ளுவன் என்பான் ஓர் பேதை, அவன் வாய்ச்சொல் கொள்ளார் அறிவுடையார்' என்ற திருவள்ளுவமாலையைக் காட்டுவர். பின்னர்வந்த சிவஞானசுவாமிகளும் 'மெய்த்ததிரு வள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலம், துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார் – சோமேசா' என்று அதனையொட்டிக் கூறுவர். இதனைப் பற்றித் திருக்குறள் வரலாறு எழுதிய செந்தமிழ்ப் பத்திராதிபர் ராகவ ஐயங்கார் சுவாமிகள் வள்ளுவமாலைச் செய்யுளை எடுத்துக்காட்டி 'மக்களிற் சிறந்தான் ஒருவனைச் சாதிபற்றி இழித்தல் அறிவிலாரது இயல்பு எனப் பொருள்தந்து நிற்றலான் அக்குடி வள்ளுவக்குடி என்பது தெள்ளிது; வள்ளுவராவார் யானைமேல் முரசுகடிப்பிட்டு அரசாணை சாற்றுவார்' என்று முடிவுகூறி அதற்கு மேற்கோளும் காட்டுவார்கள்.

தமிழ்வரலாறு எழுதிய சீனுவாசப்பிள்ளை அவர்கள் 'வள்ளுவன் என்பது அரசன் சொல்லிய ஆணையைச் சொல்லியாங்கே அறிவிக்கும் அலுவலாளன்பெயர்; அதனை வள்ளுவச்சாதியார்தான் செய்யவேண்டும் என்ற நியதியில்லை; அவ் அலுவலை மேற்கொண்டவர்களால் இவர் வளர்க்கப்பெற்றமையின் வள்ளுவர் எனப் பெயர்பெற்றார்' என்பர். வேறுசிலர் 'வளமையோன் எனல் ஓராரே' என்ற புலவர்புராணப் பாடலை எண்ணி வளப்பமுடையவர் வள்ளன்மையுடையவர் எனப் பொருள்காண்பர். திருவள்ளுவமாலைக்கு முதன்முதல் உரையியற்றிய திருத்தணிகை சரவணப் பெருமாளையர் 'வள்ளுவர் என்பது வண்மையுடையவர் என்பதை விளக்கி நின்றதாதலின் அது வேதத்தில் இலை மறை காய்போல் பல இடங்களில் மறைந்து வெளிப்படாதிருந்த மெய்ப்பொருள்களை எல்லாம் தொகுத்து உலகத்தார்க்குக் கொடுத்தருள்செய்தவர் என்னும் காரணம்பற்றிவந்த பெயர்' என்பர். பிங்கலநிகண்டு 'வள்ளுவன் சாக்கை எனும்பெயர் மன்னற்கு, உள்படு கருமத் தலைவற்கு ஒன்றும்' என்றும், சூடாமணி நிகண்டு 'வருநிமித்திகன்பெயர் சாக்கை வள்ளுவன் என்றுமாகும்' என்றும் கூறுகிறது. இவற்றால் உள்படுகருமத் தலைவராக நிமித்தம் கூறுபவர்க்குப் பெயராய் உள்ளமை புலப்படுமாதலின் இவரை வளர்த்தவர்கள் அந்த நிலையிலிருந்திருப்பார்கள் என்று துணியக்கூடும்.

இவருக்குப் பத்துப்பெயர்கள் இலக்கிய உலகில் விளங்குகின்றன. அவைகள் தேவர், தெய்வப்புலவர், பொய்யில்புலவர், முதற்பாவலர், பெருநாவலர், மாதாநுபங்கி, செந்நாப்போதார், நாயனார், நான்முகனார், புலவர் என்பன. இப்பெயர்கள்யாவும் வள்ளுவமாலையில் எதுகைமோனைக்கு இன்றியமையாத இடங்களில் புலவர்கள் படைத்துமொழிந்த சிறப்புப்

பெயர்கள். இவற்றுள் பொய்யில்புலவர் என்பதுமட்டும் மணிமேகலையிலும் ஆளப்பெற்றுள்ளது. தொன்றுதொட்டு இப்பெயர்களுக்குக் காரணமும் குறிக்கப்படுகின்றன.

தேவர்: தெய்வத்தன்மையுடையவர்; மக்களில் மேலாக நன்கு மதித்துக் கொண்டாடப்படுபவர் என்ற காரணங்களால்வந்தபெயர் என்பர் சடகோப ராமாநுஜாசாரியார். ராகவையங்கார் சுவாமிகள் 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படு' மாகலின் அத்தகையவாழ்வு நடத்திய வள்ளுவரைத் தேவர் என்றல் பொருந்தும் என்பார்கள். இதற்கு ஆதாரமாகக் 'கழிவினும் வரைவினும்' என்ற தொல்காப்பியச்சூத்திர உரையில் தலைவன் மனையறங்கண்டு எடுத்தோதிய தற்குக் காட்டிய 'அடிசிற்கினியாளே' என்ற செய்யுள் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரது என்பது உலகத்துப் பெருவழக்கிற்றென்பது ஆதலானும், இல்லாளோடுகூடி வாழ்தலின் சிறப்பை மேம்படுத்துரைத்தார் ஆதலானும், அகலிகை தோள்விடாக கௌதமரை ஐந்தவித்தானுகக் கருதினாராதலானும் இவ் ஆசிரியர் இல்லறமே இனிது ஓம்பி மிக்கார் என்பது தெள்ளிது என்ற நேமிநாத விருத்திக் குறிப்பு திருவள்ளுவர் இல்வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ்ந்தவராதலின் தேவர் எனப்பட்டார் என்பதை வலியுறுக்கும் என்பர். (செந்தமிழ். தொ. 1. பக். 50).

தெய்வப்புலவர்: ஓதாது எல்லாவற்றையும் முற்ற உணர்ந்த பெரியாராதலின் இப்பெயர்பெற்றார் என்பர் சிலர். நாமகள் முதலிய தெய்வத்தால் பாராட்டப்பட்டவராதலின் இப்பெயர்பெற்றார் என்பர் வேறு சிலர். சங்கத்தார் கலகந்தீர்த்த சோமசுந்தரககடவுளால் அசரீரியாக அருளப்பெற்றுச் சங்கப்பலகையில் இடம்பெற்றார் ஆதலின் வந்தபெயர் என்பர் சிலர் தெய்வம் எக்காலத்தும் யாராலும் போற்றப்படுமாறுபோல இவர் புலமையும் போற்றப்படுதலின் தெய்வப்புலமையுடையார் தெய்வப் புலவராயினர் என்பர் சிலர். தொல்காப்பிய உரையில் சேனவரையரும் நச்சினார்க்கினியரும் சிறப்பினாகிய பெயர்நிலை கிளவிக்குத் 'தெய்வப் புலவன் திருவள்ளுவன்' என உதாரணம்காட்டி இருத்தலால் கல்விபற்றி வந்த சிறப்புப்பெயர் என்பது தெளிவு. 'நான்முகத்தோன் தான்வள் ளுவனாகித் தந்துரைத்த' என்பதனால் நான்முகனே வள்ளுவனானமை பெறப்படுதலின் தெய்வமாகிய புலவன் தெய்வப்புலவன் எனினும் ஆம். தெய்வ அருளான் எய்திய புலமையுடைமையின் தெய்வப்புலவர் ஆயினர் என்று திராவிடப்பிரகாசிகை கூறுகிறது.

பொய்யில் புலவன்: பொய்மையில்லாத புலவர். பொய்மை இல்லாத புலமையாவது பொருள்களை உள்ளபடி உணர்தலும், உணர்ந்தபடி

உரைத்தலும் ஆம். 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற வள்ளுவர்க்கு இப்பெயர் அமைதல் மிகப் பொருத்தமேயாகும்.

செந்தமிழ்ப் பத்திராதிபர் பொய்யில்லாமை மேற்கூறியவாறு உணர்வினும் உரையினுமன்றி ஒழுக்கத்தினும் அமையவேண்டும் என்ப தற்குப் 'பொய்யாமை பொய்யாமை யாற்றின்', 'பொய்தீரொழுக்கம்' என்பனபோன்ற பல குறள்களை எடுத்துக்காட்டி உணர்வு உரை ஒழுக்கங் களில் பொய்மையில்லார் எனப் பொருள்காண்பர்.

முதற்பாவலர்: முதன்மையான பாவலர். பாவலர்களுள் ஒரு காலத்து ஒருசாராரால் போற்றப்பட்டு ஏனைக்காலத்து எண்ணப்படாது ஒழிவாரும உளர். இவர் அங்ஙனமின்றி எககாலத்தும் யாவரானும் போற்றப்படுபவராதலின் பாவலருள் முதன்மை எய்தினர். பாவினுள் முதன்மையானது வெண்பா ஆதலின் – அவற்றினும் சிறந்தது குறள் வெண்பா ஆதலின் அப்பாவால் அறமுதற்பொருளை முற்ற உரைத்த பாவலர் முதற்பாவலராயினர் என்றலும் அமையும். முழுதுணர்வால் சொற்பொருள்தெரிந்து நூல்செய்து எப்பாவலர்க்கும் மேலாய் முதல்வராய் நிற்றலானும், நால்வகைய பாக்களுள் வெண்பாக்களும், அவற்றுள் குறள் வெண்பாவும் முதற்பாவாதலின் குறள்வெண்பாவால் நூல்செய்தமை யானும் முதற்பாவலர் ஆயினர் என்கிறது திராவிடப்பிரகாசிகை.

பெருநாவலர்: நாவன்மையுடையார் நாவலர். நாவன்மையாவது கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்பமொழிவது. சங்கப் புலவர்கள் யாவரும் வேட்பமொழிந்த இவர் பெருநாவலர் ஆயினர். செயற் கரிய செய்வார் பெரியாராதலின் ஏனைய நாவலர்களைப் போலாது விழுமிய பொருள்கள் பலவற்றையும் எளிய இனிய மொழிகளால் சுருங்கக் கூறினு ராதலின் பெருநாவலர் ஆயினர் எனல் பொருத்தம். அறம், பொருள், இன்பங்களில் ஒன்றைக்கூற முற்பட்டு, முழுதுங்கூறும் ஆற்றலில்லாத நாவலர்போலாது மூன்றையும் முற்றமொழிந்த நாவன்மையுடைமையின் வந்தபெயர் என்பார் சபாபதி நாவலர்.

மாதாநுபங்கி: தாயையொத்த அன்பினர்; செருக்கடங்கியவர் என இருபொருள் காண்பர். இது வடசொற்றொடர். இப்பெயர் இவரது மனைவியது என்று கூறுவர் செந்தமிழ்ப் பத்திராதிபர். இப்பெயரை எடுத்தாளும் பாடல 'உப்பக்கம் நோக்கி' என்ற வள்ளுவமாலைச்செய்யுள். இப்பாடற் கருத்து நப்பின்னைப் பிராட்டியாரை மணந்த கண்ணன் உத்தர மதுரைக்கு ஆதாரம்; மாதாநுபங்கியின் கணவராகிய செந்நாப்

போதார் தென்மதுரைக்கு ஆதாரம் என்பது. இக்கருத்தே சிறந்தது என்றும் சுன்னாகம் குமாரசாமிப் புலவர் அவர்களும் மாதாநுபங்கி என்பதற்கு மாதாவை நிகர்த்த ஒழுங்கினன் என்று கூறுவர் சிலர் அது எங்ஙனம் பொருந்தும்? ஒழுங்கினைக் குறிக்கும் பதம் யாது? முடிவு யாது? என்று மறுத்தும் எழுதுவர். மாதாவைப்போலும் ஒழுங்கினன் என்பது சபாபதி நாவலர் கருத்து.

செந்நாப்போதார்: சொற்கோட்டமில்லது செப்பம் ஆதலின் ஒருபாற்கோடாத நாவாகிய போதினையுடையவர் எனப் பொருள்காண்பர். கவிகளாகியதேனைச் சொரிகின்ற செவ்விய நாவாகிய மலரினையுடையவர் என்றும் பொருள் கொள்ளலாம். இது சபாபதி நாவலர் உரை.

நாயனார்: தலைமையுடையார். நாயன் என்பதற்கு நடத்துபவன் என்பதும் பொருளாதலின் தாமெழுதிய அறநூல்நெறியிலே அனைவரையும் நடத்துபவர் என்ற பொருளும் அமைவுடையது. பாயநூ லுறுதிப்பொருள் எல்லாம் பாரிலுள்ளார் அறிந்துய்யப் பாற்பட எடுத்துக்கூறிய அருட்டலைமையுடைமையான் நாயனார் என்று அழைக்கப் பெறுகின்றார் என்பர் சபாபதி நாவலர்.

நான்முகன்: பிரமனுடைய அவதாரமாகப் பேசப்படுதலின் இப்பெயர் பெற்றார்.

புலவர்: பலதிறப்பட்ட அறிவை ஒருங்கேகொண்ட பேரறிவுடைமை புலமை. அதனையுடையவர் புலவர். அடைமொழியின்றியே இப்பெயர் இவர்க்கு ஆகியது மிகச்சிறப்பு.

## வள்ளுவர் சமயநிலை:

சமயங்களுள் வரலாறுகளை அடிப்படையாகக்கொண்டு வளர்ந்தன சில. தத்துவ சாஸ்திரங்களை அடிப்படையாகக்கொண்டு அமைந்தன சில. இவற்றுள் பின்னதே சிறப்புடையது. ஆதலின் வள்ளுவர் சமயநிலையை ஆராயப்புகுவாரும், நூலில் கூறப்பெற்ற வரலாறுகளைத் துணைக்கொண்டு முடிவுகட்டுவது, பனிக்கட்டிகொண்டு வெயிலுக்கு வீடு அமைப்பதே போலும். தத்துவ சாஸ்திரங்களைக்கொண்டு ஆராய்வதே பல்லவர் அமைத்த குகைக்கோயில்களைப்போல உறுதியானது. ஆதலால் வள்ளுவர் நூலால் அறியத்தகும் சமயக்கருத்துக்களாவன:—

உயிர்கள் தாம் தாம் செய்த வினையாலேயே இன்பத் துன்பங்களை எய்துகின்றன; மறுபிறப்பை அடைகின்றன; சுவர்க்கம் நரகம் இவை

களில் தோய்கின்றன. தோற்றம் உடையன யாவும் அழியும் தன்மையன. உடம்பு என்பது, உயிர்கள் தாம் தாம் செய்த வினைகளை உண்டு கழிப்பதற்காக உதவப்பெற்ற கருவி. பிறவி எல்லையின்றி இடையறாது வருதலின் கடல்போல்வது. மேல்வினைக்கு வித்துமாய் வீட்டின்பத்திற்குத் தடையாயும் இருப்பன அகப்பற்றும் புறப்பற்றுமே. உண்மை ஞானத்தானன்றி உயிர் வீடடைய முடியாது. பாசபசுஞானங்கள் உண்மை ஞானத்திற்குத் தடையாயிருத்தலும் உண்டு. அறியப்படுகின்ற பொருள்களில் எல்லாம் வியாபித்து நிற்கும் உண்மையை அறிவதும், பெரியோர் கூறும் உபதேசமொழிகளைக் கேட்பதும், சிந்திப்பதும் ஆகிய மூன்றுமே உண்மை ஞானத்திற்கு உற்றவாயில்கள். அவ்வுண்மை ஞானத்தை உற்றார் செம்பொருளைக் காண்பர். செம்பொருளைச் சார்ந்தாரை ஆகாமிய சஞ்சித வினைகள் சாரா. பிரார்த்த வினை உண்டாலன்றிக் கழியாது. பிறப்பு வீடுகளின் துன்ப இன்பங்களை அறிதலும் பொறியடக்கமுமே மெய்ஞ்ஞான வாயிலின் முதற்படி. சுவைமுதலிய தன்மாத்திரைகளை அறிந்து அவைகளின் காரணங்களையும் உணர்தலே உலகினையறிதல். மெய்ப்பொருளை அறிதற்குக் கல்வியறிவு இன்றியமையாதது என்பன.

செம்பொருளாகிய கடவுளை – கடவுள் தன்மையை அறிவிப்பன கடவுள் வாழ்த்துப் பகுதி. அதில் ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை யில்லாதான், அறவாழியந்தணன், எண்குணத்தான் என்றபெயர்கள் கடவுளைக் குறிப்பனவாக வழங்கப்பெறுவன. இவை கடவுளுடைய சிறப்பியல்பை அறிவிப்பனவேயன்றிப் பெயரல்லாமை சிந்தித்தற்குரியன. இவைகளைக்கொண்டு வள்ளுவர் ஒரு சமயத்தைச் சார்ந்தவர் என்று துணிதலும் முடியாத செய்தியாகும். இவற்றுள் வாலறிவன் என்பது இறைவனுடைய முற்றுமுணர்தல் இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் என்ற இருகுணங்களை அறிவிப்பது. தனக்குவமை யில்லாதான் என்பது முடிவிலாற்றலுடைமையையும் வரம்பிலின்பமுடைமையையும் அறிவிப்பது. வேண்டுதல்வேண்டாமையிலான் பொறிவாயிலைந் தவித்தான் ஆதிபகவன் இறைவன் என்பன தன்வயத்தனாதல் என்றதைக் குறிக்கின்றன. மலர் மிசை ஏகினான் என்பது பேரருளுடைமைக்கு அடிப்படை. இங்ஙனம் இறைவனது எட்டுக்குணங்களையும் இப்பெயர்கள் அறிவிக்கின்றன. இவைகளைக்கொண்டு வள்ளுவர் சமயத்தைத் துணிவது முடியாத தொன்றாகும்.

அங்ஙனமிருந்தும் ஒவ்வொரு சமயிகளும் தத்தம் மதத்தினராக வள்ளுவரை ஆக்கிக்கொள்ள முயற்சிக்கின்றனர். சைனர்கள் வாலறிவன்,

மலர்மிசை ஏகினன், பொறிவாயிலைந்தவித்தான், அறவாழி அந்தணன் என்பன தம் கடவுளரையே குறிப்பன ஆதலால் இவர் சைனர் என்பர். அவர் காட்டும் காரணங்களாவன:- வாலறிவன் என்பது கேவல ஞானி. 'உலகெலாம் உணர்ந்தமூர்த்தி அலகிலா ஞானவாரி' என்று சூடாமணி நிகண்டு கூறுகிறது. அன்றியும் அறிவன் என்ற சொல்லாட்சி அருகக் கடவுளையே குறிப்பதை மேருமந்தர புராணம், நீலகேசி முதலியவற்றில் காணலாம். ஆதலால் இச்சொல் அருகக் கடவுளுக்கே உரியதென்பது. மலர்மிசை ஏகினன் என்பது தேவர்களால் இடப்பட்ட தாமரை மலர்மேல் அருகக்கடவுள் நடந்தார் என்ற வரலாற்றை அமைத்துக் கூறப்பட்டது என்பர். அதற்கு மேற்கோளாக 'மலர்மிசை நடந்தோன் மலரடி' (சிலப். நாடு 204) முதலிய பல இடங்களில் அருகதேவனையே குறிப்பதைக் காண்க என்பர். பொறிவாயிலைந்தவித்தான் என்பதும் 'ஐவரை வென்றோன்' 'பொறியிலா அறிவன்' எனப் பல இலக்கியங்களில் அருகனை உணர்த்தி வருகின்றன. அறவாழி அந்தணன் என்பது தருமசக்கரத்தை முத்திரையாக உடைய ஜிநக்கடவுளைக் குறித்துவருவதைப் பல இலக்கியங்களிலும் பரக்கக் காணலாம் என்பர். இவற்றுள் பொறிவாயிலைந்தவித்தான் என்பதில்மட்டும் நாம் சிந்திக்கவேண்டிய சிந்தனை ஒன்று உண்டு. அவித்தல் என்பது கறி அவித்தான், பயறு அவித்தான் என்பனபோல ஒரு பொருளின் தன்மையை மாற்றி அமைத்தலாம். அதாவது முளைக்கும் தன்மைவாய்ந்த பயற்றை முளையாதவாறு கெடுத்து மெலிதாக்கலே. அது போலப் பொறிவாயிலவித்தான் என்றவழியும் பொறிகள் சேட்டிக்கப்புக, அவற்றை வென்று அடக்கியவன் என்பது கருத்தாகும். அங்ஙனமாதல் கடவுள் தன்மைக்கு ஒவ்வாத ஒன்றாகும். சைனவுரை ஆசிரியராகிய கவிராசபண்டிதரும் பொறிகளை வழியாகவுடைய மித்தையை அறுத்தவன் என்று பொருள்காண்கிறார். யாருடைய மித்யையறுத்தவன் என்பதை அவர் விளக்கவில்லை. ஆனால், வள்ளுவர் பெருந்தகை ஐந்தவித்தான் என நீத்தாரையும் அழைக்கின்றார். நீத்தாராகிய அந்தணர் பொறிகள் புலன் வழிச்செல்ல, அவைகளைத் தம் அறிவால் அடக்கி ஆண்டவர்கள். ஜினதேவர்க்கு அங்ஙனமன்று. இருந்தும் அவரைப் பொறிவாயிலைந்தவித்தான் என்றது சிந்தித்தற்குரியது.

எண்குணத்தான் என்பது இளங்கோவடிகளால் சித்தபரமேட்டியைக் குறிக்குமிடத்து ஆளப்பட்டது. பரிமேலழகரும் 'கடையிலா அறிவை முதலாக உடையன என்று உரைப்பாரும் உளர்' என்றார். ஆதலால் இவர் சைனரே என்பர்.

பவுத்தர் கடவுள்வாழ்த்தில் மலர்மிசை ஏகினன் என்பது இறந்த காலத்தாற் கூறப்பெற்றமையின் கௌதமபுத்தர் மாயாதேவியினுடைய

கருவிலிருந்து வலது விலா வழியாக அவதரித்தருளியகாலத்து நீலத் தாமரைமேல் ஏழடி நடந்தார் என்ற வரலாற்றை அமைத்தே அது ஆக்கப் பட்டது என்பர். அன்றியும் பொறிவாயிலைந்தவித்தான் என்பதும், வேண்டுதல் வேண்டாமையிலான் என்பதும் மாரனைவென்ற வீரனுதலை விளக்கியது. அறவாழியந்தணன் என்பதும் தர்ம சக்கரத்தை உலகில் பலவகையாக உருளச்செய்த நீத்தோனுதலின் வந்தபெயர். தர்ம சக்ரப் பிரவர்த்தனுசாரியன் என்பதும் புத்தருக்குப் பெயராதல் இதனை வலி யுறுத்தும். 'ஆதி முதல்வன் அறவாழி ஆள்வோன்' (மணி. 10. 61) 'அருளாழி நயந்தோய் நீ அறவாழி பயந்தோய் நீ' (வீர. யாப்பு. 11.) என்பன இக்கருத்தை அடியொற்றி எழுந்தனவே. இவைகளால் இது புத்தப்பெருமானைக் குறிக்கும் சொற்றொடரே எனத் துணியலாம் என்பர்.

துன்பமற்ற நிலை துறவு; துறந்தவர்களே வீட்டின்பம் அடைந்த வர்கள்; ஆசையுற்றவர்கள் பிறவியாகிய வலையில் அகப்பட்டவர்கள் என்று துறவினுலல்லது வீடு சித்தியாது என்பதனை வற்புறுத்திக் கூறுவ தால் கொள்கையாலும் வள்ளுவர் புத்தசமயத்தராவர் என்பர். இந்த மேற்கோள்கள் ஏனைய சமய நூல்களானும் எடுத்தாளப்படுகின்றமையின் பவுத்தம் ஒன்றற்கே உரியது அன்மை துணியப்படும்.

வைணவர்கள் ஆதிபகவன் என்ற சொற்றொடரை 'அந்தமில் ஆதியம் பகவன்' என்றும், வாலறிவன் என்பதை 'அடலாழிகொண்ட அறிவன்' என்றும், மலர்மிசை ஏகினுன் என்பதை 'மனனக மலமற மலர்மிசை எழுதரு மனனுணர்வளவினன்' என்றும், வேண்டுதல் வேண் டாமையிலான் என்பதைக் 'கொள்கை கொளாமை இலாதான்' என்றும், இறைவன் என்பதை 'இருந்தான் என்னுள்ளத்து இறைவன்' என்றும், பொறிவாயிலைந்தவித்தான் என்பதைத் துவாதச திருநாமங்களுள் ஒன்றாய இருடீகேசன் என்பதன் மொழிபெயர்ப்பு என்றும், தனக்குவமை யில்லாதான் என்பதைத் 'தன்னொப்பா ரில்லப்பன்' என்றும், அறவாழி அந்தணன் என்பது 'அறவனை ஆழிப்படை அந்தணனை' என்றும் ஆழ்வார்கள் அமைத்து அருளிச்செய்திருப்பதால் இவைகள் திருமாலை யுணர்த்தும் சொற்களாம். மேலும் வாத்ஸல்யாதி எட்டுக் குணங்களையும், அபஹதபாப்மத்வம் முதலான அஷ்டகுணங்களையும் வைணவ ஆகமங்கள் கூறுவதால் எண்குணத்தான் என்பது திருமாலையுணர்த்தும். இக்கருத்து சடகோப ராமாநுஜாசாரிய சுவாமிகள் எடுத்துக்காட்டியனவாகும்.

இதில் சொல்லாட்சியையும் எண்ணொற்றுமையையும் அடிப்படை யாகக் கொண்டே வைணவமாதல் தெரிவிக்கப்பெற்றது. இக்கருத்துக்கள் ஏனைய கடவுளர்கட்கும் இருத்தலின் வைணவம் என்பது சாலாது என்பது ஆசிரியர் வரலாற்றில் அவர்களே குறித்துள்ளார்.

மேலும் 'தாமரைக்கண்ணான் உலகு', 'அடியளந்தான் தாயது எல்லாம் ஒருங்கு' என்றவரலாற்று ஆட்சிகள் வள்ளுவர் வைணவராதற்குச் சான்றுதல்கூடும். இதற்கு ஸ்ரீமத் ஐயங்கார் அவர்களே இதயகமலத்தில் உள்ளான் என்றும், மடியிலாமன்னவனுக்குத் திருமாலின் இரண்டடிக்கும் போதாத மண்ணை அடைதல் எளிது என்பதை விளக்கவந்ததேயன்றித் திருமாலிடம் அன்புகொண்டு உரைத்தது அன்று என்றும் கூறுவர். பரிப்பெருமாள் 'தாமரையிடத்து இருப்பவனாகிய அயனுலகு' என உரை காண்பர். இவற்றால் வள்ளுவர் வைணவர் என்று துணிந்துவிடமுடியாது.

இனிக் கொள்கைவகையால் வள்ளுவர் சமயநிலைமை ஆராய்வாம். இவ்வாராய்ச்சியை முற்றமுடித்துச் சித்தாந்த சைவரே எனத் தெளிவு படுத்தியவர்கள் ஸ்ரீமத் வாலையானந்த சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் ஆராய்ச்சியில் சிலகொண்டு தெளிவாம்.

வள்ளுவர் உலோகாயதரா? உலகாயதர் என்பார் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பவர்கள். காட்சியளவையொன்றையே ஒப்புவர். பூதங்களில் ஆகாயம் என்பதொன்றில்லை என்பவர்கள். அரிவையரின்பமே முத்தி என்பவர்கள். இவர்களில், உடலே உயிர்; தாய்தந்தையரே கடவுள் என்னும் தேகான்மவாதிகளும், பொறிகளே புலன்களை அறிவதால் அவைகளே உயிர் என்னும் இந்திரியான்மவாதிகளும், உயிர்ப்பு இயங்கும் காலத்தில் உணர்வதாலும், உயிர்ப்பு ஒழிந்த காலத்தில் உணர்ச்சியற்றுப் போவதாலும் உயிர்ப்பே உயிர் என்னும் பிராணான்மவாதிகளும் உளர். அவர்கள் எல்லோரும், வள்ளுவர்பெருமானைத் தம்மவராக்கிக்கொள்ள, தமது முத்திநிலையை வள்ளுவர் 'தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிது கொல், தாமரைக் கண்ணானுலகு' என்ற குறளால் வைகுந்த நிலையினும் அரிவையரின்புறு போகமே முத்தியென்பதை வற்புறுத்துகிறார்; ஆதி பகவன் முதற்றே எனத் தாய்தந்தையர்களையே முதல்வராகக் கொள்கின்றார் என்பவற்றை எடுத்துக்காட்டுவார்கள். ஆனாலும், 'இன்பம் இடையறாதீண்டும்' 'பேரா இயற்கை தரும்' என்று கூறுவதாலும், 'ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு' என்ற குறளால் ஆன்மா கேட்ட உபதேசப்பொருளை ஆராய்ந்து, என்றும் நிலைத்த பொருளாகிய இறையை அறியப்பெறின் பிறவிவலையிற் சிக்காது என்று கூறுவதாலும் பிறவித்துன்பத்துட் பொருந்தாமையே முத்தியென்பது அவர்கருத்தாதல் தெளியப்பெறும். மேலும் 'பூதங்கள் ஐந்தும்' என்று கூறுதலாலும், 'உடம்பொடுயிரிடை' யெனப் பிரித்து உடம்பைக் காட்டிலும் உயிர்வேறு என விதத்தலாலும், பல குறளால் கடவுள் ஒருவர் உண்டு என்று வலியுறுத்திப் போதலாலும் 'ஐந்தின் வகைதெரிவான்'

எனவும் 'ஐந்தவித்தான்' எனவும் இந்திரியங்களைக் காட்டியும் உயிர்வேறு என்பதை விளக்குதலாலும் இவர் உலகாயதர் அல்லர் தெளிவு.

பௌத்தரா? பௌத்தர்கள் ஞானமேகடவுள் ஞானமேஆன்மா என்னும் கருத்துடையவர். அவர்களுக்குப் பதமுத்திகள் உடன்பாடில்லை. மேலும கொல்லுதல் கூடாது கொன்றதையுண்ணலாம் என்பதும் அவர்கள் கொள்கை. திருவள்ளுவரோ மாணடிசேர்தலாகிய அடிசேர் ஞானத்தைக் கூறுதலாலும், முதற்குறளால் எடுத்துக்காட்டுவமைவாயிலாக இறை உண்மையைச் சாதித்தலாலும் 'அறிதோறறியாமை கண்டற்றால்' என ஞானத்தின் வேறாய் உயிருண்டென்றுணர்த்துதலாலும், 'தாமரைக் கண்ணான் உலகு' 'புத்தேளுலகு' எனப் பதவிகளை உணர்த்துதலாலும, 'தினற் பொருட்டால் கொல்லாதுலகெனின் யாரும் விலைப்பொருட்டால் ஊன் தருவார் இல்' எனப் புலாலுண்டலை அடியோடு மறுத்தலாலும் பௌத்தரல்லர் என்பது தெளிவு.

சமணரா? ஆகாயம் ஒழிந்த ஏனைய பூத அணுக்களின் கூட்டுறவால் உயிரணு வினைகளீடான உடலை எடுக்கின்றது. இவ்வணுக் களுக்கு வேறாய் கடவுளொருவர் உண்டு என்பதும், உடை இல்லாமையும், முக்குணங்கள் கெடுவதே முத்தி என்பதும் இவர்கள் கொள்கை. வள்ளுவர் உயிர்கள் வினைக்கீடான உடலைத் தாமே எடுத்துக்கொள்வதில்லை; வினை களும் அறிவற்றன ஆகையால் உயிர்களைத் தாமாகச்சென்றடையமாட்டா ஆதலால் 'வகுத்தானொருவன் வேண்டுமென்று கூறுதலாலும், உடையின் இன்றியமையாமையை 'உடுக்கையிழந்தவன் கைபோல' என்று உவமையில் வைத்து வற்புறுத்திக் கூறுதலாலும், 'மாணடிசேர்ந்தார்' என அடிசேர் முத்தியை வற்புறுத்துதலாலும் வள்ளுவர் சமணரல்லர்.

ஏகான்மவாதியா? வஸ்து ஒன்றே உலகமும் உலகத்துப் பொருள்களும் கானலநீரைப்போலக காணப்படுவனவேயன்றி உண்மை யல்லாதன என்பது அவர்கள் கொள்கை. வள்ளுவர் காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூறுதலால் உலகம் முதலான பொருள்கள் உண்டெனக் கொள்கிறார். 'வையத்து இறந்தாரை எண்ணிக்கொண்டற்று' என்பதால் உயிர்கள் ஒன்றல்ல பல என்பதே வள்ளுவர் கொள்கை. ஆதலால் இவர் ஏகான்மவாதியும் அல்லர்.

மாயாவாதியா? பரப்பிரும்மம் ஒன்றே உள்ளது; ஏனைய உயிர்கள் உண்டென்றல் இப்பியை வெள்ளியென எண்ணுதல போல உண்மையல்லாதது; பிரும்மசொருபத்தை நானென்று அறிவதே முத்தி என்பது அவர்களுடைய முடிபு. சத்காரிய வாதம் கூறும் முதற்

குறளாலும், 'பல்லுயிர்' என்று கூறுவதால் ஏகமாகிய இரண்டற்ற பரமான்மாவைக் காட்டிலும் சீவான்மா பல உண்டு என்பதாலும் இவர் மாயாவாதியல்லர் என்பது துணிபு.

எப்படிச்சொல்வது? சொர்க்க நரகங்களைக் கூறுதலாலும், தேவர் நரகர் விலங்கு என உயிர்கள் செய்த வினைக்கேற்ப மறுபிறப்பு உண்டு என்று கூறுதலாலும், அவரவர்கள் செய்த வினைக்கீடாகப் போகங்கள் பொருந்துமெனக் கூறுதலாலும், கன்மபலனைக்கொடுப்பவன் இறைவனே என்பதாலும், அருளின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டி அதுவே வீட்டிற்கு வாயில் என விளக்குவதாலும், தீவினைக்கு உடந்தையாயிருந்தார்க்கும் தீவினைப்பயன் சாரும் என்பதாலும், 'வானோர்க்கு உயர்ந்த உலகம்' என வீட்டுலகத்தைச் சிறப்பித்தலாலும், மேலும் மேலும் பிறப்பு உண்டாவதற்குப் 'பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும்' மருளே காரணம் என்று கூறுவார்போலப் பிறவியறுதலுக்குப் பொருளைப் பொருளாக உணர்தலாகிய உண்மை ஞானமே உபாயமெனக் கூறுதலாலும், அகப்பற்று புறப்பற்று அறுதலும், மல மாயைகள் அறுதலும், அவா அறுதலும், பொறிகளை அடக்குதலும், தெளிந்த ஞான முடையாளுகலும் ஆகிய இவைகளே வீடடைதற்குரிய சிறந்த சாதனங்களெனத் தெரிவித்தலாலும், 'ஓர்த்துள்ளம் உள்ளது உணரின்' என்ற குறளில் உள்ளது என்ற தொடரால் நித்தியவஸ்துவாகிய இறைவனும் உள்ளம் என்பதால் உயிரும், உணரின் என்ற செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தால் உணராமைக் கேதுவாகிய தடைகளும், அத்தடையை நீக்கி உணரும் உயிர்களுக்கே மீட்டும் பிறவி இல்லை என்பதும் உணர்த்தப் பெறுதலின் உயிர் இறை கட்டுக்களையும் அவற்றைநீக்கும் உபாயத்தையும் பயனையும் உணர்த்துகின்றார் ஆதலின் இவ்வியல்புகளைத் தமக்குடைய சமயத்தினராக இருக்கலாம் என்பது தெளிவு.

**உரையாசிரியர்கள்:**

உழவன் உழைப்பு நன்னிலத்தில் மிக்க ஊதியத்தைத் தருவது போல - கொடைசிறிதாயினும் தக்கார்கைப்பட்டக்கால் வான்சிறிதாகப் போர்த்துவிடுதல்போல உரையாசிரியர்களின் உழைப்பும் திருக்குறளுக்குப் பொருந்தியதால் பெரிதும் சிறந்தது. அதிலும் முன்செல்லுகிறவன் இடறி விழுந்தால் பின்போகின்றவனுக்கு விளக்கிட்டதுபோல . இருக்குமாதலின் பழைய உரையாசிரியர்களின் கருத்து, கடைசியில் வந்தவர்க்குக் கருத்து வளர்க்கும் கருவியாயிற்று. எல்லாவகையிலும் திருக்குறளுக்கு உரைசெய்த ஆசிரியர்கள் உயர்ந்தார்கள் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. இங்ஙனம் உரைகண்டவர்கள் பதின்மர் என்று பழம்பாடல் ஒன்று அறிவிக்கிறது.

அவருள் இப்போது அறியப்பெறுவார் மணக்குடவர், பரிமேலழகர், பருதி, காளிங்கர், பரிப்பெருமாள் இந்த ஐவருமே. இவர்கள் வரலாற்றையும், உரைப்போக்கையும் பற்றி ஆராய்தலும் அமைவுடையதாம்.

*பரிமேலழகர்:* திருக்குறளுக்கு உரைகண்ட பெரியவர்களுள் பரிமேலழகரே சிறந்தவர். உரையாசிரியர்களுக்குள் சாசனவாயிலாகவும் அறியப்படும் பெருமைபெற்றவர் இவரே என்பர் மு. ராகவையங்கார் அவர்கள். இவர் ஊர் காஞ்சிபுரம். மரபு உலகளந்த பெருமாள் கோயில் அர்ச்சகர். இவை செவிவழிச் செய்தியேயாகும். ஆயினும் 'திருக்காஞ்சிவாழ் பரிமேலழகன் வள்ளுவனுக்கு வழிகாட்டினான் தொண்டைமண்டலமே' என்பதால் ஊர் காஞ்சிஎன்பதும் 'நீணிலங்கடந்தோன் தாள்தொழு மரபின் பரிமேலழகன்' என்னும் பரிபாடல் உரைச் சிறப்புப்பாயிரப் பகுதியால் அருச்சகர் என்பதும் அறியப்படுகின்றன என்பர். தாள்தொழுமரபு என்பது வணங்குபவர் என்னும் பொருளைத் தந்து அவருடைய சமயத்தைக் குறிக்குமேயன்றி மரபைக்குறிப்பதாகுமா என்பது ஊன்றியாராயத்தக்கத்தொன்று. ஆனால் பேரறிஞர் மு. ராகவ அய்யங்கார் அவர்களும், வை. மு. சடகோபராமானுஜாசாரிய சுவாமிகள் அவர்களும், மகாமகோபாத்யாய அய்யர் அவர்களும் கூறுவதால் நாமும் ஒத்துக்கொள்ளக் கூடியதே. இவர் வைணவ சமயத்தினர் என்பதற்கு இறைமாட்சி அவதாரிகையில் 'உலகபாலர் உருவாய் நின்று உலகம் காத்தலின் இறை என்றார்' என்று எழுதிய பரிமேலழகர் 'திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்ற பெரியாழ்வார் பாசுரத்தைக் காட்டியிருப்பதொன்றுமே போதியசான்றாகும். அன்றியும் 'பற்றற்றகண்ணே' என்னும் குறளில் 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பதையும், 'ஆரா இயற்கை' என்ற குறளில் 'நன்றா ஞானம் கடந்து போய் நல்லிந்திரிய மெல்லாம் நீத்து, ஒன்றாக்கிடந்த அரும்பெரும் பாழ் உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து, சென்றாங்கின்பத்துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால், அன்றே யப்போ தேவீடு மதுவே வீடுவீடாமே' என்பதையும் மேற்கோளாகக் கொண்டிருப்பதாலும் 'தாமரைக் கண்ணானுலகு' என்பதற்கு 'துறந்த யோகிகள் எய்தும் செங்கண் மாலுலகம்' என்று கூறுவதோடன்றி இந்திரனுலகு என்பாரை மறுத்துரைக்கும் மாட்சியினானும், 'அடியளந்தான்' என்பதற்குத் 'தன்னடியளவானே எல்லா உலகையும் அளந்த இறைவன்' என அனுபவித்து உரைகூறும் ஆட்சிகளாலும் வைணவ சமயத்தினரே எனபது வலியுறும்.

இவர்பெயர் பரிமேலழகரையர் எனவும், பரிமேலழகியார் எனவும் வழங்கும். இவர் உரையாசிரியரேயன்றி நூலாசிரியர் அன்று. இவர்

செய்த வேற்றுநூலுரை பாரிபாடல் உரை. அன்றியும் திருமுருகாற்றுப் படைக்கு இவர் செய்ததாக உரை ஒன்று உள்ளது. அதன் நடைப் போக்கு இந்த உரைகளைப்போல் இல்லாமை அவரதன்று என்பதற்குப் போதிய சான்று. அல்லாமலும் ஐயரவர்கள் பதிப்பித்த பத்துப்பாட்டு உரையின் திருமுருகாற்றுப்படைப் பகுதியில் அடிக்குறிப்பில் வேறுரை என்று குறிப்பிட்டவையெல்லாம் ஒருங்குதிரண்டு பரிமேலழகருரையாக வெளிவந்திருப்பதை, இரண்டையும் ஒத்திட்டுப் படித்தமக்கள் அறிவர்.

> "விரும்பி யருள்சீல வெற்பிமயக் குன்றின்
> வரும்பரிசு புள்ளூரு மாலே—சுரும்பு
> வரிபாடல் இன்சீர் வளர்துளவத் தோளாய்.
> பரிபாட லின்சீர்ப் பயன்"

என்ற பாடல் பரிமேலழகியாரதாக இருக்கலாம் என்றும், அதுவும் பரிபாடல் உரைக்காப்புச் செய்யுளாம் என்றும் ஐயரவர்கள் குறித் துள்ளார்கள். இந்தப்பாடலும் அவர் வைணவர் என்பதற்கு ஏற்ற சான்று.

காலம்: இவரது காலத்தையறிய வேறு புறச்சான்றுகள் இல்லை யென்றே சொல்லலாம். அகச்சான்றாகச் சில குறிப்புக்களைப் பெரியோர் கள் ஆங்காங்கே கொடுத்துச்செல்கின்றனர். அவைவருமாறு:—

பரிபாடலில் பரிமேலழகர் 'வாண்மிகு வயமொய்ம்பின்' (பரி. 9: 5.) என்பதற்கு 'வாள்தழும்பு நெருங்கிய வெற்றி மொய்ம்பு' என்று உரை எழுதுகிறார். திருமுருகாற்றுப்படையுள் 'வசிந்து வாங்கு நிமிர்தோள்' என்பதற்குப் படைக்கலங்களான் வடுப்பட்டென்று பொருள் உரைத்தல் கடவுளாதலிற் பொருந்தாது' என்று நச்சினார்க்கினியர் மறுப்பது இவ்வுரை யாயின் இவர் நச்சினார்க்கினியர் காலத்திற்கு முற்பட்டவர் என்னலாம் என்பார்கள் ஐயரவர்கள். பரிமேலழகர் போசராசனை மேற்கோள் காட்டு தலால், போசராசன் 11-ம் நூற்றாண்டில் இருந்தவன் என்பதை வரலாற் றாசிரியர் துணிவதால் இவரும் அவருக்குப் பிந்தியவராதல் வேண்டும். மேலும் திருக்குறளையும் பரிமேலழகருரையும் பாராட்டும்,

> "வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
> தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
> தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும்
> தண்டமிழின் மேலாந் தரம்"

என்றசெய்யுளை உமாபதிசிவாசாரியர் செய்ததாகக் கூறுகின்றனர். அது உண்மையானல் உமாபதிசிவம் செய்த சங்கற்பநிராகரணம் செய்தகாலம் கி. பி. 1313 எனத் துணியப்பெறுவதால் இவர் 13-ம் நூற்றாண்டிற்கும் 11-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவராதல் வேண்டும்.

13-ம் நூற்றாண்டில் அரசாண்ட விஜயகண்டகோபாலனது 27-வது ஆட்சியாண்டில் காஞ்சிபுரம் வரதராசப்பெருமாள் கோயிலிலுள்ள சாஸனமொன்று 'ஆமூர் நீலகங்கரையர் என்ற சிற்றரசர் ஒருவர் வண்டு வரைப்பெருமாளான பரிமேலழகியபெருமாள் தாதருடைய நந்தவனம் ஒன்றை விலைக்குப்பெற்று" என்று குறிப்பிடுகிறது. இது பெயரொற்றுமையாலும், தனிநாமமாயிருப்பதாலும் இது பரிமேலழகரையே குறிப்பதாகலாம். வண்டுவரைப்பெருமாள் என்பது அவர் பிள்ளைத் திருநாமமும், பரிமேலழகியபெருமாள் தாதர் என்பது தாஸ்யநாமமுமாக அமைந்திருத்தலின் மிகப்பொருத்தமாக இருக்கிறதென்றும் கொண்டு பரிமேலழகர் கி. பி. 1232-ல் வாழ்ந்தவர் என்று மு. இராகவையங்கார் சுவாமிகளவர்கள் சாஸனத் தமிழ்க்கவிசரிதத்தில் முடிவுகட்டியுள்ளார்கள்.

செவிவழிச் செய்திகள்: பரிமேலழகர் இவ்வுரையை இயற்றிப் பாண்டியன் அவைக்களத்து அரங்கேற்றச் சென்றகாலத்து 'உம் உரைக்கும் முன்னையோர் உரைக்கும் வேறுபாடுவிளங்க அற்புதம்செய்து காட்டுவீராயின் அங்கீகரிக்கப்படும்' என அரசன் அறிவிக்க, இவர் சம்மதித்தார் என்றும், பக்கத்திலிருந்த வெண்கலப் பரியைக் காட்டி இதன்மேலேறி நின்று நீர் அரங்கேற்றும்போது குதிரை நடந்துகாட்டவேண்டும் என்று அரசன் கட்டளையிட்டான் என்றும், அவ்வாறே அனைவரும் அதிசயிக்க அற்புதம் நிகழ்த்தினர் என்றும், அதனல் பரிமேலழகர் எனப் பெயர் பெற்றார் என்றும் ஒரு வரலாறு வழங்குகிறது.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கடையமென்னும் ஊரில் நாடார் வகுப்புக்குக் குருவாயிருக்கும் மரபில் அவதரித்தவர் என்றும் ஒருவரலாறு வழங்குகிறது. அதற்குத் தொண்டைமண்டல சதகம் மாறுபட்டிருத்தல் காண்க. 'விரைத்தாரலங்கல்' என்று தொடங்கும் வேறொரு பழந்தமிழ்ப் பாடல் 'கருத்தால் வகுத்தமைத்தான் கலைதேர் ஒக்கை காவலனே' எனப் பாராட்டுகிறது. ஒக்கைகாவலன் என்பதால் ஒக்கூரைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும். மதுரை ஜில்லாவில் இப்பெயர்கொண்ட ஊர் உள்ளது. இக்கருத்தை வலியுறுக்கும் சான்றாக 'முன்னூற் புரிமேலழகியகோ போற்றுதமிழ்க் கூடல், பரிமே லழகியன்என் பான்' என்ற பாட்டு அமைந்துள்ளது.

சிறப்புரைகள் :

திருந்திய தமிழிற் றெய்வப் புலமை
அருந்திறல் வள்ளுவ னாய்ந்துதன் வாக்கால்
அறம்பொரு ளின்பம வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்விழுப் பானுக்
கோருரை யின்றி யொன்பது சென்றும்
ஐயுற வாக வையுறு காலை
வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்
குள்ளிய பொருளை யுரைத்தன னென்ன
எழுத்து முதல விலக்கண வகையும
வழுத்துவே தாகம வகையதன் பயனும்
தங்கிய குறட்பாத் தமிழ்மனு நூலிற்
கிதுவே யுரையென் றியாவரும் வியப்பப்
பொழிப்பக லத்தொடு நுட்ப வெச்ச
விழுப்பொரு டோன்ற விரித்தினி துரைத்தனன்
வடநூற் றுறையுந் தென்றிசைத் தமிழும்
விதிமுறை பயின்ற நெறியறி புலவன்
அன்பரு ளொப் புரவுகண் ணோட்டம்
நன்றறி வாய்மை நற்றவ முடையோன்
இத்தகை யன்றி யீசன தருளால்
உய்த்துணர் வுடையவோ ருண்மை யாளன்
பரிமே லழக னெனப்பெயர் படைத்துத்
தரைமே லுதித்த தலைமை யோனே. —பெருந்தொகை. 1543.

திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனும
மன்னு முயர்நாமன் வந்து. ,, 1544.

பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி. ,, 1545.

தெய்வப் புலமைத் திருவள் ளுவர்குறளில்
உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச்—செய்வித்தான்
தத்துவமெல் லாமுடமபிற் றந்துணர்வார் போலுலக
மொத்தபரி மேலழக னோர்ந்து. ,, 1546.

விரைத்தா ரலங்கற் றிருவள் ளுவர்முன்னம் வெண்குறட்பா
விரைத்தார் மிகுபொரு ளொன்றும் விளங்க நெறிப்புலவோ
ருரைத்தார் பலரு மதற்குரை தன்னை யுலகறியக்
கருத்தான் வகுத்தமைத் தான்கலை தேரொக்கை காவலனே. ,, 1547.

முன்னுரைத்த தேவர்குறள்............
இன்னதிது வென்றுரைக்க வெய்தினன்—முன்னூற்
புரிமே லழகியகோப் போற்றுதமிழ்க் கூடற்
பரிமே லழகியனென் பான். ,, 1548.

உரையமைப்பு: இவர் உரைநடை திட்பமும் நுட்பமும் செறிந்தது. வேண்டாத சொற்களையோ கருத்தை விளக்கும் ஆற்றலற்ற சொற்றொடர்களையோ இவ்வுரையில் காணவியலாது. நூல்தொடக்கத்தில் உரைப்பாயிரமாகப் பொருட்பாகுபாடுகளையும், அவற்றில் ஆசிரியர் வள்ளுவனார் எடுத்துக்கூற மூற்பட்டவற்றையும் தொகுத்துச் சுட்டி, இயல்களின் வரைவிலக்கணத்தையும், அதிகாரங்களின் தோற்றுவாயையும் அங்கங்கே அமைத்துச்செல்கிறது. அதிகாரங்களின் தோற்றுவாய் அவ்வதிகாரத்தில் கூறப்படும் பத்துக் குறளின் கருத்துக்களும் செறியநிற்கும். ஓரதிகாரத்திற்கும் மற்றோரதிகாரத்திற்கும் உள்ள இயைபு மிக அழகாக எடுத்துக் காட்டப்பெறும். ஒவ்வொரு அதிகாரத்துள்ள பத்துக் குறட்பாக்களுக்கும் பொருளொற்றுமைகாட்டி, இவை அறத்தின் இன்றியமையாமைகூறியன; இவை பயன் கூறியன; ஆற்றும் உபாயம் கூறியன என்றாற்போல கருத்து அமைதியினைத் தொகுத்து எழுதிச்செல்வது; குறட்பாக்களுக்கு முன்னர் பொழிப்புரையும் சிறப்புரையுமாக எழுதிச்செல்கிறது.

பொழிப்புரையில் எடுத்துக்கொண்ட அதிகாரத்திற்கு இன்றியமையாதசொற்களை விரித்தும், வேற்றுமையுருபு வினையுருபுகளை விரித்தும் விளக்கும் இயல்பினது. சிறப்புரையில் தாம் விரித்த சொற்களின் இன்றியமையாமைக்குக் காரணம் காட்டியும், மேற்கோள் காட்டியும் விளக்கிச் செல்வது. சொற்சோதனைசெய்து பொருளைத் துணிவது இவ்வுரைக்குத் தனிச் சிறப்பு. ஒரேசொல் பலவிடத்துப் பயின்று வருங்கால் அதற்கு இடங்கட்குத் தக்கவாறு - அதிகாரங்கட்கு ஏற்றவாறு பொருள் விளக்கிச் செல்வது. மறுத்துரைக்குங்கால் காரணம் காட்டியே மறுக்கின்றது. பண்டையோர் உரை அமைவதாயின் அதற்கு ஆதாரம் காட்டியும் பாராட்டியும் செல்லும். வடநூற் கருத்துக்களைக்கொண்டு விளக்கவேண்டிய இடங்களில் விளக்கியும், மறுக்கவேண்டிய இடங்களில் மறுத்தும் செல்வது இவ்வுரையின் நேர்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. கருத்து விளக்கத்திற்காகச் சில சிறந்த உவமைகளையும் கதைகளையும் கையாளுவது உண்டு.

முன்னுக்குப்பின் மாறுபட்டனபோல மயங்க நிற்கும் திருக்குறள்களுக்கு ஆதாரத்துடன் அமைதிகளையும் அறிவிக்கும்; ஏற்றவிடங்களில் சொல்லணி பொருளணிகளையும் அகப்பொருட் கிளவிகளையும் புறப்பொருட்டுறைகளையும் எடுத்துக்காட்டிப் பொருத்தி விளக்கிச் செல்கிறது. இந்நூலிற் காணப்படும் ஆகுபெயர் அன்மொழித் தொகைக் குறிப்புகள் எல்லாவற்றையும் தொகுத்து, ஏனைய இலக்கண உரையாசிரியர்களின் கருத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்து முடிவுகாணுதற்குரியது. ஏனைய இலக்கணக் குறிப்புக்கள் நுண்ணறிவுடையோர்க்குப் பெரிதும் பயன்படுவன. பழைய பாடல்களின் உரைநடையாக அமைந்த இடங்கள் பல.

எடுத்தாண்டநூல்கள்: ஆங்காங்கே புறநானூறு, கலித்தொகை, அகநானூறு, சீவகசிந்தாமணி, பதிற்றுப்பத்து, திருவாய்மொழி, காமந்தகம், சாங்கியநூல், நாலடியார், புறப்பொருள் வெண்பாமாலை, சிலப்பதிகாரம், தொல்காப்பியம், சாணக்கிய நீதிநூல், நான்மணிக்கடிகை, சிருங்காரப் பிரகாசம், மணிமேகலை முதலியன இவர் உரையில் எடுத்தாளப் பட்டுள்ளன.

மணக்குடவர்: இவர் மணக்குடையார், மணக்குடியார் என்ற பெயரால் வழங்கப்படுகிறார். இவரைப்பற்றிய வரலாறு ஒரு சிறிதும் அறியக்கூடவில்லை. மணக்குடியர் என்று சாதிப்பவர்கள் ஊரடியாகப் பிறந்தபெயர்என்பர். மணக்குடி இடையளநாட்டைச்சேர்ந்தது. 'இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ணன் றேவனான வில்லவதரையன்' என்ற சொற்றொடர் கல்வெட்டில் காணப்படுகிறது. இந்த மணக்குடி பாண்டி நாட்டைச் சேர்ந்தது. சோழநாட்டிலும் மணக்குடி என்ற பெயரோடு பல ஊர்கள் இருக்கின்றன. மதுரையில் அரங்கேறிய திருக்குறள் உரையாசிரியர் ஊரும் மதுரை மாவட்டத்து மணக்குடியாக இருக்க வேண்டும் என்பது சிலர் கருத்து. பரிமேலழகர் இவரை மறுப்பதால் இவர் அவருக்கு முற்பட்டவர் என்பது தெளிவு.

இவருடைய உரையமைப்பு தெள்ளிய தமிழில் எளியநடையில் அமைந்திருக்கின்றது. சிற்சில இடங்களில் கருத்துரையும் பொழிப்புரையுமாகச் செல்கிறது. சிறப்புரை சில இடங்களிலேயே அமைக்கப் பட்டுள்ளது. குறளின் முறைவைப்பில் பரிமேலழகருக்கு மாறுபட்டவர். இவர் கொள்ளும் சில பாடங்கள் பரிமேலழகரால் மறுக்கப்படுகின்றன.

பழைய உரையாசிரியர்: இவர் பெயர் முதலியன அறியப் பெறவில்லை. உரையமைப்பு வழக்கியல் சொற்களோடு வடசொற்களும் மிகுதியாகக் கலந்து இயல்வது. முதல் பதினொரு அதிகாரத்திற்குமேல்

இவ்வுரைக்கும் பரிதியார் உரைக்கும வேறுபாடில்லை. கடவுள் வாழ்த்துப் பகுதியில சைவமரபிற்கு ஏற்ப இறையிலககணம் எழுதப்பெற்றுள்ளது. நடைச் சிறப்பு இல்லாவிட்டாலும கருத்துச் சிறப்பிற்காகக் கவனிக்க வேண்டிய இடங்கள் பல. சில புராண வரலாறுகள் மேற்கோள் காட்டப் பெறுகின்றன. இதனுல சைவமதவுரை என்று கருத இடமுண்டு.

*பரிதியார்* : இவர் பருதியார் எனவும் வழங்கப்படுகின்றார். இவர் பெயரைக்கொண்டு திருப்பருதி நியமம் எனபது இவர் ஊராயிருக்கலாம் என்பர் துடிசைககிழார். அவ்வூர்ப் பெருமான்பெயர் பருதியப்பர். அவ்வூர் தஞ்சைமா வட்டததிலே ஒரததநாடு செலலும் மட்சாலையில் உழுருகருப் பககத்தில் இருககிறது. பெயர்ககுறையாகப் பருதியப்பர் என்ற திருநாமம் பருதி என அழைககப்பெற்றிருககலாம்.

*காலம்*. பரிமேலழகரால் மறுக்கப்படும் உரைப்பகுதிகளுள் சிற்சில இவரதாயிருத்தலின் இவர் பரிமேலழகருககு முற்பட்டவர் என்னலாம.

இவர், குறட்கருத்தை வாங்கிவைத்துச் சொந்தமாக எழுதுவாரே யன்றிப் பொழிப்புரையாகவோ பதவுரையாகவோ எழுதார். குறளுக்கும் உரைக்கும் ஒற்றுமைப்படுத்தி, கருத்தறிந்து கொள்ளுதல் ஒரு கயிற்றுலாகிய பாலத்தில காவிரியைக கடகக நினைத்தலை ஒக்கும். சிவன், சீபாதம், சிவகீர்த்தி, சிவஞானம் என்ற சொல்லாட்சிகளும், அறவாழி யந்தணன் என்பதற்குப் பரமேஸ்வரன் என்று பொருள் காண்பதும் இவர் சைவர் என்பதைக் காட்டும் தகக சான்றுகள். 'நோயெல்லாம்' என்ற குறளுக்குப் பிராமணச் சிறுவன் கதையைக் குறிப்பிடுகிறார். ஏழு அதிகாரங்களுககுமேல் வெஃகாமை, கூடா ஒழுககம, கொல்லாமை, அவா அறுத்தல், ஊழ் என்ற அதிகாரங்களின் தொடக்கவுரையில், தீது என்று குறிககிறார். இவற்றுள கூடா ஒழுககம தீதாகலாம. ஏனைய தீதாதல் யாங்ஙனம? அவ்வாறே புறங்கூறாமை முதலிய சிலவற்றை மத்திபம் என்று குறிப்பிடுகிறார். சிலவற்றை நன்று என்று கூறுகிறார். கடவுள் வாழ்த்து முதலிய நான்கு அதிகாரங்களின் முடிவில் 'வீட்டு நெறிப்பால் முறறும்' என்ற தொடர் ஏடுகளில் காணப்படுவதால் அந்த நான்கு அதிகாரங்களையும் வீட்டு நெறிப்பால் எனக் கருதினரோ என்று எண்ண இடந்தருகிறது. ஆசிரியர் குறிக்கோள் அறியக்கூடாததாகலின் இக்குறிப்பு இப்பதிப்பில் விடப்பட்டது.

*காளிங்கர்* : இவரைப்பற்றியும் வாழககை வரலாறு ஒன்றும் அறியககூடியதாக இல்லை. உரைப்போக்கைக்கொண்டு அறியப்பெறுவனவற்றை மட்டும் குறிப்போம். இவர் குறளுக்குக் கொள்ளும பாடபேதங்கள்

மிகச்சிறந்தன. எடுத்துக்காட்டாக, 'நயன்சாரா நன்மையின் நீக்கும்' என்ற குறளுக்கு 'நயன்சாரா நன்மையும் நீங்கும்' எனப் பாடங்கொண் டனர். இதில் நயன் சாராவாய் அவனை நற்குணங்களின் நீக்கும் எனச் சிலசொல் வருவித்துரைக்கக்கூடிய நிலையின்றி நயஞ்சேராமல் திருமாதும் பொய்க்கும் என்றது மிக எளிமையிற் பொருள்காண நிற்பதொன்று. அவ்வாறே 'பிறப்பென்னும் பேதைமை நீங்க' என்றதை நீங்கி எனக் கொண்டார். 'வேண்டாமையன்ன' என்ற குறளில் ஆண்டும் என்பதற்குப் பதிலாக யாண்டும் என்று பாடங்கொண்டார். 'அன்பகத்தில்லா' என்ற குறளில் வன்பால் என்பதனை வன்பார் எனக்கொண்டார். இத்தகைய இடங்கள் பல. இவற்றால் பொருட்சிறப்பிருத்தலை அறியலாம்.

இவருடைய உரைப்போக்கு முதற்கண் பொழிப்பும், வேண்டிய இடங்களுக்குமட்டும் குறிப்பும் விளக்கமுமாக அமைந்திருக்கிறது. 'மற்று' என்ற இடைச்சொல்லை இடையே பெற்று எழுதுதல் இவர் மரபு.

இவர் சைனர் என்று துணிதற்குத் துணைசெய்பவை 'நயத்தக்க நாகரிகம்' என்றசொற்கு 'உம்பருலகினுள் சிறப்புடைய உத்தரகுருவினைத் தாம் எய்தி இனிது வாழ்ந்திருக்கவேண்டுமவர்' என்று எழுதி அதற்கு மேற்கோள் காட்டுமுறையும், வகுத்தார் எனப் பாடங்கொண்டு 'வினைகளை முன்னஞ் செய்தார் செய்த வினைவகையாற் றுய்ப்பர்' எனப் பொருள் காட்டுவதும் போல்வன. ஒருசொற்கு யாண்டும் ஒத்தபொருள் காணுதலே இவ்வுரையாசிரியரியல்பு. 'ஒருவந்தம்' என்ற சொற்கு இவர் கண்ட பெருஞ்செல்வம் என்ற பொருள் மிகச் சிறந்தது. பரிமேலழகர் இவ்வுரை யாசிரியரின் பாடங்களையும் பொருளையும் மறுத்துரைப்பதால் இவர் அவர்க்கு முந்தியவர் என்பது துணிவு.

நாலடி, புறநானூறு, சீவகசிந்தாமணி, விவேகசிந்தாமணி, தொல்காப்பியம், இளம்பூரணருரைபோன்ற பழைய நூல்களிலும் உரை களிலும் சிறந்த பயிற்சியுடையராதலை அவர் காட்டும் மேற்கோள்களே சான்று பகர்கின்றன. இவர் உரைகளில் வடசொல்லாட்சி அருகி வந்திருப்பது இவர்க்குள்ள தமிழார்வத்தை நன்கு விளக்கும். குறள் முறை வைப்பில் மாறுபட்டிருப்பதை அவ்வவ்வதிகாரத்தி னிறுதியிலேயே குறித்திருக்கிறோம். இவர் ஒவ்வொரு பாவின் தொடக்கத்திலும் அதனைப் பற்றிய வரைவிலக்கணம் தருவர். ஆனால் பரிமேலழகர்போல அதிகாரங் கட்கு எழுதுவதில்லை. ஆயினும் அதிகார இயைபை ஒவ்வோரதிகாரத்தும் பத்தாவதாகக் கொள்ளும் குறளினிறுதியில் குறித்துச் செல்வர். பரிமே லழகர்க்கு முந்திய உரைகளில் இவர் உரை சிறந்ததாதல் காணலாம்.

பரிப்பெருமாள்: இவரைப்பற்றிப் பெருந்தொகையில் நான்கு செய்யுட்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று,

"தெள்ளி மொழியியலைத் தேர்ந்துரைத்துத் தேமொழியார்
ஒள்ளிய காமநூல் ஓர்ந்துரைத்து—வள்ளுவனார்
பொய்யற்ற முப்பால் பொருளுரைத்தான் தென்செழுவை
தெய்வப் பரிப்பெருமாள் தேர்ந்து" 1542.

என்பது. இதனால் பரிப்பெருமாளுடைய ஊர் செழுவையம்பதி என்பது தெளிவு. செழுவை என்பது எதன்மரூஉ என்பது அறியககூடவில்லை. கி. பி. 1268-ல பட்டமேற்ற மாறவர்வன் குலசேகர பாண்டியனுடைய மெய்க்கீர்த்தி ஒன்று அவனைப் 'பழுதறு சிறப்பின் செழுவை காவலன்' என்றறிமுகப்படுத்துகிறது. இதனால் செழுவை என்பது சேதுநாட்டகத்த தோரூர் என்பது தெளியப்பெறும.'மொழியியலைத் தேர்ந்துரைத்து' என்ற பாடற்பகுதி இவர் ஒரு சொல்லிலககணம் செய்திருந்தார் என்பதையும், 'காமநூல் ஓர்ந்துரைத்து' என்பது காமநூல ஒன்றைச் செய்தார் என்பதையும் அறிவிக்கும். மேலும்,

"மாயிரு ஞாலத்து மன்பொருள் விளக்கும
ஆயிரம் கதிரும் ஆழ்கடல் மறைந்தபின்
விரிகதிர் மதியும் விளங்காக் காலத்(து)
எரிதலைக் கொளீஇய சிஃறிரி விளக்கின்
அரியவும் பெரியவும அறிந்தோர் போல
வசையில் வள்ளுவன் வாய்மொழிப் பொருளை
இசைபட நவல்வோர் இறந்த பின்னர்
நன்மதி யுடையோர் நாடார் ஆதலின்
என்மதி யளவில் யானறிந் துரைத்த
மழலைக் கிளவியை மதியோர் ஆராயந்(து)
இகழ்தல் இன்றியே யாவையும் இயைத்துத்
திருத்தி உரைத்தல் வேண்டும்
அருத்தம பயில்வோர் அருங்கடன் எனவே." —பெருந்தொகை. 1539.

போலத் என்னும் இச்செய்யுள் பரிப்பெருமாள் செய்த உரைப்பாயிரம் தோன்றுகின்றது. திருக்குறளின் நுண்பொருள்களை நன்றாகச் சொல்பவர் இறந்த பிறகு திருக்குறட் கருத்தை நன்மதியுடையோரும் ஆராய மாட்டாராதலின யான் உரைசெய்தேன் என்பதால் இது அவர் செய்த பாயிரமாகவே துணியப்பெறும். அன்றியும் இவர் உரை இயற்று வதற்கு முன்பு பழைய உரை ஒன்று இருந்திருத்தல்வேண்டும்; மக்கள்

பழைமையில் அருமையையும் புதுமையில் எளிமையையும் கண்டிருத்தல் வேண்டும். அதற்காக,

"புதியது தீது பழையது நன்றென்றல் பூமியுள்ளோர்
விதியது வேபொரு ளென்னன்மின் நல்லோர் விருப்பமுண்டேல்
புதியது நன்று பழையது தன்னினும பூமடந்தை
பதியதின் மேவிற் பருமுத்தொ டாடையைப் பார்மின்களே"

என்ற பாடலை இயற்றினரோ என்று எண்ணவும் இடமிருககிறது.

தன்னுடைய உரை, குறளின் உட்பொருளை நன்கு விளக்குவதென்றும், குறட்கருத்து உணராது உட்பொருள்காண முற்படுவார் முயற்சி பெண்ணின் வெளிததோற்றத்தைக்கண்டு மயங்கும் காளையர் முயற்சிபோல்வது என்றும சொலலுகிறார். இதனைவிளககும் பாடல்,

"கண்ணு முகமும் கருங்குழலும் செவ்வாயும்
வண்ண முலையும் வனப்புடைத்தென்—றெண்ணிக
கருத்தறியார் சாரலுறும் காளையர்போ் முப்பால்
கருத்தறியா துட்பொருள்காண் பார்." —பெருந்தொகை. 1541.

என்பது.

இவற்றால் பரிப்பெருமாள் உரையியற்றிய காலத்தின் சூழலும் உரையின் அருமைப்பாடும் அறிவிககப்படுகின்றன. தமிழாராய்ச்சித் திறத்தில் தனககிணையின்றி விளங்கிய ஸ்ரீ ரா. ராகவய்யங்கார் அவர்கள் பரிப்பெருமாள் உரையினும பரிமேலழகர் உரை சிறந்திருந்தமையின் பரிப்பெருமாள் பெயரின் முற்பகுதியைக்கொண்டு பரிப்பெருமாளின் உரையினும் மேலான அழகிய உரையினை உடையார் என்ற காரணம் பற்றிப் பரிமேலழகர் என்றாயினரோ எனச் சுவைபடச் சேதுநாடும் தமிழும் என்ற நூலகத்து எழுதிப்போந்தனர். பரிப்பெருமாளும் பரிமேலழகரைப் போன்றே காமத்துப்பால் தொடர்ச்சியில 'இக்காமப் புணர்ச்சியை வடநூலாசிரியர் அராகத்தாற் கூடும் கூட்டமென்ப. இதுதான் மூவகைப்படும்; அரிதிற்கூடலும் பிரிந்துகூடலும் ஊடிக் கூடலும என. இம்மூன்று கூட்டமும் இவற்றது நிமித்தமும இககாமத்துப் பாலுள் கூறுவது தமிழ்நடையன்று ஆதலின் இதற்கு இலக்கணம் யாங்ஙனம பெறுதும எனின் இவ்விலக்கணம தமிழ நடையாயின் அகப்புறம் என்று கூறுதல்வேண்டும். அவ்வாறு கூறாது அறம் பொருள் இன்பம் என வடநூல் வழியே கூறினராதலின், இதற்கு இலக்கணம் வாத்ஸ்யாயனம என்னும் காமதந்திரத்துச சூரத விகற்பம

என்னும் அதிகரணத்துள் கண்டுகொள்க' எனவும் குறித்துள்ளார். இதனை அடிப்படையாக வைத்து ஆராய்ந்த தி. பொ. பழனியப்ப பிள்ளை அவர்கள் வாத்ஸ்யாயன காமதந்திரத்தின் காலந்தொட்டு சுவை நூல் களிலும சமபோகம் விப்ரலம்பம் என இருபகுதியாகவே விரிககப்பட்டு வந்த காமச்சுவை தசரூபக ஆசிரியராகிய தனஞ்சயகவியின் காலத்து அயோகம விப்ரயோகம சம்போகம என்ற மூன்ருகப் பிரிக்கப்பட்டமையை எடுத்துககாட்டி இந்த உரையாசிரியர் தனஞ்சயகவியின் காலத்திற்குப் பிற்பட்டவர் என நிறுவுவார்கள. இத்தனஞ்சயகவி கி. பி. 974 முதல் 995 வரை ஆண்ட மாளவமன்னன் இரண்டாம் வாகபதி அரசன் காலத் தவர் என்பது வடநூலாசிரியர் கண்ட முடிவு. ஆதலின் இவ்வுரையாசிரி யரும் 11-ம் நூற்ருண்டினராக இருககலாம் என்பது துணிவு. பரிமே லழகியாரினும இவர் காலத்தால் முற்பட்டவராதற்குரிய அகச்சான்றினை நூலுள் காட்டி யிருககின்ருேம்.

இவ்வாசிரியர், குற்றங்கடிதல் என்னுமதிகாரத்தில் வெகுளியாற் கெட்டமைககுச் சௌமேதயனையும், நுகர்ச்சியாற் கெட்டமைக்குச் சச்சந் தனையும, மானத்தாற் கெட்டமைககுத் துரியோதனனையும், மகிழ்ச்சியால் அழிந்தமைககு வாதாவியையும், பொருள் விருப்பாற் கெட்டமைக்குப் புரூரவாவையும், காதலையடக்க முடியாமையால் கெட்டமைக்கு வத்தவ ராயனையும, மதத்தாற் கெட்டமைக்குக் கார்த்த வீரியார்ச்சுனனையும் எடுத்துககாட்டியிருககிருர். மேலும வியாசர், மகேச்சுரர், நாரதர், பராசரர், கௌடில்யர், துரோணர், உத்தரர், சுககிரர் மதங்களை ஒப்புக் காட்டுகிருர். இவற்ருல் இவர் இருமொழியிலும் நல்ல பயிறசியுடையவர் என்று தெரிகிறது. இவர்க்குச் சங்கநூல்களிலும் தகக பயிற்சியுண்டு.

**காரிரத்ன கவிராயர்:** இவரது ஊர் தென்திருப்பேரை: திருக் குருகைப் பெருமாள் கவிராயரிடம் கல்வி பயின்றவர். மாறனலங்காரத் திற்குச் சிறந்த உரையியற்றியவரும் இவரே. தொல்காப்பியத் திற்கும் திருக்குறள் பரிமேலழகர் உரைக்கும் நுண்பொருண்மாலை என்ற பெயரால் சிறந்த குறிப்புரை எழுதியிருக்கின்ருர். பரிமேலழகர் உரையில் விளககங்காணவேண்டிய சிறந்த பகுதிகட்கு உரையும், மேற் கோளும இலககணககுறிப்பும எழுதுகிருர். பெருமபாலும் திருக்கோவை யாரிலிருந்தும் திருககுறளிலிருந்துமே மேற்கோள் காட்டப்பெறுகின்றன. ஆகுபெயர் அன்மொழித்தொகையாராய்ச்சியில பரிமேலழகர் உள்ளக் கிடககை அறிதற்கு அரியதாயிருப்பதை 'ஊழிற்பெருவலி' என்னும் (380) குறளுரையில் எடுத்துககாட்டுதல் மிகப் போற்றற்குரியது. முதற்குறளில் 'உலகு என்றது ஈண்டு உயிர்களை; காணப்பட்ட உலகத்தால் காணப்படாத

கடவுட்கு உண்மைகூறவேண்டலின்' என்ற பரிமேலழகர் உரையில் உலகு உயிராகுமாகுல் அது காணப்படுமாறு யாங்ஙனம் என்ற குற்றம் இருப்பதை விளக்க, 'காணப்பட்டவுலகு உயிர்மேனின்றூல் காணப்படுதல் எவ்வாறு எனின்; முன்னர், 'உலகம் வழங்கிவருவதால்'' (11) என்பதற்கு'' உயிர் உடமபொடு காணப்பட்டு வருதலால எனனும உரையானும் 'உயிரீரும் வாள்' (334) 'என்பதனுலும் காணப்படும்' எனககுறிப்பு எழுதுதல் எவ்வளவு நுணுககமானது.

*இராமானுஜ கவிராயர் :* இவர் இராமநாதபுரத்தில் பிறந்தவர். திருவாவடுதுறைச் சிவஞான சுவாமிகளின் மாணவராகிய சோமசுந்தரக் கவிராயருடைய மாணவர். இவர் பெரும்பாலும் வசித்த இடம் சென்னையும் புதுவையும. கிறித்தவப் பாதிரியார்களாகிய ட்ரூ, தாம்ஸன் கிளார்க், ரானஸ், போப், வின்ஸிலோ என்பவர்களுககுத் தமிழககலவி கற்பித்தவர். நன்னூலுக்கும் குறளில் அறத்துப்பால் இல்லற இயலுக்கும, ஆத்திச் சூடிககும், கொன்றைவேந்தனுககும் உரை வகுத்தவர். பார்த்த சாரதி மாலை, வரதராசர் பதிற்றுப் பததந்தாதி முதலியன இவரியற்றிய வேறு நூல்கள். பரிமேலழகர் உரைக்கு விளகக உரை எழுதியவர். சிற்சில இடங்களில் வேறுரை என்ற தலைப்பில் தமது கருத்தையும விளக்கி இருககிறூர். கருத்துக்கள் மிகவும் நுட்பம வாய்ந்தன. விசாகப் பெருமாளையரும், சரவணப் பெருமாளையரும இவரிடம் படித்தவர்களே. இவர் மொழி பெயர்த்த ஆத்மபோதம் என்ற நூலினிறுதியில் வரும்,

> "சோமசுந் தரனெனுந் தொல்லா சிரியன்
> நாமமந் திரமென நவில்மா ணக்கன்
> தரங்கநீர் முகவையந் தண்பதி யதனுள்
> இரங்கையன் மாதவத் தெய்திய தோன்றல்
> இயற்றமி ழாசிரியன் இராமா னுச கவிராயன்"

என்பதால் இவர் ஊர் முகவை என்பதும, இரங்கையர் புதல்வர் என்பதும் உணரப்பெறுகினறன. இவரே திருககுறள் பரிமேலழகர் உரையை ஆராய்ந்து முதன்முதல் அச்சியற்றியவர்.

## வள்ளுவர் காலம் :

சங்ககாலத்திலேயே தமிழ் இலககியங்களில் இரண்டறககலந்து விளங்கும் திருக்குறளை இயற்றிய வள்ளுவர்காலத்தை வரையறுக்கப் பலரும் முயன்றுள்ளனர். ஒருசிலர் அவர்கருத்து வடநூற்கருத்தொடு ஒத்து இருத்தலை எண்ணித் துணிந்தனர். ஒருசிலர் வடசொற்களின் கலப்பைக் கண்டு காலத்தைக் கணித்தனர். ஒருசிலர் குறிப்பிட்ட சில சொற்களுக்கு

உரையாசிரியர்கள் காட்டிய உரைகளால் மயங்கி, காலத்தை வரையறுக்க முற்பட்டனர். எவற்றைக்கொண்டு எவ்வாறு துணியினும் நான்கு கொள்கைகள் நிலவிவருகின்றன என்பதை யாவரும் அறிவர்.

திரு. வையாபுரிப் பிள்ளை அவர்கள் ஒருவந்தம் என்ற சொல் ஆராய்ச்சியால் கி. பி. 450-ல் தோன்றியதென்று துணிந்தனர். சிலர் கி. பி. ஆறும் நூற்றாண்டிற்குப் பிந்தியதென்பர். சிலர் முதல் நூற்றாண்டென்பர். இன்னும் சிலர் கி. மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு என்பர். இதனையே Studies in Tamil Literature என்ற நூல் எட்டுக் காரணங்கள் காட்டித் துணிகிறது. அவை :—

1. வள்ளுவருடன் இருந்தவர் ஏலேலசிங்கன்செட்டியார் என்பது வரலாறு. இலங்கை வரலாற்றில் ஏலேலா அல்லது அலரா (Alara) என்ற ஒருவர் குறிப்பிடப்படுகின்றார். அவர்காலம் கி. மு. 144-க்கும் 101-க்கும் இடைப்பட்டதாகும்.

2. எல்லாருடைய துணிபும் வள்ளுவமாலை சங்கப்புலவர்கள் இயற்றியதென்பது. அவர்கள் கிறிஸ்துபிறந்த முதல் நூற்றாண்டில் இருந்தவர்கள் என்பது வரலாறுகண்ட முடிபு.

3. குறள் அறம் பொருள் ஆகிய இவற்றைப்பற்றி வடமொழி தர்மசாஸ்திரத்தோடும், அர்த்தசாஸ்திரத்தோடும் ஒத்த கருத்துடையதாகச் செல்கிறது. பொருட்பால் கௌடில்ய அர்த்தசாஸ்திரத்தை ஒட்டிச் செல்கிறது. கௌடில்யரோ கி. மு. நான்காம் நூற்றாண்டில் இருந்தவர்; அதற்கு ஒன்றிரண்டு நூற்றாண்டுகட்குப் பிந்தியே திருக்குறள் இயற்றியிருக்கலாம்.

4. பஞ்சதந்திரம், ஹிதோபதேசம், காமந்தகம், பர்த்துருஹரி முதலிய நீதிநூல்களிலும் அறம் பொருள் என்ற பாகுபாடுகளும் முறைகளும் பின்பற்றப்பட்டுள்ளன. ஆதலால் நீதிநூல்களை அமைக்கும் முறை எல்லாவற்றிற்கும் பொது என்பதே.

5. வள்ளுவமாலையில் ஒருபாடலைப்பாடிய மாமூலனார், பாடலிபுரம் கங்கைவெள்ளத்தால் அழிந்ததுபற்றிப் பேசுகின்றார். கி. பி. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் தீப்பற்றி அழிந்ததை அவர் குறிக்கவில்லை. ஆதலால் மாமூலனார் முதல் நூற்றாண்டிற்கு முந்தியவர்.

6. பாக்களில் முதன்மையாகிய குறள் வெண்பாவினால் ஆக்கப் பெற்றிருப்பது.

ஐந்தாம் நூற்றாண்டு என்ற வையாபுரிப்பிள்ளையவர்கள் கருத்துப் பொருந்தாமையை, திருக்குறள் பொருட்பால் காளிங்கர் உரை முகவுரைக் கண், T. P. பழநியப்பப் பிள்ளை அவர்கள், வையாபுரிப் பிள்ளை முதலாம் நூற்றாண்டினது என்று ஒத்துக்கொண்ட சங்கச் செய்யுள்களிலிருந்தே மேற்கோள்காட்டி மறுத்துள்ளார்கள். மேலும் வள்ளுவரை ஏலாசாரியார் என்பவர்களாகிய ஜைனர்கள், ஜைனாசாரியபட்டா வழிப்படி கி. பி. முதல் நூற்றாண்டினராகக் காட்டுகிறார்கள் என்றும் தக்க ஆதாரம் காட்டியுள்ளார்கள். இவற்றையெல்லாம்கொண்டு கி. பி. முதல் நூற்றாண்டிற்குமுன் வள்ளுவர் வாழ்ந்தவராகவே தமிழிலக்கிய சங்ககாலம், தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் வரலாறு, திருக்குறள் ஸ்ரீ ராஜாஜி அவர்கள் மொழி பெயர்ப்பு முகவுரை முதலிய நூல்கள் துணிகின்றன.

## மேனாட்டார் பாராட்டுரைகள் :

உண்மையாகவே சிரேஷ்டமானதாயும், நம் நாட்டு இலக்கியமாகவும் உள்ள குறள் நம்முடைய மனத்தை அதிகம் கவரவல்லதாக இருக்கிறது. குறளாசிரியராகிய திருவள்ளுவர், ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்கு இயல்பானதை விடுத்தும், யாவருக்கும் பொதுவாக உள்ள எண்ணங்களைப் புகுத்தியும், மனு முதலிய சாத்திரங்களில் காணப்படும் அனுவசியமான – மறுக்கத்தக்க வரலாறுகளையும் நியமங்களையும் விடுத்தும் பொதுவாக ஒரு விசேஷமான முறையைக் கையாளுகின்றார். இந்தியரால் எழுதப்பெற்ற நன்னெறிகளைப் போதிக்கும் நூல்கள் எல்லாவற்றிலும் மேலானது திருக்குறள்தான். அதற்கு உதாரணம் அல்லது ஒப்பனை குறளேதான்.

—W. H. Pope.

தமிழ் இலக்கியத்தில் மிகவும் மேலான நூல் திருக்குறள். அது மிகவும் மேலானதாகவும் தூய்மையானதாகவும் உள்ள மனித எண்ணத்தின் தோற்றம். வள்ளுவர் ஜாதிகள், இனங்கள், பொய்யான எண்ணங்கள் முதலியவைகளைக் கருதாமல் பொதுவாக எல்லா மனித சமுதாயத்திற்கும் பொருந்தும்படியாக ஆக்கித்தந்தமையே இதில் மிகவும் ருசிகரமான விஷயம். அவர் மிகவும் உத்தமமான நீதியையும், உண்மையான அறிவையும் வகுத்துத்தருகிறார். அவர் சாஸ்வதமான தர்மத்தினுடைய – உண்மையினுடைய சாரங்களை அறிவிக்கின்றார். அவர் மேலான குடும்பநுணுக்கங்களையும் வாழ்க்கை இரகசியங்களையும் காட்டுகின்றார். அவர் சிந்தித்துத் தெளிவு பெறுத்துவதிலும், மொழியிலும் பாட்டியற்றுவதிலும் முழுப் பாண்டித்தியமும் பெற்றிருக்கிறார். மேலும் அவர் தெய்வத்தன்மையினுடைய–இயற்கையினுடைய பெரிய அதிசயங்களையும், கடினமான மானத

சாஸ்திரத்தினுல் சிந்தித்து அறிவதிலும், மனத்தினுடைய நுட்பமான எண்ணங்களைப் பிரித்து அறிவதிலும் மிகவும் கைதேர்ந்தவர்.

—Journal Asiatique.

திருவள்ளுவர் தமிழர்களுடைய வணங்கத் தகுந்த முனிவரும் விதிஸ்தாபகருமாவர். தென்னிந்தியாவில் வெவ்வேறு காலங்களில் வழங்கிய காரியங்கள், ஒழுங்குகள், உபதேசங்கள், பழக்க வழக்கங்கள் முதலியவை களைப்பற்றிய துப்புகள் குறளில் காணப்படவில்லை. ஏனென்ருல் வள்ளுவருடையதான தேர்ந்தெடுக்கும் கொள்கையும், அதைத் தான் அனுசரிக்கும் முறையுமேயாம். அவருடைய வேலைப்பாடாகிய குறள் விவாதிக்க இடமில்லாததாயும், உபதேசிக்கத்தக்கதாயும் இருக்கின்றது. குறளினுடைய பாட்டின் அமைப்பே பெரிதும் அதனுடைய கீர்த்திக்குக் காரணமாய் இருக்கிறது. ஒருவேளை அந்தத் தமிழ்முனிவர் சமஸ்கிருத சுலோகங்களைப்போல் தமிழில் செய்திருக்கிருரோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. குறளினுடைய சுருக்கமான அமைப்பு, பெரிய தமிழ் வாக்கியங்களின் அதிபன் (Master of words) ஆகிய வள்ளுவருடைய சொற்களைச் சாத்திரம்போல் கருதும்படிச் செய்கிறது. அவைகள் மேலான நீதிவிதிகள். மொழிக்குக் கஷ்டமாயுள்ள குறுகிய இரண்டடிகளில் செய்யுள்களை இலக்கண வரம்பிற்கு உட்பட்டும், அரியபெரிய பொருள்களை எல்லாம் அவ்வளவு சுருக்கியும் எப்போதும் போற்றற்குரியதாகவும், பல தலைமுறைகள் கொண்டாடக் கூடியதாகவும் ஆக்கியது புலவரின் ஆழ்ந்த அறிவின் திறத்தைக் காட்டக்கூடியதாயிருக்கிறது. வள்ளுவர் சமஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்த்தார் என்பது பொருந்தாததாகும். குறள் இலக்கிய சங்கிரகமுமன்று; ஆனல் ஒருவனுடைய தூய்மையானதும் முழுமையுமான வேலைத்திறன். நெய்யும் தொழிலையுடைய குலத்தைச்சேர்ந்த வள்ளுவர், உலக மகா மேதாவிகளில் ஒருவர். எல்லாப் பொருள்களையும் தன்னிடத்தே கொண்டதும் வள்ளுவராலேயே இயற்றப்பட்டதுமான குறள் யாதொரு விதமான கெடுதலும் அடையாமலும் காலப்போக்கிலே பழுதுபடாமலும் மாறுபாடான கருத்துக்கள் காணப்படாததாயும் இருக்கிறது.

-G. U. Pope.

மிகவும் பரிசுத்தமுள்ளதும், பக்தியுள்ள எண்ணங்களைத் தன்னகத்தே கொண்டதுமான குறள், தமிழ்மொழியில் தமிழ்ப் பாட்டுக்களாலான ஒரு போற்றத்தகுந்த இலக்கியம். அவர் கூறும் கருத்துக்கள் பகவத்கீதையில் சொல்லியிருப்பவை போன்றதே.

— Dr. Barath

இந்தியர்களுடைய முழுமனத்தையும், கருத்தையும் கவர்ந்த புத்தகங்கள் இரண்டு. அவைகளில் ஒன்று வட இந்தியர்கள் யாவருக்கும் தெரிந்த துளசிதாஸ் ராமாயணம். மற்றொன்று தீபகற்பமாகிய தென்னிந்தியாவில் யாவருக்கும் தெரிந்த குறள். இவ்விரண்டையும் ஆக்கியோர்கள் ஏகேச்சுரவாதியும், நீதிமான்களும் ஆவர். அவ்விருவர்களுடைய பாட்டுக்களும் அவர்களுடைய நாட்டில் அனேக பரம்பரையினர்களுடைய நடத்தைகளைச் சீர்படுத்தி வழிகாட்டியாயும் இருந்துவந்திருக்கிறது. கொச்சையான மறுக்கத்தக்க குறிப்புகள் இல்லாத அவ்விரு நூல்களும் இந்து மதத்திற்குக் கீர்த்தியைக் கொடுக்கக்கூடியனவாயும், அவ்விருவராலேயே தனித்தனியே ஆக்கப்பட்டனவுமாயிருத்தல் அதை இயற்றியவர்களின் பெருமைகளை எடுத்துக் காட்டுவனவாய் இருக்கின்றன. அனேக நூற்றாண்டுகளாக மக்களாலே குற்றம்குறை காணமுடியாதபடி ஆட்சி செலுத்திவந்திருக்கின்றன. அவைகளில் மிகவும் தொன்மையானது குறள்.

—Ferederick Pincott.

நீதிநெறிக்குரிய கருத்துக்களைக்கொண்ட குறட்பாக்கள் தமிழர்களால் மிகவும் மேலாகக் கருதப்படுகிறது. அதனுடைய பாட்டு மிகவும் சுலபமானதாயும், உண்மையாகத் தெரிந்துகொள்ள உழைக்கும் ஒருவனுக்கு எளிமையாகப் புரியும்படியாகவும் இருக்கிறது. கவிஞர்களே அறிந்து பாராட்டக்கூடிய கடினமான பாட்டுக்களையுடையதாயும், உயர்வான நீதி முறைகளையும் ஆழ்ந்த நல்லெண்ணத்தின் கருத்துக்களையும், அறிஞர்களுக்கே தெரிந்த வாழ்க்கையின் இன்பத்தையும் உண்மைகளையும் கொண்டதாகவும் இருக்கிறது. குறள் எங்கும் அடிக்கடி எடுத்தாளப்பட்டு வந்தாலும் தமிழர்களால் எவ்வளவு அதிகமாய்க் கற்றறிய வேண்டுமோ அவ்வளவிற்குப் படிக்கப்படவில்லை.

"ஒரு நோக்கு நோய்நோக்கு ஒன்றந்நோய் மருந்து" என்று தலைமகளுளப்பாட்டினைக் குறித்து இக்காமத்துப்பாலில் வரும் ஒரு குறளே டாக்டர் கிரௌல் என்பவரைத் தமிழ்ச் செய்யுட்களை நன்கு மதிக்கச் செய்து, குறளை ஓதியுணரத் தூண்டியதாகும். குறள் செந்தமிழானியன்றதொரு நூல். ஆசிரியர் அந்நூலில் எடுத்தாண்டுள்ள 12,000 சொற்களில் 50 கூட வடசொற்கள் தேறவில்லை. ஆங்கிலத்தில் பனியன் என்பார் எழுதியுள்ள ஆங்கில நடைத்தூய்மையைத் திருவள்ளுவர் விஞ்சுகிறார். குறளின் தூய்மையை நோக்க இதுகாறும் வெளிவந்துள்ள மற்றெந்தத் தமிழ் நூலும் அதனருகிலும் சேர்க்கப்படுவதற்கில்லை. தற்காலம் வழங்கிவரும் தமிழை அஃது என்றென்றும் நின்று கண்டித்தொதுக்கும் பான்மையதாம். தம் தாய்மொழியின் வன்மையையும் இன்னோசையையும்

ஆற்றலையும் திருவள்ளுவர் நன்கு தெரிந்துள்ளார். குறளைத் திருத்தஞ் செய்ய முயல்வது முடியாததொன்றாகும்; அதன் அமைப்பைச் செம்மைப் படுத்துவதென்பதும் அப்படியே. அஃது ஓர் ஒப்பற்ற இழைப்புச் சித்திர மாகும். அதில் இழைக்கப்பட்டுள்ள மணிகளில் ஏதாவது ஒன்றின் பருமனையோ, வடிவையோ, இன்றேல் நிறத்தையோ ஒரு சிறிது மாற்றினு லும் அழகனைத்தும் சிதைந்துவிடும்.

இத்தகைய ஒரு பெரியாரையும், ஒப்பரிய நூலையும் பயந்த ஒரு நாடு இகழ்ந்தொதுக்கக் கூடிய இழிதன்மை வாய்ந்த ஒரு நாடாக இருத் தல் முடியாது என்பதை நினைக்க, அந்நினைவு ஆறுதலையளிக்கின்றது. அப்பெரியார் எடுத்தோதும் நீதிகள், நல்லொழுக்கமே விளைநிலமாய் அமைக்கக்கூடிய பண்புவாய்ந்த ஒரு நாட்டிலன்றி விளையா. எனவே, தமிழ்மக்களின் விடுதலைக்காகப் பாடுபடுவோர்க்குத் திருகுறள் தனிப்பட்ட பேருதவி நல்குவதாகும்.

—டாக்டர். ஜெ. லாசரஸ்.

குறள் மிகச் சிறந்தநீதிகளைக் குறித்தெழுந்ததொரு செய்யுள் நூலாகும் ஆசிரியர் தம்முடைய நூலைக் கடவுள் வாழ்த்துக்கூறித் தொடங்கியுள்ளார்; அவர் கடவுள் வாழ்த்துக்கூறியுள்ள திறத்தை நாம் வியந்து போற்றுமலிருக்க முடியாது.

—ரெவரெண்டு எலிஜா ஹூல்.

கருத்திலும் நடையிலும் ஒப்புயர்வற்று விளங்கும் நூல்களில் தலையாயதான திருக்குறள், அந்நாட்டிற்குரிய நூல்களில் ஒரு பகுதியா யிருப்பதாலும், மிகவும் உண்மையான தனிச்சிறப்பு வாய்ந்திருப்பதாலும் நமது கருத்தை ஈர்க்க வல்லதாயிருக்கின்றது. சிற்சில வகுப்பினர்க்கு மட்டும் உரியவாய உண்மைகளைப் பொருட்படுத்தாது ஒதுக்கி, மக்கள் யாவருக்கும் ஒருங்கே அமைவனவாய உண்மைகளைமட்டுமே தம் நூலில் ஆசிரியர் எடுத்துக் கூறியுள்ளார்; இதனால் மனு நூலிலும் ஏனைய சாத்திரங் களிலும் காணப்படும் பல சுவையற்ற பழக்கவழக்கங்கள் இடம் பெறுமல் நீக்கப்பட்டு நூனடை பொதுவில் ஒரு மேம்பாட்டையடைந்து பொலிகிறது.

—ரெவரெண்டு டபிள்யூ. எச். ட்ரூ.

கிரேக்கர்களிடம் ஹோமர் திகழ்ந்ததுபோலத் தமிழர்களிடம் திருவள்ளுவர் திகழ்ந்தார் என்பது மறுக்கமுடியாததோர் உண்மையாகும்; திருக்குறள் ஒரு கல்விக் களஞ்சியம், பாவலர்க்குறுதுணை, ஒப்புயர்வற்ற

சொற்றிறம் நிறைந்த ஒழுக்க நூல். இதனுல் தமிழர்களின் மனப்போக்கு உயரொழுக்கத்தையே நாடி நின்றது என்பது தெற்றெனு விளங்கும்.

—சார்லஸ் ஈ. கவர்.

திருவள்ளுவர் தெய்வத்தன்மை வாய்ந்த புலவர் பெருமானுகவே மதிக்கப்பட்டுவந்தார். தமிழ் நூல்களில் மிகவுஞ் சிறந்த நூல்களாக எல்லோராலுங் கருதப்படுகிற குறளும் சிந்தாமணியும் வடமொழித் தொடர்பு சிறிதுமிலலாமல் அமைப்பிலும், யாப்பிலும தனிச்சிறப்பு வாய்ந்துள்ளன.

—ரைட் ரெவரெண்டு. ராபர்ட் கால்டுவெல்.

தமிழ்நூல்களில் தலைசிறந்து விளங்குவது திருககுறளே. உயர்வுடனும் தூய்மையுடனும் உளளக கருத்துககளை எடுத்து விளககிய நூல்களில் அதுவும் ஒன்ருகும். திருககுறளாசிரியர் வகுப்புக்களையும், மக்கட் பிரிவுகளையும், நம்பிக்கைகளையும பொருட்படுத்தாமல் மககட் குழுவிற்கே உரிய வகையில் எழுதிச்செல்கிருர்; ஆன்ற நல்லொழுக்கத்தையும் கலப்பற்ற நீதியையுமே வகுத்துச் செல்கிருர்; வாய்மையும அறமும அறங்களில் தலைசிறந்தன என்று பறைசாற்றுகிருர்; இலலறவாழ்க்கைக்கும, குடியியல் வாழ்க்கைககுமுரிய உயர்ந்த ஒழுகக முறைகளை ஒன்றுபடுத்தி விதித்துச் செல்கிருர்; உயர்ந்த கருததுககளை எண்ணுவதிலும், அவற்றைச் சீரிய முறையில் எழுதுவதிலும், வியககத்தகக வகையில் எழுதி அவற்றைச் செய்யுண்முறையில் அமைப்பதிலும, தெய்வத்தன்மை வாய்ந்த இயற்கை அன்னையின் இயம்பொணு எழில் நலங்களைத் தூய மனத்துடன் உன்னி உன்னி உளங்கொள்வதிலும், அகத்தெழும இன்பநிகழ்ச்சி நுணுககங்களை மிக எளிதானமுறையில் ஆய்ந்தோதிச் செல்வதிலும் எத்தகைய குறைவும் இல்லாத நிறைந்த ஆற்றல் படைத்தவராய் இலங்குகிருர்.

—எம். ஏரியல்.

இந்நூல் பயக்கும் இன்பம் இத்தகையதென்று எம்மொழிபெயர்ப்பும் எடுத்துக்காட்ட முடியாது. உண்மையைக் கூறுமிடத்து, வெள்ளிச் சரிகைப் பையிலிட்ட பொன் இலந்தைக் கனியாகும் அது.

—டாக்டர் கிரௌல்.

உயர்ந்த கருத்துககளும் தூய்மையான ஒழுகக விதிகளும், தூய்மையாக நினைப்பதும் எழுதுவதும் இயற்கையில் காணக் கூடியனவே என்னும் உண்மையைத் தெரிவிகக வல்லதாயிருப்பதால் குறள், ஆர்வத்துடன் ஓதப்படும். இந்நூலாசிரியர் தாங்கூறவந்த நீதியுரைகளை அழுத்தந்

திருத்தமாகச் செய்யுணடையிற் கூறுவதையொப்பஉள்ள மற்ஞெரு நூலை மககளாய்ப் பிறந்தோர் பேசும வேறு எம்மொழியிலுங் காணல முடியாது.

—ரெவரெண்டு பர்ஸிவல்.

வாழகக்கையின் முப்பேரிலககுகளான அறம, பொருள் இன்பம என்ற மூனறையுங் குறிதது ஆககப்பட்ட 1330 குறுஞ்சொற்ஞெடர்களைக் கொண்ட திருவள்ளுவர் திருககுறள், உலக இலக்கியங்களிலேயே பொறுககி யெடுத்த மணிகளில ஒனருகும. புததர்களும், சமணர்களும், வைஷ்ணவர் களும, சைவர்களும, பறையர் வகுப்பைச் சேர்ந்த புலவரான அம் முனிவரைத தததம மதத்தைச் சேர்நதவா் என்று உரிமை கொண் டாடுகின்றனர். அவர், அவற்றில எம்மதத்திற்கும் உரியரல்லர், ஆனல், எல்லாவற்றிற்கும அவர் ஒருங்கே உரியவர் என்றே கூறலாம்.

—பேராசிரியர் விண்டர்னிட்ஸ்.

## மொழிபெயர்ப்புக்கள் :

திருககுறளின் இனிமையை உணர்ந்த பிறமொழிப் பேரறிஞர்கள் தத்தம் மொழியில் மொழிபெயர்த்திருககின்றனர். அவற்றில் வ. வே. சு. ஐயர் அவர்களுடைய ஆங்கில மொழிபெயர்ப்பின் முகவுரையிலிருந்தும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தொகுத்த திருவள்ளுவர் நினைவு மலரிலிருந்தும சில இங்கே தரப்படுகின்றன.

வீரமாமுனிவர் எனப் பெயர்தாங்கி 42 ஆண்டுகள் தமிழ்நாட்டி லிருந்து தொண்டுசெய்த ரெவரெண்டு ஸி. ஜே. பெஸ்கி என்பார் முதல் இரண்டு பாலகளையும் லத்தின்மொழியில் கி பி. 1730-ல் மொழிபெயர்த்தார். டாகடர் கிரௌல் என்பார் லத்தீன் மொழியிலும் ஜெர்மன் மொழியிலும் 1856-ல மொழி பெயர்ககத் தொடங்கினர். ஆனல அது முற்றுப்பெற வில்லை. 1820 க்கு மேல் 1886-ககுள் எல்லிஸ், ட்ரூ, லாஸரஸ். W. H. போப் என்பவர்கள் ஆங்கிலத்தில் முழுதும் மொழிபெயர்த்தனர். 1767-ல் எம். ஏரியல் என்பாரும், டுமாஸ் என்பாரும், 1867-ல் எம். லெமரேஸ் என்பாரும் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்திருக்கின்றனர்.

ஜெர்மன் மொழியில் 1803-ல் ஏ. எப். காமெரர்ஸ் என்பார் மொழி பெயர்த்திருக்கிறார். சில அதிகாரங்களை மட்டும் 1847-ல் பிரடரிக் ரூக்கர்ட் என்பாரும் அதேமொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

தென்னிந்திய மொழிகளுள் ஒன்ருகிய தெலுங்கில் 1887-ல் கனுப்பர்ததிவேங்கடராம ஸ்ரீ வைத்தியநாதா அவர்களும், சமஸ்கிருதத்தில்

நீதி குஸுமமாலா என்ற பெயரோடு ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் அவர்களும், இந்தியில் 1924-ல் க்ஷேமாநந்த ராஹத் என்பாரும் மொழிபெயர்த்தனர்.

இப்போது இந்தியில் காசிப் பல்கலைக்கழகம் திரு. B. D. ஜெயின் M.A.,L.L.B., அவர்கள், திருப்பனந்தாள ஸ்ரீ காசிமடத்ததிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளவர்களின் ஆணையின் வண்ணம மொழிபெயர்த்துக 'குமரகுருபரன்' என்னும மாத இதழில் வெளியிட்டு வருகிறார்.

முடிப்புரை :

இலக்கியமே மக்களின் நாகரிகச் சின்னம். இலக்கியங்களில், வரலாற்றால் ஒழுக்கம் கற்பிப்பனவும நேர்முகமாகவே ஒழுககத்தைக் கற்பிப்பனவும என இருவகையுண்டு. அவற்றுள் திருககுறள் நேரே ஒழுக்கத்தை அறிவிப்பது. செந்தமிழைவிடத திருககுறளே சிறந்தது. தமிழறியாத நாடுகளிலும் திருக்குறளோடு திருவள்ளுவரும் பரவியிருக கின்றார். திருக்குறள் கவிஞன் வாழவியலையும காலச்சூழலையும் கடந்து எல்லார்ககும எல்லாவற்றிற்கும் பொதுவாக இருப்பதால் அழியாப் பெருமையுடன் விளங்கிவருகிறது. ஒழுககத்தத்துவத்தை உணர்த்துகிறது. இந்நூல் பன்னிருபெயர்களால் பாராட்டப்படுகின்றது. கீழ்ககணககில் ஒன்றாக இருப்பினும் தகுதியால் யாவற்றினும மேலானது. பாவினுள் தலைமையாய குறள் வெண்பாவான் அமைந்ததே இதன் தனிச் சிறப்பு. நூல் தோன்றியகாலத்திலேயே புலவர்கருத்திற்புகுந்து தமதாககிப் பாராட்டுமபெற்றது. பிற்காலப் புலவர் பெருமககளும இறைவனாகவே எண்ணி வழிபடத்தொடங்கினர். இநநூலில் வள்ளுவனாருடைய கல்வி யறிவும உலகியலறிவும் அனுபவமும சேர்ந்து மிளிர்வதால இது முதனூலே யன்றி வழிநூலாகாது.

திருக்குறள் அறத்துப்பால, பொருட்பால, காமத்துப்பால் என மூன்று பால்களையுடையது. நூற்று மூப்பத்துமூன்று அதிகாரங்களை யுடையது. அறத்துப்பாலில் இல்லற துறவறங்களினுடைய கடமை களும், பயனும், இவற்றை நுகரச்செய்யும ஊழும் உணர்த்தப் பெறுகின்றன. பொருட்பால் அரசியல் நூல். அதன்கண் அரசினது உறுப்புக்களும், அவற்றினது இயல்புகளும உணர்த்தப்பெறுகின்றன. ஆட்சி குடிகளுக்காக அன்றி அரசனுகிய தனக்கன்று என்பது பலவேறு இடங்களில் வற்புறுத்தப்படுகின்றது. பகுத்துண்டலும், தன்னலம் பேணுமையும், அரசிறைகளை அளவறிந்து - தாமறிந்து வாங்குதலும்,

காட்சிக்கெளிமையாதலும் ஆகிய இவையே ஆட்சியைநீட்டிப்பன என்பது அறிவிக்கப்படுகின்றன. காமத்துப்பால், இன்பத்துப்பால் எனவும் அழைக்கப்பட்டதுண்டு. ஆனால் வள்ளுவர்கருத்து காமத்துபால் எனவே கருத இடந்தருகிறது. காமத்துப்பால் இயற்பாகுபாடுகள் அகப்பொருள் அமைதியை ஒட்டியே பிரிககப்பட்டன.

நீதியுரைக்கவந்த வள்ளுவர் மரஇயல்பு, விலங்கியற்கை, மக்கள் நாகரிகம், தொழில், பழக்கவழககங்கள், நிலைவேறுபாடுகள், சடங்கு, தெய்வ வழிபாடு, உணவு முதலியவற்றையும வரலாற்றுநூல்போல வகுத்துச்செல்கின்றார். கலையுணர்ச்சியில் இசையும் ஓவியமுமே நுண்கலையாகப் பாராட்டப்படுவன. அவற்றின் இயலபும் அறிவிககப்படுகின்றது. அணியில்லா இலக்கியம் ஆடையில்லா மனிதன்போல. ஆதலால் அணியின் தாயாகிய உவமை ஆழ்ந்து அநுபவிககும் நெறியில் எடுத்தாளப்பெறுகின்றது. இத்தகைய இலககியத்தை ஆககிய ஆசிரியர் வரலாறு செவிவழிச்செய்தி கொண்டும், பிற்காலத்து எழுத்துதவிகொண்டும் ஆராயப்பெற்றது. சமய நிலையில் வள்ளுவர் எல்லாராலும் விரும்பப்படுகின்றார்; தம்மவராகப் பாராட்டப்படுகிறார். இது அவர்கு உள்ள தனிச்சிறப்பு.

இந்நூலுக்கு உரையியற்றியார் பதின்மர். இவர்களுள் பரிமேலழகரே எல்லாவகையினும சிறந்தவர். பிற்காலத்தில உரையியற்றியவர் இராமாநுஜகவிராயர். இவர் தமது கருத்தை வேறுரை என்ற தலைப்பில் குறித்துச்செலவர். நுண்பொருள்மாலையாக வேண்டிய இடங்களில்மட்டும் குறிப்புரை எழுதியவர் காரிரத்னகவிராயர்.

இந்நூலை மேனாட்டார் தமது அறிவுக் கருவூலமாகக்கொண்டு மொழிபெயர்த்தும் பாராட்டியும் உள்ளார்கள். இத்தகைய ஆராய்ச்சி அமைப்புக்களை வைத்துக்கொண்டு திருக்குறள் முதனூலே என்பதும், கருத்தொற்றுமை மட்டுங்கொண்டு காலத்தால பிந்தியது என்றலும் வழிநூலென்றலும் பொருந்தாதன என்பதும் துணியப்பெற்றன.

# திருவள்ளுவமாலை.

1. திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ(டு)
உருத்தகு நற்பலகை ஒக்க—இருக்க
உருத்திர சன்மர் எனஉரைத்து வானில்
ஒருக்கஓ வென்றதோர் சொல். —அசரீரி.

2. நாடா முதல்நான் மறைநான் முகன்நாவில்
பாடா இடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாற!பின்
வள்ளுவன் வாயதென் வாக்கு. —நாமகள்.

3. என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல். —இறையனார்.

4. நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன்
தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நல்நெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி. —உக்கிரப் பெருவழுதியார்.

5. தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனைஅளகு
வள்ளைக் குறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி. —கபிலர்.

6. மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தம்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தார் ஓர்ந்து. —பரணர்.

7. தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால்
ஆனா அறம்முதலா அந்நான்கும்—ஏனோருக்(கு)
ஊழின் உரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்றும் மற்று. —நக்கீரர்.

8. அறம்பொருள் இன்பம்வீ டென்னுமந் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை அவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார். —மாமூலனார்.

9. ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி. —கல்லாடர்.

10. மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால். —சீத்தலைச் சாத்தனார்.

11. சிந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேன்அளாய்
மோந்தபின் யார்க்கும் தலைகுத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு. —மருத்துவன் தாமோதரனார்.

12. தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதாம்
அப்பால் ஒருபாவை ஆய்பவோ வள்ளுவனார்
முப்பால் மொழிமூழ்கு வார். —நாகன்தேவனார்.

13. பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறும் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவர லலால. —அரிசில்கிழார்.

14. கான்நின்ற தொங்கலாய்! காசிபனார் தந்ததுமுன்
கூடின் றளந்த குறள்என்ப—நூன்முறையான்
வான்நின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனார்
தாம்நின் றளந்த குறள். —பொன்முடியார்.

15. ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார்—ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று. —கோதமனார்.

16. ஆயிரத்து முந்நூற்று.முப்ப தருங்குறளும
பாயிரத்தி னோடு பகர்ந்ததன்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ? மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம். —நத்தத்தனார்.

17. உள்ளுதல் உள்ளி உரைத்தல் உரைத்ததனைத்
தெள்ளுதல் அன்றே செயற்பால—வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வார்
எப்பா வலரினும் இல. —முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்.

18. சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும்
போற்றி உரைத்த பொருளெல்லாம்—தோற்றவே
முப்பால் மொழிந்த முதற்பா வலர்ஒப்பார்
எப்பா வலரினும இல். —ஆசிரியர் நல்லந்துவனார்.

19. தப்பா முதற்பாவால் தாம்மாண்ட பாடலினால்
முப்பாலின் நாற்பால் மொழிந்தவர்—எப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனம்மகிழத்
தெய்வத் திருவள் ளுவர். —கீரந்தையார்.

20. வீடொன்று பாயிரம் நான்கு விளங்கறம்
நாடிய முப்பத்து மூன்றொன் றூழ்—கூடுபொருள்
எள்ளில எழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை. —சிறுமேதாவியார்.

21. உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு. —நல்கூர்வேள்வியார்.

22. அறம்நான் கறிபொருள் ஏழொன்று காமத்
திறம்மூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலும் மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலும ஒழிந்த பொருள. —தொடித்தலை விழுத்தண்டினார்.

23. செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும பொருள்ஒன்றே—செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல். —வெள்ளி வீதியார்.

24. ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு. —மாங்குடிமருதனார்.

25. பாயிரம நான்கில் அறம்இருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—ஆய
அறத்துப்பால் நாலவகையா ஆய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து. —எறிச்சலூர் மலாடனார்.

26. அரசியல் ஐயைந் தமைச்சியல் ஈரைந் (து)
உருவல அரண் இரண்டொன் றொண்கூழ்—இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன் (று)
எண்பொருள் ஏழாம் இவை. —போக்கியார்.

27. ஆண்பால்ஏழ் ஆறிரண்டு பெண்பால் அடுத்தன்பு
பூண்பால் இருபால்ஓர் ஆறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு. —மோசிகீரனார்.

28. ஐயாறும் நூறும் அதிகாரம் மூன்றுமாம்
மெய்யாய வேதம் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தான் உலகிற்குத் தான்வள் ளுவனாகி
அந்தா மரைமேல் அயன்.
—காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்.

29. எல்லாப் பொருளும் இதன்பால் உள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்—சொல்லால்
பரந்தபா வால்என் பயன்?வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை. —மதுரைத் தமிழ்நாகனார்.

30. எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாம செப்பவரும்—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர். —பாரதம்பாடிய பெருந்தேவனார்.

31. மணற்கிளைக்க நீர்ஊறும் மைந்தர்கள் வாய்வைத் (து)
உணச்சுரக்கும் தாய்முலை ஒண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்(கு)
ஆய்தொறும ஊறும அறிவு. —உத்திரசன்மகண்ணனார்.

32. ஏதமில் வள்ளுவர் இன்குறள்வெண் பாவினால்
ஓதிய ஒண்பொருள் எல்லாம் - உரைத்ததனால்
தாதவிழ் தார்மாறா தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன. —பெருஞ்சித்திரனார்.

33. இன்பம் பொருள்அறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்—மன்பதைகட்(கு)
உள்ள அரிதென் றவைவள் ளுவர்உலகம்
கொள்ள மொழிந்தார் குறள். —நரிவெரூஉத்தலையார்.

34. புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேல்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றும்
கறங்கிருள்மா லைக்கும் பெயர்.
—மதுரைத்தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார்.

35. இன்பமும் துன்பமும் என்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ—அன்பொழியா(து)
உள்ளி யுணர உரைத்தாரே ஓதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.
—மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார்.

36. பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநதம்
ஆவிற் கருமுனியா ஆனைக—கமரர்உம்பல்
தேவில் திருமால் எனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா. —கவிசாகரப் பெருந்தேவனார்.

37. அறம்முப்பத் தெட்டுப் பொருள்எழுப தின்பத்
திறம்இருபத் தைந்தால் தெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓத அழுக் கற்ற துலகு. —மதுரைப்பெருமருதனார்.

38. அறம்முதல் நான்கும் அகலிடத்தோர் எல்லாம்
திறமுறத் தேர்ந்து தெளிய—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பால்முறைநேர் ஒவ்வாதே
முன்னை முதுவோர் மொழி. —கோவூர்கிழார்.

39. தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற சிறந்திடுமுப் பால்பகரார்—நாவிற்(கு)
உயவிலலை சொற்சுவை ஓர்வில்லை மற்றும்
செயலில்லை என்னும் திரு. —உறையூர் முதுகூற்றனர்.

40. இம்மை மறுமை இரண்டும் எழுமைக்கும்
செமமை நெறியின் தெளிவுபெற—மும்மையின்
வீடவற்றின் நானகின் விதிவழுங்க வள்ளுவனர்
பாடினார் இன்குறள்வெண் பா. —இழிகட்பெருங்கண்ணனர்.

41. ஆவனவும ஆகா தனவும் அறிவுடையார்
யாவரும் வலலார் எடுத்தியமபத்—தேவர்
திருவள் ளுவர்தாமும் செப்பியவே செய்வார்
பொருவில் ஒழுக்கம்பூண் டார்.

—செயிர்க்காவிரியார் மகனர் சாத்தனர்.

42. வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தார்—ஆதலால்
உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு. —செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனர்.

43. ஆரியமும செந்தமிழும ஆராய்ந் திதனின் இது
சீரிய தென்ரென்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேதம் உடைத்துத் தமிழ்திரு வள்ளுவனர்
ஓது குறட்பா உடைத்து. —வண்ணக்கஞ்சாத்தனர்.

44. ஒருவர் இருகுறளே முப்பாலின் ஓதும்
தருமம் முதலநான்கும் சாலும்—அருமறைகள்
ஐந்துஞ் சமயநூல ஆறும்நம் வள்ளுவனர்
புந்தி மொழிந்த பொருள். —களத்தூர்கிழார்.

45. எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுககில் வனப்பணி வண்ணம்—இழுககின்றி
என்றெவர் செய்தன? எல்லாம் இயம்பின
இன்றிவர் இன்குறள்வெண் பா. —நச்சுமனர்.

46. கலைநிரம்பிக காண்டற் கினிதாகிக் கண்ணின்
நிலைநிரம்பும் நீர்மைய தெனினும்—தொலைவிலா
வானூர் மதியம தனைகுண்டோ வள்ளுவர்முப்
பானூல் கயத்தின் பயன ? —அக்காரக்கனிநச்சுமனர்.

47. அறம்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல்தீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு. —நப்பாலத்தனார்.

48. உள்ளக் கமலம் மலர்த்தி உளத்துள்ள
தள்ளற் கரியஇருள் தள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு. —குலபதிநாயனார்.

49. பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து. —தேனீக்குடிக்கீரனார்.

50. அறன்அறிந்தேம் ஆன்ற பொருள்அறிந்தேம் இன்பின்
திறன்அறிந்தேம் வீடு தெளிந்தேம்—மறன்எறிந்த
வாளார் நெடுமாற! வள்ளுவனார் தம்வாயால்
கேளா தனஎல்லாம் கேட்டு. —கொடிஞாழல் மாணிபூதனார்.

51. சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா. —கவுணியனார்.

52. வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறஇருளைத்—தெள்ளிய
வள்ளுவர் இன்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி. —மதுரைப்பாலாசிரியனார்.

53. வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்கும்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்—தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து. —ஆலங்குடிவங்கனார்.

# திருக்குறளைப்பற்றிய பழம் பாடல்கள்.

குறுமுனிவன் கோத்தெடுத்த கொற்சேரி யூசி
உறுவிலைக்கு விற்றதனோ டொக்கும் – தெறுகலியைச்
செற்றவேல் மாற திருவள் ளுவனார்வாய்ச்
சொற்றகுழப் பாலவாழ்த்துச் சொல்.

முப்பாலும் உண்டோம் முலைப்பால் இனிநுகரோம்
அப்பாலுக கப்பாலும் ஆயினோம் — எப்பொருளும்
உள்ள படியுணர்ந்தோம ஓதிக குறைதீர்ந்தோம்
வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து.

எப்பாலும் ஏத்துவாம் இன்பம் பொருளறமா
முப்பாலு மாயிரத்து முந்நூற்று — முப்பதா
ஓரடி முக்கா லுரைத்ததிரு வள்ளுவனார்
ஈரடி முக்காலு மே.

அவனே புலவன் அவனே அறிஞன்
அவனே தமிழை அறிந்தோன் — சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
உள்ளுவ தேவன் உளன்.

வாழிமழை ஆனினங்கள் வாழிமறை ஆகமங்கள்
வாழிமனு நீதிமன்னர் மன்பதைகள் — வாழியரோ
தெள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்தமுகில்
வள்ளுவர் பாத மலர்.

மாயோன் வடிவம் போல வேள்வியின்
முன்னொரு குறளுரு வாகிப் பின்னது
மூவடி முறைமையிற் செல்லாது தாந்தம்
ஈரடி யியக்க நிரம்பா அளவையின்
உலக மூன்று அளந்தன
புலவன் வள்ளுவன் குறள்வெண் பாட்டே.




தெய்வப்புலவர் திருவள்ளுவர்

உ

குருபாதம்

# திருக்குறள் - உரைவளம்

## 3. காமத்துப்பால்

### க. களவியல்

**தொடர்புரை:**

பரிமேலழகர்:— இனி அப்பொருளைத் துணைக்காரணமாக உடைத்தாய் இம்மையே பயப்பதாய இன்பம் கூறுவான் எடுத்துக்கொண்டார். ஈண்டு இன்பம் என்றது ஒருகாலத்து ஒருபொருளான் ஐம்புலனும்நுகர்தற் சிறப்புடைத்தாய காம இன்பத்தினை. இச்சிறப்புப்பற்றி வடநூலுள் போசராசனும் 'சுவை பலஎன்று கூறுவார் கூறுக; யாம்கூறுவது இன்பச் சுவை ஒன்றனையுமே' என இதனையே மிகுத்துககூறினான் இது புணர்ச்சி, பிரிவு என இருவகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவோ எனின், இவர் பொருட்பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப்பற்றி ஓதுதலான், அவ்வாறே அவற்றைப் பிரிவின் கண் அடக்கினார் என்க.

இனி அவைதம்மையே தமிழ்நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக களவு என்றும், பிரிவைக் கற்பு என்றும் பெரும்பான்மைபற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதிபயப்ப உலக நடையோடு ஒப்பும் ஒவ்வாமையும் உடையவாக்கிக் கூறுகின்றார். அக்கைகோள் இரண்டனுள்ளும் களவாவது பிணி மூப்பு இறப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமையுடையராய தலைமகனும் தலைமகளும் பிறர்கொடுப்பவும் அடுப்பவுமன்றிப் பால்வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்துவருவது அதனை ஏழு அதிகாரத்தால் கூறுவான்தொடங்கி, முதற்கண் தகையணங்குறுத்தல் கூறுகின்றார்.

**பரிப்பெருமாள்:**— [1]காமத்துப்பாலாவது மைந்தர்க்கும் மகளிர்க்கும் கலவியானாகிய இன்பப்பகுதி கூறுதல். அஃது யாங்கனம் கூறினார் எனின், ஒருவனுக்கு இன்பம் நுகர்தற்கு இடம் கன்னியரும் கணிகையரும் பிறர் தாரமும் என மூவகையல்லது இல்லை; அவற்றுள் பிறர்மனைக்கூட்டம் பாவம் தருமென்று அறத்துப்பாலுள் கூறிக், கணிகையர்கூட்டம் பொருட்கேடு தரும் என்று பொருட்பாலுள் கூறினாராதலின் அறனும் பொருளும் இன்பமும் வழுவாமல் வருவது கன்னியர்கூட்டம்[2] என்று அது ஈண்டுக் கூறப்பட்டதென்க. அதுதான் எட்டு வகைப்படும்: பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், அசுரம், இராக்கதம், பைசாசம் என. அவற்றுள் அசுரம் முதலான மூன்றும் ஒருதலைக்காமம் ஆகலானும், பிரமம் முதலான நான்கும் ஒப்பில்கூட்டமாகலானும், அவையிற்றுக்கு இன்பச் சிறப்பு இன்மையின் காந்தருவநெறியே ஈண்டுக் கூறப்பட்டது என்று கொள்ளப்படும். என்னை? [3]'முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே, பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே' என்றும், [4]'காமக் கூட்டம் காணுங் காலை, மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள், துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே" என்றும் இலக்கணம் கூறுதலின். அஃதாவது கொடுப்போரும் அடுப்போரும் இன்றி ஒத்தார் இருவர் தாமே கூடுங் கூட்டம்; என்னை? [5]'அதுவே, தானே அவளே தமியர் காணக் காமப் புணர்ச்சி இருவயின் ஒத்தல்' என்பவாகலின்.

இச்சூத்திரம் நாடக வழக்கிற்குக் கூறியது ஆகலின், ஈண்டு உரைக்கின்ற காமமும் நாடக வழக்கோ எனின், இச்சூத்திரம் கூறுகின்றுழி உரையாசிரியர் உலகத்தோடு ஒத்தும் ஒவ்வாதும் வருமென்று பொதுப்படக் கூறினாராதலின், இஃது உலக வழக்கை நோக்கி யெடுத்துக் காட்டப்பட்டதென்க. இக் காமப்புணர்ச்சியை வடநூலாசிரியர் அராகத்தார் கூடுங்கூட்டம் என்ப. இதுதான் மூவகைப்படும்; அருமையிற் கூடலும், பிரிந்துகூடலும், ஊடிக்கூடலுமென. அருமையிற் கூடுதலாவது கூடுதற்கு எளிது அன்மையால் ஒருவர் ஒருவரைக் கண்ட காலந்தொட்டும் ஒத்த நினைவினராய் நின்று கூடுதல். பிரிந்து கூடுதலாவது இவ்வாறு கூடினார் பின்பு ஒருகாரணத்தால் பிரிந்து அதன்பின் கூடுதல். ஊடிக் கூடலாவது தலைமகன்மாட்டுத் தவறுகண்டு புலந்த தலைமகளைப் புலவி நீக்கிக் கூடுதல்.

---

[1] மணக்குடவர் "தகையணங்குறுத்தலாவது" என்று தொடங்குகிறார்.
[2] இதற்குமேற்பட்ட உரைப்பகுதி மணக்குடவர் உரையில் காணப்படவில்லை.
[3] தொல். களவியல் 14. [4] ஷை, 1. [5] இறையனார். 2.

இவை மூன்று கூட்டமும் இவற்றது நிமித்தமும் இக்காமத்துப் பாலுள் கூறுவது தமிழ்நடையன்றாதலின் இதற்கு இலக்கணம் யாங்கனம் பெறுது மெனின், இவ்விலக்கணம் தமிழ் நடையாயின், அகப்புறமென்று கூறுதல் வேண்டும்; அவ்வாறு கூறாது அறம் பொருள் இன்பம் என வடநூல்வழியே கூறினாராதலின் இதற்கு இலக்கணம் வாத்ஸ்யாயனம் என்னும் காமதந்திரத்துச் சுரதவிகற்பம் என்னும் அதிகரணத்துள் கண்டுகொள்க. அன்றியும் *"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல், ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை, தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே' என்றாராதலின். அவற்றுள் இருத்தலும் இரங்கலும் பிரிந்துழி நிகழு மன்றே; அவற்றைப் பிரிவினுளடக்கிப் புணர்தலும் பிரிதலும் ஊடலும் எனத் தமிழ்நடையிற் கூறினும் இழுக்காது.

இதனுள் தகையணங்குறுத்தல் முதலாகப் புணர்ச்சி மகிழ்தல் ஈறாக அருமையிற் கூடலும் அதற்கு நிமித்தமும் ஆகிய அதிகாரம் மூன்றும், நலம்புனைந்துரைத்தல் முதலாகப் புணர்ச்சிவிதும்பல் ஈறாகப் பிரிந்து கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் பதினெட்டும், நெஞ்சொடு புலத்தல் முதலாக ஊடலுவகை ஈறாக ஊடிக் கூடலும் அதற்கு நிமித்தமுமாகிய அதிகாரம் நான்கும் ஆக இருபத்தைந்து அதிகாரம் கூறப்பட்டது. அவற்றுள் முன்பு கண்டறியா அருமையிற்கூடலைப் புணர்ச்சி மகிழ்தல் என்றும், அதனையறிதலாற் பிரிந்துகூடலைப் புணர்ச்சி விதும்பலென்றும், கலாந்தீர்ந்து கூடுதலால் ஊடிக்கூடலை ஊடலுவகை என்றும் கூறினார் என்று கொள்ளப்படும்.

---

* தொல். அகம். 14.

# 109. தகையணங்குறுத்தல்

## தொகுப்புரை :

[இந்தக் கனவியகுழையையுடையாள் பெண்தெய்வமோ ! மயிலோ ! மாதரோ ! யாதெனத் துணியமாட்டாமல் என்மனம் மயங்குகின்றது. இத்துணைப்பேரழகுடையவள் நான் நோக்க எதிராக நோக்கினள். அப்பார்வை, வருத்துந்தெய்வம் படையெடுத்தாற் போலும். கூற்று என்று நூலோர் சொல்வதனை நான் நேரில் இதுவரை கண்டதில்லை; அது, பெண்குணங்களோடு, பொருகின்றகண்களையும் உடையதென இப்போது தெரிந்து கொண்டேன். பெண்மையிற் சிறந்த இப்பேதைநல்லாளின் கண்கள் கண்டவர் உயிரைக்கொல்லுந் தோற்றத்தோடு கூடி, மாறுபட்டும் உள்ளன. இப்பெண்ணின் பார்வை கூற்றோ ! கண்ணோ! பெண்மானோ ! இதனிடம் இம் மூன்று தன்மையும் உள்ளன. இவளது வளைந்தபுருவம் வளையாமல் கண்ணை மறைத்திருக்குமாயின் இவள் கண்கள் எமக்கு நடுக்கஞ்செய்திரா. இவளுடைய முலைமேலிட்ட ஆடை மதக்களிற்றின் முகத்திலிட்ட படாம்போலும். போரில் பகைவரும் அஞ்சும் என்வலிமை இவள் நெற்றியொன்றற்கே உடைந்துபோயிற்றே! பெண்மான்போன்ற பார்வையும் நாணமும் உடைய இவளுக்குப் பிற அணிகள் எற்றுக்கு? கள் உண்டாரை மகிழச்செய்யுமே யல்லாமல், காமத்தைப்போலக் கண்டாரை மகிழச்செய்யாது.]

## அதிகாரப்பொருள் :

பரிமேலழகர் :— *அஃதாவது பொழில்விளையாட்டு விருப்பான் ஆயம் நீங்க அதன்கண் தமியளாய்நின்றாளை, வேட்டவிருப்பான் இளையார் நீங்கத் தமியனாய் வந்து கண்ணுற்ற தலைமகன் அவள் வனப்புத் தன்னை வருத்தமுறுவித்தலைச் சொல்லுதல். இது, கண்ணுற்றபொழுதே நிகழ்வ தாகலின், முதற்கண் கூறப்பட்டது.*

பரிப்பெருமாள் :— *தகையணங்குறுத்தலாவது தலைமகனும் தலைமகளும் எதிர்ப்பட்ட இடத்துத் தலைமகளது கவின் தலைமகனை வருத்துதலும் தலைமகனது கவின் தலைமகளை வருத்துதலும். இது முதலாகக் காமம் நிகழுமாதலின் இது முற்பாடு கூறப்பட்டது.*

பரிதியார் :— *தகையணங்குறுத்தலாவது நாயகியை நாயகன் கண்டு அனுபவித்தல்.*

காளிங்கர் :— *இவ்வாறு பொருட்பகுதி உணர்த்தி மற்று இதன் பின்னரே காமப்பகுதி உணர்த்துவான் எடுத்துக் கொண்டார். அவற்றுள் இது தகையணங்குறுத்தல் என்பது; மற்று இதனால் காட்சி முதலாகிய வகையிறைக்கிளை காட்டுகின்றது இவ்வதிகாரம்.*

1081. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ [1]கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு. (க)

**உரைப்பகுதி :**

தலைமகளுருவு முதலியன முன்கண்டறிவன அன்றிச் சிறந்தமையின்
அவளைத் தலைமகன் ஐயுற்றது.

பரிமே:— கனம் குழை - இக்கனவிய குழையை உடையாள், அணங்குகொல் - இப்பொழிற்கண் உறைவாளோர் தெய்வமகளோ, ஆய் மயில்கொல் - அன்றி ஒருமயில் விசேடமோ, மாதர்கொல் - அன்றி ஒரு மானுடமாதரோ, என் நெஞ்சு மாலும் - இவளை இன்னள் என்று துணிய மாட்டாது என்னெஞ்சு மயங்கா நின்றது.

ஓ அசை. ஆய்மயில்-படைத்தோன் விசேடமாக ஆய்ந்துபடைத்த மயில்; மயிற்சாதியுள் தெரிந்தெடுத்த மயில் என்றுமாம். கனங்குழை ஆகுபெயர். கணங்குழை என்று பாடம் ஓதிப் பலவாய்த்திரண்ட குழை என்று உரைப்பாரும் உளர். எழுதலாகாவுருவும் தன்வருத்தமும்பற்றி அணங்குகொல் என்றும், சாயலும் பொழில்வயின்நிற்றலும்பற்றி ஆய் மயில்கொல் என்றும், தன்னெஞ்சம் சென்றமையும் அவளெதிர்நோக்கிய வாறும்பற்றி மாதர்கொல் என்றும் கூறினான்.

மணக்குடவர்:— இக் கனங்குழையை யுடையாள் தெய்வங் கொல்லோ! நல்லதோர் மயில் கொல்லோ! அன்றி, மக்களுள்ளாள் கொல்லோ! என என்மனம் மயங்கா நின்றது இவற்றுள் யாதோ? என்றவாறு.

பரிப்[2]:— எனக்குத் தெரிகின்றதில்லை என்றவாறு ஆயிற்று; கணங்குழை ஆகுபெயர். ஆய்தல் என்பது தெரிதல்; பலவற்றினுந் தெரியப் படுதலின் நல்லது என்று பொருளாயிற்று. மக்களும் தேவரும் ஒருசீர்மையர் ஆதலின், தெய்வமோ மக்களோ என்று ஐயுறுக; மயிலோ என்றது என்னை? எனின், இம்மணம் காந்தருவம் அன்றே? தலைமகளைத் தலைமகன் எதிர்ப்படுங்கால் யாரும் இல்லாததோர் பொழிலகத்தே எதிர்ப்படுதல் வேண்டும்; ஆயிடை எதிர்ப்பட்ட தலைமகள் இப்பெற்றியாள் இவ்விடைத் தனிவருதல் கூடாதாகலான் ஈண்டு உறைவதோர் தெய்வமோ? என்று ஐயுற்றான்: அதன்பின் பொழிலகத்து வாழ்வன மயில்கள் பலவும் உள;

---

[1] 'கணங்குழை' காளிங்- பரிப்- பாடம். [2] 'இவர் உரையும் மணக்குடவர் உரையும் பெரும்பாலும் ஒத்திருப்பதால் மணக்குடவர் உரையில் இல்லாத பகுதி மட்டும் தரப்படுகிறது.

அவற்றுள் இஃதொரு மயில்விசேடமோ? என்று ஐயுற்றான் என்று கொள்ளப்படும். இதனுட் காட்சிசொல்லி ஐயம் சொல்லுதலன்றே இலக்கணம்: அது கூறாதது என்னை? எனின், கண்ட காலத்துப் புணர்ச்சி வேட்கை தோற்றுகையும் தோற்றாமையும் நிகழுமாதலான், அதனை யொழித்து அதற்குக காரணமாகிய ஐயம் முதலாகச் சொன்னார் என்க. இது தலைமகன் தலைமகளை எதிர்ப்பட்டுழி ஐயுற்றது.

பரி:— தெய்வமகளோ! நடமாடும் மயிலோ! கனத்த குழை யுடைய பூமகளோ! என்றன் சிந்தையை மயககுற்றவள் என்றவாறு.

காளிங்:— செய்குன்றும் இளமரக்காவும் ஆகிய யாரும் இல்ல தோர் சிறையிடத்து மற்று இவண் வல்லிப்பூக கொய்துகொண்டு ஆங்கு இனிது நின்ற தலைமகளை நிரமப முன்தான்செய்த தவப்பயனாகிய விதி வகையால ஓர் வேட்டம்போந்து விளையாடுகின்ற தலைமகன் ஒரு மான் தொடர்ந்துவந்து எய்திக கண்டான்; கண்டபின் தன் நெஞ்சிற்குச் சொலலியது இங்ஙனம் யாரும் இல்லதொர் சிறையிடத்து நின்றும் இவ்வணி யணிநத உருவுடையதோர் தெய்வ வடிவாங்கொல்லோ என்றும், மைககோலமும் வளரிளஞ்சாயலும் வனப்பும உடைய தோர் அழகிய மயிலாங்கொல்லோ என்றும், தக்க செல்வக்குலத் துள் பிறநத மக்களுள் ஒருத்திகொல்லோ என்றும் இங்ஙனம் மயக் குறும் என் நினைவு; என்று தன்னெஞ்சிற்குச் சொல்லித் தளர்வுற்றான் தலைமகன் என்பது பொருள். கணங்குழை என்றது மகரக் குழை. மாலும் என்றது மயங்கும என்றது.

ஆற்றாளுகிய தலைமகன் இவள் கால் நிலம்தோய்தலும், கண் இமைத்தலும், கண்ணிவாடுதலும் பிறவும்கண்டு தெய்வவடிவில் தீர்வுடைய மககளுள் ஒருததியென அறிந்து, மற்று அதுவே பற்றுக்கோடாக உளளுகிய தலைமகன் தன் நெஞ்சிற்குச்சொல்லி அறிவிக்கிறது மேலிற் செய்யுள்.

மேற்கோள்பகுதி :

பேரா:— ஐயுற்று முன்னத்தான் உவமம் செய்ததற்கு மேற் கோள். (தொல். பொருள். 278)

நச்:— தலைவன் ஐயுற்றுக் கூறுவதற்கு மேற்கோள். (தொல். பொருள். 94)

வெண்பாயாப்பான்வந்த அகப்புறக் கைக்கிளைக்கு மேற்கோள். (தொல். பொருள். செய். 118)

மயிலை:— அல்வழிப்புணர்ச்சி பதினுன்கில் இடைச்சொற் றொடருக்கு மேற்கோள். (நன். 151)

சங்கர:— ஷெ (நன். 152)

சிவஞான:— பரிமேலழகியார் 'கனங்குழை' என்றதனை ஆகுபெயர் எனருராரல் எனின் அவர் 'பொச்சாவாககருவியால போற்றிச் செயின்' என்பதற்குப் பொச்சாவாமனம என அந்தககரணத்தைக கருவி யாகக் கூறினர். அதனை மறுத்துப் பொச்சாவாமையாகிய கருவி எனத் தாமும் பெயரெச்சச் சூத்திரத்துள் உரைத்தாராகலின் அவர் கூறியன எல்லாம் உடன்பாடு என்பது தமகரும் கருத்தன்று என்க. (இலக. சூரு. பக். 81.)

பெருந்:— 'இஃது ஐயப்படுவதால் ஐயவுவமையாயிற்று' என்பர். (வீர. 156)

யா. வி:— இது விகற்பக்குறள்வெண்பா செந்தொடையினுன் வந்தமைக்கு மேற்கோள். (சூ. 59)

நம்பி:— கைக்கிளைத்திணையின் பாகுபாடாகிய ஐயத்திற்கு மேற்கோள். (சூ. 120)

*முதுமொழிவெண்பாக்கள் :

" ஆரூரன் கண்டளவில் ஆரூரன் கோயிலிடை
ஆரூரிற் கென்றமைந்த ஆயிழையைத் - தேரும்" —முதுமொழி. 160.

" ஓகையினு ருக்குமணி ஒண்மைகண்டு சூர்கொலெனு
மோகமிக்கான் கண்ணன் முருகேசா - வாகின்" —முருகேசர். 109.

குறிப்பு :

கனங்குழையென்பதனைக் கனவிய குழையையுடையாள் என ஆகுபெயராகக் கொண்டார் பரிமேலழகர். குழைவாயிலாக அணிந்தாளை மனங்கொண்டு வினவுவ னுயின் அவற்குப் பின் ஐயந்தோன்றக் காரணமில்லை; அங்ஙனம தோன்றுமேனும்,

* இப் பகுதியில் காட்டப்பெறும் பாடல்களுக்கு அவ்வக் குறள்களையே ஈற்றடிகளாகச் சேர்த்து வாசித்தல்வேண்டும்.

சூழலும் சாயலும் பற்றி ஆய்மயில்கொல்லோ என ஐயுறமுடியாது; மயில் குழை யணியாது என்பது துணிவாதலின். ஆதலால் கனங்குழைமாதர் என ஒரு தொட ராக்கி யுரைத்தலும் உண்டு. இவ்வுரைக்குத் 'தோன்றுகின்ற உரு' என எழுவாய் வருவித்துரைக்க.

கனங்குழை ஆகுபெயரென்பதை வலியுறுக்க (சிலப்-புறஞ்-65) அடியார்க்கு நல்லார் உரையும், சேனாவரையர் உரையும் துணைசெய்யும். நச்சினார்க்கினியர் இதனை மறுத்து 'முதலிற் கூறும் சினையறிகிளவியும்' என்ற சூத்திரத்தில் உரைப்பர் இவற்றை யடிப்படையாகக்கொண்ட விரிந்ததோர் ஆராய்ச்சியைச் செந்தமிழ்த்தொகுதியில் மறை மலையடிகள் அரசன்சண்முகனார் கட்டுரைகளாலும் சி. கணேசய்யர் கட்டுரையாலும் அறியலாம்.

—தொகுப்பாசிரியர்.

1082. நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
*தானைக்கொண் டன்ன துடைத்து. (உ)

**உரைப்பகுதி:**

மானுடமாதராதல் தெளிந்த தலைமகன் அவள்நோக்கினானாயவருத்தம் கூறியது.

பரிமே:— நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் - இப்பெற்றித் தாய வனப்பினையுடையாள் என் நோக்கிற்கு எதிர்நோக்குதல், தாக்கு அணங்கு தானைக்கொண்டன்னது உடைத்து - தானே தாக்கி வருத்துவ தோர் அணங்கு தாக்குதற்குத் தானையையும் கொண்டுவந்தாற்போலும் தன்மையையுடைத்து.

மேலும் அணங்குகொல் ஆய்மயில்கொல் என்றமையான், இகரச் சுட்டு வருவிக்கப்பட்டது. எதிர்நோக்குதல் என்றமையின், அது குறிப்பு நோக்காயிற்று. வனப்பால் வருந்துதன்மேலும் குறிப்புநோக்கால் வருந் துதல் கூறியவாறு. நோக்கினாள் என்பதற்கு என்னால் நோக்கப்பட்டாள் என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— இவ்வழகினையுடையவள் எனது நோக்கின் எதிர் நோக்குதல், தானே வருத்தவல்ல தெய்வம் அஞ்சாமல்வரும் தானையைக் கொண்டுவந்தது போலும் எ - று.

---

* 'தானைக் கண்டன்ன' பரிதிபாடம்.

தெய்வத்திற்கு உவமை வடிவு. தானைக்கு உவமை நோக்கம். இது மெய்கண்டுவருந்துவான் கண்கண்டதனால் வருத்தமிக்கது கூறியது.

பரிதி:— பார்த்த பார்வைக்கு எதிராகப்பார்த்தபார்வை, தாக்கப் பட்ட அணங்காகிய தெய்வப்பெண்ணின் கூட்டத்தைக் கண்டதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— கண்ணுக்கு இனியதாகிய மிக்க அழகினையுடையாள் நாட்டத்து எதிர்நோக்குந்தன்மை, நெஞ்சே! எத்தன்மைத்தோ எனின், அனைத்துயிரையும் விதிவழி வந்து தாகருவதாகிய கூற்றுப் பின்னும் தன்திறல் போதாமல் சேனையும் கொண்டுவந்த அவ்வொப்புடைத்தென்று இங்ஙனம் வருந்தித் தலைமகன் தன்நெஞ்சிற்குச் சொல்லியது எ - று.

இவ்வுருவு கொண்டதோர் கூற்றம் இது என்று இங்ஙனம் இவன் தன்நெஞ்சிற்குச் சொல்லியறிவிக்கின்றது மேலைச்செய்யுள்.

மேற்கோள்பகுதி:

நச்:— வழிநிலைக்காட்சியில் புகுமுகம் புரிதலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 96)

ஒப்புமைப்பகுதி:

"பூக்கவின் கொண்ட புகழ்சால் எழில் உண்கண்
நோக்குங்கால் நோக்கின் அணங்காக்கும் சாயலாய்"

—கலி. 131 : 4 - 5.

1083. பண்டறியேன் கூற்றென் பதனை இனிஅறிந்தேன்
பெண்டகையால் *பேரமர்க் கட்டு. (௩)

இதுவும் அது.

உரைப்பகுதி:

பரிமே:— கூற்று என்பதனைப் பண்டு அறியேன் - கூற்றென்று நூலோர் சொல்வதனைப் பண்டு கேட்டறிவதல்லது கண்டறியேன், இனி அறிந்தேன் - இப்பொழுது கண்டறிந்தேன், பெண்தகையால் பேர் அமர்க் கட்டு - அது பெண்தகையுடனே பெரியவாய் அமர்த்த கண்களையுடைத்து.

* 'பேரமர்க்கட் பட்டு' பரிதி - பாடம்.

பெண்தகை - நாணம், மடம், அச்சம், பயிர்ப்புஎன்னும் குணங்கள். அவை அவ்வக்குறிகளான் அறியப்பட்டன. அமர்த்தல் - அமர்செய்தல்; பெயரடியாய வினை. பெண்தகையால் இன்பம் பயத்தலும் உண்டேனும் துன்பம்பயத்தன்மிகுதிபற்றிக் கூற்றாக்கிக் கூறினான்.

மணக்:— பண்டு கூற்றின்வடிவு இன்னபெற்றித்தென்பதை அறியேன்; இப்பொழுது அறிந்தேன்; அது பெண்தகைமையோடே பெருத்து அமர்த்த கண்களை யுடைத்து எ - று.

இது நம்மை வருத்துதற்குத் தக்காள் என்னும் குறிப்பு.

பரிப்:— கூற்று என்று அறிந்தேன் என்றது மேல் ஐயப்பட்ட மூன்றினும் எம்மை வருத்துதற்குத் தக்காள் என்னும் குறிப்பு. பெண் தகைமையாகிய நடையும் கண் இமைத்தலும் கண்டு மக்களுள்ளாள் என்று தேறியது.

பரிதி:— கூற்றுவன் என்பது பண்டறியேன்; இப்பொழுது அறிந்தேன் பெண் என்னும் உருவத்தினை யுடைய கண்ணினால் எ - று.

காளிங்:— உலகத்து உயிர் கவர்ந்து ஒழுகும் கூற்று என்ப தொன்று உளது என்று கேட்டறியும் அத்துணை அல்லது பண்டு ஒன்றும் கண்டறியேன்; மற்று அஃது இப்பொழுது கண்டறிந்தேன்; இப்பெண்மைக் கோலத்துடன் பெருத்து அமர்செய்யும் கண்ணினை யுடைத்தென்று; தலைமகன் வருத்தத்தோடு தன் நெஞ்சிற்குச்சொல்லியது எ - று.

## மேற்கோள்பகுதி :

நச்:— ஆன் உருபு ஒடு உருபானதற்குப் பெண்தகையான் என்பதை மேற்கோள் காட்டுவர். (தொல். சொல். 75)

மயிலை:— உடனிகழ்ச்சிப் பொருளில் ஆல் என்னும் மூன்றாம் வேற்றுமையுருபு வந்ததற்கு மேற்கோள். (நன். 296)

சங்கர:— ஷ (நன். 297)

## ஒப்புமைப்பகுதி :

“ வேண்டுருவம் கொண்டதோர் கூற்றம்கொல்” —கலி. 56 : 9.

" பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம்
ஆண்மையில் திரிந்துதன் அருந்தொழில் திரியாது
நாணுடைக் கோலத்து நகைமுகம் கோட்டிப்
பண்மொழி நரம்பில் திவவியாழ் மிழற்றிப்
பெண்மையில் திரியும் பெற்றியும் உண்டென."

—சிலப். இந்திர. 219 - 223.

" வலைவாழ்நர் சேரிவலையுணங்கு முன்றில் மலர்கை ஏந்தி
விலைமீன் உணங்கல்பொருட்டாக வேண்டுருவம் கொண்டு வேறோர்
கொலைவேல் நெடுங்கண் கொடுங்கூற்றம வாழ்வது
அலைநீர்த் தண்கானல் அறியேன் அறிவேனேல் அடையேன் மன்னோ."

—ஷை கானல். பா. 10.

" கடுங்கூற்றம் காணீர் கடல்வாழ்நர் சீறூர்க்கே
மடங்கெழுமென் சாயன் மகளா யதுவே" —ஷை பா. 12.

" கன்னிநீர் ஞாழல் கமழ்பூங்கானல் யான்கண்ட
பொன்னங் கொடியை ஈன்றோர் இல்லை போலுமால்
மன்னன் காக்கும் மண்மேல் கூற்றம் வரவஞ்சி
இன்னதொன்று படைத்ததாயின் எவன் செய்கோ."

—தொல். செய். சூ. 155. மேற்.

" கோமகள் உருவமாய்க் கூற்றம் போந்தது
போமின்நும் உயிருயக் கொண்டு போய்மனம்
காமினம் எனக்கலை சிலம்பு கிண்கிணி
தாமனும வாயினால் சாற்று கின்றவே." —சீவக. 2451.

" கண்ணினால் இன்று கண்டாம் கூற்றினைக் காமர் செவ்வாய்
ஒண்ணுதல் உருவக் கோலத் தொருபிடி நுசுப்பிற் றீஞ்சொல்
வண்ணித்த லாவ தில்லா வருமுலை மதர்வை நோக்கின்
பெண்ணுடைப் பேதை நீர்மைப் பெருந்தடங் கண்ணிற் றம்மா."

—ஷை 2453

" வண்ண மேகலைத் தேரொன்று வாணெடும
கண்ணி ரண்டு கதிர்முலை தாமிரண்(டு)
உண்ணி வந்த நகையும்உண் டாமெனில்
எண்ணுங் கூற்றுக்கு இத்தனை வேண்டுமோ." —கம்ப. மிதிலைக். 144.

" விண்ணோர் பெருமான்தன் வெற்பெடுத்த என்விறல்தீர்த்(து)
உண்ணோவு செய்தென் உயிருண்டாள் கேவலமும்
பெண்ணோ அவளல்லள் பெண்ணுருவு கொண்டிருந்து
மண்ணோர் களைஎல்லாம் மாய்க்கவரும் கூற்றே." —ஷை திக்கு. 177.

முதுமொழிவெண்பாக்கள் :

“வேலா சிவயோகி வீரயன்பா லாதரும
சீலாதென் கோவைத் தினகரா - மாலானேன்.” —தினகர. 113.

குறிப்பு :

கூற்றுண்மை ஆகமப்பிரமாணத்தால் அறியப்படுவதாகலின் கருத்துக்காட்சி யாவதன்றிப் புலக்காட்சி யாவதின்று. இன்று பெண்மைக்குணங்களின் மெய்ப்பாடுகளாலும், பொருகண்களாலும் அறியக்கிடந்தது என்பதாம்.

—தொகுப்பாசிரியர்.

1084. கண்டார் உயிருண்ணும் தோற்றத்தான் பெண்தகைப்
பேதைக் கமர்த்தன கண். (௪)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே :— பெண்தகைப் பேதைக்குக் கண் - பெண்தகையை உடைய இப்பேதைக்கு உளவாய கண்கள், கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தான் அமர்த்தன - தம்மைககண்டார் உயிருண்ணும் தோற்றத்துடனே கூடி அமர்த்திருந்தன.

அமர்த்தல் - மாறுபடுதல். குணங்கட்கும் பேதைமைக்கும் ஏலாது கொடியவாயிருந்தன என்பதாம்.

மணக்:— தம்மைக்கண்டவர்கள் உயிரையுண்ணும் தோற்றத்தாலே, பெண்தகைமையையுடையபேதைககு ஒத்தனகண்கள் எ - று.

அமர்தல் - மேவல். இது பேதையோடு ஒத்த தொழிலுடைத்து என்று கண்ணின் கொடுமையை உட்கொண்டு கூறியது.

பரிதி:— பெண்தகையுடைய பேதைக்குக் கண்கள் தம்மைக் கண்டார் உயிருண்ணும் தோற்றத்துடனே கூடி அமர்த்திருந்தன எ - று.

காளிங்:— நெஞ்சே! இவ்விடத்து வந்து கண்டவராகிய நமது உயிர்பருகும் தன்மையே இவை இரண்டினுஞ் சாலப்புலப்படத் திகழ்தலால், *இப்பெண்மைநலனும் பேதையும் உடையாட்கு இதனல்

* ‘இப்பெண்மை எனும் பேற்றையும் உடையாளது’ எனவும் பாடம்.

இயன்றன கண் எனவே, இரண்டும் ஒருவாற்றால் இத்துயர்க்கு ஒரு [1]தண்ணளி செய்வனபோலும் என்பது கருத்து எ - று.

குறிப்பு :

பெண்தகை - நாணம் முதலிய நான்கு. பேதைமை யென்பது அணிகலம் போல்வதாய் வேண்டியவழிமேற்கொள்ளப்பட்டு வேண்டாதவழி களையப்படும குணம். இது அந்நான்கின்வேறாதலின் பெண்தகைப்பேதைஎனப் பெண்ணைக் குறிப்பிட்டான்.

—தொகுப்பாசிரியர்.

1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கமிம் மூன்றும் உடைத்து. (ரு)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— கூற்றமோ-என்னை வருத்துதலுடைமையால் கூற்றமோ, கண்ணோ - என்மேல் ஓடுதல் உடைமையால் கண்ணோ, பிணையோ - இயல்பாக வெருவுதல் உடைமையால் பிணையோ, அறிகின்றிலேன்; மடவரல் நோக்கம் இம்மூன்றும் உடைத்து - இம்மடவரல் கண்களின் நோக்கம் இம் மூன்றன் தன்மையையும் உடைத்தாயிராநின்றது.

இன்பமும் துன்பமும் ஒருங்கு செய்யாநின்றது என்பதாம். தொழில்பற்றிவந்த ஐயநிலையுவமம்.

மணக்:— கொடுமை செய்தலால் கூற்றமோ? ஓடுதலால் கண்ணோ? வெருவுதலால் மானோ? மடவரலே! நினது நோக்கம் இம் மூன்று பகுதியையும் உடைத்து எ - று.

[2]இக் கொடியபுருவம் இவள் கண் என்னைத் துன்பஞ்செய்வதன் முன்னே அதனைக்கோடி மறைத்ததாயினும், அஃது அதனைக் கடத்தலும் உடையது; அதனால், அவற்றுள் யாதோ? என்றவாறு. இது தலைமகள் குறிப்பறிதற்பொருட்டுத் தலைமகன் கூறியது.

பரிதி:— கூற்றம் போலவும் மான்போலவும் விளங்காநின்றது இவள் கண் எ - று.

---

[1] 'கண்ணழிவு' எனவும் பாடம். [2] 'கொடும்புருவம்' என்ற அடுத்த குறளை முன் குறளாகக் கொண்டமையின் இவ்வாறு விசேடவுரை எழுதுகிறார்.

காளிங்:— நெஞ்சமே! இவள் கண் நமது உயிர் நடுக்கம் செய்தலாற் கூற்றம் என்றும், குளிர்ந்த நோக்குடைமையிற் கண்ணுருவு தானேயோ என்றும, வெருஉதற் பேதைமை தோன்றப் பிறழ்தலின் பிணைமான் விழிவடிவோ என்றும், இங்ஙனம் நீயே உற்றுவருந்துதலால் இவை இத்துணையும் ஒருங்குடைத்து இவள் நோக்கம; என்பதனால் தனது வருத்தம் ஒருகாலைக்கு ஒருகால் மிக்குச் செல்லுகின்றமை மிகுத்துரைத்தது கருத்து எ - று.

ஒப்புமைப்பகுதி :

"ஒன்றே உயிரை உடையீர் ஒருவிப் போமின் இவள்கண்
அன்றே கூற்ற மாகி அருளா(து) ஆவி போழ்வ(து)
என்றே கலையும சிலம்பும இரங்க இனவண் டார்ப்பப்
பொன்தோய் கொடியின் நடந்து புனல்சேர் பவளைக் காண்மின்."

—சீவக. 917.

"எறிவளைகள் ஆர்ப்ப இரு மருங்கும் ஓடும்
கறைகெழுவேல் கண்ணோ கடுங்கூற்றம் காணீர்"

—சிலப். கானல். பா 12.

குறிப்பு :

'கண்ணுக்கணிகலம் கண்ணோட்ட'மாதலின் தன்மீது ஓடுதலால் கண்ணோ என ஐயுற்றான். கண்ணைக் கண்ணோ என ஐயுறுதல் பொருந்துமோ எனின் இம் மடவரல்நோக்கம் மூன்றுகுணமுடைமையின் ஓடுங்குணம் ஒன்றேயுடைய கண்ணோ என ஐயுற்று, அதனின் வேறு இவள்நோக்கம் எனத்துணிதல் பொருந்தும என்க. பிணை என்றது மானையுணர்த்தாது இலக்கணையாக மான்கண்ணையுணர்த்திற்று.

—தொகுப்பாசிரியர்.

1086. கொடும்புருவம் கோடா *மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண். (சு)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— கொடும் புருவம் கோடா மறைப்பின் - பிரியா நட்பாய கொடும்புருவங்கள் தாம் செப்பமுடையவாய் விலக்கினவாயின், இவள் கண் நடுங்கு அஞர் செய்யல - அவற்றைக் கடந்து இவள்கண்கள் எனக்கு நடுங்கும் துயரைச் செய்யமாட்டா.

---

* 'மறப்பின்' காளிங் - பாடம்.

நட்டாரைக் கழறுவார்கருத் தாம் செம்மையுடையராதல் வேண்டலின் கோடா என்றும், செய்கின்ற அவற்றிற்கும் உறுகின்ற தனக்கும் இடைநின்று விலக்குங்காலும் சிறிது இடைபெறின் அதுவழியாக வந்து அஞர்செய்யுமாகலின் மறைப்பின் என்றும் கூறினான். நடுங்கஞர்: நடுங்கற்கு ஏதுவாய அஞர். தாம இயல்பாகக் கோடுதலுடைமையான் அவற்றை மிகுதிககண் மேற்சென்றிடிக்கமாட்டாவாயின என்பதுபட நின்றமையின் மன் ஒழியிசைக்கண் வந்தது.

மணக்:— வளைந்த புருவங்கள் தாம் செப்பமுடையனவாய் விலக்கினவாயின், இவள் கண்கள் அவற்றைக் கடந்துபோந்து எனக்கு நடுங்கும் துன்பத்தைச் செய்யலாற்று எ - று.

இது மேல் தலைமகன் கூறிய சொற்கேட்டுத் தலைமகள் தலையிறைஞ்சியவழி, கண்ணை மறைத்துத்தோற்றிய புருவ முறிவுகண்டு அவன் கூறியது.

பரிப்:— இக்கொடிய புருவம் இவள்கண்கள் என்னைத் துன்பம் செய்வதன் முன்பே கோடி மறைத்தனவாயின், அதனைக் கடந்து போந்து, எனக்கு நடுங்கப்படும் துன்பஞ் செய்யலாற்றாவே அவை எ - று.

பரிதி:— வளைந்த புருவம் அழகு செய்து விரகம் விளைத்தபடியாலே காமுகர் நடுங்கத்தக்க துன்பம் விளைத்தது கண் எ - று.

காளிங்:— இவளது கோடுதலுடைய புருவம் கோடாதவாய் மற்று அவ்வினை மறந்துளவாயின், நெஞ்சமே! யாம் இங்ஙனம் உள் நடுங்கு துயரஞ் செய்தல் இல்லை இவள்கண் எ - று.

குறிப்பு :

கோடா என்பதற்குப் பரிமேலழகர் கோடாது எனப் பொருள் காண்பர். பரிப்பெருமாள் கோடி எனக் கொள்ளுவர். கூற்றென்பதனை யறிந்தேன் என்றவழித் தலைவி தலைகுனிந்து நாணத்தால் புருவநெரித்து நின்றாள் அதனால் கருத்துணர்ந்த தலைவன் இயற்கையே கோடிய இவள்புருவம் நாணத்தால்கோடிக் கண்ணை மறைத்தது அதனால் அஞர்செய்திலது என்றான் என்பர்.

—தொகுப்பாசிரியர்.

1087. கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். (எ)

அவள் முலைகளினுடைய வருத்தம் கூறியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— மாதர் படா முலைமேல் துகில் - இம்மாதர் படாமுலைகளின்மேல் இட்ட துகில், கடாக் களிற்றின்மேல் கட்படாம் - அவை கொல்லாமல் காத்தலின், கொல்வதாய மதக்களிற்றின்மேல் இட்ட முகபடாத்தினை ஒக்கும்.

கண்ணை மறைத்தல்பற்றிக் கட்படாம் என்றான். துகிலான் மறைத்தல் நாணுடை மகளிர்க்கு இயல்பாகலின், அத்துகிலூடே அவற்றின் வெம்மையும் பெருமையுங்கண்டு இத்துணையாற்றலுடையன இனி எஞ்ஞான்றும் சாய்வில எனக் கருதிப் படாமுலை என்றான். உவமை சிறிது மறையாவழி உவை கொல்லும் என்பது தோன்ற நின்றது.

மணக்:— மதயானை முகத்துக் கண்மறைவாக இட்ட படாம் போலும்; மாதரே! நினது படாமுலைமேல் இட்ட துகில் எ - று.

பரிப்:— நீக்கின் கொல்லும் என்பது கருத்து. முலைகண்டு அவ் வேட்கையால் தலைமகன் கூறியது. இத்துணையும் தலைமகன் கூற்று.

பரிதி:— மதயானைககன்றுக்குப் படாம் கட்டினதற்கு ஒக்கும்; தனபாரத்தின்மேல் போட்ட துகில் எ - று.

*பழைய:— அவள் முலைகளினுடைய வருத்தம் கூறியது இது. எப்படி என்னில் இம்மாதர் இரண்டு முலைகளின்மேலிட்ட துகில், கொல்லாமல் கொல்லுவதாய மதககளிற்றின்மேலிட்ட முகபடாத்தினை ஒக்கும் எ - று.

காளிங்:— கொலைவினை காத்தற்கு மதக்களிற்றின்மாட்டு உறுத்திய முகபடாமன்; அது யாதோ எனின், நெஞ்சே! இம்மாதராள் தனது முகஞ்செய்பருவமாகிய இளமுலைமேல் துவக்கிய உத்தரியப் பட்டாடை என்பது கருத்து எ - று.

---

*இவ்வுரையும் பரிதியார் உரையும் பெரும்பாலும் ஒத்துள்ளமையால் வேறுபட்ட இடங்கள் மட்டும் தரப்படுகின்றன.

**மேற்கோள்பகுதி :**

பெருந்:— குறட்போலிக்கு மேற்கோள். (வீர. 127.)

யா. வி:— இனக்குறள்வெண்பா அளபெடைத் தொடையான் வந்ததற்கு மேற்கோள். (சூ. 59 )

கடாஅக்களிறு, படாஅமுலை என்புழிவந்த உயிரளபெடைகள் தளைசீர்வண்ணங்களோடு மாறுகொள்ளாது நின்று அலகுபெற்றதற்கு மேற்கோள். (சூ. 4 )

இறுதிநிலை அளபெடைத்தொடைக்கு மேற்கோள். (சூ. 41)

தக்க - பரணி உரை:— நச்சுக்கண் முலைமேல் இடுதுகிற்கு; "கச்சிட்டுக கட்டுவது கொங்கைகள் தாம காணுமல்; துகிலிட்டு மறைப்பது அவற்றைப் பிறர்காணுமல்; 'கடாஅக......துகில்'. யானைகடு முகபடாம் அணிதல் யானைகாணில் கொல்லுமென்று. அவற்றின் கண்களும் யானைக் கண்போல உணர்வுடையவாகப் பாடியவாறு என உணர்க." (தா. 83)

**ஒப்புமைப்பகுதி :**

" அமிழ்துபெய் செப்பின் அன்ன வெமமுலை
நுகர்பூங் காமத்து நுதிமுகம உரிஞ்சிக்
கடாஅ யானைக் கண்ணக மறைத்த
படாஅத் தன்ன படிவத் தாகிய
வடகப் போர்வையை வனப்பொடு திருத்தி."—பெருங். 1 : 45 : 6-10.

**முதுமொழிவெண்பாக்கள் :**

" இறைவர் அருள்கதிர்வேல் எந்தை குறவர்
மடமகளைக் கண்டு வருந்திப் - புகலும்" —முதுமொழி. 161.

**குறிப்பு :**

முகபடாம் யானைக்கண்ணையுஞ் சிறிதுமறைத்துக் கேடுதவிர்த்ததுபோல முலைமேற்றுகிலும் முலைக்கண்ணையும் மறைத்துக் காமநோயைத் தடுத்தது என்பதாம.

—தொகுப்பாசிரியர்.

1088. ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு. (அ)

நுதலினைய வருத்தம் கூறியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு - போர்க் களத்து வந்து நேராத பகைவரும் நேர்ந்தார்வாய்க்கேட்டு அஞ்சுதற்கு ஏதுவாய என் வலி, ஒள் நுதற்கு உடைந்ததே - இம்மாதரது ஒள்ளிய நுதல் ஒன்றற்குமே அழிந்துவிட்டது.

மாதர் என்பது அதிகாரத்தான் வந்தது. ஞாட்பினுள் என்றதனால் பகைவராதல் பெற்றாம். பீடு என்ற பொதுமையான் மனவலியும் காயவலியும் கொள்க. ஓ என்னும் வியப்பின்கண்குறிப்பு அவ்வலிகளது பெருமையும் நுதலது சிறுமையும் தோன்ற நின்றது. கழிந்ததற்கு இரங்கலின் தற்புகழ்தலன்றாயிற்று.

மணக்:— இவ்வொள்ளிய நுதற்கு மிகவுங் கெட்டது, போரின் கண் கிட்டாதாரும் உட்கும் எனது வலி எ - று.

இது மேற்கூறிய சொல்கேட்ட தலைமகள் மிகவுங் கவிழ்ந்து நிலம்நோக்கியவழிப் புருவத்தின்மேல் தோற்றிய நுதலகண்டு கூறியது.

பரிப்:— உம்மை யெச்சவுமமை. கிட்டினார் உட்கு முன்பே அமைந்துகிடந்தது.

பரிதி:— சமர்பூமியிலே நண்ணாரை வெற்றிகொள்ளும் என் ஆண்மை, பிறைபோலும் நுதலிக்குத் தோற்றது எ - று.

காளிங்;— நெஞ்சமே! இவ்வொள்ளிய நுதலினை உடையாள் பொருட்டு மிகவும் கேடு அடைந்தது; யாதோ எனின், போர்த்தொழிலிடத்துப் பகைவரும் அஞ்சும் எனது நெஞ்சு உரம் எ - று.

**ஒப்புமைப்பகுதி :**

"கதுப்பயல் விளங்கும் சிறுநுதல்
புதுக்கோள் யானையின் பிணித்தற்றால் எம்மே"

—குறுந். 129 : 5-6.

"போருள், அடல்மாமேல் ஆற்றுவேன் என்னை மடல்மாமேல்
மன்றம் படர்வித் தவள்" —கலி. 141 : 9 - 10.

முதுமொழிவெண்பாக்கள் :

"சுந்தர மாமகலி தோள்தோய்ந்து பத்துநூ
றிந்திரன்கண் பெற்றான் இரங்கேசா - இந்துமுறி" —இரங். 109.

குறிப்பு:

ஒண்ணுதல் - அன்மொழித்தொகையாகக்கொண்டு ஒண்ணுதலையுடையாளுக்குஎனக்கொண்டனர் காளிங்கர். முறையே கண்ணும் முலையும் முதலான உறுப்புக்கள் வருத்துவதாகக் கூறும் தலைவன் இங்கு நுதல் வருத்துவதாகக் கூறினான் என்றலே பொருந்தும். சிறு நுதல் பெரியவலியைத் தொலைத்தது என்பதில் நயம் இருக்கின்றது.

—தொகுப்பாசிரியர்.

1089. பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்(கு)
அணிஎவனோ ஏதில தந்து. (கூ)

அணிநலத்தாளைய வருத்தம் கூறியது.

உரைப்பகுதி :

பரிமே:— பிணை ஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு - புறத்து மான்பிணையொத்த மடநோக்கினையும் அகத்து நாணினையும் உடையளாய இவட்கு, ஏதில தந்து அணி எவன் - ஒற்றுமையுடைய இவ்வணிகளே அமைந்திருக்க வேற்றுமையுடைய அணிகளைப்படைத்து அணிதல் என்ன பயனுடைத்து.

மடநோக்கு - வெருவுதலுடைய நோக்கு. இவட்குப் பாரமாதலும் எனக்கு அணங்காதலும் கருதாமையின், அணிந்தார் அறிவிலர் என்பதாம்.

மணக்:— பிணையையொத்த மடப்பத்தினையுடைய நோக்கினையும் நாணினையும் உடையவட்குப் பிறிது கொணர்ந்து அணிவது யாதினைக் கருதியோ? பிறரை வருத்துதற்கு இவைதாமே அமையும் எ - று.

இது தான் அவளைக் கொடுமை கூறுவான்போல நலம் பாராட்டியது.

பரிப்:— மேல் தலைமகன் கூறிய சொற்கேட்டு நாணுற்ற தலைமகள் வாளாது நிற்றல் ஆற்றாது தன் அணிகலனைத் தொட்டுழி, அதனை நோக்கி இத்தன்மையாட்கு இதனையும் அணிதல் வேண்டுமோ என்று தமரைக் கொடுமை கூறுவான்போல. நலம்பாராட்டியது.

பரிதி:— மான்போன்ற பார்வையும் நாணமும் உள்ளவட்கு ஆபரணமும் வேண்டுமோ எ - று.

காளிங்:— நெஞ்சமே! தன் பெண்மை அழகு பேரொளி சிறத்தற்குப் பெடைமான் நோக்கனைய அழகும் மடப்பமும் சிறந்த நோக்கினது நலத்திற்கு இயல்பாகிய நாணினையும் தனக்கு உடையளாகிய இவட்கு இனிவேறு சில தந்து அணிகின்ற அணி என்னையோ? எனவே நம்மை வருத்துகின்றது மற்று இப்பிறவணியும் வந்து படைத்துணை செய்ய வேண்டுமோ என்று பின்னும் தன்னுறு துயரம் தன் நெஞ்சொடு கிளத்தல் கருத்து எ - று.

குறிப்பு:

நாணும் மடனுமாய இயற்கையணிகள் பேரழகு செய்கின்றன; அங்ஙனமாகவும் பிற அணிகளைத் தந்தணிவது என் என்றான். பிற அணிகள் இவள் உடலழகை மறைத்தலின் இங்ஙனம் கூறினான்.

—தொகுப்பாசிரியர்.

1090. உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. (ம)

தலைமகள் குறிப்பறிதலுற்றான் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— அடு நறா - அடப்படும் நறா, உண்டார்கண் அல்லது - தன்னை உண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்வதல்லது, காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று - காமம்போலக் கண்டார்மாட்டு மகிழ்ச்சியைச் செய்தலுடைத்து அன்று.

அடுநறா வெளிப்படை. காமம் என்றது ஈண்டு அது நுகர்தற்கு இடனாகியாரை. கண்டார்கண் என்னும் ஏழாவது இறுதிக்கண் தொக்கது. மகிழ்செய்தற்கண் காமம் நறவினும் சிறந்ததே எனினும் இவள் குறிப்பு

ஆராய்ந்து அறியாமையின் யான் அதுபெற்றிலேன் எனக் குறிப்பெச்சம் வருவித்துரைக்க; [1]"அரிமயிர்த்திரண் முன்கை" என்னும் புறப்பாட்டிற் குறிப்புப்போல.

மணக்:— அடப்பட்ட நறவு, உண்டார்மாட்டல்லது காமம் போலக் கண்டார்மாட்டு மகிழ்வு செய்தல் இன்று எ - று.

இது தலைமகள் தலைமகனைக்கண்டுழி வருத்தமுற்றுக கருதியது.

பரிதி:— கள் உண்டாலல்லது மகிழ்ச்சி கொடாது; காமம் போலே காண மகிழ்ச்சிசெய்யாது எ - று.

காளிங்:— நெஞ்சமே! அடப்பட்ட நறவாகிய கள்ளானது உண்டாரை மனக்களிசெய்யும இத்துணையல்லது காதல் உருபு கண்ட விடத்துக் களிசெய்யும காமமபோலத் தன்னைக கண்டாரைக களிப் புறுத்தல் எஞ்ஞான்றும் இல்லை எ - று.

இனி மற்று இங்ஙனம் தன்நெஞ்சம் அவளுழைக் காதலுறினும் தான் அவளது உள்ளககுறிப்பு உணராககால் ஒருபயன் இல்லையன்றே: அதனால் மற்று இதன்பின்னரே அதனை அறிவிககின்றது மேலையதிகாரம்.

## மேற்கோள்பகுதி :

இளம்:— இனிக் குறிப்பறிதல் கூறுகின்றாராதலின் அக்குறிப்பு நிகழும்வழி காட்சிமுதலியன எல்லாம அகமாம; என்னை? இருவர்மாட்டும் ஒத்த நிகழ்ச்சியாகலான். இவை தலைமகள்மாட்டும் புலப்பட நிகழாது, ஆண்டுக் குறிப்பினால் சிறிது நிகழும் என்று கொள்க. அவை 'உண்டார் கண்..........இன்று' எனவரும். (தொல். பொருள். 92.)

தலைவனைக்கண்ட தலைவி வேட்கைக் குறிப்பினால் தன்னுள்ளே கூறியதற்கு மேற்கோள். (ஷை 106.)

## ஒப்புமைப்பகுதி :

"உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு" —குறள். 1281.

---

[1]புறம் 11:

முதுமொழிவெண்பாக்கள் :

“ வாய்ந்ததம யந்தியுரு மாணலங்கண் டின்புற்றான்
தோய்ந்தபுக ழானுநளன் சோமேசா - ஆய்ந்துரைக்கின்”
—சோமேசர். 109.

“ ஆர்ந்துசுர ரானார் அமுதணங்கைக் கண்டுமகிழ்
சேர்ந்தசுர ரானார் சிவசிவா - சார்ந்ததனை” —சிவசிவ. 109.

## குறள் வைப்புமுறை.

**பரிமே:—** அணங்கு, நோக்கினாள், பண்டறியேன், கண்டார், கூற்றமோ, கொடும்புருவம், கடாஅக், ஒண்ணுதல், பிணையேர், உண்டார்.

**மணக்:—** நோக்கினாள், பண்டறியேன், கண்டார், கொடும்புருவம், ஒண்ணுதல், கூற்றமோ, பிணையேர், கடாஅக், அணங்கு, உண்டார்.

**பரிதி:—** அணங்கு, நோக்கினாள், பிணையேர், கூற்றமோ, கொடும்புருவம், ஒண்ணுதல், கடாஅக், பண்டறியேன், உண்டார், கண்டார்.

**காளிங்:—** அணங்கு, நோக்கினாள், பண்டறியேன், கொடும்புருவம், கூற்றமோ, கண்டார், பிணையேர், கடாஅக், ஒண்ணுதல், உண்டார்.

# 110. குறிப்பறிதல்.

## தொகுப்புரை :

[தலைவியது கண்களுக்கு இருவகைப் பார்வை உண்டு. ஒருநோக்கு எனக்கு நோய்செய்யும்; ஒருநோக்கு அதற்கு மருந்தாகும்; கண்கள் கள்ளத்தனம் பயிலுகிற நுணுகியநோக்கம் மெய்யுறுபுணர்ச்சியிற் பெறும்மகிழ்ச்சியின் பாதியளவு அன்று; அதனிற்பெரிது. யான் நோக்காதபோது என்னைநோக்கினாள்; நாணித் தலைவணங்கினாள். அச்செயல் எம்மிடையே அன்புப்பயிர்வளர அவள்வார்த்த தண்ணீராகும். நான் பார்க்கும்போது நிலத்தைப் பார்ப்பாள்; நான் பாராதபோது அவள் என்னைப் பார்த்து மெல்லச் சிரிப்பாள். நேரே என்னைக்குறித்துப் பார்க்காமைமட்டுமன்றி ஒருகண்ணைச் சுருக்கிச் சிரிப்பள். அவள் அயலார்போலப் பேசினாலும் கோபமில்லாத அவள்சொல், பயனைக் கொண்டு விரைவில் அறியப்பெறும். சினமில்லாச்சொல்லும், சினமுடையார் போன்ற பார்வையும், அயலார் போல நட்பாவார் குறிப்புக்களாம். யான் பார்த்த அளவில் மனம் இளகி மகிழ்கின்றாள் ஆதலின் அவள் நகையில் அழகிய குறிப்பு ஒன்றுண்டு. அயலாரைப்போலப் பொதுவான் நோக்குதல் காதலர்கண் உள்ளசெயலாம். கண்ணும் கண்ணும் ஒத்து நோக்கிக்கொள்ளுமாயின் வாய்ப்பேச்சு பயன் இல்லை.]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது தலைமகன் தலைமகள்குறிப்பினை அறிதலும் தோழிகுறிப்பினை அறிதலும், அவள்தான் அவ்விருவர் குறிப்பினையும் அறிதலுமாம். தகையணங்குற்ற தலைமகன் தலைமகளைக் கூடுங்கால் இது வேண்டுமாகலின், தகையணங்குறுத்தலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *குறிப்பறிதலாவது தலைமகள் உள்ளக் குறிப்பினைத் தலைமகன் அறிதல்.*

பரிப்:— *இது தலைமகற்கே உரித்து. பெண்டிர் நாணமுடையரன்றே! அவரது உள்ளக்கருத்து வெளிப்படுமாறு என்னை எனின் மேலை அதிகாரத்துத் தலைமகனைக் கண்ட தலைமகள், *"காமம் போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று" என்று நினைத்தாளாகக் கூறினாரன்றே: அதனானே கண்ணும் முகமும் வேறுபடும்; அதனானே அறியலாகும்; மனக்குறிப்பு அறிதல் கூறியது எற்றுக்கு? பிறவாற்றானுங்கூடுதற்கு நெறியுளவாலெனின், பிறவாற்றாற் கூடுங்கால், குரவராற்கூடின் பெருந்திணையாம்; பொருள் கொடுத்துச் சாரின் அசுரமாம்; வலியிற்சாரின்*

---

*குறள் 1090.

இராக்கதமாம்; மறவியிற் சாரின் பசாசமாம்; ஆதலின் இக்கூட்டத்துக்குக் குறிப்பறிந்தே புணரவேண்டுதலின் இது கூறப்பட்டது. மேலதனோடு இயையும் இது. இது தலைமகற்கு உரித்தன்றோஎனின் அவன் வெளிப்பட இரத்தலான் வேண்டா என்க.

1091. இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து. (க)

தலைமகன் தலைமகள் உளப்பாட்டுக்குறிப்பினை அவள்நோக்கினான் அறிந்தது.

உரைப்பகுதி:

பரிமே:— இவள் உண்கண் உள்ளது இருநோக்கு - இவளுடைய உண்கணகத்ததாய நோக்கு இதுபொழுது என்மேல இரண்டு நோக்காயிற்று, ஒருநோக்கு நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து - அவற்றுள் ஒருநோக்கு என்கண் நோய்செய்யுமநோக்கு, ஏனையது அந்நோய்க்கு மருந்தாய நோக்கு.

உண்கண் - மையுண்ட கண். நோய்செய்யும் நோக்கு அவள் மனத்தினை காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு. மருந்தாய நோக்குத் தன்கண் நிகழ்கின்ற அன்புநோக்கு. நோய்செய்யும் நோக்கினைப் பொதுநோக்கு என்பாரும் உளர்; அது நோய்செயின் கைக்கிளையாவதல்லது அகமாகாமை அறிக. இவ்வருத்தம் தீரும் வாயிலும் உண்டாயிற்று என்பதாம்.

மணக்:— இவள் மையுண் கண்ணிலுள்ள நோக்கம் இரண்டு வகைத்து; அவ்விரு வகையினும் ஒருநோக்கு நோய் செய்யும்; ஒருநோக்கு அதற்கு மருந்தாம் எ - று.

நோய்நோக்கென்பது முதல்நோக்கின நோக்கம்; மருந்து நோக்கு என்பது இதனால் வருத்தமுற்ற தலைமகனைத் தலைமகள் உள்ளங்கலங்கி நாணோடுகூடி நோக்கின நோக்கம். அதனானே உடம்பாடு காண்டலின் மருந்து ஆயிற்று. இது நாணமுடைய பெண்டிரது உள்ளக்கருத்து வெளிப்படுமாறு கூறியது.

பரிப்:— இது நாணிநோக்குதல் உடம்படுதலாம் என்றது.

பரிதி:— இரண்டு பார்வை உண்டு நாயகிக்கு. ஒருபார்வை விரகம் 'தரும்; ஒருபார்வை விரகத்துக்கு மருந்தாகிய அமுதபார்வை கொடுக்கும் எ - று.

காளிங்:— நெஞ்சமே! இவளது மையுண்ட கண்ணின்கண் உளதாகிய நோக்குத்தான் நம்பால் இரண்டு நோக்காயிருந்தது. இஃது எங்ஙனம் எனில், ஒரு நோக்கம் இடர்செய்யும் நோக்கம்: ஒரு நோக்கம் மற்று அவ்விடர் தணித்தற்கு ஓர் தணிமருந்து போலும் என்றவாறு. எனவே எங்கும் ஓடும்போது நோக்கின், தனக்கு ஒரு பயன் இன்மையின் நோயது என்றும், இனித் தன்வயிற்சென்ற நோக்குத் தனது உயிர் ஆற்றற்கோர் தண்ணளியாகையால் இடர்தணி நோக்கு என்றும் இங்ஙனம் இவள்நோக்கினைப் பிரித்துக்கொண்டு *அவள் உட்குறிப்பு அறிந்தான் என்பது கருத்து எ - று.

மேற்கோள்பகுதி :

தெய்வச்:— கண் என்ற பன்மை சுட்டிய சினைநிலைக்கிளவிச் சொல் ஒருமை குறித்து வந்ததற்கு மேற்கோள். (தொல். சொல். 59.)

மயிலை:— அஃறிணைப்பன்மையுடன் ஒருமை மயங்கி வந்ததற்கு மேற்கோள். (நன். 379.)

சங்கர:— ஷை (நன். 380).

யா. வி:— இயற்சீரும் உரிச்சீரும் விரவிவந்த குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (சூ. 15).

சிறப்பில் இயற்சீர்வெண்டளைக்கு மேற்கோள். (சூ. 18).

நம்பி:— கைக்கிளைத் திணையின் பாகுபாடாகிய குறிப்பறிதலுக்கு மேற்கோள். (சூ. 122).

ஒப்புமைப்பகுதி :

"சேலனைய சில்லரிய கடைசிவந்து கருமணியம்
பாலகத்துப் பதித்தன்ன படியவாய் முனிவரையும்
மாலுறுப்ப மகிழ்செய்வ மாண்பின்நஞ்சும் அமிர்தமுமே
போல்குணத்த பொருகயற்கண் செவியுறப்போந் தகன்றனவே."

—சீவக. 167.

---

* 'அவன்' என்பதும் பாடம்.

"மண்ணிற் சிறந்த புகழ்த்தஞ்சை வாணன் மலயவெற்பில்
பெண்ணிற் சிறந்தஇப் பேதைதன் பார்வை பெருவினையேன்
எண்ணிற் சிறந்த இருந்துயர் நோய்தனக் கின்மருந்தாய்
கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே." —தஞ்சை. 4.

"பாயு மலர்த்தண் பொழில்சூழும் வெங்கைப் பழமலைசேர்
ஆயு முனிவரர் தாமே முனிவருள் ளாக்குதல்போல்
நோயும்அந் நோய்க்கு மருந்தும் தராநிற்கு நூற்பகவின்
தேயு மருங்குல் பெருமுலை மாதர் திருக்கண்களே."
—திருவெங் - கோவை.5.

"அணியும் அமிழ்துமென் ஆவியும் ஆயவன் தில்லைச்சிந்தா
மணிஉம்ப ரார்அறி யாமறை யோனடி வாழ்த்தலரிற்
பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழுமின்னும்
பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே."
—திருச்சிற். 5.

"செவ்வனேர், நோக்கினும் நோய்நோக்க நோக்காள்." —திரு-உலா. 78.

"புருவமென் கொடிகள் பண்டு புரமெரித் தவர்தம் நெற்றி
ஒருவிழி எரியின் நீறாய் அருள்பெற உளனும் காமன்
செருவெழும் தனுவ தொன்றும் சேமவில் ஒன்று மாக
இருபெரும் சிலைகள் முன்கொண்(டு) எழுந்தன போல ஏற்ப."
—பெரிய. திருஞான. 1097.

## முதுமொழிவெண்பாக்கள் :

"உற்றபிணி யும்மருந்தும் காரிகையார் தான்மாயை
முற்றுழிக்கண் ணோக்கின் முருகேசா - பற்றும்." —முருகேசர். 110.

## குறிப்பு :

மணக்குடவர், பரிப்பெருமாள், காளிங்கர் முதலிய உரையாசிரியர்கள் நோய்நோக்கு முதலில் உண்டான பொதுநோக்கு என்பர். பரிமேலழகர் நோய்செய்யு நோக்கு அவள் மனத்துள்ள காமக் குறிப்பினை வெளிப்படுக்கின்றநோக்கு என்பர். மேலும் பொதுநோக்கென்பாரும் உளர்; அது நோய் செய்யில் கைக்கிளையாவதல்லது அகமாகாமை அறிக என மறுப்பர். இதனை உற்றுநோக்கின், பின்பின் குறள்களான் வள்ளுவரே பொதுநோக்குண்டென்று கூறலானும், குறிப்பறிதல் கைக்கிளை வகையுள் ஒன்றே யாதலானும், கண்ட முதல்நோக்கிலேயே தலைவி தன்மனத்துக் காமக்குறிப் பினை வெளிப்படுத்தி நோக்காள் ஆதலானும், அங்ஙனம் நோக்குதல் பெண்தகை

மைக்கு ஏலாதசெயல் ஆதலானும், எல்லாரையும் பார்ப்பது போலப் பொதுவாக் நோக்கினள். அந்நோக்குத் தலைவற்குக் கவலைநோயைப் பிறப்பித்தது; அந்நோயைப் பின் வந்த சிறப்புநோக்குத் தீர்த்தது என்றலே பொருந்துவதாம். அன்றியும் அக்கைக்கிளைக்கு இழுக்கின்மையுமாம்.

—தொகுப்பாசிரியர்.

1092. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது. (உ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— கண் களவுகொள்ளும் சிறுநோக்கம் - இவள்கண்கள் யான் காணாமல் என்மேல் நோக்குகின்ற அருகியநோக்கம்; காமத்தில் செம்பாகம் அன்று பெரிது - மெய்யுறுபுணர்ச்சியின் ஒத்த பாதியளவு அன்று, அதனினும் மிகும்.

தான் நோக்கியவழி நாணியிறைஞ்சியும் நோக்காவழி உற்று நோக்கியும் வருதலால் களவுகொள்ளும் என்றும், அஃது உளதாங்காலம் சிறிதாகலின் சிறுநோக்கம் என்றும், அஃது உளப்பாடுள்வழி நிகழ்வதாகலின் இனிப் புணர்தல் ஒருதலை என்பான் செம்பாகமன்று பெரிது என்றும் கூறினான்.

மணக்:— என் கண்களைச் சோர்வுபார்த்துக் களவினால் நோக்குகின்ற சிறியநோக்கம், வேண்டப்பட்ட பொருளிற் பாதியேயன்று; பெரிது எ - று.

தலைமகள் தலைமகன்காணாமை நோக்குதலின், இது களவாயிற்று.

பரிப்:— சோர்வு பார்த்தலாவது தலைமகன் தனது காதலினாலே எப்பொழுதும் நோக்குவனன்றே; தலைமகளுக்கும் அவ்வாறு நோக்க வேண்டுதலின் அவன் பாராக்காலத்தைக் குறித்து நிற்றல். களவினான் நோக்குதலாவது அக்காலத்தே நோக்குதல். தலைமகன் காணாமல் நோக்குதலின் களவு ஆயிற்று. கொள்ளுதல் நோக்குதற் பொருள்மேல் வருதலின் நோக்கு ஆயிற்று. சிறு நோக்கமாவது பார்த்ததும் மீளுதல். நெடிது நோக்காமையின் சிறிதாயிற்று. வேண்டப்பட்ட பொருளாவது புணர்ச்சி. செம்பாக மன்று பெரிது என்பது அதற்குப் பாதி இசைவுக்கு மேலே பெற்றேம் என்பது. இது மறையநோக்குதல் உடம்பாடு என்றது

பரிதி:— கண் களவுகொண்டு கடைக்கணித்துப் பார்த்தபார்வை, செம்மை அழகுபெற்ற காமக்கூட்டத்திலும் பெரிது எ - று.

பழைய:— சந்தனச்சோலையில் பூவில் தேனை பஞ்சவர்ணக்கிளி பொசிப்பதை அதரபானம்போலக் கண்டு களிப்பவள் கண்பார்வை காமத்திலும் பெரிது எ - று.

காளிங்:— இங்ஙனம் இவளது கண்களானவை வேறு புலப்படாதவாறு தாம காதல் உருபினைக் கவர்ந்துகொள்வது போலும் சிறு நோககமானது காமச் சுவையைப் பகுத்துணரின் யாண்டும் பரந்த முழு நோககுடைய கலவியான காமத்திற் செவ்வனம் பகுத்த பாகச்சுவைப் பங்கு எனவே அன்றியும் பின்னும் பெரிதெனலாம் என்று இங்ஙனம் பெற்றான் போல்வதோர் பற்றுக்கோடு எய்திச் சிறிது படர் தீர்ந்தான் என்பது பொருள் எ - று.

## மேற்கோள்பகுதி :

நச்:— குறிப்பே குறித்தது கொள்ளுமாயின் ஆங்கு மெய்ப்பாடுகள் நிகழும் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 91).

## குறிப்பு :

களவு கலவாதவழி நேரே விழித்துப்பார்ப்பள்; களவுகலந்தமையாலேயே அருகியநோக்கம் (கடைக்கண் பார்வை) உளதாயிற்று என்பதாம். கோடாதமனம் ஒருபால் கோடியதைக் குறித்தலின் செம்பாகமன்று பெரிது என்றார்.

—தொகுப்பாசிரியர்.

1093. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர். (௩)

நோக்கினானும் நாணினானும் அறிந்தது

## உரைப்பகுதி :

பரிமே:— நோககினாள் - யான் நோக்காவளவில் தான் என்னை அன்போடு நோககினாள், நோக்கி இறைஞ்சினாள் - நோக்கி ஒன்றனை உட்கொண்டு நாணி இறைஞ்சினாள், அஃது யாப்பினுள் அவள் அட்டிய நீர் - அக்குறிப்பு இருவேமிடையும் தோன்றிய அன்புப்பயிர்வளர அதன் கண் அவள் வார்த்த நீராயிற்று.

அஃது என்னும் சுட்டுப்பெயர் அச்செய்கைக்கு ஏதுவாய குறிப்பின்மேல் நின்றது. யாப்பினுள்ளதனை யாப்பு என்றார். ஏகதேசவுருவகம்.

மணக்:— முற்பட நோக்கினள், நோக்கினபின்பு நாணினள்; அஃது அவள் நட்புப்பயிர்வளர அதன்கண் வார்த்த நீர் எ - று.

தலைமகள் நாண்போகாமைக்குக் காரணம் கூறியவாறும்.

பரிப்:— பந்தம் என்பதனை யாப்பு என்று கூறினர். பார்த்தவள் பெயராது நாணி நிற்றலும் உடன்படுதலாம் என்றது.

பரிதி:— நோககினள் முகத்தை யான் நோக்கத் தலைகீழிட்டது; அது என்போல என்னில் கட்டிய கட்டில் தண்ணீர்விட்டதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— நெஞ்சமே! இங்ஙனம் சிறந்த நோக்கினை உடையாள் முன்னம் தான் நோக்கிப் பின்னர் யான் தன்னை நோக்குமிடத்து எதிர் நோககு இன்றி முகம் இறைஞ்சி நின்றாள். மற்று அஃது யாதினை ஒக்குமோ எனில் ஓர்ப்புறைந்த இடத்துப் பின்னும் அதற்கு உறுதி பெறுவதாக நீர் பெய்து கூறு கொண்டாற்போலத் தானும் நம்மிடத்து ஓர்த்தற் குறிப்புடைமை வைப்புறுத்தினள்போலும் என்று மகிழ்ந்து தேறினன் தலைமகன் என்பது கருத்து எ - று.

## மேற்கோள்பகுதி :

இளம்:— 'குறிப்பே குறித்தது கொள்ளுமாயின், ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்' என்ற சூத்திரத்திற்கு மேற்கோள். (தொல். பொருள். 94).

## குறிப்பு :

நோக்கு பாத்தியும், நாணத்தால் இறைஞ்சிநிற்றல் நீருமாயிற்று. இது பரிமேலழகர் கருத்து. காளிங்கர் இறுகியுறைந்த நிலத்தை ,நீர்பாய்ச்சிக் கூறு கொண்டு இறுகச் செய்தாற் போலும என்பர். நோக்கியவள் காதற குறிப்பு இலளாயின் இறைஞ்சி நில்லாள்; ஆகவே குறிப்பறிவித்தவாறு.

—தொகுப்பாசிரியர்.

1094. யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும். (௪)

நாணினாலும் மகிழ்ச்சியினாலும் அறிந்தது.

**உரைப்பகுதி :**

பரிமே:— யான் நோக்குங்காலை நிலன் நோக்கும் - யான் தன்னை நோக்குங்கால் தான் எதிர்நோக்காது இறைஞ்சி நிலத்தை நோக்கா நிற்கும், நோககாக்கால் தான் நோககி மெலலநகும் - அஃது அறிந்து யான் நோககாக்கால் தான் என்னைநோக்கித் தன்னுள்ளே மகிழாநிற்கும்.

மெல்ல - வெளிப்படாமல். மகிழ்ச்சியால் புணர்தற்குறிப்பு இனிது விளங்கும். மெல்லநகும் என்பதற்கு முறுவலிககும் என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— யான் தன்னைப்பார்க்குங்கால், தான் நிலத்தைப் பார்க்கும்; யான்பாராதவிடத்து, தான்பார்த்தது தோன்றாமை நகும் எ - று.

மெல்ல நகுதல் - மூகிழ்மூகிழ்த்தல்.

பரிப்:— எதிர் நோக்காமல் உடன்படுதலாம் என்றது.

பரிதி:— காதலியின் குறிப்பு யான் பார்க்கில் தான் நிலத்தைப் பார்கும்; யான் பாராதபொழுது தான் என்னைப்பார்த்துச் சிரிக்கும் எ-று.

காளிங்:— நெஞ்சமே! யான் தன்னைநோக்கும்நேரத்து நாணினள் போலத் தான் நிலம நோககி நிற்கும்: யான் அவள் குறிப்பு அறிதற்கு நோக்காதேன்போலக் கடைக்கணித்து நின்ற நேரத்துத் தான் என்னை நோக்கி மெல்லென வேறாய் ஓர்புன்முறுவல் செய்யும் எனவே தன்வயிற் கொண்டதோர் குறிப்பின்குணம் பற்றிக்கொண்டு இன்புற்று ஆற்றினன் என்பது கருத்து எ - று.

**மேற்கோள்பகுதி:**

பேரா:— புகுமுகம் புரிதல் என்னும் மெய்ப்பாட்டிற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 261.)

ஒப்புமைப்பகுதி:

*" பல்லூழ் பெயர்ந்தென்னை நோக்குமற் றியான்நோக்கின்*
*மெல்ல இறைஞ்சும் தலை."* —*கலி.* 61 : 5-6.

*" தன்னையான் முகத்தை நோக்கின் தான்நிலை முகத்தை நோக்கும்*
*பின்னையான் பலவும் பேசின் தாஞென்று மிழற்றும் பைம்பூண்*
*பொன்னவாம் சுணங்கு போர்த்த பொங்கிள முலையி னாளென்*
*முன்னையாள் போன்று தத்தை முகத்துளே தோன்று கின்றாள்."*
—*சீவக.* 1626.

**1095.** குறிக்கொண்டு நோக்காமை யல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும். (ரு)

இதுவும்அது.

உரைப்பகுதி:

பரிமே:— *குறிக்கொண்டு நோக்காமை அல்லால் - நேரே குறிக் கொண்டு நோக்காத்துணையல்லது, ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும் - ஒருகண்ணைச் சிறங்கணித்தாள்போல என்னைநோக்கிப் பின் தன்னுள்ளே மகிழாநிற்கும்.*

*சிறக்கணித்தாள் என்பது செய்யுள் விகாரம். சிறங்கணித்தல் - சுருங்குதல். அதுதானும் வெளிப்பட நிகழாமையின் போல என்றான். நோக்கி என்பது சொல்லெச்சம். இனி இவளையெய்துதல் ஒருதலை என்பது குறிப்பெச்சம்.*

மணக்:— *குறித்துக் கொண்டு நோக்காமை யல்லது ஒருகால் உடம்பட்டாள்போல நகா நின்றாள் எ - று.*

*அஃதாவது காமக்குறிப்புடையார்போல நகுதல். அதுவெளிப்பட நில்லாமையின், போல என்றார். அஃதாவது நகை தோற்றியவழிப்பிறி தொன்று கண்டாள்போல நகுதல். இது தன்குறிப்புத் தோன்றாமல்நகுதல் உடன்படுதலாம் என்றது.*

பரிதி:— *குறித்துப் பார்த்து, பராமுகம் பண்ணுமாப்போல ஒரு கண் கீழ்க்கணித்து நோக்கிச் சிரிக்கும் எ - று.*

காளிங்:— நெஞ்சமே! நம்மோடு பயின்றிலாமையின் குறிக்கொண்டு எதிர்முகம்நோக்காமையல்லது நம்கண் தனது உட்குறிப்பினான் ஒருகண் கடைக்கணித்தாள்போல நின்று அகமுறுவல்செய்யும்; எனவே மற்றொன்று நோக்குவாள்போல முகம்புரிந்தும் இப்பக்கத்து விழிக்கடை நோக்கு என்கண்ணதேபோல்வதோர் இன்பப்புன்முறுவல் செய்யும் என முன்னிலையினும் பின்னிலைக்குறி வேற்றுமை கண்டு மற்று இது பற்றுக் கோடாக அறினன் என்பது பொருளாயிற்று எ - று.

## மேற்கோள்பகுதி:

பேரா:— தன்கண் தோன்றிய மடம் நிலைக்களனாகப் பிறந்த நகை என்னும் மெய்ப்பாட்டிற்கு மேற்கோள். (தொல். பொருள். 252)

1096. உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும். (சா)

தோழி சேட்படுத்தவழி அவள்குறிப்பறிந்த தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

## உரைப்பகுதி:

பரிமே:— உறாதவர்போல் சொலினும் - புறத்து நொதுமலர் போலக் கடுஞ்சொல் சொன்னாராயினும்; செறார் சொல் ஒல்லை உணரப் படும் - அகத்துச் செறுதலிலாதார்சொல் பிற்பயத்தல் குறையுற்றால் கடிதின் அறியப்படும்.

கடுஞ்சொல் என்பது இவ்விடம் காவல்மிகுதியுடைத்து வரற்பாலிர் அல்லீர் என்றல் முதலாயின. செறார் எனவே, அருளுடைமை பெறப்பட்டது. தன்குறை முடிக்கக்கருதியே சேட்படுக்கின்றமை குறிப்பான் அறிந்து, உலகியன்மேலிட்டுக் கூறியவாறு. இது வருகின்ற பாட்டிற்கும் ஒக்கும்.

மணக்:— கூடாதவர்போலச் சொல்லினும், செறுதலில்லாதார் சொல்லை இதற்குக் காரணமாகப் பிறிதொன்று உளதென்று விரைந்து அறிதல் வேண்டும் எ - று.

இஃது உறுப்பினல் இசைவுகாட்டி, உரையினல் மறுப்பினும் உடன்படுதலாம் என்றது.

பரிப்:— மனம் நெகிழ்ச்சி கண்டு சாரலுற்ற தலைமகனைத் தனதில்வலியுறுத்தற்பொருட்டுக் கடுஞ்சொல் கூறித் தலைமகள் நீங்கின வழி, இஃது உள்ளன்பு இன்மையால் கூறினள் அல்லள்; அதற்குக் காரணம் யாது? என்று தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

பரிதி:— அயலார்போலே பார்த்தாலும் இன்பம் உள்ள ஆசைப் பார்வையாலே கூடுதற்கு இட்டம் என்று அறிக எ - று.

பழைய:— அயலார்போலே பார்த்தாலும் சேதம் இல்லாமல் இன்பம் உள்ளாரைச் சடுதியிலே அறியப்படும் எ - று.

காளிங்:— நெஞ்சே! நெஞ்சிற் பரிவுறாதார்போல் சிலசொல்லினும் பரிவுடையார் சொல்லும் சொல்லினது குறிப்பினை அனுதரிக்க அடாது; மற்று இதன் கருத்து என்னைகொல் என்று விரைந்து குறித் துணர அடுக்கும் என்பதனால், தனக்கு ஆற்றுமை வந்தவிடத்து இதுவும் ஒரு பற்றுக்கோடு ஆயிற்று எ - று.

## மேற்கோள்பகுதி:

நம்பி:— பாங்கியிற்கூட்டத்தில் கிழவோன் ஆற்றுதலுக்கு மேற்கோள். (சூ. 146.)

## முதுமொழிவெண்பாக்கள்:

“ காங்கேயன் வேண்ட வெறுத்துரைத்தான் கானவர்மின்
தூங்கா வளக்குளத்தூர்ச் சோமேசா - ஆங்கண்.” —சோமேசர். 110.

“ அறன்மண்டு சுந்தரனை யாரூர் அரனை
விறன்மிண்டர் தாமே வெகுண்டார் - மறமன்(று).” —திருத். 6.

## குறிப்பு :

‘உரையால் மறுப்பினும் உறுப்பினால் இசைவு காட்டியது’ என்ற மணக்குடவர் உரை மிக நயம்பயப்பது.

—தொகுப்பாசிரியர்.

1097. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு. (எ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— செறாச் சிறுசொல்லும் - பின் இனிதாய் முன் இன்னாதாய சொல்லும், செற்றார்போல் நோக்கும் - அகத்துச் செறாதிருந்தே புறத்துச் செற்றார்போன்ற வெகுளிநோக்கும், உறார்போன்று உற்றார் குறிப்பு - நொதுமலர் போன்று நட்பாயினார்க்கு ஒரு குறிப்புப்பற்றி வருவன.

குறிப்பு: ஆகுபெயர். இவை உள்ளே யொருபயன் குறித்துச் செய்கின்றன இயல்பல்ல ஆகலான், இவற்றிற்கு அஞ்சவேண்டா என்பதாம்.

மணக்:— செறுதலில்லாக் கடுஞ்சொல்லும், செற்றார்போல நோக்குதலும், அன்புறாதார்போல அன்புற்றாரது குறிப்பு என்று கொள்ளப்படும் எ - று.

இஃது அன்பின்மை தோற்ற மில்லாமையின், உடன்பாடு என்று தேறியது.

பரிப்:— மேல் தலைமகன் கூறிய கடுஞ்சொல்லும் அதன்பின் கடுத்து நோக்கின நோக்கமும் குறித்து இவ்வாறு செய்யினும் அன்பின்மை தோற்றம் இல்லாமையின் உடம்பாடு என்று தேறியது.

பரிதி:— ஊடுதலில்லாத சொல்லும் அயலாரைப்போலப் பார்க்கும் பார்வையும் காமம்மிக்க நாயகியின் குணம் எ - று.

காளிங்:— நெஞ்சமே! நமக்கு ஒன்று சொல்லினும் இவள் எங்ஙனம் சொல்லுமோ என்று இடர் உறவேண்டா; உள்ளத்தால் செறாது புறம்பு உரைக்கும் புன்சொல்லும் அங்ஙனம் சீரியாரே செற்றாரைப் போல்வதோர்நோக்கும் இவை இரண்டும் புறத்துப் பரிவிலாதார்போன்று வைத்து அகத்து அன்புடையார் செய்யும் மனக்குறிப்பு என்று ஆற்றியுளேம் ஆதலே கருமம் என்பது பொருளாயிற்று எ - று.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் தலைமகள்மாட்டு அன்பு பெரிது உடையன் என்று இன்புறுதல் காரணமாகத் தன்

நெஞ்சிற்குச் சொல்லுவான் போன்று அவள் கேட்பச் சொல்லி அறிவிக்கின்றது *மேலை அதிகாரம்.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— செறாச் சிறுசொல் - பின் இனிதாய் முன் இன்னாதாயசொல். குறிப்புக் குறிப்புப்பற்றி வருவன; அது ஆகுபெயர்.

**ஒப்புமைப்பகுதி:**

"ஊடிய மனத்தினர் உறுத நோக்கினர்
நீடிய உயிர்ப்பினர் நெரிந்த நெற்றியர்
தோடவிழ் கோதையும் துறந்த கூந்தலார்
ஆடவர் உயிரென அருகு போயினர்." —கம்ப. எழுச்சி. 21.

1098. அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும். (அ)

தன்னை நோக்கி மகிழ்ந்த தலைமகளைக்கண்டு தலைமகன் கூறியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— யான் நோக்கப் பசையினள் பைய நகும் - என்னை அகற்றுகின்ற சொற்கு ஆற்றாது யான் இரந்து நோக்கியவழி அஃது அறிந்து நெகிழ்ந்து உள்ளே மெல்ல நகாநின்றாள், அசை இயற்கு ஆண்டு ஓர் ஏர் உண்டு - அதனால் நுடங்கிய இயல்பினையுடையாட்கு அந்நகையின்கண்ணே தோன்றுகின்றதோர் நன்மைக்குறிப்பு உண்டு.

ஏர் ஆகுபெயர். அக்குறிப்பு இனிப் பழுதாகாது என்பதாம்.

மணக்:— அசைந்த இயல்பினையுடையாட்கு அவ்விடத்து ஓர் அழகுண்டு; யான்நோக்க, நெகிழ்ந்து மெல்ல நகாநின்றாள் எ - று.

அவ்விடம் என்றது தானே நெகிழ்ந்து நக்க இடம்; அழகு - தன் வடிவினுள் மிக்க குணம்; பைய நகுதல் - ஓசைப்படாமல் நகுதல்.

பரிப்:— இது காமக்குறிப்புத் தோற்ற நின்று நகுதல் உடம்படுதலாம் என்றது.

---

* இவர் பத்தாவதாக இக்குறளைக்கொண்டமையின் இவ்வாறு அதிகாரத் தோற்றுவாய் செய்துள்ளார்.

பரிதி:— அசைந்தாடும் மயில்போன்ற சாயலையுடையாட்கு ஒரு அழகு உண்டு; அதுதான் யான் பார்த்தபோது தான் பாராமல் கடைக்கணித்து நோக்கிச் சிரிக்கும் சிரிப்பு எ - று.

காலிங்:— அசைந்த இயல்பினை உடையாள்மாட்டுப் பின்னும் ஓர் நன்மை உண்டு: யாதோ எனில், யான் தன்னை நோக்கிய நோக்கு எதிர் தானும் நம்மாட்டு உள்ளத்தால் ஒருதோய்தல் உடையாள்போல மெல்ல நிகழ்வதொரு முறுவல் உண்டெனவே இது பற்றுக்கோடாக அப்பொழுதைக்கு ஆறுதல் உளன் தலைமகன் என்பது கருத்து எ - று.

ஆண்டோரேர் என்பது அவ்விடத்து ஓர் அழகு என்றவாறு.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— ஏர் - நன்மைக்குறிப்பாய ஆகுபெயர். பசையினள்: முற்றெச்சம். அசையியல்: வினைத்தொகை.

## மேற்கோள்பகுதி:

இளம்:— 'குறிப்பே குறித்தது கொள்ளுமாயின், ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்' என்ற சூத்திரத்திற்கு மேற்கோள். (தொல். பொருள். 94.)

1099. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள. (௯)

தோழி மதியுடம்படுவாள் தன்னுள்ளே சொல்லியது.

## உரைப்பகுதி:

பரிமே:— ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல் - முன் அறியாதார்போல ஒருவரை ஒருவர் பொதுநோக்கத்தால் நோக்குதல், காதலார்கண்ணே உள - இக் காதலையுடையார்கண்ணே உளவாகாநின்றன.

பொது நோக்கு - யாவர்மாட்டும் ஒருதன்மைத்தாய நோக்கு. நோக்குதல்தொழில் ஒன்றேயாயினும் இருவர்கண்ணும் நிகழ்தலானும், ஒருவர்கட்டானும் குறிப்புவேறுபாட்டால் பலவாமாகலானும் உள எனப் பன்மையால் கூறப்பட்டது இருவரும் "மதுமறைந்துண்டோர் மகிழ்ச்சி

போல உள்ளத்துள்ளே மகிழ்[1]" தலின் அதுபற்றிக் காதலார் என்றும், அது புறத்து வெளிப்படாமையின் ஏதிலார்போல என்றும் கூறினுள்.

மணக்:— அயலார்போலப் பொது நோக்கத்தால் நோக்குதல், காதலித்தார்மாட்டே உளவாம் எ - று.

இது குறித்து நோககாமையும் உடன்படுதல் என்றது.

பரிப்:— நோககுதற் பன்மையால் உள என்றார்.

பரிதி:— அயலாரைப்போலப் பார்க்கும் பார்வை ஆசையுற்றா ரிடத்து உளது எ - று.

காளிங்:— நெஞ்சமே! இங்ஙனம் குறிக்கொண்டு நோக்காது அயலார் போலப் பொதுநோககு நோக்குதலும் மற்று உள்ளத்துக் காத லுடையோர்மாட்டேயும் உள என்பது கண்டனம. அதனுன் முன்னர் ஒருநோககு நோய்நோககன்றி யாம் அஞ்சியதூஉம் இனிமைக்கூறு என்பது சிறிது பயின்ற இடத்துத் தெளிந்தனம எனறு ஆற்ருமை சிறிது நீங்கினுன் தலைமகன் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— இது, தோழி சொல்லியது.

1100. கண்ணொடு கண்ணிணை நோககொக்கின் [2]வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல. (10)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒககின் - காமத்திற்கு உரிய இருவருள் ஒருவர்கண்களோடு ஒருவர்கண்கள் நோக்கால் ஒக்கு மாயின், வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல - அவர் வாய்மைதோன்றச் சொல்லுகினற வாய்ச்சொற்கள் ஒருபயனும் உடைய அல்ல.

நோக்கால் ஒத்தல் காதலநோககின ஆதல். வாய்ச்சொற்கள் மனத்தின்கணின்றி வாயளவில் தோன்றுகின்ற சொற்கள். இருவர்

[1] இறையனுர், சூ. 8. மேற். [2] 'வாய்ச்சொற் கொண்டு' காளிங் - பாடம்.

சொல்லும் கேட்டு உலகியல்மேல்வைத்துக் கூறியவாறு. இருவர்சொல்லு மாவன அவள புனங்காவல் மேலும் அவன் வேட்டத்தின்மேலும சொல்லுவன. பயனில்சொற்களாகலின், இவை கொள்ளப்படா என்ப தாம். இவை புணர்தல்நிமித்தம்.

மணக்:— கண்களோடு கண்கள் காமக்குறிப்பினால் நோக்கும் நோககம் ஒக்குமாயின், வாயினாற்சொலலும சொற்கள் ஒருபயனும் உடைய அல்ல எ - று.

இது சார்தலுறுகின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

பரிதி:— மனமும் கண்ணும் பொருந்திய பார்வை உண்டாகில் வாய்ச்சொலலினால் என்ன பயனும் இல எ - று.

பழைய:— மனமும் மனமும கண்ணும் கண்ணும் பொருந்திய காதல் உண்டாகில் வாய்ச்சொறகொண்டு என்ன காரியம்? எ - று.

காளிங்:— கேளாய் நெஞ்சே! ஒருவனோடு ஒருத்தியிடை மற்று அவர்தம் கண்ணொடு கண் எதிர்ந்து நோககுங்கால், நெஞ்சில் காதல் குறிப்புக கண்ணில் புலப்படுமாறு இரண்டு நோக்கும் தமமில் ஒக்கக் குளிர்ந்திருககப்பெறின், மற்று வாய்ச்சொற்கொண்டு என்ன பயனும் இல; எனவே, யாம இவள் வாய்ச்சொல் கேட்கப் பெறின எனைத்துப் பயனும் அதன்கண்ணே நிகழும எனறு அவள சொற்கேட்டலும காதலித்தான் தலைமகன என்பது கருத்து எ - று.

இதனால் இயற்கைப்புணர்ச்சி எய்தினான் தலைமகனென்பதூஉம், மற்று அவள் இன்சொல்கேட்ட கருத்துணமையும் புலப்பட்டதென அறிக.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— வாய்ச்சொல் - வாய்மைதோன்றச் சொல்லும் சொல். அது மனத்தின்கணின்றி வாயளவில் தோன்றும் சொல்.

**மேற்கோள்பகுதி:**

இளம்:— இதனுள் அகத்துநிகழ் வேட்கையினைக் கண்ணினால் அறியககிடந்தமை கூறியவாறு காண்க என்பர். (தொல். பொருள். 107.)

நச்:— குறிப்பே குறித்தது கொள்ளுமாயின் ஆங்கவை நிகழும் என்பதற்கு மேற்கோள். (தொல. பொருள். 97.)

## ஒப்புமைப்பகுதி:

" எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கணணிணை கவ்வி ஒன்றையொன்(று)
உண்ணவும நிலைபெறாது உணர்வும ஒன்றிட
அண்ணலும நோக்கினான் அவளும நோக்கினாள்." —கம்ப. மிதிலை. 35.

" கூற்றம் போலும கொலைக்கண்ணி னாலன்றி
மாற்றம் பேசு கிலாளையோர் மைந்தன்றான்
ஆற்று நீரிடை அங்கைக ளாலெடுத்(து)
ஏற்று வாருமை யாவர்கொ லாமென்றான்." —சை எழுச்சி 36.

## முதுமொழிவெண்பாக்கள்:

" சூதாம பருவத் துணைமுலையார் ஆடவர்க்குச்
சேதாம்பல் விள்ளார் தினகரா - வேதாகக்." —தினகர. 114

" அரனருள்சேய் மான்மகளென் றுங்கிருவர் தங்கள்
இயல்பும் அறிந்த இருளை - கருதுவது" —முதுமொழி. 162.

" பைநதொடியும சுந்தரரும் பார்த்தகுறிப் பாலன்றே
சிந்தையுமொன் றானார் சிவசிவா - தந்தமது " —சிவசிவ. 110.

" மேதை விலோசனமு மேவும் இணைநோக்கும்
ஏது கலவிக் கிரங்கேசா - ஆதலால்." —இரங். 110.

" கனிந்திதையம் கண்டார் கமலினியும் காவில்
அனிந்திதையும் சுந்தரர்கண் டாங்கே - புனைந்துரைத்தென்."
—திருத். 91.

## குறிப்பு :

மனத்தொடு படாத வெறும் வாய்ச் சொற்கள் பயனற்றன; அவை கொள்ளப்படா கண்கள் காதல் நோக்கினவாயின் என்பது பரிமேலழகர் கருத்து. காளிங்கர் கண்ணிணை ஒத்ததோடன்றி அவள் வாய்சசொல்லும் பெறின் எததுணைப் பயன்களும் உளவாகாவோ என்று எண்ணி இன்புற்றான் என்பர். பரிப்பெருமாள்

கண்ணொடுத்தவாயின் வாய்ப்பேசசால் பயனில்லை என்பர். அதிகாரம் குறிப்புணர்த லாதலின், இது இயற்கைப்புணர்ச்சிக்கு முன் நிகழ்வதாகலின் கிளவிவேட்டுக் கூறி நின்றான் என்றலும, கிளவியாற பயனில்லை நோக்கே பயனைவிளக்கலின் எனறலுமே சிறந்த கருத்துக்களாதல் தெளிக. நோக்கொக்கின் என்றது இருவயின் ஒத்தலையும், வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல என்றது கிளவி வேட்டலையும் உணர்த்திற்று எனலுமாம.

—தொகுப்பாசிரியர்.

## குறள் வைப்புமுறை

**பரிமே:—** இருநோக்கு, கண்களவு, நோக்கினாள், யாநோக்கும், குறிக்கொண்டு, உறாஅதவர், செறாஅச், அசையியற்கு, ஏதிலார், கண்ணொடு.

**மணக்:—** இருநோக்கு, நோக்கினாள், யானோக்கும், கண்களவு, ஏதிலார், குறிக்கொண்டு, அசையியற்கு, உறாஅதவர், செறாஅச், கண்ணொடு.

**பரிநி:—** இருநோக்கு, ஏதிலார், கண்களவு, நோக்கினாள், யானோக்கும், குறிக்கொண்டு, அசையியற்கு, உறாஅதவர், செறாஅச், கண்ணொடு.

**காளிங்:—** இருநோக்கு, அசையியற்கு, நோக்கினாள், யானோக்கும், கண்களவு, குறிக்கொண்டு, ஏதிலார், கண்ணொடு, உறாஅதவர், செறாஅச்.

# 111. புணர்ச்சிமகிழ்தல்

## தொகுப்புரை :

[ ஐம்பொறிகளானும் நுகரக்கூடிய இன்பங்களும் இவளிடம் உள்ளன. வாதம் முதலிய நோய்களுக்கு மருந்தாவன பிற; இவள் தான்தந்த நோய்க்குத் தானே மருந்தாவள். தம்மால விரும்பப்பெற்ற மகளிர்தோளின்மேல தூங்குதலைவிட வைகுந்தமும் இனிதன்று விலகினல் வருத்தி, அணுகினல் குளிர்சசிதரும் தீயை இவள் எங்குப்பெற்ருளோ? விரும்பியகாலத்து விரும்பிய பொருளகள் தாமே வநது இன்பம் செய்வதுபோலாம் பூங்குழலாள் தோளின் புணர்வு புணருந்தோறும் புணருந்தோறும் உயிர் தளிர்ப்பதால் தலைவியின் தோள்கள் அமிழ்தால் ஆயின. சொநதவீட்டிலிருந்து சொந்தமுயற்சியானய உணவைப் பகுத்துண்டதுபோலும் பசநத மேனியாளைப் புணர்தல். காற்றும் ஊடறுத்துப் புகமுடியாத தழுவுதல, விரும்பிய காதலர்க்கு மிக இனிது. ஊடுதலும், தெளிதலும், புணர்தலும ஆகிய இவை காதலர் அடைநதபயன்கள். சேயிழையாளைப் புணரப்புணரக் காதல், பொருள்களை அறிய அறியப் பழைய அறியாமையைக் கணடது போலாம்.

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது அங்ஙனம் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் அப்புணர்ச்சியினை மகிழ்ந்து கூறல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.*

மணக்:— *புணர்ச்சி மகிழ்தலாவது தலைமகள் குறிப்பறிந்து புணர்ந்த தலைமகன் புணர்சசியினை மகிழ்ந்து கூறுதல்.*

பரிப்:— *மேலதனோடு இயைபும இது. இது தலைமகட்கு உரித்தன்றோ எனின, அவட்கும ஒககுமாயினும் அவள் மாட்டுக குறிப்பினல் நிகழினல்லது கூற்றினல் நிகழாது என்க.*

**1101.** *கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்*
*ஒண்டொடி கண்ணே உள.* (க)

இயற்கைப்புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது.

## உரைப்பகுதி:

பரிமே:— *கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் - கண்ணால் கண்டும செவியால் கேட்டும் நாவால் உண்டும் மூக்கால் மோநதும மெய்யால தீண்டியும் அனுபவிக்கப்படும் ஐம்புலனும், ஒண்டொடிகண்ணே உள - இவ்வொள்ளிய தொடியை உடையாள் கண்ணே உளவாயின.*

உம்மை முற்றும்மை. தேறறேகாரம வேறிடத்தின்மை விளக்கி நின்றது. வேறுவேறு காலங்களில் வேறுவேறு பொருள்களான் அனுபவிக்கப்படுவன ஒருகாலத்து இவள்கண்ணே அனுபவிக்கப்பட்டன என்பதாம். வடநூலார் இடககர்ப்பொருளவாகச் சொல்லிய புணர்ச்சித் தொழில்களும் ஈண்டு அடககிக் கூறப்பட்டன.

மணக்:— கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறிகின்ற ஐநது புலனும், இவ்வொள்ளிய தொடியை யுடையாள் மாட்டே உள எ - று.

இது பொறிகள் ஐந்தினுக்கும் ஒருகாலத்தே இன்பம் பயந்தது என்று புணர்ச்சியை வியந்து கூறியது.

பரிதி:— விளககுககண்டு அழிந்தவிட்டிலும, யாழ்கேட்டு அழிந்த அசுணமும், இரைகண்டு அழிந்த மீனும், செண்பகமணம உண்டு அழிந்த வண்டும், மெய்யின்பம் கண்டு அழிந்த யானையும ஒவ்வொரு புலனால் அழிந்தன; *ஐம்புலனும் ஓரிடத்திலே கூடியதால் என்செய்யாது? எ - று.

காளிங்:— தாம் எப்பொழுதும் கண்ணுக்கு இனிய உறுதலு மன்றே: அதனால் இவை இத்துணையும் நம்மால் காதலிக்கப்பட்ட இவ்வொண்தொடி மாட்டே உளவாகலான் இனிப் புறத்துப்போய் ஒன்று அறிவுற வேண்டுவதில்லை; இவ்வாறு இவளோடு இன்புற்று இனிது வாழ்தற்கு யாம முன்னம் என்ன தவஞ்செய்தனம; இது என்னவியப்போ என்று இங்ஙனம் தன் நெஞ்சிற்குச் சொல்லுவானைத் தலைமகள் கேட்பச் சொல்லியது பொருள் எ - று.

உரைவிளக்கப்பகுதி·

நுண்:— உம்மை - முற்றும்மை; ஏகாரம் தேற்றேகாரம். ஒள்தொடி - ஒள்ளியதொடி.

மேற்கோள்பகுதி :

இளம்:— இயற்கைப்புணர்ச்சிக்கண் நுகர்ச்சியுற்றமை கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள் 99.)

---

* 'ஐந்து புலனும் அழியும்படியாக நாயகிக்கு மெய் வாய் கண் மூக்குச் செவி யுண்டு; ஆகையால் காமுகர் அழியாரோ'

—பழையவுரை.

நக்:— 'தலைமகன் பரத்தையரைத் தலைமகளை எய்தியிருந்தே உடையனாதல், எய்தாததன்முன் உடையனாதல் இரண்டல்லது இல்லை. அவற்றுள் எய்தியிருந்தே உடையனாயினானே எனின், தலைமகள் குணமேயு மன்றிப் பிறவும இன்பம செய்வன உளவாகக் கருதினானும். ஆகவே 'கண்டு கேட்டு............உள' என்பதனோடு மாறுகொள்ளும் எனபது.' (இறையனார். சூ. 40)

சுவாமி:— ஒன்று பல அடுகக்களுக்கு, 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று' என்பது மேறகோள். (இ. கொ. 120.)

அடியார்:— 'மாசறுபொனனே வலமபுரிமுத்தே காசறுவிரையே கரும்பே தேனே': இவற்றால் சொல்லியது ஒளியும ஊறும நாற்றமும் சுவையும் ஓசையும் ஆகலின 'கண்டு.........உள' என நலம பாராட்டப் பட்டன." (சிலப். மனையறம. 73 - 74.)

குணவீர:— வினையெச்சம் உடனடுக்கி வந்தது என்பதற்கு மேற்கோள் காட்டுவர். (நேமி. 46.)

நம்பி:— புணர்ச்சியின் மகிழ்தலுக்கு மேற்கோள். (சூ. 126.)

## ஒப்புமைப்பகுதி:

"வாயினும் செவியினும் கண்ணினும் மூக்கினும்
மேதகு மெய்யினு மோதல் இன்றி
உண்டும் கேட்டும் கண்டும நாறியும்
உற்றும் மற்றிவை அற்றம் இன்றி
ஐம்புல வாயிலும் தமபுலம பெருக
வைகல் தோறும் மெய்வகை தெரிவார்" —பெருங். 3 : 15 : 64 - 69.

"மாலைக் கதிர்வேல் மலங்க மணிமலர்க்(கு)
ஓலை விடுகண் உருகு கொடியிடை
ஏலம் கமழ்குழல் ஏழை யவரன்ன
ஆலைக் கரும்பின் அகநா டணைந்தான்." —சீவக. 1613.

"கட்புல னாதி ஐந்தும உவபபுறக் கனிந்த காமம
விட்புலத் தவரே யன்றி வீடுபெற் றவரும் வீழ்ந்து
பெட்பமுற் றமுதும கைப்பப் பெருங்குலக் கற்பி னார்போல்
நட்பிடைப் படுத்தி விற்கும நல்லவர் இருக்கை ஈதால்"
—திருவிளை. திருநகரப். 53.

" வீரபாண்டியற்கு அணங்கனைய
மின்னனருள் ஐம்போகமும் விளைநிலம் அனைய, பொன்னனார்."
—நை. மாணிக்கம். 2.

" ஐம்புலன்களும் வைகலும் விருந்தா அருந்த
வெம்பு நால்வகை உண்டியும் வீணையும் சாந்தும்
செம்பொன் ஆரமும் ஆடலின் செல்வமும் தெய்வப்
பைம்பொன் மேகலை ஓவியப் பாவையும் பாரும்." —நை. வருண. 37.

" கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி
கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்."
—திருவாய். 4: 9: 10.

" தாண்டும் சினவிடை எம்மான் தனிவெங்கைத் தண்சிலம்பில்
யாண்டும் பெறலரும் இன்பமெல் லாம்ஐம் புலனும்இன்று
தூண்டும் சுடரென நின்றஇம் மாதரில் தாய்த்தனவால்
வேண்டும் பொருணமக்(கு) ஏதோ இனிஇந்த மேதினிக்கே."
—திருவெங்-கோவை. 21.

" வண்டிமிர் கூந்தல் இமய வல்லி வனமுலை தாக்க மகிழ்ந்து புல்லிக்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றுப் பண்ணுள் கலவிப் பெருநலம்
துய்க்கும் காலை." —காஞ்சி. சுரகரீசப். 28.

" பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணமரும் இன்சொற் பணிமொழியாள் - மண்ணின்மேல்
கண்டுகேட்(டு) உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உளவென்று - பண்டையோர்
கட்டுரையை மெய்ப்படுத்தாள்...." —திரு-உலா. 171 - 173.

" பண்டுநிகழ் பான்மையினால் பசுபதிதன் அருளாலே
வண்டமர்பூங் குழலாளை மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற்(று) அமர்ந்திருந்தார் காதலினால்."
—பெரிய - ஏயர்கோன். 268.

" ஐந்தானனத்தோன் அருள்செய்ய அழகின்மிக்காள்
ஐந்தான சொல்லால் கணவன் தருகைய என்றாள்
ஐந்தான சொல்லான் அளித்தான் மற்றவனும் முன்னாள்
ஐந்தான போகம் இவள் எய்திய வாறறிந்தே." —வில்லி. திரௌபதி. 81.

முதுமொழிவெண்பாக்கள் :

"வானுலகில் மண்ணுலகில் மற்றொன்றில கண்டதுண்டோ
தேனுவென வீசும தினகரா - மானிடர்." —தினகர. 115.

குறிப்பு :

ஐம்புல இன்பங்களும் இவள்பால் உள்ளன என வியந்ததாகக் கூறுவர் பரிமேலழகர். பரிதியார் ஒரு பொறியுணர்ச்சியாலேயே ஒவ்வொருவகை உயிர்கள் நாசமடைந்தன; ஐந்து இன்பங்களும இவளிடம் இருப்பதால் என்னகேடு விளையுமோ என மகிழ்ச்சியின் மிகுதியால் வியக்கின்றான் என்பர்.

—தொகுப்பாசிரியர்.

1102. பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து. (உ)

இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— பிணிக்கு மருந்து பிற - வாதம் முதலிய பிணிகட்கு மருந்தாவன அவற்றிற்கு நிதானமாயினவன்றி மாறாய இயல்பினை உடையனவாம், அணியிழை தன் நோய்க்கு மருந்து தானே - அவ்வாறன்றி இவ்வணியிழையினையுடையாள் தன்னின்றைய பிணிக்கு மருந்தும் தானே ஆயினாள்.

இயற்கைப்புணர்ச்சியை நினைந்து முன் வருந்தினான் ஆகலின் தன்நோய் என்றும், அவ்வருத்தம் தமியாளை இடந்தெதிர்ப்பட்டுத் தீர்ந்தாகையின் தானே மருந்து என்றும் கூறினான். இப்பிணியும எளியவாய வற்றான் தீரப்பெற்றிலம் என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

மணக்:— நோயுற்றால் அதற்கு மருந்தாவது பிறிதொன்று; இவ்வணியிழையால் வந்த நோய்க்குக் காரணமாகிய இவள், தானே மருந்தாயினாள் எ - று.

இது புணர்வதன் முன்னின்ற வேட்கை தணிந்தமை கூறிற்று.

பரிதி:— வியாதிக்கு மருந்து பிறத்தியிலே; காமநோய்க்கு மருந்து அந்த நாயகிதானே எ - று.

காளிங்:— கேளாய் நெஞ்சே! உலகத்து வினையான் வந்துற்ற நோய்க்கு அது தணித்தற்கு மருந்து பிற ஆம் இத்துணை: இனி மற்று இவ்வணியிழைதன்னால் முன் நமக்குளதாகிய நோய் பின் தணிதற்கு மருந்து தானே ஆயினள்: அது என்ன வியப்போ எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— தன்நோய் - தன்னாலாய நோய் மன் ஒழியிசை. அணியிழை - வினைத்தொகை; அணிதலையுடைய என வேற்றுமைத் தொகையுமாம். அன்மொழியாயினும், ஆகுபெயராயினும் ஆக.

## மேற்கோள்பகுதி :

நச்:— நான்காம் வேற்றுமைப் பொருள்பற்றிவரும் வாய்பாடுகள் அறிவிகரும் சூத்திரத்தில் 'அப்பொருட்கிளவியும்' என்பதனால் 'பிணிக்கு மருந்து' என்பதும் கொள்க என்பர். (தொல். சொல். 77.)

மயிலை:— கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு பகைப் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (நன். 297.)

சங்கர:— ஷை (நன். 298)

நான்காம் வேற்றுமை பெயர்கொண்டு முடிந்ததற்குப் 'பிணிககு மருந்து' என்பது மேற்கோள. (நன். 319.)

## ஒப்புமைப்பகுதி :

"மருந்து பிறிதில்லை யான்உற்ற நோய்க்கே' —நற். 80.

"களைநர் இல் நோய் செயயும் கவின்" —கலி. 58 : 9.

"நின்முகம் தான்பெறின் அல்லது கொன்னே
மருந்து பிறிது யாதும் இல்லேன் திருந்திழாய்
என்செய்வாம் சொல்லினி நாம." —ஷை 60 : 2022.

"பெண்மைப் பொதுமைப் பிணியிலி ஐம்புலத்தைத்
துற்றுவ துற்றும் துணையிதழ் வாய்த்தொட்டி"
—பரிபா. 20 : 50-51.

"மநதிரம இல்லை வேறோர் மருந்தில்லை மையல் நோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவவாய் அமுதலால் அமுதச் சொல்லீர்.
—கம்ப. மாயாசனக. 16.

"பொங்கண் வேலிளைஞர் மார்பினூ டுருவு
புண்கள்தீர இரு கொங்கையின்
கருங்கண் வேதுபட ஒற்றி மென்கைகொடு
கட்டுமாதர் கடை திறமினோ. —கலிங். 56.

முதுமொழிவெண்பாக்கள் :

"அங்கருளால் ஆரூரர் ஆசையுற வேபாவை
சங்கிலியார் மானேய் தணிவித்தார் - எங்கோன்" —திருத். 93.

குறிப்பு :

பிறமன் என்பதற்குப் பரிமேலழகர் நிதானமாக மருந்தாமேயன்றி நேரே மருந்தாவதின்று என்பர். ஏனையோர் நோயுண்டாதற் காரணமான பொருள்களைக் காட்டினும் வேறுன என்பார்கள்.

—தொகுப்பாசிரியர்.

1103. தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. (ந)

நிரதிசய இன்பத்திற்குரிய நீ இச்சிற்றின்பத்திற்கு இன்னையாதல்
தகாது என்ற பாங்கற்குச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— தாம் வீழ்வார் மெனதோள் துயிலின் இனிதுகொல் - ஐம்புலன்களையும நுகர்வார்களுக் தாம் விரும்புமகளிர் மெல்லிய தோளின்கண் துயிலும துயிலபோல வருந்தாமல் எயதலாமோ, தாமரைக்கண்ணான் உலகு - அவற்றைத் துறந்த தவயோகிகள் எய்தும் செங்கண்மாலுலகம்.

ஐம்புலன்களையும் நுகர்வார் என்னும் பெயர் அவாய்நிலையான் வந்தது. இப்பெற்றித்தாய துயிலைவிட்டுத் தவயோகங்களான வருந்த வேண்டுதலின், எம்மனோர்கு ஆகாது என்னும கருத்தால் இனிதுகொல என்றான். இந்திரனுலகு என்று உரைப்பாருமுளர்: தாமரைககண்ணான் என்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃது உரையன்மை அறிக.

மணக்:— தம்மால் விருமபப்படுவாரது மெல்லியதோளின்கண் துயிலும துயிலினும் இனிதோ ? இந்திரனது சுவர்ககம எ - று.,

இது சுவர்க்கத்தின்பமும் இதுதானே என்று கூறியது.

பரிதி:— தாமும் தாமும் விரும்பும் இன்பம்போலே இருக்குமோ? வைகுண்டததில் இன்பம எ - று.

காளிங்:— நெஞ்சே! நாம் விரும்புதற்கு உரிமையுடையோர் தமது மென்தோள் மேவித் துயிலும துயிலின் இனிமை போல இனிதோ தான்? இது அன்று; யாதெனின், ஆயிரம் வேள்வியின் எய்துவாராக அருமறை கூறும அயனுலகு ஆண்டு உறும் இன்பம எ - று.

தாமரைக்கண்ணன் என்பது தாமரை யிடத்தான் என்றது; மாயவன் உறையும் வைகுந்த உலகம் என்றும் ஆம.

## மேற்கோள்பகுதி :

சுவாமி:— தம்மால் வீழப்பட்ட தலைவியுடைய மென்தோள் என்பதை, பொருள் வேறுபடாது ஆதலால் 'தாம்வீழ்வார் மென்தோள்' எனத் தொகுககவேண்டின் தொகுககலாம என்பர். (இ. கொ. 78.)

உருபும் படுசொல்லும் தொக்கு வினைமுற்றுப்பெயர் வினைமுதலானதற்கு மேற்கோள். (ஷை 83.)

## ஒப்புமைப்பகுதி :

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகும
அரிதுபெறு சிறப்பின் புத்தேள் நாடும்
இரண்டும ஆக்கின் சீர்சா லாவே
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மாண்வரி அல்குல் குறுமகள்
தோள்மா று படூஉம் வைகலொடு எமக்கே" —குறுந். 101.

## முதுமொழிவெண்பாக்கள் :

"மெய்த்தவத்தைக் காசிபனும் விட்டொழிந்து மாயைபால்
சுத்தமனம் வைத்தானே சோமேசா - இத்தலத்தில் —சோமேசர் 111.

"அரனடியார் அல்லார் அடைபதந் தானும்
இருவிலனின் பத்திழிவாம் என்று - வருவதிது" —முதுமொழி. 163.

உம்பரிற் றன்முகனார் உள்ளங்கை தோள்தோய
இப்பர்வந் தாரன்றோ இரங்கேசா - அன்பாகத்" —இரங். 111.

1104. *நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்*
*தீயாண்டுப் பெற்றாள் இவள்.* (௪)

பாங்கற்கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— *நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண் என்னும் தீ - தன்னை அகன்றுழிச் சுடாநிற்கும் அணுகுழிக குளிராநிற்கும இப்பெற்றித் தாய தீயை, இவள் யாண்டுப் பெற்றாள் - என்கண் தருதற்கு இவள் எவ்வுலகத்துப்பெற்றாள்!*

*கூடாமுன் துன்புறுதலின் நீங்கின்தெறூஉம் என்றும், கூடிய பின் இன்புறுதலின் குறுகுங்கால் தண்என்னும் என்றும், இப்பெற்றிய தோர் தீ உலகத்து இலலையாம ஆகலின் யாண்டுப்பெற்றாள் என்றும் கூறினான். தன் காமத்தீததன்னையே அவள் தந்தாளாகக கூறினான், அவளான் அது வெளிப்படுதலின்.*

மணக்:— *தன்னை நீங்ினஇடத்துச் சுடும், குறுகினஇடத்துக் குளிரும், இத்தன்மையாகிய தீ எவ்விடத்துப் பெற்றாள் இவள்? எ - று.*

*இது புணர்ச்சி வேட்கையால் கூறுதலான், புணர்ச்சி மகிழ்த லாயிற்று.*

பரிப்:— *இரண்டாம் கூட்டத்துக் கூடலுற்ற தலைமகன் தலை மகள் கேட்பது பயனாகத் தனது வேட்கைதோன்றச் சொல்லியது.*

பரிதி:— *நாயகியிடத்திலே இன்பத்தைவிட்டு நீங்கின் சுடவும், கூடியிருக்கின் குளிரவும, இப்படி இருககிற காமத்தீயை எவ்விடத்திலே பெற்றாளோ இவள் எ - று.*

காளிங்:— *நெஞ்சே! உலகத்துத் தீயின் நலன் தன்னை வந்து அணுகின் சுடுதலும், அகலின் மெய் தண் என்றலும் செய்யும் அது வல்லது இங்ஙனம் சிறிது தன்னை அகலின் சுடுதலும், அணுகின் தண் என்றலும் செய்யும் இந்தத் தீ இவள் எவ்விடத்துப் பெற்றனள் எ - று.*

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— *தெறூஉம் என்பது, ஈண்டு அளபெடுத்து, மாத்திரை பெற்று, ஓரசை ஈரசையாய் நின்றது. நின்றமையால் "குரூஉச்சுடர்"*

போலாது என்க. "எருவுஞ் செருவும்" (தொல். எழுத். 260.) என்னும் சூத்திரத்து, "மிகூஉம்" என்பதனை உடம்பொடு புணர்த்துக கூறினர். நச்சினர்க்கினியர் உரைத்தது நெட்டெழுத்தாதற்கு என்க.

## மேற்கோள்பகுதி :

இளம்:— களவின்கண் தலைவனுக்கு நிகழும் கூற்றுக்களுள் பெற்றவழி மகிழ்ச்சியும் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 99.)

நச்:— இடந்தலைப்பாட்டில் தலைவியை நீங்கியவழிப் பிறந்த வருத்தம் தலைவன் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 102.)

சிவஞான:— குற்றியலுகர குற்றியலிகரங்களை விளக்கவந்த விடத்து, குறுகுதல் என்பதற்கு அணுகுதல் எனப் பொருள் கூறி அதற்கு இக்குறளை மேற்கோள்காட்டுவர். (தொல் - விருத். பக். 28.)

சுவாமி:— குற்றெழுத் தளபெடைக்கு மேற்கோள். (இ. கொ. 90.)

## ஒப்புமைப்பகுதி :

"கவவிற் கமைந்த காமக் கனலி
அவவுறு நெஞ்சத்து அகல்விடத் தழற்ற" —பெருங். 2 : 18 : 8-9.

"தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ" —குறள். 1159.

## முதுமொழிவெண்பாக்கள் :

"பார்த்தன் சுபத்திரைதன் பார்வையினுன் மெய்வெதுப்பும்
தீத்தணைக் கொண்டான் சிவசிவா - மாத்திரைநாம்"

—சிவசிவ. 111.

## குறிப்பு :

உலகத்தீ நீங்கில் தண் என்னும்; குறுகில் சுடும். இத்தீ எதிர்மாறாக இருந்தது என்று அதனோடு வேற்றுமைதோன்றக் கூறினமையின் வேற்றுமையணி யுடன் கலந்த உருவக அணி.

—தொகுப்பாசிரியர்.

1105. வேட்ட பொழுதின் அவையவை போலுமே
*தோட்டார் கதுப்பினாள் தோள். (ரு)

தோழியிற்கூட்டத்து இறுதிக்கண் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— வேட்டபொழுதின் அவை அவை போலுமே - மிக இனியவாய பொருள்களைப் பெறாது அவற்றின்மேல் விருப்பங்கூர்ந்த பொழுதின்கண் அவையவை தாமே வந்து இன்பம்செய்யுமாறுபோல இன்பஞ்செய்யும், தோட்டார் கதுப்பினாள் தோள் - எப்பொழுதும் பெற்றுப்புணரினும், பூவினை அணிந்த தழைந்த கூந்தலினையுடையாள் தோள்கள்.

தோடு: ஆகுபெயர். இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டத்துக்கண் முன்னரே நிகழ்ந்திருக்கப் பின்னரும் புதியவாய் நெஞ்சம் பிணித்தலின், அவ் ஆராமைபற்றி இவ்வாறு கூறினான். தொழிலுவமம்.

மணக்:— காதலித்தபொழுது காதலிக்கப்பட்ட அவ்வப்பொருள் களைப் போலும்; தோளின்கண் தாழ்ந்த கூந்தலினையுடையவள் தோள் எ - று.

தோள் தாழ் கதுப்பு - புணர்ச்சிக்காலத்து அசைந்து தாழ்ந்த கூந்தல்.

பரிப்:— இதனை ஒழியப் பிறிதொன்று தோற்றுகின்றது இல்லை என்று கூறியதன்றி, யாம காதலிககப்பட்ட பொருள்கள் அக்காலத்தே முயலாமல் பெற்றதனோடு ஒத்த உவகையை மிகுக்கும் என்றும ஆம்.

பரிதி:— ஆயிரம் யாகம் வேட்ட இன்பத்துக்கு அளவு என்றாலும் அதற்கு அகப்படா இன்பந்தான் நாயகியாள் ஆயது எ - று.

காளிங்:— நெஞ்சே! உலகத்து யாதாலும் ஒரு பொருள்களை விரும்பினால் விரும்பின பொழுதிலே அவை அவை எய்தி இன்புறல் யார்க்கும் அரிது; அவ்வாறன்றி அவை அவை விரும்பிய பொழுதே எளிதாக எய்தி இன்புறும இனிமை போலும் இதழ் ஆர்ந்த சுரிகுழலினாள் தோள் நமக்கு எ - று.

*'தோட்டாழ்' மணக் - பாடம்.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— தொழிலுவமம். "தம்முடைய பொருள் எனது" என்பதும் அது.

**மேற்கோள்பகுதி :**

இளம்:— 'தீராத்தேற்றமாவது இயற்கைப் புணர்ச்சியுடன் முடியாத தெளிவு. 'வேட்டபொழுதின்.............தோள்'. இது இயற்கைப் புணர்ச்சித் துறையன்று. இடந்தலைப்பாட்டின்கண் தலைமகன் கூறியது. நுகர்ச்சி பெற்றது'. (தொல். பொருள். 99.)

நச்:— தலைவன் நுகர்ச்சி பெற்றுக் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 102.)

தலைவி இருக்குமிடம் பாங்கன் கூறக்கேட்ட தலைவன் இடந்தலைப் பாட்டில் கூறியவாற்றானே கூடி நின்று மகிழ்ந்து கூறியதற்கு மேற்கோள். (ஷை 102.)

**ஒப்புமைப்பகுதி :**

"ஈட்டஞ்சால் நீள்நிதியும் ஈர்ங்குவளைப் பைந்தடமுஞ்
மோட்டு வளஞ்சுரக்கும ஊரும் முழுதீந்து
வேட்டார்க்கு வேட்டனவே போன்றினிய வெய்மென்தோள்
பூட்டார் சிலைநுதலாள் புல்லா தொழியேனே" —சீவக. 1042.

**குறிப்பு:**

பரிமேலழகர், விரும்பியகாலத்து விரும்பிய பொருள்கள் தாமே வந்து இன்பம் செய்தலைப்போலும் இவள் தோள்கள் என எல்லாப்பொருளும தரும் இன்பத்தை இவள் தோள்கள் தருகின்றன என்று பாராட்டினன் என்பர். விரும்பிய பொருள்களாகவே இருந்து இன்பம் அளிக்கின்றன என்பர் மணக்குடவர். இன்பந்தரும பொருள்களை ஒருவன் விரும்பினல் அவற்றை எய்தல் அரிது, இவள் தோள்கள் எல்லாவற்றையும் எளிதில் எய்தி இன்புற்றதுபோலும் என்பர் காளிங்கர்.

—தொகுப்பாசிரியர்.

1106 உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்(கு)
அமிழ்தின் இயன்றன தோள். (சு)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— உயிர் உறுதோறு தளிர்ப்பத் தீண்டலால் - தன்னைப் பெறாது வாடிய என் உயிர் பெற்றுறுந்தோறும் தளிர்க்கும்வகை தீண்டுதலான், பேதைகருத் தோள் அமிழ்தின் இயன்றன - இப்பேதைக்குத் தோள்கள் தீண்டப்படுவதோர் அமிழ்தினால் செய்யப்பட்டன.

ஏதுவாகலான் தீண்டல் அமிழ்திற்கும் எய்திற்று. வாடியஉயிரைத் தளிர்ப்பித்தல்பற்றி, அவை அமிழதின் இயன்றன என்றான். தளிர்த்தல்- இன்பத்தால் தழைத்தல்.

மணக்:— சாருந்தோறும் என் உயிர் தழைப்பச் சார்தலால், பேதைக்குத் தோள்கள் அமுதினால் செய்யப்பட்டனவாகவேண்டும் எ - று.

சாராதகாலத்து இறந்துபடுவதான உயிரைத் தழைககப் பண்ணுதலான், அமுதம் போன்றது என்றவாறு. இது கூடின தலைமகன் மகிழ்ந்து கூறியது.

பரிதி:— தென்றற்கொடுமையாலும் சந்திரன் கொடுமையாலும் வற்றின சரீரத்தை நாயகி தீண்டச் சரீரம தளிர்க்கையினாலே, நாயகிக்கு அமுதினால் பண்ணின தோள் எ - று.

காளிங்:— நெஞ்சமே! யாம் இங்ஙனம் இருந்தவள் மெய்யோடு மெய்யுறுதோறும் ஒருகாலைகக ஒருகால நமது உயிர் தளிர்த்து ஏமுறுமாறு முயங்கிச் சேறலான் இப்பேதையாட்கு அமிழ்தினான் அமைத்தன போலும் இத்தோள்களானவை எ - று.

**மேற்கோள்பகுதி :**

நச்:— இஃது என் கை சென்று உறுந்தோறும் இன்னுயிர் தளிர்க்கும்படி யான் தீண்டப்படுதலின் எனப் பொருள் கூறவே மெய் தீண்டலாயிற்று என்பர். (தொல். பொருள். 102.)

கைகோள் செய்யுட்கு உறுப்பாமாறு கூறுகின்றவர் இடந்தலைப் பாட்டிற்கு இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். செய். 186.)

சொக்கப்:— 'மெய்தொட்டுப் பயிறல் துறைவிளக்கத்தில் எவ்வுறுப்பைத் தொடடானேனும் தோள் தீண்டினன் என்க. என்னை? 'உறுதோறு........தோள்' என்பதனுற் கண்டு கொள்க'. (தஞ்சை. 8.)

1107. தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு. (எ)

இவளை நீ வரைந்துகொண்டு உலகோர் தம்மில் இருந்து தமதுபாத்துண்ணும் இல்லறத்தோடுபடல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— அம் மா அரிவை முயக்கு - அழகிய மாமைநிறத்தையுடைய அரிவையது முயககம், தம்மில் இருந்து தமது பாத்து உண்டற்று - இன்பம் பயத்தற்கண் தமக்கு உரிய இல்லின்கண் இருந்து உலகோர் தம் தாளான்வந்தபொருளைத் தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் கட்குப் பகுத்துத் தம் கூற்றை உண்டாற்போலும்.

தொழில் உவமம். இல்லறஞ்செய்தார் எய்தும் அறக்கத்தின்பம் எனக்கு இப்புணர்ச்சியே தரும் என வரைவுடன்படான் கூறியவாறாயிற்று.

மணக்:— தம்மிடத்திலே இருந்து, தமது தாளாண்மையால் பெற்றபொருளை, இல்லாதார்க்குப் பகுத்து உண்டாற்போலும்; அழகிய மாமை நிறத்தினையுடைய அரிவையது முயக்கம் எ - று.

பரிப்:— உணவினும் அதனின் மிக்க இன்பம் தருவது இல்லை புணர்ச்சியின் இதனின் மிகக இன்பம் தருவது இலலை என்று அதன் இனிமை கூறியது.

பரிதி:— தம்மிட அகத்திலே இருந்து தம்மிட அசனத்தைப் *பொசிப்பதுபோல இன்பம் இல்லை; அதினும் பெரியது அரிவை முயக்கம் எ - று.

காளிங்:— கேளாய் நெஞ்சே தமககுரிமையுடைய இல்லின்கண் இருந்து தமது தாளாண்மையால் நீதியின் தந்த பொருளகொண்டு தாமே தனித்து உண்டு ஒழியக கருதாது பலர்க்கும் பகுத்துண்டு வாழ்தலின்

*'பொசிக்கும் இன்பத்திற்கு ஒக்கும் நாயகியிடத்து இன்பம' —பழையஉரை.

இனிமை எத்தன்மைத்து? மற்று அத்தன்மை உடையது யாதோ எனில், இவ்வரிவையை யாம் ஒரு பொழுதும் இடைவிடாது முயங்கப் பெறும் முயக்கின் நன்மை எ - று.

## மேற்கோள்பகுதி :

நச்:— குறிப்பே குறித்தது கொள்ளுமாயின் முயங்கி மகிழ்ந்து கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 97.)

பெருந்:— இது மகிழ்ந்துசொன்னமையால் மகிழ்ச்சி என்னும் அலங்காரமாயிற்று என்பர். (வீர. 154.)

சொக்கப்:— 'மின்னிய மாமை விளர்ப்ப தென்னே' மாமை- அழகு; நிறமுமாம்- 'தம்மில்லிருந்து......முயக்கு' என்னுங்குறளில் 'அம்மா அரிவை' யென்பதற்குப் பரிமேலழகர் எழுதிய உரையால் கண்டுகொள்க. (தஞ்சை. 22.)

நம்பி:— இரவுக்குறியில் புணர்தற்கு மேற்கோள். (சூ. 158.)

## ஒப்புமைப்பகுதி :

"முந்துமுக் கனியி னோடு முதிரையின் முழுத்த நெய்யில்
செந்தயிர்க் கண்டங் கண்டம் இடையிடை செறிந்த சோற்றில்
தந்தமில் இருந்து தாமும் விருந்தொடும் தமரி னோடும்
அந்தணர் முதலோர் உண்டி அயில்வுறும் அமலைத்து எங்கும்"
—கம்ப. நாட்டுப். 19.

1108. வீழும் இருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு. (அ)

ஒத்த அன்புடைய நமக்கு ஒருபொழுதும் விடாத முயக்கமே இனியது என வரைவுகடாய தோழிக்குச் சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— நீ சொல்லுகின்றது ஒக்கும், வளி இடை போழப்படா முயக்கு - ஒருபொழுது நெகிழாமையின் காற்றால் இடையறுக்கப்படாத முயக்கம், வீழும் இருவர்க்கு இனிதே - ஒருவரை ஒருவர் விழைவார் இருவர்க்கும் இனிதே.

முற்றும்மை விகாரத்தால தொககது. ஏகாரம தேற்றத்தில் கண் வந்தது. ஈண்டு இருவரில்லை, இன்மையான் இஃது ஒவ்வாது என்பது கருத்து. களவிற்புணர்ச்சியை மகிழநது வரைவுடன்படான் கூறியவாறு.

மணக்:— ஒத்தகாதலுடையா ரிருவர்கரும் இனிதாம்; காற்றும் இடையறுககப்படாத முயககம் எ - று.

இது புணர்ச்சிவிருப்பினுல் கூறினமையால் புணர்ச்சி மகிழ்த லாயிற்று. இது குறிப்பினுல் புகழ்ந்தது.

பரிப்:— என்றது இடையறுதல் இல்லாத முயககம் என்றவா ருயிற்று. தோழியிற்கூடிய தலைமகன் பகற்குறியாயினும இரவுக்குறி யாயினும் ஒழுகாநின்றுழிக காவல்கடுகுதல் நிலவுவெளிப்பாடு அல்லகுறி முதலாயினவற்றுல் இடையீடுபட்ட தலைமகட்குத் தன்வயின் உரிமையும் அவன்வயிற் பரத்தமையும் தோற்ற ஊடறகுறிப்பினுல் தலைமகன் கூறியது.

பரிதி:— விருப்பம் எய்திய நாயகற்கும் நாயகிக்கும் இனியது ஒன்று தென்றல் இடைபோகுதற்கு அரிய..............கலவி எ - று.

காளிங்:— நெஞ்சே உள்ளுற விரும்பும் விருப்பம் இருவர்க்கும் சால இனியது ஒன்றுளது; அஃது யாது எனின் நுண்ணிதாகிய காற்றும் ஊடு போதரற்கு இடனில்லாதவாறு இறுக முறுக முயங்கப் பெறும் முயக்கம் எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— இருவர்க்கும் என்ற உம்மை முற்றும்மை; விகாரத் தொகை. ஏகாரம் - தேற்றேகாரம்.

## மேற்கோள்பகுதி :

இளம்:— களவின்கண் தலைவன் கூற்றுள் கூடுதலுறுதல் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 99.)

## குறிப்பு:

இருவர்க்கு, காற்றும் ஊடறுக்க கில்லாத முயக்கம் இனிதாகும்; நாங்களோ நான் இவள் என்ற இருமைப்பாடின்றி ஒருமையேயாயினேம ஆதலின் எமக்கு இன்பந்தராது என்னும் குறிப்பினுகக் கூறினுன் என்பர் பரிமேலழகர். வீழும்

இருவர்க்கும் இனிதாவது முயக்கு எனக் கூட்டி இடைவிடா முயக்கத்தையே இருவரும் விரும்புகின்றேம எனப் பொருள்காண்பர் காளிங்கர். பரிப்பெருமாள் புணர்ச்சி அல்லகுறிப்படுதல் முதலாயவற்றால் இடையீடுபட்டவழி அவட்குளதாகும் ஊடற் குறிப்பினால் இத்தகைய முயக்கம் இனிதாம எனத் தலைவன் கூறினான் என்பர்.

—தொகுப்பாசிரியர்.

1109. ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன். (கூ)

கரத்தல்வேண்டாமையின் இடையறவில்லாத கூட்டமே இன்பப் பயனுடைத்து என வரைவுகடாவியாட்குச் சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— ஊடல் உணர்தல் புணர்தல் இவை - புணர்ச்சி இனிதாதற்பொருட்டு வேண்டுவதாய ஊடலும் அதனை அளவறிந்து நீங்குதலும் அதன்பின் நிகழ்வதாய அப்புணர்ச்சிதானும் என இவையன்றே, காமம் கூடியார் பெற்ற பயன் - வரைந்துகொண்டு காமத்தை இடைவிடாது எய்தியவர் பெற்ற பயன்கள்.

ஆடவர்க்குப் பிரிவு என்பது ஒன்று உளதாதன்மேலும் அதுதான் பரத்தையர்மாட்டு ஆதலும், அதனை அறிந்து மகளிர் ஊடி நிற்றலும், அவ்வூடலைத் தவறுசெய்தவர் தாமே தம் தவறின்மை கூறி நீக்கலும், பின்னும் அவ்விருவரும ஒத்த அன்பினராய்க் கூடலுமன்றே முன்வரைந்தெய்தினார் பெற்றபயன்; அப்பயன் இருதலைப்புள்ளின் ஓருயிராய உழுவலன்புடைய எமக்கு வேண்டா என அவ்வரைந்தெய்தலை இகழ்ந்து கூறியவாறு.

மணக்:— ஊடுதலும், ஊடல் தீர்தலும், பின்னைப் புணர்தலும் என்னும் இவை அன்பினால் கூடினார் பெற்ற பயன் எ - று.

காமம் - அன்பு. புணர்தல் எனினும் ஒக்கும். ஊடற்குறிப்புத் தோன்றநின்ற தலைமகளை ஊடல் தீர்த்துப் புணர்ந்த தலைமகன் அதனால் வந்த மகிழ்ச்சி கூறியது.

பரிப்:— காமம் கூடினார் பெற்றபயன் என்றான்; முன்பு இவைகண்டு அறியாமையால். இவையெல்லாம் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல் வினவும் தலைமகளே கேட்பது பயனாகச் சொல்வினவும் என்று கொள்ளப் படும். இவற்றுள், "நீங்கின் தெறூஉம்" என்பது முதலாகக் கூறியது

என்னையோ எனின், முதலாகக் கூறிய குறள் நான்கும் நலம்புனைந்துரைத்தலின் பின்னும், காதற் சிறப்புரைத்தலின் பின்னும், நாணுத்துறவுரைத்தலின் பின்னும் கூறற்பாலன. ஈண்டுக்கூறியது களவு காலத்துக் கூடுங் கூட்டமெல்லாம் அருமையுடைத்து ஆதலானும், ஆண்டுத் தனி ஓரதிகாரம் கூறவேண்டுதலானும், அது கூறுங்காலும் புணர்ச்சி மகிழ்தல் என்று கூறவேண்டுதலானும் ஈண்டுச்சேரக் கூறப்பட்டன. ஆயின் இக்கூட்டங்கட்கு நிமித்தமாகிய நலம்புனைந்துரைத்தல் முதலாகிய அதிகாரங்களை அருமையிற்கூடல் என்று கூறவேண்டும் பிற எனின், ஒக்கும்: அவை எல்லாம் புணர்ந்தபின்பு நிகழ்தலானும் பாங்கற்கூட்டமும் தோழியிற்கூட்டமும் இயற்கைப்புணர்ச்சியோடுஒத்த இயல்பிற்று அன்மையானும், அவைதாம் பெரும்பான்மையும் பிரிந்துகூடுதலானும், கூறப்படா என்க. இதனுள், ஆலிங்கனம் முதலாயின கூறாது பசுக்களைப்போலப் புணர்ச்சிமாத்திரமே கூறிவிட்டது என்னை எனின்,* "கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியும் ஐம்புலனும் ஒண்டொடிகண்ணே உள" என்றாராகலின், அவையெல்லாம் இதனுனே சொன்னார் என்று கொள்ளப்படும். இது காமப்பகுதியன்றே; இதனை வட நூலாசிரியர் கூறியவாறுபோல விரித்துக் கூறாதது என்னை எனின், அந்நூலகத்து விரித்துக் கூறியதெல்லாம் அளவும், காலமும், வேகமும், ஒவ்வாதாரை ஒப்பிக்கும் நெறியும், கைக்கிளை பெருந்திணைப்பாற்பட்ட கன்னியரைக் கூடுந்திறனும், கணிகையர் சீலமும் கூறினர்: ஈண்டு உழுவலன்பினாற் கூடுகின்ற நற்கூட்டம் ஆதலின், இவையெல்லாம் விதியினாலே ஒக்க அமைந்து கிடக்கும் ஆதலான் கூறாராயினர் என்க.

பரிதி:— ஊடலும், ஊடிக்கூடவேண்டும் என்று நினைத்தலும், புணர்தலும் காமமகிழ்வார் பெற்றபயன் எ - று.

காளிங்:— நெஞ்சே இன்னமும் கேளாய்: இவ்வளவு அன்றிப் பலவுள; அவை யாவை எனில் ஊடி இன்புறுதலும், அவ்வூடல் தீர்த்தற்குப் பணிதலும், பணிந்து பணிமொழி கூறி இன்புறுதலும், ஊடல் தீர்ந்தவிடத்து செறியக்கலந்து இன்புறுதலும் என்னும் இவை எல்லாம் காம இன்பக் கலவியைக் கலந்தார் பெற்ற பெரும்பயன் எ - று.

இனி மற்று இத்தன்மையனாகிய தலைமகன் நெடிது நினைந்து அவளுருபுநலங் கண்டு புகழ்ச்சி தோன்றப் புனைந்துரைக்கவே இருவரும் மனமகிழ்ச்சி எய்துவர்; ஆகலான், மற்று இதன்பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

---

*குறள் 1100.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண் :— உணர்தல் - அளவறிந்து நீங்குதல். புணர்தல் - புணர்ச்சி.

**ஒப்புமைப்பகுதி :**

" கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்நாண் இயல்பினள்—உட்கி
இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்." —நாலடி. 384.

" முனிபவர் ஒத்திலராய் முறுவல் கிளைத்தலுமே
முகிழ்நகை பெற்றமெனு மகிணர் மணித்துவர்வாய்
கனிபவ ளத்தருகே வருதலும் முத்துதிரும்
கயல்கள் இரண்டுடையீர் கடைதிறமின் திறமின்." —கலிங். 27.

**குறிப்பு :**

மணக்குடவர் தலைமகளை ஊடல்தீர்த்துப் புணர்ந்த தலைமகன் அதனால்வந்த மகிழ்ச்சி கூறியது என்பர். ஊடலும், உணர்தலும் வரைந்துகொண்ட இல்லொழுக்கம் உடையார்க்கே உரியதாதலின் களவியல் கூறும் இப்பகுதிக்குப் பொருந்தாது எனப் பரிமேலழகர் வரைந்தாராகிய பிறர்மேல்வைத்து அவை எமக்கு வேண்டாம் என்ற குறிப்பினனாகத் தலைவன் கூறினான் என்பர்.

—தொகுப்பாசிரியர்.

1110. அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. (௧௦)

புணர்ந்துடன் போகின்றான் தன்னுள்ளே சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— அறிதோறு அறியாமை கண்டற்று - நூல்களானும் நுண்ணுணர்வானும் பொருள்களை அறிய அறிய முன்னை அறியாமை கண்டாற்போலக் காணப்படாநின்றது, சேயிழைமாட்டுச் செறிதோறும் காமம் - சிவந்த இழையினையுடையாளை இடைவிடாது செறியச் செறிய இவள்மாட்டுக் காதல்.

களவொழுக்கத்தில் பல இடையீடுகளான் எய்தப்பெறாது அவா வுற்றான் இதுபொழுது நிரந்தரமாக எய்தப்பெற்றமையின், செறிதோறும் என்றான். அறிவிற்கு எல்லையின்மையான் மேன்மேல் அறிய அறிய

முன்னை அறிவு அறியாமையாய் முடியுமாறுபோலச் செறிவிற்கு எல்லை யின்றி மேன்மேல் செறியச்செறிய முன்னைச்செறிவு செறியாமையாய் முடியா நின்றது எனத் தன் ஆராமை கூறியவாறு. இப்புணர்ச்சி மகிழ்தல் தலைமகட்கும் உண்டேனும் அவள்மாட்டுக் குறிப்பால் நிகழ்வது அல்லது கூற்றால் நிகழாமை அறிக.

மணக்:— யாதானும் ஒன்றை அறியுந்தோறும் அறியாமை தோன்றினாற் போலும்; இச் சேயிழைமாட்டுப் புணர்ச்சியும் புணருந் தோறும அமையாமை எ - று.

காமப்புணர்ச்சியாயிற்று, இஃது அமையாமையின் கூற்று.

பரிதி:— நூல்களாலும் நுண்ணுணர்வாலும் பொருள்களை அறிய அறிய முன் அறியாமை கண்டாற்போலக் காணப்படாநின்றது; சிவந்த விழியினை உடையாளை இடைவிடாது செறியச்செறிய இவள்மாட்டுக் காதல் எ - று.

புணர்ந்துடன் போகின்றான் தன்னுள் சொல்லியது.

காளிங்:— நெஞ்சே! யாம் பல வகைப்பட்ட நூல்களையும் கற்று அவற்றின் கருத்து அறியுந்தோறும் அறியுந்தோறும் மற்றது ஒழிந்த நன்னாலும் அவ்வாறு கற்று இனிது அறியப் பெருமையாகிய விரும்புதலை நெஞ்சில் கண்டு செல்கின்ற அதுவே போலும்; இந்தச் சேயிழையாளை யாம் செறியுந்தொறும் செறியுந்தொறும் இவள்திறத்து நமது உள்ளம் செல் கின்ற காமச் சுவையும் எ - று.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— காமம் - நுகர்தல். சேயிழை - சிவந்த இழை. நலம்புனைந் துரைத்தல் என்பதில் புனைந்துரை துதி.

## மேற்கோள்பகுதி:

நச்:— கற்பியலில், ஒழியாத மகிழ்ச்சி பலவேறு வகையவாகிய நுகர்ச்சிக்கண் புதிதாகவந்தகாலத்தில் தலைவன் கூறியதற்கு மேற்கோள் காட்டி, 'என்றது பொருள்களை உண்மையாக உணர்ந்த இன்பத்தை அறியுந்தோறும் அவற்றை முன்னர் இவ்வாறு விளங்க உணராத அறி வின்மையை வேறுபடுத்துக் கண்டாற்போலும் சேயிழைமாட்டுச் செறியுந் தொறும் தலைத்தலை சிறப்பப் பெறுகின்ற காமத்தை முன்னர் அறியப் பெற்றிலேம் என்று வேறுபடுத்தல் என்றவாறு' என்பர். (தொல். பொருள். 146.)

மயிலை:— தோறு என்னும் இடைச்சொல்லுக்கு மேற்கோள். (நன். 420.)

சங்கர:— தொறு என்னும் இடைச்சொல் இடப்பன்மைப் பொருள் தந்ததற்கு மேற்கோள். (நன். 421.)

ஒப்புமைப்பகுதி :

"சொற்றொறும் சோர்வு படுதலால் சோர்வின்றிக்
கற்றொறும கல்லாதேன் வழிஇரங்கி
உற்றொறும் சிந்தித்து உழன்றொன்று அறியுமேல்
கற்றொறுந்தான் கல்லாத வாறு." —பழ. நா.

"உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம் பலத்தொருதன்
குணர்ந்தான் வெளிப்பட்ட கொவவைசசெவ் வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும போகமபின் னுமபுதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே."
—திருச்சிற். 9.

முதுமொழிவெண்பாக்கள் :

"பூரிளமை ஏற்றுவெறுப் போகநனி துய்த்துவந்தான்
மூரி யயாதி முருகேசா—ஓரின்." —முருகேசர். 111.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— கண்டு, பிணிக்கு, தாம்வீழ்வார், நீங்கின், வேட்ட, உறுதோறு, தமயில், வீழும், ஊடல், அறிதோறும.

மணக்:— பிணிக்கு, கண்டு, தம்மில், தாம்வீழ்வார், வேட்ட, அறிதோறும், நீங்கின், உறுதோறு, வீழும், ஊடல்.

பரிதி:— கண்டு, தம்மில், நீங்கின், பிணிக்கு, உறுதோறு, வேட்ட, தாம்வீழ்வார், ஊடல். அறிதோறும், வீழும்.

காளிங்:— கண்டு, வீழும், பிணிக்கு, தாம்வீழ்வார், வேட்ட, உறுதோறு, நீங்கின், அறிதோறும, தம்மில், ஊடல்.

# 112. *நலம்புனைந்துரைத்தல்*

## தொகுப்புரை :

[அனிச்சப்பூவே ! நீ நல்லதன்மை உடையை. நீ நீடுவாழ்க. என்தலைவி உன்னினும் மெல்லியள். நெஞ்சே! நீ பூவைக் காணின் இவள்கண் பலர்காணும் அப்பூவை ஒக்கும் என்று மயங்குகின்றாய் மூங்கிலை ஒத்த தோளையுடைய இத்தலைவிக்குத் தளிரே மேனி; முத்துக்களே பல்; நறுமணமே மேனிமணம்; வேலே கண்கள். குவளைப்பூக்களுக்கும் காணுதல்தொழில்இருக்குமாயின் 'இவள்கண்களுக்கு ஒருபோதும் ஒப்பாகோம்' என்று கவிழ்ந்து தரையையே பார்க்கும். மோந்தால் வாடும் அனிச்ச மலரைக் காம்பு களையாமல் சூடினாள்; அதனால் அவள் இடைக்கு நல்லபறை ஒலியா. விண்மீன்கள் மதியையும் இவள்முகத்தையும் அறியாமல் நிலைகலங்கின. குறைந்து நிறையும் இந்தமதிககுப்போல இவள் முகத்துக்கு மறுவுண்டோ! இவள்முகத்தைப்போல ஒளிசெய்யமுடியுமானால் மதியே! நீயும் என்னால் விரும்பப்பெறுவை. நீலம்போலும் கண்ணையுடைய தலைவியின் முகத்தைப்போல நீயும் இருக்க விரும்புவையாயின் பலர்காணத் தோன்றற்க. அனிச்சமலரும், அன்னத்தின் தூவியும் தலைவியின் அடிக்கு நெருஞ்சிப்பழம்போல ஊறு செய்வனவாம்.]

## அதிகாரப்பொருள் :

பரிமே :— *அஃதாவது தலைமகன் தலைமகள் நலத்தைப் புனைந்து சொல்லியது. இது, புணர்ச்சிமகிழ்ந்துழி நிகழ்வதாகலின், புணர்ச்சி மகிழ்தலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *நலம்புனைந்துரைத்தலாவது தலைமகளது நலத்தினை அலங்காரவகையாற் கூறுதல். புனைந்துரை எனினும், பாராட்டு எனினும், கொண்டாட்டு எனினும்; மகிழ்ச்சி எனினும் ஒக்கும்.*

பரிப்:— *புணர்ச்சியால் மகிழ்வுற்ற தலைமகன் பிரியக் கருதின காலத்துப் புணராத முன்னின்ற வேட்கை புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நிற்றலின், இத்தன்மையாளை யாங்கனம் பிரிந்து ஆற்றுகேம் என்னும் கவர்ச்சியால் நெஞ்சுமிக்கது வாய்சோர்ந்து தன்னை அவள் காணாமல், தான் அவளைக் காண்பது ஓர் அணுமைக்கண் நின்று பாராட்டுகின்றான் ஆதலின் பிற்கூறப்பட்டது. இவ்வாறு கூறுதலானே தலைமகற்குச் சிறிது வேட்கை தணியும். இதனைத் தலைமகள் கேட்டலினாலே இவன் அன்புடையன்கொல்லோ என்றும், இப்புணர்ச்சி இன்னும்*

கூடுமோ என்றும் சொல்கின்ற கவர்ச்சி நீங்கும் [1]'மதியும் மடந்தை முகனும் அறியா" இது தலைமகன் கண்ணுள்ளதோர் மெய்ப்பாடு. இது பிரிதற்குறிப்பு ஆதலின் பிரிந்துகூடலின்முன் கூறப்பட்டது. இது தலைமகட்கு உரித்து அன்றோ எனின், உரிதது ஆயினும் குறிப்பினன் அல்லது கூற்றினன் நிகழாமையின கூறார் ஆயினர்.

1111. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள். (க)

இயற்கைப்புணர்ச்சி இறுதிக்கண் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— அனிச்சமே வாழி நன்னீரை - அனிச்சப்பூவே! வாழ்வாயாக, மென்மையால் நீ எல்லாப்பூவினும் நல்ல இயற்கையை உடையை, யாம் வீழ்பவள் நின்னினும் மென்னீரள் - அங்ஙனமாயினும் எம்மால் விரும்பப்பட்டவள் நின்னினும் மெல்லிய இயற்கையை உடையள்.

அனிச்சம்: ஆகுபெயர். வாழி என்பது உடன்பாட்டுக்குறிப்பு இனி யானே மெல்லியன் என்னும் தருக்கினை ஒழிவாயாக என்பதாம். அதுபொழுது உற்றறிந்தானாகலின், ஊற்றின் இனிமையையே பாராட்டினான். இன்னீரள் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

மணக்:— அனிச்சப்பூவே! நீ நல்ல நீர்மையை உடையாய். எம்மால் விரும்பப்பட்டவள் நின்னினும மிக நீர்மையாள்; காண் எ - று.

இஃது உடம்பினது [2]நுண்மை கூறிற்று.

பரிதி:— அனிச்சமே! நீ மூகர்ந்துபார்த்தால் கன்றுவை, உன்னினும் மெல்லிய நாயகி, புணரும்போது மிருதுவாயிருப்பள் எ - று.

காலிங்:— கேளாய், அனிச்சமே! நீயும் சால மென்மையை உடையை: அது நன்று: ஆனாலும் நின்னினும் சால அழகிய மென்மையை உடையவள் மற்று யாம் விருமபப்பட்ட இவள்: என்று இங்ஙனம தானும் உற்றறி பொருள் ஆகலின் உள் மகிழ்ந்து உரைத்தனன் தலைமகன் எ - று.

---

[1] குறள் 1116. [2] 'மென்மை' என்பது பரிப் - பாடம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— வாழி - வாழ்வாயாக என வியங்கோளாய உடம்பாட்டுக் குறிப்பு.

மேற்கோள்பகுதி:

மயிலை:— அஃறிணையிடத்துக் கேளாதவற்றை கேட்பன போலச் சொல்லியதற்கு மேற்கோள். (நன். 408.)

சங்கர:— ஷை (நன். 409.)

முதுமொழிவெண்பாக்கள்:

"மின்னுசடை வேந்தருள் வேலனொரு மானீன்ற
பொன்னை மகிழ்ந்து புனைந்துரைக்கும் - இந்நிலத்து."

—முதுமொழி. 165.

குறிப்பு:

நலம்புனைந்துரைத்தல் என்பது புணர்ச்சியின் மகிழ்ந்தபின் நிகழ்வது ஆதலின், அவன் புனைந்துரைப்பது பிரிவிற்குறிப்பாதலின் அதனையுட்கொண்டு தலைவி சிறிது மாறுபட்டாள். அதனையுணர்ந்த தலைவன் தலைவியின் மென்மையைப் புகழ்பவன் போல மோந்தாலல்லது அனிச்சம வாடாது; இவள் பிரிவுண்மையை நலம்புனைந்துரைக்கும் இதனுனேயுட்கொண்டு வாடினுள் ஆதலின் இவள் நின்னினும் மெல்லியள் என்றான்.

—தொகுப்பாசிரியர்.

1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று. (உ)

இடந்தலைப்பாட்டின்கண் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— நெஞ்சே - நெஞ்சே, இவள் கண் பலர்காணும் பூ ஒக்கும் என்று - யானே காணப்பெற்ற இவள் கண்களைப் பலரானும் காணப்படும் பூக்கள் ஒக்கும் என்று கருதி, மலர்காணின் மையாத்தி - தாமரை, குவளை, நீலம் முதலிய மலர்களைக் கண்டால் மயங்காநின்றாய், நின் அறிவு இருந்தவாறு என்!

மையாத்தல் ஈண்டு ஒவ்வாதவற்றை ஒக்கும் எனக்கோடல்; இறுமாத்தல், செம்மாத்தல் என்பனபோல ஒருசொல். இயற்கைப்புணர்ச்சி நீக்கம் முதலாகத் தலைமகள்கண்களைக் காணப்பெறாமையின் அவற்றோடு ஒருபுடை ஒக்கும மலர்களைக் கண்டுழியெல்லாம் அவற்றின்கண் காதல் செய்து போந்தான, இதுபொழுது அக்கண்களின் நலம் முழுதும் தானே தமியாளை இடத்தெதிர்ப்பட்டு அனுபவித்தான் ஆகலின் அம்மலர்கள் ஒவ்வாமைகண்டு ஒப்புமைகருதிய நெஞ்சை இகழ்ந்து கூறியவாறு.

மணக்:— நெஞ்சே! நீ இவள்கண் மலராயினும் பலரால் காணப்படும் பூவையொக்கும் என்று மலரைக கண்டபொழுதே மயங்கா நின்றாய் எ - று.

இது கண் பூவினது நிறம் ஒக்குமாயினும், குணம் ஒவ்வாது என்று கூறிற்று.

பரிப்:— இவை இரண்டினுனும் தான் கிட்டுதற்கு அருமை கூறினனும்.

பரிதி:— நெஞ்சே! தாமரை செங்கழுநீர் இவற்றைக் கண்டால் மயங்குகின்றாய்; அவைகள் நாயகிகண்ணைக் கண்டால் நாணும்; 'நாயகி கண்போலே வண்ணம பெற்றோம விரகப்பார்வை அறியோம்' என்று தலையிறககிடும் எ - று.

காளிங்:— நெஞ்சே! எம்மால் காதலிக்கப்பட்ட இவள் கண்மலர் யாவரும் காணும் மலர் ஒக்கும் என்று கருதி நீ மலர்கண்ட இடத்து மையலுறுதி: மதிப்பில்லை எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— மைபாத்தி - மயங்காநின்றாய். மையாத்தல், அல்லாத்தல் என்பன ஒரு சொல்.

மேற்கோள்பகுதி :

நச்:— அம்மை என்னும் வனப்பிற்கு மேற்கோள். (தொல். பொருள், செய். 235.)

பெருந்:— புகழ்தலுவமைக்கு மேற்கோள். (வீர. 158.)

1113. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு. (௩)

கூட்டுதலுற்றபாங்கற்குத் தலைமகன் தலைமகளது இயல்பு கூறியது.

உரைப்பகுதி :

பரிமே:— வேய்த்தோளவட்கு - வேய்போலும் தோளினை உடைய வட்கு, மேனி முறி - நிறம் தளிர்நிறமாயிருக்கும், முறுவல் முத்தம் - பல்லு முத்தமாயிருக்கும், நாற்றம் வெறி - இயல்பாய நாற்றம் நறுநாற்றமாயிருக்கும், உண் கண் வேல் - உண்கண்கள் வேலாயிருக்கும்.

பெயரடையானும் ஓர் இயல்பு கூறப்பட்டது. முறி, முறுவல் என்பன ஆகுபெயர். உருவகவகையாற் கூறினமையின், புனைந்துரையாயிற்று. நின்னால் கருதப்பட்டாளை அறியேன் என்று சேட்படுத்த தோழிக்குத் தலைமகன் சொல்லியதூஉமாம்.

மணக்:— தளிர்போலும் மேனி; முத்துப்போலும் முறுவல்; நறுநாற்றம் போலும் நாற்றம்; வேல்போலும் உண்கண்; வேயொத்த தோளினை உடையாளுக்கு எ - று.

இது நிறமும், எயிறும், நாற்றமும், கண்ணின்வடிவும், தோளும் புகழ்ந்து கூறிற்று.

பரிதி:— மாந்துளிர்மேனியும், முத்து நகையும், தாமரைப்பூ நாற்றமும், வேல்போல் கண்ணும், மூங்கில்போல தோளும் உடையவள் எ - று.

காளிங்:— நெஞ்சே ! எம காதலியாகிய வேய்போலும் தோளினட்கு நிறமானது மாந்தளிர் ஒக்கும்: முறுவல் கோவை முத்து நிரை ஒக்கும், நாற்றமெல்லாம் பல நறுநாற்றம் ஒக்கும்: மை உண்டு அகன்ற கண்ணானது வடிவேலினை ஒக்கும்: இவ்வகையால் இவ்வுருவுநலன் உடையாளை எங்ஙனம பிரிந்தாற்றுமோ என்னும் குறிப்பினால் இனிது புனைந்துரைத்தான் தலைமகன் எ - று.

இனி மற்று இங்ஙனம் நலம்புனைந்துரைத்த தலைமகன் பிறர் ஆராயும் முன்னர்ப் பிரிந்து எய்துவதே கருமமென்று *எடுத்துரைத்தலும்,

* 'கருதி வற்புறுத்தல்' எனவும் பாடம்.

இடம் அணித்தென்றலும், பிறவும் எல்லாம் இவட்கு உரைத்துப் பிரிந்த பின் தலைமகன் பாங்கற்கு உரைத்தமை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— முறி - தளிர். நிறமென ஆகுபெயரானது. முறுவலும் அது. அவட்குக் கண் வேலாயிருக்கும என உருவகவகையாற் கூறினர், அதிகாரம் நோக்கி. இனி, நச்சினர்க்கினியர் உவமையாக்கினர் என்க.

## மேற்கோள்பகுதி:

நச்:— 'முறிமேனி..... ...அவட்கு' என்புழி 'வேய்த்தோளாட்கு முறிபோலும் மேனி; முத்தம்போலும் முறுவல்; தெய்வமணம் போலும் இயற்கை நாற்றம்; வேல்போலும் கண்;' என விரித்தால் உணராதானே; 'இதன்பொருள் வேய்த்தோளாட்குத் தளிரினது நிறத்தை ஒகக்கும் நிறம்; முத்தினது நிறத்தை ஒகக்கும் பல்லு; தெய்வமணத்தை ஒக்கும் இயல்பான நாற்றம்; வேலினது கொலைத்தொழிலை ஒகக்கும் கண்' என்றவாறு காண் என ஒப்பு என்னும் வழக்கு வாசகத்தால் செய்யும் என்னும் குறிப்புமுற்று வாசகம் தோன்ற உணர்த்துக. இனி முறிமேனி முதலியன உருவகமாம் எனின் ஆசிரியர்க்கு உருவகமும் உவமையாமாறு ஆண்டு உணர்க.' (தொல். சொல். 414.)

மயிலை:— முறைப்பெயர் நிரனிறைக்கு மேற்கோள். (நன். 413)

## ஒப்புமைப்பகுதி:

"நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே." —குறுந். 62.

"............... —தன்மேனி
முத்தம் முறுவல் முயக்கொக்கின் அன்னத்தின்
பெற்றியரின் என்பெறும் பேறு." —இன். 25.

## முதுமொழிவெண்பாக்கள்:

"நன்றான் திலோத்தமையை இச்சிக்கில் ஆங்கவள்மெய்
தோன்றுமெழில் என்சொல்வேன் சோமேசா - ஆன்ற."
—சோமேசர். 112.

" சந்தமிகு வாலைநலத் தைத்தவவா லன்வியந்து
முந்திமண நேர்ந்தான் முருகேசா - கந்த." —முருகேசர். 112.

குறிப்பு :

வடிவு முதலியவற்றான் ஒப்பதன்றிப் பசுமை நிறத்தாலும் வேய் தோளை யொக்கும் ஆதலின் வேய்த்தோளென்றான். வேல் உண்கண் என்றது வேல் கரியநஞ்சு தோய்க்கப்பெற்றிருக்கும்; கண் மைபூசப்பெற்றிருக்கும் ஆதலானும் என்க.

—தொகுப்பாசிரியர்.

1114. காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று. (௪)

பாங்கற்கூட்டத்துச்சென்று சார்தலுறுவான் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே :— குவளை - குவளைப்பூக்கள்தாமும், காணின் - காண்டற் றொழிலை யுடையவாயின், மாண் இழை கண் ஒவ்வேம் என்று கவிழ்ந்து நிலன் நோக்கும் - மாண்ட இழையினையுடையாள் கண்களை யாம் ஒவ்வேம் என்று கருதி அந்நாணினால் இறைஞ்சி நிலத்தினை நோக்கும்.

பண்பானேயன்றித் தொழிலானும் ஒவ்வாது என்பான் காணின் என்றும், கண்டால் அவ்வொவ்வாமையால் நாணுடைத்தாம் என்பது தோன்றக் கவிழ்ந்து என்றும் கூறினான். காட்சியும் நாணும் இன்மையின் செம்மாந்து வானைநோக்கின என்பதாம்.

மணக்:— குவளைமலர் காணவற்றாயின், மாட்சிமைப்பட்ட இழையினையுடையாளது கண்ணை ஒவ்வேம் என்று நாணி, கவிழ்ந்து நிலத்தை நோக்கும் எ - று.

இது காணுந்தோறும் ஒவ்வாது என்றது.

பரிப்:— இது வடிவுதானும் ஒவ்வாது என்றது.

பரிதி:— குவளைப்பூக்கள் தாமும் காண்டகத்தொழிலுடைய்வாய் மாண்ட இழையினையுடையாள் கண்களை யாம் ஒவ்வேம் என்று கருதி அந் நாணினால் இறைஞ்சி நிலத்தினை நோக்கும் எ - று.

காளிங்:— நெஞ்சே! யான் அழகுடையேனென்று இங்ஙனம் தன்னை மதித்து வான்நோக்கிச் செவ்விதாய் நிற்கும் குவளை; மற்றதுவும் *நம் மாணிழையாள் கண்ணுக்கு உவமை ஒவ்வேம் என்று நாணிக் கவிழ்ந்து நிலம்நோக்கி நிற்கும் என்பது இதற்குக் காரணம் என்றான் தலைமகன் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மாண் இழை - மாண்ட இழை. காணில் - காண்டற்றெழில் உடையவாயின்.

மேற்கோள்பகுதி:

இளம்:— தலைவியைப் பகற்குறிக்கண் பெற்று மலிதலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 100.)

நச்:— தலைவன் இரவுக்குறிக்கண் தலைவியைப் பெற்று மகிழ்ந்ததற்கு மேற்கோள். (தொல். பொருள். 103.)

1115. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை. (ரு)

பகற்குறிக்கண் பூவணிகண்டு சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— அனிச்சப்பூக கால் களையாள் பெய்தாள் - இவள் தன் மென்மைகருதாது அனிச்சப்பூவை முகிழ்களையாது சூடினாள், நுசுப்பிற்கு நல்ல பறை படா - இனி இவள் இடைக்கு நல்ல பறைகள் ஒலியா.

அம்முகிழ்ப்பாரம் பொறாமையின் இடை முரியும்; முரிந்தால் அதற்குச் செத்தார்க்குரிய நெய்தற்பறையே படுவது என்பதாம். மக்கட்கு உரிய சாக்காடும் பறைபடுதலும் இலக்கணைக்குறிப்பால் நுசுப்பின்மேல் ஏற்றப்பட்டன.

மணக்:— அனிச்சப்பூவைக் காம்புகள் அறாது மயிரில் அணிந்தாள்; இனி இவளது நுசுப்பிற்கு நல்லவாக ஒலிககமாட்டா பறை எ - று.

இஃது இடையினது நுண்மை கூறிற்று.

*'அம் மாணிழை' எனவும் பாடம்.

பரிப்.— எனவே இனி நெய்தல் பறையே ஒலிப்பது என்றவாறாயிற்று.

காளிங்:— நெஞ்சே! தனது இடையின் மென்மை அறிந்தே பிற பூக்களின் நொய்தாகிய அனிச்சப்பூத் தன் கூந்தலுள் பெய்தாள்; ஆயினும் அதனைக் காம்பு கழற்றாதிட்டு முடித்தாள்; அஃது ஓர் அறியாமையுண்டு; அதனால் இனி இவள் நுசுப்பிற்குப் பறைஒலி நல்லவாக எழா போலும் என்று இங்ஙனம் இறந்துபடுவாள் போலும் எனப் பெரிதும் ஆற்றான் தலைமகன் என்பது பொருள் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மக்கட்குரிய சாக்காடு, நெய்தற்பறை படுதலும், நுசுப்பிற்கு இலக்கணச்சொல்லாற் பெற்றது. அத்துணை நுட்பம் என்பது குறிப்பு. ஆதலால், இலக்கணமூலத்தொனி என்பர் வடநூலார். இலக்கணக்குறிப்பானும் நுசுப்பின்மேல் ஏற்றப்பட்டன என்றார்.

மேற்கோள்பகுதி:

சங்கர:— மொழியிறுதியில்வந்த உயிரளபெடைக்கு மேற்கோள். (நன். 91.)

குறிப்பு:

கால்களையாள் பெய்தாள் என்பது முற்றெச்சம். —தொகுப்பாசிரியர்.

1116. மதியும் மடந்தை முகனும் அறியா
பதியிற் கலங்கிய மீன். (சு)

இரவுக்குறிக்கண் மதிகண்டு சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— மீன் - வானத்து மீன்கள், மதியும் மடந்தைமுகனும் அறியா - வேறுபாடு பெரிதாகவும் தம்மதியினையும் எம்மடந்தை முகத்தினையும் இது மதி இது முகம் என்று அறியமாட்டாது, பதியின் கலங்கிய - தம் நிலையினின்றும் கலங்கித் திரியாநின்றன.

ஓரிடத்து நில்லாது எப்பொழுதும் இயங்குதல்பற்றிப் பதியிற் கலங்கிய என்றான். வேறுபாடு வருகின்ற பாட்டால் பெறப்படும். இனி

இரண்டனையும் பதியிற்கலங்காத மீன்கள் அறியுமல்லது கலங்கின மீன்கள் அறியா என்று உரைப்பினும் அமையும்.

மணக்:— மதியினையும் மடந்தை முகத்தினையும் கண்டு, இவ்விரண்டினையும் யாது மதி என்று அறியாது, தம் நிலையினின்றும கலங்கித் திரியா நின்றன மீன்கள் எ - று.

மீன் இயக்கத்தைக கலங்குதலாகக் கூறினர். இது மீன் கலங்கித் திரிதலானே இவள்முகம மதியோடு ஒக்கும் என்று கூறியது.

பரிப்:— மீன் இயக்கத்தைக் கலக்கமாகக் கூறினர். அன்றியும் பதியிற் கலங்கிய மீன் அறியா என்று பாடம ஓதித் தம் நிலைமையினின்றும் கலங்கின மீன்கள் மதியினையும் மடந்தை முகத்தினையும் அறியாவாயின எனினும் அமையும்.

பரிதி:— மதியும் மடந்தை முகமும் அறியாவாய், பதியிலும் வேறேயாய் அலைந்தன விண்மீன்கள் எ - று.

காளிங்:— நெஞ்சே! விசும்புள் வாழும் மதியும் நிலத்து வாழும் மடந்தை முகமும் தெரியமாட்டா: ஆதலால் விசும்பாகிய பதியுள் நின்றும் இந்நிலத்துறத் தாழ்ந்து பார்த்தும், விசும்புற உயர்ந்து பார்த்தும இங்ஙனம தடுமாறித் திரிகின்ற மீன்களானவை அம்மதியைப்போல மதியில என்று இங்ஙனம் இவள் முகம் நலம்புனைந்துரைத்தான தலைமகன் எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— மீன்: எழுவாய். கலங்கிய: பயனிலை. இது, தற்குறிப் பேற்றம்.

## மேற்கோள்பகுதி :

இளம்:- தலைவியை இரவுக் குறிககண் பெற்று மலிந்தமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 100 )

சொக்கப்:— "ஒளிர் காவியந்தண் போதளவா விழி" 'காவிப் பூவிற்குப் பார்த்தறியும் குணமின்மையின் காவியந்தண் போதளவா என்று கூறியது. "காணிற் குவளை....... ..என்று" என்னும் குறளினும் காவிக்குக் கண்டறியும் குணம் இன்மை உணர்க.' (தஞ்சை. 46.)

1117. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுஉண்டோ மாதர் முகத்து. (எ)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே :— அம்மீன்கள் அங்ஙனம் கலங்குதற்குக் காரணம் யாது? அறுவாய் நிறைந்த அவிர் மதிககுப் போல - முன் குறைந்த இடம் வந்து நிரம்பியே விளங்குமதிக்கட்போல, மாதர் முகத்து மறு உண்டோ - இம் மாதர் முகத்து மறு உண்டோ!

இடம் - கலை. மதிக்கு என்பது வேற்றுமைமயக்கம். தேய்தலும் வளர்தலும் மறுவுடைமையும் இன்மைபற்றி வேறுபாடு அறியலாயிருக்க அறிந்தில என இகழ்ந்து கூறியவாறு.

மணக் :— குறையிடை நிறைந்த ஒளிர்மதிக்குப்போல, இம்மாதர் முகத்துக்கு மறுவுண்டோ? எ - று.

இது மேல் கலக்கமுற்றுத் திரிகின்ற மீன் கலங்குதற்குக் காரணம் அறிவின்மையாம்; இவள்முகத்து மறுவில்லையாதலான், அது மதியோடு ஒவ்வாது என்று கூறியது.

பரிதி:— குறையாமல் நிறைந்த பூர்ணமதிக்கு மாதர் முகம்போல மறுவற்ற துண்டோ எ - று.

காளிங்:— நாடோறும் நாடோறும் கலை கலையாக அற்று அற்றுச் செல்கின்ற அறுவாய் மற்றொரு வழியால் நிறைவுபெற்ற மதியன்றே, ஒவ்வொரு நாளும் விரிகின்ற மதியமானது; மற்று அதுதானும் அற்று அங்ஙனம் நிறைந்த விடத்துப் பின்னும் யாவரும் அறிய முயற்கை என்பதோர் அடைகறை உடைத்து: மற்று அம்மதிகுப்போல ஒரு மறு உளதோ நம் மாதராள் திருமுகத்திங்கள் என்று இங்ஙனம் பின்னும் நுவன்றான் தலைமகன் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண் :— இடம் - கலை. மதிக்கு மதிக்கண்: வேற்றுமைமயக்கம். அறுவாய் - முன்குறைந்த இடம்.

மேற்கோள்பகுதி :

பெருந்:— உவமையைப் பழித்தலால் பழிப்புவமை என்னும் அலங்காரமாயிற்று இது என்பர். (வீர. 156.)

ஒப்புமைப்பகுதி :

"மையின் மதியின் விளங்கு முகத்தாரை." —கலி. 62 : 14.

முதுமொழிவெண்பாக்கள் :

"மங்கையர்கள் செய்ய வதனந் தனக்கிணையாய்த்
திங்களேயேன் சொல்வார் தினகரா - கங்குல்." —தினகர. 116.

"நந்து சசிமுகத்தை நாண்மதிஎன் றேநகுடன்
சிந்தைமகிழ் கொண்டான் சிவசிவா - முந்தும்." —சிவசிவ. 112.

1118. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி. (அ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே :— மதி வாழி - மதியே! வாழ்வாயாக, மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல் காதலை - இம்மாதர் முகம்போல யான் மகிழும்வகை ஒளிவீசவல்லையாயின், நீயும் என் காதலை உடையையாதி.

மறுவுடைமையின் அதுமாட்டாய்; மாட்டாமையின் என்னால் காதலிக்கவும்படாய் என்பதாம். வாழி என்பது இகழ்ச்சிக் குறிப்பு.

மணக்:— மதியே! நீ இம்மாதர் முகம்போல ஒளிவிடவல்லையாயின், நீயும் எம்மால் காதலிக்கப்படுதி எ - று.

வாழி - அசை. இது மறுப்போயினதாய முகம் என்று கூறப்பட்டது.

பரிப்:— மறுபோயிற்றாயின் ஒக்கும் என்று கூறப்பட்டது.

பரிதி:— மாதர் முகமபோலத் தேய்தலற்று மறுவற்று விரகப் பார்வை அற்புதப்பார்வை உண்டாகில் மதியே பிரகாசிப்பாயாக; அன்றி உதயஞ்செய்யவேண்டா எ - று.

காளிங்:— மற்று இவ்வனப்பு உடைய மடந்தைதன் ஒளி திகழ் முகம் போல நீயும ஒளிவிட வல்லையாயின், நீயும் சால அழகினை; மதியே! வாழ்வாயாக எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— காதலை - காதலையுடையை என முன்னிலை ஐயீற்று ஒருமை குறிப்பின்கண் வந்தது. வாழி - இகழ்ச்சிக்குறிப்பு. "நன்னீரை" (1111) யுள் 'வாழி' உடம்பாட்டுக் குறிப்பு. ஈண்டு மாதர் ஒருமை; ஒருவரை உயர்த்திக்கூறும் பன்மையும், பகுதிப்பொருள் விகுதியும் அன்று என்க.

**மேற்கோள்பகுதி:**

இளம்:— தலைவியை இரவுக்குறிக்கண் பெற்று மகிழ்ந்ததற்கு மேற்கோள். (தொல். பொருள். 100.)

தலைவன் உயர்த்துச் சொல்லியதற்கு மேற்கோள். (தொல் பொருள். 234.)

பேரா:— ஒக்கும் எனக்கூறாது ஒவ்வாது எனக் கூறுதலும் உவமையாதற்கு அடிப்படவந்த வழக்கு என்பதற்கு மேற்கோள் காட்டி, 'காதலை வாழி மதி' என்ற வழியும் யான் காதலியாமையான் மதியமே! அவள் வாண்முகம் ஒவ்வாய் என்றலின் ஒரீஇக் கூறிற்று என்பர். (தொல். பொருள். 308.)

காரி:— ஒன்று ஒத்த குறையுவமைக்கு மேற்கோள். (மாற. 95)

**1119.** மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி. (கூ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— மதி - மதியே!, மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தி யாயின் - இம் மலர்போலும் கண்ணினை உடையாள் முகத்தை நீ ஒக்க வேண்டுதியாயின், பலர் காணத் தோன்றல் - இதுபோல யான் காணத் தோன்று; பலர்காணத் தோன்றாது ஒழி.

தானே முகத்தின் நலமுழுதுங்கண்டு அனுபவித்தான் ஆகலின் ஈண்டும் பலர்காணத் தோன்றலை இழித்துக் கூறினான். தோன்றின் நினக்கு அவ்வொப்பு உண்டாகாது என்பதாம்.

மணக்:— மதியே! நீ மலர்போலும் கண்களை உடையாளது முகத்தை ஒப்பையாயின், பலர் காணுமாறு தோன்றாதொழிக எ - று.

இது, மதி ஒளியும் வடிவும் ஒத்ததாயினும், குணத்தினாலே ஒவ்வாதென்றது.

பரிதி:— செங்கழுநீர் போலும் கண்ணாள் முகத்திற்கு நிகராவையாகில் பலர்காணத் தோன்றல் மதி எ - று.

காளிங்:— மதியே! நீ இக்குவளைமலரன்ன கண்ணினை உடையாளது முகத்தை ஒப்பதோர் ஒளிநலம் உடையையாயின், இவள்போல் ஒரு வரம்பினையுளவாய் ஓரிடத்து உறைதல் அன்றி, இங்ஙனம யாவரும் காணத் தோன்றககடவையல்லை என்று மற்று அவள்கேட்ப இங்ஙனம் கூறினான் தலைமகன் எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— முகம் ஒத்தி - முகத்தை ஒக்க வேண்டுதி. ஒத்தலுக்கு முதனிலை உணர்தல் அரிதென்க. தோன்றல் - தோன்றாதொழி என மறுத்தன்மேனின்றது.

## மேற்கோள்பகுதி :

சொக்கப்:— 'என் மான் கண்டனகண் மயில்கண்ட மாதரும்': 'தலைவியை யான் கண்ட என்று கூறாது என் மயில்கண்ட மாதர் என்று கூறியது என்னையெனின், தலைவன் காணுந் தன்மையள் அல்லது அயலார் காணுந் தன்மையளல்லள் ஆதலால் இவ்வாறு கூறினார்? என்னை 'மலர். அன்ன கண்ணாள் - ...மதி' என்னும் குறளால் உணர்க.' (தஞ்சை. 347.)

1120. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம். (௧௦)

உடன்போக்குரைத்த தோழிக்கு அதனது அருமைகூறி மறுத்தது.

## உரைப்பகுதி :

பரிமே :— அனிச்சமும அன்னத்தின் தூவியும் - உலகத்தாரான் மென்மைக்கு எடுக்கப்பட்ட அனிச்சப்பூவும் அன்னப்புள்ளின் சிறகும்

ஆகிய இரண்டும், மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம் - மாதரடிக்கு நெருஞ்சிப் பழம்போல வருத்தஞ்செய்யும்.

முள் வலிதாதலுடைமையின் பழம் என்றான். இத்தன்மைத்தாய அடி *'பாத்தியன்ன குடுமிக் கூர்ங்கற்'களை உடைய வெஞ்சுரத்தை யாங்ஙனம் கடக்கும் என்பது குறிப்பால் பெறப்பட்டது. செம்பொருளே யன்றிக் குறிப்புப் பொருளும் அடிநலன் அழியாமையாகலின், இதுவும் இவ் அதிகாரத்ததாயிற்று.

மணக்:— அனிச்சப்பூவும், அன்னத்தின் தூவியும் மாதரடிக்கு நெருஞ்சிப் பழத்தோடு ஒக்கும் எ - று.

இஃது அவையிற்றினும் மெல்லியது அடி என்று கூறிற்று.

பரிதி:— உலகத்தார் மேன்மை கொடுக்கப்பட்ட அனிச்சப் பூவும் அன்னப்புள்ளின் சிறகும் இரண்டும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்போல வருத்தம் செய்யும் எ - று.

காளிங்:— நெஞ்சே! அனிச்ச மலரும் அன்னத்தின் தூவியும் இரண்டும் சால மென்மை உடையவன்றே; மற்று அவை தாமும் நம் மாதராள் அடியினது மென்மைகருச் சில நெருஞ்சிமுள் எனவே அவற்றினை அடியிடினும் ஆற்றுள் என்பது பொருள் எ - று.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— முள்வலிதாகலின் பழம் என்றார்.

**ஒப்புமைப்பகுதி:**

"பஞ்சியடர் அனிச்ச நெருஞ்சியீன்ற பழமால் என்று
அஞ்சு மலரடிகள்" —சீவக. 341.

"அம்மெல் அனிச்சம் மலரும் அன்னத் தூவியும்
வெம்மை யாமஎன்று அஞ்சி மெல்ல மிதியாத
பொம்மென் நிலவப் பூம்போ தனமின் னடிபோற்றி" —ஷை. 2454.

"அனித்த மிதிப்பினும் பனித்தல் ஆறு
ஒளிச்செஞ் சீறடி" —பெருங். 1 : 53 : 162-163.

---

* அகம் 5.

" தாமே தமக்கொப்பு மற்றில் லவரில்லைத் தண்அனிச்சப்
பூமேல் மிதிக்கின் பதைத்தடி பொங்குமங் காய்எரியும்
தீமேல் அயில்போல் செறிபரல் கானில் சிலம்படிபாய்
ஆமே நடக்க அருவினை யேன்பெற்ற அம்மனைக்கே." —திருச்சிற். 228

" அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிமலர்க்குச்
சனித்த நெருஞ்சிப் பழமென் றறிந்தும் தருவரன்றி
மனித்தர் வழங்கரும் வெங்கொடும் பாலை வழிஒருநான்
இனித்த மொழியுடை யாளைஎவ் வாறுகொண் டேகுவனே"
—திருவெங் - கோவை. 310.

" தூவி நெருஞ்சிக்காய் நீர்முள்ளி தும்பையலர்
காவியன சேல்கண் குறுங்தொடியார்." —இன். 26.

## முதுமொழிவெண்பாக்கள் :

" ஒண்கயற்கட் பாரதியை ஓது மறைநாவில்
எண்கண்ணன் வைத்தான் இரங்கேசா பண்பில்." —இரங். 112.

## குறிப்பு:

'பலர்காணும் பூவொக்கும் என்று' (1112) மேல் இகழ்ந்துகூறியதை ஈண்டும் ஒப்பு நோக்குக. நெருஞ்சிப்பழம் - நெருஞ்சியின் முற்றியவித்து.

—தொகுப்பாசிரியர்.

## குறள் வைப்புமுறை.

**பரிமே:—** நன்னீரை, மலர்காணின், முறிமேனி, காணின், அனிசசப்பூ, மதியும், அறுவாய், மாதர், மலரன்ன, அனிச்சமும்.

**மணக்:—** மதியும், அறுவாய், மாதர், மலரன்ன, மலர்காணின், காணின், நன்னீரை, அனிச்சப்பூ, முறிமேனி, அனிசசமும்.

**பரிதி:—** மாதர், மலரன்ன, அறுவாய், மதியும், அனிச்சமும், நன்னீரை, மலர்காணின், அனிச்சப்பூ, முறிமேனி, காணின்.

**காளிங்:—** மாதர், மதியும், அறுவாய், மலரன்ன, மலர்காணின், காணின், அனிசசப்பூ, அனிச்சமும், நன்னீரை, முறிமேனி.

# 113. காதற்சிறப்புரைத்தல்

தொகுப்புரை :

[ இம்மென்மொழியாளது தூய எயிற்றிலூறிய நீர் பாலோடு தேன் கலந்தது போன்ற இனிமையை உடையது. உயிருக்கும் உடம்பிற்கும் உள்ள நட்புப்போன்றது இவளோடு நமக்குண்டாகிய நட்பு. கண்ணில் கருமணியிலிருக்கும் மணியே! நீ போ யாம் விரும்பிய தலைவிக்கு இடமில்லையாதலால், தலைவி, உடனுறையுங்காலை உடம்போடு உயிர் கூடி வாழ்தலைப்போல அன்புறுத்துவள். பிரியுங்கால் சாதல் ஒத்த துன்பம் தருவள். ஒளிபொருந்திய கண்ணையுடைய தலைவியின் குணங்களை மறந்தால் நினைப் பேன்; ஆனால் நான்தான் மறப்பதில்லையே! என் தலைவர் என் கண்ணை விட்டுப்பிரியார் நான் அறியாது இமைத்தாலும் அதனாலும் துன்புறார். ஆதலால் அவர் மிக நுண்ணியர் காதலர் என்கண்ணில் எப்பொழுதும் இருப்பதால் கண்ணுக்கு மைகூட எழுதமாட்டேன். எழுதும் நேரம்வரை அவர் மறைந்துவிடுவாரே யென்று, என் காதலர் என்நெஞ்சில் இருப்பதால்,அவருக்குச்சுடும் என்று அஞ்சிச் சூடான உணவுகூட நான்உண்பதில்லையே. கண் இமைத்தால் கண்ணுளிருக்கும் காதலர் மறைவார் என்று கண்கூடக் கொட்டுவ தில்லை. அதுதெரியாமல் இவ்வூர் என் கணவர் என் துயிலைப் பறித்தார் என்று பழி தூற்றுகின்றது. என் காதலர் என் மனத்துள்ளே மகிழ்ந்து உறைகின்றார். அது அறியாமல் அவர் பிரிந்தார் ஆதலால் அன்பிலர் என்று இழித்துப் பேசாநின்றது இவ்வூர்.]

அதிகாரப்பொருள் :

பரிமே :— *அஃதாவது தலைமகன் தன்காதல்மிகுதி கூறலும், தலைமகள் தன்காதல்மிகுதி கூறலுமாம். இது, புணர்ச்சியும் நலனும்பற்றி நிகழ்வதாகலின், புணர்ச்சிமகிழ்தல் நலம்புனைந்துரைத்தல்களின் பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *காதற்சிறப்புரைத்தலாவது தலைமகன் காதல்மிகுதி கூறுதலும், தலைமகள் காதல்மிகுதி கூறுதலுமாம். இது நலம்புனைந் துரைத்தலின்பின் நிகழ்வதொன்றாகலின், அதன்பின் கூறப்பட்டது.*

1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். (க)

இயற்கைப்புணர்ச்சி இறுதிக்கண் தலைமகன் தன் நயப்பு உணர்த்தியது.

உரைப்பகுதி :

பரிமே :— *பணிமொழி வால் எயிறு ஊறிய நீர்* - இம்மெல்லிய மொழியினை உடையாளது வாலிய எயிறூறிய நீர், *பாலொடு தேன் கலந்தற்று* - பாலுடனே தேனைக்கலந்த கலவைபோலும்.

கலந்ததற்று என்பது விகாரமாயிற்று, கலக்கப்பட்டது என்ற வாறு. பாலொடு தேன் என்ற அதனால் அதன்சுவைபோலும் சுவையினை உடைத்து என்பதாயிற்று. எயிறூறிய என இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேனின்றது. வேறுவேறு அறியப்பட்ட சுவையவாய பாலும் தேனும் கலந்துழி அக்கலவை இன்னதென்று அறியலாகாத இன்சுவைத்தாமாகலின், அது பொருளாகிய நீர்க்கும் எய்துவிக்க.

மணக்:— பாலொடுகூடத் தேனைக்கலந்தாற்போலும்; மிகவும் இனிமை தரும் புகழினையுடையாளது வெள்ளிய எயிற்றினின்று ஊறிய நீர் எ - று.

இது புணர்ச்சியுண்மையும் காதல் மிகுதியும் தோன்றத் தலைமகன் கூறியது.

பரிப்:— இஃது இரந்து பின்னின்ற தலைமகனை நோக்கி நீர் பெரியீராதலானே எமது புணர்ச்சி நுமக்கு இன்பம் தரவற்றே என்ற தோழிக்குத் தனது புணர்ச்சி யுண்மையும காதல் மிகுதியும் தோற்றத் தலைமகன் கூறியது.

பரிதி:— பாலொடு தேன் கலந்தாற்போலும் மாதர் இதழில் உண்டாகிய அமிர்தம் எ - று.

காளிங்:— நெஞ்சே! பாலொடு தேனும் கூடக்கலந்த அத் தன்மைத்தேதான் இப்பணிமொழியினளது வெளிய நகையில் ஊறிய நீரெனவே நாமமுயற்சிசெய்துகொண்டன வேற்றுமையுடைய இரண்டிற் கும் சுவையும இருவகைய அன்றே: மற்று அங்ஙனம் வேறுபட்ட வற்றை ஒன்றோடு ஒன்று கலந்து சுவைபெறும் தன்மைத்து அன்று; இவையாவும் இன்று இயல்பாக இவள்வாய் இன்னகையினின்று இனிது ஊறிய நீர் நலம் யாம் அறிந்தனம் ஆதலான் என்று இங்ஙனம் இன்றி யமையாமை தன் நெஞ்சிற்குச் சொல்லுவான்போல அவள் கேட்பச் சொல்லினன் என்பது பொருள் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கலந்தது என்பது, செய்யுள் நடையால் கலந்து என விகாரமாயிற்று. 'களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்று' (1145) என் பதும் அது.

மேற்கோள்பகுதி:

நச்:— பாதிரி என்னும நிரையீற்று இயற்சீர் நேரசைச் சீரொடு தளைப்பட்டமைக்கு மேற்கோள். (தொல். பொருள். செய். 75.)

சுவாமி:— மூன்றனுருபு மயக்கத்தில் வந்ததற்குப் 'பாலொடு தேன்கலந்தற்றே' என்பது மேற்கோள். (இ. கொ. 54.)

பெருந்:— வெண்பாவை ஓசையூட்டுதற்கு மேற்கோள். (வீர. 114)

பண்புவமைக்கு மேற்கோள். (ஷை 158)

யா. வி:— நீர் என நேரசையாலாகிய ஓரசைச்சீரால் முடிந்த வெண்பாவிற்கு மேற்கோள். (சூ. 4)

இயற்சீர்நின்று இயற்சீரோடு விகற்பித்துவந்த சிறப்புடைய இயற்சீர்வெண்டளைக்கு மேற்கோள். (ஷை. சூ. 18)

தூங்கிசைச்செப்பலோசையான் வந்த வெண்பாவிற்கு மேற்கோள். (ஷை சூ. 57)

குண:— நீர் என ஓரசையால் முடிந்த வெண்பாவிற்கு மேற்கோள். (யா. கா. 9.)

சொக்கப்:— 'இன்சொல் தந்தும் கவையும் தணந்து சென்றாள்' 'தந்ததும் என்பது தந்தும் என விகாரப்பட்டு நின்றது. 'பாலொடு தேன் கலந்தற்றே என்புழி கலந்ததற்றே என்பது கலந்தற்றே என நின்றாற் போலக் கொள்க. (தஞ்சை. 339.)

ஓப்புமைப்பகுதி:

" .... ... ... இவள் செங்கனிவாய்
அருந்தொறும் இனிதாய் அமிழ்தாம் எனதாருயிர்க்கே."—தஞ்சை. 59.

"யானலன் ஒளவை யாவாள் சுநந்தையே ஐயற் கென்றும்
கோனலன் தந்தை கந்துக் கடனெனக் குணத்தின் மிக்க
பானிலத் துறையும் தீந்தேன் அனையவாய் அமிர்தம் ஊற
மானலங்கொண்ட நோக்கி மகன்மன மகிழச் சொன்னாள்"—சீவக 1915.

முதுமொழிவெண்பாக்கள் :

“ இன்னமணி வேண்டா எனவொறுத்த உண்கணுள்
தென்னவு தார தினகரா - மன்னிய ” —தினகர. 117.

“ நாதர் பரமகுரு நாதர் குறமகள்பால்
காதன் மிகுதிசொலக் கண்டோமே - தீயசெழும். ”
—முதுமொழி. 166.

“ சேர்ந்து திருமகளைத் தெள்ளமுதம் உம்பருக்கே
ஈந்த உதாரம் இரங்கேசா - தேர்ந்தக்கால்.” —இரங். 113.

1122. உடம்பொ டுயிரிடை என்ன மற்றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு. (உ)

பிரிவச்சம் கூறியது.

உரைப்பகுதி:

பரிமே:— உடம்பொடு உயிரிடை என்ன அன்ன - உடம்போடு உயிரிடை உளவாய நட்புக்கள் எத்தன்மைய அத்தன்மைய, மடந்தையொடு எம்மிடை நட்பு - இம்மடந்தையோடு எம்மிடை உளவாய நட்புக்கள்.

என்ன எனப் பன்மையால் கூறியது, இரண்டும் தோன்றுதொட்டு வேற்றுமையின்றிக கலந்துவருதல், இன்பத்துன்பங்கள் ஒக்க அனுபவித்தல், இன்றியமையாமை என்று இவற்றைநோக்கி. தெய்வப் புணர்ச்சியாகலான் அதுபொழுது உணர்ச்சியிலளாகியாள் பின்னுடையளாம அன்றே, ஆயவழி இவன் யாவன்கொல் எனவும் என்கண் அன்பு உடையன்கொல் எனவும் இன்னும இவனைத் தலைப்பெய்தல் கூடுங்கொல் எனவும் அவள் மனத்தின்கண் நிகழும்; அந்நிகழ்வனவற்றைக் குறிப்பான் அறிந்து அவை தீரககூறியவாறு. என்னை என்று பாடம் ஓதுவாரும் உளர்.

மணக்:— உடம்போடு உயிரிடையுள்ள நட்பு எத்தன்மைத்து அத்தன்மைத்து; மடப்பத்தையுடையாளோடு எம்மிடையுள்ள நட்பு எ - று.

நின்னிற் பிரியமாட்டேன் என்றவாறு. இது தலைமகன் தனது காதல் மிகுதி கூறியது.

பரிப்:— இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரியலுற்ற குறிப்புக கண்டு வேறுபட்ட தலைமகளை நோக்கி நின்னிற் பிரியேன் பிரியின் ஆற்றேன் என்று தலைமகன் தனது காதலமிகுதி கூறியது.

பரிதி:— உடம்புக்கும் உயிர்கரும் எப்படி நட்பு? அதற்கு ஒக்கும் நாயகிக்கும் எனக்கும் கூடின இன்பம் எ - று.

காளிங்:— உடம்பொடு உயிரிடை உள்ள நட்பு எத்தன்மையது மற்று அத்தன்மையது, எம்மால் காணப்பட்ட மடவாளொடு எம்மிடையுள்ள நட்பு எனவே எவ்வாற்றானும் இன்றியமையாமை எடுத்துரைத்தான் என்பது பொருள் எ - று.

இது வினவிய பாங்கற்குத் தலைமகன் கூறியது.

1123. *கருமணியின் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை இடம். (௩)

இடந்தலைப்பாட்டின்கண் தலைமகள் நீக்கத்துச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— கருமணியின் பாவாய் நீ போதாய் - என் கண்ணிற் கருமணியின்கண் உறையும் பாவாய், நீ அங்குநின்றும் போதருவாயாக, யாம் வீழும் திருநுதற்கு இடம் இல்லை - போதராதிருத்தியாயின், எம்மால் விரும்பப்பட்ட திருநுதலையுடையாட்கு இருகக இடம் இல்லையாம்.

யான் காணாது அமையாமையின் இவள்புறத்துப் போகற்பாலளன்றி என்கண்ணுள் இருக்கற்பாலள், இருக்குங்கால் நின்னோடு ஒருங்கு இருக்க இடமபோதாமையின் நின்னினுஞ்சிறந்த இவட்கு அவ்விடத்தைக் கொடுத்து நீ போதுவாயாக என்பதாம்.

மணக்:— என் கண்ணுட் கருமணியகத்து நிற்கும் பாவாய்! நீ அங்கு நின்றும் போதுவாயாக, எம்மால விரும்பப்பட்ட அழகிய நுதலினையுடையாட்கு இருத்தற்கு இடம் போதாது எ - று.

பரிப்:— இஃது இரண்டாம் கூட்டத்து எதிர்ப்பட்ட தலைமகன் தலைமகளது நாணம் நீங்குதற்பொருட்டு அவளது கவின் தனது கண்ணிறைந்தது என்று தலைமகள் கேட்பச் சொல்லியது.

* 'கருமணியுள்' மணக் - பாடம்.

பரிதி:— கண்ணின் கருமணியிலிருக்கும் பாவாய்! நீ போதாய் யாம் விரும்பும் நாயகிக்கு இடமில்லை எ - று.

காளிங்:— இவள் கண்மணியுள் புக்கு உறையும் பாவாய்! நீ அங்குநின்று என்மாட்டுப் போதுவாயாக; என்னை காரணம் எனில் யாம் விரும்பும் திருநுதலாட்கு இவ்வுருவுகொண்டு நிற்றற்கு இடமில்லை இவள் கண்மணி எ - று.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— எம்மால் வீழப்பட்ட திருநுதற்கு இல்லை இடம் என்பதை, பொருள் வேறுபடாமையின் 'யாம் வீழும் திருநுதல்' எனத் தொகுக்கவேண்டின் தொகுக்கலாம் என்பர். (இ. கொ. 78.)

1124. வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து. (௪)

பகற்குறிக்கண் புணர்ந்துநீங்குவான் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— ஆயிழை உயிர்க்கு வாழ்தல் அன்னள் - தெரிந்த இழையினையுடையாள் எனக்குப் புணருமிடத்து உயிர்க்கு உடம்போடுகூடி வாழ்தல்போலும்; நீங்குமிடத்து அதற்குச் சாதல் அன்னள் - பிரியுமிடத்து அதற்கு அதனின் நீங்கிப்போதல் போலும்.

எனக்கு என்பதும் புணருமிடத்து என்பதும் அவாய்நிலையான் வந்தன. வாழுங்காலத்து வேற்றுமையின்றி வழிநிற்றலானும், சாங் காலத்து வருத்தஞ்செய்தலானும், அவற்றை அவள் புணர்வு பிரிவுகட்கு உவமையாக்கினான்.

மணக்:— கூடுமிடத்து இவ்வாயிழை உயிர்க்கு வாழ்தலோடு ஒப்பள்; நீங்குமிடத்து அவ்வுயிர்க்குச் சாதலோடு ஒப்பள் எ - று.

இஃது இரண்டாங் கூட்டத்துப் புணர்ந்து நீங்கானென்று கருதிய தலைமகள் கேட்பத் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

பரிதி:— நாயகியுடனே கூடினநாள் உயிருடனே வாழ்வதற்கு ஒக்கும்; நாயகியைப் பிரிந்தால் உயிர்விடுவதற்கு ஒககும் எ - று.

காளிங்:— நெஞ்சே! 'நாம் இவளின் நீங்காது உடன் வாழ் காலத்து அவ்வுடன் வாழ்தல், இவ்வுடலோடு உயிர்வாழ்காலத்தில் வாழ்தல் உயிர்க்கு என்னது? மறறு அன்னள் நமக்கு இவ்வாயிழையாள்; இனி உடல் சாதல் இன்னுயிர்க்கு என்னது? மற்று அன்னள் இவள் யாம் ஒருபொழுது இவண் நீங்குமிடத்து எ - று.

இனி மற்று இவளை மனமகிழ வருடி வற்புறீஇய பின்னர் இவளொடு கூறுவனவும், பாங்கிக்கு உரைப்பனவும், அவளை இரந்துபின் நிற்பனவும், அவள் எதிர்மறுத்து உரைப்பனவும் எல்லாம் வந்து முடிவது பாங்கி மணித்தழையேற்பக் கொடுத்தபின் அங்ஙனம் வந்து எய்துதல்: மற்று இவ்வாறன்றி மடல் ஊர்ந்தானும் கொள்வல் என்று எய்துதற் கண்ணேயும் வந்து இறும்; ஆதலால மற்று இதன பின்னரே மடலேற்று உணர்த்துகின்றது மேலை அதிகாரம்.

## மேற்கோள்பகுதி:

நச்:— பிரிந்தவழிக்கலங்கல்: வழி என்ற மிகையால் கொண்ட பிரியலுறுவான் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 102.)

## முதுமொழிவெண்பாக்கள்:

"கானடந்தும் சீதைகலப் பால்களித்தான் பின்அயர்ந்தான்
தூநீர் அயோத்தியர்கோன் சோமேசா - ஆனதனுல்."
—சோமேசர். 113.

"தேர்ச்சியன் இந்துமதிச் சேர்ந்துழிவாழ்ந் தேமடிவின்
மூர்ச்சித்து மாய்ந்தான் முருகேசா - நேர்ச்சிமிக." —முருகேசர். 113.

**1125.** உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம். (ரு)

ஒருவழித்தணந்துவந்த தலைமகன் 'நீயிர் தணந்தஞான்று
எம்மையுள்ளியும் அறிதிரோ' என்ற தோழிக்குச் சொல்லியது.

## உரைப்பகுதி:

பரிமே:— ஒள்ளமர்க் கண்ணாள் குணம் யான் மறப்பின் உள்ளுவன் - ஒள்ளியவாய் அமரைச்செய்யும் கண்ணினையுடையாள் குணங்களை

யான் மறந்தேனாயின், நினைப்பேன்; மறப்பு அறியேன் - ஒருபொழுதும் மறத்தலை அறியேன், ஆகலான் நினைத்தலையும அறியேன்.

மன் ஒழியிசைக்கண் வந்தது. குணங்கள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலாயின. இத்துணையும் தலைமகன் கூற்று; மேல் தலைமகள் கூற்று.

மணக்:— மறந்தேனாயின், நினைப்பேன் யான்; மறத்தலறியேன்; ஒள்ளமர்க்கண்ணாள் குணத்தினை எ - று.

தோழியிற்கூடிநீங்குந் தலைமகனை நோக்கி எங்களை நினைக்கிலீரோ? என்ற தோழிகுத் தலைமகன் கூறியது. இவை ஐந்தும் தலைமகன் கூற்று. இனிக் கூறும் ஐந்துந் தலைமகள் கூற்று.

பரிப்:— இது நாணுத்துறவுரைத்தலில் கூறற்பாலது. காதன் மிகுதிநோககிக் கூறுகின்றார் ஆதலின் ஈண்டுக் கூறப்பட்டது. காதல் மிக்கார்க்குத் தான் காதலிககப்பட்டாரை ஒழிவின்றி நினைதலும் அவர் தம்மாட்டு இல்லாத காலத்தினும் கண் முன்னாய்க் காண்டலும் உண்ணாமையும் உறங்காமையும் கோலஞ்செய்யாமையும் உளவாம் அன்றே; அவை ஐந்தும் ஈண்டுக் கூறப்படுகின்றன.

காளிங்:— இடைவிடாமல் நினைப்பேன் யான், மறக்ககூடுமாயின்; மறப்பு என்பதனை அறியேன்: ஒள்ளிய அமர்செய்யும் கண்ணினை உடையாள் குணத்தை எ - று.

## மேற்கோள்பகுதி:

சொக்கப்:— 'ஒருகாலும் மைதோய் மானெடுங் கண்ணி மறந் தறியேன்' எனவே மறந்திலனாதலால் நினைந்திலன் என்று கூறியவாறாயிற்று; 'உள்ளுவன்மன் யான்............குணம்' என்பதனான் அறிக.' (தஞ்சை. 279.)

## முதுமொழிவெண்பாக்கள்:

" காதற் குணம்விருத்த காசிவிப சித்துரைத்த
சேதித் திறமே சிவசிவா - நீதிச்சொல்." —சிவசிவ. 113

1126. கண்ணுள்ளின் போகார் இமைப்பின் பருவரார்
நுண்ணியரெம் காத லவர். (சா)

ஒருவழித்தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற்பழிக்கும் என்றஞ்சி
-அவள்கேட்பத் தன்னுள்ளே சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— தாம்காணுமைபற்றிச்சேய்மைக்கண் போயினர் என்று கருதுவார் கருதுக, எம் காதலவர் கண்ணுள்ளின் போகார் - எம்முடைய காதலர் எம் கண்ணகத்துநின்றும் போகார், இமைப்பின் பருவரார் - யாம் அறியாது இமைத்தேமாயின் அதனால் வருந்துவதும் செய்யார், நுண்ணியர்- ஆகலால் காணப்படா நுண்ணியர்.

இடைவிடாத நினைவின்முதிர்ச்சியான் எப்பொழுதும் முன்னே தோன்றலின் கண்ணுள்ளிற்போகார் என்றும், இமைத்துழியும் அது நிற்றலான் இமைப்பின் பருவரார் என்றும் கூறினள்.

மணக்:— என் கண்ணுள் நின்று நீங்கார்; இமைப்பேனுயின், இவட்கு உறுத்தும் என்று பருவருத்திருப்பதும் செய்யார்; ஆதலான், எம்மால் காதலிக்கப்பட்டார் நுண்ணிய அறிவையுடையார் எ - று.

பரிப்:— இஃது அறிவிலர் என்று இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் கூறியது. இஃது *எதிர்பெய்துபரிதல் என்னும் மெய்ப்பாடு.

பரிதி:— தான் காணுமை பற்றிச் சேய்மைக்கண் போயினர் என்று கருதுவார் கருதுக. எம்முடைய காதலர் எம் கண்ணகத்துநின்றும் போகார்; யாம் அறியாது இமைத்தேமாயின் அதனுல் வருந்துவதும் செய்யார் ஆதலால் கணவர் நுண்ணியர் எ - று.

ஒருவழித்தணப்பின்கண் தலைமகனைத் தோழி இயற்பழிக்கும் என்று அவள் கேட்பத் தலைமகள் சொல்லியது.

காளிங்:— கேளாய்! இங்ஙனம் எம் கருத்துள் உறைதலே யன்றிக் கண்ணுள் நின்றும் போகின்றிலர்; மற்று இமைப்பின்கண் நெருக்குண்டு வருந்துவதோர் வருத்தமும் மிகார். அதனுல் ஆண்டு அங்குக் கண்ட உருவு நலனுடையரேனும் ஈண்டு இங்ஙனம் பெரிதும் நுண்ணியர்

---

* தொல். பொருள். மெய். சூ. 22.

எம்மாற் காதலிக்கப்பட்டவர் எனவே மற்று இவன் தான் காண்பதும் கருதுவதும் அவள் அல்லது பிறிது ஒன்றும் இல்லை என்பது பெரும் பாலும் பாங்கன் உட்கொள்வானாவது பயன் எ - று.

1127. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக் கறிந்து. (எ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— காதலவர் கண் உள்ளாராகக் கண்ணும் எழுதேம் - காதலர் எப்பொழுதும் எம் கண்ணினுள்ளாராகலான் கண்ணினை அஞ்சனத்தால் எழுதவுஞ் செய்யேம், கரப்பாக்கு அறிந்து - அத்துணைக் காலமும் அவர் மறைதலை அறிந்து.

இழிவுசிறப்பும்மை மாற்றப்பட்டது. கரப்பாக்கு என்பது வினைப் பெயர். வருகின்ற 'வேபாக்கு' என்பதும் அது. யான் இடையீடின்றிக் காண்கின்றவரைப் பிரிந்தார் என்று கருதுமாறு என்னை என்பது குறிப்பெச்சம்.

மணக்:— எம் காதலவர் கண்ணுள்ளார்; ஆதலானே, கண்ணும் மையெழுதோம்; அவர் ஒளித்தலை அறிநது எ - று.

எப்பொழுதும் நோக்கியிருத்தலால், கோலஞ்செய்தற்குக் காலம் பெற்றிலேன் என்றவாறாயிற்று.

பரிப்:— உம்மை சிறப்பும்மை. கோலம் செய்யாதது என்னை என்ற தோழிக்கு அவர் ஒளிப்பதனை அறிந்து கண்ணும் எழுதேன்; என்னை உருப்புக் கோலம் செய்யுமாறு என்னை என்று கூறியது; எப்பொழுதும் நோக்கியிருத்தலால் கோலஞ்செய்கற்குக காலம் பெற்றிலேன் என்றவாறு ஆயிற்று. இஃது *இன்பத்தை வெறுத்தல் என்னும் மெய்ப் பாடு. இவை ஐந்தும் காதல் மிகுதியால் கூறியவாறு கண்டு கொள்க.

பரிதி:— தூரியக்கோல் கொண்டு கண்ணுக்கு அஞ்சனம் எழு தோம்; நாயகரைச் சற்றுநேரம் காணமல் இருக்கநேருமே என்று எ - று.

* தொல். பொருள். மெய். சூ. 22.

காளிங்:— இங்ஙனம் எம் கண்ணுள் உறைவர் எப்பொழுதும் எங்காதலடுத்தவராகக கண்ணும் அஞ்சனம் தீட்டோமானேம் என்எனின் அப்பொழுதத்தவரையும் கரந்துறைவார் என்னும் பாகுபாட்டைக் குறிக்கொண்டு; எனவே *பின்னும் ஏதிலார் என்னும் இவ்வூர் என்று இவனைத் தான் கொடுமை கூறியதே பொருள் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கரப்பாக்கு, வேபாக்கு என்பன வினையெச்சம். குறிப்பெச்சமும காண்க.

மேற்கோள்பகுதி:

இளம்:— பிரிந்தவழிக் கலங்கியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 109.)

ஒப்புமைப்பகுதி:

“கண்ணுளார் நுங்காதலர் ஒழிககாமம் ஈங்கென
உண்ணிலாய வேட்கையால் ஊடிஞரை யாடவர்
வண்ணமே கலைகளைப் பற்றவற் றுதிர்ந்தன
எண்ணில்பொன் சுடுநெருப்புக்கமுற்றம் ஒத்தவே.” —சீவக. 72.

“சிறுவா ளுகிருற் றுருமுன்னம சின்னப் படுங்குவளைக்
கெறிவாள் கழித்தனள் தோழி எழுதின் கரப்பதற்கே
அறிவாள் ஒழிகுவ(து) அஞ்சனம அமபல வர்ப்பணியார்
குறிவாழ் நெறிசெல்வர் அன்பர்என் றமம கொடியவளே”.
—திருச்சிற். 334.

குறிப்பு:

கரப்பாக்கு என்பதற்கு உரையாசிரியர்கள் அனைவரும் ஒளித்தலை, மறைதலை எனவே பொருள் கண்டனர் ஆதலின் கரப்பாக்கு வினைப்பெயர் என்ற பரிமேலழகர் குறிபபே சிறந்தது. ‘கரப்பாக்கு வினைஎசசம’ என்ற நுண்பொருண் மாலையுடையார், கரப்ப அதனை அறிந்து மை எழுதோம் என்றுள் என உரை காண்பர்போலும். தொல்காப்பியச் சொல்லதிகாரதது வினையியலில் ‘பின்முன்’ (32) என்ற சூத்திரத்து ‘அன்னமரபிற் காலங்கண்ணிய என்ன கிளவியும’ என்றதனால்

* ‘முன்னும்’ எனவும் பாடம்.

உண்பாக்கு வேபாக்கு என பாக்கீறு வினையெச்சமாம் எனச் சேனாவரையர் கூறினமையானும, பாக்கு வினைப்பெயராதல வழக்காறன்மையானும இங்ஙனம் கொணடனர்போலும். தொல்-சொல் 231ல நச உரை இதற்கு மறுப்பாதல் காணக.
—தொகுப்பாசிரியர்.

1128. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து. (அ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— காதலவர் நெஞ்சத்தாராக வெய்து உண்டல் அஞ்சுதும் - காதலர் என் நெருசினுள்ளாராகலான் உண்ணுங்கால் வெய்தாக உண்டலை அஞ்சாநின்றேம, வேபாகது அறிந்து - அவர் அதனான் வெய்துறலை அறிந்து.

எப்பொழுதும் என் நெஞ்சினகண் இருககின்றவரைப் பிரிந்தார் என்று கருதுமாறு என்னை? எனபது குறிப்பெச்சம்.

மணக்:— எம்மாற் காதலிக்கப்பட்டவர் எம் நெஞ்சத்தில் இருக்கின்றார் ஆதலானே, வெய்தாகவுண்டலை அஞ்சாநின்றேம்; அவர்க்குச் சுடும எனபதனை அறிந்து எ - று.

இது நீ உண்ணாதது என்னை என்று வினாவியதோழிக்குத் தலைமகள் உணவில் காதலிலலை யென்று கூறியது. இது கரணத்துறவு உரைத்தல்.

பரிப்.— இது *பசியடாநிற்றல் என்னும் மெய்ப்பாடு.

பரிதி:— நெஞ்சத்திலே நாயகர் இருக்கையினாலே சுட்டசோறு அசனம் பண்ணாள் எ - று.

காளிங்:— கேளாய்! எங்கேளே! இவ்வாறு எப்பொழுதும் என் நெஞ்சத்தார் நம் காதலராகவே வெய்து ஒன்று உண்டலும் அஞ்சுதும்; என்னை எனில் அதனாலே அவர்மேனி வெம்மை உறுவதோர் கூறுபாட்டினை அறிந்து எ - று.

இதனாலும் இன்றியமையாமை இவன் அறிவது பயன்.

*தொல். பொருள். மெய். சூ. 22.

**மேற்கோள்பகுதி :**

இளம்:— பிரிந்தவழிக் கலங்கியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 109.)

நச்:— அன்ன மரபின் என்பதனுல் கொள்ளப்படும் பாக்கு என்னும் ஈற்று வினையெச்சத்திற்கு வேறு உதாரணம்காட்டி 'வேபாக்கு அறிந்து' என்பது வேதலை அறிந்து என்னும் பொருள் தருதலின் எச்சம அன்று என மறுப்பர். (தொல். சொல். 231.)

சுவாமி:— பொருள் திரிபிற்கு மேற்கோள் காட்டி 'இது அஞ்சுவன் என்னும் ஒருமைமுற்றினது பொருள் தன்னிலைதிரிந்து பன்மை முற்றின்கணணே சென்றது' என்பர். (இ. கொ. 125.)

1129. இமைப்பின் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னுமிவ் வூர். (௯)

வரைவிடை வைத்துப் பிரிவின்கண் தலைமகளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவழி அவள் இயற்படமொழிந்தது.

**உரைப்பகுதி :**

பரிமே:— 'இமைப்பின் கரப்பாக்கு அறிவல் - என் கண் இமைக்குமாயின் உள்ளிருக்கின்ற காதலர் மறைதலை அறிந்து இமையேன்; அனைத்திற்கே ஏதிலர் என்னும் இவ்வூர் - அவ்வளவிற்கு அவரைத் 'துயிலா நோய் செய்தார் அன்பிலர்' என்று சொல்லாநிற்கும் இவ்வூர்.

தன் கருத்து அறியாமைபற்றிப் புலந்து சொல்லுகிருள் ஆகலின் தோழியை வேறுபடுத்து இவ்வூர் என்றாள். ஒருபொழுதும் பிரியாதவரைப் பிரிந்தார் என்று பழிக்கற்பாலையல்லை என்பதாம்.

மணக்:— கண் இமைக்குமாயின், அவரொளிக்குமது யான் அறிவேன், அவ்வொளித்தற்கு அவரை நமக்கு ஏதிலர் என்று சொல்லும் இவ்வூர்; அதற்காக இமைக்கிலன் எ - று.

இது *கண்துயில்மறுத்தல் என்னும் மெய்ப்பாடு.

*தொல் பொருள். மெய். சூ. 22.

பரிப்:— இஃது உறங்காய் ஆயினது என் என்று வினவின தோழிகருக் கூறியது.

பரிதி:— கண் இமைத்து உறங்கில் நாயகர் கரப்பர். யான் அறிவன்; ஊரவர் இவள் நித்திரைகொண்டாள் இல்லை அதனால் அவர் அயலார் என்று ஏசுமது என்னையோ எ - று.

காளிங்:— யான் விழித்தகண் சிறிது இமைப்பின் அப்பொழுது காண்பரிதாகவே, கரந்து உள்ளே நிற்கும பண்பினை அறிவேன் யான்; அதனால், அறிந்து இமைத்தற்கு அஞ்சுவேன்; மற்று அத்தன்மைப் பட்டது ஒன்று; இவ்வாறு அறியாது அயலார் என்று கூறுவர் இவ்வூரவர்; என்ன பாவமோ? எ - று.

1130. உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்
ஏதிலர் என்னுமிவ் வூர். (௯௦)

இதுவும் அது,

உரைப்பகுதி :

பரிமே:— என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர் - காதலர் எஞ்ஞான்றும் என் உள்ளத்துள்ளே உவந்து உறையாநிற்பர்; இகந்து உறைவர் ஏதிலர் என்னும இவ்வூர் - அதனை அறியாது அவரைப் பிரிந்துறையாநின்றார் அன்பிலர் என்று சொல்லாநிற்கும் இவ்வூர்.

உவந்துறைவர் என்றதனால் அன்புடைமை கூறினாள். பிரியாமையும் அன்புமுடையாரை இலர் எனப் பழிககற்பாலையல்லை என்பதாம்.

மணக்:— அவர் எனது நெஞ்சத்தே என்றும் மகிழ்ந்து உறையாநிற்பர்; அவரை ஏதிலராய் நீங்கி யுறைவர் என்றே சொல்லாநின்றது இவ்வூர் எ - று.

தலைமகள் வேறுபாடுகண்டு தலைமகனை அன்பிலர் என்று இயற் பழித்த தோழிகருத் தலைமகள் என்னெஞ்சில் நின்று நீங்கார் என்று நெஞ்சின்மேல் வைத்துக கூறியது.

பரிப்:— வேறுபாடு கண்டு கூறுதல் பின்வருவனவற்றிற்கும் ஒக்கும்.

பரிதி:— மனத்திலே நாயகர் அறியாமல் இருக்கையிலே பிரிந்திருப்பர் என்று சொல்லும் இவ்வூர் எ - று.

காளிங்:— இங்ஙனம் எப்பொழுதும் அவர் தாம் எம்மினும் எம்முடன் உறைதலை மிகவும் விரும்பி எமது உள்ளத்துள்ளே உறைவார்; அஃது யாம அறிகுவம்; பின்னும் ஓரிடத்து அகன்று உறைவர்; அவர் தாம் அயலார் என்று இங்ஙனம் பட்டாங்கு உணராது பழியுரைப்பார் இவ்வூரவர் எ - று.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— பாலொடு, உடபபொடு, கருமணி, வாழ்தல், உள்ளுவன், கண்ணுள்ளின், கண்ணுள்ளார், நெஞ்சத்தார், இமைபபின், உவந்து.

மணக்:— உடபபொடு, கருமணி, வாழ்தல், பாலொடு, உள்ளுவன், உவந்து, கண்ணுள்ளின், நெஞசத்தார், இமைப்பின், கண்ணுள்ளார்.

பரிதி:— வாழ்தல், கருமணி, பாலொடு, கண்ணுள்ளார், இமைப்பின், உடம்பொடு, நெஞசத்தார், உவந்து, உள்ளுவன், கண்ணுள்ளின்.

காளிங்:— உடம்பொடு, உள்ளுவன், நெஞ்சத்தார, கண்ணுள்ளின், உவந்து, இமைப்பின், கண்ணுள்ளார், பாலொடு, கருமணி, வாழ்தல்,

# 114. நாணுத்துறவுரைத்தல்.

## தொகுப்புரை :

[காதலமகளிரைப் பெருது காமத்தால் வருந்திய காளையர்க்கு உறுதுணை மடலேறுதலன்றி வேருென்றுமில்லை. காதல் முற்றுப்பெருத துன்பத்தைப் பொறுக்கலாற்ருத என் உயிரும் உடலும் வெட்கத்தைவிட்டு மடன்மா ஏறக்கருதின. நாணத்தையும, ஆணமையையும் அனறு படைத்திருநதேன், இன்று அவற்றைவிட்டு மடல்மாவை உடையேன். காமவெளளம நாணமும் ஆண்மையுமாகிய தெப்பத்தைவிட்டுப் பிரித்து என்னை எஙகோ இழுத்துசசெலகிறது. மடல்மாவையும், மாலைககாலத்துக் காதலர் அநுபவிக்கும் துன்பததையும் நான் அறிநததேயிலலை. அங்ஙனமிருக்க இன்று குறுநதொடி உடையாளாகிய இத்தலைவி அவற்றைத் தநதாள். தலைவிகாரணமாக என் கண்கள் தூங்குவதேயிலலை. ஆதலால் எல்லாரும் உறஙகும்யாமத்தும் நான் மடலூராதலை எண்ணுவேன. கடலபோலக கரையற்ற காமத்துன்பத்தை அனுபவித்தும் மடலேருமல் பொறுத்திருக்கும் பெண்ணிற பெருந்தகுதி வாயந்த பிறப்பு இலலை. இவர்களிடமுள்ள நிறையென்னும் குணத்தால நாம் இவாகளிடம் விஞ்சமுடியாது; இவர்கள் இரங்கத்தக்கவர்கள் என்று எண்ணுமல் மகளிர்க்காக மறைபபொழிந்து மனறம் ஏறி வெளிப்பட்டு விடும். யான் அடஙகியிருந்தமையின் எல்லாரும் அறியவிலலை என்று, என் காமமானது மயங்கித தெருவில திரியத் தொடங்கிவிட்டது. யாம்படும் துன்பத்தை அவர்கள் பட்டறியாமையால் அறிவற்ற மக்கள் என்கண்காண நகையாடுகின்றனா.]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது சேட்படுக்கப்பட்டு ஆற்ருளுய தலைமகன் தோழிக்குத் தன்நாண்துறவு உரைத்தலும், அறத்தொடு நிற்பிககலுற்ற தலைமகள் அவட்குத் தன்நாண்துறவு உரைத்தலுமாம். இது, காதன் மிக்குழி நிகழ்வதாகலின், காதற்சிறப்புரைத்தலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *நாணுத்துறவுரைத்தலாவது தலைமகன் தனது நாணின்மையைத் தோழிக்குக் கூறுதலும் தலைமகளது நாணம் நீங்கினமையைத் தோழி தலைமகற்குக் கூறுதலுமாம். காதல் மிக்கார்க்கு நாணம் இல்லை என்பதனுல் அதன்பின் இது கூறப்பட்டது.*

1131. காமம் உழந்து *வருந்தினார்க் கேமம்
மடலல்ல தில்லை வலி. (க)

சேட்படுக்கப்பட்டு ஆற்றாளுய தலைமகன சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— காமம் உழந்து வருந்தினார்க்கு - அரியராய மகளிரோடு காமத்தை அனுபவித்துப் பின அதுபெறாது துன்புற்ற ஆடவர்க்கு, ஏமம் மடல அல்லது வலி இல்லை - பண்டும் ஏமமாய் வருகின்ற மடலல்லது இனி எனக்கு வலியாவதில்லை.

ஏமமாதல் அத்துன்பநீங்கும்வகை அவ்வனுபவத்தினைக் கொடுத்தல். வலி: ஆகுபெயர். பண்டும் ஆடவராயினார் இன்பமெய்திவருகின்றவாறு நிற்க, நின்னை அதற்குத் துணைஎன்று கருதிக கொண்டே முயன்ற யான் இதுபொழுது அலலாமையை அறிந்தேனாகலான் இனி யானும் அவ்வாற்றான் அதனை எய்துவல் என்பது கருத்து.

மணக்:— காமம் காரணமாக முயன்று வருந்தினார்கு ஏமமாவது மடல் ஏறுவதல்லது மற்ற வலியிலலை எ - று.

இது தலைமகனைத் தோழி சேட்படுத்தியவிடத்து மடலேறுவேன் என்று தலைமகன் கூறியது.

பரிதி:— மதத்தினாலே துயரமுற்று வருந்தினார்க்குச் சத்துவமாவது மடலல்லது வலியில்லை எ - று.

காளிங்:— தாம் கருதிய இன்பம் கையுறாமையால் காமநோய் உழந்து மற்று அதனாலே தமது பெருநாணினைக கைவிட்டுப் பெரிதும் வருந்துவார் யாவர்; மற்று அவர்க்கு இனி மேவுறுதி யாதோ எனின் மன்றத்துப் போந்து மடல் ஊர்தலே யல்லது பிறிது இல்லை என்று தன் கையுறை வாங்காத தோழிகருத் தலைமகன் மடல் ஏற்று உலகின் மேல் வைத்து உணர்த்தினான் என்பது பொருள் எ - று.

**மேற்கோள்பகுதி:**

நம்பி:— பாங்கியை இரந்து குறைபெறாது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தலுக்கு மேற்கோள். (சூ. 145.)

---

* 'வருந்துவார்' காளிங் - பாடம்.

**ஒப்புமைப்பகுதி :**

“ மாவென மடலும ஊர்ப பூவெனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதும ஆகுப காமங்காழ்க் கொளினே.” —குறுந். 17.

“ மற்றிநோய்,
பொறுக்கலாம வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்குழாய்
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி
நிறக்குவென் போல்வல்யான் நீபடு பழியே.” —கலித். 58 : 20 : 23.

“ ஓங்கிரும் பெண்ணை மடலூர்ந்து என் எவ்வநோய்
தாங்குதல தேற்றா இடும்பைக்கு உயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவேன் பாய்மா நிறத்து.” —ஷை. 139 : 10 - 13.

“ மாவென் றுரைத்து மடலேறுப மன்று தொறும்
பூவென்று எருக்கின் இணர்சூடுப புன்மை கொண்டே
பேயென்று எழுந்து பிறர்ஆர்ப்பவும் நிற்ப காம
நோய்நன் கெழுந்து நனிகாழ்கொள்வ தாயி னக்கால்.” —வளை.

“ ஆடவர்கள், கடலே றியகழி காமப்பெருகக கரும்பனையின்
மடலே றுவர்மற்றும் செய்யா தன இல்லை மாநிலத்தே.”
—பாண்டிக், 80

**முதுமொழிவெண்பாக்கள்:**

“ ஆதியருள் சேய்நாண் அகன்றுமட மான்மகட்குத்
தோழி எதிர்நின்று சொல்லியது - கூறிய.” —முதுமொழி. 167.

1132. நோனா உடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து. (உ)

நாணுடையநுமக்கு அது முடியாதென மடல்விலக்கலுற்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நோனா உடம்பும் உயிரும் மடல் ஏறும் - அவ்வருத்தத்தினைப்பொறாத உடம்பும் உயிரும் அதற்கு ஏமமாய மடன்மாவினை ஊரக் கருதாநின்றன, நாணினை நீக்கி நிறுத்து - அதனை விலக்குவதாய நாணினை அகற்றி.

வருந்தினர்க்கு என மேல்வந்தமையின் செயப்படுபொருள் ஈண்டுக் கூறராயினர். மடல ஆகுபெயர். நீககிகிறுதது என்பது ஒருசொன் னீர்மைதது. அறிவு நிறை ஓாப்புக கடைப்பிடி முதலிய முன்னே நீஙகவும நாண் நீங்காது நின்றது, அதுவும இதுபொழுது நீஙகிறறு என்பான், உடமபும உயிரும் எனறுன. அவைதாம தமமுள நீஙகாமறபொருட்டு மடலேறும என்றது அவள் தன் ஆற்றுமை அறிநது கடிதிற் குறைநேர்தல் நோககி.

மணக்:— பொறுத்தலில்லாத உடம்பும் உயிரும் மடலேறும்; நாணினை நீககி நின்று எ - று.

இஃது நீர்கூறிய மடலேறு நாணமுடையார்க்குக் கூடுமோ என்ற தோழிக்கு நாணினைநீககி உடம்போடு உயிரும மடலேறுமெனத் தலைமகன் கூறியது.

பரிதி:— யாமுற்ற காமநோய் பொறுக்கலா வுடம்பும் உயிரும் மடலேறலாயிருந்தது. முன்னின்ற நாணினையும் எடுத்தெறிந்து இதிலே வலிபெறுகின்றது எனறு உரைததான தலைமகன் எ - று.

காளிங்:— யான் உற்ற காமநோய் பொறுக்கலா உடம்பும் உயிரும் முன்னின்ற நாணினையும் எடுத்து எறிந்து இங்ஙனம் மடலேறு மாயிருந்தது; இனி என்னை செயற்பாலது என்று பின்னும் இதனையே வலிபெறுதது உரைத்தான் தலைமகன் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— அவ்வருத்தத்தினைப் பொருத உடமபு என்றுரைப்பார், செயப்படுபொருள் ஈணடுக கூறுராயினர். வருந்தினரென மேலவந்தமை யின் என்க.

**ஒப்புமைப்பகுதி :**

"பொன்னேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த
பல்நூல் மாலைப் பனைபடு கலிமாப்
பூண்மணி கறங்க ஏறி நாண்அட்டு
அழிபடர் உண்ணோய் வழிவழி சிறப்ப" —குறுந். 173.

1133. நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல். (௩)

நாணேயன்றி நல்லாண்மையும் உடைமையின்
முடியாது என்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நாணொடு நல்லாண்மை பண்டு உடையேன் - நாணும் மிக்க ஆண்தகைமையும் யான் பண்டு உடையேன்; காமுற்றார் ஏறும் மடல் இன்று உடையேன் - அவை காமத்தால நீங்குதலான், அககாமமிககார் ஏறும் மடலினை இன்று உடையேன்.

நாண் இழிவாயின செய்தற்கண் விலக்குவது. ஆண்மை ஒன்றற்கும் தளராதுநிற்றல். அவை பண்டுள்ளன, இன்றுள்ளது இதுவேயாகலிற் கடிதின்முடியும் என்பதாம்.

மணக்:— நாணமிகக நிலைமையும் சிறந்த ஆண்மையும் யான் பண்டுடையேன்; காமமிக்கார் ஏறும் மடலினை இன்றுடையேனானேன் எ - று.

பரிப்:— மேற்கூறிய சொறகேட்டு நீர் உலகத்துப் பன்மக்களோடு ஒப்பார் ஒருவரன்றே: நாணமும் ஆண்மையும் இயல்பாக உடையீர் ஆதலான் நுமககு இது கூடாதென்ற தோழிககு இவை இரண்டும் இப்பொழுது இல்லையென்று தலைமகன் கூறியது.

பரிதி:— நாணமும் நல்லாண்மையும் எமககுப் பண்டு துணையாயிருந்தன இன்று இப்பேதை தந்த ஆசையினாலே மடலேதுணையானது எ - று.

காளிங்:— நாணொடு நல்லாண்மைப்பாடு என்னும் இவை இரண்டுமாய் யான் பண்டு உடையேன்; அதனால் என்னை பயன்? அவை விடுத்து இன்று உடையேனாவேன்; யாதினை எனில் இவ்வுலகத்துக் காமுற்றார் ஏறும் மடலினை எ - று.

**மேற்கோள்பகுதி :**

இளம்:— அறிவும் அருளும் நாணமும் உடையார் மடலேறார் எனக்கூறிய தோழிக்குத் தலைமகன் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 99)

நச்:— 'மடன்மாகூறும் இடனுமாருண்டே' இடன் என்றதனால் தோழி பெரியோர்க்குத் தகாது என்றவழித் தலைவன் மறுத்துக் கூறுவனவும் பிறவும் வேறுபட வருவனவும் கொள்க எனக்கூறி இக்குறளை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 102)

1134. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை. (௪)

நாணும் நல்லாண்மையும் காமவெள்ளத்திற்குப் புணையாகலின் அதனால் அவை நீங்குவனவல்ல என்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— நாணொடு நல்லாண்மை என்னும் புணை - யான் தன்னைக் கடத்தற்குக் கொண்ட நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை, காமக் கடும்புனல் உய்க்குமே - என்னிற் பிரித்துக் காமமாகிய கடிய புனல் கொண்டுபோகாநின்றது.

அது செய்யமாட்டாத ஏனைப்புனலின் நீக்குதற்குக் கடும்புனல் என்றான். இப்புனற்கு அவை புணையாகா, அதனான் அவை நீங்கும் என்பதாம்.

பரிப்:— நாணமும் ஆண்மையும் ஆகிய புணைதனைக் காமமாகிய பெரும்புனல் ஈர்த்தது எ - று.

நினக்கு ஆண்மையும் நாணமும் இப்பொழுது யாண்டுப் போயின என்ற தோழிக்குத் தலைமகன் கூறியது.

காளிங்;— நாணும் ஆண்மைப்பாடு என்னும் பெருமிதமும் இவை இரண்டும் கொண்டு இக்காமம் என்னும் கடுவாற்றுப் பெருவெள்ளத்தை நீந்த முயன்றேனுக்கு அதனையும் தள்ளித் தான் மேற்பட்டுச் செல்லுமாயிருந்தது; இனி என்னை மற்று ஆவது என்று இங்ஙனம் தோழி கேட்பத் தலைமகன் சொல்லினான் என்பது பொருள் எ - று.

**மேற்கோள்பகுதி:**

பெருந்:— இவை புருவகத்திற்கு மேற்கோள். (வீர. 160.)

**ஒப்புமைப்பகுதி :**

“காணுநர் எள்ளக் கலங்கித் தலைவந்தென்
ஆண் எழில் முற்றி உடைத்து உள் அழித்தரு
மாணிழை மாதராள் ஏஎர்எனக் காமனது
ஆணையால் வந்தபடை.” —கலி. 139 : 20 - 24.

**முதுமொழிவெண்பாக்கள் :**

“கோளொடுநா ணீத்தகலி கைக்கயா நதான் கோமகவான்
மூளுறுகா மத்தான் முருகேசா - வாளுறுமக்.” —முருகேசர். 114.

கீசகன்பாஞ் சாலியின்மேல் கேவலமாய் கொண்டுயிர்தோற்
றேசுதலை யுற்றான் இரங்கேசா - ஆசைஎனும்.” —இரங். 114.

1135. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர். (௫)

இவவாற்றாமையும் மடலும் நமக்கு எவ்வாறுவந்தன என்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— மாலை உழக்கும் துயர் மடலொடு - மாலைப்பொழுதின் கண் அனுபவிக்கும் துயரினையும அதற்கு மருந்தாய மடலினையும் முன் அறியேன், தொடலைக் குறுந்தொடி தந்தாள் - இதுபொழுது எனக்கு மாலைபோலத் தொடர்ந்த சிறுவளையினை உடையாள் தந்தாள்.

காமம் எனைப்பொழுதுகளினும உளதேனும் மாலைக்கண் மலர்தல் உடைமையின் மாலையுழககும்துயர் என்றும், மடலும் அதுபற்றி வந்த தாகலின் அவ்விழிவும அவளால் தரப்பட்டது என்றும், அவள்தான் நீ கூறியதே கூறும இளமையள் என்பது தோனறத் தொடலைக் குறுந்தொடி என்றும் கூறினான். அப் பெயர் உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. இவை அவள் தந்தனவாகலின் நின்னால் நீங்கும் என்பது கருத்து.

மணக்:— மாலைபோலச் செய்யப்பட்ட சிறுவளையினையுடையாள் மடலோடேகூட மாலைக்காலத்து உறுந்துயரினைத் தநதாள் எ - று.

தொடலை யென்பதற்குச் சேர்ந்தவளை யெனினும் அமையும். குறுந்தொடி - பிளளைப்பணி. இவை ஏழும் தலைமகன் கூற்று.

பரிப்:— இதனானே இளையள் என்பது சொன்னான். தலைமகன் ஆற்றாமைகண்டு நின்னால் காதலிக்கப்பட்டாள் இவ்வாயத்துள் யாவள் என்ற தோழிக்கு இத்தன்மையாள் என்று தலைமகன் கூறியது, வளையுடையார் பலருங் கூடநிற்றலின் மாலைபோலச் செய்த வளையினை யுடையாள் என்று விசேடித்துக் கூறப்பட்டது. இவை எட்டும் தலைமகன் கூற்று.

பரிதி:— விளையாடலாகிய பேதை தந்தாள் மடலும் மா துயரமும் எ - று.

காளிங்:— மாலையும் சிறுதொடியும் உடைய இம்மாதராள் எமக்குத் தந்தாளே ; இனி அஃது யாதோ எனின் மடலோடுகூட இற்றை மாலைப்பொழுதின்கண் யாம் உழப்பதோர் துயரினை எ - று.

மேற்கோள்பகுதி :

இளம்.— தலைவன் கூற்றில் பரிவுற்று மெலியினும் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 100.)

பெருந்:— இது நாணுத்துறவுரைத்தல் என்னும் அதிகாரத்தது; ஆயினும் அவ்வதிகாரததுகசூ உரித்தல்லாத பொருளை உணர்த்தி அவ் அதிகாரச சொல்லையும் விளககுதலால் நுவலாச்சொல் ஆயிற்று. இதனை நுவலாநுவற்சி என்றலும் அமையும்.' (வீர. 154.)

நம்பி:— பாங்கியை இரந்து குறைபெறாத வருந்தியகிழவோன் மடலேற்றினைத் தன்மேல்வைத்துச் சாற்றலுக்கு மேற்கோள். (சூ. 145.)

ஒப்புமைப்பகுதி :

c "படருமபனையீன்ற மாவும் சுடரிழை
நல்கியாள் நல்கியவை."

—கலி. 138 : 12 - 13.

1136. மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண். (சு)

மடலூரும்பொழுது இற்றைக்கும் கழிந்ததென்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— பேதைச்கு என்கண் படல் ஒல்லா - நின் பேதை காரணமாக என்கண்கள் ஒருகாலும் துயிறலைப் பொருந்தா; யாமத்தும் மன்ற மடலூர்தல் உள்ளுவேன் - அதனால் எல்லாரும துயிலும் இடையாமத்தும் யான் இருந்து மடலூர்தலையே கருதாநிற்பேன்.

பேதை என்பது பருவம்பற்றி அன்று; மடமைபற்றி. இனிக் குறை முடிப்பது நாளையென வேண்டா என்பதாம்.

மணக்:— பேதைபொருட்டு என்கண் உறங்குதலை இசையாது; ஆதலானே, மடலூர்தலை ஒருதலையாக யாமத்தினும் நினைப்பேன் எ - று.

இது மடலேறுவது நாளையன்றே; இராவுறக்கத்திலே மறந்து விடுகின்றீர் என்ற தோழிக்கு, என் கண் உறங்காது; ஆதலான், மறவேன் என்று தலைமகன் கூறியது.

பரிதி:— மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் என்னை மயல் செய்து கூடாமல்போன பேதைககு என்கண் எ - று.

காளிங்:— இன்று யான் மடலூர்தலைச் சென்ற நள்ளிருள் யாமத்தும் கூடக் கருதுவேன் ; மற்று என்னை காரணம் எனின் என்னுயிராகிய அப்பேதை பொருட்டுக கழிந்த யாமம் எல்லாம் என் கண் படல் ஒல்லா ஆகலான் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— பேதைக்..................ணமாக என்க. குகர உருபு பொருட்டுப் பொருளாயது. பேதை என்பது பருவம்பற்றியன்று மடமை பற்றி என்க.

1137. கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். (எ)

பேதைக் கென்கண் படலொல்லா என்பதுபற்றி அறிவிலராய மகளிரினும் அஃதுடையராய ஆடவரன்றே ஆற்றற்பாலர் என்றாட்குச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப் பெண்ணின் - கடல்போலக் கரையற்ற காமநோயினை அனுபவித்தும் மடலூர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண்பிறப்புப்போல; பெருந் தக்கது இல் - மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்து இல்லை.

பிறப்புவிசேடத்தால் அவ்வடக்கம் எனக்கு இல்லையாகாநின்றது, நீ அஃது அறிகின்றிலை என்பதாம். இத்துணையுந் தலைமகன் கூற்று, மேல் தலைமகள் கூற்று.

மணக்:— கடலையொத்த காமநோயாலே வருந்தியும், மடலேற நினையாத பெண்பிறப்புப்போல மேம்பட்டது இல்லை எ - று.

இது நும்மாற் காதலிக்கப்பட்டாள்தனக்கும் இவ்வருத்தம் ஒக்கும்; பெண்டிர்க்கு *இப்பெண்மையான் மடலேறாததே குறையென்று தலைமகன் ஆற்றாமை நீங்குதற்பொருட்டுத் தோழி கூறியது.

பரிதி:— கடலொத்த காமசமுத்திரத்தில் வீழ்ந்து மடல் என்னும் கப்பல்கொண்டு ஏறினும் ஏறவொண்ணாது; ஆதலால் ஆசைக்கடல்போலக் கடனும பெருமையும் இல்லை எ - று.

காளிங்:— கடல் போலும் காமத்தை உழந்தேயும் பின்னும் பெண்டிர் மடலேறல் பெரிதும இன்றே; அதனால் அங்ஙனம் இம்மடல் ஏற்றநதராப் பெண்மை பெருந்தகுதி உடையது; பிறிது ஒன்றும் இல்லை எ - று.

இனி யான் மடல் ஏறல் திண்ணிது என்றான்; இவள் விலக்குதல் காரணமாக.

---

* 'இயல்பு இன்மையான்' என்பர் பரிப்.

இனித் தலைமகன் இங்ஙனம் மடலேற்று உணர்த்திய பின்னரே தலைமகளை நீ புறத்துப் போய் விளையாடுதல பொருள அன்று; இனிப் பிறர் மகட்பேசற் பருவம வந்ததுபோலும என்றுயாய் இறசெறிககவும் கூடும் என்று இவ்வலரினைத் தோழிககு எடுத்துரைத்தான இவளிற் றீரும இதுவெனக் கருதி என்பதனுல் மற்று இதன் பினனரே அதனை அறிவிக கின்றது மேலை அதிகாரம.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பெண்............பெருந்தக்கது. மிகக தகுதியையுடைய பிறப்பு

மேற்கோள்பகுதி:

இளம்:— இதனுள் 'கடலன்ன காமம் உழந்தும்' என்றதனன் வேட்கைமிகக நிலையினையும், 'மடலேருப் பெண' என்றமையான் நாணும் மடனும் நீங்கா நிலையினையும் கூறுதல காண்க. (தொல். பொருள். 107.)

பெருந்:— 'இஃது உவமையான கடலுக்கும் உவமிக்கப்பட்ட பொருளாயுள்ள காமத்திற்கும கரையேற ஒண்ணுமை என்னும் பண்பு பொதுவாய் நிற்றலால் உவமை என்னும அலங்காரமாயிற்று.' (வீர. 152)

சொக்கப்:— 'வருந்தாரல்லர் மாலுழந்தே': உழத்தல் - அநுப வித்தல். 'கடலன்ன காமம உழந்தும' என்னும குறளானும உணர்க. (தஞ்சை. 53)

'வெள்ளம் பரந்தன்ன வேட்கை.' வெள்ளம் - கடல். 'கடலன்ன காமம்' என்றூற்போல. (ஷை 404.)

ஓப்புமைப்பகுதி:

" கணணும் வாளற்ற கைவளை சோருமால்
புண்ணும போன்று புமைபுமென் நெஞ்சரோ
எண்ணில் காமம எரிப்பினும மேல்செலாப்
பெணணின் மிக்கது பெண்ணலது இல்லையே." —சீவக. 998.

" கண்ணிலாம் கவினொளிக் காளை மார்திறத்து
உண்ணிலா எழுதரு காம வூழ்எரி
வெண்ணிலாச் சுடர்சுட விரிந்து நாண்விடாப்
பெண்ணிலாம் பிறிதுயிர் பெரிய தில்லையே." —சூளா. குமாரகாலச். 14.

முதுமொழிவெண்பாக்கள் :

"நாகரா சன்புகழும நன்ளுக ரீகவர
சீகருணு கோவைத் தினகரா - ஓகோ." —தினகர. 118.

"காமம் மிகஉழந்தும தூதைக் கடிநதுவிட்டாள்
சோம நுதற்பாவை சோமேசா - வாமே." —சோமேசர். 114.

"சேர விரைந்துவந்தும் சீதை இராமனுளம்
தேர விருந்தாள் சிவசிவா - பாரில்." —சிவசிவ. 114.

1138. *நிறைஅரியர் மன்னளியர் என்னுது காமம்
மறைஇறந்து மன்று படும். (அ)

காப்புச்சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— நிறை அரியர் (என்னுது)- இவர் நிறையால் நாம் மீதூர் தற்கு அரியரெனறு அஞ்சுதல் செய்யாது, மன் அளியர் என்னுது - மிகவும் அளிககத்தககாரென்று இரங்குதல் செய்யாது, காமம் மறை இறந்து மனறுபடும் - மகளிர்காமமும அவர்மறைத்தலைக கடந்து மன்றின்கண்ணே வெளிப்படுவதாயிருந்தது.

என்னுது என்பது முன்னுங்கூட்டி மகளிர் என்பது வருவிக்கப் பட்டது. எச்ச உமமை விகாரத்தால் தொக்கது மன்று என்பது தந்தை தன்னையரை நோககி. உலகத்துப் பெண்பாலார் காமத்தியல்பு கூறுவாள் போன்று, தன்காமம் பெருகியவாறும் இனி அறத்தொடுநிற்றல் வேண்டும் என்பதும குறிப்பால் கூறியவாருயிற்று.

மணக்:— நிறையிலர்; மிக அளிககத்தக்கார் என்னுது என் காமமானது மறைத்தலைக கடத்தலுமனறி மனறின்கண் படாநின்றது எ - று.

இஃது அம்பலும் அலரும் ஆகா என்று தோழி பகற்குறி மறுத்தது.

* 'நிறையரிது' காளிங் - பாடம்.

பரிதி:— செங்கோல் அறியாது அரசின் கொடுமை அறியாது வங்கிஷம் அறியாது உயிர்பாராது இவள்கொடுத்த மடல் மன்று படும் எ - று.

காளிங்:— அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடி என்னும் நாற் பெருங் குணத்துள்ளும் நிறை எனகின்றது ஒருவன் தான் தன்னைச் சமைத்தக கொளளும் வன்மையுடைமை யாதலால மற்று அதன் இறப் பானது சாலப் பெறுதற்கு அரிதாயுள்ளதொன்று; மிகவும அதனல் அளிக்கத் தக்கார்; இவரை நாம் எளிமைப்படுத்தலாகாது என்னுது என் வயிற் காமமானது என்னையும் கொண்டு அங்குப்பட்ட களவியலைக் கடந்து சென்று யாவரும் அறிய மன்றத்து வெளிப்படும ஆயின் யான் செயற்பாலது என்னை ? எனத் தோழிகுத் தலைமகன் சொல்லியது எ-று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— காமம்: எழுவாய். மறை - மறைத்தல். அஞ்சுதல் செய்யாது என்று உரைத்து என்னு என்பதனை முன்னுங்கூட்டி, மகளிர் வருவிக்கப்பட்டது என்றூர். காமம் எச்சவும்மை விகாரத்தால தொக்கது. அளியர் - அளிககத்தககார். முருகாற்றுப்படை 'அளியன்றுனே' (வரி - 284) என்பதும் அது.

## ஒப்புமைப்பகுதி :

"மறையல ராகி மன்றத் தஃதே." —குறுந். 97.

1139. *அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகின் மறுகும் மருண்டு. (௯)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— எல்லாரும் அறிகிலார் என்று - யான் முன் அடங்கி நிற்றலான் எல்லாரும் என்னை அறிதலிலர் இனி அவ்வாறு நில்லாது யானே வெளிப்பட்டு அறிவிப்பல என்றுகருதி, எனகாமம் மறுகில் மருண்டு மறுகும் - என்காமம் இவ்வூர்மறுகின்கண்ணே மயங்கிச் சுழலாநின்றது.

மயங்குதல் அம்பலாதல. மறுகுதல் அலராதல். அம்பலும் அலருமாயிற்று, இனி அறத்தொடு நிற்றல்வேண்டும் என்பதாம். அறிவிலார் என்பதூஉம பாடம்.

---

*'அறிவில்லார்' காளிங் - பாடம்.

மணக்:— என்னை யொழிந்த எல்லாரும் அறிவிலர் என்றே சொல்லி, என் காமயானது தலைமயங்கி மறுகின்கண்ணே வெளிப்படச் சுழலா நின்றது எ - று.

சுழல்தல் - இவ்வாறு சொல்லித் திரிதல்.

பரிப்:— நீர் அறிவுடையீர் ஆகலான் மடலேறுதல் கூடாது; இஃது அறிவுடையார் செயலின்மையான் என்ற தோழிக்கு என்னைப்போல மடலேறக் கருதாதாரே அறிவிலாதார்; யான் அறிவுடையேன் என்று தலைமகன் கூறியது.

பரிதி:— எல்லோரும் அறிவிலாதார் என் காமத்துயரை அறியாது போனார்கள் என்று வீதிதோறும் மறுகும் என்மயல் எ - று.

காளிங்:— இங்கு யான் உறு துயரினைக் கண்டும் உணர்ந்தும் இனி மற்று இது தீர்ப்போம் யாம் என்னும் அறிவில்லாதாராய் இருந்தார் இத் தலைககண் எல்லாரும் என்று கொண்டே இங்கு யானுற்ற காம நோயானது ஒரு மன்றத்து உரைத்தலுமன்றிப் பின்னும் மறுகுதொறும் தடுமாறும் போலும் மாலுற்று எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— அறி - முதனிலைத் தொழிற்பெயர். காமம் - எழுவாய்.

**மேற்கோள்பகுதி :**

இளம்:— அறிவும் அருளும் நாணமும் உடையார் மடலேறார் என்ற தோழிக்குத் தலைமகன் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 99.)

1140. யாம்கண்ணின் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு. (கo)

செவிலிக்கு அறத்தொடு நின்றுவைத்து யான் நிற்குமாறு என்னை என்று நகையாடிய தோழியொடு புலந்து தன்னுள்ளே சொலலியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— யாம் கண்ணிற்காண அறிவில்லார் நகுப - யாம் கேட்கு மாறுமன்றிக் கண்ணால் காணுமாறு எம்மை அறிவிலார் நகாநின்றார்; யாம் பட்ட தாம் படாவாறு - அவர் அங்ஙனம் செய்கின்றது யாம் உற்ற நோய்கள் தாம் உறாமையான்.

கண்ணின் என்றது முன்கண்டறியாமை உணரநின்றது. அறத்தொடு நின்றமை அறியாது வரைவு மாட்சிமைப்படுகின்றிலள் எனப் புலககின்றுளாகலின், ஏதிலாளாக்கிக கூறினள். இது, நகாநின்று சேட்படுக்குந்தோழிகருத் தலைமகன் கூறியதாங்கால, அதிகாரத்திற்கு ஏலாமை அறிக.

பரிப்:— யாம் கண்ணால் காணும்வகை எதிரே நின்று அறிவில்லாதார் நகாநின்றார்; யான் பட்ட துன்பம தாம் படாமையால் எ - று.

யாமத்து மறவேன் என்ற தலைமகனை நோக்கி நகை செய்த தோழிக்கு, எமககு உண்டாகிய நோய் தமககும் உண்டாயினா ரல்லரே என்று தலைமகன் வெகுண்டு சொல்லியது.

பரிதி:— யாம் கொண்டகாதலைக் கண்டு சிரிப்பார்; யாம் பட்ட பாடு தாம்படாமையால் எ - று.

காளிங்:— இவ்விடர் உற்றோம் நாமாகவே இகழ்ச்சி எம் கருத்துள் அறிதலே அன்றிக கண்ணினானும் காணுமாறு நகுவர் இவ்வறிவில்லாதார்; இதற்குககாரணம யாதெனஅறிந்தேன்; ஈங்கு யாம் பட்ட இடர் அனைத்தும தாம்படாமையால் தமக்குத்தெரியாது அன்றே ஆதலால் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

**நுண்:— தாம்படாவாறு - தாம் கூறாமையால் என்றவாறு.**

## குறள் வைப்புமுறை.

பரிமே:— காமமுழந்து, நோனா, நாணொடு, காமக்கடும், தொடலை, மடலூர்தல், கடலன்ன, நிறையரியர், அறிகிலார், யாமகணணில்.

மணக்:— காமமுழந்து, நோனா, நாணொடு, அறிகிலார், மடலூர்தல் தொடலை, கடலன்ன, நிறையரியர், காமக்கடும், யாம்கண்ணில்.

பரிதி:— காமமுழந்து, மடலூர்தல், தொடலை, யாம்கண்ணில், நாணொடு, கடலன்ன, நிறையரியர், அறிகிலார், காமக்கடும, நோனா.

காளிங்:— காமமுழந்து, நிறையரியர், அறிகிலார், நோனா, மடலூர்தல், நாணொடு, யாம்கண்ணில், காமக்கடும், தொடலை, கடலன்ன.

# 115. அலரறிவுறுத்தல்.

தொகுப்புரை :

[ஊரவர் தூற்றும் பழியாலேயே என் உயிர் நிலைத்திருக்கிறது. இந்த இரகசியத்தைப் பலர் அறியார்கள். அது என்பாக்கியம். மலர்போலும் கண்ணையுடைய தலைவி எளிமையாக எய்துதற்கரியள் என்று எண்ணாமல் இவ்வூர் அலர் தூற்றுகிறது. ஊரறிந்த அலர் எனக்கு வரவேண்டியது ஒன்றுதான். அதனால் அவளை இப்போது கூடாமலிருந்தாலும் கூடியதுபோன்ற இன்பம் உண்டாகின்றது. இவ்வூர் தூற்றும் அலரால் என் காமம் மலர்ந்திருக்கிறது. இல்லையாயின் சுருங்கிவிடும். குடிகாரனுக்கு அறிவு மயங்க மயங்கக் குடித்தல் இனிதாமாறுபோல அலர் எழ எழக் காமம் இனிக்கின்றது. நான் காதலரைக் கண்டது ஒருநாளே! ஆனால் அலரோ நிறைமதியைப் பாம்பு விழுங்கினாற்போல உலகெங்கும் பரவிவிட்டது ஊரார்தூற்றும் அலரே எருவாக, தாயின் சினந்துரையே நீராக இக்காமப்பயிர் ஓங்கி வளர்கின்றது. அயலார் அலரால் எமது காதலை அவிக்கக்கருதுதல் நெய்யால் நெருப்பை அவிப்பதுபோலும். என்னை அஞ்சற்க என்றவரே, பலரும் எம்மைக்கண்டு நாணப் பிரிந்தபின், பலர் பேசும் அலருக்கு அஞ்சலாமா? நாம நெடுநாளாக எதிர்பார்த்தவண்ணமே இவ்வூர் பழிதூற்றுகின்றது. ஆதலால் நம் காதலரைக்கண்டு இதனைக்கூறி உடனழைத்துப்போகுக என வேண்டின் அவரும் அங்ஙனமே செய்வர். ]

அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது களவொழுக்கம்வேண்டிய தலைமகன் பிறர் கூறுகின்ற அலர் தனக்கு ஆகின்றவாற்றைத் தோழிக்கு அறிவுறுத்தலும், வரைவாக உடன்போக்காக ஒன்றுவேண்டிய தலைமகளும் தோழியும் அவ்வலரை அவன்றனக்கு அறிவுறுத்தலுமாம். இது, நாணுத்துறந்தவழி நிகழ்வதாகலான், நாணுத்துறவுரைத்தலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *அலரறிவுறுத்தலாவது இவ்வாறு ஒழுகும் ஒழுக்கத்தினால் வந்த அலரைத் தலைமகள் தோழிக்கு அறிவித்தலும் தோழி தலைமகட்கும் தலைமகற்கும் அறிவித்தலுமாம். நாணுத்துறவுரைத்து இரவுக்குறி ஒழுகாநின்ற தலைமகனுக்குத் தோழி அம்பலும் அலரும் ஆகாநின்றன என்று அறிவித்தலான், அதன்பின் இது கூறப்பட்டது.*

**1141.** அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால். (க)

அல்லகுறிப்பட்ட பிற்றைஞான்று வந்த தலைமகனைத் தோழி
அலர்கூறி வரைவுகடாயவழி அவன் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— அலர் எழ ஆருயிர் நிற்கும் - மடந்தையொடு எமமிடை நட்பு ஊரின்கண் அலராயெழுதலான் அவளைப்பெறாது வருந்தும எனது அரிய உயிர் பெற்றதுபோன்று நிலைபெறும, அதனைப் பாக்கியத்தால் பலர் அறியார் - அந்நிலைபேற்றைத் தெய்வத்தால யானே அறிவதல்லது கூறுகின்ற பலரும அறியார்.

அல்லகுறிப்பட்டுத் தலைமகளை எய்தப்பெறாத வருத்தமெல்லாம் தோன்ற அரியஉயிர் என்றும், அங்ஙனம் அரியாளை எளியளாக்கி எடுக்கின்றமையின், அஃது அவ் ஆருயிர்க்குப் பற்றுககோடாக நின்றது என்பான் அலரெழ ஆருயிர் நிற்கும என்றும, பற்றுககோடாதலை அவ்வேதிலார் அறியின் தூற்றாதொழிவர், ஒழியவே ஆருயிர் போம் ஆகலான் அவரறியா தொழிகின்றது தெய்வத்தான் என்றும் கூறினான். முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

மணக்:— நமது புணர்ச்சியால் வந்த அலர் எழுதலினானே அவளது ஆருயிர்நிற்கும்; அவ்வாறு உயிர்நிற்றலை எங்கள்புண்ணியத்தாலே பலர் அறியாராயினர்; அறிவராயின, எமககு ஏதிலராய் அலர்தூற்றுவார் இவள் இறந்துபடவேண்டும் என்று தூற்றார் எ - று.

பரிப்:— நொதுமலர் வரைய வந்துழி இறந்துபடுவாளாயினள்; ஆயிடை இவ்வலர் எழுதலினானே இனிப் பிறர்க்குக் கொடார் என்று அவள் உயிர் நீங்காதாயிற்று என நொதுமலர் வரையவந்தமை தோழி தலைமகற்குக் கூறியது.

பரிதி:— அலர் எழ ஆருயிர் நிற்கும் தயவாகிய இந்தப் பாககியத்தை ஒருவரும் அறியார்கள் எ - று.

காளிங்:— இவ்வகை அலர் தோன்றவே என் ஆருயிர் நிற்கும்; அங்ஙனம் ஆதலைப் பலரும் அறியாதே அலரினைக கூறுகின்றார் என் பாககியத்தால் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பாக்கியத்...........பலரும் முற்றும்மை விகாரம்.

ஒப்புமைப்பகுதி :

" வினைக்கூறு செய்தன் திருவடித் தாமரை மேவுறஎன்
றனைக்கூவு மையர் திருவெங்கை வாணர் தடஞ்சிலம்பின்
முனைக்கூ ரயில்விழி யாயின்று காறு முதல்வருடன்
எனைக்கூ றிடும்அல ரேதுணை யாக இருந்தனனே."
—திருவெங்-கோவை. 372.

1142. மலரன்ன கண்ணாள் அருமை அறியா(து)
அலரெமக் கீந்ததிவ் வூர். (உ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது - மலர் போலும் கண்ணை உடையாளது எய்தற்கருமை அறியாது, இவ்வூர் அலர் எமக்கு ஈந்தது - இவ்வூர் அவளை எளியளாக்கி அவளோடு அலர்கூறலை எமக்கு உபகரித்தது.

அருமை அல்லகுறிப்பாட்டானும் இடையீடுகளானும் ஆயது. ஈந்தது என்றான், தனக்குப் பற்றுக்கோடாகலின், அலர் கூறுவாரை அவர்செய்த உதவிபற்றி இவ்வூர் என்றான்.

மணக்:— பூவொத்த கண்ணாளது இற்பிறப்பின் அருமையை அறியாதே, இவ்வூரவர் எங்கட்கு அலரைத் தந்தார் எ - று.

எளியாரைச் சொல்லுமாறுபோலச் சொல்லாநின்றாரென்றவாறு.

பரிப்:— தமது புணர்ச்சி அலராயிற்றென்று தோழி கூறியது.

பரிதி:— செங்கழுநீர் மலர் போலும் கண்ணாளின் அருமை அறியாமல் அலரை ஈந்தது இந்த ஊர் எ - று.

காளிங்:— நெஞ்சே! மலரை ஒத்த கண்ணை உடையாளாகிய நங்காத்லியது அருமை சிறிதும் அறியாதே அலருரையை மிகச் சொல்லித் திரிகின்றது இவ்வூர் எ - று.

**மேற்கோள்பகுதி :**

பெருந்:— வடிவுவமைக்கு மேற்கோள். (வீர. 158.)

1143. உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து. (ந)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— ஊர் அறிந்த கௌவை உறாதோ - எங்கட்குக் கூட்ட முண்மை இவ்வூர் அறிதலான் விளைந்த அலர் எனக்கு உறுவதொன் றன்றோ, அதனைப் பெறாது பெற்றன்ன நீர்த்து - அதுகேட்ட என்மனம் அக்கூட்டத்தைப் பெறாதிருந்தே பெற்றாற்போலும் நீர்மையையுடைத்து ஆகலான்.

பெற்றன்ன நீர்மை: பெற்றவழி உளதாம் இன்பம்போலும் இன்பமுடைமை. நீர்த்து என்பதற்கேற்ற மனம் என்னும் வினைமுதல் வருவிக்கப்பட்டது.

மணக்:— ஊரறிந்த அலர் வருவதொன்றன்றோ? அவ்வலரைத் தீதாகக் கொள்ளாது, பெறாததொன்றைப் பெற்றாலொத்த நீர்மைத்தாகக் கொள்ளல்வேண்டும் எ - று.

இஃது அலரறிவுறுத்த தோழிக்கு அவ்வலரினான் என்றும் தமராவர் உடன்படுவார் என்று தலைமகன் கூறியது.

பரிதி:— ஊரெங்கும் அறிந்த கவ்வை உண்டாகில் காம இன் பத்தைப் பெறாமல் பெற்றதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— நெஞ்சே! நமக்குச் சால உறுவது ஒன்று அன்றோ ஊர் அறிந்து உரைத்த கவ்வையானது; அதனை அவர் அறியாது நம்மை நிறையழித்தற்கு முன்னம் பெறாதது ஓர் உபாயம பெற்றாலொத்த நீர்மையை உடைத்து இவ்வூர் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— நீர்த்து என்பதற்கு ஏற்ற மனம் என்னும் வினைமுதல் வருவித்தது.

மேற்கோள்பகுதி :

இளம்:— ஊரறிந்த கௌவை நன்றே காண்; அதனைக் குற்றமாகக் கொள்ளாது பெறாது பெற்ற சீர்மைத்தாகக் கொள் என்றமையானும் தமர் வரைவுடன்படுவர் எனக் கூறியவாறும். இது மெய்யாகக் கொண்டு கூறியது. (தொல். பொருள் 105.)

1144. கவ்வையால் [1]கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து. (ச)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— காமம் கவ்வையால் கவ்விது - என் காமம் இவ்வூர் எடுக்கின்ற அலரானே அலர்தலையுடைத்தாயிற்று, அது இன்றேல் தன்மை இழந்து தவ் என்னும் - அவ்வலர் இல்லையாயின், தன் இயல்பு இழந்து சுருங்கும்.

அலர்தல்: மேன்மேன் மிகுதல். செவ்வையுடையதனைச் செவ்விது என்றாற்போலக் கவ்வையுடையதனைக் கவ்விது என்றார். இயல்பு இன்பம் பயத்தல். தவ்வென்னும் என்பது குறிப்புமொழி; [2]"நால்கால் யாத்த மாலை வெண்குடை, தவ்வென் றசைஇத் தாழ்துளி மறைப்ப" என்புழியும் அது.

மணக்.— அலரினானே அலர்தலை உடைத்துக் காமம்; அவ் அலர் இல்லையாயின், தனது தன்மை யிழந்து பொலிவழியும் எ - று.

செவ்வை யுடையதனைச் செவ்விது என்றாற்போல, கவ்வை யுடையதனைக் கவ்விது என்றார்.

பரிப்:— அலர் அறிவுறுத்த தோழிக்கு இவன் கூறுகின்றது புனைந்துரையாகும் என்று நினைத்துப் பின்னும் களவொழுக்கம் வேண்டித் தலைமகன் கூறியது.

பரிதி:— கவ்வை என்னும் வித்தினாலே என் காமம் உறுதி பெற்றது; இல்லையாயின் உறுதி பெறாது எ - று.

---

[1] 'கவ்வித்து' காளிங் - பாடம். [2] நெடுநல். 184, 185.

காளிங்:— நெஞ்சே! பிறர்கூறும் கவ்வையால் கவ்வுண்டது யாம் வேண்டும் காமம். அதனால் கவ்வை இன்றாயின் சாலத் தவ்வுப்படும் தன் தன்மை இழந்து எ - று.

இதிற் கவ்வித்து என்பது கவ்வியது என்றது. தவ்வென்னும் என்பது தவறுபடும் என்றது.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— கவ்விது - அலர்தலையுடையது: செவ்வையுடையது செவ்விது என்பதுபோலக் கவ்வையுடையது கவ்விது என்க. தவ்வென்னும்- சுருங்கும், "என்னுமரபின எனக்கூறுதலும்" (தொல். சொல். 422)என்ற அச்சூத்திரத்துட் குறிப்புரையாகும் என்பதனற் குறிப்புமொழி என்றார் உரையாசிரியர் இளம்பூரணரும் இலைபச்சென்றது எனக் காட்டினர். "பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும்" (709) என்பதும் அது.

1145. களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது. (ரு)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— களித்தொறும் கள் உண்டல் வேட்டற்று - கள்ளுண்பார்க்குக் களிக்குந்தோறும் கள்ளுண்டல் இனிதாமாறுபோல, காமம் வெளிப்படுந்தோறும் இனிது - எனக்குக் காமம் அலராந்தோறும் இனிதாகாநின்றது.

வேட்கப்பட்டற்றால் என்பது வேட்டற்றால் என நின்றது. வேட்கை மிகுதியால் அலரும் இன்பஞ்செய்யாநின்றது என்பதாம்.

மணக்:— மயங்குந்தோறும் கள்ளுண்டலை விரும்பினாற்போல, காமமும் அலராகுந்தோறும் இனிதாகும் எ - று.

இஃது அலரறிவுறுத்த தோழியைநோக்கி, நமக்குத் துன்பமாயிற்றே இவ்வலர் என்று வினவிய தலைமகற்குத் தோழி கூறியது.

பரிப்:— வெளிப்படுந்தோறும் இனிது என்றது விரைந்து வெளிப்படுதல் குறிப்பு.

பரிதி:— கள் உண்டால் களிக்கும்; நினைத்தால் களியாது; காமமோ நினைக்குந்தோறும் களிக்கும் எ - று.

காளிங்:— உலகத்துக் கள்ளுண்பார்க்குப் பின்னும் பின்னும் அதனை உண்டு மகிழ்தலே வேண்டியிருக்கின்ற அத்தன்மைத்தாக யாம் உற்ற காமமும, நெஞ்சே! பிறர் மாட்டு வெளிப்படுந்தோறும் மிக இனிது எனக்கு; என்ன வியப்போ எ - று.

## மேற்கோள்பகுதி :

இளம்:— தலைவிக்குரிய கிளவிகளுள் நாணு நெஞ்சு அலைப்ப விடுத்தற்கண்ணும் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 105)

நச்:— இருவகைக் குறியிடத்தும் தலைவியை எதிர்ப்படும் ஞான்றும் எதிர்ப்பட்ட ஞான்றும் எதிர்ப்படா நின்ற ஞான்றும் பலவாயவழித் தலைவன் வருந்திய உள்ளத்தனாய் மெலிந்து கூறுவன் என்பதற்கு மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 103.)

## முதுமொழிவெண்பாக்கள் :

" இந்துநுதல் மாயைவிர கெண்ணி விலாசிசொலச்
சிந்தைமகிழ் கொண்டாள் சிவசிவா - புந்தி." —சிவசிவ. 115.

" நீந்துகடன் மூழ்கி நெடுநாட் கௌதமனார்
ஏந்துகலி தோய்ந்தார் இமங்கேசா - மாந்தி." —இமங். 115

1146. கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று. (சு)

இடையீடுகளானும் அல்லகுறியானும் தலைமகனை எய்தப்பெறாத தலைமகள் அவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ வரைவுகடாயது.

## உரைப்பகுதி:

பரிமே:— கண்டது ஒருநாள் - யான் காதலரைக் கண்ணுறப் பெற்றது ஒருஞான்றே; அலர் திங்களைப் பாம்புகொண்டற்று - அதனுய அலர் அவ்வளவிற்றன்றித் திங்களைப் பாம்பு கொண்ட அலர்போன்று உலகெங்கும் பரந்தது.

காரியத்தைக் காரணமாக உபசரித்துப் பாம்புகொண்டற்று என்றாள். இருவழியும் மன்னும் உம்மையும் அசைநிலை. காட்சியின்றியும் அலர்பரககின்ற இவ்வொழுககம் இனி ஆகாது, வரைந்துகோடல்வேண்டும் என்பதாம்.

மணக்:— யான் கண்ணுற்றது ஒருநாள்; அக்காட்சி திங்களைப் பாம்புகொண்டாற்போல, எல்லாரானும அறியப்பட்டு அலராகாநின்றது எ - று.

பரிப்:— காப்புக் கைம்மிகப்பட்ட தலைமகள் வேறுபாடு கண்டு செவிலி முதலாயினர் உற்று நோககிய குறிப்பைத் தலைமகள் கொண்டு ஒருநாளைக்காட்சியே அலராகாநின்றதென்று தோழிக்குக் கூறியது.

பரிதி:— ஒருநாள் நாயகரிடத்தில் இன்பங்கண்டது; அது சந்திரனை இராகு தீண்டினதற்கு ஒக்கும் எ - று.

காளிங்:— யாம் எங்காதலியைக் கண்டு இன்புற்றதும் ஒரு நாளே: அதுகொண்டு மற்று எம்மைப் பிறர் உரைக்கின்ற அலரின் மிகுதியது எங்ஙனம் எனின் திங்களைப் பாம்பு கொண்டாற் போலப் பலரும் எடுத்துரைக்கின்ற அத்தன்மைத்து எ - று.

## மேற்கோள்பகுதி :

இளம்:— 'களவும் கற்பும் அலர்வரை வின்றே' என்பதில் களவின்கண் தோழி அலர் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 160.)

நச்:— ஷை (தொல். பொருள். 162.)

## முதுமொழிவெண்பாக்கள் :

" ஓர்நாள் அகலிகையை வேட்டின்றும் உம்பரிறை
சோராப் பழிபூண்டான் சோமேசா - ஆராயின்." —சோமேசர். 115.

" மேயருக்கு மாங்கதனை வெஃகியொரு நாள்முகுந்தை
மூயபழி பூண்டாள் முருகேசா - நேயமிகக்." —முருகேசர். 115.

" சுந்தரரைக் கண்டலர்கொய் தோகையர்சென் றுளொருநாள்
எந்தைகயி லைக்கவராய் இன்றளவும் - வந்ததே." —திருத். 92

1147. ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய். (எ)

வரைவுநீட ஆற்ருளாய தலைமகளைத் தலைமகன் சிறைப்புறத்தானுதலறிந்த தோழி ஊரவரலரும் அன்னைசொல்லும்நோக்கி ஆற்றல்வேண்டும் எனச் சொல்லெடுப்பியவழி அவள் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— இந்நோய் - இக்காமநோயாகிய பயிர், ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல் நீராக நீளும் - இவ்வூரின்மகளிர் எடுக்கின்ற அலர் எருவாக, அதுகேட்டு அன்னை வெகுண்டுசொல்லுகின்ற வெஞ்சொல் நீராக, வளராநின்றது.

ஊரவர் என்பது தொழிலான் ஆண் ஒழித்து நின்றது. ஏகதேச வுருவகம். சுருங்குதற்கு ஏதுவாவனதாமே விரிதற்கு ஏதுவாகாநின்றன என்பதாம். வரைவானுதல் பயன்.

மணக்:— ஊரார் எடுத்த அலர் எருவாக, அன்னை சொல்லும் சொற்கள் நீராக, இந்நோய் வளராநின்றது எ - று.

இஃது அலரின் ஆற்ருளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது. இவை இரண்டிற்கும் வரைவானுதல் பயன்.

பரிதி:— ஊரவர் ஏசுஞ்சொல் எருவாகவும் அன்னை வசைமொழி நீராகவும் நீளும் இந்நோய் எ - று.

காளிங்:— நெஞ்சே! நம்மைத் தான் எய்தப்பெருமையாலுள்ள வாறு அருமை அவள்தனக்கும் ஒக்கும் அன்றே. அதனுல் ஊரவர் உரைக்கும் கவ்வைதானே எருவாகத் தாய் சொல்லும் செறுத்துரையே நீராகக் கொண்டு நெடிது வளரும்போலும் இந் நோயானது இவள் திறத்தும் எ - று.

மேற்கோள்பகுதி :

இளம்:— 'அலரில தோன்றும் காமத்து மிகுதி' என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 161.)

தெய்வச்:— கவ்வை என்பது அலர்குறித்து நின்றதற்கு மேற்கோள். (தொல். சொல். 391.)

நச்:— ஷை (தொல். பொருள். 163.)

**ஒப்புமைப்பகுதி :**

" ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னைசொல் நீர்ப்படுத்து
ஈரநெல்வித்தி முளைத்த நெஞ்சப் பெருஞ்செய்யுள்
பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த
காரமர் மேனி நம்கண்ணன் தோழீ கடியனே." —திருவாய். 5 : 3 : 4.

**முதுமொழிவெண்பாக்கள்:**

" தாரார் கமலத் தடம்புயத்தி லின்றெனீ
சேரா திருக்கின் தினகரா - போரத." —தினகர. 119.

1148. நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல். (அ)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— கௌவையால் காமம் நுதுப்பேம் எனல் - ஏதிலார் எடுக்கின்ற அலரால் நாம் காமத்தை அவித்தும் என்று கருதுதல், நெய்யால் எரி நுதுப்பேம் என்றற்று - நெய்யால் எரியை அவித்தும் என்று கருதுதலோடு ஒக்கும்.

மூன்றன் உருபுகள் கருவிக்கண் வந்தன. வளர்தற்காரணமாய அலரால் அவித்தல் கூடாது என்பதாம்.

மணக்:— எரிகின்ற நெருப்பை நெய்யினாலே அவிப்போம் என்று நினைத்தாற்போலும்; அலரினானே காமத்தை அவிப்போமென்று நினைத்தல் எ - று.

இது தலைமகன் பின்னும் களவொழுக்கம் வேண்டினமைகண்டு தோழி கூறியது.

பரிதி:— நெய்யினால் எரி அவிப்போம் என்பதற்கு[*] ஒக்கும்; கவ்வையினாலே காமத்தை அவிப்போம் எனல் எ - று.

காளிங்:— பற்றி எரிகின்ற எரியினை நெய்யினைச் சொரிந்து மற்று இதனல் தணிக்கக் கடவேம் என்று கருதிய அத்தன்மைத்து: யாதெனில், யாம் உற்ற காம எரியினைச் சிலர் தமது அலர் உரையால் தணிப்பேம என நினைக்கின்றது எ - று.

இதில நுதத்தல் என்பது அழுக்குதல்; தணித்தல் என்றுமாம்.

மேற்கோள்பகுதி :

நச்:— இருவகைக் கைகோளினும் பிறந்த அலரால் தலைவற்கும் தலைவிகும காமத்திடத்து மிகுதிதோன்றும் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 163.)

1149. அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை. (கூ)

வரைவிடைவைத்துப் பிரிவின்கண் ஆற்றுளாய தலைமகள் அவன்வந்து
சிறைப்புறத்தானுதல் அறிந்து அலரஞ்சி ஆற்றல் வேண்டும் என்ற
தோழிக்குச் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— அஞ்சலோம்பு என்றார் பலர் நாண நீத்தக்கடை - தம்மை எதிர்ப்பட்டஞான்று நின்னிற்பிரியேன் அஞ்சலோமபு என்றவர் தாமே இன்று கண்டார் பலரும் நாணும்வகை நம்மைத் துறந்தபின்; அலர் நாண ஒல்வதோ - நாம் ஏதிலார் கூறும் அலருக்கு நாணக்கூடுமோ? கூடாது.

நாண என்னும் வினையெச்சம் ஒல்வது என்னும் தொழிற்பெயருள் ஒல்லுதற்றெழிலோடு முடிந்தது. கண்டார் நாணுநிலைமையமாய யாம் நாணுதல் யாண்டையது என்பதாம்.

மணக்:— அலராகும் என்று நாணுதல் இயல்வதோ? அஞ்சுதலைத் தவிர் என்று சொன்னவர் பலரும் நாணுமாறு நம்மை நீக்கின இடத்து எ - று.

பலர் என்றது தோழியும் செவிலியும் முதலாயினரை.

பரிப்:— தலைமகனைக் காணும்பொழுதில் காணாப் பொழுது பெரிது ஆதலால் தான் ஆற்றாளாகிய தலைமகளை நோக்கி நினது ஆற்றாமை அலராகின்றது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— அலர் ஏசும் நாணத்திற்கு நோவதோ நெஞ்சே அஞ்சாதே இரக்ஷிக்கிறோம் என்று நாயகர் துறந்தவிடத்து எ - று.

காளிங்:— நெஞ்சே! இனிப் பிறர்கூறும் அலர் உரைக்கு நாணத்தகுவது ஒன்றோ? யாம் தம்மொடு கலந்த ஞான்று நீ அஞ்ச வேண்டா; யாம் கடிதாக வரைவோம் என்று சொல்லக் கேட்டவர் தாமே அத்துணையும் உடம்பட்டொழுகப் பெறாராய்ப் பலரும் நாணும்படி நம்மைக் கைவிட்ட விடத்து எ - று.

1150. *தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் வூர். (௧௦)

தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய் அலரறிவுறீஇ அவன் உடன்போக்கு நயப்பச் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— யாம் வேண்டும் கௌவை இவ்வூர் எடுக்கும் - உடன் போகற்கு ஏதுவாகல்நோக்கி யாம் பண்டேவிரும்புவதாய அலரை இவ்வூர் தானே எடாநின்றது; காதலர் தாம் வேண்டின் நல்குவர் - இனிக்காதலர் தாமும் யாம்வேண்டியக்கால் அதனை இனிதின் நேர்வர், அதனால் இவ்வலர் நமக்கு நன்றாய் வந்தது.

எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. நங்கட்காதலுடைமையின் மறார் என்பது தோன்றக் காதலர் என்றாள். இவ்விருபதுபாட்டும் புணர்தல் நிமித்தம்.

மணக்:— யாம் விரும்பும், அலரையும் இவ்வூரார் எடுத்தார் ஆதலான், இனித் தாங்களே விரும்பிக் கொடுப்பர் நமது காதலர்க்கு எ - று.

பரிப்:— வரைவெதிர் கொள்ளாது தமர் மறுத்துழி ஆற்றாளாகிய தலைமகட்கு இப்புணர்ச்சியை அயலார் தூற்றாநின்றார்: ஆதலால் குரவர் தாமே விரும்பிக் கொடுப்பர் என்று தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

---

* 'தாம்வேண்டி' மணக்—பாடம்.

யாம் வேண்டும் கவ்வை இவனுக்கு நாம் பெண்டிரானது புறத்தார் அறியவேணும் என்று நினைத்திருந்தவாறும்.

பரிதி:— நாயகர் நமக்கு இன்பந்தருவர். அந்த இன்பத்தை யாம் கொள்வோமோ என ஊர் அலர்தூற்றியது எ - று.

காளிங்:— நெஞ்சே! நம்மால் காதலிக்கப்பட்ட காரிகையார், இன்னும் தாமே நல்க வேண்டின் நம்மை நல்குவர்: ஆதலால் இவர்பெயர் நினைந்து இறந்துபடுதற்கு இயையுமிடத்து அவர்பெயர்கொண்டு யாம் கேட்க விரும்பும் கவ்வை எடுத்து உரையாநின்றது இவ்வூர்; எனவே தோழியைப் பிறர்போலக் கொண்டு கூறியது பொருள் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— எச்சவும்மை விகாரம். இவ்விருபது பாட்டும் புணர்தல் நிமித்தம்.

**மேற்கோள்பகுதி :**

சங்கர:— 'பிறவும் ஏற்கும்': பிற என்ற பகுதியில் செயின் என்னும் வாய்பாட்டிற்கு மேற்கோள் காட்டுவர். (நன். 344.)

**முதுமொழிவெண்பாக்கள் :**

"பாணருள்சேய் கேட்கப் பசும்பொன்மான் ஈன்ற
குறமகட்குத் தோழிநின்று கூறும் - திறனுவலின்."

—முதுமொழி. 168.

### குறள் வைப்புமுறை.

பரிமே:— அலரெழ, மலரன்ன, உறுஅதோ, கவ்வையால், களித்தொறும், கண்டது, ஊரவர், நெய்யால், அலர்நாண, தாம்வேண்டின்.

மணக்:— கண்டது, ஊரவர், அலர்நாண, தாம்வேண்டின், மலரன்ன, களித்தொறும், உறுஅதோ, கவ்வையால், நெய்யால், அலரெழ.

பரிதி:— அலரெழ, கவ்வையால், உறுஅதோ, மலரன்ன, களித்தொறும், அலர்நாண. கண்டதும், தாம்வேண்டின், ஊரவர், நெய்யால்.

காளிங்:— அலர்நாண, நெய்யால், கவ்வையால், தாம்வேண்டின், உறுஅதோ, கண்டது, களித்தொறும், மலரன்ன, ஊரவர், அலரெழ.

## உ. கற்பியல்.

பரிமே:— *இனிக் கற்புப் பதினெட்டு அதிகாரத்தான் கூறுவான் தொடங்கி, முதற்கண் பிரிவாற்றாமை கூறுகின்றார்.*

காளிங்:— *தலைமகன் கூற்று முடிந்தது. இனித் தலைமகள் கூற்றுக் கிளவி வருமாறு. இங்ஙனம் இவன் நீங்கிய ஆற்றாமை அவட்கும் ஒக்கும்; ஆகலான், மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.*

# 116. *பிரிவாற்றாமை.*

### தொகுப்புரை :

[பிரிந்துபோகாமை உளதாயின் எனக்குச்சொல்: விரைவில் வந்துவிடுவேன் என்பதை அதுவரை உயிர்தாங்கிநிற்கும் உன் தலைவிக்குச் சொல். தழை முதலிய கையுறை தாங்கிநிற்கும் தலைவர் பார்வை நமக்கு இன்பம் தருவதாயிற்று. அவருடைய புணர்ச்சி பிரிவுண்டு என்னும் அச்சத்தை விளைப்பதாயிற்று. 'நின்னிற் பிரியேன்', 'பிரியின் ஆற்றேன்' என்ற தனது சொல்லையும், நமது பிரிவாற்றாமையையும் அறிந்த காதலரிடத்தும் பிரிவு நிகழ்தலால் அவரைத் தெளிதல் அருமையாக இருக்கிறது. தலையளி செய்து, அஞ்சற்க என்ற தலைவரே பிரியின், தேறுதலைக்கேட்டுத் தேறியிருந்தவர்க்குத் தவறு என்ன? என் உயிரைப் பாதுகாக்கவேண்டின் என் காதலர் என்னைவிட்டுப் பிரிதலைத் தடுக்க; அவர் பிரியின் என் உயிரும் நீங்கும்; அதனால் பின்னர்க் கூடுதல் முடியாது. நமக்கு முன்னிருந்தே பிரிவு உணர்த்துமளவு வன்கண்மையுடையராயின் அவர் மீளவும் வந்து தலையளி செய்வர் என்ற ஆசையும் அவலமே! முன் கையிலே மணிக்கட்டைத் தாண்டாதிருந்த வளையல் தலைவன் நம்மைவிட்டுப் பிரிந்ததைப் பலர் அறியத் தூற்றும். தோழியில்லாத ஊரில் வாழ்வது துன்பம். அதனினும் துன்பம் காதலரைப் பிரிதல். தீ தொட்டால் சுடுமேயல்லது காமம்போலப் பிரியினும் சுடுமோ! பிரிவு உணர்த்தியபோது பொறுமையோடு அதற்கு உடன்பட்டு, பிரிவால் விளைந்த துன்பத்தையும் நீக்கி, பொறுத்து உயிர்வாழ்ந்தவர் பலபேர்.]

### அதிகாரப்பொருள் :

பரிமே:— . *அஃதாவது வரைந்தெய்தியபின் தலைமகன் அறம் பொருள் இன்பங்களின்பொருட்டுச் சேயிடையினும் ஆயிடையினும் தலைமகளைப் பிரிந்துசெல்லும்; செல்லுஞான்று அப்பிரிவினை, அவள் ஆற்றாளாந்தன்மை. அஃது ஈண்டுப் பிரிவுணர்த்திய தலைமகற்குத் தோழி கூறலும், அவள் தனக்குத் தலைமகள்தானே அவன்குறிப்பான் உணர்ந்து*

கூறலும், பிரிவுணர்த்தியவழிக் கூறலும், தலைமகன் பிரிந்துழி ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் மறுத்துக்கூறலும் என நால்வகையான் கூறப்படும்.

மணக்:— பிரிவாற்றாமையாவது அலரறிவுறுத்தப்பட்ட தலைமகன் தலைமகளை வரைந்துகொண்டு இன்புறுமாயினும், பிரியுங்காலத்து ஆற்றாமை கூறுதல். மேலதனோடு இயையும் இது. இதுமுதலாகக கற்பு என்று கொள்ளப்படும்.

பரிப்:— பிரிவாற்றாமையாவது அலர் அறிவுறுத்தப்பட்ட தலைமகன் தலைமகளை வரைந்து கொண்டதன் பின்பாயினும் வரைவதன் முன்பாயினும் பிரியும் காலத்து ஆற்றாமை. மேலதனோடு இயையும் இது. இஃது ஈண்டு விசேடித்துக் கூறியது என்னை? காதற் சிறப்பு உரைத்தலின் தலைமகள் கூறினவும் நாணுத்துறவுரைத்தலின் தலைமகன் கூறினவும் பிரிவாற்றாமையன்றோ எனின், இவை எல்லாம் களவு காலத்து ஓரிடத்து உறைவதோர் புணர்ச்சியிற் பிரிவால் வருந்தும் கூற்றெனின் அஃது அற்று அன்று. [1]'ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தற் குற்றுழி, பொருட்பிணி' என்னும் ஐந்தினும் ஒன்று காரணமாக நாடிடையிட்டுத் தலைமகன் பிரியுங்காலத்து ஆற்றாமையென்று கொள்க. இது முதலாகக கற்பு என்று கொள்ளப்படும்.

**1151.** செல்லாமை உண்டேல் எனக்குரை [2]மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. (க)

பிரிந்து கடிதின்வருவல் என்ற தலைமகற்குத் தோழி சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— செல்லாமை உண்டேல் எனககு உரை - நீ எம்மைப் பிரியாமை உண்டாயின் அதனை எனக்குச் சொல், மற்றுநின் வல்வரவு வாழ்வார்கு உரை - அஃது ஒழியப் பிரிந்துபோய் விரைந்து வருதல் சொல்வையாயின் அதனை அப்பொழுது உயிர்வாழ்வார்க்குச் சொல்.

தலைமகளை ஒழித்து எனக்கு என்றாள், தான் அவள் என்னும் வேற்றுமையின்மையின. அக்காலமெல்லாமாற்றியிருந்து அவ்வரவு காண வல்லளல்லள், பிரிந்தபொழுதே இறந்துபடும என்பதாம். அழுங்குவித்தல் பயன். இதனைத் தலைமகள் கூற்றாகக உரைப்பாரும் உளர்.

[1] இறையனார். சூ. 35. [2] 'மற்றுத்தன்' காளிங் - பாடம்.

மணக்:— காதலர் போகாமை உண்டாயின், எனக்குக் கூறு; பிரிந்தார் நீட்டியாது விரைந்து வருவார் என்று சொல்லுகின்ற வரவினைப் பின்புளராய் வாழ்வார்க்குக் கூறு எ-று.

இது கடிதுவருவார் என்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றாமையால் கூறியது.

பரிப்:— பிரிவு உணர்த்தப்பட்ட தலைமகனது வரவு நீட்டிக்கக் கூடும் என்று ஆற்றாளாயது கண்டு, கடிது வருவர் என்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றாமை கூறியது.

பரிதி:— நாயகரே நம்மைவிட்டுப் பிரியாமல் இருப்பீராகில் எனக்குச் சொல்லும். அல்லதை, உம்மைவிட்டுப் பிரிந்தும் உயிர்வாழ வல்லார்க்குச் சொல்லும் எ-று.

காளிங்:— தோழி நமக்கு உயிராகிய நம் காதலர் நம்மின் நீங்கிச் செல்லாமை உளதாயின் அதனை எனக்குச் சொல்லுவாயாக; மற்றுத் தனது விரைய வருகின்ற வரவினைப் பின் இருந்து உயிர் வாழ்வார்க்குச் சொல்; எனவே யான் உயிர் வாழ்வதில்லை என்பது பொருள் எ-று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— எனக்கு என்றாள் தோழி, தான் அவள் என்னும் வேற்றுமையின்றி என்க.

## மேற்கோள்பகுதி :

இளம்:— பிரிவுணர்த்திய தோழியை நோக்கித் தலைமகள் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 45.)

'வருத்தமிகுதி சுட்டுங்காலை யுரித்தென மொழிப' எனவே வருத்த மிகுதியைச் சுட்டாதவழி மனைவாழ்க்கையுள் இரக்கம் இன்றெனக் கொள்ளப்படும் எனக்கூறி இதனை மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 222)

சுவாமி:— முதனிலைத் தனிவினை முன்னிலை முற்றாய் வந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 66.)

உயர்திணைச் சாதி ஒருமைக்கு மேற்கோள். (ஷை 130.)

பெருந்:— தடைமொழி அலங்காரத்திற்கு மேற்கோள் காட்டி 'இது விலகுதலை உட்கொண்டு சொன்னமையால் தடைமொழியாயிற்று. தண்டியார் இதனை ஆக்ஷேபம் என்பர்' என விளக்குவர். (வீர. 153.)

சொக்கப்:— 'வல்லே தன்பாற் புலவி தணி சென்று நீ' வல் - விரைவு. 'வல் வரவு வாழ்வார்க்குரை' என்பதனால் அறிக. (தஞ்சை. 388.)

## ஒப்புமைப்பகுதி :

"என்னோடு சொல்லுக செல்லாமை உண்டெனி னீரமதி
தன்னோடு மல்கு சடையாளர் வெங்கைத் தடம்சிலம்பில்
பொன்னோடு சொல்லுக நீநின் செலவைப் பொருள்நினைந்து
முன்னோடு பின்னும் இழப்பான் கருதிய முன்னவனே."

—திருவெங் - கோவை. 264.

## முதுமொழிவெண்பாக்கள் :

"தற்பரனை யாறு சமயத்தை யுங்கடந்த
சிற்பரனைப் போற்றுந் தினகரா - எற்பிரிந்து." —தினகர. 120.

"தன்பதியின் செல்கையினால் தாவினதி யாயினாள்
என்பர் கவுசி இரங்கேசா - அன்பரே." —இரங். 116.

1152. இன்கண் உடைத்தவர் பார்வல் *பிரிவஞ்சும்
புன்கண் உடைத்தாற் புணர்வு. (உ)

பிரிவு தலைமகன்குறிப்பான் அறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது,

## உரைப்பகுதி :

பரிமே:— அவர் பார்வல் இன்கண் உடைத்து - தழையும் கண்ணியும்கொண்டு பின்னின்றஞான்று அவர்நோக்குமாத்திரமும் புணர்ச்சி குறித்தமையான் நமக்கு இன்பமுடைத்தாயிருக்கும், புணர்வு பிரிவு அஞ்சும் புன்கண் உடைத்து - இன்று அப்புணர்ச்சிதான நிகழா நிற்கவும் அது பிரிவர் என்று அஞ்சும் அச்சத்தினை உடைத்தாயிற்று, அவர் அன்பின் நிலைமை இது.

* 'பிரிவென்னும்' காளிங் - பாடம்.

பார்வல் என்றதனால் புணர்ச்சிபெறாத பின்னிலைக்காலம் பெறப் பட்டது. புன்கண் என்னும் காரணப்பெயர் காரியத்தின்மேலாயிற்று. அவ்வச்சத்தினையுடைத்தாதலாவது *"முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக், கள்ளினும் மகிழ்செய்யும என்வுரைத்தும் அமையார் என், ஒள்ளிழை திருத்தும்" பண்டையிற் சிறப்பால் அவன் பிரிதற்குறிப்புக காட்டி அச்சஞ்செய்தலுடைமை, அழுங்குவித்தல் பயன்.

மணக்:— நம காதலரை வரவு பார்த்திருக்குமது, இன்பத்தை உடைத்து; அவரைப் புணர்ந்திருககும் இருப்பு, பிரிவாரோ என்று அஞ்சப் படும துனபத்தை உடைத்து எ - று.

பரிப்:— வரவு பார்த்தல் - களவு காலத்து வரவு பார்த்தல். தலைமகன் பிரியலுற்ற குறிப்புககண்டு வேறுபட்ட தலைமகளை இவவேறு பாடு எற்றினான் ஆயிற்றென்று வினாவிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— இன்பமான நாயகரைப் பிரியாமல் பிரிவுக்கு அஞ்சப் பட்ட புன்கண்மையால் புணர்வு எப்படி உண்டாம எ - று.

காளிங்:— நெஞ்சே! வன்கண்மை சிறிதும் இன்றிப் பெரிதும் இன்கண்மை யுடைத்தாய் இருந்தது அவர் வந்து நோககிய நோக்க மானது: இனி மற்று இவ்வாறு அன்றி நமக்குப் பெரிதும், மாற்ற லாகாப் பிரிவென்னும் புன்கண்மை உடைத்தாயிற்று அவர் நம் மோடு கூடிய கூட்டம்; எனவே அவர் நோககம பயந்தது இனிய புணர்ச்சியை: புணர்ச்சி பயந்தது பெரியதோர் புன்கண்மையை; இனி யாம் உய்யுமாறு எங்ஙனம என்று தலைமகள் தன நெஞ்சிறகுச் சொல்லியது பொருள் எ - று.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— இன்கண் - இன்பம். பார்வல் - பார்வை.

**மேற்கோள்பகுதி :**

இளம்:— இன்பமும் துன்பமும் ஆகிய இடத்து தலைவி கூற் றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 145.)

நச்:— வந்தவழி எள்ளினும் என்ற தலைவியின் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 111.)

---

* கலித். 4. 13 - 15.

அலமரல் பெருகியவழித் தலைவனை எதிர்ப்பட்டஞான்று இன்பமும், தனிப்பட்ட ஞான்று துன்பமும் உளவாகியவிடத்துத் தலைவி கூறியதற்கு மேற்கோள். (ஷை 147.)

முற்றுகரம் அடியிறுதிககண் உரியசையால் நின்றதற்கு மேற்கோள். (தொல. பொருள். செய். 9.)

1153. அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான். (௩)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— அறிவு உடையார்கண்ணும் - பிரியேன் என்ற தம்சொல்லும் நம்பிரிவாற்றாமையும் அறிதலுடையராய காதலர்கண்ணும், ஓரிடத்துப் பிரிவு உண்மையான் - ஒரோவழிப் பிரிவு நிகழ்தலான், தேற்றம் அரிது - அவர்சொல்லும் தலையளியும்பற்றி நம்மாட்டு அன்புடையர் எனத் தேறுந்தேற்றம் அரிதாயிருந்தது.

அரோ அசைநிலை. உம்மை உயர்வுசிறப்பின்கண் வந்தது.

பரிப்:— உலகத்து ஒருவரைத் தேறும தேற்றம் அரிதே: அறிவுடையார்மாட்டும ஒரு காலத்தே பிரிவு உண்டாம் ஆதலான் எ - று.

தலைமகன் பிரிந்தான் என்று கேட்டவிடத்து நின்னிற் பிரியேன் என்ற சொல்லை உட்கொண்டு தலைமகள் கூறியது.

பரிதி:— அறிவுடையாரிடத்துப் பிரிவு எக்காலத்திலும் அரிது எ - று.

காளிங்:— தோழி! உலகத்தினில் தம் உற்றார் சுற்றம் நட்டார் என்னும யாவர்மாட்டும் தேறும் தேற்றம் அரிது; மற்று இதற்கு என்னை காரணம் எனின் இன்றியமையாத் தன்மையராகிய இனிய அறிவுடையார்மாட்டும் கூடப் பிரியின் வாழார் பேதையரெனது பிரிவு என்பதும் ஒரு நிலத்து உளதாகலான் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— அரோ - அசைநிலை. ஓரிடத்து - ஒரோவழி.

மேற்கோள்பகுதி :

இளம்:— பிரிவாற்றாமைக்கு மேற்கோள். (தொல். பொருள். 45)

1154. அளித்தஞ்சல் *என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு. (௪)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின் - எதிர்ப்பட்ட ஞான்றே தலையளிசெய்து நின்னிற்பிரியேன் அஞ்சல் என்றவர்தாமே பின் பிரிவராயின் தெளித்தசொல் தேறியார்க்குத் தவறு உண்டோ - அவர்க்கன்றி அவர் தெளிவித்த சொல்லை மெய்யெனத் தெளிந்தார்க்குக் குற்றம் உண்டோ.

தேறியார் என்பது தன்னைப் பிறர்போற்கூறல். சொல்லும் செயலும் ஒவ்வாமைக்குற்றம் அவர்க்கு எய்தும், அஃது எய்தாவகை அழுங்குவி என்பது கருத்து.

மணக்:— நமமைத் தலையளிசெய்து நின்னிற் பிரியேன், நீ அஞ்சல் என்றவர் தாமே நீங்கிப்போவாராயின், அவர் தெளிவித்த சொல்லைத் தெளிந்தவர்க்கு வருவதொரு குற்றம உண்டோ? எ - று.

தன்மையைப் படர்க்கைபோல் கூறினர்.

பரிப்:— பிரிவுணர்த்திய தோழிக்குப் பிரிவு உடன்படாது தலைமகள் வெகுட்சிக்குறிப்பால் கூறியது.

பரிதி:— இன்பந்தந்து பிரியோம் என்று உறுதிசொன்ன நாயகர் பிரிந்தார். இனிவந்து நன்மை செய்யினும் துன்பமன்றியே இன்பமில்லை எ - று.

*'என்றார் உரைநீப்பின்' காளிங் - பாடம்.

காளிங்:— முன்னம் தாமே வந்து தலையளித்து இனி நீ யாதும் அஞ்சேல் ஒருகாலும் : நின்னிற் பிரியேன் : பிரியின் ஆற்றேன்; என்று ஒரு சூளுறவு போலத் தம் உரையால் தெளிவிககப்பட்டாரைத் தாமே விட்டு நீங்கின் தாம அங்ஙனம் தெளிவித்த சொல்லினை இது நமககு ஒரு தீர்வுரை என்று தேறினவர்க்கு உண்டோ ஒரு தவறு எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— தேறியார் என்பது, தன்னைப் பிறர்போல் கூறல். தெளித்தசொல் - தெளிவித்த சொல்.

மேற்கோள்பகுதி :

நச்;— 'மின் தெளித்து எழுதியன்ன': தெளித்து - தெளிவித்து; 'தெளித்த சொல் தேறியார்க்கு' என்றாற்போல. (சீவக. 371.)

சேனா:— இதனுள் நீத்தார்கககே தவறு என எஞ்சிய பொருள் உணர்த்தலான இசையெச்சமாயிற்று என்பர். (தொல். சொல். 440.)

நம்பி:— ஒருவழித்தணத்தலில் தலைவி நெஞ்சொடு புலத்தலுக்கு மேற்கோள. (சூ. 168.)

முதுமொழிவெண்பாக்கள் :

"சூளுறவு செய்திறைவர் தோழர் பிரிவறிந்த
கோல்வளையார் கூறுவது தோழிக்குச் - சால." —முதுமொழி. 169.

"அற்றதுணி யோடுதம யந்திபுன லார்ந்துநளன்
முற்றுழியும சோர்ந்தாள் முருகேசா - பற்றி." —முருகேசர். 116.

1155 ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு. (ரு)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல் - என் உயிரைச் செல்லாமல் காத்தியாயின், அதனை ஆளுதற்கு அமைந்தாருடைய செலவினை அழுங்குவிப்பாயாக; மற்று அவர் நீங்கின் புணர்வு அரிது - அழுங்குவிப்பார்

இன்றி அவர்செல்வாராயின் அவரால் ஆளப்பட்ட உயிரும் செல்லும், சென்றால் பின் அவரைக்கூடுதல எனககு அரிதாம்.

ஆளுதற்கமைதல் இறைவராதற்குத் தெய்வத்தால் ஏற்புடையராதல். மறறு வினைமாற்றின்கண் வநதது.

மணக்:— காக்கலாமாயின் அமைந்தார் தம்முடைய பிரிவைக் காக்க; அவர் பிரிவராயின், பின்பு கூடுதல் அரிது எ - று.

மேல் தலைமகள் கூறிய சொல்கேட்டு யாது சொல்வேன் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— பிரியாமல் கூடியிருககும் நாயகர் பிரிந்தால் பின்பு கூடுதல் அரிது எ - று.

காளிங்:— தோழி நமது நெஞ்சொடு அமைந்த நம் காதலரை இனிப்பிரிவு குறிக்கொண்டு செல்லாமல பாதுகாப்பாயாக ; மற்று அவர் பிரிவினைப் பாதுகாவாயாயின் மற்று அவர் நீங்குவர் ; நீங்குவாராயின் கூடுதல் சால அரிது எனவே யான் இறந்துபடுதலும் உண்டு என்பது பொருள் எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— ஓம்பல் - அழுங்குவிப்பாயாக.

1156. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை. (சு)

தலைமகன் பிரிவுணர்த்தியவாறு வந்துசொல்லிய தோழிக்குச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— அவர் பிரிவு உரைக்கும் வன்கண்ணராயின் - நம் கலவுக்கடுமை அறிந்த தலைவர்தாமே நம்முன் நின்று தம்பிரிவினை உணர்த்தும் வன்கண்மை உடையராயின், நல்குவர் என்னும் நசை அரிது - அத்தன்மையார் பின்பு நம் ஆற்றாமை அறிந்துவந்து தலையளி செய்வர் என்று இருக்கும் ஆசை விடப்படும்.

அருமை - பயன்படுதலில்லாமை. கூடியிருந்தே அன்பின்றிப் பிரிவு எணணுதலும் உணர்த்தலும வல்லராயினர் பிரிந்துபோய் அன்புடையராய் நமமை நினைத்துவந்து நல்குதல் யாண்டையது என்பதாம். அழுங்குவித்தல் பயன்.

மணக்:— பிரிவினையுரைககும் வன்கண்மையை உடையராயின், அவர் மறித்துவந்து நல்குவர் என்னும் ஆசை இல்லை எ - று.

இது தலைமகன் பிரிந்தான் என்று கேட்டவிடத்து நின்னிற் பிரியேன் என்ற சொல்லை உட்கொண்டு தலைமகள் கூறியது.

பரிப்:— பிரிதலும் ஆற்றுதலும் உலகியல் என்று நெருங்கிக் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது

பரிதி:— பிரிவுரைக்கும் தறுகண்ணராயின் நமககு இன்பம் தருவர் எனனும் நசை அரிது எ - று.

காளிங்:— இங்ஙனம் தமது உரைதேறிப் பிரிவின் இயல் அஃது என்று இருந்த நமக்கு இஃது ஒழிந்து பிரிவினையும் நமகுத் தாம் உரைக்கும் வன்கண்மையும் உடையராயின் இனி மற்று அவர் வந்து தலையளிப்பர் என்னும் பற்றுடைமையும அரிது எ - று.

மேற்கோள்பகுதி :

பெருந்:— எதிர்மறுத்தல் என்னும் தந்திர உத்திக்கு மேற்கோள். (விர. 180.)

1157. துறைவன் துறந்தமை *தூற்றுகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை. (எ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— துறைவன் துறந்தமை - துறைவன் என்னைப் பிரிய லுற்றமையை; முன் கை இறை இறவாநின்ற வளை தூற்றுகொல் - அவன் உணர்த்தாமல் தாமே உணர்ந்து என் முன்கையிறையினின்றும்

*'தேற்றுகொல்' காளிங் - பாடம்.

கழலாநின்ற வளைகள் எனக்கு அறிவியாவோ, அவன் உணர்ந்த உணர்ந்துவந்து நீ அறிவித்தல்வேண்டுமோ!

முன்னே நிகழ்ந்தமையின் துறந்தமை என்றும், கேட்ட துணையான் மெலிந்து ஆற்றாமையின் இறவாநின்ற என்றும் கூறினாள். அழுங்குவித்து வந்து கூறற்பாலையல்லையாய் நீயும் இவ்வளைகள் செய்தனவே செய்தாய் எனப் புலந்து கூறியவாறு.

மணக்:— இறைவன் பிரிகின்றமையை எமக்கு அறிவியாவோ? முன்கையின் இறையைக கடவாநின்ற வளைகள் எ - று.

முன்பே அறிதலான், உடம்பு மெலிந்தது என்றவாறாயிற்று.

பரிப்:— பிரியாரென அறிவுறுக்கும் தோழிக்கு, நீ சொல்ல வேண்டா; யான் அறிந்தேன் என்று தலைமகன் கூறியது.

பரிதி:— நாயகர் பிரிந்ததை ஒருவரும் அறியார்; நம்முடைய முன்கைவளை கழல எல்லாரும அறிந்தனர் எ - று.

காளிங்:— தோழி! இவை நம் துறைவன் நம்மைப் பிரிந்தமை அறியாவோ? அறியும்: என்னையோ எனின் முன்கைச் சந்தினின்று நீங்கா நின்றன வளை; எனவே தன் தோள் மெலிவு பார்த்துத் தளர் வுற்றுள என்பது பொருள் எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்.— நிகழ்காலத்து இடைநிலை ஆநின்று பெற்று, இறவா நின்ற என்றாயிற்று. "அலராயிரம்" (180) என்னும் கோவையாருள், "அலராயிருக்கும" என்றும், பாவையாருள் "ஆகாள் கிடந்தாள்" (திருவா. திருவெம்பாவை.) என்றும வரும்.

## ஒப்புமைப்பகுதி :

"துறைநணி ஊரனை உள்ளிஎன்
இறையேர் எல்வளை நெகிழ்போ டுமே." —ஐங். 20.

"அறைபறை யானை அலங்குதார்க கிள்ளி
முறைசெயும் என்பரால தோழி - இறையிறந்த
அங்கோ லணிவளையே சொல்லாதோ மற்றவன்
செங்கோன்மை செங்கின்ற வாறு." —முத்தொள்.

1158. இன்னா தினனில்லூர் வாழ்தல் அதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு. (அ)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— இனன் இல் ஊர் வாழ்தல் இன்னாது - மகளிர்க்குத் தம்குறிப்பு அறியும தோழியரில்லாத வேற்றூரின்கண் வாழ்தல் இன்னாது, இனியார்ப்பிரிவு அதனினும இன்னாது - அதன்மேலும தம் காதலரைப் பிரிதல் அதனினும இன்னாது.

தலைவன் செலவினை அழுங்குவித்து வாராது உடன்பட்டு வந்தமைபற்றிப் புலககின்றாள் ஆகலின், இனனில்லூர் என்றாள். உலகியல் கூறுவாள்போன்று தனககு அவ்விரண்டும் உண்மை கூறியவாறு.

மணக்:— தமக்கு இனம் இல்லாத ஊரின்கண் இருந்து வாழ்தல் இன்னாது; இனியாரைப் பிரிதல் அதனினும் இன்னாது எ - று.

இது பிரிவு உணர்த்திய தலைமகற்கு இவ்விரண்டு துன்பமும் எங்கட்கு உளவாம் என்று பிரிவு உடன்படாது தோழி கூறியது.

பரிதி:— தன் உறவின்முறையில்லாத ஊரிலே வாழ்தல் பொல்லாது; அதனினும் பொல்லாது நாயகரைப் பிரிதல் எ - று.

காளிங்:— உலகத்து ஒருவர்க்கு மிகவும் இன்னாதது யாதோ எனின், தமது இன்ப துன்பங்கட்கு உடனுறவொத்த இனம் ஏதும் இல்லாத ஊரின்கண் தனித்து இருநது வாழ்தலாகின்ற இது பெரிதும் இன்னாது; இனி மற்று இதனினும சால இன்னாது நெஞ்சே! யாதெனின்? கற்புடை மகளிர் தம காதறகொழுநரைப் பிரிந்திருககும் பிரிவானது எனவே இவர்கு உயிரன்ன கேளிர் இவர்லலது இல்லை என்று தனது ஆற்றாமை கூறினளாயிற்று எ - று.

**முதுமொழிவெண்பாக்கள் :**

“ வாழ்விழந்த இன்னலினும் வாசவர்கோன் மிக்குநொந்தான்
சூழ்சசியை முன்பிரிந்து சோமேசா - வீழ்வார்கட்(கு).”

—சோமேசர். 116.

"கோதைவரி விற்றடக்கைக் கொண்டல்பிரி வாற்றுமல்
சீதைவனம போனுள் சிவசிவா - ஓதுமிடத்(து)" —சிவசிவ. 116.

"நாவலர்கோ மான்கயிலை நாளைப்போம் என்றுமுன்போய்
மேவிமிழ லைக்குறும்பர் வீற்றிருந்தார் - யாவருக்கும்." —திருத். 30.

1159. தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ. (கூ)

காமம் தீயேபோன்று தான் நின்றஇடத்தைச சுடுமாகலான்
நீ ஆற்றல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே.— தீ தொடின் சுடின் அல்லது - தீ தன்னைத் தொட்டால் சுடுமாயின் சுடுதலல்லது, காமநோய்போல விடின் சுடல் ஆற்றுமோ - காமமாகிய நோய்போலத் தன்னை அகன்றுல் தப்பாது சுடுதலை வற்றே? மாட்டாது.

சுடுமாயின் என்பது மந்திரமருந்துகளால் தம்பிக்கப்படாதாயின் என்றவாறு. காமத்திற்கு அதுவும் இல்லை என்பாள் வாளா சுடல் என்றுள். அகறல் - நுகராமை. சுடல் என்பது முன்னும் கூட்டப்பட்டது. தீயினும் கொடியதனை யான் ஆற்றுமாறு என்னை என்பதாம்.

மணக்:— தீண்டின்ல் சுடுமதல்லது காமநோய்போல நீங்கினுல் சுடவற்றே தீ எ - று.

தலைமகன் பிரிந்துழித் தலைமகளாற்றுமைகண்டு தோழி கூறியது.

பரிதி:— தீயானது தொட்டால் சுடும்; காமத்தீபோல விட்டால் சுடவல்லதோ? ஆதலால் பிரியாமலிருப்பதே நல்லது எ - று.

காளிங்:— தோழி! தன்னைக் கிட்டித் தொட்ட காலத்துப் புறஞ்சுடும அல்லது காமத்தீப் போல விட்டுநின்ற காலத்து வெவ்விதாகி நின்று உள்ளே சுடுதலை அறியுமோ உலகத்துத் தீ எ - று.

இனி மற்று இங்ஙனம் பிரிவு ஆற்றுளாகிய தலைமகள் தலைமகனை நினைந்து உறமெலிந்து தோழிக்கும் தன் நெஞ்சிற்கும் சொல்லித் துயர் உறுகின்றமை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— சுடுதலை முன்னும் கூட்டுக.

ஒப்புமைப்பகுதி :

"வெந்தீக்குள் ளேகிடந்தும வேவாய்என் பார்காமச
செந்தீச் சுடா திருக்கச் செய்யாயோ." —தமிழ். 159.

'நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரனுடன் கேண்மை
சாரசசாரச சார்நது
தீரத்தீரத் தீர்பொல் லாதே." —பழைய.

"உள்ளினும் சுட்டிடும உணருப கேள்வியின்
கொள்ளினும் சுட்டிடும குறுகி மற்றதைத்
தள்ளினும சுட்டிடும் தன்மை ஈதினல்
கள்ளினும் கொடியது காமத் தீயதே."
—கந்த. மாயைநீங்கு. 11.

1160. அரிதாற்றி அல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர். (௧0)

தலைவியர்பலரும் பிரிவாற்றியிருப்பர், அது நீ செய்கின்றிலை என்ற
தோழிக்குச் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— நீ சொல்லுகின்றதொக்கும், அரிது ஆற்றி அல்லல் நோய் நீக்கி - பிரிவுணர்த்தியவழி அதற்கு உடம்பட்டுப் பிரியுங்கால் நிகழும் அல்லல்நோயினையும நீக்கி, பிரிவு ஆற்றிப் பின் இருந்து வாழ்வார் பலர் - பிரிந்தால் அப்பிரிவுதன்னையும் ஆற்றிப் பின்னும் இருந்து உயிர்வாழும் மகளிர் உலகத்துப் பலர்.

பண்டையிற்சிறப்பத் தலையளிபெற்று இன்புறுகின்ற எல்லைக் கண்ணே அஃது இழந்து துன்புறுதற்குடம்படுதல் அரியதொன்றாகலின் அரியதனைச செய்து என்றும், செல்லுந்தேயத்து அவர்கு யாதுநிகழும் என்றும், வருந்துணையும் யாம் ஆற்றியிருக்குமாறு என் என்றும், அவ்வரவு தான் எஞ்ஞான்று வந்தெய்தும் என்றும் இவ்வாற்றான் நிகழும் கவலை மனத்து நீங்காது ஆகலான் அல்லனோய் நீககி என்றும், பிரிந்தால் வருந்துணையும் அகத்து நிகழும் காமவேதனையும் புறத்து யாழிசை, மதி தென்றல் என்று இவைமுதலாக வந்து இதனை வளர்ப்பனவும் ஆற்றலரிய வாகலின் பிரிவாற்றி என்றும், தம் காதலரை இன்றியமையா மகளிருள் இவையெல்லாம பொறுத்துப் பின்னும இருந்து உயிர்வாழ்வார் ஒருவரு மில்லை என்பது குறிப்பால்தோன்றப் பின்னிருந்து வாழ்வார் பலர் என்றும் கூறினள். அரிது என்பது வினைகுறிப்புப்பெயர். பிரிவின்கண் நிகழ் வனவற்றைப் பிரிவு என்றாள். செய்து, நீககி, ஆற்றி என்பன ஓசைவகை யான் அவ்வவற்றது அருமையுண ர நின்றன. சிறம்பும்மை விகாரத்தால் தொக்கது. யானும் இறந்து படுவல்என்பது கருத்து.

மணக்:— பொறுத்தற்கு அரியதனைப் பொறுத்து, அல்லல் செய்யும் நோயை நீககி, பிரிவையும் பொறுத்து, காதலரை நீங்கியபின் தமியராயிருந்து வாழ்பவர் பலர் எ - று.

அல்லல்நோய் - காமவேதனை. பிரிவாற்றுதல் - புணர்ச்சியின்மை யைப் பொறுத்தல்.

பரிப்:— அரியது அரிது ஆயிற்று. அதனைப் பொறுத்தலாவது பொழுதும் குழலும் முதலாயினவற்றான் வரும் துன்பத்தைப் பொறுத்தல் இவ்வாறு உலகியற்கை யாதலால் நீ ஆற்றாயாகின்றது தக்கது அன்று என்று தோழி தலைமகளை நெருங்கிக் கூறியது.

பரிதி:— பிரியாமல் கூடியிருந்து அல்லலாகிய நோயையும் தள்ளி இருந்தவர் நாயகரைப் பிரிந்தும் உயிர்கொண்டிருப்பாரோ எ - று.

காளிங்:— தத்தம் கொழுநரைப் பிரிவின்கண் தமக்கு அல்லலைச் செய்யும் நெஞ்சுறுவது யாது அதை வரவரத் தணித்தும் மற்றும் அரியவை பொறுத்தும் இங்ஙனம் பிரிவு ஆற்றிப் பின்னும் இருந்து தம் உயிர்வாழும் பெண்டிரும் பலர் இவ்வுலகத்து; எனவே யான் இருந்து வாழ்தல் எவ்வாற்றானும் அரிது என்று தோழிக்குத் தலை மகள் சொல்லியது.

ஒப்புமைப்பகுதி:

"உண்கண், நீரோடு ஒராங்குத் தணப்ப
உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே." —குறுந். 38.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— செல்லாமை, இன்கண், அரிதரோ, அளித்தஞ்சல், ஓம்பின், பிரிவுரைக்கும், துறைவன், இன்னு, தொடின், அரிதாற்றி.

மணக்:— இன்கண், துறைவன், இன்னு, அளித்தஞ்சல், ஓம்பின், செல்லாமை, அரிதாற்றி, பிரிவுரைக்கும், தொடின், அரிதரோ.

பரிதி:— செல்லாமை, பிரிவுரைக்கும், அளித்தஞ்சல், இன்கண், துறைவன், இன்னு, தொடின், அரிதாற்றி, ஓம்பின், அரிதரோ.

காளிங்:— இன்கண், இன்னு, அளித்தஞ்சல், பிரிவுரைக்கும், ஓம்பின், செல்லாமை, அரிதாற்றி, அரிதரோ, துறைவன், தொடின்.

## 117. படர்மெலிந்திரங்கல்

### தொகுப்புரை :

[பிரிவுத் துன்பத்தைப் பிறர் அறியாமல் மறைத்துவைப்பேன். ஆனால் இறைத்த கிணறு ஊறுவதுபோல நோய் மேலும் மேலும் மிகுந்துகொண்டேயிருக்கிறது. இந் நோயை என்னால் மறைக்கவும் முடியவில்லை. அவருக்குச் சொல்வோம் எனில் அது வெட்கமாயிருக்கிறது. பொறுக்காத என்னுடம்பிற்குள் உயிரைக் காவுதண்டாகக் கொண்டு காதலும், நாணமும் தொங்குகின்றன எனக்கிருப்பது காமக்கடலே. அதனை நீந்தும் தெப்பமோ இல்லை. இவ்வாறு நட்பில் துன்புறுத்துவார் பகைமையில் என் செய்வாரோ? காதலின்பம் கடல்போலப் பெரிது; பிரிவுத் துன்பம் அதைவிடப்பெரிது. காமக்கடலை யான் நீந்தத்தெரியாதவனல்ல. நிறையைப் புணையாகக்கொண்டு ஏதோ நீந்தினேன். ஆனாலும் கரைகாணவில்லை. நடுநாள யாமத்தும் காவாமல், யான்மட்டும் வருந்தியிருந்தேன். இந்த இராப்பொழுது உலகத்து உயிர்களை எல்லாம் தூங்கவைத்து யானொருத்தியைமட்டும் துணையாகக்கொண்டதாகலின் மிகவும் இரங்கத்தக்கது காதலரோடு நான் கூடியிருக்கிற காலங்களில் மிகவும் குறியவாய், பிரிந்த இந்நிலையில் நெடியவாய் இருக்கிற இந்த இராக்காலம, பிரிந்து சென்ற கொடியவர் கொடுமையினும் மிகக் கொடுமை செய்கின்றது. என்னுடைய கண்களும் என் மனத்தைப்போலக் காதலர் சென்றதேயத்தில் செல்லவல்லதாயின் கண்ணீர் வெள்ளத்தில் நீந்தவேண்டுவதில்லையே!]

### அதிகாரப்பொருள் :

பரிமே:— *அது படரால் மெலிந்திரங்கல் என விரியும். அஃதாவது பிரிவாற்றாளாய தலைமகள் தானுறுகின்ற துன்பத்தினை எப்பொழுதும் நினைத்தலின் அந்நினைவான் மெலிந்து இரங்குதல். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.*

மணக்:— *படர்மெலிந்திரங்கலாவது தலைமகள் தலைமகன் பிரிந்துழிக் கதுமென உற்ற துன்பத்தினால் மெலிந்திரங்குதல். பிரிந்துழியுற்ற துன்பமாவது போனானென்று கேட்டகாலத்து வருவதோர் மனநிகழ்ச்சி இது பிரியப்பட்டார்க்கு முற்பாடு தோன்றுமாதலான், அதன்பின் கூறப்பட்டது.*

**1161.** மறைப்பேன்மன் [1]யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும். (க)

காமநோயை வெளிப்படுத்தல் நின்நாணுக்கு ஏலாது என்ற தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நோயை யான் மறைப்பேன் - இந்நோயைப் பிறர் அறிதல் நாணி யான் மறையாநின்றேன், இஃதோ இறைப்பவர்க்கு ஊற்று நீர் போலமிகும் - நிற்பவும் இஃது அந்நாண்வரை நில்லாது நீர் வேண்டும் என்று இறைப்பவர்க்கு ஊற்றுநீர் மிகுமாறுபோல் மிகாநின்றது.

அம்மறைத்தலால் பயனென் என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. [2]"இஃதோ செல்வர்க்கொத்தனென் யான்" என்புழிப் போல ஈண்டுச் சுட்டுப்பெயர் ஈறுதிரிந்து நின்றது. இஃதோர் நோயை என்று பாடம் ஓதுவாரும் உளர்; அது பாடமன்மை அறிக. இனி அதற்கு அடுத்தது நீ செயல்வேண்டும் என்பதாம்.

மணக்:— இந் நோயை யான் மறைப்பேன்; மறைப்பவும் இஃது இறைப்பார்க்கு ஊற்றுநீர்போல மிகாநின்றது எ - று.

தலைமகள் ஆற்றாமை கண்டு இதனை இவ்வாறு புலப்பட விடுத்தல் தகாது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— மறைப்பேன் காமநோயை; மறைத்தாலும் இறைக்க இறைக்க ஊறும் ஊற்றுபோலும் ஊறும் எ - று.

காளிங்:— தோழி! நம் துணைவரானவர் பிரிந்தவிடத்து நம் துயர் பிறர்க்குப் புலனாகாமை மறைக்குமதுவே நம் பெண்மைக்கு இயல்பு என்று என்னை நீ இடித்து உரைக்க வேண்டுவது இல்லை. இந்நோயினை யான் பிறர் அறியாமை மறைப்பேன்; மறைத்த இடத்தும் இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போலத் தானே மிகா நின்றது எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— ஒ ............ ருய் ஈண்டுச் சுட்டுப்பெயர் இஃதோ என ஈறு திரிந்தது. இதுபொழுது, இப்பொழுது எனப் பொருள்பட்டாற் போல, இஃதோநோய், இந்நோய் எனச் சுட்டெழுத்து மாத்திரையா

[1] 'யானிதோர்' காளிங் - பாடம். [2] அகம். 26.

நின்றது. "அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலே" (தொல். சொல் - 66) என்பதற்கு, "அகரச்சுட்டு, அன்றி என ஈறு திரிந்தது" என்றார் சேனுவரையர். அவ்வாறு முழுதுந்திரிந்தது, "பொருளொடு புணராச் சுட்டு" (தொல். சொல் - 37) என்னும் சூத்திரத்துச் சேனுவரையரும், நச்சினார்க்கினியரும் இவ்வுரையாசிரியர் காட்டிய "இஃதோ செல்வர்க்கு" என்னும் சொற்சோதனையை வழுவமைத்தார் என்க. "செய்குன்று" (223) என்னும் கோவையாருள், "உந்திடமிந்திடம்" என்பதும் அது.

ஒப்புமைப்பகுதி :

"ஓடும் தடங்கண் மணற்கேணி யாகஅவ் வூற்றிறைக்கு
நீடுட புளின முலையாக் குறைவும் நிறைவுமஇன்றிச்
சூடும் பிறையர் திருவெங்கை வாணர் சுடர்க்கிரிமேல்
பாடும் சுரும்பலா மொய்குழல் தேம்பிப் பதைத்திடுமே."
—திருவெங்·கோவை, 276

1162. கரத்தலும் ஆற்றேனிந் நோயைநோய் செய்தார்க்(கு)
உரைத்தலும் நாணுத் தரும். (உ)

ஈண்டையார் அறியாமல் மறைத்தல் ஆண்டையார் அறியத் தூதுவிடுதல் என்னும் இரண்டனுள் ஒன்று செயல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— இந்நோயைக் கரத்தலும் ஆற்றேன் - இந்நோயை ஈண்டையார் அறியாமல் மறைத்தலும் வல்லேனுகின்றிலேன்; நோய் செய்தார்க்கு உரைத்தலும் நாணுத் தரும் - ஆகாககால், நோய்செய்தவர்க்கு உரைகக எனின், அதுவும எனககு நாணினைத் தாராநின்றது, இனி என்செய்கோ!

ஒருகாலைக் கொருகால் மிகுதலின் கரத்தலும் ஆற்றேன் என்றும், சேய்மைச் சென்றவர்கரு இதுசொல்லித் தூதுவிட்டால் இன்னுமிருந்தேன் என்பது பயககும என்னும் கருத்தால் நாணுத்தரும் என்றும கூறினுள்.

மணக்:— இந்நோயை மறைககவும் அறிகின்றிலேன்; இந்நோயைச் செய்தார்க்குச் சொல்லவும் நாணமாக நின்றது எ - று.

இது குறிப்பறிதற்பொருட்டுக் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிப்:— இவ்வாற்ருமையைத் தலைமகற்குச் சொல்லி விடுவோம் என்று தலைமகள் குறிப்பு அறிதற்பொருட்டுக கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— காமநோயை மறைப்பதும் அறியேன், ஈனநோய் செய்தார்க்கு உரைப்பேன் என்றலும் நாணந்தரும் எ - று.

காளிங்:— தோழி! இங்ஙனம் பெருகிச் செல்லாநின்ற படர் நோயை யான் இனிப் பலர்குப் புலனுகாமை மறைத்தலும் அறியேன்; மற்று இப்படர் நோய் செய்தார்க்குச் சென்று ஒரு தூது உரைக்கக் கருதின் மற்று அதுவும் பெரியது ஓர் நாணுதலைத் தருமாயிராநின்றது; இனி என் வினையும் யான் அறிகிலேன் எ - று.

1163. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனு உடம்பி னகத்து. (ங)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— காமமும் நாணும் - காமநோயும் அதனைச் செய்தவர்க்கு உரைககல் ஒல்லாத நாணும், நோனு என் உடமபின் அகத்து - தம்மைப் பொருத என் உடம்பின்கண்ணே, உயிர் காவாத் தூங்கும் - உயிர் காத்தண்டாக அதன் இருதலையினும் தூங்காநின்றன.

பொருமை மெலிவானுயது. தூங்கும் என்பது, ஒன்றினென்று மிகாது இரண்டும் ஒத்தசீர என்பது தோன்ற நின்றது. தூதுவிடவும் ஒழியவும் பண்ணுவனவாய காமநாண்கள் தம்முள் ஒத்து உயிரினை இறுவியாநின்றன, யான் அவற்றுள் ஒன்றின்கண் நிற்கமாட்டாமையின் இஃது இற்றேவிடும் என்பதாம்.

மணக்:— வேட்கையும் நாணமும் என்னுயிரே காத்தண்டாகத் தூங்கா நின்றன; பொறுககமாட்டாத என்னுடம்பினுள்ளே நின்று எ-று.

இது தலைமகள் மனநிகழ்ச்சி இது என்று கூறியது.

பரிப்:— தலைமகள் கருத்தின்பொருட்டு அவர் உள்வழிச் செல்வேம் என்ற தோழிக்குப் போக நினைக்கும் ஒருகால்; அது பெண்மை அல்ல என்று நினைத்துத் தவிரும் ஒருகால்; இப்பொழுது என் மன நிகழ்ச்சி அது என்று தலைமகள் கூறியது.

பரிதி:— காமமும் நாணும் உறுதியாக உயிர்காவாத் தூங்கும், காமத்தினாலே மெலிந்து ஆற்றாவுடம்பில் எ - று.

காளிங்:— தோழி! காதலர் பிரிவின்கண் பெருகிய காம நோயும் அது பிறர் அறிதற்கு நாணுவதோர் நாணமும் என்னும் இவை இரண்டும் தானேயும் நிலையின்றி வாடுகின்ற எனது உயிரே காத்தண்டாகக் கனம் ஒக்கத் தூங்கா நிற்கும்; இக்கனம பொறுக்கலாத எனது உடலிடத்து எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— காவா - தண்டாக. கா என்பது இருதலையும் தூங்கும் தார.......

**ஒப்புமைப்பகுதி :**

"நலிதரும் காமமும் கௌவையும் என்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங்கு என்னை
நலியும் விழுமம் இரண்டு." —கலி. 142 : 57 - 58.

**முதுமொழிவெண்பாக்கள்:**

"ஆகமெலிந் தாள்சீதை வான்மீகி யாதரித்து
மோகமொடு நாணன் முருகேசா - வேகமிகும்." —முருகேசர். 117.

1164. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல். (௪)

தலைவியர் காமக்கடற்படார், படினும் அதனை ஏற்ற புணையால் நீந்திக் கடப்பர் என்ற தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— உண்டு காமககடலே - யாவர்க்கும் உளவாய்வருகின்ற இவ்விரண்டனுள்ளும் எனக்கு உண்டாகின்றது காமக்கடலே, அது நீந்தும் ஏமப் புணை இல் - அதனை நீந்தும் அரணாகிய புணை இல்லை.

இருவழியும் மன்னும் உம்மும் அசைநிலை. தூதுவிட்டு இதற்குப் புணையாகற்பாலையாய நீயும் ஆயிற்றிலை என்பது கருத்து.

மணக்:— காமக்கடல் நிலையாக உண்டே, அது கடக்கும் ஏம மாகிய புணை நிலையாக இல்லையே எ - று.

இது தலைமகள் ஆற்றாமை கண்டு நெருங்கிக் கூறிய தோழியைக் குறித்து நமககுத் துணையாவார் இல்லை எனத் தலைமகள் கூறியது.

காளிங்:— தோழி! அவரால் ஆகிய காமநோய் என்னும் பெரு வெள்ளமானது மிகவும் உளதே: மற்று இனி அது நீந்திக் கரை ஏறு நிலைமைத்தாகிய இறுதி மிதவை ஈண்டு இல்லை எ - று.

இனி மற்று அப்பொருள் கடைக்கூட்டி வந்து எய்திய தலைமகன் இவளை வரைந்து எய்தி நெடுங்காலம் இன்புற்று இங்ஙனம் இயலும் என்பது பொருளாம் என அறிக. இனி மற்று இவ்வாறு அன்றிப் பின்னும் அவன் வருதல் நீட்டித்தவிடத்து இவள் பெரிதும் காண்டல் விருப்பினளாகும் அன்றே தலைமகனை: அதனால் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஏமப்புணை - அரணாகிய புணை. இருவழியும் மன்னும், உம்மும் அசை.

1165. துப்பின் [1]எவனாவர் மற்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். (ரு)

தூதுவிடாமைநோக்கித் தோழியொடு புலந்து சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— நட்பினுள் துயர்வரவு ஆற்றுபவர் - இன்பம் செய்தற்கு உரிய நட்பின்கண்ணே துன்பவரவினைச் செய்யவல்லவர், துப்பின் எவனாவர்கொல் - துன்பம் செய்தற்குரிய பகைமைக்கண் என்செய்வர் கொலலோ!

துப்புப் பகையுமாதல் [2]"துப்பெதிர்ந்தோர்க்கே உள்ளாச் சேய் மையன், நட்பெதிர்ந தோர்ககே அங்கை யண்மையன்" என்பதனானும் அறிக. அப்பகைமை ஈண்டுக காணாமையின் அவர்செய்வதும அறியப்

[1] 'எவன் செய்வர்' காளிங் - பாடம். [2] புறம். 380: 10 - 11.

பெற்றிலேம் என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. துயர்வருதலை விலக்கலாயிருக்க அது செய்கின்றிலை எனப் புலக்கின்றமையின், துயர்வரவு செய்தாளாகவும் பிறளாகவும் கூறினள்.

மணக்:— மென்மை செய்யவேண்டும் நட்டோர்மாட்டே துன்பம் வருதலைச் செய்கின்றவர், வன்மை செய்ய வேண்டுமிடத்து யாங்ஙனம் செய்கின்றாரோ?

இது பகைதணிவினையின்கண் பிரிந்த தலைமகனது கொடுமையை உட்கொண்டு தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பரிதி:— துப்பாகிய காமத்து வலியினாலே என்னமாம் காம இன்பமாகிய நட்பிலும் துயராற்றுவார்க்கு எ - று.

காளிங்.— பகைவர்மாட்டு வலிசெய்யும் பொழுது யாதினைச் செய்வார் கொல்லோ? துயர் வரவினை நட்டார்மாட்டுச் செய்கின்றவர் எ-று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— துப்பு - பகைமை.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— இது சொல்லினுள் வெளிப்படை; அகப்பொருளில் குறிப்பு என்பர். (இ. கொ. 6.)

செய்யா இருவினை செய்வினையாகி என்பதற்கு மேற்கோள். (ஷை. 81.)

குறிப்பு :

துப்பு - பகைஎன்பர் பரிமேலழகர். வலிமைஎன்பர் பரிதியாரும் மணக்குடவரும்.

—தொகுப்பாசிரியர்.

1166. இன்பங் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது. (சு)

காமத்தான் இன்பமுற்றார்க்கு அதனினும் துன்பமும் வரும் என்று தோழிக்குச் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— காமம் இன்பம் கடல் - காமம் புணர்வால் இன்பம் செய்யுங்கால், அவ் இன்பம் கடல்போலப் பெரிதாம், மற்றஃது அடுங்கால்

துன்பம் அதனின் பெரிது - இனி அதுதானே பிரிவால் துன்பம் செய்யுங்கால், அத்துன்பம் அக்கடலினும் பெரிதாம.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. அடுங்கால் என வந்தமையின், மறுதலை எச்சம் வருவிக்கப்பட்டது. பெற்ற இன்பத்தோடு ஒத்துவரின் ஆற்றலாம்; இஃது அதனது அளவு அன்று என்பது கருத்து.

மணக்:— காமப்புணர்வினல் நமக்குவரும் இன்பம் கடல்போலப் பெரிது; பிரிவினன், அஃது அடுங்காலத்து வரும் துன்பம் அக்கடலினும் பெரிது எ - று.

இஃது இன்பமுற்ருர் துன்பமுறுதல் உலகியல் என்று ஆற்றுவித்த தோழிக்கு ஆற்றலரிது என்று தலைமகள் கூறியது.

பரிதி:— காம இன்பம் கடல்நீரையொக்கும். அதனினும் துன்பம் எழுகடல் எனச் சொல்லவும்படும் எ - று.

காளிங்:— நெஞ்சே! இக்காமம் ஆகின்ற இதுதான் நாம் அவரோடு கூடிவாழுங் காலத்துப் பெருகும் இன்பம் கடல் அனைத்து; இனி இன்பததை அடும் காலமாகிய பிரிவுககாலத்துத் துன்பமானது அக்கடலினும் சாலப்பெரிது எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— அடுங்கால் என்றமையின், இன்பஞ்செய்யுங்கால் என மறுதலை வருவித்தார்.

## மேற்கோள்பகுதி :

சொக்கப்:— 'அலையா ரமுதமும் நஞ்சமும் போல இன்பமும் துன்பமுங் காட்டுவர்' அமுதமும நஞ்சமும் போல என்பதனல் இன்பத்தினும் துன்பமிக்கு என்று கூறியவாருயிற்று; என்னை? 'இன்பம் கடன் மற்று........பெரிது' என்பதனனுணர்க. (தஞ்சை. 147.)

## ஒப்புமைப்பகுதி :

"காமம்வீழ் இன்பக் கடலாமே காதலரின்
ஏம இருக்கையே தூமதிரையாம் - ஏமத்தீண்(டு)
ஆம்பரலே தோன்றும அளியூடல் ஆம்பாவில்

தெற்றித் தெறிப்பாம் ஒளிஒளிபாய் கண்ணோசேர்த்(து)
உற்றுகப்பாய்ப் பெற்ற மகவு." —இன். 27.

**முதுமொழிவெண்பாக்கள்:**

"இன்பமுற்றான் மாயைதோள் தோய்ந்துபின் எண்மடங்கு
துன்பமுற்றான் காசிபன்றான் சோமேசா - அன்புடையார்க்(கு)
—சோமேசர். 117.

"குன்றெடுத்தான் மார்புகுடி கொண்டிருந்தாள் செங்கமலை
என்றும் பிரியா திரங்கேசா - நன்றிகூர்." —இரங். 117.

1167. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன். (எ)

காமக்கடல் நிறைபுணையாக நீந்தப்படும் என்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— காமக் கடும்புனல் நீந்திக் கரை காணேன் - காமமாகிய கடலை நீந்தாதேனல்லேன், நீந்தியும் அதற்குக் கரை காண்கின்றிலேன், யாமத்தும் யானே உளேன் - அககாலுமைககாலந்தான் எல்லாரும் துயிலும் அரையிருளாயிற்று, அவ்வரையிருட்கண்ணும் அதற்கு ஒருதுணை இன்றி யானேயாயினேன், ஆயும் இறந்துபட்டுய்ந்து போகாதுளேன் ஆகா நின்றேன், ஈதொரு தீவினைப்பயன் இருந்தவாறு என்!

கடுமை ஈண்டு மிகுதிக்கண் நின்றது. உம்மை முன்னும் கூட்டப் பட்டது. யானேயாயினேன் என்பது நீ துணையாயிற்றிலை என்னும் குறிப்பிற்று.

மணக்:— காமமாகிய பெருக்காற்றினை நீந்திக் கரை காண்கின் றிலேன்; அரையிருள் யாமத்தினும் உறங்காது யானேயுளேன், மற்று உறங்காதார் இல்லை எ - று.

இது காதலர் குறித்தநாள் வருந்துணையும் ஆற்றுமாறு என்னை என்று தலைமகள் தன்னுள்ளே சொல்லியது.

காளிங்:— நெஞ்சே! நமது காதலர்மாட்டுக் கருத்துறப் பெருகிச் செல்கின்ற இக்காமநோயாகிய கடும்புனல் வெள்ளத்தை

நீந்தி ஒருகால் கரைகாணப் பெறேனாகி மற்று அவ்விடையிருள் யாமத்தும் யானே உளேன்: இனி இதற்கு உய்யுமாறு என்னை? எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— நீந்தியும் என்றுரைத்து, உம்மை மூன்றும் கூட்டினார். கடுமை - ஈண்டு மிகுதியுரிச்சொல் என்க.

முதுமொழிவெண்பாக்கள் :

"மின்னார் நகைக்கமத வேள்பகைக்க நாளொருத்தி
தென்னா வலரெண் தினகரா - உன்னாலே." —தினகர. 121.

1168. மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்ல தில்லை துணை. (அ)

இரவின் கொடுமை சொல்லி இரங்கியது.

உரைப்பகுதி :

பரிமே:— இரா அளித்து - இவ்விரா அளித்தாயிருந்தது, மன் உயிர் எல்லாம் துயிற்றி என்னல்லது துணை இல்லை - உலகத்து நிலைபெறுகின்ற உயிர்களை எல்லாம தானே துயிலப்பண்ணுதலான் என்னையல்லது வேறு துணை உடைத்தாயிற்று இல்லை.

துயிற்றி எனத் திரிந்துநின்ற வினையெச்சம் அவாய்நிலையான் வந்த உடைத்தாதலோடு முடிந்தது துணையோடு ஒன்றுகின்ற உயிர்களெல்லாம் விட்டு இறந்துபடும் எல்லையேனாய என்னையே துணையாகக்கோடலின் அறிவின்று என்பதுபற்றி அளித்து என்றார்; இகழ்ச்சிகுறிப்பு.

மணக்:— இவ்விரா அளித்தா யிருந்தது, உலகத்து வாழ்கின்ற உயிர்களெல்லாவற்றையும் துயிலப்பண்ணி, என்னையல்லாது வேறுதுணையில்லையாக இருந்தது எ - று.

இது பிற்றை ஞான்று வினவிய தோழிக்குத் தலைமகள் கண் உறங்குகின்றதில்லை என்று சொல்லியது.

பரிதி.— சகலசீவனும் பொசித்துத் துயில்கொள்ளச் செய்தாரோ ..............பெண்ணுக்கு யானலது துணையில்லையோ எ - று.

காளிங்:— தோழி! உலகத்து மன்னப்பட்ட உயிர்கள் அனைத்தையும் துயிலப் பண்ணி அளிக்கத் தக்கது இற்றை இராக்காலம் என்கின்ற இது; பின்னர் என்னை அல்லது தனக்கு வேறு ஒரு துணை இல்லையாயிற்று; எனவே இங்கு யானும இராவுமே பிரியாது இருககின்றோம் என, இது மற்று எனனின் நீங்குவது எக்காலம? என்று இங்ஙனம் தன்னுடைப் படர்மெலிவினை உரைத்தவாறாயிற்று என்று அறிக.

## உரைவிளக்குப்பகுதி :

நுண்:— மன்னுயிர் - நிலைபெற்ற உயிர். துயிற்றி - துயிலப் பண்ணுதலால் என்க. காரணப் பொருட்டாய்த் துயிற்றி எனத் திரிந்தது. வினையெச்சம அவாய்நிலையான் வந்த உடைத்தாதலோடு முடிந்தது. அளித்து - அளிததாயிருந்தது; அஃது இகழ்ச்சிக குறிப்பு.

## ஒப்புமைப்பகுதி:

" நள்ளென் றன்றே யாமம் சொல்லவிந(து)
இனிதடங் கினரே மாக்கள் முனிவின்று
நனந்தலை யுலகமும துஞ்சும்
ஓர்யான் மன்ற துஞ்சா தேனே." —குறுந். 6.

## முதுமொழிவெண்பாக்கள்:

" அரன்றனக்குத் தோழனெனும் ஆரூரன் சேணில்
பிரிந்தவழி பாவை பேசும் - இரங்கி." —முதுமொழி. 170.

1169. கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா. (கூ)

இதுவும் அது.

## உரைப்பகுதி:

பரிமே:— இந்நாள் நெடிய கழியும் இரா - காதலரொடு நாம் இன்புற்ற முன்னாள்களில் குறியவாய் அவர் பிரிவாற்றேமாகின்ற இந்நாள்களிலே நெடியவாய்ச செலகின்றது கங்குலகள், கொடியார் கொடுமையின் தாம் கொடிய - அக்கொடியாரது கொடுமைக்கு மேலே தாம் கொடுமை செய்யாநின்றன.

தன் ஆற்றாமை கருதாது பிரிதலின், கொடியார் என்றாள். கொடுமை - கடிதின் வாராது நீட்டித்தல். அவர் பிரிவானும் நீட்டிப்பானும் உளதாய ஆற்றாமைக்குக் கண்ணோடாமைமேலும் பண்டையினெடியவாய்க் கொடியவாகா நின்றன என்பதாம.

மணக்:— கொடியவர்செய்த கொடுமையினும் தாம் கொடியன வாய் நின்றன; இக்காலத்து நெடியவாய்க் கழிகின்ற இராப்பொழுதுகள் எ - று.

இது பொழுது விடிகின்றதில்லை என்று தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பரிதி:— கொடிய நாயகனிலும் கொடிய; நெடிய இரா எ - று.

காளிங்:— நெஞ்சே! நமக்குப் பிரிவு என்பதோர் கொடுமை செய்த அக்கொடியாரது கொடுமையினும் தாம் சாலக் கொடியவாய் இருந்தன: யாவை எனின், நமமை ஒரு பொழுதும் அறியாது இன்னு வாய் நெடியவாய்ப் பெருகிச்செல்லும் பல யாமங்களை நிலையுறுப்பாக உடைய இந்நெட்டிரா எ - று.

எனவே அன்று நெடுகாமையும் இன்று நெடுகுதலும் கண்டு மெலிந்துரைத்தவாறாயிற்று.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நெடிதிரா - நெடியவாய்ச் செல்கின்ற இரா.

## மேற்கோள்பகுதி:

சங்கர:— குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம் விகாரமின்றித் தன்னியல்பில் நிற்பதற்கு மேற்கோள். (நன். 172.)

## முதுமொழிவெண்பாக்கள்:

"மாறனொரு நாட்பிரிவின் மங்கையர்கள் நீடிரவைச்
சீறியுரை செய்தார் சிவசிவா - கூறிக்." —சிவசிவ. 117.

1170. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர
நீந்தல மன்னோஎன் கண். (௯௦)

நின்கண்கள் பேரழகு அழிகின்றன ஆகலின் அழற்பாலையலலை
என்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் - மனம் போலக் காதலருள்ள தேயத்துக் கடிதிற் செல்லவல்லனவாயின்; என் கண் வெள்ளநீர் நீந்தல - என்கண்கள் இங்ஙனம் வெள்ளமாகிய தந்நீரை நீந்தா.

அது மாட்டாமையின் இனி அவற்றிற்கு நீந்துதலே உள்ளதென் பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண்வந்தது. மனத்திற்குச் செலவா வது நினைவேயாகலின் உள்ளம்போன்று என்றும், மெய்க்கு நடந்து செல்லவேண்டுதலிற் கண்கள் அதனொடு சென்று காதலரைக்கண்டால் கூடாதென்னும் கருத்தால் செல்கிற்பின என்றும் கூறினாள். இதனான் வருகின்ற அதிகாரமும் தோற்றுவாய் செய்யப்பட்டது.

மணக்:— அவருள்ள இடத்து நெஞ்சினைப்போல என் கண்கள் செல்லவல்லனவாயின், வெள்ளமாகிய நீரின்கண் புகுந்து நீந்தா எ - று.

இது காண்டல் விருப்பினால் தலைமகள் கூறியது.

பரிதி:— நாயகன்மேலே வைத்தமனம் எனக்கு வசப்படாமல் நாயகனைப்பற்றிச் செல்வதுபோல, கண்ணே! நீயும் உள்ளத்துடனே கூடி நாயகனைக் காண்பதன்றியே கலுழ்ந்து நீர் கரைவது என்னோ? எ - று.

காளிங்:— தோழி! எனது உள்ளமானது அவர் உள்வழிச் சென்று என்மாட்டு வருதலின் மற்று அதுபோலத் தாமும் ஆண்டுச் சென்று கண்டு கண்டு ஓடிவருகற்பின் அங்ஙனம அழுது அழுது பெரு வெள்ளம் கோத்தநீர் நீந்துதலைச் செய்யல என்னோ என் கண்களானவை: அதனால் என் நெஞ்சு போலத் தாமும் அவரைக் கண்டு மீளப்பெறாத கடுந்துயரினால் கலுழ்கின்றன எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— செல்கிற்பின் - செல்லவல்லனவாயின். கண் எழுவாயாதலின் செய்யாமரபிற் றொழிற்படுத்தடக்கியது. (தொல். பொருள். 196) கண் - விழி. விதுப்பழிதல் - என்பதில, விதுப்பு - விரைதல், அழிதல் - வருந்துதல்.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— மறைப்பேன், கரத்தலும, காமமும், காமக்கடல், துப்பின், இன்பம, காமக்கடும, மன்னுயிர், கொடியார், உள்ளம்.

மணக்:— துப்பின், மறைப்பேன், கரத்தலும், காமக்கடல், இன்பம், காமக்கடும, மன்னுயிர், கொடியார், உள்ளம், காமமும்.

பரிதி:— மறைப்பேன், கரத்தலும், துப்பின், காமக்கடல், மன்னுயிர், உள்ளம, காமமும, இன்பம், கொடியார், காமக்கடும.

காளிங்:— மறைப்பேன், கரத்தலும, துப்பின், மன்னுயிர், கொடியார், காமக்கடும், இன்பம், உள்ளம், காமமும, காமக்கடல்.

# 118. கண்விதுப்பழிதல்

## தொகுப்புரை :

[ அன்றைக்குத் தலைவரை எமக்குக் காட்டியதால் அல்லவா இந்தத் தணியா நோயை இக்கண்கள் கண்டன. அப்படியிருக்க, இந்தக் கண்கள் அழுவது ஏனோ! வருவதை ஆராயாது பார்த்த கண்கள் இன்று தாம் தேடிக்கொண்டதுதானே' என்று சும்மாயிராமல் துயருறுவது ஏனோ! அன்றைக்குத் தாமே விரைந்து பார்த்துவிட்டு, இன்றைக்குத் தாமே அழுகின்றன. இது பரிகசிக்கத்தக்க செயல். இந்த மையுண்ட கண்கள் அன்றைக்குத் தப்பமுடியாத துன்பத்தைத் தந்துவிட்டு இன்றைக்கு அழமாட்டாமல் நீர்வற்றிப்போயின. கடலும் சிறிது என்னும்படி மிகப்பெரிய காதல நோயைச் செய்த என் கண்கள் இன்று துன்பத்தால தாமும் தூங்காமல் தவிக்கின்றன. என்னை இப்பாடுபடுத்திய என் கண்கள் இப்படித் தூங்காமல் தவிப்பது எனக்கு மிக மகிழ்ச்சி தருகிறது. விரும்பி இளகிவிடாமல் காதலரை அன்று கதுவிக்கண்ட கண்கள் வருந்தி வருந்தி நீர அற்றுப் போகட்டும். வாய்ப்பேச்சில விரும்பிச் செயலில் அதனைக் காட்டாது பிரிந்த காதலர் இருக்கிருரோ? அவரைப்பாராமல் என் கண்கள் அமைகில. காதலர் வாராதகாலத்தும் வழியை வழியைப் பார்த்துக் கண்கள் தூங்கா. வந்தபின்னும் இவர் பிரிந்துவிடுவாரோ என்று தூங்கா. இவ்வாறு இருவழியும் துன்புறுகின்றன. என்னைப் போல், தம்பட்டங்கொட்டும் கண்களையுடைய காரிகையரிடமிருந்து இரகசியத்தை அறிதல் ஊராருக்கு எளிது.]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது கண்கள் தம்காட்சிவிதுப்பான் வருந்துதல். காட்சிவிதுப்புத் தலைமகனைக் காண்டற்கு விரைதல். இது படரான் மெலிந்தவழி நிகழ்வதாகலின், படர்மெலிந்து இரங்கலின்பின் வைக்கப் பட்டது.*

மணக்:— *கண்விதுப்பழிதலாவது கண் தனது விரைவினால் அழிந்தமை தலைமகள் தோழிக்குக் கூறுதல். பிரிவின்கண் துன்பமுற்றார்க்குக் கண்ணீர் முற்பாடு தோன்றுமாதலின் தனது ஆற்றாமையை ஒன்றன்மேலிட்டுக் கூறுவாள் அதனை முற்பாடு கண்ணின்மேலிட்டுக் கூறுதலால், அதன்பின் இது கூறப்பட்டது.*

---

* *'கண்விதுப்பழித்தல்' - காளிங். பாடம்.*

1171. கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாம்கண் டது. (க)

நின்கண்கள் கலுழ்ந்து தம்மழகு இழவாநின்றன நீ ஆற்றல்வேண்டும்
என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— தண்டா நோய் யாம் கண்டது தாம் காட்ட - இத் தணியா நோயை யாம் அறிந்தது தாம் எமக்குக் காதலரைக் காட்டலான் அன்றே; கண் தாம் கலுழ்வது எவன்கொல் - அன்று அத்தொழிலவாய கண்கள் இன்று எம்மைக் காட்டச்சொல்லி அழுகின்றது என்கருதி?

காட்ட என்பதற்கு ஏற்ற செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. இன்றும தாமேகாட்டுதலல்லது யாம் காட்டுதல் யாண்டையது என்பதாம்.

மணக்:— அமையாத நோயை யாம்கண்டது அந்நோய் செய்தாரைத் தாம்காட்டுதலானே யன்றே பின்னர் அக்கண்கள்தாம் காண்டல் வேட்கையால் கலுழ்கின்றது யாவர் காட்டுவாராகக் கருதி? எ - று.

இது தலைமகள், காட்டுவாரில்லை என்று தோழியைக் குறித்துச் சொல்லியது

பரிதி:— கண்டால் அழுவது எவன்கொலோ? நோய் செய்து தானே காட்ட யான் கண்டேன் எ - று.

காளிங்:— இன்று இக்கண் தாம் மிகுந்து இங்ஙனம் கலுழ்வது என்னை கொலலோ? தம்மாலும் நம்மாலும் தடுத்தற்கு அரிய உறுநோய் உறுதற்கு அன்று அவரைத் தாம் காட்டிற்றாக யாம் கண்டது எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— தண்டா நோய் - தணியா நோய், 'நோயும் இன்பமும் இருவகை நிலையிற், காமங் கண்ணிய மரபிடை தெரிய, எட்டன் பகுதியும் விளங்க வொட்டிய, உறுப்புடையதுபோல் உணர்வுடையதுபோல், மறுத் துரைப்பதுபோல் நெஞ்சொடு புணர்ந்தும், சொல்லாமரபி னவற்றொடு கெழீஇச், செய்யாமரபின் தொழிற்படுத் தடக்கியும், அவரவர் உறுபிணி

தமபோற்சேர்த்தியும், அறிவும் புலனும் வேறுபட நிறீஇ, இருபெயர் மூன்றும் உரியவாக, உவமவாயிற் படுத்தலும் உவமமோடு, ஒன்றிடத் திருவர்கரும் உரியபாற் கிளவி" (தொல். பொருள். 196) என்ற இலககணச் சொல் விதியால் இது செய்யாமரபிற் றொழிற்படுத்தடக்கல்.

முதுமொழிவெண்பாக்கள் :

"நந்தியருள் சேர்பரவை நம்பியைக்கா ணக்கிடையா
வெந்துயரால் ஆற்றுவித்த மெல்லிழைக்கு - வந்துசொலல்."
—முதுமொழி. 171.

1172. தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்ப தெவன். (உ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— தெரிந்து உணரா நோக்கிய உண்கண் - மேல்விளைவதனை ஆராய்ந்தறியாது அன்று காதலரை நோக்கிின்ற உண்கண்கள், பரிந்து உணராப் பைதல் உழப்பது எவன் - இன்று இது நம்மால் வந்ததாகலின் பொறுத்தல் வேண்டும் எனக கூறுபடுத்துணராது துன்பம் உழப்பது என்கருதி!

விளைவது பிரிந்துபோயவர் வாராமையில் காண்டற்கரியராய் வருத்துதல். முன்னே வருவதறிந்து அது காவாதார்க்கு அது வந்தவழிப் பொறுத்தலன்றே உள்ளது. அதுவும் செய்யாது, வருந்துதல் கழிமடச் செய்கை என்பதாம்.

மணக்:— முன்பு அவர் நல்லர் என்று தெரிந்து உணர்ந்து நோக்கிய உண்கண்கள் இப்பொழுது வருத்தமுற்று, நல்லரென்று உணராவாய், துன்பம் உழப்பது எற்றுக்கு? எ - று.

இது கண்ணின் அறியாமையைத் தோழிக்குச் சொல்லியது.

பரிதி:— தெரிந்து விசாரியாமல் பார்த்தகண் தாம்கண்டமையால் யான் கண்டேன், தானும் அழுது என்னையும் வருத்தம் செய்தது கண் எ - று.

காளிங்:— தோழி! யான் உன்னை ஒன்று வினவுகின்றேன் அதனைச் சிறிது ஆராய்ந்து அறிந்து சொல்லுவாயாக: அவரிடத்துப்

பரிந்து நோக்கிய என் மை உண்டு அகன்ற கண்ணனவை அங்ஙனம் அன்று அறியாவாயினும் இன்று உற்ற பின்னும உணராவாய் உறுதுயர் உழப்பது என கருதிககொலலோ? சொல் எ - று.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்;— உணரா - உணராது. பரிதல் - கூறுபடுதல். பைதல் - துன்பம். உணர்வுடையதுபோல் உரைத்தலுமாம்.

## ஒப்புமைப்பகுதி:

"பைதல வாகிப் பசக்குவ மன்னோ என்
நெய்தல் மலரன்ன கண்." —கலி. 142 : 22 - 23.

1173. கதுமெனத் தாநோககித் தாமே கலுழும்
*இதுநகத் தக்க துடைத்து. (ங)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— தாம் கதுமென நோக்கித் தாமே கலுழும் இது - இக் கண்கள் அன்று காதலரைத் தாமே விரைந்துநோக்கி இன்றும் தாமே இருந்தழுகின்ற இது, நகத்தககது உடைத்து - நம்மால் சிரிககத்தக்க இயல்பினை உடைத்து.

கண்கள் என்பது அதிகாரத்தான் வந்தது. இது என்றது மேற் கூறிய கழிமடச்செய்கையை. அது வருமுன்னர்க் காப்பார்க்கு நகை விளைக்குமாகலான், நகத்தககதுடைத்து என்றார்.

மணக்:— இககண்கள் அன்று விரைந்து தாமேநோக்கி, இன்று தாமே கலுழாநின்ற; இது சிரிககத்தக்கதுடைத்து எ - று.

இஃது ஆற்றாமை மிகுதியால் நகுதல் மிக்க தலைமகளை இந் நகுதற்குக் காரணமென்னை என்று வினவியதோழிக்கு அவள் கூறியது.

பரிதி:— கடுகென எழுந்து நாயகரைக் கண்டு தானே அழுகின்றது எனக்குச் சிரிப்புடைத்து எ - று.

---

* 'அதுநக' காளிங் - பாடம்.

காளிங்:— தோழி! நாம் இவரைக் கண்டுகைக்கொண்ட விடத்து மேல நமக்கு இது வாய்க்கும வாயாது என்றும சீர்தூக்காது அன்று சடக்கெனத் தாமே நோக்கி இனிது இருந்து தாமே கலுழும்; அது யாம் பெரிதும் சிரிக்கத்தக்கது ஒன்று உடைத்து எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— கதுமென - விரைந்து. இது என்பது மேற்சொல்லிய கழிமடச் செய்கை. கண்கள் - அதிகாரத்தான் வந்தது. இதுவும் தொழிற் படுத்தடக்கல். அது, பெரும்பான்மையாகலான் முன்னும் காண்க.

## மேற்கோள்பகுதி :

இளம்:— 'உடம்பும உயிரும் வாடியக்கண்ணும் என்னுற்றன கொல் இவை எனின் அல்லதைக் கிழவோற் சேர்தல் கிழத்திக்கில்லை' என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 200.)

நச்:— ஷை (தொல். பொருள். 203.)

## முதுமொழிவெண்பாக்கள் :

" தாதையன்றித் தானேதுச் சந்தனைச்சேர்ந் தின்னலுற்றாள்
சூதில் சகுந்தலைதான் சோமேசா - ஓதின்." —சோமேசர். 118.

" நாடரிய கண்ணே நளனை விழித்தகற்றித்
தேடியழல் என்னோ சிவசிவா - ஓடிக்." —சிவசிவ. 118.

" காதல் அருச்சுனனைக் கண்டூர் வசியடைந்த(து)
ஏதமன்றோ மேனாள் இரங்கேசா - ஓதில்." —இரங். 118.

1174. பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து. (சு)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— உண்கண் - உண்கண்கள், உயலாற்றா உய்வு இல் நோய் என்கண் நிறுத்து - அன்று யான் உய்யமாட்டாமைக்கு ஏதுவாய ஒழிவில்லாத நோயை என்கண்ணே நிறுத்தி, பெயலாற்றா நீர் உலந்த - தாமும் அழுதலைமாட்டாவண்ணம் நீர் வற்றிவிட்டன.

நிறுத்தல் - பிரிதலும் பின்கூடாமையும் உடையாரைக் காட்டி அதனால் நிலைபெறச்செய்தல். முன் எனக்கு இன்னாதனசெய்தலால் பின் தமக்கு இன்னாதன தாமே வந்தன என்பதாம்.

மணக்:— உயல் ஆற்றாத என்மாட்டு உய்வில்லாத நோயை உண்கண்கள் நிறுத்தி, தாமும் அழமாட்டாவாய் நீருலந்தன எ - று.

கண்கள் தாம் நினைத்தது முடித்துத் தொழின்மாறின என்று கூறியவாறு.

பரிதி:— மழை பெய்வதுபோலக் கண்ணீர் சொரிந்து என் ஆவியைக் காமநோய் செய்தது இக்கண் எ - று.

காளிங்:— தோழி! உய்தற்கு ஓர் உபாயம் இல்லாத உறு துயரத்தை என் கண்ணும் மருவுறுத்தி வைத்துத் தாமும் அகத்துள்ள நீர் ஒழிந்தன: என் மையுண்டு அகன்ற கண்ணனவை: இனி யாதோ செயத்தக்கது? எ - று.

1175. படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றாக்
காமநோய் *செய்தஎன் கண். (ரு)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— கடல் ஆற்றாக் காமநோய் செய்த என்கண் - எனக்குக் கடலும் சிறிதாமவண்ணம் பெரிதாய காமநோயைச் செய்த என்கண்கள், படல் ஆற்றா பைதல் உழக்கும் - அத்தீவினையால் தாமும் துயில்கிலவாய்த் துன்பத்தையும உழவாநின்றன.

காமநோய் காட்சியான் வந்ததாகலின், அதனைக் கண்களே செய்ததாகக்கி கூறினாள். துன்பம் அழுதலானாயது.

மணக்:— கடலினும் மிக்க காமநோயை என்மாட்டு நிறுத்து தலானே கண்கள் தாம் உறங்கமாட்டாவாய்த் துன்பமுறாநின்றன எ - று.

இது பிறர்கு இன்னாமை செய்தார்க்கு இன்னாமை வந்ததென்று தோழிகுத் தலைமகள் கூறியது.

* 'உற்றஎன்' காளிங் - பாடம்.

பரிப்:— இவை எல்லாம் ஒன்றின் ஒன்று வந்தனவாகக் கொள்ளப்படா. இவ்வதிகாரத்துக காம வேதனையால் கண்ணுககு உறுவன எல்லாம் கூறப்பட்டது எ - று.

பரிதி:— துயரமாற்ருமல் அழும்; கடலினும் பெரிதாகிய காம நோய் செய்த என்கண் எ - று.

காளிங்:— தோழி! ஒருபொழுதும் துயில மாட்டாவாய் இங்ஙனம் சால உறுதுயர் உழக்கும்: யாவை எனின் கடலும் நிறையாற்ருப் பெருவெள்ளம ஆகிய காமநோய் உற்ற என் கண்களானவை: யான் இதற்கு என் செய்யத்தகுவது எ - று.

1176. ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் *இதற்பட் டது. (சா)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— எமக்கு இந்நோய் செயத கண் தாம் இதற்பட்டது - எமக்கு இக்காமநோயினைச் செய்த கண்கள்தாமும் இத்துயிலாது அழுதற் கண்ணே பட்டது, ஓஒ இனிதே - மிகவும் இனிதாயிற்று.

ஒ என்பது மிகுதிப்பொருட்கண்வந்த குறிப்புச்சொல். தம்மால் வருத்தமுற்ற எமக்கு அது தீர்ந்தாற்போன்றது என்பதாம்.

மணக்:— எமககு இநநோயைச் செய்த கண்கள் தாமும் இந் நோயகத்துப் பட்டது மிகவும் இனிது எ - று.

இது நின்கண் கலங்கிற்று; அஃது எனககு இன்னுதாயிற்று என்ற தோழிக்கு அது மிகவும் இனிது என்று தலைமகள் கூறியது.

பரிதி:— ஓகோ நல்லதே நமக்கு விரகத்தைக் காட்டித் தந்து பின்பு தாமே கலுழ்ந்து அழுவது; இதற்கு எனசெய்வன் எ - று.

காளிங்:— தோழி! சால வியப்ப இனியது ஒன்றே: யாது எனின், முன்னம் தாம் அவரைக் கண்டு பின் எமககு இவ்வாறு இடர்தரும்

* 'இடர்ப்பட்டது' காளிங் - பாடம்.

நோய் செய்த கண் தாம் இப்பொழுது அழுதும் துயிலாதும் இங்ஙனம் இடர்ப்பட்ட இது எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— ஓ என்பது மிகுதிப்பொருளின் வந்த குறிப்புச்சொல்.

மேற்கோள்பகுதி :

இளம்:— 'உடம்பும் உயிரும வாடியக கண்ணும் என்னுற்றன கொல் இவை எனின் அல்லதைக், கிழவோற் சேர்தல் கிழத்திககில்லை' என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 200.)

நச்:— ஷை (தொல். பொருள். 203.)

குணவீர:— ஓகாரம் சிறப்புப் பொருளில் வந்ததற்கு மேற்கோள். (நேமி. 55.)

1177. *உழந்துழந் துள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண். (எ)

இதுவும் அது.

உரைப்பகுதி:

பரிமே:— விழைந்து இழைந்து வேண்டி அவர்க் கண்ட கண் - விழைந்து உண்ணெகிழ்ந்துவிடாதே அன்று அவரைக்கண்ட கண்கள், உழந்து உழந்து உள்நீர் அறுக - இன்று இத்துயிலாது அழுங்கலாய துன்பத்தினை உழந்து உழந்து தம்மகத்துள்ள நீர் அற்றேபோக.

அடுக்கு இடைவிடாமைககண் வந்தது. அறுதலாகிய இடத்து நிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது.

மணக்:— அழுதலை யுழந்துழந்து உள்ளநீர் அறுவனவாக, தாம் வேண்டினவரை விரும்பி நெகிழ்ந்து கண்டகண்கள் எ - று.

இஃது இவ்வாறு அழுதல் தகாதென்று தோழிக்குத் தலைமகள் கூறியது.

* 'உழைந்துழைந' காளிங் - பாடம்.

பரிதி:— உழைத்து உழைத்து கண்ணீர் உகுத்தது, விரும்பி அவரைக்கண்ட கண் எ - று.

காளிங்:— தோழி! முன்னம் தாம் விரும்பியவரைக் கண்டு இன்புற்ற கண் இவ்வாறு விரும்பிக் குழைந்து அலமந்து அலமந்து அழுது இங்ஙனம் உண்ணீர் செலவு அற்றுப்போக: இனி இதற்கு என்னை செய்வது எ - று.

இனி மற்று இங்ஙனம் பிரிவிடையாற்றுளாகிய தலைமகள் கண் கலுழ்தலே யன்றி மெய்பசத்தலுண்டு அன்றே! அதனை மற்று இதன் பின்னரே அவள் பசப்பினால் உறுகின்ற பருவரலை மதித்து உரைக் கின்றது மேலை அதிகாரம்.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— அடுக்கு - இடைவிடாமைக்கண் வந்தது.

1178. பேணாது பெட்டார் உளர்மன்னோ [1]மற்றவர்க்
காணா [2]தமைவில கண். (அ)

காதலர் பிரிந்துபோயினாரல்லர் அவர்கண்டுளர் அவரைக்காணுமளவும்
நீ ஆற்றல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— பேணாது பெட்டார் உளர் - நெஞ்சால் விரும்பாது வைத்துச் சொல்மாத்திரத்தால் விழைந்தவர் இவ்விடத்தே உளர், மற்று அவர்க் கண் காணாது அமைவில - அவ்வுண்மையால் பயன் யாது, அவரைக் கண்கள் காணாதமைகின்றன இல்லையாயின.

செயலால் பிரிந்துநின்றமையின் பேணாது என்றும், முன் நலம் பாராட்டிப் பிரிவச்சமும் வன்புறையும் கூறினாராகலின் பெட்டார் என்றும் கூறினாள். மன் ஒழியிசைக்கண் வந்தது. மற்று வினைமாற்றின்கண் வந்தது. ஓகாரம் அசைநிலை. யானாற்றவும் கண்கள் அவரைக காண்டற்கு

---

[1] 'கொண்கனை' காளிங் - பாடம். [2] 'இமையல' பரிப் - பாடம்.

விரும்பாநின்றன என்பதாம். இனிக் கொண்கனை என்று பாடமாயின், என் கண்கள் தம்மைக் காணுதமைகின்ற கொண்கனைத் தாம் காணுதமைகின்றன இல்லை; இவ்வாறே தம்மை ஒருவர் விழையாதிருக்கத் தாம் அவரை விழைந்தார் உலகத்துளரோ என்று உரைகக. இதற்கு மன் அசைநிலை.

மணக்:— விரும்பத்தகாததனை விரும்புவாரும் உளரோ? நம்மைக் காண்டல் விருப்பமின்றிப்போன அவரைக் காணுது அமைகின்றில என் கண்கள்; இதனை ஒழியப் பிறவும் உளவோ? எ - று.

பரிப்:— சொல்லாது பிரிந்த தலைமகனது பெருமையை உட்கொண்டு வேட்கையால் கூறியது. விரும்பத்தகாது என்றமையால் சொல்லாது பிரிதலாயிற்று.

பரிதி:— பேணுது துயர முறுத்துவாராகிய நம் நாயகரைக் காணுமல் கண் துயிலாது எ - று.

காளிங்:— தோழி! இவ்விடர் இரக்கத்திற்கு ஏதுவாகிய கொண் கனைப் பின்னுங் காணுவாயின் வாழாவாய் விட்டன இக்கண்களானவை. இதற்கு என்னை காரணம்? உலகத்துத் தம்மை விரும்பாதாரைத் தாம் விரும்புவாரும் உளரோ? எங்கும் கண்டது இல்லை எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

"ஒல்லையிற்கண் ணன்வருங்கொல் என்றயர்ந்தா ருத்தவன்பால்
முல்லைமட மாதர் முருகேசா - புல்லனுறப்." —முருகேசர். 118.

1179. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண். (கூ)

நீயும் ஆற்றி நின்கண்களும் துயில்வனவாதல் வேண்டும் என்ற
தோழிக்குச் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— வாராககால் துஞ்சா - காதலர் வாராதஞான்று அவர் வரவுபார்த்துத் துயிலா, வரின் துஞ்சா - வந்தஞான்று அவர் பிரிவஞ்சித் துயிலா, ஆயிடைக கண் ஆரஞர் உற்றன - ஆகலான் அவ்விருவழியும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினை உடைய.

ஆயிடை எனச் சுட்டு நீண்டது. இனி அவற்றிற்குத் துயில் ஒருஞான்றும் இல்லை என்பதாம்.

மணக்:— அவர் வாராத காலத்துப் புணர்ச்சி வேட்கையால் துஞ்சா; வந்த காலத்துப் பிரிவாரென்று அஞ்சித்துஞ்சா; அவ்விரண்டிடத்தினும் மிக்க துன்பமுற்றன கண்கள் எ - று.

இது நீ உறங்கவேண்டும் என்ற தோழிக்கு, தலைமகள் இன்றேயல்ல, எஞ்ஞான்றும் உறக்கமில்லை என்றது.

பரிதி:— நாயகர் வராக்காலும் நித்திரையில்லை; வந்தாலும் கலவியினால் நித்திரையில்லை எ - று.

காளிங்:— என் தோழி! அவர் இவ்விடத்து வாராத காலத்து எல்லாம் வரவு நோக்கி வருந்தித் துயிலப்பெறு; மற்று இனி ஒருகால் வந்தனராயின் பிரிவர் என்னை என்று அஞ்சித் துயிலப்பெறு: இங்ஙனம் இருவாற்றானும் அவ்விடத்து இவ்விடத்து இருந்து அஞர் உற்றன என் கண்களானவை எ - று.

ஆரஞர் உற்றன என்பது அரும் துயர் உற்றன என்பது.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஆயிடை என்பதில், இடை ஏழாமுருபாகலின் "நீட வருதல்" (தொல். எழுத் - 208) என்பதனான்நீளாது, எழுத்ததிகாரப் புறனடையால் (தொல் - எழுத் - 483) அவ்வென்னும் அஃறிணைப் பன்மைச் சுட்டுப்பெயர் நீண்டு, வகரம் வேறுபட முடிந்தது. "ஆயிடையிருபேராண்மை செய்த பூசல்" என்பது "ஆயிடைத்தமிழ்" (தொல் - சிறப்பு) என்பதும் அது.

## மேற்கோள்பகுதி:

நச்:— வந்தவழி எள்ளினும் என்ற தலைவி கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 111.)

முதுமொழிவெண்பாக்கள் :

"போதளவும் சங்கப் புதுமுத்தின் சங்கவதி
சீதளசெங் காமத் தினகரா - நீதமுவ." —தினகர. 122.

1180. மறைபெறல் ஊரார்க் கரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணா ரகத்து. (௧௦)

காதலரை இவ்வூர் இயற்பழியாமல் அவர்கொடுமையை
மறைக்கவேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— எம்போல் அறைபறை கண்ணார் அகத்து மறை பெறல் - எம்மைப்போலும் அறைபறையாகிய கண்ணினையுடையார் தம் நெஞ்சின்கண் அடக்கிய மறையை அறிதல், ஊரார்க்கு அரிதன்று - இவ்வூரின்கண் உள்ளார்க்கு எளிது.

மறை என்றது ஈண்டு மறைக்கப்படுவதனை. அகத்து நிகழ்வதனைப் புறத்துள்ளார்க்கு அறிவித்தலாகிய தொழிலான் ஒற்றுமை உண்மையின், அறைபறையாகிய கண் என்றாள். இங்ஙனம் செய்யுள் விகாரமாககாது அறைபறைக கண்ணார் என்று பாடம் ஓதுவாரும் உளர். யான் மறைகக வும் இவை வெளிப்படுத்தாநின்றன என்பதாம்.

மணக்:— எம்மைப்போல அறைபறையாகிய கண்களையுடையார் மாட்டு உளதாகிய மறையை அறிதல் ஊரார்க்கு எளிது எ - று.

பரிப்:— வரையாது பிரியப்பட்ட தலைமகள் என் கண்ணினாலே இவ்வொழுக்கம் பிறர்க்குப் புலனாகா நின்றது; அதற்கு யாங்ஙனம் செய்வேம் என்று தோழிககுக் கூறியது.

பரிதி:— மறைப்பது அரிது; பலருமறியத் தட்டிச் சாற்றும் பறை போல என் கண்ணீர் பலருமறிய என்காமத்தை அறிவிப்பது எ - று.

காளிங்:— தோழி! அகத்து அடங்கு பொருளைப் புறத்து எளிதிற் பெறுதல் இவ்வூரவர்க்கு அரிது அன்று: யார்மாட்டு எனின்

எம்போலக் கருத்துற்றது ஒன்றனை வெளிப்பட அறையும் பறைபோலும் கண்ணினையுடையார்மாட்டு எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண் :— அறை பறைகண் - பறையாகிய கண். செய்யுள் விகாரமானது, பறைக்கண் என்னுமையால் என்க.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— கண்டாம், தெரிந்து, கதுமென, பெயலாற்று, படலாற்று, ஓஒவினிதே, உழந்து, பேணாது, வாராக்கால், மறைபெறல்.

மணக்:— பேணாது, கண்டாம், தெரிந்து, கதுமென, மறைபெறல், ஓஒவினிதே, உழந்து, பெயலாற்று, வாராக்கால், படலாற்று.

பரிதி:— ஓஒவினிதே, கதுமென, கண்டாம், தெரிந்து, படலாற்று, வாராக்கால், பேணாது, பெயலாற்று, மறைபெறல், உழந்து.

காளிங்:— ஓஒவினிதே, கதுமென, கண்டாம், பேணாது, மறைபெறல், வாராக்கால், தெரிந்து, படலாற்று, பெயலாற்று, உழந்து.

# 119. [1]பசப்புறுபருவரல்.

## தொகுப்புரை :

[என்னை நயந்த தலைவருக்கு, பிரிவு உடம்பட்டேன். அதனால் என்மேனி பசந்தது. அதை யாருக்குச் சொல்வேன். இப்பசப்பு தலைவர் உண்டாக்கினார் என்ற தடிப்பால் என் மேனிமுழுதும் பரவித் துன்புறுத்துகிறது. தலைவர் பிரிகின்றகாலத்தே கைம்மாறாகக் காதல் நோயையும், பசலையையும் தந்துவிட்டு எனது அழகையும் நாணத்தையும் கொண்டுபோயினார். என்னுடைய உள்ளத்தால் நினைப்பது அவர் உரைகளை. பேசுவது அவர் நற்குணங்களை. அங்ஙனமிருக்க மனமொழிகளின் வழி நடக்கவேண்டிய உடலில்மட்டும் பசப்பூர்ந்தது. இது என்ன கள்ளமோ அறியேன். என் காதலர் இதோ பிரிந்துசெல்கின்றார். அதற்குள் இங்கே என்மேனியில் பசப்பூர்ந்து விட்டது. விளக்கவிந்த நேரம்பார்த்து விரைந்துவரும் இருளைப்போலக் காதலர் பிரியும் காலம் பார்த்து வருகிறது பசப்பு இறுகத் தழுவிக்கிடந்தேன். சிறிது விலகினேன் அவ்வளவில் அள்ளிக்கொள்வதுபோல அளவு மிகுதியாகப் பரவிவிட்டது பசப்பு. ஊரவர்கள் இவள் பிரிவால் மேனி பசந்தாள் என்று கூறுகிறார்களே தவிர, அவர் இவளை விட்டுப் பிரிந்தார் என்று கூறுகிறார்கள் இல்லையே. என்னைப் பிரிவு உடன்படச்செய்த தலைவர் நல்லநிலையில் இருப்பாராயின் என்மேனிபசந்து படுவதுபடட்டும். என்னைக் குறைநயந்துகூடிய தலைவர் இன்று தலையளிசெய்யாது பிரிந்தார் என்று அவரை ஊரவர் தூற்றாதிருந்தால் நான் பசப்பு எனப் பெயர்பெறுதல் நல்லது.]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அது பசப்புற்ற பருவரல் என விரியும். அஃதாவது பசப்புறுதலானுள வருத்தம். இதனைப் [2]"பங்கெறிந்த வயா" என்பது போலக்கொள்க. பசப்பாவது பிரிவாற்றாமையான் வருவதோர் நிறவேறுபாடு. இது, தலைமகனைக் காணப்பெறாதவழி நிகழ்வதாகலின், கண்விதுப் பழிதலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *பசப்புறுதலாவது பசப்புறுதலால் வந்த வருத்தத்தைத் தோழிக்குத் தலைமகள் கூறுதல். காதலித்தார்க்குக் காதலிக்கப்படும் பொருளெய்தாக்கால் அவர் நிறம் வேறுபடுமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.*

---

[1] *'பசப்புறுதல் - மணக் - பாடம்.'* [2] *கலித்.* 40 : 22.

1181. *நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்*
*பண்பியார்க் குரைக்கோ பிற.*

**முன் பிரிவுடம்பட்ட தலைமகள் அஃதாற்றாது பசந்தவழித் தன்னுள்ளே சொல்லியது.**

**உரைப்பகுதி:**

பரிமே:— *நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் - என்னை நயந்தவர்க்கு அது பொழுது பிரிவையுடம்பட்ட நான், பசந்த என் பண்பு யார்க்கு உரைக்கோ - அதனையாற்றாது இது பொழுது பசந்த என் இயல்பினை யார்க்குச் சொல்வேன்.*

*பிற என்பது அசைநிலை. உடம்படாவழி ஒழிதல் குறித்துப் பிரிவுணர்த்தினராகலின் அவர் அன்புடையர் என்னும் கருத்தான் நயந்தவர் என்றும், இதுவே உடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலின் இனி அவரைக் கூடுதலரிது என்னும் கருத்தான் நல்காமை என்றும், முன்னர் உடம்படுதலும் பின்னராற்றாது பசத்தலும் பிறர்செய்தன அல்ல என்பாள் பசந்த என் பண்பு என்றும், யான் செய்துகொண்ட துன்பத்தினை இனி ஒருவர்க்குச் சொல்லலும் பழியாம் என்னும் கருத்தால் யார்க்கு உரைக்கோ என்றும் கூறினாள்.*

மணக்:— *காதலிக்கப்பட்டவர்க்கு அவர் அருளாமையை இசைந்த யான் பசந்த எனது நிறத்தை மற்று யாவர்க்குச் சொல்லுவேன் எ - று.*

*இது தலைமகள் இப்பசப்பை யாவரால் நீக்குவேனென்று வெருட்சி கொண்டு கூறியது.*

பரிப்:— *காதலர் பிரிந்துழி ஆற்றியிருத்தல் பெண் கடன் என்ற தோழிக்கு, யானும் ஆற்றுவேனாக இப்பசப்பை யாவரால் நீக்குவேன் என்று வெகுண்டு கூறியது.*

பரிதி:— *கூடிய நாயகர் பிரிந்து நோயும் பசலையுந்தந்த வருத்தத்தை யாருக்குச் சொல்லுவன் எ - று.*

காளிங்:— *நெஞ்சே! முன் எம்மைப் பெரிதும் நயந்து அளித்தவர் தாமே பின் இடையறவு இன்றிக் கடைபோக நல்காமையைக் கண்டு நேர்ந்தேனாகி மேனிபசந்த என் பருவரலினை வேறு யார்க்குச் சொல்லி ஆற்றுவேனோ என்பதனால் இது தோழி கேட்பக் கூறிய கொடுமைக் கூற்று என்பது பொருள் எ - று.*

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பிற - அசைநிலை.

1182. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு. (உ)

ஆற்றுளெனக் கவன்றதோழிக்கு ஆற்றுவலென்பதுபடச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— யான் ஆற்றியுளேனாகவும், பசப்பு - இப்பசப்புத்தான், தந்தார் அவர் என்னும தகையால் - என்னை உண்டாக்கினார் அவர் என்னும் பெருமிதத்தான், என் மேனிமேல இவர் தந்து ஊரும் - என் மேனியை மேலகொண்டு செலுத்தாநின்றது.

"குருதிகொப் புளிகரும் வேலான் கூந்தன்மா இவர்ந்து செல்ல' என்புழியும இவர்தல இப்பொருட்டாதல் அறிக. இஃது உரிமைபற்றி ஊர்கின்றது, இதற்கு நீ கவலல் வேண்டா என்பதாம்.

மணக்:— காதலர் வரவிட்டார் என்னும் மிகுதியானே, பசப்பு என்உடம்பின்மேலே பரந்து ஊரும் எ - று.

இஃது இப்பசலையை நீககவேண்டுமென்ற தோழிக்கு இஃது என் குறிப்பினாலே வந்ததல்ல; நீக்கவேண்டுவாயாயின், அவர்க்குச் சொல் என்று கூறியது.

பரிதி:— நாயகர் வரக்காட்டின பசலையாகையாலே அது மேனி எங்கும் பரந்தது எ - று.

காளிங்:— நம்மைப் பிரிந்து ஏகிய அவர் இங்ஙனம் நமக்குத் தந்தார் என்னும் இவ்வுரிமைத் தகைமையாலே என் மேனிமேல் இங்ஙனம பரந்து ஏறுகின்றது பசப்பு எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— இவர்தல் - மேற்கோடல். "குருதி கொப்புளிக்கும் வேலான் கூந்தன்மா இவர்ந்துசெல்ல" (சீவக - 1889) என்பதும் அது.

1183. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து. (௩)

அழகும் நாணும் அழியாமல் நீ ஆற்றல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே·— கைம்மாறா நோயும் பசலையும தந்து - பிரிகின்ற ஞான்றே அவ்விரண்டற்கும் தலைமாறாக இக்காமநோயினையும பசலையும் எனக்குத் தந்து, சாயலும நாணும அவர் கொணடார் - என் மேனி அழகினையும் நாணினையும் அவர் கொணடு போயினர்.

எதிர் நிரல்நிறை. அடக்குந்தோறும் மிகுதலான், நோய் நாணிற்குத் தலைமாறாயிற்று. இனி அவர் தந்தாலல்லது அவை உளவாகலும் இவை இலவாகலும் கூடா என்பதாம்.

மணக்:— மென்மையும் நாணமும் அவர் கொண்டு போனர்; அதற்குமாறாக நோயையும பசலையும தந்து, எ - று.

மென்மை - பெண்மை. இது தலைமகள் வெருட்சிகண்டு அது மென்மையும் நாணமும் உடையார் செயலன்று என்று கடிந்து கூறிய தோழிக்கு அவள் ஆற்றாமையால் கூறியது.

பரிதி:— அழகும் நாணத்தையும் அவர்கொண்டார் எனககு விரகமும் பசலையும்தந்து எ - று.

காளிங்:— தோழீ! மயில்போலும் சாயலும் உயிர்போலும் நாணமும் என காதலராகியவர் கொண்டு ஏகினர் ; தாம அவைகொண்டு ஏகினர் அதற்குக கைம்மாறாக எனககு இவ்வுறு துயருமபசப்பும் என்னும இவை இரண்டும் ஒருங்கு தந்து எ - று.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— சாயல் - அழகு.

**மேற்கோள்பகுதி :**

பெருந்:— 'இவையிற்றைக் கொண்டு இவை தந்தார் என்றமையால் பரிமாற்றம் ஆயிற்று. இதனை மாறாட்டு எனவும் அமையும்' என்பர். (வீர. 155.)

ஒப்புமைப்பகுதி :

"பைதல் ஒருதலைச் சேக்கும் நாடன்
நோய்தந் தனனே தோழி
பசலை யார்ந்தன குவளையங் கண்ணே." —குறுந். 13.

"ஆய்மலர் உண்கண் பசப்பச்
சேய்மலை நாடன் செய்த நோயே." —ஐங்: 242.

"அரிமதர் உண்கண் பசப்ப நோய்செய்யும் பெருமான்."
—கலி. 82. 20 - 1.

"பயப்பூரச், சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே."
—திருஞா. செங்காட்டங்.

முதுமொழிவெண்பாக்கள்:

"சீவகனீங் கப்பசந்து சேடிழந்தெய்த் தாள்பதுமை
மூவலிலா தோங்கு முருகேசா - ஓவலிலாச்." —முருகேசர். 119.

1184. உள்ளுவன் மன்யான் உரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு. (௪)

பிரிகின்றவர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையும் அறிதியாகலின் நீட்டியாது வருவர் என்றவழிச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— யான் உள்ளுவன் - அவர் சொற்களை யான் மனத்தால் நினையாநிற்பேன், உரைப்பது அவர்திறம் - வாக்கால் உரைப்பதும் அவர் நற்றிறங்களையே; பசப்புக் கள்ளம் - அங்ஙனம் செய்யாநிற்கவும், பசப்பு வந்து நின்றது, இது வஞ்சனையாயிருந்தது.

பிறவும் ஓவும் அசைநிலை. மெய் மற்றை மனவாக்குக்களின் வழித்தாகலின் அதன் கண்ணும் வாற்பாற்றன்றாயிருக்க வந்தமையின், இதன் செயல் கள்ளமாயிருந்தது எனத் தான் ஆற்றுகின்றமை கூறிய வாறாயிற்று.

மணக்:— யான் எக்காலமும் நினைப்பேன்; சொல்லுவதும் அவர் திறமே; இத்தன்மையேனாகவும், பசலை வஞ்சனையாகப் பரவாநின்றது; இதற்கு நிலை யான் அறிகிலேன எ - று.

இஃது ஆற்றாமை மிகா நின்றது என்று கூறியது.

பரிப்:— முன்பு களவு காலத்து வேட்கையால் அவரது செயலைக் கூறவும் நினைக்கவும ஆற்றாமை நீங்கும; இப்போது அதுபோல் அன்றி ஆற்றாமை மிகாநின்றது என்று கூறியது.

பரிதி:— நினைப்பதும் உரைப்பதும் நாயகரேயன்றி வேறுரையேன்; பசலை ஏன் வந்தது எ - று.

காளிங்:— தோழீ! யான் முதுகுரவர் ஆகிய பெரியோரையும் முகம் நோககுதல் இன்றி எப்பொழுதும மற்று அவரையே என் நெஞ்சினால் நினைத்திருப்பது பெரிது; மறறு என் நாவினால் உரைப்பதும் எப்பொழுதும் அவர் தம் குணத்திறமே; இங்ஙனம் அவரிடை அற்றம் இன்றி எனது உரையும் மனமும் ஒருங்கு கலந்திருப்பவும், இவ்விடத்து வருகின்றது அற்றம் பார்த்தல் செய்வது அல்லாமையும் மற்றிது ஓர் வஞ்சனையாம் இத் துணையே பசக்கின்ற பசப்பு எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பிறவும், ஓவும் அசை.

1185. உவக்காணெம் காதலர் செல்வார் இவக்காணென்
மேனி பசப்பூர் வது. (ரு)

காதலர் பிரிந்தணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலே என்ற தோழிக்கு முன்னிகழ்ந்தது கூறியது.

உரைப்பகுதி :

பரிமே:— எம் காதலர் உவக்காண் செல்வார் - பண்டும் நம்காதலர் உங்கே செல்வாராக, என் மேனி பசப்பூர்வது இவககாண் - என் மேனி பசப்பூர்வது இங்கேயன்றே! அப்பெற்றியது இன்று பிறிதொன்றாமோ?.

உவக்காண் இவக்காண் என்பன ஒட்டிநின்ற இடைச்சொற்கள். தேயவண்மையாற் காலவண்மை கருதப்பட்டது. அவர்செலவும் பசப்பினது

வரவும் பகலிரவுகளின் செலவும் வரவும் போல்வது அறிந்து வைத்து, அறியாதாய்போல நீ சொல்லுகின்றது என்னை என்பதாம்.

மணக்:— எம் காதலராகச் செல்கின்றுரை உங்கே பாராய்; என்மேனிமேலே பசப்புப் பரவுதலை இங்கே பாராய் எ - று.

இஃது அவர் பிரிந்தது இப்பொழுதாயிருகக, பசலை பரவா நின்றது; அவர்வருமளவும் யாங்ஙனமாற்றுதும என்று தலைமகள் கூறியது.

பரிதி:— அதே நாயகர் 'செல்வம் இதே'என மேனி பசப்புறுவது பார் எ - று.

காளிங்:— தோழீ! கேளாய் அவர் பிரிந்தது பெரிதுகொல் என்று கருதவேண்டா; போய் அங்கே காண்; எம் காதலர் இப்பொழுது செல்வார் ஆயினர். மற்று அவ்வளவில் இங்குக காண் என்மேனி ஓர் பசப்பு வந்து ஊர்வது எ - று.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— உவக்காண், இவக்காண் என்பன, ஒட்டிநின்ற இடைச்சொல்.

1186. விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு. (சா)

இதுவும் அது.

## உரைப்பகுதி:

பரிமே:— விளக்கு அற்றம் பார்கும் இருளேபோல் - விளக்கினது மெலிவு பார்த்து நெருங்கிவரும் இருளேபோல, கொண்கன் முயக்கு அற்றம் பார்கும பசப்பு - கொண்கன் முயக்கினது மெலிவுபார்த்து நெருங்கிவரும் இப்பசப்பு.

பார்க்கும் என்பன இலக்கணைச்சொல். முன் பிரியாதிருக்கவும் தனக்கு அவகாசம் பார்த்துவரும் பசப்புப் பிரிவுபெற்ருல் என் செய்யாது என்பதாம்.

மணக்:— விளக்கினது இறுதி பார்க்கும் இருளே போலக் கொண்கன் முயக்கினது இறுதிபார்த்து நின்றது பசப்பு எ - று.

இஃது அவர் பிரிந்தது இப்பொழுது; இப்பசப்பு யாங்ஙனம் வந்தது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— விளக்குக் கெட இருள் மூடுவதுபோலும் என் காதலர் பிரிய, பசலை மூடிற்று எ - று.

காளிங்:— உலகத்து விளக்கினது அற்றம் பார்க்கும் இருளே போலத் தானும் என் நிறம் கவர்தற்கு அவர் முயக்கு அற்றம் பார்க்கும் பசப்பித்தற்கு; ஒரு தீர்வு இல்லையோ? எ - று.

## ஒப்புமைப்பகுதி:

"பொலம்படைப் பொலிந்த வெண்டேர் ஏறிக்
கலங்குகடல துவலை ஆழி நனைப்ப
இனிச்சென் றனனே இடுமணல் சேர்ப்பன்
யாங்கறி நன்றுகொல் தோழிஎன்
தேங்கமழ் திருநுதல் ஊர்தரும் பசப்பே." —குறுந். 205.

"பசலை காதலர், தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே." —ஷை. 399.

"விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கிற்றால் பசப்பே." —கலி. 130 : 20 - 21.

"முயங்காக்கால் பாயும் பசலை." —நாலடி. 391.

"கொழுநனைச் சேர்ந்தோர்
பசலை என்னவே புடைந்தது பாதகன் இரதம்."
—விநாயக, மகோற்கடர். 583.

## முதுமொழிவெண்பாக்கள்:

"தாமிழைக்கும் சொல்லால் தளர்ந்தனது மாலைபெறுச்
சேயிழைக்கு வேறுர் தினகரா - தூய." —தினகர. 123.

1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு. (எ)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— புல்லிக் கிடந்தேன் புடை பெயர்ந்தேன் - முன் ஒரு ஞான்று காதலரைப் புல்லிக்கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தேன், அவ்வளவில் பசப்பு அள்ளிக்கொள்வற்று - அப்புடைபெயர்ந்த அளவிலே பசப்பு அள்ளிக்கொள்வது போல வந்து செறிந்தது.

கொள்வது என்பது குறைந்து நின்றது. அள்ளிக்கொள்வது - அள்ளிக்கொள்ளப்படும் பொருள். அப்புடைபெயர்ச்சி மாத்திரத்துக்கு அவ்வாறாயது, இப்பிரிவின்கண் ஆமாறு சொல்லவேண்டுமா என்பதாம்.

மணக்:— முயங்கிக் கொண்டு கிடந்த யான் அறியாது புடைபெயர்ந்தனன்; அவ்வளவிலே அள்ளிக்கொள்ளலாம்படி செறிந்தது பசலை எ - று.

இது தலைமகனால் சொல்லாது பிரியப்பட்ட தலைமகளைப் பிற்றை ஞான்று இவள் வேறுபாடுகண்டு இஃது எற்றினான் ஆயிற்று என்று குறித்து நோக்கிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— நாயகரைப் புல்லியிருந்து ஒருபுடைப் பெயர்ந்தேன்; அதற்குள்ளே என்மேனி அள்ளிக் கொள்ளப் பசப்பாயிற்று எ - று.

காளிங்:— தோழி! அவர் நம்மைப் பிரியாது உடன்வாழ் காலத்து ஒரு ஞான்று பெரிதும இறுக இறுகத் தழுவிக்கிடந்தேன்; அவ்விடத்து என் கண் சிறிது அயர்ந்தனவாகப் புடைபெயர்ந்தேன்: அவ்வளவில் என் மேனிமேல் கையினாலே வாரிகொள்வதுபோல வந்து பரந்தது பசப்பு; எனவே இன்று இனி உரைப்பது என்? என்பது பொருள் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— கொள்வது - கொள எனச் செய்யுட்டொடையால் குறைந்துநின்றது.

**மேற்கோள்பகுதி :**

நச்:— 'உண்டற்குரிய அல்லாப்பொருளை உண்டனபோலக் கூறலும் மரபே' என்ற சூத்திரத்தில் உம்மையால் பிறதொழில் பற்றி வருவனவும் கொள்க எனககூறி, அள்ளிககொளளாததை அள்ளிக கொள் வதுபோல் கூறியதற்கு மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 213.)

1188. பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல். (அ)

நீ இங்ஙனம் பசக்கற்பாலையலலை என்ற தோழியொடு புலந்து சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே.— இவள் பசந்தாள் என்பது அல்லால் - இவள் ஆற்றியிராது பசந்தாள் என்று என்னைப் பழிகூறுவதல்லது, இவளை அவர் துறந்தார் என்பார் இல் - இவளை அவர் துறந்து போயினர் என்று அவரைக் கூறுவார் ஒருவரும் இல்லை.

என்பார் என வேறுபடுத்துக் கூறினள், தன்னையே நெருங்குதல் பற்றிப் புலக்கின்றமையின்.

மணக்:— இவள் பசந்தாள் என்று எனக்குக் குற்றம் நாடுமதல்லது, இவளைத் துறந்தார் அவர் என்று அவரது கொடுமையைச் சொல்லுவார் இல்லை எ - று.

இஃது இப்பசப்பு வரலாகாது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— பசந்தாள் என்று சொல்லுவர் அல்லது நாயகியைத் துறந்தார் இவர் என்று சொல்லுவாரில்லை எ - று

காளிங்:— நெஞ்சே! இவள் பசந்தாள் பசந்தாள் என்று எப்பொழுதும் என்னைக குறை சொல்லுவது அல்லாமல், இவளைப் பிரிந்து நின்றார் அவர்: மற்று இது காரணமாகத் தன் மேனி பசந்தாள் இவள் என்று இங்ஙனம் சொல்லுவார் எமக்கு ஒருவரும் இல்லை எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

" பரனன்பர் நீங்கப் பரவைதனை யாற்றும்
புரிகுழற் பாங்கி புகலும் - பெரிதும."  —முதுமொழி. 172.

" மாரன்மகன் மஞ்சமுடன் வாராமுன் வாணன்மகள்
சேருநினை வாலே சிவசிவா - சார்வால்."  —சிவசிவ 119.

"மன்னும அகலிகல்வாய் மாநிலத்தி லேகிடந்தாள்
என்னுமொழி கேட்டான் இரங்கேசா - துன்னப்."  —இரங். 119.

1189. பசக்கமன் பட்டாங்கொல் மேனி நயப்பித்தார்
*நன்னிலையர் ஆவர் எனின். (கூ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— நயப்பித்தார் நன்னிலையராவர் எனின் - இப்பிரிவை யானே உடமபடுமவகை சொல்லியவர் இன்று நின்கருத்தான் நலை நிலையினராவராயின், என்மேனி பட்டாங்கு பசக்க - என்மேனி பட்டது படப்பசப்பதாக.

நன்னிலையராதல் - நன்மைக்கண்ணே நிற்றலை உடையராதல். பட்டாங்காக என ஆக்கம் விரித்துரைகக. முன் இப்பிரிவின் கொடுமை அறியாத என்னை இதற்கு உடம்படுத்திப் பிரிந்தவர் தவறிலராகவே வேண்டுவது, என்மேனியும பசப்பும யாதுசெய்யின் என் என்பது பட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது.

மணக்:— என்னுடம்பு நிலையாக என்றும் பசப்பதாக; நம்மைக் காதலித்தவரும் நமமைப்போலத் துன்பமுறுவராயின், எ - று.

இது தலைமகனது கொடுமையை உட்கொண்டு கூறியது.

பரிதி.— என்மேனி பசலையாகக் கடவது நமக்கு மயல் தந்த நாயகர் நெஞ்சறிய எ - று.

* 'நந்நிலையர்' மணக் - பாடம்.

காளிங்:— தோழீ! என் மேனியானது பெரிதும் பசப்பதாக; மற்று இது பட்டாங்கு எய்நுதலால் முன்பு என்னைத் தமது அருட் குணங்களால் பெரிதும விரும்புதல் செய்த அவர் மற்று யான் பசப்பினால் பருவரல் உற்ற இந்நிலை ஒழிகக வந்து தலையளிக்கும நன்னிலையர் ஆவாராயின் எ - று.

நயப்பித்தல் - விரும்புவித்தல் என்று அறிக.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பட்டாங்கு - பட்டது. பட - பட்டாங்காக என ஆக்கம் வருவிக்க.

1190 பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின். (௧௦)

தலைமகளாற்றுதற்பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்தவழி அவள் இயற்பட மொழிநதது.

உரைப்பகுதி :

பரிமே:— நயப்பித்தார் நல்காமை தூற்றார் எனின் - அன்று தாம் குறைநயப்பித்துக் கூடினவர்கு இன்று நல்காமையை நட்டோர் தூற்றாராயின்; பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே - பசப்புற்றாள் என வேற்றுமையானன்றிப் பசப்புத்தானாயினாள் என ஒற்றுமையால் தாம் சொல்ல அப்பெயரைப் பெறுதல் எனககு நன்று.

நட்டார் என்பது அவாய்நிலையான் வந்தது. இயற்பழித்தல் பொறாது புலககின்றாள் ஆகலின், இகழ்ச்சிக குறிப்பால் கூறினாள். அவரை அருளிலர் என்னாது இன்னும பசந்தாள் இவள் என்கையே யானாற்றும் நெறியாவது என்பதாம்.

மணக்:— பசந்தாளெனப் பேர்பெறுதல் நன்று; நம்மைக் காதலித்தவர் அருளாமையை இவ்வூரார் கூறாராயின் எ - று.

இது நின்மேனி பசந்ததென்ற தோழிககு அவ்வளவாக் குற்றம் இல்லை என்று தலைமகள் கூறியது.

பரிதி:— பசப்பென்று பெயர் பெறுதல் நன்று; நாயகரை நாம் பொலலாதவர் என்று சொல்லாமல் என் பசலேயே சொல்லியது எ-று

காளிங்:— நெஞ்சே! நமது பசப்புருபு தானே இவ்விடத்துப் பெயர் பெற்றிருத்தலும் சால நன்றே; எப்பொழுது எனில் நம்மை இங்ஙனம் முன்னம் தமது அருட்குணங்களாற் காதலுறுத்தியவர் பின் ஒரு காலம் நினைந்து வந்து அருளாமையைப் பிறர்க்குச் சாற்றுதாயின் எ-று.

இனி மற்று இங்ஙனம் வருந்தியாளை வந்து எய்தித் தலைமகன் சிலகால் பயின்று செல்லும் இடத்து மற்று ஓதற்குப் பிரிந்த காலத்துத் தலைமகள் உற்ற தனிப்படர் உணர்த்துகின்றது மேலை அதிகாரம்.

மேற்கோள்பகுதி:

இளம்:— 'பிரியுங்காலை எதிர்நின்று சாற்றிய மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்' என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 148.)

முதுமொழிவெண்பாக்கள்:

"கேழ்வரைச் சேடியர்சொல் கிழ்மைக் கியறபடுஞ்சொல்
சூழ்பயின்ஞர் துன்பத்தும் சோமேசா - தாழ்வில்."

—சோமேசர். 119.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— நயந்தவர், அவர்தந்தார், சாயலும், உள்ளுவன், உவக்காண், விளக்கற்றம், புல்லிக், பசந்தாள், பசக்க, பசப்பென.

மணக்:— பசப்பென, விளக்கற்றம், புல்லிக், உவக்காண், உள்ளுவன், அவர்தந்தார், பசந்தாள், நயந்தவர், சாயலும், பசக்க.

பரிதி:— பசக்க, புல்லிக், பசப்பென, அவர்தந்தார், சாயலும், உள்ளுவன், உவக்காண், பசந்தாள், நயந்தவர், விளக்கற்றம்.

காளிங்:— பசக்க, புல்லிக், விளக்கற்றம், உவக்காண், உள்ளுவன், பசந்தாள், நயந்தவர், சாயலும், அவர்தந்தார், பசப்பென.

# 120. தனிப்படர்மிகுதி.

தொகுப்புரை :

[தம்மால் விரும்பப்படும் கணவர் தம்மை விரும்பப்பெற்ற மகளிரே காதல் என்னும் கொட்டையில்லாக் கனியைப் பெற்றவராவர். தம்மையே எதிர்நோக்கியிருக்கும் மகளிர்க்கு அம்மகளிரை இன்றியமையாத கணவர் செய்யுங் கருணை குடிகளுக்கு வானம் தேவையறிந்து பெய்தாற்போல்வதாம். தாம் விரும்புங் கணவரால் விரும்பப் பெறும் மகளிர்க்கு இப்போது பிரியினும் விரைவில் வருவர் அதுவரை உயிர்வாழ்வோம் என்னும் செருக்குப் பொருத்தமுடைத்து. மகளிர் கற்பரசிகளால் பாராட்டக்கூடியவ ராயினும், காதலராற் காதலிக்கப்படாராயின் தீவினையாரே ஆவர். நாம் காதலித்த கணவர் அதுபோல நம்மிடத்துக் காதல்கொள்ளாராயின் நமக்கு என்ன இன்பம் செய்யப்போகின்றார். காமம் ஆடவர் பெண்டிர் ஆகிய இருவரிடத்து ஒப்ப நிற்குமாயின் காவடியில்வைத்த பாரம்போல இனிதாம். ஒருதலைப்பக்கமாயின் பெருஞ்சுமையாம். காமக்கடவுள் ஒருவரிடமட்டும் தன் வல்லமைகாட்டி ஒழுகுகின்றான். பிறர் படுகின்ற துன்பத்தையும், பசப்பையும் அறியான்போலும். தம் காதலரிடத்து ஒரு இன்சொல்லும் பெறாமல் வாழ்கின்ற மகளிரைப்போல வன்கண்மையுடையவர் உலகத்து இல்லை. நாம் விரும்பிய காதலர் நம்மாட்டு அன்பிலராயினும், அவரைப்பற்றிய ஒருசொல்லும் எம் செவிக்கு இனிமை பயக்கின்றது. என் நெஞ்சே! உன்னைவந்து பொருந்தாத காதலர்க்கு நீயுற்ற துன்பத்தை உரைப்பாய். அதனாலாவதொரு பயனுமில்லை. அரிதுமாம். ஆதலால் அதனைவிட்டு உன்னைத் துன்புறுத்துகின்ற கடலைத் தூர்த்துவிடு.]

அதிகாரப்பொருள் :

பரிமே:— *அது தனியாகிய படர்மிகுதி என விரியும். அஃதாவது படர்மிகுதி தலைவன்கண் இன்றித் தன்கண்ணதேயாதல் கூறுதல். அறமும் பொருளும் நோக்கிப் பிரிதலின் அவன்கண் இல்லையாயிற்று. இது, பசப்புற்று வருந்தியாட்கு உரியதாகலின், பசப்புறுபருவரலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *தனிப்படர்மிகுதியாவது தனிமையால் வந்த துன்ப மிகுதி கூறுதல். யாம் பசப்பால் வருந்துகின்றமைபோல அவரும் வருந்து வாரென்றும், புணர்ச்சியிடையறாமல் இனிது நடக்குமென்றும் நினைத்துத் தலைமகள் தனது துன்பத்தினைக் கூறுதலான், அதன்பின் இது கூறப் பட்டது.*

1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
*காமத்துக் காழில் கனி. (க)

காதலரும் நின்னினும் ஆற்றாராய்க் கடிதின்வருவர் நீ அவரொடு
பேரின்பம்நுகர்தி என்ற தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— தாம வீழ்வார் தம் வீழப் பெற்றவர் - தம்மால் காதலிக்கப்படும கணவர் தம்மைக காதலிக்கப்பெற்ற மகளிர், பெற்றாரே காமத்துக காழ் இல கனி - பெற்றாரன்றே காமநுகர்ச்சி என்னும் பரல் இல்லாத கனியை.

காமம் ஆகுபெயர். அத்து அல்வழிக்கண் வந்தது. முன்னை நல்வினை இல்வழிப் பெறப்படாமையின் பெற்றார் என்றும், அவரால தடையின்றி நுகரப்படுதலின் காழில் கனி என்றும் கூறினாள். நம்காதலர் பிரிதலேயன்றிப் பின் வாராமையும் உடைமையின், அக்கனி யாம் பெற்றிலேம் என்பதாயிற்று.

மணக்:— தாம் காதலித்தாரால் தம்மைக் காதலிக்கப்பெற்ற மகளிர் காம நுகர்ச்சியின்கண் பரலிலலாததோர் பழத்தைப் பெற்றாராவர் எ - று.

இது தடையின்றி நுகரலாம் என்றது.

பரிப்:— புணர்வு வேட்ட நெஞ்சிற்கு யாம் நல்வினை செய்திலேம்; செய்தேமாயின் அவரும் காதலிப்பர்; அவர்மாட்டுக் காதல் இன்றாக வருந்த வேண்டா என்று தலைமகள் கூறியது.

காளிங்:— நெஞ்சே! உலகத்துத் தாம் விரும்பிய தலைவர் தம்மையும் விரும்பித் தலையளி செய்யப்பெற்ற மகளிர் பெற்றாரே! காமமாகிய விரை இல்லாத கனியினை எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— காழில்கனி - பரலில்லாத கனி. பரல் - கொட்டை. காமநுகர்ச்சி என்று உரைத்து ஆகுபெயர் என்றார்.

* 'காமத்தில்' காளிங் - பாடம்.

**ஒப்புமைப்பகுதி:**

> "யாழ்கொன்ற கிளவி யாள்தன் அமிழ்துறழ் புலவி நீக்கிக
> காழின்றிக் கனிந்த காமக் கொழுங்கனி நுகர்ந்து காதல்
> தாழ்கின்ற தாம மார்பன் தையலோ டாடி விள்ளான
> வீழ்சென்ற மதியம வெய்யோன் ஒட்டிஒன் றுய தொத்தான்."
>
> —சீவக. 2089.

1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி. (உ)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— *வீழ்வார்கு வீழ்வார் அளிக்கும் அளி - அறமும் பொருளும் நோக்கிப் பிரிந்தால் தம்மை இன்றியமையா மகளிர்க்கு அவரை இன்றியமையாக் கணவர் அளவறிந்து வந்து செய்யும் தலையளி, வாழ்வார்க்கு வானம் பயந்தற்று - தன்னையே நோக்கி உயிர்வாழ்வார்க்கு வானம் அளவறிந்து பெய்தாற்போலும்.*

*நம் காதலர் நம்மை விழையாமையின் அத்தலையளி இல்லை ஆகலான், மழை வறந்துழி அதனன் வாழ்வார்போல இறந்துபடுதலே நமக்குள்ளது என்பதாம்.*

மணக்:— *காதலித்தார்க்குக் காதலிக்கப்பட்டார் அருளும் அருள் உயிர்வாழ்வார்கு மழை பெய்தாற்போலும்; அஃது இல்லார்க்கு வாடுதலே யுள்ளது எ - று.*

*இது நின்மேனி பொலிவழிந்தது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.*

பரிதி:— *பூமியிலுள்ள பிராணிகளுக்கும் மழை இரட்சிப்பது போல, விரும்பும் நாயகிக்கும நாயகன் அன்றி மயல் தீராது எ - று.*

காளிங்:— *நெஞ்சே! வையத்து உயிர் வாழ்வார் அனைவர்க்கும் மழை பொழிந்த அத்தன்மைத்து : யாதோ எனின் விருப்புற்று வாழும் மகளிர்க்கு அங்ஙனம் விரும்பத் தக்கோர் ஆகிய தலைவர் அளிக்கும் தலையளி எ - று.*

1193. வீழுநர் வீழப் படுவார்க் *கமையுமே
வாழுநம் என்னும் செருக்கு. (ங)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— வீழுநர் வீழப்படுவார்க்கு அமையுமே - தாம் விழையும் கணவரான் விழையப்படும் மகளிர்க்கு ஏற்புடைத்து, வாழுநம் என்னும் செருக்கு - காதலர் பிரிந்தாராயினும் நம்மை நினைந்து கடிதின் வருவர் வந்தால் நாம் இன்புற்று வாழ்தும் என்று இருக்கும் தருக்கு.

நாம் அவரான் வீழப்படாமையின், நமக்கமைவது இறந்துபாடு என்பதாம்.

மணக்:— தாம் காதலித்தாரால் காதலிககப்படுவார்க்கு உலகின் கண் இருந்து உயிர்வாழவோம் என்னும் களிப்பு அமையும் எ - று.

இது தலைமகள், இருந்தாலும் பயனில்லை; அதிற்சாதல் அமையும் என்று வாழ்க்கையை முனிந்து தோழிக்குக் கூறியது.

பரிதி:— விரும்பப்பட்ட நாயகருக்கும் அன்றே வாழ்வோம் என்னும் செருக்கு; என்போலும் பிரிந்திருப்பார்கு உண்டோ வாழ்வோம் என்னும் நன்மை எ - று.

காளிங்:— நெஞ்சே தாம் விரும்பினராகிய தலைவரால் தம்மை விரும்பப்படுவார் யாவர் சிலர் ; மற்று அவர்க்கு அடுத்தது யாது எனில் வையத்து வாழ்கின்றேம் யாம் என்னும் மனச்செருக்கு எ - று.

**மேற்கோள்பகுதி :**

இளம்:— 'கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின், அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்' என்ற தலைவி கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 145.)

யா. வி:— மகரக்குறுக்கத்திற்கு மேற்கோள். (சூ. 2.)

ஓரசைப் பொதுச்சீர்வந்த குறள் வெண்பாவிற்கு மேற்கோள். (சூ. 15.)

---

* 'கமைந்ததே' காளிங் - பாடம்.

1194. விழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின். (ச)

காதலரை இயற்பழித்தலைஅஞ்சி அவர் அருளின்மை மறைத்த நீ
கடவுட் கற்பினையாகலின் கற்புடைமகளிரால் நன்கு
மதிக்கப்படுதி என்ற தோழிக்குச சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— வீழப்படுவார் - கற்புடைமகளிரால் நன்கு மதிககப் படுவாரும், தாம் வீழ்வார் வீழப்படாரெனின் கெழீ இயிலர் - தாம் விரும்பும் கணவரான் விரும்பப்படாராயின் தீவினையாட்டியர்.

சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கெழீ இயின்மை நல்வினை யின்மை; அஃது அருத்தாபத்தியால் தீவினையுடைமையாயிற்று. தீவினை உடையேற்கு அந்நன்குமதிப்பால் பயனில்லை என்பதாம்.

மணக்:— நறகுணங்கள் பலவுடையர் என்று உலகத்தாரால் விரும்பப்பட்டாரும் தம்மால காதலிககப்பட்டவரால் தாம காதலிககப் படாராயின், விருப்பமிலலாராவர் எ - று.

இது வாழ்க்கையை முனிந்து கூறிய தலைமகளுககு நீ இவ்வாறு கூறுவையாயின, நினனைப் புகழுகினற உலகத்தாருள் மிகவாழ்வார் யார் என்ற தோழிககு அவள் கூறியது. கொண்டான் காயின் கண்டான் காயும் என்பது பழமொழி.

காளிங்:— நெஞ்சமே! நாம் விரும்பப்படுவார் தாமும் நம்மாட்டு விரும்பப்படுவாராயின் முன்னமே நாம் பேறுடை மகளிர் ஆவோம அல்லது, மற்று அவர்மாட்டு நாமே காதலை வைக்கப்பட்டோம் ஆயின் முன்னமே அவரோடு நட்புப் பூண்டிருப்பதற்குப் பேறு பெற்றிலேம் எ-று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— கெழீ இயின்மை - நல்வினையின்மை; அருத்தாபத்திப் பொருள்கோள் காண்க.

மேற்கோள்பகுதி :

சங்கர:— இதனுள் கெழீ இலர் என அளபெழுந்து அலகுபெறாது சொல்லிசை நிறைப்ப வந்தது என்பர். (நன். 91.)

1195. நாம்காதல் *கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை. (ரு)

அவர்மேல் காதலுடைமையின் அவர்கருத்தறிந்து ஆற்றுளுய்
என்ற தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நாம் காதல் கொண்டார் நமக்கு எவன் செய்ப - நம்மால் காதல்செய்யப்பட்டவர் நமக்கு என்ன இன்பத்தைச் செய்வர், தாம் காதல் கொள்ளாக்கடை - அவ்வாறே தாமும் நம்கண் காதல் செய்யா வழி.

எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. அக்காதலுடைமையால் நாம் பெற்றது துன்பமே என்பதாம்.

மணக்:— நாம் காதலித்தார் நமக்கு யாதனைச் செய்வர்; தாம் காதலியாத இடத்து எ - று.

பரிப்:— புணர்வுவேட்ட நெஞ்சிற்கு நின் காதலினல் பயன் இல்லை என்று தலைமகன் கொடுமையை உட்கொண்டு அவன் பாங்காயினர் கேட்பத் தலைமகள் கூறியது.

பரிதி:— ஒருதலைக்காமம் நன்றல்ல; இருதலைக்காமம் நன்று எ-று.

காளிங்:— நாம் காதல் கொண்டிருக்கின்ற காதலர் தாமும் நம் மாட்டுக் காதல் கொள்ளாதபின் நமக்கு என்ன துணைமை செய்வரோ? யாதும் செய்யார்; அதனுல் யாம் இத்தனிப்படர் உறுதலே உளது எ - று.

**முதுமொழிவெண்பாக்கள் :**

"பன்முனிவர் பன்னியர்கள் பண்டுன்னைக் காமுறவும்
துன்னியருள் செய்திலையே சோமேசா — அன்னதே."
—சோமேசர் 120.

"கண்ணுதலார் தோழன் கருத்தையறிந் தாற்றுனய்
என்னப் பரவை இருளைக்குப் — பன்னுவது." —முதுமொழி. 173.

---

*'கொண்டால்' பரிப் - பாடம்.

1196. ஒருதலையான் இன்னாது காமங்காப் போல
இருதலை யானும் இனிது.

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— காமம் ஒருதலையான் இன்னாது - மகளிர் ஆடவர் என்னும் இருதலையினும் வேட்கை ஒருதலைக்கண்ணேயாயின் அஃது இன்னாது; காப்போல இருதலையானும் இனிது - காவினது பாரம்போல இருதலைக்கண்ணும் ஒப்பின், அஃது இனிது.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைக்கண் வந்தன. கா ஆகுபெயர். என்மாட்டு உண்டாய வேட்கை அவர்மாட்டும் உண்டாயின், யான் இவ்வாறு துன்பமுழத்தல் கூடுமோ என்பதாம்.

மணக்:— ஒருதலை அன்பினால் உண்டாகிய காமம் இன்னாது; காவினது பாரம்போல, இரண்டு தலையும் ஒத்த அன்பினால் உண்டாகிய காமமே இனிதாவது எ - று.

இது மேற்கூறிய சொற்கேட்ட தலைவர் அருள் செய்வாரென்றும், தெய்வக் குறிப்பினால் கூறிய சொற்கேட்டுக் கூடினாலும் பயனில்லை என்றும் தலைமகள் கூறியது.

பரிதி:— ஒருதலைக்காமமாகிய கைக்கிளை ஒண்ணாது; காவடியிற் பாரம் ஒத்ததுபோல் இரண்டுபேர்க்கும் ஒத்த இன்பம் நன்று எ - று.

காளிங்:— நெஞ்சே! இவர்மாட்டு ஒருவழிப்பட ஒத்து நிற்பது அன்றிக் காமம் ஒருதலைபற்றி நிற்பது இன்னாது; காவினது பாரம்போல இருதலையானும் ஒத்து நிற்பது உளதாயின் மிகவும் இனிது எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— காவின் பாரம் போல என உரைத்து, ஆகுபெயர் என்றார். மூன்றனுருபுகள் ஏழன்பொருட்கண் வந்தன.

**முதுமொழிவெண்பாக்கள்:**

"உத்தசெயத் தியாகியென்பர் உன்னைப்புன் மாலையிலிச்
சித்துத் தளர்ந்தாள் தினகரா - பத்தில்." —தினகர. 124

" பற்றி னுருப்பசியைப் பார்த்தன்வெஃகான் சிற்சபையின்
முற்றப்ப மேவு முருகேசா — உற்ற." —முருகேசர். 120.

" தக்கசுவா காவைத் தருமன் விழுங்கஅவள்
எக்கியனை உண்டாள் இரங்கேசா — மிக்க" —இரங். 120.

1197. பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான். (எ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— ஒருவர்கண் நின்று ஒழுகுவான் காமன் - காமம் நுகர்தற்குரிய இருவரிடத்தும் ஒப்பநிற்றல் ஒழிந்து ஒருவரிடத்தே நின்று பொருகின்ற காமககடவுள்; பருவரலும் பைதலும காணான் கொல் - அவ்விடத்துப் பசப்பானுய பருவரலும படர் மிகுதியும் அறியான் கொலோ!.

விரைவும் வெறுப்பும் இன்றி எல்லார்கண்ணும் நிகழ்ந்தன அறிதற்குரிய கடவுளும் என்கண் வேறுபட்டான், இனி யான் உய்யுமாறு என்னை என்பதாம.

மணக்:— தான் ஒருவர் பக்கமாகநின்று ஒழுகித் துன்பம் செய்கின்ற காமதேவன், நமது தடுமாற்றமும், நாம் உறுகின்ற துன்பமும் காணுனே? காண்பானயின், நம்மை வருத்தானே; தெய்வமாகலான் எ-று.

பரிப்:— சேய்மைக்கண் பிரிதலே அன்றி அணுமைக்கண் பிரியும் பிரிவும் உள; அவையாவன அவைக்களனும் மாசவையும் அத்தாணியும் புகுதவும், நல்லிசை நயந்து வந்தோர் காணவும், பணைநிலைப் புரவி காணவும், வாரியுள் யானை காணவும, நாட்டகத்துப் பிரியும் பிரிவு. அவற்றுள் யாதானும் ஒன்றனல் தலைமகன் பிரிந்துழி ஆற்றுளாகிய தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லியது, சேய்மைக்கண் பிரிந்தான் ஆயின் பருவம் காணின் அல்லது இக்கூற்றினுல் பயன் இல்லை. பரத்தையிற் பிரிவு ஆயின் புலவி தோன்றும். ஆதலான் அணுமைக்கண் பிரிந்தானைப்பற்றிக் கூறப்பட்டது என்று கொள்ளப்படும். இவ்வுரை மேல் வருவனவற்றிற்கும ஒக்கும்.

பரிதி:— மயலான கிலேசமும் பசலையும் காணுனோ காமன்? என்னையேன் சண்டை யிடுவது எ - று.

காளிங்:— நெஞ்சே! யாம் உறுதுயரமும் இதனால் உள்ளுறும் இரக்கமும் கண்டிலன் போலும்: இங்ஙனம் ஒருவர்கண்ணே நின்று இடர்செய்து ஒழுகுவானாகிய இந்தக் காமன் என்கின்றவன்; எனவே இதனை அவன் கண்டானாகில் ஆண்டும் சென்று அடர்ப்பன் என்பது பொருள் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— அகத்துட் காமனையும் செல்லலாம் என்பது இதனாலறிக.

1198. வீழ்வாரின் இன்சொல் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல். (அ)

தலைமகன் தூதுவரக்காணாது சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— வீழ்வாரின் இன்சொல் பெறாது வாழ்வாரின் - தம்மால் விரும்பப்படும் காதலர் திறத்து நின்றும் ஓர் இன்சொல்லளவும் பெறாதே பிரிவாற்றி உயிர்வாழ்கின்ற மகளிர்போல; வன்கணார் உலகத்து இல் - வன்கண்மையுடையார் இவ்வுலகத்து இல்லை.

காதலர் திறத்துச்சொல் யாதானும் எனக்கு இனிது என்னும் கருத்தால், இன்சொல் என்றாள். இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. யான் வன்கண்ணேனாகலின் அதுவும் பெறாது உயிர்வாழா நின்றேன் என்பதாம்.

மணக்:— தம் காதலரிடத்துநின்று வரும் இனியசொற்களைக் கேளாது உயிர்வாழ்வாரைப் போல, வன்கண்மையுடையார் இவ்வுலகத்து இல்லை எ - று.

பரிப்:— தூது விடுதல் குறிப்பினால் தோழிக்குச் சொல்லியது.

பரிதி:— விரும்பப்பட்ட நாயகரின் இன்சொற்கேளாமல் உலகத்து வாழ்வார்போல வன்கண்ணியர் இல்லை எ - று.

காளிங்:— தோழீ! தாம் எப்பொழுதும் நினைந்து விரும்புபவர் ஆகிய தலைவரைப் பெருக காலம் மற்று அவரிடத்து இன்று ஓர் இன்சொல் பெறுதலும் இன்றி வையத்து உயிர் வாழ்வார் ஆகிய மகளிர் போல இவ்வுலகத்து வன்கண்மையுடையார் மற்று யாரும் இல்லை எ - று.

இங்ஙனம் தலைமகனை உடைய தலைமகளது *கனவுநிலை உணர்த்து கின்றது மேலை அதிகாரம்.

1199. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்(டு)
இசையும் இனிய செவிக்கு. (௯)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— நசைஇயார் நல்கார் எனினும் - என்னால் நச்சப்பட்ட காதலர் என்மாட்டு அன்பிலரேயாயினும்; அவர்மாட்டு இசையும் செவிகு இனிய - அவர்திறத்து யாதானும் ஓர் சொல்லும் என் செவிக்கு இனியவாம்.

இழிவுசிறப்பும்மை, அவர் வாரலர் என்னும் சொல்லாயினும் அமையும் என்பதுபட நின்றது. அதுவும் பெற்றிலேன் என்பதாம்.

மணக்:— எல்லாம் காதலிககப்பட்டார் எமக்கு அருளாராயினும் அவர் பக்கத்தனவாகிய சொற்களும் எங்கள் செவிக்கு இனியவாம் எ-று.

பரிப்:— எங்கள் பக்கத்தன வாகிய சொறகள் அவர்கு இன்னாத ஆகும என்பது குறிப்பு. தலைமகன் பாங்காயினார் அவனைப் புகழ்ந்துழித் தனது வேட்கை மிகுதியால் தலைமகள் கூறியது; அன்றியும் தலைமக னுழை நின்றும் வந்த தூதர் வாய்ச்சொல் கேட்ட தலைமகளது முகமலர்ச்சி கண்டு இஃது எற்றினான் ஆயிற்று என்று வினவிய தோழிகருத் தலைமகள் கூறியது.

பரிதி:— பிரியமாகிய நாயகர் இன்பம்தராதபோது அவரிடத் திலே சொற்கேட்கிலும் அது காதுக்கு இன்பம் எ - று.

காளிங்:— நெஞ்சே! நாம் ஆசையுற்றவர் நம்மை அளித்திலர் ஆயினும் அவர் திறத்து ஒரு வார்த்தை ஆயினும் கேட்கப் பெறின் அதுவும் நமது செவிககுச் சால இனியதே எ - று.

*காளிங்கர் இக்குறளை நினைந்தவர்புலம்பல் என்ற அடுத்த அதிகாரத்தின் இறுதிக் குறளாகக்கொண்டுள்ளார். இங்கு அவர்வயின் விதும்பல் என்ற 127ம் அதிகாரத்தின் 3ம குறளை அமைத்துள்ளார்.

எனவே அங்கு நின்றான் ஒரு தூது வருதலினும் இங்கு நின்றும் தோழி தானொரு தூதுவிடுதல் செய்வதே இனிது என்பதாம்.

முதுமொழிவெண்பாக்கள்:

''முல்லைமட வார்கண்ணு முன்னின் றொருமொழியால்
சொல்லல்தவிர் என்றார் சிவசிவா — சொல்லின்.'' —சிவசிவ. 120.

1200. உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு. (கo)

தலைமகன் தூதுவரப்பெறாது தான் தூதுவிடக்கருதியாள்
நெஞ்சொடு சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— உறார்க்கு உறுநோய் உரைப்பாய் நெஞ்சு - நின்னோடு உறாதார்க்கு நின்னுறு நோயை உரைககலுற்ற நெஞ்சே; கடலைச் செறாய் - நீ ஆற்றாயாயினும் அரிதாய அதனை ஒழிந்து, நினககுத் துயரம் செய்கின்ற கடலைத் தூர்க்க முயல்வாயாக, அஃது எளிது.

உரைக்கலுற்றது அளவிறந்த நோயாகலானும் கேட்பார் உறவில ராகலானும அது முடிவதொன்றன்று, முடிந்தாலும் பயனில்லை என்பது கருதாது, முயலாநின்றாய் என்னும குறிப்பான், வாழிய என்றாள்.

மணக்:— நெஞ்சே! நம்மோடு அன்புற்றார்க்குத் தூது விட்டா லும் பயனில்லை யென்று உன்னோடு உறாதார்க்கு நீ உற்ற நோயைச் சொல்ல நினையா நின்றாய்; நமமை உறங்காமல் வருத்துகின்ற கடலைத் தூர்ப்பாயாயின், அஃது அதனினும நன்று எ - று.

இது தூதுவிடககருதிய நெஞ்சுககுத் தூதுவிட்டாலும் பயனில்லை என்று தலைமகள் கூறியது.

பரிப்:— இவை இரண்டும் முடியாய் என்றவாறு ஆயிற்று.

பரிதி:— நாயகருக்குக் காமநோயைச் சொல்லாய். விரகக்கடலைச் செறாய் நெஞ்சமே! என்ன காரியம் செய்தாய் எ - று.

காளிங்:— நெஞ்சினால் நம்மொடு சிறிதும் பரிவு உறாராகிய நம் காதலர்க்கு நாம் உறுநோய் கூடக கூடச் சென்று சென்று கூறுவாயாக; மற்று அல்லவாயின நம்மை வருத்துகின்ற பெருங்கடல் ஆகிய வெள்ளநீர் ஒலியைச் செறுத்து வாழ்வாயாக; என் நெஞ்சே! எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண் :— அறிவும, புலனும் வேறுபட நிறீஇ, உணர்வுடையது போல் தொழிற்படுத்தடககல் காண்க.

மேற்கோள்பகுதி :

பேரா:— மூச்சீரடியின் முதற்சீர் தளைவகையின்றி வந்ததற்கு இக்குறளின் ஈற்றடி மேற்கோள். (தொல். பொருள். 386.)

நச் :— கட்டளை உயிரளபெடைககு மேற்கோள். (தொல். பொருள். செய். 97.)

சங்கர:— மொழியிடையில் வந்த உயிரளபெடைக்கு மேற்கோள். (நன். 91.)

குறள் வைப்புமுறை.

பரிமே:— தாம்வீழ்வார், வாழ்வார்க்கு, வீழுநர், வீழப்படுவார், நாம்காதல், ஒருதலையான், பருவரலும, வீழ்வாரின், நசைஇயார், உறாஅர்க்கு.

மணக்:— பருவரலும், தாம்வீழ்வார், உறாஅர்க்கு, நாம்காதல், ஒருதலையான், வாழ்வார்க்கு, வீழுநர், வீழப்படுவார், வீழ்வாரின், நசைஇயார்.

பரிதி:— ஒருதலையான், வீழுநர், வாழ்வார்ககு, நாம்காதல், பருவரலும், வீழ்வாரின், நசைஇயார், உறாஅர்க்கு, தாமவீழ்வார், வீழப்படுவார்.

காளிங்:— ஒருதலையான், தாம்வீழ்வார், வாழ்வார்க்கு, வீழுநர், நாம் காதல், உறாஅர்க்கு, வீழப்படுவார், பருவரலும, நசைஇயார், உாநசை*.

---

* இந்நூல் 186ம் பக்கக் குறிப்பைக்காண்க.

# 121. நினைந்தவர்புலம்பல்.

தொகுப்புரை :

[பிரிந்திருக்கின்ற இந்த நிலையிலே பழைய எண்ணத்தை நினைத்தாலும் தீரா இன்பத்தைச் செய்தலால் உண்டால் மகிழ்செய்யும் கள்ளினும், நினைத்தாலே மகிழ் செய்யும் காமம் இனிதாம். தங்காதலரைப் பிரிவின்கண் நினைத்தாலும் பிரிவுத்துன்பம் தோன்றாமையான் காமம் எவ்வழியும் இனிதேயாம். எனக்குத் தும்மல் வருவதுபோலத் தோன்றி வராமற்போகின்றது. ஆதலால் எம் காதலர் நினைப்பவர்போல நினையார் போலும். எம் மனத்தில் அவர் எந்நேரமும் இருக்கின்றார். அதுபோல, அவர் நெஞ்சத்து யாமும் இருக்கின்றோமா? தம் நெஞ்சத்து யாம் புகாமல் காத்துக்கொள்ளும் காதலர் எம் நெஞ்சத்து இடைவிடாது புகுகின்றாரே! அவருக்கு நாணமில்லையோ! காதலரோடு கலந்திருந்த காலத்து நிகழ்ச்சிகளை எண்ணுதலால், பிரிந்த இத்துன்ப வெள்ளத்தும் உயிர் வாழ்கின்றேன். அங்ஙனம் அன்றாயின் எங்ஙனம் உயிர்வாழ்வேன்! பண்டைய நிகழ்ச்சிகளை மறந்தறியேன். அங்ஙனமிருந்தும் பிரிவு மனத்தைச் சுடுகின்றது. மறந்தால் எங்ஙனம் முடியுமோ! எங்காதலர் எவ்வளவு நினைத்தாலும் சினவார். அதுவன்றோ அவர் எமக்குச் செய்யும் சிறப்பு. நாமிருவரும் வேறல்லம் என்பாரது கருணையற்ற தன்மையை மிக எண்ணி என்உயிர் ஏகாநின்றது. என் நெஞ்சைவிட்டுப் பிரியாதிருந்தும் செயலிற் பிரிந்துசென்ற தலைவரைக் காணுமளவிருக்கு மளவாயினும் மதியே நீ காணப்படாதொழிக.]

அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது முன்கூடிய ஞான்றை இன்பத்தினை நினைந்து தலைமகள் தனிமை எய்தலும், பாசறைக்கண் தலைமகன் தனிமை எய்தலுமாம். இவ்வாறு இருவர்க்கும் பொதுவாதல்பற்றிப் பன்மைப் பாலால் கூறப்பட்டது. இது, படர்மிகுதி தன்கண்ணதாக நினைந்த தலைமகட்கும் உரித்தாகலின், அவ்வியைபுபற்றித் தனிப்படர்மிகுதியின் பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *நினைந்தவர் புலம்பலாவது சேய்மைக்கண்ணாயினும் அண்மைக்கண்ணாயினும் பிரிந்த தலைமகனை ஒழிவின்றி நினைந்த தலை மகளிர் துன்பமுறுதல். நினைத்தவர்புலம்பல் என்று பாடமாயின், அதற்கு அவரை நினைத்துப்புலம்பல் என்று பொருளுரைத்துக்கொள்க.*

பரிப்:— *தனிப்பட்டார் காதலரை எல்லாக் காலமும் ஒழிவின்றி நினைப்பர் ஆதலின் அதன்பின் கூறப்பட்டது.*

1201. உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினும் காமம் இனிது. (க)

தூதாய்ச் சென்ற பாங்கனுக்குத் தலைமகன் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே.— உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால் - முன் கூடியஞான்றை இன்பத்தினைப் பிரிந்துழி நினைந்தாலும் அதுபொழுது பெற்றாற்போல நீங்காத மிகக மகிழ்ச்சியைத் தருதலால், கள்ளினும் காமம் இனிது - உண்டுழியல்லது மகிழ்ச்சி செய்யாத கள்ளினும் காமம் இன்பம் பயத்தலுடைத்து.

தன் தனிமையும் தலைமகளை மறவாமையும் கூறியவாறு.

மணக்:— தம்மாற் காதலிக்கப்பட்டவரை நினைத்தாலும் அது நீங்காத பெருங்களிப்பைத் தரும்; ஆதலால், கள்ளினும் காமம் இனிது எ - று.

பரிப்:— நினைவு மகிழ்ச்சியைத் தாரா நின்றமையால் என் மனம் காதலரை ஒழிவின்றி நினையாநின்றது என்று தோழிக்குக் கூறியது.

பரிதி:— நாயகர் நினைக்குந்தோறும் களிப்புக் கொடுப்போ ராதலால் கள்ளினும் காமம் இனிது எ - று.

காளிங்:— தோழீ! யான் அவரோடு கழிய நுகர்ந்து களியாது இங்ஙனம் உள்ளிச் செல்லினும் செல்லாப் பெருங்களி செய்தலால் உண்டால் களிதரலின்றி உள்ளினல் களிதரல் இல்லாத கள்ளினும் இக் காமம் பெரிதும் இனிது எ - று.

**முதுமொழிவெண்பாக்கள் :**

"எங்கிருந்தும உன்னைவிடா தேநினைப்போம் இப்புவிமேல்
செங்கை முகிலே தினகரா - மங்கையருக்(கு) —தினகர. 125.

"சந்தனுவும் கங்கை தனைப்படத்தி லேயெழுதிச்
சிந்தையல மாந்தான் சிவசிவா - தந்தமனத்(து)" —சிவசிவ. 121.

"சுந்தோப சுந்தரிகல் சூழ்ந்து பொருதிறந்த(து)
எந்தவகை மேனுள் இரங்கேசா - சிந்தையால்." —இரங். 121.

1202. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில். (உ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல் - தம்மால் விரும்பப்படுவாரைப் பிரிவின்கண் நினைத்தால் அந்நினைவார்க்கு அப் பிரிவான் வருவதோர் துன்பம் இல்லையாம்; காமம் எனைத்து இனிது ஒன்றேகாண் - அதனால் காமம் எத்துணையேனும் இனிதொன்றே காண்.

புணர்ந்துழியும் பிரிந்துழியும் ஒப்ப இனிது என்பான், எனைத்தும் இனிது என்றான். சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தான் ஆற்றிய வகை கூறியவாறு.

மணக்:— காமம் யாதொன்றினாலும் இனியதே காண்; தாம் விரும்பப்படுவாரை நினைக்க வருவதொரு துன்பம் இல்லையாயின் எ - று.

இது நீ இவ்வாறு ஆற்றாயாகின்றது துன்பம் பயக்கும் என்ற தோழிக்குத் தலைமகள் மறுத்துக் கூறியது.

பரிதி:— எல்லாவற்றிலும் இனியது காமம்; அது எப்படி என்றால் தாம் விரும்பினாரை நினைக்கின் சுகந்தருமாகலின் எ - று.

காளிங்.— நெஞ்சே! எவ்வாற்றானும் இனியது ஒன்றே காண் இக்காமம் ஆகின்றது: என்னை எனில் பண்டு எய்திய காலத்து இனிமை அன்றி இங்ஙனம் எய்தாக் காலத்தும் தாம வீழ்வாரை இனி வந்து எய்துவர் என்று இங்ஙனம் நினைப்பவும அதனாலும் வருவது ஓர் துன்பம் இன்மை எ - று.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— தாம் வீழ்வார் - தம்மால் விரும்பப்படுவார்.

**மேற்கோள்பகுதி:**

பெருந்:— இது காமக்குணத்தின் தன்மையைச் சொன்னமையால் குணத்தன்மை என்னும் அலங்காரமாயிற்று என்பர். (வீர. 152.)

1203. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும். (௩)

தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— தும்மல் சினைப்பதுபோன்று கெடும் - எனக்குத் தும்மல் எழுவது போன்று தோன்றிக் கெடாநின்றது; நினைப்பவர் போன்று நினையார்கொல் - அதனால் காதலர் என்னை நினைப்பார் போன்று நினையாராகல் வேண்டும்.

சினைத்தல் - அரும்புதல். சேய்மைக்கண்ணராய கேளிர் நினைந்துழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றும் என்னும் உலகியலபற்றித் தலைமகன் எடுத்துககொண்ட வினை முடிவது போன்று முடியாமை உணர்ந்தாள் சொல்லியதாயிற்று.

மணக்:— அவர் நம்மை நினைப்பவர்போன்று நினையார் கொல்லோ; தும்மல் தோன்றுவதுபோன்று கெடாநின்றது எ - று.

தலைமகள் உலகத்துப் பெண்டிராயுள்ளார் கூறுவதொன்றை ஈண்டுக கூறினாள்.

பரிப்:— தும்மல் இவ்வாறு செய்தலான் நினைப்பாரைப் போன்று நினையராக வேண்டும் என்று தோழிக்குக் கூறியது.

பரிதி:— நினைத்து நினையாரோ என்காதலர் அது தும்மல் வருவதுபோல் அடங்கும் எ - று.

காளிங்:— தோழீ! அவர் நம்மை இப்பொழுது சிறிது நினைப்பவர் போன்று எடுத்துப் பின்னும் நினையார் ஆயினர் போலும்; என்னை காரணம் எனின், தும்மலானது என்முகததிற்கு ஆகாதது வருமது போலத் தோன்றிப் பின் உள்ளடங்கி விடும் எ - று.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— தும்மல் சினைப்பது - தும்மலெழுவது. சினைத்தல் - அரும்பல்.

1204. யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் *தெம்நெஞ்சத்(து)
ஓஒ உளரே அவர். (௪)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— எம் நெஞ்சத்து அவர் ஓ உளரே - எம்முடைய நெஞ்சத்து அவர் எப்பொழுதும் உளரேயாய் இராநின்றார்; அவர் நெஞ்சத்து யாமும் உளேன் கொல் - அவ்வகையே அவருடைய நெஞ்சத்து யாமும் உளமாதுமோ, ஆகேமோ!.

ஓகார இடைச்சொல் ஈண்டு இடைவிடாமை உணர்த்தி நின்றது. உளமாயும வினை முடியாமையின் வாராராயினரோ, அது முடிந்தும் இலமாகலின் வாராராயினரோ என்பது கருத்து.

மணக்:— அவர் நெஞ்சத்து யாமும் உளேங்கொல்லோ; எம்முடைய நெஞ்சின்கண் எப்பொழுதும் அவர் உளராகா நின்றார் எ - று.

ஓஒ என்பது மிகுதிப்பொருளின்கண் வந்ததாதலான், எப்பொழுதும் என்னும் பொருளதாயிற்று.

பரிப்:— அவரும முன்பு நம்மோடு ஒத்த அன்பினர் ஆதலானே எம்மைப்போல அவரும் நினைப்பரோ என்று தோழியொடு சொல்லியது.

பரிதி:— யாமும் நாயகர் மனத்தில் இருப்போம்; அவர் எம்மனதில் சதாகாலத்திலும் இருக்கிறபடியால் எ - று.

காளிங்:— தோழீ! இக்காலம் அவர் நெஞ்சகத்து யாமும் உளேம் போலும! என்னெனின் எங் நெஞ்சத்து எப்பொழுதும் அவர் உளரா யிருக்கின்றனர்; இஃது என்ன வியப்போ எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

"சித்தமுள வல்லமன்சிந் திப்பனோ என்றுலேந்தாள்
முத்தநகை மாயை முருகேசா - மத்தமுறும்." —முருகேசர். 121.

*'என்நெஞ்சத்து' காளிங்-பாடம்.

1205. தம்நெஞ்சத் [1]தெம்மைக் கடிகொண்டார் [2]நாணார்கொல்
எம்நெஞ்சத் தோவா வரல். (ரு)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— தம்நெஞ்சத்து எம்மைக் கடிகொண்டார் - தம்முடைய நெஞ்சின்கண்ணே யாம் செல்லாமல் எம்மைக காவல் கொண்ட காதலர்; எம்நெஞ்சத்து ஓவாவரல் நாணார்கொல் - தாம் எம்முடைய நெஞ்சின்கண் ஒழியாது வருதலை நாணார்கொல்லோ!.

ஒருவரைத் தம்கண் வருதற்கு ஒருகாலும் உடம்படாது தாம் அவர்கண் பலகாலும் சேறல் நாணுடையார்செயல் அன்மையின், நாணார் கொல் என்றாள்.

மணக்:— தமது நெஞ்சின்கண் எம்மை யாம் செல்லாமல் காவல் கொண்டார் எமது நெஞ்சின்கண் ஒழியாதே வருதலைக் காணாரோ எ - று.

இது நினையாரோ நினைப்பாரோ என்று ஐயப்பட்ட தலைமகள் நினையார் என்று தெளிந்து கூறியது.

பரிதி:— தம் மனத்திலே இருக்க வொட்டாமல் முடுக்கினவர் என் மனத்தில் இருககின்றாரே; ஆகவே நாணமில்லையோ எ - று.

காளிங்:— தமது நெஞ்சத்து யான் வராமல் காவல் கொண்டு போனவர், மற்று என் நெஞ்சத்து ஒழிவிலராய் வருகின்ற இதனை நமக்கு இது தகாது என நாணாரோதான்? எ - று.

கடிகொண்டார் என்பது கரந்து போனார் என்பது. கடிந்து போனார் என்றும் ஆம்.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— தம்முடைய, எம்முடைய நெஞ்சம் என விரிந்து, அதுவென விரியாது, அப்பொருட்டாகிய, உடைய என விரித்தது காண்க.

---

[1]'என்னை' காளிங்-பாடம். [2]'காணார்கொல்' மணக்-பாடம்.

முதுமொழிவெண்பாக்கள் :

" தன்னையே உன்னும் தமயந்தி மாதைநளன்
துன்னார்போல் நீத்திருந்தான் சோமேசா - அன்னதே."
—சோமேசர். 121.

" நம்பி தனைநினைந்து நம்பாருள சேர்பாவை
துன்பமுற்றுத் தோழிக்குச் சொல்லியது - சென்றிருந்து."
—முதுமொழி. 174.

1206. மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன். (சு)

அவரொடு புணர்ந்த ஞான்றை இன்பத்தை நினைந்து இறந்துபாடு எய்தாநின்றாய் அது மறத்தல் வேண்டும் என்றாட்குச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— யான் அவரொடு உற்ற நாள் உள்ள உளேன் - யான் அவரோடு புணர்ந்தஞான்றை இன்பத்தை நினைதலான் இத்துன்ப வெள்ளத்தும் உயிர்வாழ்கின்றேன்; மற்று யான் என்னுளேன் - அது இன்றாயின், வேறு எத்தால உயிர்வாழ்வேன் !

நாள் ஆகுபெயர். உயிர்வாழ்தற்கு வேறும் உள, அவை பெற்றிலேன் என்பதுபட நின்றமையின், மன ஒழியிசைககண் வந்தது. அவை அவன் தூதுவருதல், தன்தூது சேறல் முதலாயின. அவையாவும் இன்மையின், இதுவல்லது எனககுப் பற்றுககோடு இல்லை என்பது கருத்து.

மணக்:— யான் அவரோடு புணர்ந்த நாள் இன்பத்தை நினைத்தலானே உயிர் வாழகின்றேன; அல்லது யாதொன்றினான் யான் உளேனாய் வாழ்கின்றேன் எ - று.

இது தலைமகன் தலையளியை நினைந்து ஆற்றாளாயின தலைமகளை நோககி நீ இவ்வாறு நினைந்திரங்கல் உயிர்ககு இறுதியாகும் என்ற தோழிக்கு அவர் கூறியது.

பரிதி:— நான் நாயகர் மனத்தில் எப்படியிருந்தேனோ நாயகரை கூடிய அன்று முதல் இன்றளவும் நாயகர் என் மனத்திலிருக்கிறார். நான் எப்படி அவர்மனத்தில் இருந்தேனோ...... எ - று.

காளிங்:— தோழீ! அங்ஙனம் நெஞ்சு சுடினும் யான் அவரோடு இன்புற்ற நாள்களை நினைய நினைய மற்று அது பற்றுக்கோடாக ஆற்றியுள்ளேன் ஆகின்றேன்? அல்லது வேறு யான் என்பற்றி உள்ளேன் ஆகின்றேன்? எனவே இவள் தூதுவிடுதல் பயன் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மற்று, அன்றாயின் வேறு என நின்றது.

1207. மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும். (எ)

இதுவும் அது.

உரைப்பகுதி:

பரிமே:— மறப்பு அறியேன் உள்ளினும் உள்ளம் சுடும் - அவ் இன்பத்தை மறத்தல் அறியேனாய் இன்றுள்ளாநிற்கவும், பிரிவு என் உள்ளத்தைச் சுடாநின்றது, மறப்பின் எவனாவன் - அங்ஙனம் பிரிவாற்றாத யான் மறந்தால் இறந்துபடாது உளேனாவது எத்தால்!

மறக்கப்படுவது அதிகாரத்தான் வந்தது. மன் ஈண்டும் அதுபட நின்று ஒழியிசையாயிற்று கொல் அசைநிலை.

மணக்:— அவரை மறந்தால் என்னாவன் கொல்லோ; மறப்பறியேனாய் நினைக்கவும் இக்காமம் நெஞ்சத்தைச் சுடாநின்றது எ - று.

இது சீரியன உள்ளிப் பூரியன மறத்தல் வேண்டும் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— மறந்தால் உயிர்வாழேன் ஆகையால் மறப்பறியேன்; மறப்பன் என்று நினைப்பினும் நாயகரிடமுள்ள காமாக்கினியானது என் நெஞ்சுக்குள்ளே பற்றி எழும். எ - று

காளிங்:— தோழீ! யான் அவர் திறம் ஒருக்கால் மறப்பேன் ஆயின் எவன் ஆவேன் கொல்லோ? மறப்பு அறியேன்: ஆதலால் எப்பொழுதும் அகத்து உள்ளியககண்ணும் உள்ளுகின்ற உள்ளம் பின்னும் குளிர்தலின்றிச் சாலக் கொதிக்கும் எ - று.

மற்கொல் என்றது அசைச்சொல். யான் என் ஆவன் என்றது அவன் இறந்துபாடு உடையனாவன் அன்றிப் பிறிது ஒன்று ஆவது இல்லை என்பது கருத்து என்று அறிக.

## ஒப்புமைப்பகுதி :

"ஈரமில் கேள்வன் உறீஇய காமத்தீ
நீருள் புகினும் சுடும்." —கலித். 144 : 61, 63.

"நீருட், குளிப்பினும் காமம் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்." —நாலடி. 90.

"கடலின், மூழ்கினும குன்றிடை ஒளிப்பினும் காமம்
உடல்விராய் உயிர் சுடுவதே போலும." —விநா, இந்திரன்சாப. 34.

1208. எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு. (அ)

இத்துன்பம் அறிந்துவந்து காதலர் நினக்கு இன்பம்
செய்வர் என்றாட்குச் சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— எனைத்து நினைப்பினும் காயார் - தம்மை யான் எத்துணையும் மிக நினைந்தாலும் அதற்கு வெகுளார்; காதலர் செய்யும் சிறப்பு அனைத்து அன்றோ - காதலர் எனக்குச் செய்யும இன்பமாவது அவ்வளவன்றோ !

வெகுளாமை அதற்கு உடன்பட்டு நெஞ்சின்கண் நிற்றல். தனக்கு அவ் இன்பத்தில் சிறந்ததின்மையின், அதனைச் சிறப்பு என்றாள். காதலர் நம்மாட்டு அருள் என்றும், செய்யுங்குணம என்றும் பாடம் ஓதுவாரும் உளர். தோழி கூறிய அதனைக் குறிப்பான் இகழ்ந்து கூறியவாறு.

மணக்:— யாம் காதலரை எவ்வளவு நினைப்பினும் வெகுளார்; அவ்வளவன்றோ அன்புற்றார் செய்யும் அருள் எ - று.

அருள் செய்தலாவது குற்றம கண்டாலும் வெகுளாமை.

பரிப்:— தலைமகள் ஆற்றாமைகண்டு அருள் இலன் என்று இயற்பழித்த தோழிக்கு யாம் கொடியர் என்று நினைக்கவும் அதற்கு முனியாது நெஞ்சத்தே உறையாநின்றார்: ஆதலான் அருள் உடையர் என்று கொள்ளப்படும் என்று இயற்பட மொழிந்தது.

பரிதி:— நாயகரை எப்போது நினைப்பினும் காயார்; இதுவன்றே நல்லோர் செய்யும் குணம் எ - று.

காளிங்:— கண்டு எய்திய காலத்திலும் தமது இனிய குணங்களை நினைத்தல் அன்றிப் பின்பு நின்னிற் பிரியேன்: பிரியின் ஆற்றேன் என்று இங்ஙனம் தெளிந்து அளித்துப் பிரிதலும் ஆற்றலும் வலஞ்சையிற் படிறுடைமையும பண்பின்மையும உடையர் ஆயினர் என்று இங்ஙனம் கொடுமை நினைப்பினும காய்வது ஒன்று இலர்: காதலித்து உள்ளுள்ளே உறைவர். அதனால நமககு நம் காதலர் செய்யும பெருஞ்சிறப்பு அவ் வளவைத்து அன்றே? எனவே கண்ணெதிர் நிற்பர்: இன்று கருத்து எதிர் நிற்பர்: இதுவன்றே நமமாட்டுத் தலைவர் செய்யும் தலையளி எ - று.

1209. [1]விளியுமென் இன்னுயிர் [2]வேறல்லம் என்பார்
[3]அளியின்மை ஆற்ற நினைந்து. (கூ)

தலைமகன் தூதுவரக் காணாது வருந்துகின்றாள் வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— வேறு அல்லம் என்பர் அளியின்மை ஆற்ற நினைந்து - முன்பெல்லாம் நாம் இருவரும் வேறல்லம் என்று சொல்லுவாரது அளியின்மையை மிகவும் நினைந்து; என் இன்னுயிர் விளியும் - எனது இனிய உயிர் கழியாநின்றது.

அளியின்மை பின் வருவாராகலுமாய்ப்பிரிதலும், பிரிந்து வாரா மையும், ஆண்டுநின்றுழித் தூதுவிடாமையும் முதலாயின. பிரிவாற்றல் வேண்டும என வற்புறுத்தாட்கு எனனுயிர் கழிகின்றது பிரிவிற்கு அன்று அவரன்பின்மைககு என எதிரழிந்து கூறியவாறு.

மணக்:— நம்முள் நாம் வேறலலமென்று சொன்னவர் அருளின் மையை மிகவும் நினைந்து எனது இனிய உயிர் அழியாநின்றது எ - று.

இது தலைமகன் நினையானென்று தெரிந்து தலைமகள் தோழிக்குக் கூறியது.

---

[1]'விழியும' [3]'அழி' பரிதி-பாடம். [2]'வேறல்ல' காளிங்-பாடம்.

பரிதி:— என் விழியும் உன் உயிரும் வேறல்ல என்று இருந்தவர் பிரிந்தார். அவர் சொன்ன சொல்லை நினைந்து அழியாய் நெஞ்சே எ - று.

காளிங்:— தோழீ! யான் என்னை செய்வது? என் இன்னுயிரானது ஒரு காலைக்கு ஒரு காலைக கழியும்; யாதனால் எனின் அன்று அருளுடன் அளித்து யாம் இருதலைப் புள்ளின் ஓர் உயிர்போல மெய் இரண்டு ஆயினும் உயிர் வேறு அல்ல என்பவர்மாட்டு அதற்கு ஏற்பப் பின்னொரு தண்ணளி யிலலாமையை மிகவும நினைந்து நினைந்து எ - று.

1210. [1]விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
[2]படாஅதி வாழி மதி. (கo)

வன்புறை யெதிரழிந்தாள் காமமிக்ககழிபடரால் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— மதி - மதியே, விடாது சென்றாரைக் கண்ணினால் காணப் படாதி - என் நெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப்போயினாரை யான் என் கண்ணளவானாயினும் எதிர்ப்படும்வகை நீ படாதொழிவாயாக.

கண்ணளவான் எதிர்ப்படுதலாவது மதி இருவரானும் நோக்கப் படுதலின் இருவர் கண்ணும் அதன் கண்ணே சேர்தல். முதலொடு சினைக்கு ஒற்றுமை உண்மையின் சென்றாரைக்காண என்றும, குறையுறுகின்றா ளாகலின் வாழி என்றும் கூறினாள். இனிப் படாது என்பது பாடமாயின், கனவிடைக் கண்ணினாற்காணுமாறு மதிபடுகின்றதிலலை என அதனால் துயில்பெறாது வருந்துகின்றாள கூற்றாகுக. இப்பொருட்கு வாழி என்பது அசைநிலை.

மணக்:— என் நெஞ்சை விடாது போனவரைக் கண்ணினாற் காணுமாறு படுகின்றதில்லை இம்மதி எ - று.

பட்டதாயின், என்கண் உறங்கும்; உறங்கினால், அவரைக் காணலாம் என்பது கருத்து. இது மதியுடன் புலந்து கூறியது. இதனாலே நனவினால் வருத்த முற்றதும் கூறினாளாம.

---

[1] காளிங்கர் இக்குறளை அவர்வயின் விதும்பல் என்ற 127-ம் அதிகாரத்தில் சேர்த்துள்ளார். இங்கு தனிப்படர்மிகுதி என்ற 120-ம் அதிகாரத்தின் 8-ம் குறளை அமைத்துள்ளார். [2] ‘படாஅது’ மணக் - பாடம்.

பரிதி:— விடாமற் சென்றாரைக கண்ணினால் காணுமளவு அஸ்த மனமாகாமல் விளங்கியிருப்பாய் மதியே எ - று.

காளிங்:— அகத்து ஒருகாலும் விட்டுப் பிரியாது புறத்துப் பிரிந்த எம் காதலர் இன்று இவ்விடத்தில் சேய்த்தின்கணின்று வருவா ராயின் என் கண்ணினால் அவரைக் கண்டு இன்புறவேனாக நீ நின்று ஒளிவிட்டு விளங்குவாய்; மறைவாய் அல்லை: மதியமே! எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— படாதி - படுதிக்கு எதிர்மறை. நச்சினார்க்கினியரும் "சூழாதி" எனக் காட்டினார். "கொடியவை கூறாதி பாண" என்னும் (பா - 388) நாலடியும் அது.

## மேற்கோள்பகுதி :

சங்கர:— 'வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய் ஏகலும் உரித்து' என்பதற்கு மேற்கோள். (நன். 168.)

### குறள் வைப்புமுறை.

பரிமே:— உள்ளினும், எனைத்தொன்று, நினைப்பவர், யாமும், தங்நெஞ்சத், மற்றியான், மறப்பின், எனைத்துநினைப், விளியும், விடாஅது.

மணக்:— உள்ளினும, யாமும், நினைப்பவர், தங்நெஞ்சத், விளியும் மறப்பின், எனைத்தொன்று, மற்றியான், எனைத்துநினைப், விடாஅது.

பரிதி:— எனைத்தொன்று, நினைப்பவர், எனைத்துநினைப், உள்ளினும், மற்றியான், மறப்பின், தங்நெஞ்சத், விளியும, விடாஅது, யாமும்

காளிங்:— எனைத்தொன்று, எனைத்துநினைப், விளியும், மறப்பின், மற்றியான், நினைப்பவர், யாமும், உள்ளினும், தங்நெஞ்சத்.

# 122. கனவுநிலையுரைத்தல்.

## தொகுப்புரை :

[ காதலர் அனுப்பிய தூதுரையோடு வந்த கனவிற்கு யான் என்ன விருந்து செய்வேன். கயல்மீன் போலும் என் கண்கள் யான் வேண்டிக் கொள்ளத் தூங்குமாயின் கனவிற் காதலரைக் காண்பேன். பிரிவைப் பொறுத்து உயிர் வைத்திருக்கும் இயல்பை எடுத்துச் சொல்லிக்கொள்வேன் நனவில் வந்து அன்பு செய்யாத காதலரைக் கனவிலாவது காண்பதால் என்னுயிர் இருக்கிறது. நனவில் கலவாத காதலரைத்தேடித் தருதலால் கனவிலே எனக்கு இன்பம் உண்டாகிறது. நனவிற்போல் கனவிலும் அவரைக் கண்ட அப்பொழுது இனிதாய் இருந்தது. நனவென்னும் பாவி இல்லையாயின் கனவில் என்னைக்கூடிய காதலர் பிரியாரன்றே. நனவில் வந்து அன்பு செய்யாத கொடிய காதலர் நாள்தோறும் கனவில் வந்து நம்மை வருத்துவது என்னை ? நான் தூங்கும் போது என் தோள்மேல் இருக்கின்ற கணவர் விழித்துக் கொண்டவுடன் நெஞ்சத்துள் ஒளிக்கின்றார்; இது என்னை ? கனவில் காதலரைக் காணாதவர்களே நனவில் அன்பு செய்யாத கணவரை நொந்துகொள்வர். இவ்வூரவர்கள் நனவில் நம்மைவிட்டுப் பிரிந்தார் என்று பழி தூற்றுவார்கள்; அவர் கனவில் தவறாது கலந்து செல்லுதலை அறியார்கள்போலும்.]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— அஃதாவது தலைமகள் தான்கண்ட கனவினது நிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல். அக்கனவு நனவின்கண் நினைவு மிகுதியால் கண்டதாகலின் இது நினைந்தவர்புலம்பலின் பின் வைக்கப் பட்டது.

மணக்:— கனவுநிலையுரைத்தலாவது கனவினது நிலையைச் சொல்லுதல். காதலரை யொழிவின்றி நினைப்பார்க்கு உறக்கமில்லை யாகும்; அவர் உறங்கிலராயின், அவரது சேதியை மறவாது நினைப்பாராதலான், அதன்பின் இது கூறப்பட்டது. தலைமகன் நினைத்தல் தலைமகள் நினைத்தல் என்னும் இரண்டனுள்ளும் இவட்காயின், உறக்கமில்லை என்று கொள்க.

பரிப்:— காதலன் நினைவினாலே.வருத்தமுற்ற துன்பம் கூறினாள் அந்நினைவினால் இக்கனவுநிலை யுரைத்தல் கூறுகின்றமையின் இது பின் கூறப்பட்டது. தலைமகனை நினைத்தல், கனவின்நிலைமை என்னும் இரண்டினுள்ளும் இவட்குக் கனவுநிலையாகிய உறக்கம் இல்லை எனக்கொள்க.

**1211.** காதலர் தூதொடு வந்த கனவினுக்கு
யாது செய்வேன்கொல் விருந்து. (க)

தலைமகள் தூதுவரக்கண்டாள் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— காதலர் தூதொடு வந்த கனவினுக்கு - யான் வருந்துகின்றது அறிந்து அது தீரக் காதலர் விடுத்த தூதினைக்கொண்டு என்மாட்டுவந்த கனவினுக்கு, விருந்து யாது செய்வேன் - யான் விருந்தாக யாதனைச் செய்வேன் !

விருந்து என்றது விருந்திற்குச் செய்யும் உபகாரத்தினை. அது கனவிற்கு ஒன்று காணாமையின், யாது செய்வேன் என்றாள்.

மணக்:— நம் காதலர் விட்ட தூதரோடே வந்த கனவினுக்கு யான் யாதுவிருந்து செய்வேன்? எ - று.

இது தலைமகளாற்றுதற்பொருட்டுக் காதலர் வாராநின்றார் என்று தூதர்வரக் கனாக் கண்டேன் என்று தோழி சொல்லியது.

பரிதி:— காதலர் வரவிட்ட தூது கனவிலே கண்டதற்கு யாது செய்வேன் விருந்து எ - று.

காளிங்:— நெஞ்சே! நெருநலொடு கனவு என்கண் வருகின்ற பொழுது எம காதலர் வரவிட்ட தூதொடும் வந்து தோன்றியது: அதனால் மற்று இப்பேருதவி செய்த கனவிற்கு யான் விருந்து உபசாரம் செய்யும் இடத்து யாது ஒன்று யாது ஒன்று செய்தால் தணிவது அறிகிலேன் ? என்றவாறு.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— விருந்திற்குச் செய்யும் உபகாரம்; விருந்தெனும் அதிகாரத்து, விருந்துபோலன்று என்பதற்கு அவ்வாறு உரைத்தார்.

1212. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சின் *கலந்தார்க்(கு)
உயலுண்மை சாற்றுவேன் மன். (உ)

தூதுவிடக் கருதியாள் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— கயல் உண்கண் யான் இரப்பத் துஞ்சின் - துஞ்சாது வருந்துகின்ற என் கயல்போலும் உண்கண்கள் யான் இரந்தால் துஞ்சுமாயின், கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன் - கனவிடைக் காதலரைக் காண்பேன், கண்டால் அவர்க்கு யான் ஆற்றியுளேனாய தன்மையை யானே விரியச்சொல்வேன்.

கயலுண்கண் என்றாள், கழிந்தநலத்திற்கு இரங்கி. உயல் - காமநோய்க்குத் தப்புதல். தூதர்க்குச்சொல்லாது யாம் அடக்குவனவும் சொல்லுவனவற்றுள்ளும் சுருக்குவனவற்றின்பரப்பும் தோன்றச் சொல்வேன் என்னும் கருத்தால் சாற்றுவேன் என்றாள். இனி அவையும்துஞ்சா சாற்றலும்கூடாதென்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. மூன்றும் கண்டாள் கூற்றாகலின், கனவுநிலையுரைத்தலாயிற்று.

மணக்:— என்னுடைய கயல்போலும் உண்கண் யான் வேண்டிக்கொள்ள உறங்குமாயின், நம்மோடு கலந்தார்க்கு நாம் உய்தலுண்மையைச் சொல்லுவேனென்று உறங்குகின்றதில்லையே எ - று.

மன் - ஒழியிசையின்கண் வந்தது. கயலுண்கண் - பிறழ்ச்சியுடைய கண்.

பரிப்:— ஈண்டு எப்பொழுதும் காதலர் வரவு பார்த்திருக்கின்ற தடுமாற்றத்தை உடைத்தாகிய கண் என்றவாறாயிற்று. உறங்கவேணும் என்ற தோழிக்குக் கண்கள் நீயும் யானும் வேண்டிக்கொள்ள உறங்குமாயின் இத்துணைநாள் சாவாது இருந்தோம் என்று நம் காதலர்க்கு உரைக்கலாயிற்று என்று தலைமகள் கூறியது.

பரிதி:— கயல்போன்ற கண்ணே என் நாயகர் கனவில் வரும்படி நீ துஞ்சுவாயாகில் வேண்டி உடனே வரும்படி சொல்லி நிறுத்திக்கொள்வேன் நீ துஞ்சுவாயாக எ - று.

---

* 'காந்தார்' காளிங் - பாடம்.

காளிங்:— நீரோடு வாழும் கயல்போல நீந்தும் எம் கலுழ் கண்ணிணை ஒருகால் எம்பொருட்டாகவே நீர் துஞ்சவேண்டும் என்று யாம் இரந்துகொள்ள அருளித் துஞ்சுமாயின், சொல்லாது பிரிந்த நம் காதலர்க்கு யாம் உய்தலுடைமைக்கு வேண்டும் உபாயத்தைச் சொல்லிக் கொள்வம் இனி நெஞ்சே! எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— இரப்ப - இரந்தால்.

1213. நனவினான் நல்கா தவரைக் கனவினால்
*காண்டலின் உண்டென் உயிர். (௩)

ஆற்றுளெனக் கவன்றாட்கு ஆற்றுவல்என்பதுபடச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நனவினான் நல்காதவரை - நனவின்கண் வந்து தலையளிசெய்யாதாரை; கனவினால் காண்டலின் என் உயிர் உண்டு - யான் கனவின்கண் கண்டகாட்சியானே என் உயிர் உண்டாகாநின்றது.

மூன்றனுருபுகள் ஏழன்பொருண்மைககண் வந்தன. அக்காட்சி யானே யான் ஆற்றியுளேனாகின்றேன் நீ கவலல்வேண்டா என்பதாம்.

மணக்:— நனவின்கண் நமக்கு அருளாதவரைக கனவின்கண் காண்டலானே என்னுயிர் உண்டாகா நின்றது; இல்லையாயின், உயிருண் டாதற்குக் காரணமுண்டோ? எ - று.

இஃது உறங்கினால் காணலாமோ என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— நனவினாலே பிரிந்த நாயகர் கனவிலே வந்தபடியால் என் உயிர் நிலைபெற்றது. என் நாயகர் பெருமை என்னையோ எ - று.

காளிங்:— தோழீ! நனவின்கண் நல்காது பிரிந்தவரைக் கனவின்கண் ஒரு காலத்துக் காணப் பெறுதலுமேயாயின் அதுவே பற்றுக்கோடாக உளதாயிருககின்றது எனது உயிர் எ - று.

*'காண்டலும்' காளிங்-பாடம்.

முதுமொழிவெண்பாக்கள்:

"நேர்ந்த கனவிலெம்மை நேற்றிரவு வந்துநீ
சேர்ந்தறியாய் கோவைத் தினகரா - போந்து." —தினகர. 126.

"செய்தவஞ்சேர் வாணனது செல்வி கனவிலையில்
எய்தினன் அன்றோ இரங்கேசா - பைய." —இரங். 122.

1214. கனவினான் உண்டாகும் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு. (௪)

இதுவும் அது.

உரைப்பகுதி:

பரிமே:— நனவினான் நல்காரை நாடித் தரற்கு - நனவின்கண் வந்து தலையளி செய்யாதாரை அவர்சென்றுழி நாடிக்கொண்டுவந்து கனவு தருதலான்; கனவினால் காமம் உண்டாகும் - அக்கனவின்கண்ணே எனக்கு இன்பம் உண்டாகின்றது.

காமம் ஆகுபெயர். நான்காவது மூன்றன்பொருண்மைக்கண் வந்தது. இயல்பான் நல்காதவரை அவர்சென்ற தேயம் அறிந்து சென்று கொண்டுவந்துதந்து நல்குவித்த கனவால் யான் ஆற்றுவல் என்பதாம்.

மணக்:— நனவின்கண் நமக்கு அருளாதவரைக் கனவுதேடித் தருதலால், அககனவின்கண்ணே எனக்கு இன்பம் உண்டாகும் எ - று.

இது, கண்டால் பயன் என்னை? காமநுகர்ச்சியில்லையே என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— நனவினாலே நல்காமல் பிரிந்தாரைப்பிரிந்தேன் என்ற துன்பம் விட்டு இன்பமாகப் பெற்றது கனவிலே கூடினமுறையால் எ - று.

காளிங்:— நெஞ்சே! நனவினிடத்து நல்காது பிரிந்த நம் காதலரைத் தேடிக் கொணர்ந்து தருதற்குக் கனவின்கண்ணும் எனக்கு உண்டாகா நின்றது ஓர் ஆசை எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— தரற்கு - தருதலால்.

**ஒப்புமைப்பகுதி:**

" கனவினால் கண்டேன் தோழி காண்டகக்
கனவின் வந்த கானலம் சேர்ப்பன்
நனவின் வருதலும் உண்டென
அனைவரை நின்றதுஎன் அருமபெறல் உயிரே." —கலி. 128 : 23-26.

1215 நனவினால் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே இனிது. (ரு)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நனவினால் கண்டதூஉம் (இனிது) ஆங்கே - முன் நனவின்கண் அவரைக்கண்டு நுகர்ந்த இன்பந்தானும் இனிதாயிற்று, அப்பொழுதே, கனவும் தான் கண்டபொழுதே இனிது - கனவின்கண் கண்டு நுகர்ந்த இன்பமும் அக்கண்டபொழுதே இனிதாயிற்று, அதனான் எனக்கு இரண்டும ஒத்தன.

இனிது என்பது முன்னும் கூட்டப்பட்டது. கனவு ஆகுபெயர். முன்னும் யான் பெற்றதிவ்வளவே, இன்னும் அதுகொண்டு ஆற்றுவல் என்பதாம்.

மணக்:— கனவின்கண் கண்டு நுகர்ந்த இன்பமும் அப்பொழுதைக்கு இன்பமாம்; அதுபோல, கனவின்கண் கண்டு நுகர்ந்த இன்பமும் கண்ட அப்பொழுதைக்கு இன்பமாம் எ - று.

இது கனவிற் புணர்ச்சி இன்பம் தருமோ என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— நனவினால் கண்டதும் இனிது. அதனினும் இனிது நாயகரைக கனவில் காணுதல் எ - று.

காளிங்:— தோழீ! நம் காதலரை நனவிடத்துக் கண்டால் மற்று அதுவும் அவ்விடத்தே இனிது ஆகும்; இனி அக்கனவுதானும்

அவ்விடத்து அவரைக் கண்டபொழுதே பெரிதும் இனிது ஆகும் என்றதனால் இங்ஙனம் ஆயினும் எய்தப்பெறின் யாதும வேற்றுமை இன்றி யாம் அறிதற்கு அரிது என்பது பொருள் எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

"அல்லமனே மாயை கனவில் அணைந்ததனால்
சொல்லரிய இன்பமுற்றாள் சோமேசா - நல்ல." —சோமேசர். 122.

1216. நனவென ஒன்றில்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன். (சா)

இதும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— 'நனவு என ஒன்று இல்லையாயின் - நனவு என்று சொல்லப்படுகின்ற ஒரு பாவி இல்லையாயின்; கனவினால் காதலர் நீங்கலர் - கனவின்கண் வந்துகூடிய காதலர் என்னைப் பிரியார்.

ஒன்று என்பது அதன்கொடுமை விளக்கி நின்றது. அஃது இடையே புகுந்து கனவைப்போக்கி அவரைப் பிரிவித்தது என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைககண் வந்தது. கனவிற்பெற்று ஆற்று கின்றமை கூறியவாறு.

பரிப்:— நனவு என்று ஒன்று இல்லையாயின், கனவின்கண் வந்த காதலர் பிரிதல் இல்லை எ - று.

யாங்கள் எல்லாம் காணாது ஒழியவும் நீ கண்டாய் ஆயின் அவரைப் பிரியவிட்டது என்னை என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— நனவு என்பது ஒன்று இல்லையாயின் கனவினிடத்து நாயகர் நீங்கார் எ - று.

காளிங்:— தோழீ! நனவெனப் பெயர்பெற்றது ஒரு காலம் வேறு ஒன்று இல்லையாயின், இக்கனவிடை நம் காதலர் ஒரு பொழுதும் நம்மை நீங்குவது இலர் மிகவும்: எனவே நனவின்கண் தனது பிரிவாற்றாமை தோன்றக் கூறினாள் எ - று.

இனி மற்று இங்ஙனம் காவற்குப் பிரிந்த தலைமகன் தூதுகண்டாயினும் தானே யாயினும் வந்து எய்தித் தலையளித்து உடன் வாழும தன்மைகாட்டி மற்று இதன் பின்னரே இவ்வாறு அன்றித் தலைமகன் பொருள்வயிற பிரிந்த இடத்துத் தலைமகளது ஆற்றாமை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள் :

"காதலனை நாளும் கனவணைந்தே சாரதைதான்
மூதுவகை யுற்றாள் முருகேசா - நீதின்." —முருகேசர். 122·

1217. நனவினான் நல்காக் கொடியார் கனவினான்
என்எம்மைப் பீழிப் பது. (எ)

விழித்துழிக் காணாளாயினாள் கனவிற்கூட்டம் நினைந்து ஆற்றாளாய்ச் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— நனவினான் நல்காக் கொடியார் - ஒரு ஞான்றும் நனவின்கண் வந்து தலையளி செய்யாத கொடியவர்; கனவினான் எம்மைப் பீழிப்பது என் - நாடோறும் கனவின்கண் வந்து நம்மை வருத்துவது எவ்வியையுபற்றி!.

பிரிதலும் பின் நினைந்துவாராமையும் நோக்கிக் கொடியார் என்றும், கனவில் தோள்மேலராய் விழித்துழிக் கரத்தலின் அதனானும் துன்பமாகா நின்றது என்பாள் பீழிப்பது என்றும் கூறினாள். நனவின் இல்லது கனவினும் இல்லை என்பர், அது கண்டிலம் என்பதாம்.

மணக்:— நனவின்கண் அருளாத கொடுமையையுடையார் கனவின்கண் வந்து எம்மைத் துன்பம் உறுத்துவது எற்றுக்கு? எ - று.

இது விழித்த தலைமகள் ஆற்றாமையால் தோழிக்குக் கூறியது.

பரிப்:— இது தலைமகனைக் கனவகத்துக் கண்டு முன்பு நல்காமையை நினைத்து ஊடல் உற்றுழி அதனை உணர்த்திக் கூடுவதன் முன்னம் விழித்த தலைமகள் ஆற்றாமையால் தோழிக்குக் கூறியது. பீழை என்றது அவன் கூந்தலும அல்குலும் பற்றி நலிந்ததனை.

பரிதி:— நனவினால் இன்பம் தராமல் பிரிந்த நாயகர் கனவினால் வந்து எம்மை வருத்தம் செய்வது என்னை எ - று.

காளிங்:— நெஞ்சே! கனவின்கண் நம்மை நன்கு அளித்தருளாத கொடியவர் வருந்தி யாம் கண் துயிலின் கனவிடை எய்தியும் மற்று அவ்விடத்தும் கலந்து இன்புறாது எம்மை இடர் உறுவிக்கின்றது என்னை? எனவே அவ்விடத்துக் கண்டமாத்திரமே அல்லது கலந்து இன்புறாத கடுந்துயர் நினைந்து ஆற்றாளாயினாள் என்பது பொருள் எ-று.

1218. துஞ்சுங்கால் *தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து. (அ)

தான் ஆற்றுதற்பொருட்டுத் தலைமகனை இயற்பழித்தாட்கு இயற்பட மொழிந்தது.

உரைப்பகுதி :

பரிமே:— துஞ்சுங்கால் தோள்மேலராகி - என் நெஞ்சு விடாது உறைகின்ற காதலர் யான் துஞ்சும்பொழுது வந்து என்தோள்மேலராய்; விழிக்குங்கால் விரைந்து நெஞ்சத்தராவர் - பின் விழிக்கும்பொழுது விரைந்து பழைய நெஞ்சின்கண்ணராவர்.

கலவிவிட்டு மறையும் கடுமைபற்றி விரைந்து என்றாள். ஒருகாலும் என்னின் நீங்கி அறியாதாரை நீ நோவற்பாலையல்லை என்பதாம்.

மணக்:— காதலர் உறங்குங்காலத்துத் தோள்மேலராகி, விழித்த காலத்து விரைந்து மனத்தின்கண்ணே புகுவர் எ - று.

இஃது உறக்கம் நீங்கினால் யாண்டுப்போவர் என்று நகைக்குறிப் பினாற் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— நித்திரையிடத்துத் தோள்மேல் கிடப்பர்; விழித்த பொழுது நெஞ்சத்துள்ளார் மிகவும்; ஆகவே மாயக்கள்ளர் எ - று.

காளிங்:— தோழி! ஒருகால் இங்ஙனம் கண் துஞ்சப்பெற்றேனாயின் மற்று அப்பொழுது என் தோள்மேலவராவர், இனி விழிக்குங் காலத்து அப்பொழுது என் நெஞ்சத்தார் ஆவர் விரைந்து; எனவே ஒருகாலும் அவர் என்னைப் பிரிவதிலர்; நீ என்பொருட்டு வருந்த வேண்டுவதில்லை எ - று.

---

* 'தோள்மேல ராவர்' காளிங் - பாடம்.

ஒப்புமைப்பகுதி :

" மின்னவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய்
நன்னுதல் பசத்த லாவது துன்னிக்
கனவில் காணும இவளே
நனவிற் காணாள்நின் மார்பே தெய்யோ " —ஐங். 234.

" நீணகர் நிறையாற்றாள் நினையுநள் வதிந்தக்கால்
தோண்மேலாய் எனநின்னை மதிக்குமன் மதித்தாங்கே
நனவெனப் புல்லுங்கால் காணாளாய்க் கண்டது
கனவென உணர்ந்துபின் கையற்றுக் கலங்குமே." —கலி. 126 : 14-17.

" தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமைஎடுத்துப்
பற்றுவேன் என்றுயான் விழிக்குங்கால் மற்றுஎன்
நெஞ்சத்துள் ஓடி ஒளித்தது ஆங்கே துஞ்சாநோய்
செய்யும அறனில் லவன்." —ஷை. 144. 55 - 58.

" களியானைத் தென்னன் கனவின்வந் தென்னை
அளியான் அளிப்பானே போன்றான் - தெளியாதே
செங்காந்தள் மெல்விரலால் சேக்கை தடவந்தேன்
என்காண்பேன் என்னலால் யான் " —முத்தொள்.

முதுமொழிவெண்பாக்கள்:

" நித்திரையில் உற்றணைந்தான் நேயன் இரத்னவல்லி
சித்திரமே கைக்குச சிவசிவா - ஒத்துரைக்கத் " —சிவசிவ. 122.

" தம்பிரான் தோழர் தமைஇகழ்ந்த தோழிக்கு
மங்கை பரவை மறுத்துரைக்கும - எங்கிருந்தும்." —முதுமொழி. 175

1219. நனவினான் *நல்காரை நோவர் கனவினால்
காதலர்க் காணா தவர். (கூ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— கனவினால் காதலர்க காணாதவர் - தமக்கு ஒரு காதலர் இன்மையின் அவரைக் கனவில் கண்டறியாத மகளிர்; நனவினான்

* 'நல்காமை' காளிங் - பாடம்.

நல்காரை நோவர் - தாம் அறிய நனவின்கண் வந்து நல்காத நம்காதலரை அன்பிலர் என நோவாநிற்பர்.

இயற்பழித்தது பொறுது புலக்கின்றாளாகலின், அயன்மை தோன்றக் கூறினாள். தமக்கும் காதலர் உளராய் அவரைக் கனவில் கண்டு அறிவாராயின நமகாதலர் கனவினகண ஆற்றி நலகுதலறிந்து நோவார் என்பதாம்.

மணக்:— நனவின்கண் வந்து நல்காத காதலரை நோவாநிற்பர், கனவின்கண் அவரைக காணாதவர்; காண்பாராயின், நோவார் எ - று.

இது தலைமகள் ஆற்றாமை கண்டு தலைமகனை இயற்பழித்த தோழிக்கு அயலார்மேல் வைததுத் தலைமகள் கூறியது.

பரிதி:— நனவினால் நல்கார் என்று விதனப்படுவர்; கனவினாலே காதலரைக் காணாத மாதர் எ - று.

காளிங்:— நெஞ்சே! நம் காதலர் நம்மை நனவிடத்து வந்து நல்காமையைக குறித்து இவள்மாட்டு அருளும அன்பும் இலர் என்று இங்ஙனம் நொந்து உரைப்பர் யார் எனின், இங்ஙனம நனவிடைப் பிரிந்த தம் காதலரைக கனவிடைக கண்டு இன்புறாதவர்: எனவே அங்ஙனம கூறிய அயலார் கேட்பத் தன் நெஞ்சிற்குச் சொல்லுவாளாய்ச சொல்லினாள் எ - று.

1220. நனவினான் நம்நீததார் என்பர் கனவினால்
காணார்கொல இவ்வூ ரவா. (கo)

இதுவும் அது.

உரைப்பகுதி:

பரிமே:— இவ்வூரவர் நனவினான் நம நீத்தார் என்பர் - இவ்வூரின் மகளிர் நனவின்கண் நமமை நீத்தார் என்று நம் காதலரைக கொடுமை கூறாநிற்பர்; கனவினால் காணார் கொல் - அவர் கனவின்கண் நீஙகாது வருதல் கண்டறியாரோ!.

என்னொடு தன்னிடை வேற்றுமை இன்றாயின் யான் கண்டது தானும் கண்டமையும, அது காணாது அவரைககொடுமை கூறுகின்றமை யின் அயலாரேயாம என்னும கருத்தால், இவ்வூரவர் என்றாள்.

மணக்:— இவ்வூரார் நனவின்கண்ணே நம்மை நீக்கியகன்றார் என்று அவரைக் கொடுமை கூறாநிற்பர்; அவர் அவரைக் கனவின்கண் காணார்களோ! எ - று.

இஃது இவ்வேறுபாடு அலராயிற்று என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— நனவினாலே பிரிந்தார் என்று நம்மைத் தூற்றுவார், கனவினாலே வருவது காணார்கொல் இவ்வூரவர்? எ - று.

காளிங்:— நெஞ்சே! நம் காதலர் நம்மைக் கையகன்றனர் என்று நனவின்கண் அவரைக் கொடுமை கூறாநிற்பர்; இதற்கு என்ன காரணம்? கனவிடத்து யான் என் காதலரைக் காண்பேன் என்பதனால் அப்பொழுது தாமும் அவரைக் கண்டுகொள்ளாரோ இவ்வூரவராகிய மகளிர்: எனவே இனி அவரைக கொடுமை கூறுகின்றது என்னை? எ - று.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— காதலர், கயலுண்கண், நனவினானல்கா, கனவினால், நனவினாற் கண்ட, நனவென, நனவினானல்காக், துஞ்சுங்கால், நனவினானல்காரை, நனவினானீத்தார்.

மணக்:— கயலுண்கண், நனவினானல்கா, கனவினால், நனவினாற்கண்ட, துஞ்சுங்கால், நனவினானல்காக், நனவினானல்காரை, நனவினானீத்தார், காதலர், நனவென.

பரிதி:— நனவினானல்காக், கனவினான், நனவினாற்கண்ட, நனவென, நனவினானல்கா, நனவினானீத்தார், துஞ்சுங்கால், நனவினானல்காரை, கயலுண்கண், காதலர்.

காளிங்:— கனவினான், கயலுண்கண், துஞ்சுங்கால், நனவினானல்கா, நனவினாற்கண்ட, நனவினானல்காக், காதலர், நனவினானீத்தார், நனவினானல்காரை, நனவென.

# 123. பொழுதுகண்டிரங்கல்.

## தொகுப்புரை :

[மாலைப் பொழுதே! நீ பழைய மாலைக்காலம் அல்லை. கலந்த காதலரைப் பிரிந்தமகளிரின் உயிரை உண்ணும் காலமாக இருக்கின்றாய். மருண்ட மாலைக்காலமே! நீ ஏன் என்னைப்போல வருந்துகின்றாய்? எம் கேள்வரைப் போல நின் கேள்வரும் கொடியவரோ? அன்றைக்கு நடுக்கத்துடன் பசந்து வந்த மாலைக்காலம் இன்றைக்கு எனக்கு மரணத்துன்பம் மிக வளர வந்துகொண்டிருக்கிறது. அன்று, என் உயிர் மருளவந்த மாலைக்காலம் இன்று காதலர் பிரிந்தமையால் கொலைக்களத்தில் பகைவன் வருவதுபோல வருகிறது. நான், காலைப்பொழுதிற்குச் செய்த நன்மைதான் என்ன? மாலைப்பொழுதிற்குச் செய்த தீமைதான் என்ன? இந்த மாலை இவ்வாறு வருத்தும் என்பதைக் காதலரைப் பிரியாதகாலத்து அறியப்பெற்றிலேன். இக்காமப் பூ காலையில் அரும்பி, பகல் எல்லாம் முற்றி, மாலைக்காலத்தில் மலர்கிறது. இநத வேய்ங்குழல் செந்தீப்போல் சுடும் மாலைக்காலத்திற்குத் தூதனுமாய், என்னைக் கொல்லும் படையாகவும் இருக்கிறது. எல்லோரும் மதிமயங்கும்படி இம்மாலைக்காலம் வரும்போது இவ்வூரே மருண்டு துன்பப்படுகிறது. பொருளையே பொருளாகக்கொண்ட தலைவரை எண்ணி இதுவரையில் பிரிவைப் பொறுத்திருந்த என் உயிரும் இம்மாலைக்காலத்து அழிந்து படுகிறது.]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது மாலைப்பொழுது வந்துழி அதனைக்கண்டு தலைமகள் இரங்குதல். *கனைமூந்துருத வினையில்லை என்பதுபற்றிப் பகற் பொழுது ஆற்றியிருந்தாட்கு உரியதாகலின், இது கனவுநிலையுரைத்தலின் பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *பொழுதுகண்டிரங்கலாவது மாலைப்பொழுது கண்டு தலைமகள் வருந்துதல். ஏனைப்பொழுதில் வருத்தமிலவோ எனின், பிரியப் பட்டார்க்கு எல்லாக் காலமும் வருத்தமுளவாயினும், விடியலும் நண்பகலும் போலாது மாலைப்பொழுது வருத்தமிகுதலால், இது கூறப்பட்டது.*

பரிப்:— *என்னை வருத்தம் மிகுமாறு எனின், புள்ளும் மாவும் விடியலும் நண்பகலும் தத்தம் சேக்கையினின்று நீங்கி அந்திக்காலம் வந்துசேரும்: அவையிற்றைக் கண்டு நம் காதலர் நம்மை உள்ள*

---

* *பழ. நா. 2.*

கின்றிலர் என்றும், மைந்தரும் மகளிரும் விடியலும் நண்பகலும் அறத்தினும் பொருளினும் முயன்று அந்திக்காலத்தில் தம்மிற் கூடி இன்பம் நுகர்வது கண்டு யாம் இவ்வாறு நுகரப்பெறுகிலோம என்றும் நினைத்தலான் வருத்தம மிகும் என்க. நடுநாள் யாமத்தும் துன்பம் உறும் அன்றே; அதுவும் கூறவேண்டாவோ எனின், அககாலத்து வரும் துன்பமும் இதனின் மிகுதியின்மையின் வேறு கூருராயினர். இது நினைந்தவர் புலம்பலின் பின் கூறற்பாலது. கனவு நிலையும் சேரச் சொலல வேண்டுதலின் இரண்டு சொல்லும அவராககொண்டு முன் கூறவேண்டும் என்பதனுல் நினைவொடுகூடிய கனவை முன்கூறி அதன்பின் கூறினுர் என்று கொள்ளப்படும.

1221. [1]மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது. (க)

பொழுதொடு புலந்து சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— பொழுது - பொழுதே, நீ மாலையோ அல்லை - நீ முன்ளுள்களின் வந்த மாலையோ எனின், அல்லை; மணந்தார் உயிர் உண்ணும் வேலை - இருந்தவாற்ருன் அந்நாள் காதலரை மணந்த மகளிருயிரை உண்ணும் இறுதிககாலமாயிருந்தாய்.

முன்னுள் - கூடியிருந்தநாள். அந்நாள் மணந்தார் எனவே, பின் பிரிந்தாராதல் பெறுதும். வாழி என்பது குறிப்புச்சொல்; [2]'வாலிழை மகளிர் உயிர்ப்பொதி அவிழ்க்குங் காலை'' என்ருற்போல ஈண்டுப் பொதுமையால கூறப்பட்டது. வேலை என்பது ஆகுபெயர். வேலை என்பதற்கு வேலாயிருந்தாய் என்பாரும உளர்.

மணக்:— பொழுதே! நீ வெப்பமுடையை ஆனமையின், மாலையோ எனின், அல்லை; முன்பு கூடிப் பிரியப்பட்டார் உயிரை உண்பதாகிய ஒருவேலாயிருந்தாய் எ - று.

இது மாலைப்பொழுது கண்டு தலைமகள் ஆற்ருமையால் கூறியது.

பரிப்:— கெடுவாயாக என்னுதல் குறிப்புமொழி.

---

1 'மாலைநீ' காளிங்- மணக்- பாடம். 2 கலித். 119: 14.

பரிதி:— மாலையாகிய பொழுதல்லவே நீ; பிரிந்தாருயிரை உண்ணும் வேலன்றோ? எ - று.

காளிங்:— இக்காலத்து எம்வயின் வந்துற்ற மாலைப்பொழுதே! நீ பண்டுபோலக காலைக் கழிந்தால வரும் மாலையாய் வந்தாய் அல்லை; மற்று நின்னோடு கூடினோராகிய எம்மைப் போலத் தனித்து இருந்தாரை உயிர் பருகுவது ஒரு கூற்று நீ என்று கூறினாள் எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— உயிருண்ணும் வேலை என்பது, "உண்டற்குரிய அல்லாப் பொருளை, உண்டன போலக் கூறலும் மரபே" (தொல். பொருள். 213) என்ற விதியால் உணரப்படும். புலனுகா உயிர் அஃதாகி நின்றது எனக. இச்சூத்திரஞ் செயப்படுபொருட்கு என்க. வினைமுதற்கு "வாராமரபின" (தொல். சொல். 422) என்பதனாலும் "செய்யா மரபின்" (தொல். பொருளியல். 2 ) என்பதனாலும் அடங்கும். வேலை என்பதற்கு, வேலாயிருந்தாய் என்பாரும் உளர். 'மாலைநீ யல்லை' என்றும பாடம்.

## ஒப்புமைப்பகுதி :

"ஐதேந் தகலல்குல் ஆவித் தழலுயிராக்
கைசோர்ந் தணலூன்றிக் கண்ணீர கவுளலைப்பக்
கண்ணீர் கவுளலைப்பக் கையற்று யாம்இனையப்
புண்ணீருமவேலின் புகுந்ததால் மாலை" —சீவக. 2050.

1222. புன்கண்ணை வாழி மருண்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை. (உ)

தன்னுட்கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது.

## உரைப்பகுதி:

பரிமே:— மருள் மாலை - மயங்கிய மாலாய்! புன்கண்ணை - நீயும் எம்போலப் புன்கண் உடையையாயிருந்தாய்; நின் துணை எம் கேள்போல் வன்கண்ணதோ, நின் துணையும் எம் துணைபோல வன்கண்மை யுடையதோ கூறுவாயாக.

மயங்குதல் - பகலும் இரவும் தம்முள்ளே விரவுதல்: கலங்குதலும் தோன்ற நின்றது. புன்கண் - ஒளியிழத்தல்; அது பற்றித் துணையும்

உண்டாக்கிக் கூறினாள். எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. எமக்குத் துன்பஞ்செய்தாய், நீயும் இன்பமுற்றிலை என்னும் குறிப்பால் வாழி என்றாள்.

மணக்:— மயங்கிய மாலைப்பொழுதே! நீ வாழ்வாயாக; புன் கண்மை உடையையாயிருந்தாய்; எம்முடைய கேளிரைப்போல வன் கண்மையை உடைத்தோ நின் துணையும் எ - று.

இது தன்னுட்கையாறெய்திடுகிளவி.

பரிதி:— மாலைப் பொழுதே என்கண் பனி வருமாப்போல உன் கண்ணும் பனித்துருகாநின்றது என் கேள்வன் பிரிந்தாற் போல உனக்கும் ஓர் வன்கண்ணர் பிரிந்தார் உண்டோ எ - று.

காளிங்:— மாலாய்! நீ புன்கண்மையை உடையையாய் அறப் பொலிவு அழிந்து இராநின்றாய்; மருண்மாலாய் நீ! வாழ்வாயாக; நீ செய்கின்றது எம் உறுகேள்போல அருட்கண் இன்றி வன்கண்மை உடையது ஒன்று ஆகின்றது நின் துணையும; எனவே தன் மேனி பொலிவு அழிந்திட்ட புல்லிமையெல்லாம் புலப்படச் சொல்லினாள் தன் மேலிட்டு எ - று.

உலகத்து மாலை என்று இங்ஙனம் பெண்மைப்பெயர் வழக்கம் உண்டாகலானும் சந்தியாதேவி என்று வடசொல் இலக்கணம் உண்டாகலானும் இதனைப் பெண்பெயர் கொடுத்துக் கூறினார்.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— தன்னுட் கையாற்றை அதன்மேலிட்டுச் சொல்லியது. 'வருதி பெயர்தி' (நன். மேற்) என்னும் பாட்டும் இது.

## மேற்கோள்பகுதி:

சொக்கப்:— கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையுடன் கூறியதற்கு மேற்கோள். (தஞ்சை. 142.)

## ஒப்புமைப்பகுதி:

"புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோல்
துன்பம் உழலாய் துயிலப் பெறுதியால்." —சிலப் - கானல். 33.

1223\. பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும். (௩)

ஆற்றல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— *பனி அரும்பிப் பைதல்கொள் மாலை - காதலர் கூடிய நாளெல்லாம் என்முன் நடுக்கமெய்திப் பசந்துவந்த மாலை; துனி அரும்பித் துன்பம் வளர வரும் - இந்நாள் எனக்கு இறந்துபாடு வந்துதோன்றி அதற்கு உளதாம துன்பம் ஒருகாலைக்கொருகால் மிக வாராநின்றது.*

*குளிர்ச்சி தோன்ற மயங்கிவருமாலை என்னும் செம்பொருள் இக்குறிப்புணர நின்றது. துனி - உயிர்வாழ்தற்கண் வெறுப்பு. அதனால் யான் ஆற்றுமாறு என்னை என்பது குறிப்பெச்சம்.*

மணக்:— *நெருநல் எனக்கு நடுக்கத்தை உண்டாக்கித் தானும் புன்மைகொண்டிருந்த மாலைப்பொழுது, இன்றும் எனக்கு வெறுப்புத் தோற்றி வருத்தம் மிகுமபடியாக வாராநின்றது எ - று.*

*இது முன்னை ஞான்று மாலையால் அடர்ப்புண்ட தலைமகள் பிற்றைஞான்று மாலை வருவது கண்டு கூறியது.*

பரிதி:— *பனியரும்பிச் செக்கர்வானம் செய்யும் மாலைப்பொழுது துனிஅரும்பித் துன்பம் பெருக வரும் எ - று.*

காளிங்:— *தன் மேனிமேல் நுண்பனி அரும்பி மயங்கு உருவாகிய பைதன்மைகொண்டு மற்று இம்மாலையானது யாங்கும் ஈண்டு அடிக் கொண்டு பின்னும் இத்துன்பம் நமக்கு யாமம் எல்லாம் வளர்ந்து எடுப் பதற்கு வந்து எய்தாநின்றது; மற்று என்னை செய்வது? எ - று.*

முதுமொழிவெண்பாக்கள்:

*“ காக்கும் பதியகலக் காட்டிற் சலற்காரி
எக்கழுற்றுள் அன்றோ இராங்கேசா - நோக்கில் ”* —இராங். 123.

1224. காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து
ஏதிலர் போல வரும். (ச)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— மாலை - காதலர் உள்ளபொழுதெல்லாம் என் உயிர் தளிர்ப்ப வந்த மாலை, காதலர் இல்வழி - அவர் இல்லாத இப்பொழுது, கொலைக்களத்து ஏதிலர்போல வரும் - அஃது ஒழிந்துநிற்றலேயன்றிக் கொல்லுங்களரியில் கொலைஞர் வருமாறுபோல அவ்வுயிரைககோடற்கு வாராநின்றது.

ஏதிலர் அருள்யாதும் இல்லார். முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பஞ்செய்து வந்தபொழுதும் இன்று என்மேல் பகையாய்த் துன்பஞ் செய்து வாராநின்றது, இனி யான் ஆற்றுமாறு என்னை என்பதாம்.

மணக்:— காதலரில்லாதவிடத்து இம்மாலைப்பொழுது கொலைக் களத்துப் பகைவரைப்போல வரும் எ - று.

இது மாலைக்காலத்து நோய் மிகுதற்குக் காரணம் என்னை என்ற தோழிக்குத் தலைமகள் காரணம கூறியது.

பரிதி:— காதலரை இல்லாத மாதருக்கு மாலைப் பொழுது கொலைக்களத்துச் சத்துரு போல வரும் எ - று.

காளிங்:— நெஞ்சே! நம் காதலர் இன்றி முன்னமே தனித் துயர் உறுகின்ற இடத்தே பின்னரும் இம்மாலையானது அடுகளத்து உற்ற பகைவரைப் போல வாராநின்றது; எனவே இதற்கு யாம் உய்யுமாறு என்னை ? என்பது பொருள் எ - று.

**முதுமொழிவெண்பாக்கள் :**

“ அந்திப் பொழுதின்மணிச் சூடனினை வாலயர்ந்தாள்
பூந்துமணி வல்லி முருகேசா - சிந்தைசெயின் ” —முருகேசர். 123.

1225. காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை. (ரு)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— காலையும், மாலையும், அவர் கூடியஞான்றுபோலாது இஞ்ஞான்று வேறுபட்டு வாராநின்றன; அவற்றுள், யான் காலைக்குச் செய்த நன்று என்? - யான்காலைக்குச் செய்த உபகாரம் யாது?, மாலைக்குச் செய்த பகை எவன்? - மாலைக்குச் செய்த அபகாரம் யாது?

கூடியஞான்று பிரிவர் என்று அஞ்சப்பண்ணிய காலை அஃது ஒழிந்து இஞ்ஞான்று கங்குல்வெள்ளத்திற்குக் கரையாய் வாராநின்றது என்னும்கருத்தால் நன்றென்கொல் என்றும், கூடியஞான்று இன்பம் செய்துவந்த மாலை அஃதொழிந்து இஞ்ஞான்று அளவில் துன்பம் செய்யா நின்றது என்னும் கருத்தால் பகையெவன்கொல் என்றும் கூறினாள். பகை: ஆகுபெயர். தன்னோடொத்த காலைபோலாது மாலை தன்கொடுமையால் துன்பம் செய்யாநின்றது என்பதாம்.

மணக்:— காதலர் பிரிவதன் முன்னம், பிரிவரென்று அச்சத்தைத் தந்த காலைப்பொழுது பிரிந்தபின்பு வருத்தாது ஒழிதற்கு யான் செய்த நன்மை யாதோ? அவரோடு இன்பநுகர்தற்கு நட்பாயிருந்த மாலைப்பொழுது பிரிந்த பின்பு வருத்துவதற்கு யான் செய்த பகைமை யாதோ? எ - று.

இது மாலையது பண்பின்மையை உட்கொண்டு தலைமகள் கூறியது.

பரிதி:— காலைப் பொழுதுக்குச் செய்த நன்றி ஏது? மாலைப் பொழுதுக்குச் செய்த குற்றம் யாதோ? எ - று.

காளிங்:— நெஞ்சே! மற்று யாம் காலைக்குச் செய்த நன்மை தான் என்கொலோ? அஃது அன்றி மற்று இம்மாலைக்கு யாம் செய்த பகைதான் என்கொலோ? எனத் தன்மாட்டு ஒரு பிழை செய்யாதவை பேரிடர் செய்கின்ற இது பெருமபாவி எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— பகை - ஆகுபெயர்.

முதுமொழிவெண்பாக்கள் :

" உன்பவனி காட்டுமால் ஒன்று பெறுகோவைத்
தென்பவனி காட்டும் தினகரா - என்போல்வார் " —தினகர. 127.

" ஆற்றுவித்த தோழிக் கானன்ப ரைப்பிரிந்த
கோற்றொடியார் ஊர்மடந்தை கூறுவது - மேற்சென்று"
—முதுமொழி. 176.

1226. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன். (சு)

இன்று இன்னையாகின்ற நீ அன்று அவர் பிரிவிற்கு உடம்பட்டது
என்னை என்றாட்குச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— மாலை நோய் செய்தல் - முன்னெல்லாம் எனக்கு நட்பாய் இன்பம் செய்துபோந்த மாலை இன்று பகையாய்த் துன்பம் செய்தலை, மணந்தார் அகலாத காலை அறிந்தது இலேன் - காதலர் பிரிதற்குமுன்னே அறியப்பெற்றிலேன்!.

இங்ஙனம் வேறுபடுதல் அறிந்திலேன், அறிந்தேனாயின் அவர் பிரிவிற்கு உடம்படேன் என்பதாம்.

மணக்:— மாலைப்பொழுது நோய் செய்தலை, என்னோடு கூடினவர் பிரியாத காலத்தே அறியப்பெற்றிலேன்; அறிந்தேனாயின், இது நோய் செய்யும் என்று கூறியிருப்பேன் எ - று.

இது மாலையால் வருத்தமுற்ற தலைமகள் தலைமகனை நினைந்து கூறியது.

பரிதி:— மாலைக்காலம் நம்மை நோய்செய்கிறவகைக்குக் கூடிய நாயகர் இருக்கையிலே பிரிந்தவர்கு மாலைப் பொழுது இல்லை என்று கேட்டேன் எ - று.

காளிங்:— தோழீ ! மாலைப்பொழுதானது எம்மை இப்படி இடர்செய்தலை, எம்மைக கைகலந்த காதலர் கையகலாது உடன் வாழ் காலத்துச் சிறிதும் யான் அறிந்ததோ இல்லேன் என்றாள் எ - று.

1227. காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய் (எ)

மாலைப்பொழுதின்கண் இனையை யாதற்குக் காரணம்
என்னை என்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— இந்நோய் - இக்காமநோயாகிய பூ; காலை அரும்பி - காலைப்பொழுதின்கண் அரும்பி; பகல் எல்லாம் போது ஆகி - பகற்பொழுதெல்லாம் பேரரும்பாய் முதிர்ந்து; மாலை மலரும் - மாலைப்பொழுதின் கண் மலராநிற்கும்.

துயிலெழுந்த பொழுது ஆகலின் கனவின்கண் கூட்டம் நினைந்தாற்றுதல்பற்றிக் காலையரும்பி என்றும், பின் பொழுது செலச் செல அதுமறந்து பிரிவுள்ளியாற்றாளாதல்பற்றிப் பகலெல்லாம போதாகி என்றும், தமதம்துணையை உள்ளி வந்துசேரும் விலங்குகளையும் மககளையும் கண்டு தான் அக்காலத்தின் நுகர்ந்த இன்பம் நினைந்து ஆற்றாமைமிகுதி பற்றி மாலைமலரும் என்றும கூறினாள். பூப்போல இந்நோய் காலவயத்த தாகாநின்றது என்பது உருவகத்தாற்பெறப்பட்டது. ஏகதேசவுருவகம்.

மணக்:— இககாமநோயாகிய பூ விடியற்காலத்தே அரும்பி, பகற்பொழுதெல்லாம் முகிழ்முகிழ்த்து, மாலைக்காலத்தே மலராநின்றது எ - று.

பரிப்:— மாலையால் வருத்தம் உற்ற தலைமகள் வேறுபாடு கண்டு, 'விடியலும் நண்பகலும் ஆற்றி இப்பொழுது வேறுபட்டாய்; இதற்குக் காரணம் என்' என்ற தோழிக்குத் தலைமகள் காரணம் கூறியது.

பரிதி:— காமமாகிய மலர் காலை அருமபிப் பகற்பொழுது முகிழ்த்து, அந்திக்காலம் மலரும் எ - று.

காளிங்:— நெஞ்சே! யாம் உறுகின்ற இக்காம நோயானது, காலை வந்து அருமபிப், பகற்பொழுதாகிய அளவு இறநத நாழிகை எல்லாம் பூ வடிவுகொண்டு, விமமி, மணம பொதிந்து, மற்று இம்மாலைப் பொழுதின்கண் வந்து மலராகிநிற்கும் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— போது - பெரிய அரும்பு. இஃது ஏகதேச உருவகம்.

**மேற்கோள்பகுதி :**

சொக்கப்:— 'தாமரைப்போதன்ன கொங்கை.' போது - முகை. 'காலையரும்பி' .......நோய்' என்பதனாலும் உணர்க. (தஞ்சை 45)

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி தன்னுட் கூறியதற்கு மேற்கோள். (ஷை. 142)

தக்க - பரணி உரை:— மாலையம்பொழுதும் இளம்பிறையுமே மயக்குவது காமிகளை என உணர்க. 'காலை.......நோய்' என்பது; நோய் என்றது காம'நோயை (தா. 21.)

**ஒப்புமைப்பகுதி :**

" காலை யரும்பிப் பகலெல்லாம் போதா யிருந்த காமமலர்
மாலை மலர்ந்து பொருமல்ஒரு மாயை நாம மணிவல்லி
மூலை யிருந்து புறமபோநது விரிவெண் ணிலாமென் முற்றத்தில்
பீலி மஞ்ஞை எனவீழ்ந்து மதநோய் மிகவாய் பிதற்றுமால் "
—பிரபு. பிரபுதேவர். 56.

**முதுமொழிவெண்பாக்கள் :**

" வானவர்கோன் காமநோய் மாலைவர மிக்கதே
துாீர்ப் புளினத்தில் சோமேசா - ஆனதே " —சோமேசர். 123

1228. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை. (அ)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— ஆயன் குழல் - முன்னெல்லாம் இனியதாய்ப்போந்த ஆயன் குழல்; அழல்போலும் மாலைக்குத் தூதாகி - இதுபொழுது அழல் போலச் சுடுவதாய மாலைகுத் தூதுமாய்; கொல்லும் படை - அது என்னைக் கொல்வுழிக கொல்லும் படையுமாயிற்று.

பின்னின்றபோலும் என்பது உரையசை. முன்னரே வரவுணர்த்தலின் தூதாயிற்று, கோறற்கருவியாகலின் படையாயிற்று. தானே சுடவல்ல மாலை இத் துணையும்பெற்றால் என்செய்யாது என்பதாம்.

மணக்:— நெருப்பை ஒத்த இம்மாலைப் பொழுதிற்கு முன்பு தூதாகிவந்து இப்பொழுது கொல்லுதற்குப் படையுமாகி வரவல்லது ஆயன் ஊதும் குழலோ? எ - று.

இப்பொழுது வருத்துதலின், படை என்றாள்.

பரிப்:— அவர் பிரிவதன்முன் இன்பம் நுகர்தற்குக் காலம் பார்த்து இருந்துழி மாலை வருகின்றது என்று தூதாய் வருதலின் தூது என்றாள். அழல்போலும் மாலை என்றது பிரிந்த காலத்துக் கொடுமை செய்தலான் அதற்குக குணமாகக் கூறினாள்: இது மாலையொடு வந்த குழலும் கொடிது என்று கூறியது.

பரிதி:— தீப்போலவரும் மாலைப் பொழுதிற்கும் அதன் படை வருவதற்கும் தூது ஆயரின் குழல்; அது வந்துகொல்லும் எ - று.

பழைய:— அழல்போன்ற மாலைக்குத் தூதாகி ஆயர்குழல் போல உருப்பெற்றிருக்கும்; பிரிந்தாரைக் கொல்லவேணும் என்ற ஐம்படை எ - று.

காளிங்:— இனி இவ்விடத்து வரப்புகுகின்ற வடவைத்தீப்போலும் மாலைப் பொழுதுக்குத் தூதாகி வந்து, நம்மைககொல்லும் கருவியானது அம்மாலை தன்வரவு அறிந்தும் சூழாதுவருமு ஆயன் விளிகுங் குழற் கருவிபோலும்: எனவே இனி அக குழல்விளி கேட்பினும் ஆற்ற மாட்டேன்; அதனால் அமமாலைப்பொழுது வரின் என் செய்வல் என்று இங்ஙனம் கூறினாள் தலைமகள் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— பின்னின்றபோலும் என்பது அசை.

ஒப்புமைப்பகுதி:

"அணிமாலைக் கேள்வன் தரூஉமார் ஆயர்
மணிமாலை ஊதும் குழல்" —கலித். 101: 34-35.

1229. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து. (கூ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— இதற்கு முன்னெல்லாம் யானேமயங்கி நோயுழந்தேன், மதி மருண்டு மாலை படர்தரும் போழ்து - இனிக் கண்டாரும் மதிமருளும் வகை மாலை வரும்பொழுது, பதி மருண்டு பைதல் உழக்கும் - இப்பதி யெல்லாம் மயங்கி நோயுழக்கும்.

மதிமருள என்பது மதிமருண்டு எனத் திரிந்துநின்றது. கூற்ற மாகக் கருதிக கூறினாளாகலின் மாலை படர்தரும் போழ்து என்றாள். யான் இறந்துபடுவல் என்பதாம். மாலை மயங்கிவரும் போழ்து என் பதி நிலை கலங்கி நோயுழக்கும் என்று உரைப்பாரும் உளர்.

மணக்:— என்மதி நிலைகலங்க, மயக்கத்தை உடைத்தாகிய மாலைக்காலம் வரும்பொழுது இப்பதியெல்லாம் மயங்கித் துன்பம் உறா நிற்கும் எ - று.

பரிப்:— மதி என்பதனை முன்னே கூட்டுக. மதி - மனம். அறி வில்லாதாரைப்போல மயங்குதல் தககது அன்று; நமக்கு ஆற்றியிருத்தல் கடன் என்ற தோழிக்குத் தன் குறிப்பின்றியும் இம்மாலையைக் கண்ட பொழுதே என் மனம் மயங்கும் என்று தலைமகள் கூறியது.

பரிதி:— ... ... ... ...

காளிங்:— தோழீ! பெருமபகல் எல்லாம் வருந்தி ஆற்றிய என் மனமானது வெண்மையும கருமையும் வேற்றுமை செய்யும் பகலும் இரவும் போல் அன்றி நிறம் மயங்கு உருபெற்றுகிய மாலையானது இன்னணம் வந்து ஆர்கும நோத்துத் தன்பதியினுள் தணிந்து நில்லாது; தடுமாறிச் சாலத் துயர் உழக்கும் என் நெஞ்சானது; மறறு அதனை அறியாது நீ ஆற்றுகில்லை என்று என்னை இடித்துச் சொல்லுவது என்னை? என்பது பொருள் எ - று.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— மதிமருள என்பது மதிமருண்டு எனத்திரிந்தது.

**ஒப்புமைப்பகுதி :**

" மாலை நீ, தையெனக் கோவலர் தனிக்குழ லிசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய் " —கலித். 118: 13-14:

1230. பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயுமென் மாயா உயிர். (கo)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— மாயா என் உயிர் - காதலர் பிரிவைப் பொறுத்து இறந்துபடாதிருந்த என் உயிர், பொருளமாலையாளரை உள்ளி மருள் மாலை மாயும் - இன்று பொருளியல்பே தமக்கு இயல்பாக உடையவரை நினைந்து, இம்மயங்கு மாலைக்கண்ணே இறந்துபடா நின்றது.

குறித்த பருவம் கழியவும் பொருள்முடிவு நோக்கி வாராமையின் சொல்வேறு படாமையாகிய தம்மியல்பு ஒத்தவர் அப்பொருளியல்பே தம்மியல்பாயினர், காலம் இதுவாயிற்று, இனி நீ சொல்கின்றவாற்றால் பயனில்லை என்பதாம்.

மணக்:— பொருள் தேடுதலையே தமக்கு இயல்பாக உடையவரை நினைத்து, மயங்கின மாலைப்பொழுதிலே, எனது சாகமாட்டாத உயிர் மெலியாநின்றது எ - று.

இது மாலையாலடர்ப்புண்ட தலைமகள் தலைமகன் அன்பும் அறனும் இலன் என்று நினைத்துத் தன்னுள்ளே சொல்லியது.

பரிதி:— பொன்மேலே ஆசைவைத்த நாயகரை நினைந்து நமக்கு மயக்கம்செய்யப்பட்ட மாலை என்னும் பெண் மாயமாவது கண்டிருந்தும் என் உயிர் மாய்ந்தது இல்லை எ - று.

காளிங்:— தோழீ! நம்மை இனிது ஆளும் முறைமை அன்றித் தான் தெளித்த சொல் தேராது பொருள் வளர்த்தலை ஓர் இயல்பாக ஆண்டு அகன்றவரை நினைந்து நினைந்து இம்மருண்மாலைப் பொழுதுடனே இனி மாய்வதுபோலும் என் மாயாத உயிர்: எனவே முன்னமும் மாயா திருந்து வருந்தும் உயிர்வாழ்க்கைதன்னைப் பெரிது முனிந்து உரைத்தாள் எ - று.

இன்னணம் ஒருவாற்றான வந்து எய்திய தலைமகன் தான் அடைந்த வேந்தர்க்கு ஒரு பகைவந்து உற்ற இடத்து, மற்று அதற்குப் பிரியும் அன்றே: அவ்விடத்துத் தலைமகள் பிரிவாற்றாமை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

**ஒப்புமைப்பகுதி :**

"புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழி அவர்சென்ற நாட்டே" —குறுந். 46.

**முதுமொழிவெண்பாக்கள்:**

"வாடிக் கணவனுறு வல்லிரவில் பிங்கலையும்
தேடிமனம் நொந்தாள் சிவசிவா - ஓடிப்" —சிவசிவ. 123.

## குறள் வைப்புமுறை.

**பரிபே:—** மாலையோ, புன்கண்ணை, பனியரும்பி, காதலர், காலைக்கு, மாலைநோய், காலையரும்பி, அழல்போலும், பதிமருண்டு, பொருண்மாலை,

**மணக்:—** மாலையோ, மாலைநோய், அழல்போலும், காலைக்கு, பொருண்மாலை, புன்கண்ணை, காலையரும்பி, காதலர், பதிமருண்டு, பனியரும்பி.

**பரிதி:—** காலையரும்பி, பனியரும்பி, பதிமருண்டு, காதலர், மாலைநோய், அழல்போலும், காலைக்கு, பொருண்மாலை, மாலையோ, புன்கண்ணை.

**காளிங்:—** காலையரும்பி, மாலையோ, காதலர், பனியரும்பி, காலைக்கு, பதிமருண்டு, புன்கண்ணை, மாலைநோய், அழல்போலும், பொருண்மாலை.

# 124. உறுப்புநலனழிதல்.

## தொகுப்புரை :

[ஆற்றாமையாகிய சிறுமையை என்னிடம் வைத்துப் பிரிந்த தலைவரை எண்ணி அழுதகண்கள் இன்று மலருக்கு நாணிவிட்டன. பசப்பெய்தி நீர்வடிக்கின்ற கண்கள், காதலர் தலையளிசெய்யாமையைப் பலர்க்கும் சொல்வனபோலும். கலந்த அந்தக்காலத்துப் பருத்ததோள்கள் பிரிந்தகாலத்தை அறிவிக்கின்றனபோல மெலிந்து விட்டன. எம்துணைவர் பிரிதலால் பழைய அழகு வாடிய தோள்கள் பெருமைகுன்றி வளைகளைச் சோரவிட்டன. வளையல்களோடு பழைய அழகையும் சோரவிட்டதோள்கள் பிரிந்த கொடியாரது கொடுமையை விளக்கும். தோழி! எனக்கு வளைகழலத் தோள் இளைத்ததால் அதனைக்கண்டு நீ காதலரைக் கொடியவர் என்கின்றாய் அதனைக்கேட்டு நான் மிக வருந்துகின்றேன். மனமே! கொடியர் கொடியர் எனத் தோழியால் பழி தூற்றப்படுகின்ற என் காதலர்க்கு, என் தோள் மெலிந்து பறைசாற்றுவதை அறிவித்துப் பெருமை எய்துவையாயின் நல்லது. இவளுக்கு நோம் என்று ஒருகாலத்துத் தழுவிய கைகளைத் தளர்த்த, இவள் நெற்றி பசலையுற்றது இன்று எங்ஙனம் இருக்குமோ? நாங்கள் தழுவிக்கிடந்த நிலையில் காற்று ஊடறுத்துப்புக, பேதைப்பருவத்தளாகிய தலைவியின் கண்கள் பசந்தன இவ்வாறு நிகழ்ந்த கண்களின் பசப்பு, தழுவிய கைகளைத் தளர்த்திய மாத்திரையிலேயே நெற்றி பசந்ததைக்கண்டு, மிகவருந்தியது.]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது தலைமகள்தன் கண்ணும், தோளும், நுதலும் முதலாய அவயவங்கள் தம் அழகு அழிதல். இஃது, இரக்கமிக்குழி நிகழ்வதாகலின், பொழுதுகண்டிரங்கலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *உறுப்புநலனழிதலாவது தலைமகளது உறுப்புக்கள் நலனழிந்தமை கூறுதல். காதன்மிகுகு இரங்குவார் அக்காதலை அயலார் அறியாமல் அடக்கினகாலத்து வெம்மையுற்ற கொடிபோல, அனைத்து உறுப்பும் வாடுதலான், இது பொழுதுகண்டிரங்கலின்பின் கூறப்பட்டது.*

1231. *சிறுமை நமக்கொழியச் சேண்சென்றார் உள்ளி*
*நறுமலர் நாணின கண்.* (க)

ஆற்றாமை மிகுதியான் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— *சிறுமை நமக்கு ஒழியச் சேண் சென்றார் உள்ளி - இவ்வாற்றாமை நம்கண்ணே நிற்பத் தாம் சேணிடைச்சென்ற காதலரை*

நீ நினைந்து அழுதலால்; கண் நறு மலர் நாணின - நின் கண்கள் ஒளி இழந்து முன் தமக்கு நாணிய நறுமலர்கட்கு இன்று தாம் நாணி விட்டன.

நமக்கு என்பது வேற்றுமைமயக்கம். உள்ள என்பது உள்ளி எனத் திரிந்து நின்றது. உள்ளுதல் என்பது காரணப்பெயர் காரியத்திற் காய ஆகுபெயர். இவைகண்டார் அவரைக் கொடுமை கூறுவர், நீ ஆற்றல் வேண்டும் என்பது கருத்து.

மணக்:— நமக்குத் துன்பம் ஒழியவேண்டி, நெடுநெறிக்கண் சென்றாரை நினைத்து, கண்கள் நறுவிய பூக்களைககண்டு நாணுகின்றன எ - று.

பலகால் அழுதலால் நிறங்கெட்டது என்றவாறாயிற்று.

பரிப்:— வரைந்து கோடற்குப் பொருள்தேடி வருகின்றேன் என்று பிரிந்த தலைமகனை நினைந்து ஆற்றாளாய்த் தலைமகள் தனது கண் பொலிவழிந்தது என்று கூறியது.

பரிதி:— சிறுமை தீரத்தக்க காததூரம் பொருள்மேற்பிரிந்து போன நாயகரை நினைத்து மாறாத கண் நீர் பொழிகையினாலே கண்ணைச் செங்கழுநீர் வென்றது எ - று.

காளிங்:— கேளாய் நாயகி! இன்பம் அனைத்தும் நீங்கித் துன்பம் ஒன்றும் நமகது நிலைநிற்பதாகத் துணிந்து, அருள் நீங்கிச் சேணிடைச் சென்றவரை நினைந்து வருந்திச் சேறலான், இன்று நறுவிய குவளைச் செவ்விய மலரினை நின் கண்ணிணை தாம் பெரிதும் நாணிற்று; எனவே பண்டு அவை நாணிக் கழியுமாறு கொழுவிய நின் சேயரிககண் இங்ஙனம் பொலிவு அழியப் போயினர் கொடியர் என்று இயற்பழித்தனள் தோழி எ - று.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— நமக்கொழிய - நங்கண்ணே நிற்ப. ஈறு சினையொழிய (தொல். எழுத். 472.) என்பதும அது. உள்ளி - உள்ளுதலால் எனக் காரணப்பெயர் காரியத்துககாய ஆகுபெயர்.

1232. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாரும் கண். (௨)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— பசந்து பனிவாரும் கண் - பசப்பெய்தன் மேல் நீர் வார்கின்ற நின்கண்கள்; நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும் - நம்மால் நயக்கப்பட்டவரது நல்காமையைப் பிறர்க்குச் சொல்லுவபோலா நின்றன, இனி நீ ஆற்றல்வேண்டும்.

சொல்லுவபோறல் - அதனை அவர் உணர்தற்கு அனுமான மாதல். நயந்தவர்க்கு என்று பாடம் ஓதுவாரும் உளர்.

மணக்:— முன்பு நம்மை விரும்பினவர் நமக்கு அருளாமையைப் பிறர்க்குச் சொல்லுவனபோலாகா நின்றன; பசப்புற்று நீர் சொரிகின்ற கண்கள் எ - று.

இது தலைமகள் ஆற்றுமை கண்டு இக்கண்ணீர் அலராகாநின்றது என்று அவள் ஆற்றுதற்பொருட்டுத் தோழி கூறியது.

பரிதி:— கூடியநாயகர் பிரிந்து வருத்துவித்தார் என்பதைச் சொல்லுதற்கு ஒக்கும்; பசலையும் நீர் மாருத கண்ணும் எ - று.

காளிங்:— தோழீ! நம்வயின் நயம் பெரிது உடையவரை நல்காமை படைத்துச் சொல்லுவன போலும்: இங்ஙனம் பசந்து பண்டை நலன் அழிந்து கலுழ்ந்து நீர் சோரும் என் கண்; எனவே அவரைத் தான் இயற்படமொழிந்தமை பொருளாயிற்று எ - று.

1233. தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள். (௩)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே— மணந்த நாள் வீங்கிய தோள் - காதலர் மணந்த ஞான்று இன்பமிகுதியால் பூரித்த நின் தோள்கள்; தணந்தமை சால அறிவிப்பபோலும் - இன்று அவர் பிரிந்தமையை விளங்க உணர்த்துவ போல மெலியாநின்றன, இது தகாது.

அன்றும அவ்வாறு பூரித்து இன்றும் இவ்வாறு மெலிந்தால் இரண்டும் கண்டவர் கடிதின் அறிந்து அவரைத் தகவின்மை கூறுவர் என்பதாம.

மணக்:— காதலர் கூடின நாட்களில் பூரித்ததோள்கள், அவர் நீங்கினமையை மிகவும் பிறர்க்கு அறிவிப்பனபோலாகா நின்றன எ - று.

கருவியைக கருத்தாவாகக் கூறினர். பிரிவிடை யாற்றுளாகிய தலைமகள் தனது தோள் வாட்டமுற்றதுகணட தோழிகருச் சொலலியது.

பரிதி:— நாயகரைப் புணர்ந்தபோது களித்ததோள், நாயகர் பிரிந்தபோது வாடி எல்லார்க்கும் தூற்றியது எ - று.

காளிங்:— தோழீ! நமமை அவர் இன்று நாளிடையிட்டு நின்ற பிரிவை யாம் மறைப்பவும தாம் பெரிதும அறிவிப்பபோலும்; யாலவ எனில் இன்றுபோல் என்றும் இராதே, அவர் மணந்த நாள் வீங்கிய தோளகளானவை. எனவே இதனுலும இயற்பட மொழிந்தமை பொருளாயிற்று எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— தணந்தமை - தணவாமை என்னும் எதிர்மறைக்கு உடம்பாடு. "துறந்தமை"யும் (1157.) அது.

மேற்கோள்பகுதி :

இளம்:— 'வண்ணம திரிநது புலம்புறுகாலை, உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி, புணர்ந்தவகையால் புணர்க்கவும் பெறுமே' என்ற தற்கு மேற்கோள். (தொல். பொருள். 199.)

நச்:— ஷை (தொல். பொருள். 202.)

முதுமொழிவெண்பாக்கள்:

"அரனன்பர் நீஙகுதலும் ஆற்றுமை கண்டு
பரவைக்குத் தோழி பகரும் - தலைவர்" —முதுமொழி. 177.

1234. [1]பணைநீங்கிப் பைந்தொடி சோரும் [2]துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். (௪)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— துணை நீங்கித் தொல் கவின் வாடிய தோள் - அன்றும் தம் துணைவர் நீங்குதலான் அவரால் பெற்ற செயற்கை அழகேயன்றிப் பழைய இயற்கையழகும் இழந்த இத்தோள்கள்; பணை நீங்கிப் பைந்தொடி சோரும் - இன்று அதற்குமேலே தம்பெருமை இழந்து வளைகழலாநின்றன; இவை இங்ஙனம் செயற்பால அல்ல.

பெருமையிழத்தல் - மெலிதல். பைந்தொடி - பசிய பொன்னாற் செய்த தொடி. சோரும என்னும் வினைத்தொழில தோள்மேல் நின்றது. அன்றும் பிரிந்தார் என்று அவர் அன்பின்மை உணர்த்தி இன்றும் குறித்த பருவத்து வந்திலர் என்று அவர் பொய்ம்மை உணர்த்தாநின்றன; இனி அவற்றைக் கூறுகின்றார்மேல் குறை உண்டோ என்பதாம்.

மணக்:— துணைவர் நீங்குதலானே பழையஅழகு அழிந்ததோள் பெருமை நீங்குதலானே பசுத்த வளைகளைக் கழலவிடாநின்றது எ - று.

பசுத்த வளை - மரகதத்தினாற் செய்த வளை. தோள் அழகு அழிதலேயன்றி மெலிவதும் செய்யாநின்றது என்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது

பரிதி:— பச்சை மூங்கில்போன்ற அழகும் இழந்து,வளையும் நீங்கும் துணைவராகிய காதலர் பிரிய அழகு வற்றிய தோள் எ - று.

பழைய:— பணையாகிய பச்சை மூங்கில் ஒப்புநீங்க வளையும் சோரும், நாயகர் நீங்காத தொல்லையாகிய அழகுதோள் வாடியபோது எ -று.

காளிங்:— பண்டுபோல் இணையொத்து நில்லாது இன்று பசும் பணையானது வேறுபட்டு நிற்ப, மற்று இப்பசும்பொற்றொடிகளும் நட்பு ஒழிந்து நழுவுகின்றன என் காதல் துணை சிறிது கையகல இதனைத் தூற்றுவேம் அல்லம் என்றது தொலலைக்கவின் வாடிய தோள்களானவை; எனவே இது செய்யத் தாமும் தமக்கு அடுத்த வினையும் திருவும் இழந்தமை கண்டு இன்புற்றாள் எ - று.

---

1 'பணைநீங்க' 2 'துணைநீங்க' காளிங் - பாடம்.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பைந்தொடி - பசிய பொன்னாற் செய்த தொடி. செந்தாமரை, வெண்டாமரை என்னும் சினைப்பண்பு, முதன்மேல்நின்றாற் போலப் பொற்பண்பு தொடிமேல் நின்றது. "சேணுந் திகழ்மதில்" (341) என்னுங் கோவையாருள் "பைம்பூண்" என்பதும் அது. சோரும் என்ற வினைத்தொழில் தோள்மேல் நின்றது. 'இலங்கிழா' (1262) யும் அது.

மேற்கோள்பகுதி :

சுவாமி:— மூன்றனுருபு வேறுவினையில் வந்ததற்கு மேற்கோள். (இ. கொ. 54)

முதுமொழிவெண்பாக்கள் :

" கொங்கேறு தண்களபக் குன்றையச்சு தேந்திரன்றன்
செங்கோல் செலுத்துந் தினகரா - இங்கே" —தினகர. 128.

" ஓதுநாள் ஓதுகலை ஒத்திளைத்தாள் சீதை என்றாள்
சூதாரா வான்மீகி சோமேசா - கோதில்" —சோமேசர். 124.

" துன்பமுற்றார் தாருவனத் தோகையரெம் மானைவெஃகி
முன்புவளை தோற்றே முருகேசா - அன்பில்" —முருகேசர். 124.

1235. கொடியார் கொடுமை உரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள். (ரு)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— கொடியார் கொடுமை உரைக்கும் - கவவுக்கை நெகிழி னும் ஆற்றாதாட்கு இக்கால நீட்டத்து என்னும் என்று நினையாத கொடியாரது கொடுமையைத் தாமே சொல்லா நின்றன; தொடியொடு தொல்கவின் வாடிய தோள் - வளைகளும் கழன்று பழைய இயற்கையழகும் இழந்த இத்தோள்கள், இனி அதனை யாம் மறைக்குமாறு என்னை!.

உரைக்கும் என்பது அப்பொருண்மைதோன்ற நின்ற குறிப்புச் சொல். 'ஒடு' வேறுவினைக்கண் வந்தது. அவரொடு கலந்த தோள்களே சொல்லுவனவானால் அயலார் சொல்லுதல் சொல்லவேண்டுமோ என்பதாம்.

மணக்:— கொடியாரது கொடுமையைச் சொல்லாநின்றன, வளையோடேகூடப் பழையவாகிய அழகினை இழந்த தோள்களும் எ - று.

இது தலைமகள் ஆற்றுதற்பொருட்டுத் தலைமகனை இயற்பழித்துத் தோழி கூறியது.

பரிப்:— தலைமகள் கூறிய சொற்கேட்டு 'யான் முன்பே தோள் கண்டு அறிந்தேன் அவர் கொடியராதலை' என்று தலைமகள் ஆற்றுதற் பொருட்டுத் தலைமகனை இயற்பழித்துத் தோழி கூறியது.

பரிதி:— கொடியார் கொடுமையால் பிரிந்தசெயலை யான் உரைத் தேன் இல்லை. அழகு பெற்றதோளும் வளையும் உரைத்தது எ - று.[1]

காளிங்:— தோழீ! நின்னிற் பிரியேன் ' பிரியின் ஆற்றேன் என்று தாம் முன்னம் உரைத்து,* மற்று அதனைத் தெரியாராய், என்னின் நீங்கிப் பிரிந்தவர் சாலககொடியர் அனறே; மற்று அவர் கொடுமையை யான் மறைப்பவும், இவை பிறர்கு இன்னர் என்று உரைக்கும்; எவை எனின் நிலை யெய்தாது ஆடும் தொடியும், தொலலை அழகின் பொலிவு அழிய வாடிய தோளும்; எனவே யான்வருந்தி ஆற்றவும் இவை சாற்று மாயின் என்னை செய்வது? எ - று.

உரைவிளக்கப்பகுதி :

நுண்:— கொடியராயுரைக்கும் என்பது, அப்பொருண்மை தோன்ற நின்ற குறிப்புமொழி.

முதுமொழிவெண்பாக்கள் :

" வைதாள் விசயன் மருவா துருப்பசியென்
செய்வாள் அயர்ந்தாள் சிவசிவா - மெய்யாக்" —சிவசிவ 124.

1236. தொடியொடு தோணெகிழ *நோவல் அவரைக்
கொடியர் எனக்கூறல் நொந்து. (சு)

தான் ஆற்றுதற்பொருட்டு இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— தொடியொடு தோள் நெகிழ யான் - ஆற்றவும் என் வயத்த அன்றித் தொடிகள் கழலுமாறு தோள்கள் மெலிய; அவரைக்

* 'நேர்வல்' காளிங் - பாடம். 'நோவேம் இவர்தாம்' பரிதி-பாடம்.

கொடியர் எனக் கூறல் நொந்து நோவல் - அவரைக் கண்டு நீ அவரைக் கொடியர் எனக கூறுதலைப் பொறுது யான் என்னுள்ளே நோவா நின்றேன்.

ஒடு மேல்வந்தபொருண்மைத்து. யான் ஆற்றேனுகின்றது அவர் வாராததற்கு அன்று, நீ கூறுகின்றதற்கு என்பதாம்.

மணக்:— வளையோடே தோளகள் பண்டுபோல் இறுகாது நெகிழவும், நினகருச் சொல்லாது யானே நோவேன்; நீ அவரைக கொடியர் என்று சொல்லுகின்றதற்கு நொந்து எ - று.

இஃது ஆற்ருள்எனக கவன்றதோழிக்கு ஆற்றுவல் என்பதுபடத் தலைமகள் சொல்லியது.

பரிதி.— தொடியொடு தோள் வாட நோவோம்; நாயகர் விட்டுப் பிரிந்தால் கொடியர் இவர் என்று சொல்லுதற்கு எ - று.

காளிங்:— தோழீ! இங்ஙனம் தொடியுடனே தோளும் கூட நெகிழ அதற்கு யான் உடம்பட்டிருப்பது என் எனின், என்மாட்டு அன்பு உடையவரைக கொடியர் என்று இவை பிறர்கரு உரைத்தலை உள்ளுள்ளே பெரிதும் நொந்து எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஒடு - வேறுவினைக்கண் வந்தது "மலையொடு பொருத மால் யானை" என்பதும அது.

1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோள பூசல் உரைத்து. (எ)

அவ்வியற்பழிபபுப்பொருது தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

உரைப்பகுதி:

பரிமே:— நெஞ்சே - நெஞ்சே! கொடியார்க்கு என் வாடுதோள் பூசல் உரைத்து - இவள கொடியார் என்கின்றவர்கரு நீ சென்று என் மெலிகின்ற தோளினல் விளைகின்ற ஆரவாரத்தைச் சொல்லி; பாடு பெறுதியோ? - ஒரு மேம்பாடு எய்தவல்லையோ? வல்லையாயின் அதனை ஒப்பதில்லை.

கொடியார்க்கு என்பது கொடியாரல்லர் என்பது தோன்றநின்ற குறிப்புச்சொல். வாடுதோள் என்பது அவை தாமே வாடாநின்றன என்பது தோன்றநின்றது. பூசல்: ஆகுபெயர்; அஃது அவள் தோள்நோக்கி இயற்பழித்தன்மேலும் அதனால் தனக்கு ஆற்றாமை மிகன்மேலும் நின்றது. நின் உரைகேட்டலும் அவர் வருவார், வந்தால் இவையெல்லாம் நீங்கும், நீங்க அஃது எனக்குக் காலத்தினாற்செய்த நன்றியாம் ஆகலின், அதன் பயனெல்லாம் எய்துதி என்னும் கருத்தால் பாடுபெறுதியோ என்றாள்.

மணக்:— நெஞ்சே! இக்கொடுமை செய்தவர்க்கு எனது தோள் வாடுதலானே ஊரில் எழுந்த அலரைச் சென்றுசொல்லி, நீயும் நினது வாட்டம் நீங்கி அழகு பெறுவாயோ? எ - று.

இது நீ அவர்பாற் போகல்வேண்டும் என்று நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

பரிப்:— நெஞ்சின் வலியழிதலும் கூறியவாறாயிற்று.

பரிதி:— ஒருபெருமை பெறுகிறாயோ நெஞ்சே கொடுமை கூடிய நாயகனுக்குப் பூசல் எடுத்துரைத்து எ - று.

காளிங்:— நெஞ்சே! என் வாடுதோள் வருத்தம் கண்டு பலரும் அலைக்கின்ற வார்த்தை முன்னம் நமக்குக் கூறியருளாக் கொடியவர்க்கு நீ சென்று சொல்லி உற்றவிடத்து உதவும் நட்பாவது இது என்னும் பெருமையைப் பெறுதியோ? பெறுதி எனின் நமக்குப் பெரியதோர் புகழ் எ- று

1238. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல். (அ)

வினைமுடித்து மீடலுற்ற தலைமகன் முன்னிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— முயங்கிய கைகளை ஊக்க - தன்னை இறுக முயங்கிய கைகளை இவட்கு நோம் என்று கருதி ஒருஞான்று யான் நெகிழ்த்தேனாக; பைந்தொடிப் பேதை நுதல் பசந்தது - அத்துணையும் பொறாது பைந்தொடிகளை அணிந்த பேதையது நுதல் பசந்தது, அப்பெற்றித்தாய நுதல் இப்பிரிவிற்கு யாது செய்யுமோ!.

இனிக் கடிதிற் செல்லவேண்டும் என்பது கருத்து.

மணக்:— யான் பிரிவதாக நினைத்து, அவள் முயங்கிய கைகளை நீக்கினேனாக; அதனை அறிந்து, பசுத்த தொடியினையுடைய பேதை நுதல் பசந்தது எ - று.

பரிதி:— இறுகத் தழுவிய கைகளைக் கலவிப் புலவியில் நெகிழ, பசலை கொண்டது; வளையுடைய கையாள் திருநுதல் எ - று.

காளிங்:— நெஞ்சே! அவர் இவளைப் பிரிவதன் முன்னமே தமது அன்பினான் அருளி முயங்குமிடத்து அதற்கு எதிர் முயங்கிய கைகளைப் புலந்தார்போல் நயந்து ஊக்கினராகப் பசந்தது இப்பைந் தொடிப் பேதையாளது நுதல்; எனவே இன்று இவள் ஆற்றாமல் தளர் தற்குச் சொல்லவேண்டுமோ என்று இவள் தான் ஆற்றாளாயினள் என்று தோழி தன் நெஞ்சிற்குச் சொல்லுவாள் எ - று.

1239. முயக்கிடைத் தண்வளி *போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண். (கூ)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— முயக்கிடைத் தண் வளி போழ - அங்ஙனம் கைகளை ஊக்குதலான் அம்முயக்கிடையே சிறுகாற்று நுழைந்ததாக; பேதை பெருமழைக்கண் பசப்புற்ற - அத்துணையிடையீடும் பொறாது, பேதையுடைய பெரிய மழைக்கண்கள் பசப்புற்றன; அத்தன்மையவான கண்கள் மலைகளும், காடும், நாடுமாய இவ்விடையீடுகளையெல்லாம் யாங்ஙனம் பொறுத்தன!

தன்மை ஈண்டு மென்மைமேல் நின்றது. போழ என்றது உடம்பு இரண்டும் ஒன்றானதுதோன்ற நின்றது. மழை - குளிர்ச்சி.

மணக்:— யான் பிரிவதாக நினைத்து, முயக்கத்தின்கண்ணே எனது உடம்பை அகற்ற, அம்முயக்கிடையே சிறுகாற்று ஊடறுத்தலானே எனது நீக்கத்தைப் பொறாது பேதையுடைய பெருத்த குளிர்ந்தகண்கள் பசப்புற்றன எ - று.

இது முதலாக மூன்று குறள் தலைமகன் கூறுவன.

---

* 'போழ்ப்ப' காளிங் - பாடம்.

பரிதி:— முயங்கிய விடத்துத் தென்றல் ஊரப் பசலையாச்சு; கண்ணும் மழை பொழிந்தது; நாயகிக்கு எ - று.

காளிங்:— தோழீ! அவர் என்றும் எமக்கு இனியர் ஆகலின் தாம் என்னை இறுக முயங்கிய முயக்கத்திடையே இடம் பார்த்துத் தண் என்றதோர் சிறு தென்றற்கொழுந்து ஊடுபோகப் பசப்பு உற்றன; எனது அழுது ஒழியாக் கண்; ஏதும் அறியாத ,வெறும்பேதை. எனவே அவரும் அன்புடையார்: யானும் ஆற்றுவல்: இவை அன்றும் இன்றும் தமது அறியாமையின் பசந்து அழும் எ - று.

## ஒப்புமைப்பகுதி :

" காமங்கொல் இவள் கண்பசந்ததுவே" —நற். 35:12.

" நெய்தல் உண்கண் பைதல்கூர" —ஷை 113.7.

" பசலையார்ந்தன குவளைஎம் கண்ணே" —குறுந் 13.

" உண்கண் பசப்ப தவன்கொல் அன்னாய்" —ஐங். 21 : 4.

" பொன்னெனப் பசந்தகண் போதெழில் நலஞ்செல" —கலித். 77:12

## முதுமொழிவெண்பாக்கள் :

" மங்கையுமை ஓர்பங்கு வாங்கி மகிணன்பால்
இங்கிதம் உற்றாள் இரங்கேசா - செங்கை." —இரங். 124

1240 கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் *செய்தது கண்டு. (௪௰)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்று - தண்வளி போழவந்த கண்ணின் பசப்புத் துன்பமுற்றது; ஒண்ணுதல் செய்தது கண்டு - தனக்கு அயலாய ஒண்ணுதல் விளைத்த பசப்பைக்கண்டு.

அது கைகளையூக்க அவ்வளவிற்பசந்தது, யான் கைகளையும் ஊக்கி மெய்களும நீங்கிச் சிறுகாற்று ஊடறுக்கும் துணையும் பசந்திலன் எனத் தன்வன்மையும் அதன்மென்மையுங்கருதி வெள்கிற்று என்பதாம். ஆகவே, அவளுறுப்புக்கள் ஒன்றினொன்று முற்பட்டு நலனழியும், யாம் கடிதிற சேறும் என்பது கருத்தாயிற்று.

* 'செய்தன' காளிங் - பாடம்.

மணக்:— ஒள்ளியநுதல பசந்தது கண்டு, கண்ணிலுண்டான பசலை கலங்கிற்று எ - று.

பரிப்:— இவை மூன்றினுைம சொல்லியது யான் பிரிவதாக நினைத்து முயக்கத்தின்கண்ணே உடம்பை அகற்ற, அதனை அறிந்து கண் பசந்தது. அதன்பின் முயங்கிககொண்டு கிடந்த கைகளை விடுவிகக நுதல் பசந்தது அவ்வளவே அன்றி, நுதல் பசந்தபின்பு கண்ணின் பசலை போய், மற்றொனறு ஆம்படி ஆயிற்று. ஆதலான் யான் செல்லும் அளவும் ஆற்றுமகொல்லோ என்று வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப் பாகன் கேட்பச் சொல்லியவாறு.

இவை அவர்வயின்விரும்பலின் பின் கூறறபாலது, - உறுப்பு நலன் அழிந்தமை கூறிய ஆகலான் ஈண்டுச் சேரக் கூறப்பட்டன என்க. பருந்து விழுககாடு.

பரிதி:— கண்ணீரும் உடம்பிற் பசலையும் கூடி விதனம் செய்யும்; நாயகர் ஒண்ணுதலாளுககுச் செய்தகொடுமையுடன் கூடி எ -று.

காளிங்:— தோழீ! அவர் பிரிவின்கண் என்கண் பசந்த பசப்புத் தான் பெரிதும இடர் உறுகின்றதே காண்: அஃது என்னை எனில், எனனது ஒள்ளிய நுதலானது தனது ஒண்மை இழந்து ஒருங்கு பசப்பு ஊர்ந்தமை கண்டு பொறுககல ஆற்றாது எ - று.

இங்ஙனம பிரிந்த தலைமகனை நினைந்து ஆற்றாளாகிய தலைமகள் இன்னும் தன்னுறு துயரம் தோழிககு இவ்வாறு எடுத்து உரைப்பின் இவள்தானும பெரிது ஆற்றாளாம என்பதனுல் தன் நெஞ்சொடு கிளக் கின்றமையின் அதன்பினனரே இதனை அறிவிககின்றது மேலை அதிகாரம்.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— சிறுமை, நயந்தவர், தணந்தமை, பணைநீங்கி, கொடியார், தொடியொடு, பாடு, முயங்கிய, முயக்கிடை, கண்ணின்.

மணக்:— சிறுமை, நயந்தவர், தணந்தமை, பணைநீங்கி, கொடியார், தொடியொடு, பாடு, முயக்கிடை, முயங்கிய, கண்ணின்.

பரிதி:— தணந்தமை, கொடியார், நயந்தவர், தொடியொடு, பணைநீங்கி, சிறுமை, கணணின், பாடு, முயக்கிடை, முயங்கிய.

காளிங்:— கொடியார, முயங்கிய, சிறுமை, முயக்கிடை, நயந்தவர், தணந்தமை, பணைநீங்கி, தொடியொடு, பாடு, கணணின்.

# 125. நெஞ்சொடுகிளத்தல்.

தொகுப்புரை :

[நெஞ்சே ! இத்துன்பம் போக்கும் மருந்தொன்றை எப்படியாவது நினைத்துச் சொல்லமாட்டாயா? அவர்க்கு அன்பில்லாமலிருக்கும்போது அவரை எண்ணி நீ வருந்துவது மடமை. அவர் இருக்குமிடம் தேடிப் போகவும் செய்யாது, இறக்கவும் செய்யாது, இங்கே இருந்து எண்ணி எண்ணி ஏன் வருந்துகின்றாய்! இந்தத் துன்பத்தை உனக்குச் செய்த காதலர் உனக்காகப் பரிந்துவரப்போவதில்லை. நீ போனால் இந்தக் கண்களையும் கூட அழைத்துக்கொண்டு போய்விடு. நீமட்டும் தனியே போனால் இந்தக் கண்கள் அவரைக் காணவேண்டும் என்று என்னை அரித்துத் தின்றுவிடும். நாம் அவரை விரும்ப நம்மை விரும்பாத காதலரை, வெறுத்தவர் என்று கைவிடும் ஆற்றல் நமக்குண்டோ? நம்மொடு கலந்து, புலவியை நீக்கும் காதலரைக் கண்டால் புலத்தலையே உணராத நீ காணாத இப்போது பொய்க்கோபங்கொள்ளுகின்றாய்! ஏன்? ஒன்று காமத்தைவிடு; ஒன்று நாணத்தை விடு. இந்த இரண்டையும் என்னால் ஒருசேரத் தாங்கமுடியாது. காதலர் நமக்காகப் பரிந்து தலையளிசெய்யார் என்று எண்ணி, பிரிந்துசென்ற அவருக்குப் பின்னே நீ ஏங்கிச் செல்கிறாய். இது பெரும் பேதைமை. காதலர் என் உள்ளத்தில் இருக்கின்றார் என்று கண்டுவைத்த நீ இப்போது வெளியில் எவரிடம் செல்கின்றாய்? நம்மைக் கலவாது பிரிந்துபோன காதலரை அகத்திலுடையோம்; ஆதலால் மேலும் நமது அகவழகையும் இழக்கப்போகிறோம்.]

அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது ஆற்றாமை மீதூரத் தனக்கோர் பற்றுக்கோடு காணாத தலைமகள் தன் நெஞ்சொடு செய்திறன் அறியாது சொல்லுதல். இஃது, உறுப்புக்கள் தம் நலன் அழிந்தவழி நிகழ்வதாகலின், உறுப்பு நலன் அழிதலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *நெஞ்சொடுகிளத்தலாவது நெஞ்சு முன்னிலையாகத் தலைமகள் சொல்லுதல், காதலடக்கலாற்றாதார் பிறர்க்குச் சொல்லுதற்கு நாணித் தன் நெஞ்சிற்குச் சொல்லி ஆற்றுதலான், அதன்பின் இது கூறப்பட்டது.*

1241. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து. (க)

தன் ஆற்றாமை தீரும்திறன் நாடியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— நெஞ்சே! எவ்வநோய் தீர்க்கும் மருந்து ஒன்று - இவ் எவ்வநோயினைத் தீர்க்கும மருந்தாவது ஒன்றனை; எனைத்து ஒன்றும் நினைத்துச் சொலலாய் - யான் அறியுமாற்றல இலன், எத்தன்மையது யாதொன்றாயினும நீ அறிந்து எனககுச் சொல்.

எவ்வம் ஒன்றானுந் தீராமை. உயிரினும் சிறந்த நாணினை விட்டுச்செய்வது யாதொன்றாயினும என்பாள், எனைத்தொன்றும் என்றாள்.

மணக்:— நெஞ்சே! நீ எனக்கு உற்ற எவ்வநோயைத் தீர்க்கும் மருந்தாவது யாதொன்றாயினும் ஒன்றை விசாரித்துச் சொல்வாய் எ - று.

இஃது ஆற்றுதல் அரிது என்று கூறியது. இவையெல்லாம் தனித்தனி சிலகூற்று என்று கொள்ளப்படும.

பரிதி:— நினைத்துக்கொண்டு ஆசைதீர்க்கும் மருந்து ஒன்று சொல்லாயோ நெஞ்சே எ - று.

காளிங்:— நெஞ்சே! யாதானும் ஒன்று நினைத்தலும் மறத்தலும் நினககு இயல்பு அன்றே: யான் துணைவர் பின் நயந்து துன்புறும் நோயைத் தீர்க்கும் மருந்து எத்தன்மைத்தாக இயையும்? மற்று அத்தன்மையை நினைத்து ஒன்று எனககுச் சொல்லாயோ எனவே சொல்லுவையாயின் உய்குவேன் என்பது பொருள் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— மால் உரைப்பது போன்றது. எவ்வம் - ஒன்றானும் தீராமை.

**முதுமொழிவெண்பாக்கள்:**

" அரனருள்சேர் நம்பிபிரி வாற்றுமல் ஆரூர்ப்
பரவை தனிநின்று பதைத்துக் - கருதும்." —முதுமொழி. 178.

" முன்னம் இரதிககு மொழிந்த பதிதந்த
தின்னலம் அன்றோ இரங்கேசா - துன்ன," —இரங். 125.

1242. காதல் அவரில *ராகநீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு. (உ)

தலைமகனைக் காண்டற்கண் வேட்கை மிகுதியால் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— என் நெஞ்சு வாழி - என் நெஞ்சே! வாழ்வாயாக; அவர் காதல் இலராக நீ நோவது - அவர் நம்கண் காதலிலராகவும் நீ அவர்வரவு நோக்கி வருந்துதற்கு ஏது; பேதைமை - நின் பேதைமையே, பிறிதில்லை.

நம்மை நினையாமையின் நமகண் காதலிலர் என்பது அறியலாம். அஃதறியாமை மேலும் அவர்பாற் செலலைக கருதாது அவர்வரவு பார்த்து வருந்தாநின்றாய், இது நீ செய்துகொள்கின்றது எனனும் கருத்தால் பேதைமை என்றாள். வாழி இகழ்ச்சிக்குறிப்பு. யாம் அவர்பாற் சேறலே அறிவாவது என்பதாம்.

மணக்:— அவர் நம்மேற் காதலிலராக, என் நெஞ்சே! நீ கூட்டத்தைக்கருதி வருந்துகின்றது பேதைமை எ - று.

இஃது அன்பிலார்மாட்டு வருந்தினும் பயனில்லை என்றது.

பரிதி:— ஆசை அவரிடத்திலே இல்லாதபோது நாயகரை நோவது மிகவும் பேதைமை எ - று.

காளிங்:— கேளாய் என்னுடைய நெஞ்சமே! நம்மைப் பிரிந்தார் ஒருகால் நினைந்து வந்து அருளுவதோர் காதல் என்பது ஒன்று அவர் இலார்; விருப்பாயின் இனி நீ நோவது நின் அறியாமை அலலது பிறிது ஒன்று இலலை என்பது எ - று.

வாழி என்பது அசைச்சொல்.

**முதுமொழிவெண்பாக்கள்:**

"மெய்த்ததவ வீடுமனை வேண்டியலைந் தேவெறுத்தாள்
மொய்த்தகுழல் அம்பை முருகேசா - உய்த்துணரின்."
—முருகேசர். 125.

* 'ராயின்' காளிங் - பாடம்.

1243. இருந்துள்ளி *என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார் கணில். (௩)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— நெஞ்சே இருந்து உள்ளிப் பரிதல் என் - நெஞ்சே! அவர்பாற் செல்வதும் செய்யாது ஈண்டு இறந்துபடுவதும் செய்யாதிருந்து அவர் வரவு நினைந்து நீ வருந்துகின்றது என்னை! பைதல்நோய் செய்தார் கண் பரிந்து உள்ளல் இல் - இப்பையுள்நோய் செய்தார்மாட்டு நமக்கு இரங்கி வரககருதுதல் உண்டாகாது.

நம்மாட்டு அருளுடையரன்மையின் தாமாக வாரார், நாம்சேறலே இனித் தகுவது என்பதாம்.

மணக்:— நெஞ்சே! நீ இறந்துபடாது இருந்து, அவர் வரவை நினைந்து வருந்துகின்றது யாதிற்கு? வருத்தமுற்று நினைத்தல் நமக்குச் சிறுமைசெய்யும நோயைத் தந்தார்மாட்டு இல்லையாயின் எ - று.

இது வாளாது வருந்துகின்றாய் என்று கூறியது.

பரிதி:— இருந்துள்ளி என்னதான் என்னுடன் எனக்குப் பரிகிறாய்; பரிகிறகாதல் நமக்குப் பசலை தந்த நாயகரிடத்து இலலை எ - று.

காளிங்:— நெஞ்சே! நீ அவர்தம்மை எப்பொழுதும் நினைந்து இருந்து ஏதுக்கு மற்று இங்ஙனம் பரிகின்றனை? தாம் பரிந்து ஒருகால் நமமை உள்ளுதல் இத்துயர்தரும் நோயைச் செய்தவர்மாட்டுச் சிறிதும் இலலை என்று யான் தேறினேன் எ - று.

என் என்பினை ஈர்தி என்றும் ஆம்.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— உணர்வுடையது போன்றது.

**முதுமொழிவெண்பாக்கள்:**

"மன்றலமர் சோலை மறுகு தமிழ்மணக்கும்
தென்றலமர் கோவைத் தினகரா - என்றே." —தினகா. 129.

*'என் பரிதி' காளிங் - பாடம்.

" அன்பன் துறப்பவும் நாளா பனிதேடித்
துன்பம் தலைக்கொண்டாள் சோமேசா - முன்பே." —சோமேசர். 125.

1244. கண்ணும் கொளச்சேறி நெஞ்சே *இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று. (௪)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நெஞ்சே கண்ணும் கொளச் சேறி - நெஞ்சே, நீ அவர் பால் சேறலுற்றாயாயின் இக்கண்களையும் உடன் கொண்டு செல்வாயாக. இவை அவர்க்காணல் உற்று என்னைத் தின்னும் - அன்றி நீயே சேறியாயின், இவைதாம் காட்சிவிருப்பினால் அவரைக் காண்டல்வேண்டி நீ காட்டு என்று என்னைத் தின்பனபோன்று நலியாநிற்கும்.

கொண்டு என்பது கொள எனத் திரிந்து நின்றது. தின்னும் என்பது இலக்கணைக் குறிப்பு. அந்நலிவு தீர்க்கவேண்டும் என்பதாம்: என்றது தான் சேறல்குறித்து.

மணக்:— நெஞ்சே! நீ அவர்மாட்டுச் செல்லுவையாயின் இக் கண்களும் அவரைக் காணும்படி கொண்டு செல்வாயாக; அவரைக்காண லுற்று இவை என்னைத் தின்பனபோல நலியாநின்றன எ - று.

கொள - பார்க்க.

பரிப்:— காட்சிப் பொருண்மேல் வருதலிற் காட்சியாயிற்று. இது காண்டல் வேட்கையால் கூறியது.

பரிதி:— கண்ணையும் கூட்டிக்கொண்டுபோய் நாயகரைக்காண்டி யாயோ நெஞ்சே! என்னை நித்திரைகொள்ளவிடுகின்றதில்லை எ - று.

பழைய:— நாயகர் பிரிந்தார் என்று அவரைப் பின்செல்லும் நெஞ்சே! இந்தக்கண்ணையும் கூடக்கொண்டுபோ. அல்லது நாயகரைக் காட்டச்சொல்லி எம்மைத் தின்னும் எ - று.

காளிங்:— நெஞ்சே! அவரிடத்து நீயே எப்பொழுதும் செல் கின்றாய்; எம் கண்ணினையும் கூடகொண்டு செல்வாயாக; என்எனில்

---

*'இவை எம்மைத்' காளிங் - பாடம்.

மற்று, இவை அவரைக் காண்டல் விருப்புற்று எம்மை ஒறுக்கும் ஒறுப்பு யாம் ஆற்றேம்: எனவே இன்று எம் கண் எதிர் வரின் உய்வம் என்பது பொருள் எ - று.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— தின்னும் என்பது இலக்கணைக்குறிப்பு. கொள எனத் திரிந்து நின்றது.

**மேற்கோள்பகுதி:**

இளம்:— உண்டற்குரிய அல்லாப் பொருளை, உண்டன போலக் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 210.)

நச்:— வண்ணம் பசந்து புலம்புறுகாலை தலைவி, தன்கண் தலைவன்பால செல்வனவாகக் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 202)

சொல்வழு அமைத்தலில் தின்னாதனவற்றைத் தின்பதுபோலக் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 213.)

1245. செற்றார் எனக்கை விடலுண்டோ *நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர். (ரு)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— நெஞ்சே - நெஞ்சே! யாம உற்றால் உறாதவர் - யாம் தமமையுறத் தாம உறாத நம் காதலரை - செற்றாரெனக் கைவிடல் உண்டோ! வெறுத்தார் என்று கருதிப் புலந்து கைவிட்டிருக்கும்வலி நமக்கு உண்டோ? இல்லை.

உறுதல் - அன்புபடுதல. அவ்வலியின்மையின் அவர்பாற் செல்வதே நமக்குத் தகுவது என்பதாம்.

மணக்:— நெஞ்சே! யாம் உற்றபின்பு உறாதுபோனவர்செறுத்தா ரென்று அவரைக் கைவிடுதல் இயல்போ? எ - று

*'நெஞ்சேநாம' காளிங் - பாடம்.

உறுதல் - விரைந்துறுதல். தலைமகள் தலைமகன் கொடுமையை உட்கொண்ட நெஞ்சிற்குச் சொல்லியது.

பரிப்:— நாம் உறுவதன் முன்பு தாம் உற்று வருந்தினார்: நாம் உற்ற பின்பு தாம் உறார் ஆயினர்; யாம செய்ததனையே அவரும செய்தார் ஆயின் அவரை விடுதல் ஆகுமோ? என்று தலைமகன் கொடுமையை உட்கொண்டு நெஞ்சிற்குச் சொல்லியது.

பரிதி:— நாம் அன்புவைக்கவும் தாம் அன்புவையாத நாயகர் நம்மைப் பிரிந்தாற்போலப் பிரிந்து விடுவரோ நெஞ்சமே சொல்லாய் எ - று.

காளிங்.— நெஞ்சே! நாம் இங்ஙனம் பிரிவுத் துயர் உற்ற இடத்துத் தாமும் அஃது உறாதவர் இங்ஙனம் நம்மைச் செறுத்தனர் எனககொண்டு நாமும் கைவிடுதற் கடன் உணடோ? எனவே கணவர் பிரிவின் கற்புடையாட்டியர் கடுந்துயர் உறினும கருத்து ஒழியார் என்பது பொருள் எ - று.

## மேற்கோள்பகுதி :

சொக்கப்;— 'அன்பர் கையகல மாலையம்போது வருவித்த நீர்' கையகலல் - ஒருசொல்; அது பிரிதல். 'செற்றாரெனக கைவிடல் உணடோ' என்பதுபோலும். (தஞ்சை. 243.)

## முதுமொழிவெண்பாக்கள் :

"வண்ண வுருக்குமிணி மாயன் மணம்புணர்தல்
திண்ணமென உற்றாள் சிவசிவா - உண்ணினைவில்." —சிவசிவ. 125.

1246. கலந்துணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு. (சு)

தலைமகள் கொடுமை நினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது.

## உரைப்பகுதி :

பரிமே:— என் நெஞ்சு - என் நெஞ்சே! கலந்து உணர்த்தும் காதலர்ககண்டால் புலந்து உணராய் - யான் தம்மொடுபுலநதால் அப்புலவியைக கலவிதன்னானே நீககவல்ல காதலரைக கண்டால் பொய்யேயாயினும்

ஒருகால் புலந்து பின் அதனை நீங்கமாட்டாய்; பொய்க் காய்வு காய்தி - அதுவும மாட்டாத நீ இப்பொழுது அவர் கொடியர் எனப் பொய்க்காய்வு காயாநின்ருய், இனி இதனை ஒழிந்து அவர்பாற்செல்லத் துணிவாயாக.

கலத்தலான் என்னும் பொருட்டாய கலக்க என்பது திரிந்து நின்றது. அதனுன் உணர்த்தலாவது கலவி இன்பத்தைக காட்டி அதனுன் மயககிப் புலவிக குறிப்பினை ஒழித்தல. பொய்ககாய்வு - நிலையில் வெறுப்பு. கண்டால் மாடடாத நீ காணுதவழி வெறுக்கின்றதனுல் பயனில்லை என்பதாம்.

மணக்:— என் நெஞ்சே! நீ காதலர் கொடுமையை அவர்க்கு உட்பட்டு அறிநது வைத்தும், அவரைககண்டால் புலந்து கலக்கமாட்டாது முன்பே கலப்பை; இப்பொழுது பொய்ககாய்வு காயாநின்ருய் எ - று.

பரிப்:— இது கண்டால் புலக்க மாட்டாத நீ காணுவிடத்து வெறுக்கின்றது எற்றுககு? என்று கூறியது. காட்சி - கனவின் கண் காட்சிபோலும். முன்பு ஒரு காலத்துப் பிரிந்த தலைமகனைக் கண்ட காட்சி எனினும் அமையும்.

பரிதி:— கூடினநேரத்திலே அன்புசொல்லும் நாயகர் பிரிந்த போது காயவை; அவர்கூடியிருககிற இடத்தில் காயாய் நீ ஏன்? நெஞ்சே எ - று.

காளிங்:— கேளாய் என் நெஞ்சமே! நம் விதிவாய்ப்பாய் நீங்கும் காதலரைக காணப் பெற்றுல் உட்கலந்து உணர்ந்து வைத்தும் புறத்து உடனறு ஊடிப் பின்னும ஆவம் என்று கருதாய் வறிதே ஒரு பொய்ககாய்வு காயககடவை அவர் புடைப்பு அறிய எ - று.

இனி மற்று இங்ஙனம் அவள் அலமருகின்ற இடத்து எய்திய தலைவனேடு இனிது வாழ்ந்து இயலுமிடத்து ஒரு ஞான்று தன் பகை தணிவினைககுச் சேறலும கூடும் அன்றே; அக்காலத்து இவள் ஆற்ருமையை அறிவிககின்றது மேலை அதிகாரம்.

## உரைவிளக்கப்பகுதி :

நூல்:— கலந்துணர்த்துங் காதலரைக கலவி தன்னுலே நீக்க வல்ல 'காதலர் என்றுரைத்துக, கலத்தலான் என்னும் பொருட்டாய கலக்க என்பது திரிநது நினறதெனருர். கலததல் என்பதும், கலவி என்பதும்

ஒருமுதல்நிலைப் பொருட்டொழிற்பெயரின் புடைபெயர்ச்சி என்பது அறியக் கலத்தலால் என்பதனைக் கலவியால் என்று உரைத்தார். அது, "பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல்" (1276) என்பதன்கண்ணும் காண்க. ஊடலுணர்தல் புணர்தலைப் புணர்ச்சி என்றார். (1109) ஆண்டும் காண்க. இனிச் செய்யுட்கண் இவ்வாறு நின்றால் உரையில் எச்சவாய்பாடாய் உரைப்பதும் உண்டு. அது, "குறப்பாவை" என்னும் (205) கோவையாருள், 'மறப்பான், பிறப்பான்' என்பனவும் காண்க.

1247. காமம் விடுஒன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு. (எ)

நாண்தடுத்தலின் அச்செலவொழிவாள் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— நன் நெஞ்சே - நல்லநெஞ்சே; ஒன்று காமம் விடு - ஒன்றின் நாண் விடமாட்டாயாயின் காமவேட்கையை விடு, (ஒன்று) நாண் விடு - ஒன்றின் அது விடமாட்டாயாயின் நாணினை விடு; இவ்விரண்டு யானோ பொறேன் - அன்றியே இரண்டும் விடாமை நின்கருத்தாயின், ஒன்றற்கொன்று மறுதலையாய இவ்விரண்டனையும் உடன் தாங்குமதுகை யான் இலன்.

யானோ என்னும் பிரிநிலை நீ பொறுப்பினும் என்பதுபட நின்றது. நன் நெஞ்சே என்றது, இரண்டையும் விடாது பெண்மையை நிலைபெறுத்தலின், நல்லை என்னும் குறிப்பிற்று. அது நன்றே எனினும் என் உயிருண்டாதல் சாலாமையின், அதற்காகின்றிலேன் என்பதாம். முற்றும்மை விகாரத்தால் தொக்கது.

மணக்:— எனக்கு நல்ல நெஞ்சே! ஒன்றில் காமத்தை விடுதல் வேண்டும்; ஒன்றில் நாணத்தை விடுதல் வேண்டும்; யான் இவ்விரண்டினையுங்கூடப் பொறுத்தல் அரிது எ - று.

இது பிரிவிடையாற்றாளாய்த் தலைமகனிருந்துழிச் செல்லக்கருதிய தலைமகள் நாணம் தடுத்தமைகண்டு கூறியது.

பரிதி:— ஒன்றோ காமத்தைவிடு; அல்லது நாணத்தை விடு; யான் இரண்டையும் சுமக்க மாட்டேன் நெஞ்சே எ - று.

காளிங்:— நல்வழி அறியும் நெஞ்சமே! ஒன்றோ யாம் அவர் வயின் உற்ற காமநோய்ப் பாரத்தைக் கைவிடுவாயாக; இனி ஒன்றோ இதனால் வரூஉம அலர் நாணுகின்ற நாண் பாரத்தைக் கைவிடுவாயாக; அல்லது மற்று யான் இவ்விரண்டு பாரமும் கூடப் பொறுக்கல் ஆற்றேன் என்கண் எ - று;

எனவே கணவன்மாட்டுக் காதலும் பிறர்மாட்டு நாணமும் பெண்டிர்கு இயல்பு ஆதலால் ஒழித்தற்கு அருமையின் உறுகின்ற உள்ளுறு துயரம் உணர்த்தியவாறாயிற்று என அறிக.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— பண்புடையது போன்றது. "சென்றதுகொல் போந்ததுகொல் செவ்விபெறுந்துணையும், நின்றதுகொல் நேர்மருங்கில் கையூன்றி.....................முழங்கும் கடாயானை மூரித்தேர் மாறற், குழன்று பின சென்ற என் நெஞ்சு." (தொல். பொருள். 196. மேற்.) "விசும்புற்ற திங்கள்" என்னுங் (198) கோவையாருள், "அசும்புற்ற கண்ணோடலறாய் கிடந்து" என்பதும் உறுப்புடையது போன்றது.

## மேற்கோள்பகுதி :

இளம்:— நாணுவரையிறத்தலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 97.)

## ஒப்புமைப்பகுதி :

"கொளவை அஞ்சின் காமம எய்க்கும்
எள்ளற விடினே உள்ளது நாணே." —குறுந். 112.

1248. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு. (அ)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— என் நெஞ்சு - என் நெஞ்சே! அவர் பரிந்து நல்கார் என்று - அவர் இவ்வாற்றாமையை அறியாமையின் நொந்துவந்து தலையளிசெய்யாராயினர் என்று கருதி; பிரிந்தவர்பின் ஏங்கிச் செல்வாய் பேதை - அஃது அறிவித்தற்பொருட்டு நம்மைப் பிரிந்து போயவர்பின் ஏங்கிச்செலலுற்ற நீ யாதும் அறியாய்.

ஆற்றாமைகண்டுவைத்தும் நல்காது போயினாரைக காணாதவழிச் சென்று அறிவித்த துணையானே நல்க வருவர் என்று கருதினமையின் பேதை என்றாள்.

மணக்:— என்நெஞ்சே! நீ வருத்தமுற்று அவர் அருளுகின்றிலர் என்று இரங்கி நம்மைவிட்டுப்போனவர் பின்னே போகாநின்றாய், பேதையா யிருந்தாய் எ - று.

இது தலைமகள் தலைமகனிருந்த தேயத்தை நினைத்துக கவன்ற நெஞ்சிற்குச் சொல்லியது.

பரிதி:— பிரிந்த நாயகனார் எனக்குமேலும் இன்பம்தரவேணும் என்று பிரிவு வைத்தபின் செல்வை; ஆகையாலே நெஞ்சே! மிகவும் பேதை காண் நீ எ - று

காளிங்:— நாம் இவரைப் பாதுகாக்க வேண்டும் என்று உள்ளத் தாற் பரிந்து நம்மை அவர் நல்குகின்றிலர்; என்னை என்று ஏங்கியே பின்னும் பிரிந்தவர் பின் சென்று நிற்பாய்: நீ சாலப்பேதை காண்: என்னுடைய நெஞ்சே ! எ - று.

1249 உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறிஎன் நெஞ்சு. (௯)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— என் நெஞ்சு - என் நெஞ்சே! காதலவர் உள்ளத் தாராக - காதலர் நின்னகத்தாராக; நீ உள்ளி யாருழைச் சேறி - முன் பெல்லாம் கண்டுவைத்து இப்பொழுது நீ புறத்துத் தேடிச் செல்கின்றது யாரிடத்து.

உள்ளம் என்புழி அம்முப் பகுதிப்பொருள்விகுதி. நின்னகத்து இருக்கின்றவரை அதையறியாது புறத்துத்தேடிச் சேறல் நகையுடைத்து, அதனை ஒழி எனபதாம்.

மணக்:— என் நெஞ்சே! நின்னால் காதலிக்கப்பட்டவர் நினது உள்ளத்திலே இருப்பாராக, நீ நினைத்து யாவர்மாட்டுச் செல்கின்றாய் எ-று.

இது தலைமகள் வாராதேபோனால் இங்கே காணலாம் என்று கூறியது.

பரிதி:— உள்ளத்தில் என் நாயகர் இருக்க [1]நீ யாரைத்தேடி வியாகுலப்படுகிறாய் நெஞ்சே எ - று.

காளிங்:— நெஞ்சமே! நீ புறத்து அவரைத் தேடிச் சென்றாலும் அப்பொழுதும் என் அகத்தவராய் இருப்பர்; இங்ஙனம் அகத்து உள்ளார் ஆகவும் புறத்து யாண்டும் உள்ளாரோ என்று கருதி ஓடிச் செல்வாய்; நீ யார்மாட்டுச் செலகின்றனை சொல; எனவே அகத்தும் புறத்தும் அவன அன்றி அறிவது பிறிது இல்லை எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— உறுப்புடையது போன்றது.

1250. துன்னாத் துறந்தாரை [2]நெஞ்சத் துடையேமா
இன்னும் இழத்தும் கவின். (கo)

அவரை மறந்து ஆற்றல்வேண்டும் என்பதுபடச் சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— துன்னாத் துறந்தாரை நெஞ்சத்து உடையேமா - நம்மைக்கூடாவண்ணம் துறந்துபோயினாரை நாம நம்மகத்துஉடையேமாக, இன்னும கவின இழத்தும - முன் இழந்த புறக்கவினையன்றி நின்ற அகக் கவினும் இழப்பேம்.

[3]"குன்றின் நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்" என்புழிப் போல நெஞ்சு என்பது ஈண்டும அகப்பொருட்டாய்நின்றது. அவர் நம்மைத் துன்னாமல் துறந்தாராகவும நாம அவரை மறத்தன்மாட்டேமாகவும், போன மெய்க்கவினையன்றி நின்ற நிறையும் இழப்பேம் என்பதாம்.

மணக்:— மனமே! நமமோடு செறியாராய்த் துறந்து போனவரை நெஞ்சகத்தே உடையோமாயின், முன்னும் இழந்த கவினொழிய இன்னமுமுள்ள கவினை இழப்போம்; ஆதலான் மறத்தலே கருமம் எ - று.

---

[1] 'நாயகர் பிரிந்தார் என்று புறத்திலே ஏன் தேடுகிறாய் நெஞ்சமே' — பழைய. [2] 'நெஞ்சே' காளிங் - பாடம. [3] குறுந். கடவுள்வாழ்த்து. 3 - 4.

ஈண்டு நெஞ்சு என்றது மனத்துடைய தானத்தை. இது நினைக கின்றதனால் பயனில்லை என்று கூறியது.

பரிதி:— கூடாமல் பிரிந்தவரை நெஞ்சத்திலே கொண்டிருந்து மேன்மேலும் அழகை இழக்கவேண்டாம எ - று.

காளிங்:— நெஞ்சே! இன்றியமையாமை அறிந்தும நம்மோடு கூடி வாழாருமாய்ப் பின்னை நினைந்து அருளலும இன்றிப் பெரிதும துறநதே ஒழிந்தாரை நாம் மற்று உடையேம; ஆதலால முன்பு இழந்த கவினை அன்றி மற்று இன்னமும கவின இழப்பேன. எனவே, இறந்துபாடும இயையும எனபது பொருள் எ - று.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— நினைத்தொன்று, காதல், இருந்துள்ளி, கண்ணும, செற்றார், கலநது; காமம், பரிந்தவர், உள்ளத்தார், துன்னு.

மணக்:— காமம், துன்னு, காதல, இருநதுள்ளி, கலநது, செற்றார், பரிநதவர், கண்ணும, உள்ளத்தார், நினைத்தொன்று.

பரிதி:— காமம், நினைதொன்று, கலந்து, இருநதுள்ளி, உள்ளத்தார், பரிந்தவர், கண்ணும், காதல, துன்னு, செற்றார்.

காளிங்:— காமம, துன்னு, காதல், நினைத்தொன்று, செற்றார், கண்ணும், பரிந்தவர், உள்ளத்தார், இருநதுள்ளி, கலந்து.

# 126. *நிறையழிதல்.*

## தொகுப்புரை :

நாணமாகிய தாழிடப்பெற்ற நிறையென்னும் கதவைக், காமமாகிய கோடரி உடைக்கும். எல்லாரும் தொழிலறறு ஓய்வுகொள்ளும் காலமாகிய யாமத்தும் காமமானது என் நெஞ்சை வேலை வாங்குகிறது. அதற்குக் கொஞ்சங்கூடக் கண்ணோட்டம் என்பதில்லை இந்தக் காமத்தை யான் பிறர் அறியாமல் மறைக்கக கருதுகிறேன். அதுவோ தும்மலைப்போல முன்எச்சரிககையின்றியே வெளிப்பட்டுவிடுகின்றது. யான் நிறையுடையவள் எனறு இதுவரை எணணியிருநதேன். என்காமம மறைப்பை விலக்கி மன்றேறிவிட்டது. தம்மை மறநது பிரிநதுசென்ற தலைவர்க்குப்பின செல்லாமையாகிய பெருநதன்மை காமநோய் உற்ருர் அறியாத ஒரு செயல். பிரிநதவர் பின்னே செல்லுதலை வேண்டுதலால என்னையுற்ற துன்பம் எத்தகைதது ? மிககொடிது. நம்மால் விரும்பப் பட்டவர் வநது காமத்தால நாம விருமபிய காரியங்களைச் செய்வாராயின் நாண் என்ற ஒன்றை யாம் அறியமாட்டோம அன்ருே ? நம்முடைய நிறையைத் தகர்க்கும படை மாயககள்வராகிய காதலரின் பணிந்த சொற்களல்லவா ? அவர் வந்தால் நான் புலந்து கொள்ளப்போகிறேன் என்று ஒருபககம் போனேன். அப்படிப் போயும் நெஞ்சம் கலந்தது. அதனுல தழுவினேன். புண்ணில கொள்ளிபட்டாற்போன்ற மனமுடைய மாதர்க்கு முன்னர் ஊடி, பின்னர் அவன் உணர்த்தத் தெளிந்து கூடுவோம் என்பது உண்டோ ? ]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது தலைமகள் மனத்தடககற்பாலனவற்றை வேட்கை மிகுதியான் அடககமாட்டாது வாய்விடுதல்; *"நிறை எனப்படுவது மறைபிறரறியாமை" என்ருர் பிறரும. அஃதழிதற்காரணம் நெஞ்சொடு கிளத்தலின் இது, நெஞ்சொடுகிளத்தலின் பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *நிறையழிதலாவது வேட்கை மிகுதியால் தன் நிலைமை யழிந்து தலைமகள் கூறுதல். நெஞ்சின் மிககது புலப்படுமாதலான், அதன் பின் இது கூறப்பட்டது.*

---

* *கலித்* 133 - 12.

1251. காமக் கணிச்சி உடைக்கும் *நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு. (க)

நாணும் நிறையும் அழியாமை நீ ஆற்றல் வேண்டும் என்ற
தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நாணுத தாழ் வீழத்த நிறை என்னும கதவு - நாணுகிய தாழினைக கோத்த நிறை எனனும கதவினை; காமக கணிச்சி உடைக்கும் - காமவேட்கையாகிய கணிசசி முறியாநின்றது, இனி அவை நிற்றலும் இல்லை, யான ஆற்றலும இல்லை.

கணிச்சி-கூந்தாலி; நாண் உள்ள துணையும் நிறை அழியாதாகலின அதனைத் தாழாககியும, அகத்துககிடந்தன பிறர் கொள்ளாமல் காத்தலின் நிறையைக கதவாககியும, வலியவாயத் தாமாக நீங்காத அவ்விரணடனையும் ஒருங்கு நீககலின் தன்காமவேட்கையைக கணிச்சியாககியும் கூறினாள்.

மணக்:— காமமாகிய மழு உடையாநின்றது, நாணமாகிய தாழினாலே அடைக்கப்பட்ட அறிவாகிய கதவினை எ - று.

இஃது அறிவும நாணமும் உடையார் இவ்வாறு செய்யார் என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— பயிர்ப்பாகிய வீட்டில், அச்சம் என்னும் நிலையில, மடம் என்னும் கதவில் இட்ட, நாணம் என்னும் தாளை வெட்டும் காமமாகிய மழு எ - று.

காளிங்:— தோழீ! அவர் பிரிவின்கண் யான் உறுகின்ற காம நோயாகிய கனத்த கோடாலியானது உடைத்து விடுமே; யாதினை எனில், நாணம் என்கிற அகத்தாழினைத் தன்மீதே விழவிட்டு அடைத்த எனது அறிவென்னும் அகககதவினை; எனவே இங்஫னம் என் நெஞ்சினை யான் ஆற்றி நிறுப்பவும் நிறை அழிந்து செல்லின் என் செய்வேன் எ - று.

**மேற்கோள்பகுதி :**

சொக்கப்:— 'நிறையாம் வரமபினில' நிறை - மறை பிறர் அறியாமை. 'காமககணிச்சி......கதவு' என்று கூறியவாறறுனும உணர்க. (தஞ்சை. 14.)

---

* 'அறிவென்னும்' காளிங் - மணக் - பாடம்.

ஒப்புமைப்பகுதி :

"விருப்பொன்று பட்டவர் உளம்நிறை உடைத்தென" —பரிபா. 6: 21.

"எமக்கிடும் எமக்கிடும் எனப்பின் பற்றியே
அமைத்தடந் தோளினர் அனங்கன் பூங்கணை
தமைத்துளை படுத்தலர் சார்பி லாமையால்
கமைப்புறு நாண்முதல் காப்பு நீக்கினர்" —திருவிளை. வளையல். 28.

"அவசமற் றளநெகத் துயில்நெகப் பவளவாய்
அணிசிவப் பறவிழிக் கடைசிவப் புறநிறைக்
கவசமற் றிளநகைக் களிவரக் களிவரும்
கணவரைப் புணருவீர் கடைதிறந் திடுமினோ" —கலிங். 33.

முதுமொழிவெண்பாக்கள்:

"வேட்டாக கருளும விமலா துணைபிரிவு
நீடப் பாவை நிறையழிந்து - கூறியது" —முதுமொழி. 179.

1252. காமம் எனஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில். (உ)

நெஞ்சின்கண் தோன்றிய காமம் நெஞ்சால் அடக்கப்படும்
என்றாட்குச் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— யாமத்தும் என் நெஞ்சத்தைத் தொழில் ஆளும் - எல்லாரும் தொழில் ஒழியும இடையாமத்தும என்நெஞ்சத்தை ஒறுத்துத் தொழில்கொள்ளா நின்றது; காமம் என ஒன்று கண் இன்று - ஆகலால் காமம் என்று சொல்லப்பட்ட ஒன்று கண்ணோட்டமின்றாயிருந்தது.

ஓ என்பது இரக்ககுறிப்பு. தொழிலின்கண்ணேயாடல் தலைமகன் பாற்செலவிடுத்தல. தாயைப்பணிகோடல் உலகியலன்மையின் காமம் என ஒன்று என்றும், அது தன்னைக் கொள்கின்றது அளவறியாது கோடலிற் கண்ணின்று என்றும் கூறினாள். அடக்கப்படாமை கூறியவாறு.

மணக்.:— காமமென்றொன்று கண்ணோட்டமுடைத்தன்று; என் நெஞ்சத்தை நடுநாள் யாமத்தினும் தொழில்கொள்ளாநின்றது எ - று.

தொழில் கொள்ளுதலாவது அப்பொழுது அவர்மாட்டுப் போக விடுத்தல். இது நெஞ்சின் மிக்கது வாய்சோர்ந்து ஆற்றாமையால் தலைமகள் தோழிக்குக் கூறியது

பரிதி:— காமம் என ஒன்று என்னிடமாக நின்று, என் நெஞ்சே இருட்டிலும் அடிமைத்தொழில் கொள்ளுவது எ - று.

காளிங்:— தோழீ! காதலர் பிரிவில் பெருகும் காமநோய் என்கின்ற இது சாலக் கண்ணின்றே : என் எனில் யான் உறுதுயர் யாதும் காணாது இடையிருள் யாமத்தும் என்னைத் தன் தொழிலாவது அரற்றலும் உலற்றலும் அலமரலும் பிறவும் அன்றே? அவை அனைத்தும் யான் உறப்பண்ணும் எ - று.

1253. *மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும். (ந)

மகளிர்காமம் மறைக்கப்படும் என்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— காமத்தை யான் மறைப்பேன் - இக்காமத்தை யான் என்னுள்ளே மறைக்கக் கருதுவேன்; குறிப்பு இன்றித் தும்மல்போல் தோன்றி விடும்- அதனால் என், இஃது என் கருத்தின் வாராது தும்மல்போல வெளிப்பட்டே விடாநின்றது.

மன் ஒழியிசைக்கண் வந்தது. ஓகாரம் இரங்கற்கண் வந்தது. தும்மல் அடங்காதாற் போல அடங்குகின்றதில்லை என்பதாம்.

மணக்:— காமத்தை யான் அடக்கக் கருதுவேன்; அவ்வாறு செய்யவும், அது தும்மல் தோன்றுமாறுபோல, என் குறிப்பின்றியும் தோன்றாநின்றது எ - று.

இது தலைமகள் நிறையழிந்து கூறிய சொற்கேட்டு, இவ்வாறு செய்யாது இதனை மறைத்தல் வேண்டுமென்ற தோழிக்கு அவள் கூறியது.

பரிதி:— தன்னை ஒறுப்பதற்கு நொந்து நிறுத்துவேன்; என்று லும், தும்மல் போல் ஆசை தோன்றும் எ - று.

---

*'நிறுப்பென்மன்' காளிங் பாடம்.

காளிங்:— தோழீ! அங்ஙனம் உற்ற எம் காமத்தை யானே மற்று ஆம் துணையும் புலப்படாமை அகத்துள் நிறுத்து அமைப்பனுயினும், தும்மலானது ஒருவர் குறிப்பின்றிப் புறத்து எழுந்து புறம் தோன்று மாப்போலே மற்று இதுவும என குறிப்பு இனறித் தானே புறத்து எங்கும புலப்படுப, ஆயின் என் செய்வேன்? எ - று.

1254. நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறைஇறந்து மன்று படும். (௪)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— யான் நிறையுடையேன் என்பேன் - இன்றினாங்கெல்லாம் யான் என்னை நிறையுடையேன் என்று கருதியிருந்தேன்; என் காமம் மறை இறந்து மன்று படும் - அதனால் என், இன்று என் காமம் மறைத் தலைககடந்து மன்றின்கண் வெளிப்படா நின்றது.

மன்னும் ஓவும் மேலவற்றின்கண் வந்தன. மன்றுபடுதல்-பலரும் அறிதல். இனி என்வரைத்தன்று என்பதாம.

மணக்:— யானோ நிறையுடையேன் என்றிருப்பன்; இப்படி இருககவும், என் காமமானது மறைத்தலைக்கடந்து மன்றின்கண் வெளிப் படாநின்றது எ - று.

இது தலைமகள் ஆற்றாமையால் கூறிய சொற்கேட்டு நிறையுடை யார் இவ்வாறு செய்யார் என்ற தோழிக்கு அவள் கூறியது.

பரிதி:— என்னிலே யான் நிறையுடையேன் என்றிருப்பேன்; என்னுடைய ஆசை அடக்க மற்று ஊர் மன்றிலே இருக்கும் எ - று.

காளிங்:— தோழீ! என்னுள்ளே யான் பெரிதும் நாணுக் குறைபடாமை நிறைவேற்றிக்கொண்டு ஒழுகும் நிறையுடையேன் என்று இருப்பேன யான் மிகவும்; மற்று இங்ஙனம் இருப்பவும் அவர் பிரிவின் கண் யாம் உற்ற காமநோயானது யான் பிறர் அறியாமல் மறைத்து ஒழுகும் மறை வரம்பைக கடந்து மன்றத்துச் சென்றது உளது ஆம்; இஃது என்ன வியப்போ? எ - று

**ஒப்புமைப்பகுதி :**

"மறையலராகி மன்றத் தஃதே" —குறுந். 97.

1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று. (௫)

நம்மைமறந்தாரை நாமும் மறக்கறபாலம் என்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை - தம்மை அகன்றுசென்றார் பின்செல்லாது தாமும அகன்று நிற்கும் நிறையுடைமை காமநோய உற்றார் அறிவது ஒன்று அன்று - காமநோயினை உறாதார் அறிவதொன்றனறி உற்றார் அறிவதொன்றன்று.

இன்பத்தொடு கழியுங்காலத்தைத் துன்பத்தொடு கழியுமாறு செய்தலின் செற்றார் என்றாள். பின்சேறல் - மனத்தால் இடைவிடாது நினைத்தல. பெருந்தகைமை - ஈண்டு ஆகுபெயர். *காமநோயுறாதார் மானமுடையார் நன்றென உணரார்மாட்டும் சென்றேநிற்கும் யானறிவதொன்றன்று என்பதாம.

மணக்:— தமமை இகழ்ந்தார்பின் செல்லாத பெரியதகைமை, காமநோயுற்றாரால் அறிவதொன்று அன்று எ - று.

இது தம்மை இகழ்ந்து போனவர்பின் சென்று இரங்குதல் பெரியார்கருத் தகாது என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— மாற்றாரைப் பின் செல்வோம் என்ற மேம்பாடு காமம் மேற்கொண்டார்க்கு இல்லை எ - று.

காளிங்:—' தோழீ! 'அன்பிலாதார் பின்பு செல்லேன்' என்னும் முதுசொல்படியே நம்மைச் செற்றார்பின் சென்று நில்லாமையாகின்ற பெரிய தகைமைப்பாடு ஆகின்றது. காமநோய் உற்றவர் அறியும கடப்பாடு உடையது ஒன்று அன்று எ - று.

---

*'காமம் யாவதும் நன்றென உணரார் மாட்டும், சென்றே நிற்கும் பெரும் பேதைமைத்தே' —குறுந் 78. 5 - 6.

முதுமொழிவெண்பாக்கள் :

"போகமுவர்த் தேதவன்வின் போதல்கண்டும் கௌசிகிபின்
மோகமிகச் சென்றாள் முருகேசா - ஆகையினால்" —முருகேசர். 126.

1256. செற்றவர் *பின்சேறல் வேண்டி அளித்தரோ
எற்றென்னை உற்ற துயர். (சா)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— செற்றவர்பின் சேறல் வேண்டி - என்னை அகன்று சென்றார்பின்னே யான் சேறலை வேண்டுதலான், என்னை உற்ற துயர் எற்று அளித்து - என்னை உற்ற துயர் எதன்மையது! சால நன்று.

செற்றவர் என்றது ஈண்டும் அப்பொருட்டு வேண்ட என்பது வேண்டி எனத் திரிந்துநின்றது. அளித்து என்பது இகழ்ச்சிக்குறிப்பு. இக்காமநோய் யான் சொல்லவும் கேட்கவும் ஆவதொன்றன்று, சாலக் கொடிது என்பதாம்.

மணக்:— செறுத்தார்பின்னே யான் சேறலை வேண்டுதலால், என்னை யடைந்ததுயர் எத்தன்மைத்து; நன்றாக இருக்கின்றது எ - று

இது தனித்திருந்து துயருறுதலை காமத்திற்கு இயற்கை என்று கூறிய தலைமகளை நோக்கி, இது நின்போல்வார்க்குத் தகாதென்ற தோழிக்கு அவள் சொல்லியது.

பரிப்:— செறுத்தார் பின்பே யான் சேறலை வேண்டி இத்துயர் உற்றதென்று கொள்ளப்படும்; அளித்து; அதற்கு மற்றுப் பயன் என்னை எ - று.

பரிதி:— சத்துருக்களை யான் பின் செல்லவேண்டியும், என் பலத்தையும் அறிவையும் கெடுக்கவேண்டியும் காமத்துயர் உண்டாயிற்று எ - று.

---

* 'பின்செல்ல' காளிங் - பாடம்.

காளிங்:— தோழீ! இங்ஙனம் அறிந்து இருந்தும் பெருந் தன்மை பேணாதே, தான் நம்மைச் செற்றவர் பின்செல்லுதலையே விரும்பி மற்று யான் உற்ற காமத் துயரம் தணிக்கத்தக்கது எத்தன்மைத்து ஆகின்றது; எனவே அவர்மாட்டு அன்புகொள் நெஞ்சம் எனப்படு கின்றது எ - று.

1257. நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின். (எ)

பரத்தையிற்பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழிவால் கூடிய தலைமகள் நீ புலவாமைக்குக் காரணம் யாது என்ற தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— பேணியார் காமத்தால் பெட்ப செயின் - நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய்யும் அளவின், நாண் என ஒன்றோ அறியலம் - நாண் என்றொன்றையும் அறியமாட்டேமாயிருந்தேம்.

பேணியார் எனச் செயப்படுபொருள் வினைமுதல்போலக் கூறப் பட்டது. விரும்பியன - வேட்கைமிகவினால் கருதியிருந்த கலவிகள். நாண் பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். ஒன்று என்பது ஈண்டுச் சிறிது எனனும் பொருட்டு. இழிவுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. நிறையழிவான் அறியாது கூடிய தன்குற்றம் நோக்கி, அவனையும் உளப்படுத்தாள்.

மணக்:— நாணென்பது ஒன்று அறியார் மகளிர், காமம் காரணமாக, விரும்பப்பட்டவர் தாம் விரும்புமாறு செய்வாராயின் எ - று.

அவர்விரும்புமாறு செய்வாராயின் நாணமுண்டாகாதென்றவாறு.

பரிப்.— விரும்புமாறு செய்தலாவது தலைமகன் தனது அன்பு தோன்ற நிற்றலும் தலைமகள் வேட்டன செய்தல் வன்மையும் பிரிந்து வந்தவனோடு புலவாது கூடுதல் நாணம் ஆகாதோ என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— நாணமுடைமை உண்டாகில் காமம் வெளிப்படாது; ஆகவே காமம் உடையார்க்கு நாணம் இல்லை எ - று.

காளிங்:— தோழீ! முன் நம்மை விரும்பார் ஆகிய காதலர் யாம் விரும்பவே தாம் வருவராயின் அவ்விடத்து ஒப்பிறந்த நாணினை யும் ஒரு பெரிதும அறியலம்: எனவே அவரிடத்தில் அவாப்பெறில் வந்தாங்கே எமது ஆவல் திரும்படி அவரைப் "பணிந்தும எழுந்தும் பரிவுற மகிழ்ந்தும் நோக்கி ஊடியும நுணுக நகைத்தும் நீக்கிய நாணொடு நிற்பேன்" எ - று.

1258. பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை. (அ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— நம் பெண்மை உடைக்கும் படை - நம் நிறையாகிய அரணை அழிக்கும தானை; பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோ - பல பொய்களைவல்ல கள்வனுடைய தாழ்ந்த சொற்களன்றோ! ஆனபின் அது நிற்குமாறு என்னை.

பெண்மை ஈண்டுத் தலைமைபற்றி நிறைமேல்நின்றது. வந்தால் புலக்கக்கடவேம் என்றும், புலந்தால் அவன் சொற்களானும் செயல்களா னும் நீங்கேம் என்றும் இவைமுதலாக எண்ணிக்கொண்டிருந்தன யாவும் காணாது கலவிக்கண் உன்னினும முற்படும் வகை வந்து தோன்றினன் என்பாள் பன்மாயக் கள்வன என்றாள். பணிமொழி - நம்மினும் தான் அன்புமிகுதியுடையனாகச் சொல்லும் சொற்கள். அவன் அத்தன்மையனாக, சொற்கள் அவையாக, நம் நிறை அழியாதொழியுமோ என்பதாம்.

மணக்:— பலபொய்களையும் பேசவல்ல கள்வனது தாழ்ந்த மொழியல்லவோ? நமது பெண்மையை அழிக்கும் கருவி எ - று.

இது பெண்மையல்ல என்ற தோழிக்கு அவன் என்னோடு கலந்த நாளில் சொன்ன சொற்கள்காண் நம பெணமையைக் கெடுக்கின்றது; அல்லது கெடாது என்று தலைமகள் கூறியது.

பரிதி:— பலபல மாயத்தை உள்ள கள்ளனின் மெத்தென்ற வார்த்தையன்றோ என் பெண்மைப் படையை ஓடவெட்டும் படை எ - று.

காளிங்:— தோழீ! நின்மாட்டு அன்பு பெரிதும் உடையேன்: அருளும் நீங்கேன்; நின்னிற் பிரியேன்; பிரியினும ஆற்றேன்; புறத்து

உடம்பு இரண்டு அல்லது அகத்து உயிர் ஒன்றெனா வஞ்சனை பலவும் வகுத்து உடன்படுத்து எம் கவின திறம் முழுதும் கவர்ந்த களவன் பண்புற மொழிந்த பணிமொழி அன்றோ நம் பெண்மையை உடைக்கும் கருவி எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

"கோற்றொடிவிற் பாய்போன்று கூடல் வணிகமின்றார்
தோற்று நிறையழித்தாய் சோமேசா - சாற்றுங்கால்"
—சோமேசர். 126.

"பின்னைக் கினியமொழி பேசிவென்ற மாயவன்போல்
என்னைத்தொண் டாளும் இரங்கேசா - முன்னின்ற" —இரங். 126.

1259. புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
*கலத்தல் உறுவது கண்டு. (கூ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— புலப்பல் எனச் சென்றேன - அவர் வந்தபொழுது புலக்கக்கடவேன் என்று கருதி முன்னில்லாது பிறிதோரிடத்துப் போயினேன்; நெஞ்சம் கலத்தல் உறுவது கண்டு புல்லினேன் - போயும், என் நெஞ்சம் நிறையினில்லாது அறைபோய் அவரோடு கலத்தல் தொடங்குதலை அறிந்து, இனி அது வாயாது என்று புல்லினேன்.

வாயாமை - புலத்தற்கருவியாய நெஞ்சுதானே கலத்தற்கருவியாய் நிற்றலின் அது முடியாமை.

மணக்:— புலப்பலெனச் சென்ற யான் முயங்கினேன், நெஞ்சு முற்பட்டுப் பொருந்துதல் உறுவதனைக் கண்டு எ - று.

இஃது ஊடுதல் அருமை என்ற தோழிக்கு முன்னொருகால் அவனைப்பிரிந்து கூடிய என்மனம் செய்தது இது என்று தலைமகள் கூறியது.

---

*' கலக்கல்' காளிங் - பாடம்.

பரிதி:— ஊடல் என்று சென்றேன். என் மனம் என் வசம் வாராதபடியினாலே கூடினேன் எ - று.

காளிங்:— தோழீ! யான் அவரோடு புலப்பேனெனச் சென்று புக்கேன்; விரைவொடு புலவிக்கொணடேன்; என்னை காரணம் எனில், முன்னம எனனோடு நிற்பது போன்றதாகிய நெஞ்சம் அவரைக்கண்ட பொழுதே கூடல் உறுவதனைக குறிக்கொண்டு எ - று.

1260. நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல். (கo)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நிணம் தீயில் இட்டன்ன நெஞ்சினர்க்கு - நிணத்தைத் தீயின்கண்ணே இட்டால் அஃது உருகுமாறுபோலத் தம் காதலரைக் கண்டால் நிறையழிந்து உருகும நெஞ்சினையுடைய மகளிர்க்கு, புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் உண்டோ - அவர் புணர யாம் ஊடிப் பின்பு உணராது அந்நிலையே நிற்கக்கடவேம் என்று கருதுதல் உண்டாகுமோ, ஆகாது.

புணர்தல் - ஈண்டு மிக நனுகுதல்; எதிர்ப்படலுமாம். புணர என்பது புணர்ந்து எனத் திரிந்து நின்றது. யான் அத்தன்மையேனுகலின் எனக்கு அஃது இல்லையாயிற்று என்பதாம.

மணக்:— தீயின்கண்ணே நிணத்தை இட்டாற்போல, உருகும் நெஞ்சினை யுடையார்க்குக காதலரை எதிர்ப்பட்டு வந்து ஊடி நிற்போம் எனறு நினைததல் உளதாகுமோ? எ - று.

பரிப்:— இது நிறையழிந்து கூறிய தலைமகள் ஆற்றுதற் பொருட்டு நம காதலர் வந்தால் ஊடுவையோ என்று நகைக் குறிப்பினல் கூறிய தோழிககு ஊடுதல் அரிது என்று தலைமகள் கூறியது.

பரிதி.— நெருப்பைச சேர்நத நெய்போலே நெஞ்சம் உருகும்; ஆதலால காதலர்கு இலலை புணர்ந்தாரிடதது ஊடுதல் எ - று.

காளிங்:— கேளாய் தோழீ! சென்று உற்றபொழுதே உருகுவ தாகிய நிணததைத தீயிலிட்டால எத்தனமை மற்று அததன்மைபோல்

அவரைக் கண்ட இடத்தே நிலை நெகிழ்ந்து உருகும் நெஞ்சினை உடையார்களும் உளரோ அவரோடு அணுகி நின்று வைத்து ஊடி அகல்கிற்பேம் என்று இருத்தல்? எனவே அங்ஙனம் இறுகி நிற்குமாயின் என் நெஞ்சம் இறுகி நிற்கும் என்பது பொருள் எ - று.

இங்ஙனம் தலைமகட்கு அவ்வாறு பிரிந்தவரிடத்து விருப்பம் மேன்மேலும மிக்குச் சேறலான் அதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

முதுமொழிவெண்பாக்கள் :

" என்றுமுனைக் கூடேமென் றிட்ட விரதமுட்டச்
சென்றதில்லை யன்றோ தினகரா - நின்று" —தினகர. 130.

" அன்றுவனத் தண்ணல் அருகே நிறையழிந்தார்
சென்றுமுனி மாதர் சிவசிவா - ஒன்ற" —சிவசிவ. 126.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— காமக்கணிசசி, காமமென, மறைப்பேன், நிறையுடையேன், செற்றார்பின், செற்றவர்பின், நாணென, பன்மாயக், புலப்பல், நிணந்தீயில்.

மணக்:— காமமென, மறைப்பேன், நிறையுடையேன், காமக்கணிச்சி, செற்றார்பின், செற்றவர்பின், பன்மாயக், நிணநதீயில், புலப்பல், நாணென.

பரிதி:— காமக்கணிச்சி, காமமென, மறைப்பேன், நிறையுடையேன், செற்றவர்பின், செற்றார்பின், நிணந்தீயில், நாணென, புலப்பல், பன்மாயக்.

காளிங்:— காமக்கணிச்சி, பன்மாயக், நிறையுடையேன், மறைப்பேன், செற்றார்பின், செற்றவர்பின், காமமென, நாணென, புலப்பல், நிணந்தீயில்.

# 127. *அவர்வயின்விதும்பல்

## தொகுப்புரை :

[ கண்கள் வழியைப்பார்த்து ஒளியற்றுப்போயின. விரல்கள் அவர் சென்ற நாளைச் சுவரில் தொட்டுத்தொட்டு எண்ணித் தேய்ந்துபோயின. தோழீ ! என் தலைவரை இன்று யான் மறந்தாலும் அழகு என்னைவிட்டுப்போக ஆபரணங்களும் என் தோளை விட்டுக் கழலுகின்றன. வெற்றியை விரும்பி ஊக்கம் துணையாகச் சென்ற நம் தலைவர் வருதலை விரும்பி இன்னும் உயிர்வைத்திருக்கிறேன். பிரிந்தவர் பெரும் காமத்தோடு வருவாரென்று எண்ணி என்மனம் உச்சியிலேறுகின்றது. என் காதலரைக் கண்ணாரக் காண்பேன். கண்டபிறகு என்தோலைக்கதுவிய பசலைநோய் தானே நீங்கும். ஒருநாள் என் கணவன் வரட்டும். என்னை வருத்தும் இந்நோய்கெட அப்படியே பொறிகளைந் தானும் அள்ளிப்பருகுவேன். என் கண்ணனார் வருவாராயின் ஊடுவேனோ, கூடுவேனோ, அல்லது இரண்டும் செய்வேனோ? நம்முடைய அரசன் போர்செய்து வெல்லட்டும். நாம் வீட்டுக்குச் சென்று மனைவியோடு மாலைக்காலத்து விருந்துண்போம். நெடுந்தூரம் பிரிந்துசென்ற காதலர் வரும் நாளை எண்ணி ஏங்குகின்ற மாதர்க்கு, ஒருநாள் ஏழுநாளாக நீளும். நம் தலைவி, நம் பிரிவுக்கு ஆற்றாது மனம் உடைந்து இறப்பாளாயின் பின்பு அவள் நம்மைப்பெறக்கூடியவளாயிருந்தென்ன ? பெற்றால்தான் என்ன ? உடலோடு உடல் பொருந்தக் கூடினால்தான் என்ன ? ]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது சேயிடைப்பிரிவின்கண் தலைமகனும், தலைமகளும் வேட்கைமிகவினான் ஒருவரை ஒருவர் காண்டற்கு விரைதல். தலைமகன் பிரிவும் தலைமகளாற்றாமையும் அதிகாரப்பட்டுவருகின்றமையின், இருவரையும் சுட்டிப் பொதுவாகிய பன்மைப் பாலால் கூறினார். பிறரெல்லாம் இதனைத் தலைமகனைநினைந்து தலைமகள் விதுப்புறல் என்றார். சுட்டுப்பெயர் சொல்லுவான் குறிப்பொடு கூடியபொருள் உணர்த்துவ தல்லது தான் ஒன்றற்குப் பெயராகாமையானும், கவிகூற்றாய அதி காரத்துத் தலைமகன் உயர்த்தற்பன்மையால் கூறப்படாமையானும் அஃது உரையன்மை அறிக. இதனுள் தலைமகள் கூற்று நிறையழிவான் நிகழ்ந்த தாகலின், அவ்வியைபுபற்றி நிறையழிதலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *அவர்வயின்விதும்பலாவது அவர் வரவின்கண்ணே துக்கமுறுதல்; காதலர் வரவு கேட்டிருத்தலென்றவாறு. இவையெல்லாம் தோழிக்குக் கூறினவாகக் கொள்ளப்படும். நிறையழிந்தார் எப்பொழுதும் காதலர் வரவிற்கு ஆசையுற்றிருப்பாராதலான் அதன்பின் இது கூறப் பட்டது.*

---

* *'அவர்வயின் விருப்பல்' காளிங் - பாடம்.*

1261. வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த *விரல். (க)

தலைமகள் காண்டல்விதுப்பினால் சொல்லியது

**உரைப்பகுதி :**

பரிமே:— அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த - அவர் நம்மைப் பிரிந்து போயநாள்கள் சுவரின்கண் இழைத்தவற்றைத் தொட்டு எண்ணுதலான் என் விரல்கள் தேய்ந்தன; கண்ணும் வாள் அற்றுப் புற்கென்ற - அதுவேயன்றி அவர்வரும் வழிபார்த்து என் கண்களும் ஒளி இழந்து புல்லியவாயின; இவ்வாறாயும் அவர்வரவு உண்டாயிற்றில்லை.

நாள்: ஆகுபெயர். புல்லியவாதல் - நுண்ணிய காணமாட்டாமை. ஒற்ற என்பது ஒற்றி எனத் திரிந்துநின்றது. இனி யான் காணுமாறு என்னை என்பதாம். நாள் எண்ணலும் வழிபார்த்தலும் ஒருகாற் செய்தொழியாது இடையின்றிச்செய்தலான், விதுப்பாயிற்று.

மணக்:— கண்களும் அவர் வரவைப்பார்த்து நோதலால் ஒளி இழந்து புல்லென்றன; விரல்களும் அவர்போன நாட்களை யெண்ணி முடக்குதலாய்த் தேய்ந்தன எ - று.

இது வரவு காணாமையால் தலைமகள் கூறியது.

பரிதி:— கண்ணும் ஒளி இழந்த; நாயகர்சென்ற நாளெண்ணித் தேய்ந்தது விரல் நகமும் எ - று.

காளிங்:— தோழீ! நம்மைப் பிரிந்து சேய தேயத்தின்கண் சென்றவர் வருநாள் காணப் பெறுதும் கொல்லோ என்று உறைக்க எப்பொழுதும நோககியே என் கண்ணும் சால ஒளிமறைந்து புற்கென்றன: அன்றியும் அவர் சென்ற நாள்களைச் சுவர் தோற்றி, ஒற்றியே நலமறத் தேய்ந்தன நகமும் எ - று.

**ஒப்புமைப்பகுதி :**

“ நீளிடை அத்தம் நோக்கிவா ளற்றுக்
கண்ணும் காட்சி தெளவின ” —நற். 397 : 2 - 3.

---

* ‘நகம்’ காளிங் - பாடம்.

"காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே." —குறுந். 44.

1262. இலங்கிழாய் இன்று மறப்பினென் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து. (உ)

ஆற்றுமை மிகுதலின் இடையின்றி நினைக்கற்பாலையல்லை சிறிது மறக்கல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— இலங்கு இழாய் - விளங்கா நின்ற இழையினை உடையாய், இன்று மறப்பின் - காதலரை இன்று யான் மறப்பேனுயின், மேல் காரிகை நீத்து என் தோள் கலங்கழியும - மேலும் காரிகை என்னை நீப்ப என் தோள்கள் வளை கழல்வனவாம்.

இலங்கிழாய் என்பது இதற்கு நீ யாதும் பரியலை என்னும் குறிப்பிற்று. இன்று - யான் இறந்து படுகின்ற இன்று. மேலும் - மறு பிறப்பினும். எச்சவும்மை விகாரத்தால தொகககது. நீப்ப என்பது நீத்து எனத் திரிந்து நின்றது. கழியும என்னும இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் நின்றது. இவ்வெலலைக்கண் நினைந்தால் மறுமைககண் அவரை எய்தி இன்புறலாம, அதனுன் மறககற்பாலேனலலேன் என்பதாம்.

மணக்:— இலங்கிய இழையை உடையவளே! யான் இன்று அவரை மறப்பேனுயின், பண்டை மெல்லிய என்னுடைய தோள்கள் தம் அழகினை நீககி வளை முதலான அணிகலங்களையும கழலவிடும் எ - று.

இலங்கிழாய் என்ற அதனுல் வருத்தமில்லாதவளே என்று விளித்தாள் என்பது கொள்ளப்படும்.

பரிப்:— தன் அணிகலங்கள் விலஙகாமைப்பிருப்பச் சிறிய உள்ளிப் பெரிய மறக்கவேண்டும் என்று வற்புறுத்திய தோழிக்கு வன்புறை எதிரழிந்து கூறியது.

பரிதி:— என்றெழிலை-என் நாயகரை ஒருகாலத்திலும் மறவேன்; மறந்தால் *வளைகழன்று அழகும் குன்றும் எ - று.

---

* 'என் புயத்தில் ஆபரணம்விட்டு நீங்கியதற்கு ஒக்கும்' - பழைய.

காளிங்:— இனி மற்று இககருத்து எப்பொழுதும் கொண்டு நீ இரங்குகின்றது என்னே ? என்று இடித்து உரைககின்றனையாயின், மற்று, அப்பொழுதே என் மென்தோளிடத்து அணிந்த அணிகலம் ஆகிய வளையும், கணவனது உயிர் வாழ்ககைய ஆதலால் இவை இன்றியமையா என்பதனுல இலங்கிழையாயின் ! மறப்பின் என் மென்தோள் கலம் கழியும காரிகை நீத்து என்று கைவளை ஒன்றுமே காட்டினள் என்று அறிக.

1263. *உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்ருர்
வரனசைஇ இன்னும் உளேன். (௩)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— உரன் நசைஇ உள்ளம் துணையாகச் சென்ருர் - இன்ப நுகர்தலை நச்சாது வேறலை நச்சி நாம் துணையாதலை இகழ்ந்து தம் ஊக்கந் துணையாகப் போயினர்; வரல் நசைஇ இன்னும் உளேன் - அவற்றை இகழ்ந்து ஈண்டு வருதலை நச்சுதலான், யான் இவ்வெல்லையினும் உளேன் ஆயினேன்.

உரன் என்பது ஆகுபெயர். அந்நசையின் உயிர்வாழா நின்றேன். அஃது இல்லையாயின் இறந்துபடுவல் என்பதாம்.

மணக்:— இன்பத்தை நச்சாது வலிமையையே நச்சிப் பேசுகின்ற மனமே துணையாகச் சென்றவர் வருவாரென்கின்ற ஆசைப் பாட்டினல் இன்னும் உளேன் ஆனேன் எ - று.

இஃது அவர் வாரார் என்று கூறியது.

பரிதி:— நாயகர் தனியே போகாமல் என் நெஞ்சைத் துணைக் கூட்டிப்போனவர் என் அருமையும் பெருமையும் உள்ள நெஞ்சைத் தனியேவிடார் தாமும் கூடவருவார் எ - று.

காளிங்:— அருங்கலை கற்றவர் அருகு சென்று பெருங்கலை ஞானம் பெறுதல் வேண்டித் தம் பணபு அறிவு தான் ஒரு பருவம் செய்து எழுந்த உள்ளமே அதற்கு உறுதுணையாகக் கொண்டு ஓதற்குப் போனவரது வரவைநச்சி இதுபற்றுககோடாக இன்னும் இறந்துபடாது

* 186-ம் பக்கம் அடிக்குறிப்பைப் பார்க்க.

உளேன் என் நெஞ்சமே : எனவே இதனாலும் இவளது தூதுவிடுதல் பயன் என்பது பொருள் எ - று.

உரன் என்பது அறிவு.

இவ்வாறு ஓதப்பிரிந்த தலைமகனை நினைந்து பின்னும் இவள் புலம்புகின்றமை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

**மேற்கோள்பகுதி :**

சங்கர:— அளபெழுந்து அலகுபெற்றும் பெறாதும் சொல்லிசை நிறைப்பவந்த உயிரளபெடைக்கு மேற்கோள். (நன். 91.)

**ஒப்புமைப்பகுதி :**

"பொருநாண் மதனை அழித்தே இமையப் பொருப்பின்மனத்
திருநா ளதில்தரும வெங்கை புரேசர் செழும்சிலம்பில்
கருநாண் மலர்விழி மாதேஎன் றுயினும காதலரீங்(கு)
ஒருநாள் வருவரென் றேஙின்ற தாவி உடலகத்தே!"
—திருவெங் - கோவை. 275

"ஊழி வெங்கனல் தூற்றனள் ஒத்துமவ்
வேழை யாவி இறந்திலள் என்பரால்
ஆழி யானை அடைந்தனள் பின்னையும்
வாழ லாம்எனும் ஆசை மருந்தினே." —கம்ப. சூர்ப்பண. 85.

**முதுமொழிவெண்பாக்கள் :**

"சந்திரசே னன்வரவு நோக்கியுயிர் தாங்கினளால்
சுந்தரசி மந்தனிதான் சோமேசா - முந்தும்." —சோமேசர், 127

1264. கூடிய *காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் நெஞ்சு. (௪)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— பிரிந்தார் கூடிய காமம் வரவு உள்ளி - நீங்கிய காமத்தராய் நம்மைப் பிரிந்துபோயவர் மேற்கூடிய காமத்துடனே நம்கண்

* 'காலம்' காளிங் - பாடம்.

வருதலை நினைந்து; என் நெஞ்சு கோடுகொடு ஏறும் - என் நெஞ்சு வருத்தம் ஒழிந்து மேன்மேல் பணைத்து எழாநின்றது.

வினைவயிற்பிரிவுழிக் காமஇன்ப நோக்காமையும் அதுமுடிந்துழி அதுவே நோக்கலும் தலைமகற்கு இயல்பாகலின், கூடிய காமமொடு என்றாள். ஒடுவுருபு விகாரத்தால் தொக்கது. கோடுகொண்டேறலாகிய மரத்ததுதொழில் நெஞ்சின்மேல் ஏற்றப்பட்டது. கொண்டு என்பது குறைந்துநின்றது. அஃது உள்ளிற்றிலேனாயின் இறந்துபடுவல் என்பதாம்.

மணக்:— கூடுதற்கு அரிய காமத்தைக் கூடப் பெற்றுப் பிரிந்தவர் வருவாராக நினைந்தே, என்னெஞ்சம் மரத்தின்மேலேறிப் பாரா நின்றது எ - று.

உயர்ந்த மரத்தின்மேல் ஏறினால் சேய்த்தாக வருவாரைக் காணலாமென்று நினைத்து அதனை ஏறிற்றாகக் கூறினாள்.

பரிதி:— கூடிப்பிரிந்த நாயகர் வரும் வழிபார்த்து, ஆசை என்னும் மலையில் என் நெஞ்சு ஏறிப்பார்க்கும் எ - று.

காளிங்:— தோழீ! நம்மைப் பிரிந்த காதலர் பண்டு எம்மோடு கலந்த காலையினும் இன்னும் இங்ஙனம் வரும் என்று கொண்ட அவ்வரவை நினைத்து அது பற்றாக கோடாக முன்னமபோலுக்குச் செல்லாது பணைத்து ஏறுகின்றது காண் நெஞ்சமானது; எனவே இதுவும் அவர் வருதற்கு ஒரு குறியாகும் என்று இன்புற்றாள் எ - று.

**முதுமொழிவெண்பாக்கள்:**

"வஞ்சி யுருக்குமணி மாமால் வருவழிபார்த்
தெஞ்சு முளமபோலும் இரங்கேசா - பஞ்சணையில்." —இரங். 127.

1265. காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்குமென் மென்தோள் பசப்பு. (ரு)

தலைமகன்வரவுகூறி ஆற்றுயாய்ப் பசக்கற்பாலையல்லை
என்ற தோழிக்குச் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— கண் ஆரக் கொண்கனை காண்க - என் கண்கள் ஆரும்வகை என் கொண்கனை யான் காண்பேனாக; கண்டபின் என்

மென்தோள் பசப்பு நீங்கும் - அங்ஙனம் கண்டபின் என் மெல்லிய தோளின்கண் பசப்புத் தானே நீங்கும்.

காண்க என்பது ஈண்டு வேண்டிக்கோடற்பொருட்டு. அது வேண்டும் என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. கேட்டதுணையான் நீங்காது என்பதாம்.

மணக்:— என் கண்கள் கொண்கனை நிறையக் காண்பனவாக; அவனைக்கண்ட பின்பு எனது மெல்லிய தோளில் உண்டான பசலை நீங்கும் எ - று.

இது காண்டல் வேட்கையால் கூறியது.

பரிதி:— பலநாளுற்றபசலை நாயகனைக்கண்டால் நீங்கும் எ - று.

காளிங்:— நெஞ்சமே யான் அங்ஙனம் நோக்குகின்ற இடத்து மற்று எம் கண்ணார யாம் அவரைக் காணப்பெறுவோமாக. மற்று அவரைக் கண்டபொழுதே எம் தோள் பசப்பு அனைத்தும் விட்டுநீங்கும் எ - று.

மன் என்பது அசைச்சொல்.

முதுமொழிவெண்பாக்கள் :

" இறைவருள் சேர்பரவை யேந்தல் பிரிவாற்றிப்
பகரும் இகுளைக்குப் பகரும் - எதிர்நின்று." —முதுமொழி. 180.

1266. வருகமன் கொண்கன் ஒருநாள் பருகுவன்
பைதனோ யெல்லாம் கெட. (சு)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— கொண்கன் ஒருநாள் வருக - இத்துணைநாளும் வாராக் கொண்கன் ஒருநாள் என்கண் வருவானாக; பைதல்நோயெல்லாம் கெடப் பருகுவன் - வந்தால் பையுளைச் செய்கின்ற இந்நோயெல்லாங்கெட அவ் அமிழ்தத்தை வாயிலகள் ஐந்தானும் பருகக்கடவேன்.

வருக என்பதற்கும் மன் என்பதற்கும் மேலுரைத்தவாறே கொள்க. அககுறிப்பு அவ்வொருநாளைகருள்ளே இனி வரககடவ நோய்கஞம் கெடுப்பல் என்பதாம்.

மணக்:— கொண்கன் ஒருநாள் வருவானாக வேண்டும்; வந்தானாகில், என் பசலைநோயெல்லாங் கெடப் பருகுவேன் எ - று.

இது வரவு வேட்கையால் கூறியது.

பரிதி:— ஒருநாள் என் நாயகர்வரில் பலநாளுற்ற துயரம் கெடக் கூடுவேன் எ - று.

காளிங்:— தோழீ! மற்று அவர் வருக: வந்தால் பருகுவல் என்றது என்னையோ எனில், இங்ஙனம் இற்றைநாள் அன்றேனும் மற்று ஒருநாள் ஆயினும் கடிதின் வருவார்; அவ்வாறு வந்த பொழுதே யான் நெஞ்சு இரககத்தோடு உழந்த, தனித்துயர் எல்லாம் கெடுமாறு மெய் வாய் கண் மூககுச் செவி என்கின்ற ஐம்புலன்களும், அவரிடத்து அவாவிச் செல்கின்ற வேட்கை மிகுதி நோககிப் பருகிக கொள்வேன் எ - று.

மேற்கோள்பகுதி:

சுவாமி:— நிலைமொழியும் வருமொழியும் திரியாது தமிழ்மொழி விதியால் தம்முள் நிலைமாறுதலுக்கு மேற்கோள். (இ. கொ. 114.)

1267. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின். (எ)

இதுவும் அது.

உரைப்பகுதி:

பரிமே:— கண் அன்ன கேளிர் வரின் - கண்போல்சிறந்த கேளிர் வருவராயின், புலப்பேன்கொல் - அவர்வரவு நீட்டித்தமை நோககி யான் புலககககடவேனோ, புல்லுவேன்கொல் - அன்றி என் ஆற்றாமைநோக்கிப் புல்லக்கடவேனோ, கலப்பேன்கொல் - அவ்விரண்டும் வேண்டுதலான் அவ்விருசெயல்களையும் விரவக்கடவேனோ, யாதுசெய்யக்கடவேன்!

புலவியும் புல்லலும் ஓர்பொழுதின்கண் விரவாமையின் கலப்பேன்கொல் என்றாள். மூன்றனையுஞ் செய்தல் கருத்தாகலின், விதுப்பாயிற்று. இனிக் கலப்பேன்கொல் என்பதற்கு ஒரு புதுமை செய்யாது பிரியாதநாட்போலக் கலந்தொழுகுவேனோ என்று உரைப்பாரும் உளர்.

பரிப்:— என் கண்போன்ற காதலர் வருவர் ஆயின் நம்மை நினையாமையை நினைத்துப் புலந்து நிற்பேனோ? நெட்டாறு நீந்தி வருகின்றார் ஆதலின எதிர்சென்று புலவிக கொள்வேனோ? இவை இரண்டும செய்யாதே வேட்கை தீரக் கலப்பேனோ? இவை மூன்றினும் யாது செய்வேன்? எ - று.

இது கண்டாற் செய்வன இவை ஆதலின் இவை மூன்றும் செய்ய வேண்டாநின்றது என்று ஆராமை கூறியது.

பரிதி:— நாயகர் வந்தால் ஊடுவோமோ? தழுவுவோமோ? கலவி நலம் கட்டுரைப்போமோ? என் செய்வோம் எ - று.

காளிங்:— தோழீ! நம் கண் அன்ன கேளிர் ஆகிய எம் காதலர் மடித்து வருவராயின் அப்பொழுது சிறிது புலந்து கொள்வேனோ? அல்லது புல்லிக்கொள்வேனோ? இரண்டும் ஒரு நாளே கலந்து கொள் வேனோ? யாது செய்வேன் இககுறி மெய்க்குறி யாயின் நினது நினைவினைச் சொல்வாயாக எ - று

1268. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து. (அ)

வேந்தற்குற்றுழிப்பிரிந்த தலைமகன் வினைமுடிவு நீட்டித்துழித்
தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— வேந்தன் வினை கலந்து வென்றீக - வேந்தன் வினை செய்தலைப்புரிந்து வெல்வானாக; மனைகலந்து மாலை விருந்து அயர்கம் - யாமும் மனைவியைச் சென்றுகூடி ஆண்டை மாலைப்பொழுதிற்கு விருந்து அயர்வேமாக.

மனை என்பது ஈண்டு ஆகுபெயர், [2]"மங்கலம் என்ப மனைமாட்சி" என்புழிப்போல. வினைசெய்தற்கண் வந்த மாலைப்பொழுதிற்கு எதிர் கோடல் அலங்கரித்தல் முதலிய இன்மையின், மனைகலந்து மாலைக்கு விருந்தயர்கம் என்றான். நான்கனுருபு விகாரத்தால் தொக்கது. இது வினைமுடியாமுன் கூறலான் விதுப்பாயிற்று. பிறரெல்லாம் இதனைத்

[1]'கூடுவோமோ' —பழைய. [2]குறள், 60.

தலைமகள் கூற்றாக்கி உரைத்தார். தலைமகனைக்கூறாது வேந்தன் வெல்க என்றும், மனைகலந்து என்றும், மாலைப்பொழுதின்கண் விருந்தமர்கம் என்றும் வந்த அவ்வுரைதானே அது கூடாமைக்குக் கரியாயிற்று.

மணக்:— நம் வேந்தன் போரின்கண்ணே பொருந்தி வெல்வானாக; யாமும் மனையிலே பொருந்தி இம்மாலைப்பொழுதிலே நம் காதலர்க்கு விருந்து செய்வேமாக எ - று.

வருதற்கு இடையீடு அவன் வினைமுடியாமை என்று நினைத்து அவனை வெல்க என்றாள். மனை - அட்டில்.

பரிப்:— வந்தால் விருந்து இடுமாறு நினைந்து கூறியது.

பரிதி:— வினைவென்று வரும் நாயகனது மால் என்னும் பசிக்கு என் ஆகம் விருந்திடுவேன் எ - று.

காளிங்:— காலைப் பகையோடு எதிர்மயங்கிப் பொருது வெல்வோனாக நம வேந்தனவன்; என்னெனில் யாமும் இற்றை மாலை எல்லைக்கு இம்மனைககண் விருந்து இயற்றுவம் ஆக அவரோடு வருஉம் விருந்தினர் அனைவர்கரும் எ - று.

ஒப்புமைப்பகுதி :

"மாலை நனிவிருந் தயர்மார்
தேர்வரும் என்னும் உரைவா ராதே." —குறுந். 155.

"சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் தளவம் தகைந்தன - சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கண் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு." —கார். 36.

1269. ஒருநாள் எழுநாள்போல் செல்லுஞ்சேண் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு. (௯)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— சேண் சென்றார் வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு - சேணிடைச்சென்ற தம காதலர் மீண்டுவரக்குறித்த நாளை உட்கொண்டு

அது வருந்துணையும் உயிர்தாங்கி வருந்தும் மகளிர்க்கு, ஒருநாள் எழுநாள் போல் செல்லும் - ஒருநாள் பலநாள்போல நெடிதாகக் காட்டும்.

ஏழ் என்பது அதற்குமேலாய மிக்கபன்மை குறித்து நின்றது, "ஒருவர்கூறை எழுவர் உடுத்து" என்றாற்போல. தலைமகள் வருத்தம் பிறர்மேலிட்டுக் கூறியவாறு. இதனான் இதுவும தலைமகள் கூற்றாகாமை அறிக. இருநாள் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

மணக்:— நெடுநெறிக்கட்சென்றார் வருநாளைக்குறித்து இரங்கு மவர்களுக்கு ஒருநாளைப்பொழுதுதானே ஏழுநாளைப்போலச் செல்லா நின்றது எ - று.

பரிப்:— இது தலைமகன் குறித்த நாள் வருவதன் முன்னம் வருந்துகின்றது என்னை என்ற தோழிக்கு அதுதானும் கடிது வருகின்றது இல்லை என்று தலைமகள் சொல்லியது.

பரிதி.— ஒருநாள் எழுநாள் போல இருக்கும் விருப்பமுள்ள நாயகர் பிரிந்தபோது ஏங்கும் நாயகிக்கு எ - று.

காளிங்:— கேளாய் தோழீ! நம்மைப் பிரிந்து சேணிடைச் சென்ற நம் காதலர், வருநாள் வருதற்கு நெஞ்சினுள் வைத்து வைத்து ஏங்கி இருப்பவர்க்கு ஒருநாள் எழுநாள் போலத் தோன்றும்; எனவே ஒரு நாள் தானே அநேக நாளின் காலம் நீட்டம் கொண்டு கடுந்துயர் உறுவார் எ - று.

## முதுமொழிவெண்பாக்கள்:

"காதலனெந் நாள்வருங்கொல் என்றுதத்தை கவ்வைமிக்காள்
மூதுணர்வால் தேர்ந்தும் முருகேசா - தீதின்." —முருகேசர். 127.

"மன்னுமுன்கேள் என்னவுஞ்சி மந்தனிதே றாமனுளம்
சின்னமுறல் என்னே சிவசிவா - உன்னின்." —சிவசிவ. 127.

1270. பெறினென்னும் பெற்றக்கால் என்னும் உறினென்னும்
உள்ளம் உடைந்துக்கக் கால். (௧0)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— உள்ளம் உடைந்து உக்கக்கால் - காதலி நம்பிரிவினை ஆற்றாது உள்ளம் உடைந்துபட்டவழி; பெறின் என் - நம்மைப்

பெறக்கடவளானல் என்; பெற்றககால் என் - அது அன்றியே பெற்ருல் என்; உறின் என் - அது அன்றியே மெய்யுறக் கலந்தாற்ருன் என், இவை ஒன்ருனும பயன் இல்லை.

இம்மூன்றும் உடம்பொடுபுணர்த்திக் கூறப்பட்டன, அதன் மேலும மூன்னை வழககுண்மையின். அதற்கு முன்னே யான் செல்ல வேண்டும் என்பது கருத்தாகலின், விதுப்பாயிற்று. இது தலைமகள் கூற்ருயவழி இரங்கலாவதலலது விதுப்பாகாமை அறிக.

மணக்:— எனது உள்ளம் உடைந்து போயின், பின்பு அவரைப் பெறுவேமென்று இருந்ததனுற் பயன் எனனுண்டாம்? முன்பே பெற்றே மானேம், அதனல் பயன் என்னுண்டாமி? இப்பொழுது உற்றேமாயின் அதனுல் பயன் என்னுண்டாமி? எ - று.

இது வருவாரென்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— நாயகர் வந்தால் என்ன? காதலின்பம் விளைந்தால் என்ன பயன்? பக்குவம் தப்பி உள்ளம் உடைந்து உக்கிப்போன தினமே எ - று.

காளிங்:— தோழீ! காலை பகல் மாலை என்னும் மூக்காலங் களிலும் யாம அவரை எய்தப் பெறுவோமாயினும் என்? மற்றும் பெற்ரேம் ஆயினும என் ஆம்?.........மற்று அதன் முன்னமே உள்ள மானது உடைந்து உக்க காலத்து எ - று. உறிலென்பது இன்புறுதல் என்றது.

முதுமொழிவெண்பாக்கள் :

"எங்களுரை கேளாய் இரங்காய் இனிநாளைச்
செங்கை முகிலே தினகரா - மங்கை." —தினகர. 131.

குறிப்பு :

பெறின், பெற்றக்கால், உறின் என்பன மூன்றும் எதிர்கால வினைஎச்சங்கள். அடைந்தால் என்னும் பொருளனவே. பரிமேலழகர் இமமூன்றிற்கும் வேற்றுமை உண்மையை விளக்க உளங்கொண்டு, பெறின் என்பதற்குப் பெறக் கடவளானல் எனத் தலைவியின்மேலதாயும, பெற்றக்கால் என்பதற்கு பெற்ருல் எனவும், உறின் என்பதற்கு மெய்யுற்ருல் எனவும், தலைவன் வினையாகவும பொருள்கண்டார. விசேடவுரையில் இமமூன்றும் உடமபொடு புணர்த்துக் கூறப்பட்டன என்ருர். உடம்பொடு புணர்த்துக் கூறுதல் உத்தியுள் ஒன்ருக உரையிறகோடலால் கொள்ளப்பெற்ற ஒன்று. இதன்

இலக்கணமாவது கூறும் இலக்கியத்திலேயே இலக்கணமும் பெறவைத்தல். அஃதாவது எழுத்ததிகாரத்து எழுத்துக்கட்குப் பிறப்பு, வன்மை மென்மை முதலிய கூறவே உரு என்பது ஒன்று உண்டு என்னும் இலக்கணமும் கொள்ளவைத்தாற்போல்வது. கோ. வடிவேலுச் செட்டியார் அவர்கள் 'கூறவேண்டிய அருத்தத்தை வெளிப்படையாகக் கூறாது தான்கூறுவதன் குறிப்பினால் விளங்கச்செய்வது இது. பெறின் முதலிய மூன்றும் உடன் கூறியவதனால் தலைவன் பிரிந்தவழி தலைவி இறந்துபடும் வழக்கு உண்மையை உணர்த்தியதாம் என்பர். சடகோபராமாநுஜாசாரியர் குறிப்பில், உள்ளம் உக்கவிடத்து இருப்பது உடம்பு ஒன்றுமேயாதலால் அதனோடு சேர்த்துப் பெறின் முதலிய மூன்றனையும் கூறியதாக பாஷாகவிசேகர ரா. இராகவய்யங்கார் சுவாமிகள் கூறியதாகக் குறிப்பித்தனர் இம்மூன்று கருத்துக்களுள் ரா. ராகவய்யங்கார் அவர்கள் கருத்துத் தெளிவாக இருப்பது காண்க. பரிதியார் மனம் உடைந்து சிதறியவிடத்து மனங்கூடா நாயகரைப் பெற்றால் என்ன பெறாவிடில் என்ன என்று உரைகாண்பர். இவ்வுரைக்கு இவர்கொண்ட பாடம் பெற்றக்காலென்னும் பெறாவிடிலென்னும் என்றிருக்கும் போலும். இந்தப்பாடம் இருப்பின் பெறின், பெற்றக்கால், உறின் என்ற ஒரு பொருள் தரும் சொல் மூன்றிறகும் வேற்றுமை தோன்றப் பொருள் கற்பிக்கும் சிரமமும் குறையலாம். ரா. ரா. அவர்கள் சொல்லிய குறிப்பிலும், அதன்மேலும் வழக்கு உண்மையின் என்பது விளக்கமில்லாமை சிந்தித்தற்கு உரியது. இங்ஙனமன்றி "தலைவிக்கு மனம் உடைந்து சிதறியவிடத்து தலைவனை தன்னை அவள்பெற்றாலும், உற்றாலும் என்னபயன் என்றும், அடையலாம் என்ற முயற்சி சிதறிக்கெட்டபிறகு பயன் என்ன என்றும், உயிர்கெட்டுச் சிதறி வெளிப்பட்டபிறகு பயன் என்ன என்றும், உரைகாண்டலும் உண்டு. உள்ளம் உயிராதலை "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்" என்ற சிவஞானபோதச் சூத்திரம் கொண்டும் துணியலாம்.

—தொகுப்பாசிரியர்.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— வாளற்றுப், இலங்கிழாய், உரனசை, கூடிய, காண்கமன் வருகமன், புலப்பேன், வினைகலந்து, ஒருநாள், பெறினென்னும்.

மணக்:— வருகமன், வினைகலந்து, காண்கமன், வாளற்றுப், ஒருநாள், கூடிய, உரனசை, புலப்பேன், பெறினென்னும், இலங்கிழாய்.

பரிதி:— வருகமன், காண்கமன், வினைகலந்து, புலப்பேன், இலங்கிழாய், கூடிய, உரனசை, ஒருநாள், வாளற்றுப், பெறினென்னும்.

காளிங்:— வினைகலந்து, வருகமன், ஒருநாள், வாளற்றுப், பெறினென்னும், விடாது, காண்கமன், இலங்கிழாய், கூடிய, புலப்பேன்.

# 128. குறிப்பறிவுறுத்தல்.

## தொகுப்புரை :

[ நீ மறைத்தாலும் நிற்காமல் உன் கண்கள் உணர்த்தும் உண்மை ஒன்று உண்டு. கண்ணிறைந்த அழகையும், பசுமூங்கிலை ஒத்ததோளையும், உடைய தலைவிக்கு பெண்மை மிகப்பெரிது. பளிங்குமணிக்குள் விளங்கும நூலிழைபோல, கலப்பால் இவள் பெற்ற அழகில் ஒரு குறிப்பு விளங்குகிறது. அரும்பிற்குள் மணம் இருப்பதுபோல இவளுடைய புன்முறுவலிற பொருந்துவது ஒன்றுண்டு செறிந்த வளையலை அணிந்த தலைவி என்னிடம் இல்லாதபிரிவை நினைத்துத் தானும் உடன்போக்குக் குறிப்பைக் கள்ளத்தால் மறைத்துப்போனகுறிப்பு எனக்குத் துயர்போக்கும் மருந்தாயிற்று. தலைவன் பிரிவுத்துன்பத்தை மிகத்தேற்றி, நாமும்விரும்பக் கலத்தல் பின்னர்ப் பிரிவுண்மையை விளக்குவதால் அவரது அன்பின்மையே அறிவிக்கின்றது. தலைவன பிரிவினை நமக்கு முன்னமே நம் வளையலகள் உணர்ந்தன. நேற்றுத்தான் சென்றார் என் தலைவர், என் மேனி பசந்து ஏழுநாளாயின. தலைவி வளையலையும், தோளையும், தாளையும் நோக்கினன்; இதுதான் அவன் செய்த குறிப்பு. காதலை வாயால் சொல்லாமல் தம்மடி நோக்கிக் குறையிரக்கும் குறிபபு பெண்மையிற் சிறந்த பெரும் பெண்மை என்று சொல்வர் பெரியோர்.]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது தலைமகன், தலைமகள், தோழி என்றிவர் ஒருவர் குறிப்பினை ஒருவர்க்கு அறிவுறுத்தல். இது, பிரிந்துபோய தலைமகன் வந்துகூடியவழி நிகழ்வதாகலின், அவர்வயின்விதும்பலின் பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *குறிப்பறிவுறுத்தலாவது குறிப்பினை அறிவுறுத்தல்.*

பரிப்:— *மேல் தலைமகள் குறிப்புத் தலைமகன் அறிந்தான் என்றது அல்லது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கின தலைமகள் குறிப்புத் தோழி அறிதலும், இரந்துபின்னின்ற தலைமகள் தோழி குறிப்பு அறிதலும், குறை நயப்பித்தவழித் தலைமகன் குறிப்புத் தோழி அறிதலும், கொதுமலர் வரைய வந்துழி வேறுபட்ட தலைமகள் குறிப்புச் செவிலி அறிதலும், பிரிதல் உற்ற தலைமகன் குறிப்புத் தலைமகள் அறிதலும், பிரிவு உணர்த்தச் சென்ற தோழி குறிப்புத் தலைமகன் அறிதலும், அவ்வழித் தலைமகள் குறிப்புத் தோழி அறிதலும் இவை எல்லாம இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்பு இத்துணையும் பிரிந்துழி நிகழ்பவை கூறினார் ஆதலானும் இனிப் புணர்ச்சிவிதுமபல் கூறுகின்றார் ஆதலானும் ஈண்டுக் கூறப்பட்டது.*

காளிங்:— இனி இவ்வாறு ஓதற்குப்பிரிதல் முதலாகிய பலவகைப் பிரிவுகளையும் உணர்த்துவான் எடுத்துக் கொண்டார், அவற்றுள் இருவர் உள்ளத்துக குறித்தது ஒன்று தெரித்து நோக்க மெய்க்குறியான் விளங்கும் அன்றே; அதனால மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

1271. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் *உண்கண்
உரைக்கல் உறுவதொன் றுண்டு. (க)

பிரிந்துகூடிய தலைமகள் வேட்கைமிகவினால புதுவது பன்னும் பாராட்டத் தலைமகள் இது ஒன்றுடைத்து என அஞ்சியவழி அதனை அவள் குறிப்பானறிந்து அவன் அவட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— கரப்பினும் - நீ சொல்லாது மறைத்தாயாயினும்; ஒல்லா கையிகந்து - அதற்கு உடம்படாதே நின்னைக் கைகடந்து; நின் உண் கண் உரைக்கலுறுவது ஒன்று உண்டு - நின் உண்கண்களே எமக்குச் சொல்லலுறுவதொரு காரியம் உண்டாயிராநின்றது, இனி அதனை நீயே தெளியச்சொல்வாயாக.

கரத்தல் - நாணான் அடக்குதல். தன்கண் பிரிதற்குறிப்புளதாகக்கருதி வேறுபட்டாளது வேறுபாடு குறிப்பான் அறிந்து அவட்குத் தன்பிரியாமைக்குறிப்பு அறிவுறுத்தவாறு.

பரிப்:— நீ மறைக்கவும் நின்னைக் கைகடந்து மறைத்தற்கு இசையாவாய் நின் கண்கள் சொல்லுவது ஓர் அருள் உண்டு எ - று.

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகளை இவ்வேறுபாடு எற்றினன் ஆயிற்று என்று வினவிய தோழிக்குச் சுனை ஆடினேன் என்று தலைமகள் மறைத்த இடத்து அவள் நாணம் நீங்குதல்பொருட்டுப் புணர்ச்சி உண்மை அறிந்தமை குறிப்பினால் தோழி சொல்லியது. இவ்வாறு ஒருபுறம் தோன்றச் சொல்லாககால் நாணத்தாலே இறந்துபடும்.

பரிதி:— ஒளிககினும் ஒளிககப்படாது; விரகமகிழ்ச்சி கண் பார்வையில் காட்டும எ - று.

* 'ஒண்கண்' காளிங் - பாடம்.

காளிங்:— கேளாய்! நின் நெஞ்சிற் குறித்தது நீ எம்மைக் கரப்பினும் தாம் எமக்கு நல்ல ஆகலான் நின் நிலைமையைக் கடந்து மற்று அதனைக் கரத்தல் ஒல்லாவாய் நினது ஒண்கண்ணுனவை எனக்குச் சொல்லல் உறுவது ஒரு நீர்மை உண்டு. எனவே இங்ஙனம் இவள் தலைவற்குக் கண்ணினுல் தன்குறிப்பு அறிவுறுத்தச் செலவு அழுங்கியமை பொருள் எ - று.

## மேற்கோள்பகுதி:

காரி:— நின்னிற்பிரியேன் எனப் பிரியாத தன் குறிப்பினைத் தலைமகன் தலைமகட்கு அறிவுறுத்தலுக்கு மேற்கோள் காட்டுவர். (மாற - 101.)

## ஒப்புமைப்பகுதி:

" இன்றிவ்வூர் அலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலின்
நின்றதன் எவ்வநோய் என்னையும் மறைத்தாள்மன்
வென்றவேல் நுதியேய்க்கும விறல்நலன் இழநதினி
நின்றுநீர் உகக்கலுழும் நெடுமபெருங்கண் அல்லாக்கால்."
—கலித். 124 : 13-16.

1272. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோள் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது. (உ)

நாணுல் அவள் அதுசொல்லாளாயவழி அவன் தோழிக்குச் சொல்லியது.

## உரைப்பகுதி:

பரிமே:— கண் நிறைந்த காரிகைக்காம்புஏர் தோள்பேதைக்கு - என் கண் நிறைந்த அழகினையும் வேயை ஒத்த தோளினையும் உடைய நின் பேதைக்கு; பெண் நிறைந்த நீர்மை பெரிது - பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை அவ்வளவன்றி மிகுந்தது.

இலதாய பிரிவினைத் தன்கண் ஏற்றி அதற்கு அஞ்சுதலான், இவ்வாறு கூறினுன்.

மணக்:— காண்பார் கண்ணிறைந்த அழகினையும் காம்பை யொத்த தோளினையும் உடைய பேதைக்குப் பெண்மை நிறைந்த நீர்மை பெரிது எ-று.

பரிப்:— இஃது இவள் வேறுபாடு எற்றினன் ஆயிற்று என்று வினவிய செவிலிக்கு இவள் வடிவுக்குத் தக்க பெண்மை நிரப்பம் உடையவள் ஆனமையான் வந்தது போலும் என்று தலைமகள் குறிப்பைக் கூறியது.

பெண்மை நிரப்பம் கற்பு. பூத்தரு புணர்ச்சியானும் புனல் தருபுணர்ச்சியானும் ஒன்றைச் சொல்லுவதாகக் குறித்துக் கூறினள். இத்துணையும் களவு.

பரிதி:— *என் கண்நிறைந்து அடங்காத பேரெழில் பெற்ற பசுமூங்கில் ஒத்த தோளையுடைய பேதைக்குப் பெண்ணுக்குள்ள பக்குவம் பெரிது எ-று.

காளிங்:— பசும்பணை யொத்த பெருந்தோள் பேதையாட்குப் பண்டைநிறக் கவின் அன்றி இன்று தன்கண் எங்கும் புகுந்து நிறைந்த நிற அழகானது தனக்கு இயல்பாகிய நாணும் குடிகொண்ட தன்மை மிகப் பெரிதாய் இருந்தது காண். எனவே தன் உள்ளத்துக் குறிப்பு எதிர்நின்றுரைத்தலைப்பெறாது குறிப்பிற்கண்ட தலைமகன் செலவு அழுங்கினன் எ-று.

கண்ணிறைந்த காரிகை என்பது பண்டை நலன் ஒழியத் தன்னிடம் எங்கும் புகுந்து நிறைந்து நிற்கின்ற புத்தழகு என்பது.

மேற்கோள்பகுதி :

இளம்:— 'அளவுமிகத் தோன்றினும்': பெதும்பைப் பருவத்த ளாகிய தலைவி புணர்ச்சியால் கதிர்த்து வீங்குகின்ற முலையும் புதிதுற்ற கவினும கண்டவிடத்துச் செவிலி தோழியை வினவும் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 113.)

நச்:— ஷை (தொல். பொருள். 115.)

---

*'ஆயிரம் கண்ணிறைந்த அழகுடையளாய மூங்கில்போன்ற தோளுடைய பேதைக்குப் பெண்மை பெரிது.' — பழைய.

1273. *மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு. (௩)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— மணியில் திகழ்தரும் நூல்போல் - கோக்கப்பட்ட பளிக்குமணியகத்துக் கிடந்து புறத்துப் புலனும் நூலபோல; மடந்தை அணியில திகழ்வது ஒன்று உண்டு - இம் மடந்தையது அணியகத்துக் கிடந்து புறத்துப் புலனுகின்றதொரு குறிப்பு உண்டு.

அணி - புணர்ச்சியானுய அழகு. அதனகத்துக் கிடத்தலாவது அதனோடு உடனிகழ்தற்பாலதன்றிவைத்து உடனிகழ்தல். அதனை யான் அறிகின்றிலேன், நீ அறிந்து கூடல்வேண்டும் என்பது கருத்து.

மணக்:— கோவைப்பட்ட நீலமணியின்கண்ணே தோற்று கின்ற நூல் போல, இம்மடந்தை அழகினுள்ளே இவள் மறைக்கவும் தோற்றுகின்றதொரு துன்பம் உண்டு எ - று.

அழகு - புணர்ச்சியால் வந்த அழகுபோலும் என்னும் குறிப்பு.

பரிப்:— அழகு - புணர்ச்சியால்வந்த அழகுபோலும் குறிப்பு ஒன்று உண்டு என்பது, அதனுள் தோன்றுகின்றதனுல் வந்தது ஒன்றை யுற்ற குறிப்பு. நொதுமலர் வரைய வந்துழி வேறுபட்ட தலைமகள் குறிப்புக் கண்டு அதற்குக் காரணம் என்னை என்று தோழியைச் செவிலி வினவியது.

பரிதி:— முத்துக்குள்ளிருந்த நூல் மேல் காட்டுமாப்போல நாயகி மனநிலை காட்டும் எ - று.

காளிங்.— பளிங்கினுள் கிடந்தே புறத்தில் திகழ்தரும் நூல் போல இம்மடந்தையாளது வடிவு அழகினுள் கிடந்தே அவ்வழகின்மீதே வந்து தோன்றுவது ஒரு மயக்கம் உண்டு எ - று.

---

* 'மணியுள்' காளிங் - பாடம்.

மேற்கோள்பகுதி :

இளம்:— 'காமமேற்படுப்பினும்': தலைவிமாட்டுளதாகிய வேட்கை அளவிறப்பினும் செவிலி தோழியை வினவும் என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 113.)

நச்:— காமத்தால் நிகழ்ந்த பொலிவினைச் செவிலி கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 115.)

முதுமொழிவெண்பாக்கள்:

"இறைவர் துணைநீங்கி எழிற்பரவை யோடும்
உறையுநாட் பாங்கிக் குணர்த்தும் - செறியும்." —முதுமொழி. 181.

"தேர்த்திருநாள் பூசைத் திருப்பணிநீ கண்டபின்னைத்
தீர்த்தமுள்ள கோவைத் தினகரா - பார்த்தால்." —தினகர. 132.

1274. முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு. (௪)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— முகை மொக்குள் உள்ளது நாற்றம்போல் - முகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனாகாத நாற்றம்போல; பேதை நகை மொக்குள் உள்ளது ஒன்று உண்டு - நின்பேதை என்னுடு நகக்கருதும் நகையது முகிழ்ப்பின் உளதாய்ப் புறத்துப் புலனாகாததோர் குறிப்பு உண்டு.

முகிழ்ப்பு - முதிர்ச்சியால் புடைபடுதல்: நகை புணர்ச்சி இன்பத்தால் நிகழ்வது.

மணக்:— மொட்டின் முகிழ்ப்பின்கண் உளதாகிய நாற்றம் போல, பேதையுடைய நகைமுகிழ்ப்பின்கண்ணே உள்ளதோர் இன்பம் உண்டு எ - று.

இஃது இரந்துபின்னின்ற தலைமகனைத் தோழி நகைசெய்து சேட்படுத்தியபோது இவள் குறிப்பு நமக்கு இன்பம் பயக்கும் என்று அவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

பரிதி:— அரும்புக்கு நாற்றம் போலே நாயகி சிரிப்பிலே, அன்பு உண்டு அல்லது இல்லை என்று காட்டும் எ - று.

காளிங்:— நெஞ்சமே! முன் அரும்புகின்ற முகையானது பின் புடைபெயர் அங்ஙனம் மொக்குளித்து நின்ற மொக்குளின் அகத்து ஒரு நாற்றம் உள்ளதுபோல, இப்பேதையாளது நகைமொக்குள் அகத்துப் புறப்படாது பொதிந்திருப்பதோர் குறிப்பு உண்டு காண்: எனவே யான் தன்னைப் பெரிது அளித்தமை பிரிது ஒன்றிற்கு உரித்து என்று இங்ஙனம் குறித்தனள் போலும் எ - று.

மேற்கோள்பகுதி :

பேரா:— நகுநயமறைத்தல் என்னும் மெய்ப்பாட்டிற்கு மேற்கோள். (தொல். பொருள். 261.)

சொக்கப்:— வறிதுநகை தோற்றல் என்னும் துறை விளக்கத்தில் 'வறிதுநகைதோற்றல் என்னும் கிளவிப்பொருள் பொய்க்குமே எனின், அற்றன்று; 'முகை மொககுள் ....... உண்டு' என்பதனுன் நகை வெளித் தோன்ருது என்பது கூறியவாறு உணர்க' என்பர். (தஞ்சை. 15.

ஒப்புமைப்பகுதி :

"முள்துனை தோன்ருமை முறுவல்கொண் டடக்கித்தன்
கண்ணினும் முகத்தினும நகுபவள்." —கலித். 142 : 7-8.

முதுமொழிவெண்பாக்கள்:

"குன்றில் சுமதி குறிப்பால் தருமகுத்தன்
சென்றுமயல் கொண்டான் சிவசிவா - என்றும." —சிவசிவ. 128.

"செட்டிவள்ளி அம்மைச் சிறுமுறுவல் கண்டுளத்தின்
இட்டம அறிந்தான் இரங்கேசா - மட்டார்." —இரங். 128

1275. செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து. (ரு)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— செறி தொடி செய்து இறந்த கள்ளம - நெருங்கிய வளைகளை உடையாள என்கண் இல்லாதொன்றனை உட்கொண்டு அது காரணமாக என்னை மறைத்துப்போன குறிப்பு; உறு துயர் தீர்க்கும் மருந்து ஒன்று உடைத்து - என் மிக்க துயரைத் தீர்ககும மருந்தாவது ஒன்றனை உடைத்து.

உட்கொண்டது பிரிவு. கள்ளம் ஆகுபெயர். மறைத்தற்குறிப்புத் தானும் உடன் போககு உட்கொண்டது. உறுதுயர் நன்றுசெய்யத் தீங்கு விளைதலானும், அதுதான் தீர்திறம்பெறுமையானும் உளதாயது. மருந்து அப்பிரிவின்மை தோழியால் தெளிவித்தல். நீ யாது செய்தல்வேண்டும் என்பதாம்.

மணக்:— செறிந்த வளையினையுடையாள் செய்தகன்ற களவு, நீ உற்றதொருதுன்பத்தைத் தீர்ப்பதொருமருந்தாதலை உடைத்து எ - று.

தோழி மெலிதாகச் சொல்லிக குறைநயப்பித்தவழி, கேளாரைப் போலத் தலைமகள் அகன்ற செவ்வியுள் எதிர்ப்பட்ட தலைமகற்கு நின் குறை முடியும்; நீ இவ்விடைச் செல் என்று தோழிகூறியது.

பரிதி:— செறியப்பட்ட வளையுடையாள் செய்தகுறி [1]வளையின் ஒலிகாட்டி அடககியது வருவதற்கும இடமாககி ஆசை நோய்க்கு ஒரு மருந்தாயிற்று எ - று.

காளிங்:— நெஞ்சே! யான் அவள் தன்னைப் பெரிது அளிக் கவும் அவள் முன்கைச் செறிந்த வளையானது பின்பு செய்துபோன கள்ளம் யான் அறிந்தேன். பிரிவு அஞ்சி இவள் தன் உள்ளத்து நின்ற துயரத்தைத் தான் தணிககும் உபாயம ஒன்று உடைத்து: எனவே அவ்வளையானது இவள் தன் நெஞ்சிற் குறிப்பினை நமககு அறிவுறுத்திய அதனாலும் செலவு ஒழிவதே பொருள் எ - று.

1276. பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வ துடைத்து. (௬)

தலைமகன் குறிப்பறிந்த தலைமகள் அருளை அதுதெளிவிக்கச்சென்ற தோழிக்கு அறிவுறுத்தது.

**உரைப்பகுதி :**

பரிமே:— பெரிது ஆற்றிப் பெட்பக் கலத்தல் - காதலர் வந்து தம் பிரிவினுளைய துன்பத்தினை மிகவும் ஆற்றி நாம் மகிழும் வண்ணம்

---

[1] 'காதல் பெரிது என்று காட்டினபடியாலே அது காமநோய் தீர்க்கும் மருந்தாயிறறு' —பழைய.

[2] 'சூழ்வதொன் றுணடு' காளிங - பாடம்.

கலக்கின்ற கலவி; அரிது ஆற்றி அன்பின்மை சூழ்வது உடைத்து - இருந்தவாற்றான் மேலும் அத்துன்பத்தினை அரிதாக ஆற்றியிருந்து அவர் அன்பின்மையை நினையுந்தன்மை உடைத்து.

பிரிதற்குறிப்பினை செய்கின்றது ஆகலான், முடிவில் இன்னாதாகா நின்றது என்பதாம்.

மணக்:— ஊடினகாலத்து அதன் அளவன்றி மிகவுமாற்றிப் புணருங்காலத்து முன்புபோலாகாது மேன்மேலும் விரும்புமாறு புணர்தல் யான் அரிதாக ஆற்றியிருந்து தம் அன்பின்மையை எண்ணுவதொரு பிரிவுடைத்து எ - று.

இது பிரியலுற்ற தலைமகனது குறிப்பறிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

பரிதி:— பெரிதான துயரத்தை ஆற்றி மிகவும் களிப்புடன் கூடுதல் நாயகர் பிரியும் குறி என்று அறிக எ - று.

காளிங்:— தோழீ! மிகவும் என் ஊடலைத் தீர்த்து யான் விரும்ப இப்பொழுது புணர்ந்த புணர்ச்சியானது நாம் பின்பு அரிதாக ஆற்ற அன்பின்மையால் வரும பிரிவினைச் செய்வது ஒன்று உண்டு எ - று.

அன்பின்மை என்றது அவர் பிரிவினைக் குறித்தது என்றது.

முதுமொழிவெண்பாக்கள் :

"சங்கிலிபால் ஆரூரர் ஊழிகணந் தானாகத்
துங்கமிகும் அன்புவைத்தார் சோமேசா - பொங்கப்."
—சோமேசர். 128.

"தந்தைக் குணர்த்தித் தவன்குறிப்பைக் காநதிமதி
பூந்தியுடன் சென்றாள் முருகேசா - வந்தில்." —முருகேசர். 128.

1277. தண்ணம் துறைவன் *தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை. (எ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே.— தண்ணந்துறைவன் தணந்தமை - குளிர்ந்த துறையை உடையவன் நம்மை மெய்யால் கூடியிருந்தே மனத்தால் பிரிந்தமையை;

*'துறந்தமை' காளிங் - பாடம்.

நம்மினும் வளை முன்னம் உணர்ந்த - அவன் குறிப்பான், அதற்கு உரிய நம்மினும் இவ்வளைகள் முன்னே அறிந்தன.

கருத்து நிகழ்ந்ததாகலின் தணந்தமை என்றும், யான் தெளிய உணர்தற்கு முன்னே தோளகள் மெலிந்தன் என்பாள் அதனை வளைமேல் ஏற்றி அதுதன்னை உணர்வுடைத்தாகவும் கூறினள்.

மணக்:— குளிர்ந்த துறையையுடையவன் நம்மை நீங்கினமையை, நாம் அறிவதன் முன்னே வளைகள் அறிந்தன எ - று.

பரிப்:— தலைமகன் சொல்லாது பிரிந்துழி அதனை அறிந்த தோழி இதனை அறிவித்தால் இவள் ஆற்றுங்கொல்லோ ஆற்றாள் கொல்லோ எனறு உட்கொண்டு பிரிவுணர்த்தச் சென்ற குறிப்பு நோக்கி, இதனை இப்பொழுது சொலலுமாறு என்னை என்று பரியல் வேண்டா; யான் முன்பே அறிந்தேன் என்று தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

பரிதி:— குளிர்மையுடைய கடற்றுறைக்கு நாயகன் துறந்தமை நாம் அறிவதற்கு முன்னே நமமுனுக வளை அறிந்தது எ - று

காளிங்:— தோழீ! நம் தண்ணந் துறைவன் நம்மை இடையிட்டமை நம்மினும் முன்னமே தாம் அறிந்த நம கைக்கு அணி ஆகிய வளை; எனவே யாம் அவர் இடையீடு இனறு அறிந்தனம: இவை அவர் பெரிது அணிந்த அன்றே அறிநதனகாண: எனவே யான் அவர் குணம் அயிர்க்க, அன்று தொட்டு மெலிந்தன என் தோள் இணை என்பது பொருள் எ - று.

## மேற்கோள்பகுதி:

இளம்:— 'வண்ணம் திரிந்து புலம்புங்காலை, உணர்ந்ததுபோல உறுப்பினைக்கிழவி, புணர்ந்தவகையால் புணர்க்கவும் பெறுமே' என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 199.)

குணவீர:— 'தண்ணந்துறைவன்' இது விரிக்கும்வழி விரித்தல் என்பர். (நேமி. 19, 67.)

1278. நெருநற்றுச் சென்றாரெம் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து. (அ)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— எம் காதலர் சென்றார் நெருநற்று - எம் காதலர் பிரிந்துபோயினார் நெருநற்றே; யாமும் மேனி பசந்து எழுநாளேம் - அப்பிரிவிற்கு யாமும் மேனிபசந்து ஏழுநாளுடையம் ஆயினேம்.

நெருநற்றுச்செய்த தலையளியால் பிரிவு துணியப்பட்டது என்பாள் நெருநற்றுச் சென்றார் என்றும், அதனை ஐயுற்றுச்செல்கின்றது ஏழுநாள் உண்டாகலின் அன்றே மேனிபசந்தது என்பாள் மேனி பசந்து எழுநாளே என்றும் கூறினாள். இவ்வாற்றால் தலைமகனது பிரிதற் குறிப்பினை உணர்த்திநின்றது.

மணக்:— எமது காதலர் பிரிந்து நெருநற்றுச் சென்றார்; யாமும் மேனி பசந்து ஏழுநாளுடையமாயினேம் எ - று.

பரிப்:— இது தலைமகனை இத்துணைக் காலமும் இன்பம் துய்த்தாட்கு இன்றே இவ்வேறுபாடு வந்தது என்று தோழி நோக்கிய குறிப்புக் கண்டு, அவர் பிரிவதன் முன்னும பிரிவர் என்று ஏங்கி இன்புற்றிலேம் என்று தலைமகள் கூறியது.

பரிதி:— நாயகர் நம்மை நேற்றுப் பிரிந்தார்; *எழுநாள் மேனி பசந்தது எ -று.

காளிங்:— தோழீ! யான் உனக்கு அங்ஙனம் குறித்து உரைத்தேன் ஒன்று முதல் நாள் இரவின்கண்; மற்று அதற்கு ஒப்ப நெருநற்றுச் சென்றார் நம் காதலர்: அஃது அறிந்து என் மேனி பசப்பு உற்று இன்று ஏழு நாள் உடையேம்: எனவே அன்று முதலாகக் காணாய் நீ முனனமோடு இமையாமை உற்றது அறிந்து மெய்யுற்ற பசப்பு என்பது பொருள் எ - று.

---

*‘ எழுநாளைக்கு முன்னே முன்கைவளை கழன்றது; ஆகையால்’ பிராண நாயகன் பிரிவது பிராணன் அறிந்தது; நாம் அறிந்தோம் இல்லை.’ —பழைய.

1279. தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது. (கூ)

**தலைமகள் குறிப்பறிந்ததோழி அதனைத் தலைமகற்கு அறிவித்தது.**

**உரைப்பகுதி :**

பரிமே:— யான் அது தெளிவித்தவழித் தெளியாது; தொடி நோக்கி - அவர் பிரிய யான் ஈண்டு இருப்பின் இவை நில்லா எனத் தன் தொடியை நோககி; மென்தோளும் நோக்கி - அதற்கு ஏதுவாக இவை மெலியும் எனத் தன் மென்தோள்களையும் நோக்கி; அடி நோக்கி - பின் இவ்விரண்டும் நிகழாமல் நீர் நடந்து காத்தல்வேண்டும் எனத் தன் அடியை நோககி; ஆண்டு அவள் செய்தது அஃது - அங்ஙனம் அவள் செய்த குறிப்பு உடன்போக்காயிருந்தது.

செய்தகுறிப்பு - செய்தற்கு ஏதுவாய குறிப்பு. அஃது என்றாள் *"செறிதொடி செய்திறந்தகள்ளம்" என்றாகலின். பிரிதற் குறிப்புண்டாயின் அஃது அழுங்குதல் பயன்.

மணக்:— தொடியையும் நோக்கி, மெல்லிய தோளிணையும் நோக்கி, அடியையும் நோககி, அவள் அவ்விடத்துச்செய்த குறிப்பு அது வாயிருந்தது எ - று.

அது - உடன்போககு.

பரிப்:— இஃது யான்பிரிவு உணர்த்தியவழி, இருப்பேம் ஆயின் தோள் மெலிந்து வளை கழலும் என்று நினைத்துப் போவாளாகக கருதி நடக்க வல்ல ஆகவேண்டும என்று அடியைப் பார்த்தாள்; ஆதலால் உடன்போதல கருத்தினள் என்று தோழி தலைமகற்குக் கூறியது.

பரிதி:— நாளை உடன்போககுக்கு உடன்பட்டுத் தன்வளையைப் பார்த்தும் தோளைப் பார்த்தும், காலைப்பார்த்தும் செய்தால் பாலையில் பரல் கடக்க வேண்டும் என்னும குறிப்பு எ - று.

காளிங்:— நெஞ்சே! தன் வளையை நோக்கி மற்று அவ்வளை அணிந்த மென்தோளிணையும் நோக்கிப் பின் தன்சீறடியையும் நோக்கி விட்டு அத்துணையே அவ்விடத்து அவள்செய்த கருமம் எ - று.

* குறள் - 1275.

எனவே இற்றை நாள் நம்மோடு செறிந்திருந்த வளையே! இவர் எம்மைவிட்டு நீங்க நீயும் நீங்குவை: பணைத்து நிறத்தது ஓர் தோளே! நீயும் இவர் விடப் பசகுவை: இறுதிக்கண் கைவிடும் நும்மை நம்புவத னினும் அவர் தம்மோடு சேறலே தலைமை: இதற்கு இனி இவ்வடியினை செய்வது என்னை என்று அறிகிலேன் என்று இவை அவைநோக்கி நம் குறிப்பு அறிந்து அலமரல் உற்ற அத்துணையே: நெஞ்சே! யாம் ஒன்று குறித்து இடத்து அவள்செய்த கருமம் இவை என்று எண்ணிச் செலவு அழுங்குவனுவது பயன் என அறிக.

## மேற்கோள்பகுதி :

இளம்:— இதனுள் இப்பூப்பறிப்பேமாயின் வளை கழன்று தோள்மெலிய நடத்தல் வல்லையாகவேண்டும் என ஒருபொருள் சுட்டித் தந்தமை காரணக எனக்கூறி உள்ளுறையில் சுட்டு என்பதற்கு மேற்கோள் காட்டுவர். (தொல். பொருள். 238.)

தெய்வச்:— முன்னத்தினுணரும் கிளவிக்கு மேற்கோள்காட்டி, 'இருப்போமாயின் வளைகழன்று தோள்மெலியும் எனக்கருதி, நடக்க வல்லீராகல் வேண்டும் என அடியை நோக்கினளாதலான், உடன்போதற் குக் கருதினள் என இப்பொருளெல்லாம் அவள் குறிப்பினன் உணர நின்றவாறு கண்டுகொள்க என்பர். (தொல். சொல். 448.)

1280. பெண்ணினல் பெண்மை உடைத்தென்ப கண்ணினல்
காமநோய் சொல்லி இரவு. (கo)

தலைமகள் பிரியாமைக்குறிப்பினைத் தோழிக்கு அறிவுறுத்தது.

## உரைப்பகுதி :

பரிமே;— காமநோய் கண்ணினல் சொல்லி இரவு - மகளிர் தம் காமநோயினைத் தோழியர்க்கும் வாயாற் சொல்லாது கண்ணினற் சொல்லி அது தீர்க்கவேண்டும என்று அவரை இரவாது உடன்போதல் குறித்துத் தம் அடியினை இரத்தல் ; பெண்ணினல் பெண்மை உடைத்து என்ப - தமகு இயல்பாகிய பெண்மைமேலும் ஓர் பெண்மை உடைத் தென்று சொல்லுவர் அறிந்தோர்.

தலைமகளது உடன்போதற்றுணிபு தோழியால் தெளிந்தா னுகலின், தன் பிரிவின்மைக்குறிப்பினை அறிவுறுப்பான், அவள் பெண் மையினைப் பிறர்மேலிட்டு வியந்து கூறியவாறு.

மணக்:— வாயாற் சொல்லாது கண்ணினாலே காமநோயைச் சொல்லி வேண்டிக்கோடல், தமது இயல்பாகிய பெண்மையோடே பின்னையும் ஒரு பெண்மையுடைத்தென்று சொல்லுவர் அறிவோர் எ - று.

இது பிரிவுணர்த்திய தலைமகள் குறிப்புக்கண்டு தலைமகற்குத் தோழி சொல்லியது.

பரிப்:— இதனைப் பிரிவுக்கு இடையீடாகக் கொள்ளாது சொல் வழங்க வேண்டும் என்பது கருத்து.

பரிதி:— பெண்ணிற்குப் பெண் இதம் சொன்னதுபோல நாயகியிடத்து நாயகன் இன்பம் வேண்டி இரந்து கொள்ளுதல் எ - று.

காளிங்:— தோழீ! நீ யான் அழுங்குவித்தல் ஏன்? அவர் செலவு அழுங்கியவாறு என்னை என்கின்றனை யாயின், என் நெஞ்சில் துயரக் குறிப்பினைக் கண்ணினால் கண்டு தாமே அருளச் செலவு அழுங்கினர். கற்புடை மகளிர் காதலாகும் ஒழுக்கம் உடைமை உடைத்து என்று சொல்வர் பெண்டிரின் அறிவுடையோர் எ - று.

இனி மற்று இங்ஙனம் செலவு அழுங்கித் தலைமகளோடு இனிது உறைகாலத்து நிகழும் புணர்ச்சியினது விருப்பம் உரைக்கின்றமையான் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— கரப்பினும், கண்ணிறைந்த, மணியின், முகைமொக்குள், செறிதொடி, பெரிதாற்றி, தண்ணந், நெருநற்று, தொடிநோக்கி, பெண்ணினால்.

மணக்:— முகைமொக்குள், செறிதொடி, மணியின், கண்ணிறைந்த, பெரிதாற்றி, தண்ணந், பெண்ணினால், தொடிநோக்கி, நெருநற்று, கரப்பினும்.

பரிதி:— பெரிதாற்றி, தண்ணந், நெருநற்று, மணியுள், முகைமொக்குள், கரப்பினும், தொடிநோக்கி, செறிதொடி, கண்ணிறைந்த, பெண்ணினால்.

காளிங்:— பெரிதாற்றி, நெருநற்று, தண்ணந், முகைமொக்குள், செறிதொடி, கரப்பினும், மணியின், தொடிநோக்கி, கண்ணிறைந்த, பெண்ணினால்.

# 129. புணர்ச்சிவிதும்பல்.

தொகுப்புரை :

[எண்ணிய உடனே களிப்படைதலும், கண்ட அளவில் மகிழ்தலும் கள்ளுக்கு இல்லை. காமத்திற்கு உண்டு. பனையளவு காதல் பெருகின் தினையளவுகூட மகளிர் ஊடுதல் கூடாது. தலைவர் நம்மை அவமதித்துத் தம் இஷ்டப்படி நடப்பாராயினும்; கண்கள அவரைப் பாராமல் ஆறுதல அடைகினறில. தோழி! அவரைக்கண்டால் ஊடவேண்டும் என்று போனேன். என்மனம் அவரைக் கூடவேண்டும் எனச் சென்றது. யான் என்னசெய்யட்டும்? மை எழுதும்போது எழுதுகோலைக் காணாத கண்களைப்போல தலைவனைக் கண்டபின அவர்பழியை அறியேன். அவரைக் கண்டால் அவர்செய்த தவறுதல்களை நான் காணேன். அவரைக் காணாதவிடத்துத் தவறுகளையன்றிப் பிறவற்றைக் காணேன். புனல் அடித்துக்கொண்டு போய்விடும் என்று தெரிந்தும் அதில் பாய்ந்து விளையாடுபவர்களைப்போல ஊடுதல் முடிவு போகாது என்பதை அறிந்தும் புலந்து பயன் என்ன? கள்வ! நின்மார்பு, இனிவரத்தக்க துன்பம் செய்தலை அறிந்தும் மேன்மேலும் குடிக்கவிரும்பும் கள்ளை ஒத்திருக்கிறது. காதல் மலரினும் மென்மையானது. அதன் நலன் அறிவார் உலகத்துச் சிலரே. என்னைக்காட்டிலும் புணர்ச்சியில் விரைந்து, கண்ணால் சிவந்து ஊடி, உடனே ஊடலை மறந்து கூடினாள்.]

அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக்கண்ணே விரைதல். மேற் புணர்ச்சிமிகுதிபற்றித் தலைமகன் பிரிதற்குறிப்பு அறிவுறுத்த தலைமகள் அவன்மாட்டே நிகழாது வேட்கைமிகவினால் பின்னும் தன்கண்ணே நிகழ்தலான், இது குறிப்பறிவுறுத்தலின்பின் வைக்கப்பட்டது.*

மணக்:— *புணர்ச்சி விதும்பலாவது பிரிந்துகூடின தலைமகனும் தலைமகளும் புணர்தல் வேண்டி ஒருவரினொருவர் முந்துமுந்து விரைதல்.*

1281. *உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்*
*கள்ளுக்கில் காமத்திற் குண்டு.* (க)

பிரிதற் குறிப்பினளாகியாளோடு நீ புலவாமைக்குக் காரணம் யாது என நகையாடிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— *உள்ளக் களித்தலும் - நினைந்த துணையானே களிப்பு எய்தலும்; காண மகிழ்தலும் - கண்டதுணையானே மகிழ்வு எய்தலும் கள்ளுக்கு இல் காமத்திற்கு உண்டு - கள்ளுண்டார்கு இல்லை, காமமுடையார்க்கு உண்டு.*

களித்தல் உணர்வழியாதது. மகிழ்தல் அஃதழிந்தது. இவ்விரண்டும் உண்டுழியலலது இன்மையின் கள்ளுக்கில் என்றாள். உண்டு என்பது இறுதிவிளக்கு. அப்பெற்றித்தாய காமமுடைய யான் புலத்தல் மாண்டையது என்பதாம்.

மணக்:— காதலரை நினைத்த அளவிலே களிப்புப்பெறுதலும், கண்ட அளவிலே மகிழ்ச்சி பெறுதலும் களித்தலையும் மகிழ்தலையும் தனக்கு இயல்பாக வுடைய கள்ளிற்கு இல்லை; காமத்திற்கு உண்டு எ - று.

கள்ளிற்கு உண்ணக் களித்தலும் மகிழ்தலுமுண்டு, காமத்திற்கு உள்ளக் களித்தலும் காண மகிழ்தலுமுண்டு.

பரிப்:— இது தலைமகனைக் கண்ணுற்ற இடத்துப் புலவியைக் கருதின தலைமகள் புணர்வு வேட்கையால் சென்ற நெஞ்சினைக் கண்டு தன்னுள்ளே வியந்து கூறியது.

பரிதி:— உள்ளத்தில் களிப்பதும் காண மகிழ்ச்சி கொடுப்பதும் கள்ளுக்கு இலலை. காமத்துக்கு உண்டு எ - று.

காளிங்:— தம்மால் காதலிக்கப்பட்டாரை நினைக்கவே களித்தலும், காணவே மகிழ்தலும் கள்ளுககு இல்லை காமத்திற்கு உண்டு என்று பலவாற்றானும் களளோடு காமம் மகிழ்ந்து உரைக்கின்றமையின், ஒருவர்க்கு இரண்டன் திறத்தினும் துற்றவிடத்து இன்பமே இன்பம் என்பது துணிந்த பொருள் எ - று.

## மேற்கோள்பகுதி :

சொக்கப்:— உவந்தலர்சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல். உவகை யறிவோடு கூடியது. மகிழ்ச்சி அறிவழிந்தது. என்னை 'உள்ளக் களித்தலும் ..........உண்டு' என்னுங் குறட்குப் பரிமேலழகர் உரையானும் உணர்க. (தஞ்சை - 318.)

## ஒப்புமைப்பகுதி :

“கள்ளுண்டல் காமம் என்ப கருத்தறை போக்குச் செய்வ
எள்ளுண்ட காமம் போல எண்ணினில் காணில் கேட்கில்
தள்ளுண்ட விடத்தில் நஞ்சம் தலைக்கொண்டால் என்ன ஆங்கே
உள்ளுண்ட உணர்வு போக்கா துண்டபோ தழிக்கும் கள்ளுண்.”

—திருவிளை. மாபாதகம். 26.

"களிகொள் காமத்திற் கையறவெய்தி." —சீவக. 1001.

முதுமொழிவெண்பாக்கள் :

"யோசனை கந்தியினைக் காண்டலும்பே ராசைகொண்டான்
தூசணையாச் சந்தனுத்தான் சோமேசா - நேசமுடன்."
—சோமேசர். 129.

1282. தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின். (உ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— காமம் பனைத்துணையும் நிறைய வரின் - மகளிர்க்குக் காமம் பனையளவினும் மிக உண்டாமாயின்; தினைத்துணையும் ஊடாமை வேண்டும் - அவரால், தாம் காதலரோடு தினையளவும் ஊடுதல் செய்யாமை, வேண்டப்படும்.

பனைத்துணையும் என்புழி ஐந்தனுருபு விகாரத்தால் தொக்கது. ஊடின் வருத்தம் மிகும் எனப் பிறர்க்கு உறுதிகூறுவாள்போன்று, தன் விதுப்புக் கூறியவாறு.

மணக்:— நெஞ்சே! நீ தினையளவும் ஊடாதொழிதல் வேண்டும்; பனையளவினும் மிகக் காமநுகர்ச்சி வருமாயின் எ - று.

இஃது ஊடநினைத்த நெஞ்சிற்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— தினையத்தனையும் ஊடுதல் ஒண்ணாது, பனையத்தனை இன்பம் வருமாகின் எ - று.

காளிங்:— தோழீ! ஒரு தினை அளவு ஆயினும் காதலரோடு ஊடாமை வேணடும்: எவ்விடத்து எனின், பனை அளவு நிறைந்த காம இன்பம் வருமிடத்து எ - று.

1283. பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணா தமையல கண். (௩)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— பேணாது பெட்பவே செய்யினும்-நம்மை அவமதித்துத் தான் வேண்டியனவே செய்யுமாயினும்; கொணகனைக கண் காணாது அமையல - கொண்கனை என் கண்கள் காணாது அமைகின்றன இல்லை.

தன் விதுப்புக் கண்கள்மேல் ஏற்றப்பட்டது. அத்தன்மையேன் அவனொடு புலக்குமாறு என்னை என்பதாம்.

மணக்:— தம்மை விரும்பாது தன்மனம் விரும்புவனவே செய்தானாயினும், கொண்கனைக காணாது என்கண்கள் அமையமாட்டா எ - று.

இவையெல்லாம் ஊடற்பகுதியானமையும் மூன்னுறு புணர்ச்சி இன்மையும் ஆமாறு கண்டுகொள்க.

பரிப்:— இது மேற்கூறிய சொற்கேட்டு ஊடல் வேண்டுவார் தலைமகற் காணுதொழிதலே உளது என்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— பேணாத பெரிய ஊடலிலே செய்யினும் நாயகரைக் காணாமல் நித்திரை வராது எ - று.

காளிங்:— தோழீ ! இங்கு நம்மை விரும்பாது புறத்துத் தனக்கு விரும்புவன செய்து வரினும் கொண்கனை அப்படி அதற்கு உரியன் என்று அறிந்தும் ஒரு பொழுது காணாது அமையமாட்டா மற்று இககண்கள் ஆனவை ; வறிதே நீ என்னை முனிவது என் என்றவாறு.

ஒப்புமைப்பகுதி :

“பேணாய் நீ பெட்பப் செயல்.” —கலித். 91 : 24.

1284. ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து
கூடற்கண் சென்றதென் நெஞ்சு. (௪)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— தோழி - தோழீ; ஊடற்கண் சென்றேன் - காதலரைக் காணுமுன் அவர்செய்த தவற்றை நினைத்து யான் அவரோடு ஊடுதற்கண்ணே சென்றேன்; என் நெஞ்சு அது மறந்து கூடற்கண் சென்றது - கண்டபின் என் நெஞ்சு அதனை மறந்து கூடுதற்கண்ணே சென்றது

சேறல் நிகழ்தல் நினைத்தநெஞ்சிற்கும் ஒத்தலின், அது மறந்து என்றாள். அச்செலவாற் பயன் என் என்பதுபட நின்றமையின், மன் ஒழியிசைக்கண் வந்தது. அவ்வெல்லையிலே நெஞ்சு அறைபோகலான், அது முடிந்ததில்லை என்பதாம்.

மணக்:— தோழி! யான் ஊடலைக் கருதிச்சென்றேன்; அவனைக் கண்ட பொழுதே அதனை மறந்து கூடலைககருதிற்று, என் நெஞ்சு எ - று.

இது நீ அவனோடு புலவாது கூடியதென்னை என்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— ஊடற்பிணக்கு உரைக்கச் சென்று ஊடலைமறந்து கூடினேன் என்ன மாயமோ எ - று

காளிங்:— கேளாய் தோழீ! யான் அப்பொழுதே ஊடற்கண் ஒருப்பட்டுச சென்றேன்: முன்னம் என்னோடு இதற்கு உடம்பட்டு நின்ற நெஞ்சானது அவரைக கண்டபொழுதே அதனை மறந்து கூடற்கண் சென்றது என் எ - று.

1285. எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து. (௫)

இதுவும் அது

உரைப்பகுதி :

பரிமே:— எழுதுங்கால் கோல் காணுக் கண்ணேபோல் - முன்னெல்லாம் கண்டிருந்தும் எழுதுங்காலத்து அஞ்சனக்கோலின் இயல்பு

காணமாட்டாத கண்ணே போல; கொண்கன் பழி கண்ட இடத்துக் காணேன் - கொண்கனது தவறு காணாத இடத்தெல்லாம் கண்டிருந்து அவனைக் கண்ட இடத்துக் காணமாட்டேன்.

கோல் ஆகுபெயர். இயல்பு கருமை. என் இயல்பு இதுவாகலின் மேலும் அது முடியாது என்பதாம்.

மணக்:— கண்ணெழுதுங் காலத்துத் தன் இமையகத்துப் புகுந்த கோலைக் காணாத கண்ணைப்போல, கொண்கனது குற்றத்தினையும் அவனைக்கண்ட இடத்துக் கண்டிலேன் எ - று.

இது மேற்கூறிய சொற்கேட்டு நீ அவனைக்கூறிய குற்றமெல்லாம் யாண்டுப்போயின என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— *மையெழுதும் பொழுது தூரிகைக்கோல் காணாத கண்ணேபோல நாயகனைக் காணாத போழ்து உண்டான குற்றம் கூடி இருந்த இடத்துக் காணேன் எ - று.

காளிங்:— தோழீ! முன்னம் எல்லாம் அவன் பழி நின்னினும் மற்று யான் கருதி இருப்பேன்: பின்பு அஞ்சனம் எழுதும் காலத்து அவ்வெழுதுகோலினை முன்னம் கண்டாங்குக் காண மாட்டாக் கண்ணே போல, நம் துணைவன் செய்யும பழி சிறிதும் காணேன்: மற்று அவனைக் கண்டவிடத்து; எனவே மற்றப்பொழுது பிறிது நினையாது கலவி நினையும் பேதைமை உடையேன் எ - று.

## முதுமொழிவெண்பாக்கள்:

"ஈசனன்ப ரோடும இயைந்த பாவைதனைப்
பேசியதோ ழிக்கவளும் பேசியது - கூறின்." —முதுமொழி. 182.

"காந்தன் துகிலரிந்து காணத் தகன்றதன்மை
ஏந்தி மறந்தாள் இரங்கேசா - காந்தி." —இரங். 129.

---

*'சித்திரம் எழுதும் பொழுது' - பழைய

1286. காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை. (௬)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— காணுங்கால் தவறாய காணேன் - கொண்கனை யான் காணும்பொழுது அவன் தவறாயவற்றைக் காண்கின்றிலேன்; காணாக்கால் தவறல்லவை காணேன் - காணாதபொழுது அவையே அல்லது பிறவற்றைக் காண்கின்றிலேன்.

செயப்படுபொருள் அதிகாரத்தான் வந்தது. முன்பு நான் நின்னொடு சொல்லிய தவறுகள் இதுபொழுது காணாமையின் புலந்திலேன் என்பதாம்.

மணக்:— அவனைக் கண்டபொழுதே அவன் குற்றமாயின யாவும் காணேன்; அவனைக் காணாத காலத்து அவன் குற்றமல்லாதன யாவும் காணேன் எ - று.

பரிப்:— இது மேற்கூறிய சொற்கேட்டுக் கண்டகாலத்து மறக்குமாறு போலக் காணாத காலத்திலும் மறப்பது நன்று என்று நகைக் குறிப்பினால் கூறிய தோழிக்குச் சொல்லியது.

பரிதி:— நாயகரைக் கண்டால் குற்றம் காணேன். காணாக்கால் குற்றம் காண்பேன் இதுஎன்ன மாயமோ எ - று.

காளிங்:— கேளாய் தோழீ! பல சொல்லி என்? யான் அவரைக் காணும் காலத்துக் காணேன் தன் தவறாவன; மற்று இனி யான் அவரைக் காணாககாலும் காணேன் மற்று அவர் செய்யும் தவறல்லன ; எனவே நாள்தோறும் காணாக்கால் ஆற்றாமையும், கண்ட இடத்து வழிபாடும் கற்புடை மகளிர்தம் கடன் என்பது பொருள் எ - று.

இனி மற்று இங்ஙனம் அவன் புறத்து ஏகினும் தான் புணர்ச்சி விதுப்பத் தன்மையள் அல்லாத தலைமகள் தன் நெஞ்சொடு புலந்தமை நிகழ்த்துகின்றமையின் நெஞ்சொடு புலத்தல் மற்று இதன் பின்னரே அதனை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

மேற்கோள்பகுதி :

இளம்:— 'காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும் ஆவயின்வரும் பல்வேறு நிலையில்' உவத்தலுக்கு மேற்கோள். (தொல். பொருள். 145.)

ஒப்புமைப்பகுதி :

"பேணுமகொழுநர் பிழைகளெல்லாம்
பிரிந்த பொழுது நினைந்தவரைக்
காணும பொழுது மறந்திருப்பீர்
கனபொற் கபாடம திறமினோ." —கலிங். 65.

"மாணார்க் கடந்த மறவெம்போர் மாறனைக்
காணுக்கா லாயிரமுஞ் சொல்லுவேன் - கண்டக்கால்
பூணுகம தாஎன்று புல்லப் பெறுவேனோ —முத்தொள்.
நாணோ டுடன்பிறந்த நான்."

முதுமொழிவெண்பாக்கள் :

"இந்நிலங்கள் எங்கும் இடர்நீங்க எங்களுக்காய்த்
தென்னிலங்கை வென்றாய் தினகரா - உன்னையெதிர்." —தினகர 133.

"செற்ற மிகுபரவை வன்தொண்டர் சென்றவழி
முற்றவறைக் காணுள் முருகேசா - உற்றவரைக்." —முருகேசர். 129.

"மன்னன் அகலிகையீள் வஞ்சனைநீங் காமனுடல்
சின்னமுறல் என்னோ சிவசிவா - என்ன அவன்." —சிவசிவ. 129.

1287. உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து. (எ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரேபோல் - தம்மை ஈர்த்துக்கொண்டு போதல் அறிந்துவைத்து ஒழுகுகின்ற புனலுட்பாய்வார் செயல்போல; பொய்த்தல் அறிந்து புலந்து என் - புலவி முடிவுபோகாமை அறிந்துவைத்துக கொண்கனோடு புலந்து பெறுவது என்!

பாய்பவர் என்பது ஆகுபெயர். பொய்த்தல் - புரைபடுதல். புலந்தாலும் பயனில்லை என்பதாம். பொய்த்தல் அறிந்தேன் என்பது பாடமாயின், உய்த்தலறிய ஓடுநீருட்பாய்வார்போல முடிவறியப்பண்டொரு கால் புலந்து முடியாமை அறிந்தேன். இனி அது செயற்பாற்றன்றென உரைக்க.

மணக்:— தம்மை ஈர்ப்ப அதனையறிந்து வைத்தும், புனலுள் பாய்பவரைப் போல, நெஞ்சு பொய்ப்படுதல் அறிந்துவைத்தும், புலக்கின்றது ஏதுக்கு எ - று.

இது புலவிக்குறிப்பு நீங்குவாள் தன்னுள்ளே சொல்லியது.

பரிதி:— உய்த்தல் அறிந்தும் புனல் பாய்பவரைப்போல, நாயகர் பொய்யாசை என்றறிந்தும் கூடினேன் எ - று.

பழைய:— நீத்தறிந்து நீந்திக் கரையேறுவாரைப் போலப் பொய்த்தலறிந்து ஊடுந்தறுவாயும், கூடுந்தறுவாயும் அறிந்தேன் எ - று.

காளிங்:— ஈர்த்துக் கொண்டு போதலை அறிந்து வைத்துப் பின்னும் புனலுள் பாய்வம் என்னும் அறிவுகேடர்போல் புலவியின்கண் நில்லாமை அறிந்து வைத்து ஊடுவது என்செய்ய எ - று.

1288. இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு. (அ)

தலைமகள் புணர்ச்சிவிதுப்பறிந்த தோழி தலைமகற்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— கள்வ - வஞ்சக; களித்தார்க்கு இளித்தக்க இன்னா செயினும் கள்ளற்றே - தன்னை உண்டு களித்தார்க்கு இளிவரத்தக்க இன்னாதவற்றைச் செய்யினும், அவரால் மேன்மேல் விரும்பப்படுவதாய கள்ளுப்போலும்; நின் மார்பு - எங்கட்கு நின்மார்பு.

அவ்வின்னாதன நாணின்மை, நிறையின்மை, ஒழுக்கமின்மை, உணர்வின்மை என்று இவைமுதலாயின. எங்கட்கு நாணின்மை முதலியவற்றைச் செய்யுமாயினும் எங்களால் மேன்மேல் விரும்பப்படுகின்றது என்பதாம். கள்வ என்றதும் அது நோக்கி.

மணக்:— பிறர் இகழத்தகக இன்னமையை நீ எமக்குச் செய்யவும், மதுவுண்டு களித்தார்கு அதனுலுள்ள குற்றத்தினைக்கண்டு வைத்தும அதனை யுண்ணல்வேட்கை நிகழுமாறுபோலப் புணர்வுவேட்கையைத் தாராநின்றது, வஞ்சகா! நின் மார்பு எ - று.

இது புலவிக்குறிப்பு நீங்கின தலைமகள் தலைமகற்குச் சொல்லியது.

பரிப்:— .... .... நின்தொழில் மார்பும் உடைத்தாயிற்று என்றது.

பரிதி:— நீ என்னை எத்தனை பிணக்குச் செய்யினும் உன்மார்பு கண்டளவில குற்ற மறிந்து கூடுதற்கு இடமாயிற்று ஆதலால் என்மனம் களிப்பதற்குக் கள் ஒககும் கள்ளா! உன் மார்பு எ - று.

காளிங்:— நீ எமக்கு இளிவு ஆவதற்குத் தக்க இன்னுதனவற்றைச் செய்யினும நின்னைப் பிழைத்து ஒழுகேன் யான்: நினது சூளுறவு எடுத்து உரைக்கும் வஞ்சனையை உணர்ந்து பின்னும் நின் மார்பு எமககு எத்தன்மைத்தோ எனின், சிலகாலம் கள்ளுண்டு களித்தவர்க்குப் பின்னும் அககள் அவர்க்கு எத்தன்மைத்து : மற்று அத்தன்மைத்து: எனவே இது அவன் தவறியது நோக்காதது பொருள் எ - று.

## ஒப்புமைப்பகுதி :

"மகிழ்ந்ததன் தலையும் நறவுண் டாங்கு
விழைந்ததன் தலையும் நீவெய் துற்றனை." —குறுந். 165.

1289. மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார். (கூ)

உணர்ப்புவயின்வாராஊடற்கண் தலைமகள் சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— காமம் மலரினும் மெல்லிது - காம இன்பம் மலரினும் மெல்லிதாயிருக்கும்; அதன்செவ்வி தலைப்படுவார் சிலர் - அங்ஙனம் மெல்லிதாதலை அறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர்.

தொட்டதுணையானே மணச்செவ்வி அழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிது என்பது விளககலின், உம்மை சிறப்பின்கண்வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும, இன்பமும ஒருகாலத்தின்கணே

ஒத்து நுகர்தற்குரியார் இருவர், அதற்கு ஏற்ற இடனும் காலமும் உபகரணங்களும பெற்றுக கூடி நுகரவேணடுதலின் அதன் செவ்விதலைப் படுவார் சிலர் என்றும, அவருறுள் யாதானும ஒன்றனுல் சிறிது வேறு படினும் வாடுதலின் மலரினும மெல்லிது என்றும் கூறினுன். குறிப்பு ஒவ்வாமையின் யான் அதுபெறுகினறிலேன் என்பதாம். தலைமகள் ஊடல்தீர்வது பயன்.

மணக்:— எல்லாவற்றினும் மெல்லிதாகிய பூவினும் மெல்லிதாய் இருக்கும் காமம்; அதனது செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர் எ - று.

இது தலைமகன் புணர்ச்சிக் குறிப்புககண்டு பின்பு ஊடிக கொள்ளலாம்; இப்பொழுது ஊடுவையாயின், இககாமம் செவ்வி தப்பும் என்று புணர்ச்சி வேட்கையால தலைமகள் நெஞ்சொடு கூறியது.

பரிப்:— இது தலைமகள் புலவிக் குறிப்புக கண்டு இன்பம் ஊடிக்கொள்ளலாம ; இப்பொழுது ஊடுவையாயின் இககாமம் செவ்வி தப்பும் என்று புணர்ச்சி வேட்கையால் தலைமகன் கூறியது.

காளிங்:— கேளாய் தோழீ? உலகத்து வண்டானது மலர் சிதையாமல் மதுவை அருந்துவதுபோல மற்று அதன் செவ்வி அறிந்து கைககொள்ளும் மக்களும் உலகத்துப் பலர் உளர் எனினும், மற்று அக்காமமாகின்ற அதன் செவ்வி சிதையாமல் சென்று தலைப்படுவார் அதனினும் சிலர் காண்; நீ என்னை முனிய வேண்டா எ - று.

ஓப்புமைப்பகுதி :

"போதுவாய் திறந்த போதே பூமபொறி வண்டு சேர்ந்தாங்(கு)
ஊதுமே மகளிர்க்கு ஒத்த போகமும் அன்ன தொன்றே."
—சீவக. 1456.

"இன்ப இயலோரார் யாணர் விழைகாமம்
பொன்னின் அணிமலரின் செவ்விதாம." —இன். 25.

1290. கண்ணில் துனித்தே கலங்கினுள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று. (௯௰)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— கண்ணின் துனித்தே - காதலி முன்னொரு ஞான்று புல்லல விதுப்பினுல சென்ற என்னொடு தன்கண் மாத்திரத்தான் ஊடி,

புல்லுதல் என்னினும் தான் விதுப்புற்றுக் கலங்கினாள் - புல்லுதலை என்னினும் தான விதுமபலால அதுதன்னையும் அப்பொழுதே மறந்து கூடிவிட்டாள்; அதனால் யான் இத்தன்மையேனாகவும் விதுப்பின்றி ஊடி நிற்கின்ற இவள் அவளல்லள் எ - று.

கண்மாத்திரத்தான் ஊடல் சொல்நிகழ்ச்சியின்றி அது சிவந்த துணையேயாதல். அவளாயின் இங்ஙனம் ஊடற்கண் நீடாள் என்பது பயன்.

மணக்:— கண்ணாலே புலந்தும், அதனையும் ஊடி நிறுத்தாது கலக்கமுற்றாள், புணர்தலை என்னினும்மிகத் தான் விரைதலானே எ - று.

இது தலைமகள் ஊடற் குறிப்புப் புணர்வுவேட்டல் கண்டு தலைமகன் தன்னுளளே சொல்லியது.

பரிதி:— நாயகரைப் புணரவருகையில் கண்ணும் மனமும் கலங்கினாள் புல்லுமபோது நாயகரினும அதிக மோகமாய்த் தானும் இன்பம் பெற்று நாயகருககு இன்பம் அளித்தாள் எ - று.

காளிங்:— நெஞ்சே! கண்ணினால் துனிசெய்து ஊடி நெஞ்சினால் கலககம் உற்றாள்; நம்மினும் சாலத் தான் முயங்குதல விருப்பம் உற்றாள்; அது என்ன பேறோ தான் எ - று.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— உள்ளக், தினைத்துணை, பேணாது, ஊடற்கண், எழுதுங்கால், காணுங்கால், உய்த்தல், இளித்தக்க, மலரினும், கண்ணின்.

மணக்:— மலரினும், உள்ளக், தினைத்துணை, உய்த்தல், கண்ணின், இளித்தக்க, ஊடற்கண், எழுதுங்கால், காணுங்கால், பேணாது.

பரிதி:— எழுதுங்கால், காணுங்கால், பேணாது, ஊடற்கண், உய்த்தல், இளித்தக்க, உள்ளக், தினைத்துணையும, கண்ணின், மலரினும்.

காளிங்:— எழுதுங்கால், தினைத்துணை, ஊடற்கண், உய்த்தல், உள்ளக், மலரினும், இளிததக்க, பேணாது, கண்ணின், காணுங்கால்.

# 130. நெஞ்சொடுபுலத்தல்.

## தொகுப்புரை :

[தலைவர் மனம் எம்மை நினையாது அவர்க்கு உரியதாதலைக் கண்டும் என் நெஞ்சே! நீ எனக்கு ஆகாமல் அவரை நினைப்பது ஏன்? என் நெஞ்சே! நம்மீது அன்பிலாதாரை உள்ளபடி அறிந்திருந்தும், கோபியார் என்று அவரைப் பின்தொடர்ந்து செல்கின்றாய்! உன் அறியாமை இருந்தபடி என்னே! நெஞ்சே! நீ விரும்பியவாறு தலைவரைப் பின்தொடர்ந்து செல்லுதல், கெட்டவர்களுக்கு நட்பாளர் இல்லை என்பதாலோ! நெஞ்சே! தலைவரோடு அளவறிந்து ஊடிக் கூடாய்; உன்னோடு ஆராய்வார் யார்? என் நெஞ்சு தலைவரைக் காணுவிடத்து அவரை அடையமுடியாமைக்கு வருந்தும்; அடைந்தால் பிரிவிற்கு அஞ்சும். இங்ஙனம் எப்பொழுதும் நீங்காத் துன்பம் உடையது என் நெஞ்சு. தனித்திருந்து எண்ணும்போது என் நெஞ்சு என்னைத் தின்ன இருந்தது. அவரை மறக்காத மனத்தோடு கூடி என் நாணத்தையும் மறந்துவிட்டேன். என் உயிரின்மேல் காதல்கொள்ளும் நெஞ்சு அவரை இகழின் இளிவாம் என்று எண்ணி அவர் திறத்தையே நினைக்கும். நம்முடைய நெஞ்சம் நமக்குத் துணையல்லாவிடத்து நம்முடைய துன்பத்திற்குப் பிறரா துணையாவார்? நம்முடைய மனம் நமக்கு உறவல்லாவிடத்து ஏதிலார் உறவினரல்லர் என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ!]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது காரணம் உண்டாயவழியும் புலக்கக் கருதாது புணர்ச்சிவிதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும், தலைமகன் புலத்தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.*

மணக்:— *நெஞ்சொடுபுலத்தலாவது தலைமகன் பரத்தையிற் பிரிந்துழி அவனோடு புலக்கக் கருதிய தலைமகள் முற்பட அவனோடு கூட்டம்வேண்டிய நெஞ்சோடு புலந்து கூறுதல். இனி ஊடிககூடல் கூறுகின்றாராகலின், அவ்வூடுதலின் முற்பட இது தோற்றுமாதலின், முற்கூறப்பட்டது.*

1291. *அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே*
*நீஎமக் காகா தது.* (க)

தலைமகன்கண் தவறு உண்டாயவழியும் புலவிகருதாத
நெஞ்சிற்குத் தலைமகள் சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— *நெஞ்சே - நெஞ்சே! அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும் - அவருடைய நெஞ்சு நம்மை நினையாது அவர்க்காய்நிற்றல் கண்டு*

வைத்தும்; நீ எமக்கு ஆகாதது எவன் - நீ எமக்காய் நில்லாது அவரை நினைத்தற்காரணம் யாது!

அவர்க்காதல் - அவர்கருதியதற்கு உடம்படுதல். எமக்கு ஆகாதது என்றது புலவிக்கு உடம்படாமையை. ஒருகருத்தைத் தாமாக அறிந்து செய்யமாட்டாதார் செய்வாரைக் கண்டாயினும் செய்வர்; நீ அதுவுஞ் செய்கின்றிலை என்பதாம்.

மணக்:— அவருடைய நெஞ்சம் அவர்வழி நின்று நம்மை நினையாமையைக் கண்டு வைத்தும், நெஞ்சே! நீ எம்வழி நில்லாது அவரை நினைத்தல் யாதினைக் கருதியோ? எ - று.

இது தலைமகள் வருங்காலத்து வாராத தலைமகனை உள்ளிய நெஞ்சோடு புலந்து கூறியது.

பரிதி.— அவர் நெஞ்சு அவர்களுக் கைவந்தது கண்டிருந்தும் எந்தன் நெஞ்சே நீ நமக்கு வசம் வாராயில்லை எ - று.

காளிங்:— நம் காதலராகியவர் நெஞ்சம் அவர்க்கு உரித்து ஆதல் கண்டு வைத்தும் அங்ஙனம் நீ எமக்கு உரியை ஆகாது எம் மோடு எதிர்மலைவது எவனோ? நெஞ்சே; இது தகாது உனக்கு எ - று.

## மேற்கோள்பகுதி :

இளம்:— தலைவி, மறுத்துரைப்பதுபோல் நெஞ்சொடு கூறிய தற்கு மேற்கோள். (தொல். பொருள். 194.)

நச்:— இளிவரல்பற்றி மறுத்துக் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 196.)

## ஒப்புமைப்பகுதி:

"புலப்பேன்யான் என்பேன்மன் அந்நிலையே அவன்காணின்
கலப்பேன் என்னுமஇக் கையறு நெஞ்சே."

"ஊடுவேன் என்பேன்மன் அந்நிலையே அவன்காணின்
கூடுவேன் என்னுமஇக் கொள்கையின் நெஞ்சே."

'துனிப்பேன்யான் என்பேன்மன் அந்நிலையே அவன்காணின்
தனித்தே தாழும்இத் தனியின் நெஞ்சே."

—கலித். 67 : 8-9, 12-13, 15-16.

"நின் காணின்
கடவுபு கைத்தங்கா நெஞ்சென்னும் தமமோ(டு)
உடன்வாழ் பகையுடை யார்க்கு." —கை. 77 : 22-24.

முதுமொழிவெண்பாக்கள் :

"விக்கிரமன் மற்றொருத்தி வேட்கையுற்றும் தேடிநொந்தாள்
தொக்க உருப்பசியின் சோமேசா - ஒக்கும்." —சோமேசர். 130.

"தம்பிரான் தோழர் தவறுகண்டும் கூடுவதற்(கு)
அன்பு செயுமபரவை யார்மொழிவார் - என்றும்." —முதுமொழி. 183.

1292. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறிஎன் நெஞ்சு. (உ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— என் நெஞ்சு - என் நெஞ்சே!; உறாதவர்க் கண்ட கண்ணும் - மேலும் நம்மாட்டு அன்புடையராகாதவரை உள்ளவாறு அறிந்தஇடத்தும்; செறாரென அவரைச் சேறி - நாம் சென்றால் வெகுளார் என்பதுபற்றி நீ இவர்மாட்டுச் செலலாநின்றாய், அப்பெற்றியது மேலும் ஓர் அறியாமை உண்டோ!

அவரை என்பது வேற்றுமைமயககம். பழங்கண்ணோட்டம்பற்றி வெகுளார் என்பது கந்தாகச் சென்றாய், நீ கருதியது முடியுமோ என்பதாம்.

மணக்:— என் நெஞ்சே ! நீ அன்புறாதாரைக கண்டவிடத்தும் செற்றம் நீங்குவாரென அவர்மாட்டுச் செல்லாநின்றாய் எ - று.

இது தலைமகள் தலைமகன்மாட்டுச் செல்லக் கருதிய நெஞ்சொடு புலந்து கூறியது.

பரிப்:— இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் புலந்தவழி இன்னும் ஒருகால் உணர்த்துவோம் என்று கருதின நெஞ்சொடு புலந்து கூறியது.

இவை மூன்றும் புலவியின்கண் நிகழ்வதே ஆயினும் நெஞ்சொடு புலத்தல் சொல்கின்றாராதலின் ஈண்டுக கூறப்பட்டன.

பரிதி:— நாயகரைக்கண்டால் உறாதவரைப்போலக் கோபித்துப் பார்த்தபார்வை தவிர்த்துக் கிருபைப் பார்வை பார்ப்பித்தாய் நீ என்ன நெஞ்சு எ - று.

காளிங்:— நீ நம்மோடு அன்பில்லாதவரைக் கண்ட இடத்து மற்று அப்பொழுதே அவர் குணம் அறிந்து வைத்தும், இவர் நம்மைச் செறுப்பார் அலலர்: உவப்பார் போலும் என்று உட்கொண்டு மேன் மேல் செல்லுகின்ற நெஞ்சமே என்று இங்ஙனம் தன் நெஞ்சொடு புலந்தாள் எ - று.

1293. கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல். (௩)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— நெஞ்சே - நெஞ்சே; நீ பெட்டாங்கு அவர்பின்செலல் - என்மாட்டு நில்லாது நீ விருமபியவாறே அவர்மாட்டுச் செல்லுதற்குக் காரணம்; கெட்டார்கு நட்டார் இல் என்பதோ - கெட்டார்க்கு நட்டார் உலகத்து இல்லை என்னும் நினைவோ, நின் இயல்போ, கூறுவாயாக.

என்னைவிட்டு அவர்மாட்டுச்சேறல் நீ பண்டே பயின்றது என்பாள் பெட்டாங்கு என்றும், தான இதுபொழுது மானமிலளாகலின் கெட்டார்கு என்றும் கூறினள். பின் என்பது ஈண்டு இடப்பொருட்டு. செலல் என்பது ஆகுபெயர். *"ஒல்கிடத்துலப்பிலா உணர்விலார் தொடர்" பாயிற்று நினதொடர்பு எனபதாம்.

மணக்:— நெஞ்சே! நீ என்னிடத்து நில்லாது வேண்டின வண்ணமே அவர் பின்பே செல்கின்றது, கெட்டார்க்கு நட்டார் இல்லை என்பதனேயோ? எ - று.

பரிப்:— இது வாயில் மறுத்த தலைமகள் அவனோடு கூட்டம் வேண்டிய நெஞ்சொடு புலந்து கூறியது.

* கலித். 25: 20.

பரிதி:— கெட்டார்க்கு உற்றாரில்லை என்பது உன்னளவிலே கண்டேன் நெஞ்சே, நீ என்னைவிட்டு நாயகர்பின் செல்லுவதால் எ - று.

காளிங்:— நெஞ்சே! அவர்க்கு நம்மோடு அன்பு இல்லை ஆயினும் பின்னும் நீ அவரைக் காதலித்து அவர் பின் செல்லுதல் உலகில் கெட்டார்க்கு நட்டார் இல் என்று சொல்லும் முதுசொல் வழக்கோ தான்? எனவே யாம் இங்ஙனம் எம்மை விரும்பாதவர் தம்மேல் விழுதல் முறைமையோ தான் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"மேவாக் கணவனைமுன் வெஃகி னளாயணிதான்
மூவாத்துன் புற்றாள் முருகேசா - ஓவாமல்." —முருகேசர். 130.

1294. இனிஅன்ன நின்னொடு சூழ்வாரியார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று. (ச)

இதுவும் அது.

உரைப்பகுதி:

பரிமே:— நெஞ்சே - நெஞ்சே; துனி செய்து மற்றுத் துவ்வாய் - அவரைக் கண்டபொழுதே இன்பநுகரக் கருதுவதல்லது அவர்தவறு நோக்கி முன் புலவியை உண்டாக்கி அதனை அளவறிந்து பின் நுகரக் கருதாய்; இனி அன்ன நின்னொடு சூழ்வார் யார் - ஆகலான், இனி அப்பெற்றிப்பட்டவற்றை நின்னோடு எண்ணுவார் யார்! யான் அது செய்யேன்.

அப்பெற்றிப்பட்டன - புலக்குந்திறங்கள். காண் என்பது உரையசை. மற்று வினைமாற்றின்கண் வந்தது. முன்னெல்லாம் புலப்பதாக எண்ணி இருந்து பின் புணர்ச்சி விதும்பலின், இவ்வாறு கூறினள்.

மணக்:— நெஞ்சே! நீ புலவியை நீளச்செய்து, பின்னை நுகரமாட்டாய்; ஆதலான், இனி அப்பெற்றிப்பட்ட எண்ணத்தை நின்னோடு எண்ணுவார் யார்? இல்லை எ - று.

பரிப்:— தலைமகனோடு புலக்க நினைத்த நெஞ்சினை முன்பும் ஒரு நாள் புலந்து முடியநில்லாவாயினும்; இன்னும் புலப்பேனாக ஆயின்

அறை போகுவை. ஆகலான் தனியே எண்ணிக்கொள்கிறேன்; நின்னேடு எண்ணேன் என்று அதனேடு தலைமகள் புலந்து கூறியது.

பரிதி:— இனி யாருடனே ஒத்திருப்பாய் நாயகருடனே ஊடற் பிணக்காலை நீ கூட்டிக்கொள்ளுகிறாய்; உன்னை எங்ஙனம் நம்புவேன் எ - று.

காளிங்:— நெஞ்சே! மற்று அவரிடத்து வந்த காலத்து நாம் அவர்தம்மை எதிர் ஏற்றுக் கொள்ளாது சிறிது வலிந்து நின்று மறறு அவரோடு முன்னம துனி செய்து பின்னர்ககூடி நுகர்கம. அத்துணையும அவர்வயின் சென்று மண்டாது நிற்பாயாக என இவை நினக்கு யான் சொல்ல இயைந்தனை போன்று இருந்து மற்று அவரைக்கண்ட பொழுதே எதிர் ஏற்று அவை மறந்து துனி கருதாது துய்த்தலைப் பேணினை ஆதலால இனி அன்னவே நின்னேடு சூழ்வார் யார் என்பது பொருள் எ - று.

1295. பெறாஅமை அஞ்சும் பெறின்பிரி வஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு. (ரு)

வாயிலாகச் சென்ற தோழிகேட்பத் தலைமகள் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— பெறாமை அஞ்சும் - காதலரைப் பெறாதஞான்று அப்பெறாமைககு அஞ்சாநின்றது; பெறின் பிரிவு அஞ்சும - பெற்றக்கால் வரககடவ பிரிவினை உட்கொண்டு அதறகு அஞசாநின்றது; என் நெஞ்சு அறா இடும்பைத்து - ஆகலான், என் நெஞ்சம் எஞ்ஞான்றும் நீங்காத இடும்பையை உடைத்தாயிற்று.

காதலரைப் பெற்றுவைத்துக் கலவி இழத்தல் உறுதி அன்று என்னும் கருத்தான் வாயில் நேர்கின்றாளாகலின் பெறாமை அஞ்சும் என்றும, கலவியாராமையின் இன்னும இவர் பிரிவராயின் யாதுசெய்தும் என்பது நிகழ்தலின் பெறின்பிரிவஞசும என்றும, இவ்விரண்டும அல்லது பிறிதின்மையின் எஞ்ஞான்றும் அறாஇடும்பைத்து என்றும் கூறினாள்.

மணக்:— காதலரைப் பெறாதகாலததுப் புணர்வு இல்லையோ என்று அஞ்சும; பெறறேமாயின், பிரிவாரோ என்று அஞ்சும்; ஆதலால், இடைவிடாத துன்பத்தை உடைத்து என நெஞ்சு எ - று.

இது தலைமகள் ஆற்றாமைகண்டு, தூதுவிடக் கருதிய தோழிக்கு அவர் வந்தாலும் இதற்கு உள்ளது துன்பமே என்று அதனோடு புலந்து கூறியது.

பரிதி:— நாயகரைக் கூடாமல் அஞ்சும்; கூடினால் பிரிவார் என்று அஞ்சும்; ஆதலால் மாறாத துன்பம் பெற்றாள் எ - று.

காளிங்:— தோழீ! என் நெஞ்சமானது அவரைப் பெறாமையைக் கொண்டு அஞ்சும்: பெறுவது என்று கொல் என்று; இனிப் பெற்ற காலத்துப் பிரிவினை நினைந்து அஞ்சும்; பின் நுகர்ச்சி இன்பம் இழப்பேம் என்று; அதனால் இருவாற்றானும் இடையறாத இடும்பையினை உடைத்து: இனி எங்ஙனம் யாம் உய்வது எ - று.

1296. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய விருந்ததென் நெஞ்சு. (சு)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— என் நெஞ்சு இருந்தது - என் நெஞ்சு ஈண்டு இருந்தது; தனியே இருந்து நினைத்தக்கால் - காதலரைப் பிரிந்திருந்து அவர் கொடுமைகளை யான் தன்னொடு நினைத்தக்கால்; என்னைத் தினிய - அவ்வளவு அறிந்து என்னைத் தின்பதுபோன்று துன்பம்செய்தற்கே.

எமமாட்டு இருந்தது அன்று அவர்கொடுமைகளை உட்கொண்டு எனக்கு ஆற்றாமைசெய்தற்கே, இனறு அவைநோக்கி அவரொடு புலத்தற்கு அன்று என்பதாம.

மணக்:— என் நெஞ்சு, யான் தனிப்பட்டிருந்து நினைத்தால் உடம்படாது என்னை நலிவதாக இருந்தது எ - று.

இது தலைமகள் நெஞ்சு அவர் செய்கின்ற கொடுமையை யுட்கொண்டு உளளாதே, யான் தனிப்பட்டால் நலிவதாக இருந்தது; நீ வருதலானே இப்பொழுது தப்பினேன் என்று அதனோடு புலந்து தோழிக்குக் கூறியது.

பரிதி:— தனியே இருந்து நாயகர் கொடுமையை நினைந்தால் என்னைத் தினனும்படி மயல் துயரம் பெருகும் எ - று.

காளிங்:— தோழி! இப்பொழுது எனக்கு இனியதுபோன்று இருந்து மற்று அவர்பிரிந்த இடத்து விடாது நினைந்துகொண்ட காலத்து என்னைத் தின்னற்கு இருந்தது என் நெஞ்சு. எனவே இப்பொழுது உறவு போன்றது என்று பொருளாயிற்று எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

"காங்கையன்மீ தாசை காவாமல் அம்பையுளம்
ஏங்கிஎரி வீழ்ந்தாள் இரங்கேசா - ஆங்கே." —இரங். 130.

1297. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு. (எ)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— அவர் மறக்கல்லா என் மாணா மடநெஞ்சில் பட்டு தன்னைமறந்த காதலரைத் தான்மறக்கமாட்டாத என்மாட்சிமை இல்லாத மடநெஞ்சுடனே கூடி; நாணும மறந்தேன் - என் உயிரினும்சிறந்த நாண் தன்னையும் மறந்துவிட்டேன்.

மாணாமை - ஒருநிலையில்நில்லாமை. மடமை - கண்டவழி நினைந்து காணாவழி மறக்கும் தவற்றைக காணாவழிநினைந்து கண்டவழிமறத்தல். நாண் - எஞ்ஞான்றும் கூடி ஒழுகினும அஞ்ஞான்று கண்டார்போன்று ஒடுங்குதல். கண்டபொழுதே புணர்ச்சி விதுமபலின், அதனையும் மறந் தேன் என்றாள்.

மணக்:— என்கண் நெறிவர நினையும் நாணத்தையும் கடைப் பிடித்திலேன்; அவரை மறக்கமாட்டாத என் நன்மையில்லாத பேதை நெஞ்சோடு கூடடப்பட்டு எ - று.

இது தலைமகள் யான் நாணாது தூதுவிட்டது, பின் நெஞ்சு மறவாமையாலே என்று அதனோடு புலந்து கூறியது.

பரிதி:— என் நாயகர் என்னை மறக்க நான் நாண்மறந்தேன் அறிவில்லா நெஞ்சு என்வசம் வாராதபடியால் எ - று.

காளிங்:— தோழீ! முன்னம்போல நம்மை அருளாதவர் தம்மை நாம் இனி நெருங்குதல் தீது என்று நாணுதல நமக்குக கடன் அன்றே? மற்று அநநாணினையும மறநதேன்: அககொடியார் தம்மை ஒரு பொழுதும் மறக்கவல்லாத என் தீய நெஞ்சின்கண் அகப்பட்டு எ - று.

1298. எள்ளின் இளிவாமென் றெண்ணி அவர்திறம்
உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு. (அ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— உயிர்க் காதல் நெஞ்சு - உயிர்மேல் காதலை உடைய என் நெஞ்சு; எள்ளின் இளிவு ஆம் என்று எண்ணி - நம்மை எள்ளிச் சென்றார் என்று நாமும் எள்ளுவேமாயின் பின்நமக்கு இளிவாம் என்று கருதி; அவர் திறம் உள்ளும் - அவர் திறத்தினையே நினையாநின்றது.

எள்ளுதல் - வாயின் மறுத்தல். இளிவு வழிபடாமையானும், பிரிவாற்றாமையானும், நாணும் நிறையும் முதலிய இழத்தலானும் உளதாவது. திறம் வாயில் நேர்தலும் வருதலும் கூடலும் முதலாயின. இளிவிற்கு அஞ்சுதலானும் இறந்துபட மாட்டாமையானும் கூடக் கருதா நின்றது என்பதாம.

மணக்:— அவர் திறத்தைத் தானும் இகழ்ந்தால் அதனனே தனக்கு இளிவரவு உளவாகக் கருதி நினையாநின்றது சாவமாட்டாத நெஞ்சு எ - று.

இது தலைமகள் நெஞ்சு அவரைப்போலத் தானும் இகழலாயிருக்க இகழாநின்றதுமில்லை; அவர் செயலைக் கேளாது சாவவும் வல்லுகின்ற தில்லை என்று அதனேடு புலந்து கூறியது.

பரிதி:— நாயகரை நாம் இகழ்ந்து கூறின் இழிவாம் என்று நெஞ்சு வருந்தி அழுகுறைந்து என் நெஞ்சு உள்ளுள்ளே அவர் தன்மையை நினைந்திருக்கும் எ - று.

காளிங்:— தோழீ! அவர் நம்மாட்டுக் குற்றம் செய்து அகன்றனர் ஆயினும் அவர் திறம் பிறர்க்கு யாம் இகழ்ந்து உரைப்பின் பெரிதும் இளிவாம் என்று எண்ணி அவர் திறமே எப்பொழுதும் சிந்தியா நிற்கும் காண், அவரோடு உயிர்க்காதல் உற்ற என் நெஞ்சானது எ - று.

ஒப்புமைப்பகுதி:

"பலமாத ருள்வெள் வளையூ டுயர்ந்த பழுதில்சலம்
சலமா மெனஉயர் மாதே திருவெங்கைத் தாணுவெற்பின்
நலமா மனையறம செய்கடன் பூணு நயன்றிருந்து
குலமாதர் தங்கட் கியல்போ தங் கேள்வர் குறைசொல்வதே"
—திருவெங் - கோவை. 382.

1299. துன்பத்திற் கியாரே துணையாவர் தாமுடைய
நெஞ்சம் *துணை அல் வழி. (௯)

உணர்ப்புவயின்வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— துன்பத்திற்கு - ஒருவர்கருத் துன்பம்வந்துழி, அது நீகுதற்கு, தாம் உடைய நெஞ்சம துணையல்வழி - தாம் உரித்தாகப் பெற்ற தம்முடைய நெஞ்சம துணை ஆகாவழி துணையாவார் யாரே - வேறு துணையாவார் ஒருவரும இலலை.

ஈண்டுத் துன்பமாவது ஊடலுணர்ப்புவயின்வாராமை. அதற்கு நெஞ்சம் துணையாகாமையாவது அவளை அன்பிலள் என்றுழியாது கூடற்கண்ணே விதுமபல். ஒரு துணையுமின்மையின், இஃதுற்று விடுதலே உள்ளது என்பதாம்.

மணக்:— துன்பமுற்றால் அதற்குத் துணையாவார் உண்டோ? தம்முடைய நெஞ்சும் தமக்குத் துணையல்லாத காலத்து எ - று.

இது தலைமகள் துணையாவார் யாரென்ற தோழிககுக் கூறியது.

பரிப்: — துணை யாவார் யார் என்றது தோழியைக் குறித்து; தலைமகள் வாயில் மறுத்த இடத்து நெருங்கிக் கூறிய வழி உடன்பட்ட நெஞ்சொடு புலந்து வாயில் நேர்வாள் சொல்லியது.

பரிதி:— மயல் கொண்டார்க்கு யாரே துணையாவார்? தம்முடைய நெஞ்சு தம்முடன் வாராதபொழுது எ - று.

---

* 'தமரல் வழி' காளிங் - பாடம்.

காலிங்:— தோழீ! உலகத்து ஒருவர்க்கு உற்ற இடத்து உதவும் உறுதுணை யாவார் யாரே தான்? நாம நமக்கு உள்ளுறு துணையா உடைய நெஞ்சமே கூட ஒன்று உற்ற இடத்து உதவும் தமர் அல்லாத இடத்து எ - று.

முதுமொழிவெண்பாக்கள் :

" வந்தநெஞ்சை மீள வரவிட ஒண்ணாதோ
செந்தமிழ்சேர் கோவைத் தினகரா - பைந்தொடியார்." —தினகர. 134.

" கன்றால் விளவெறிந்த கண்ணனுடன் எம்மைவிட்டுச்
சென்றாயே நெஞ்சே சிவசிவா - ஒன்றாவித்." —சிவசிவ. 130.

1300. தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி. (கo)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— தாம் உடைய நெஞ்சம் தமர் அல்வழி - தாம் உரித்தாக உடையநெஞ்சம் ஒருவர்க்குத் தமர் அல்லாவழி; ஏதிலார் தமர் அல்லர் தஞ்சம் - அயலார் தமரல்லராதல் சொல்லவேண்டுமோ!

பிறள் ஒருத்தியைக காதலி என்று கருதி என் நெஞ்சே என்னை வருத்தாநின்றபின் அப்பிறள் புலககின்றது எளிது என்பதாம்.

மணக்:— தம்முடைய நெஞ்சும் தமகருச் சுற்றமல்லவாகுங் காலத்து, ஏதிலார் சுற்றமல்லாராவது சொல்லல்வேண்டுமோ? எ - று.

பரிப்:— தலைமகன் யாண்டு உளன் என்று குற்றேவல் மகளிரை அறியவிட, அவர் பரத்தையர் சேரியுளான் என்று கூறியவழி அவர் வந்த காலத்தில் நெஞ்சு நம்வழி ஒழுகாது அவர்வழி ஒழுகினல் அவர் ஏதிலர் ஆகுவது எளிதன்றோ என்று நெஞ்சொடுபுலநது கூறியது. ஏதிலார் என்றாள் பிறர் மனையிற் செல்லுதலான்.

பழைய:— தாம் உரித்தாகஉடைய நெஞ்சம் ஒருவர்க்குத் தமரல்லாவழி அயலார் தமரல்லராதல் சொல்லவேண்டுமோ எ - று.

காளிங்:— தோழீ! இவ்வுலகத்தில் தாம் தமக்கு உரிமையாக நெஞ்சங்கூடத் தமக்குத் துணை இல்லாத இடத்தினில், மற்று அயலார் தமக்குத் தஞ்சமும் அல்லார்; துணி எ-று.

தஞ்சம் என்பது எளிமைப் பொருட்டு இடுக்கண் உற்றவிடத்து எய்துதல் என்பது.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— அவர்நெஞ்சு, உறுஅதவர், கெட்டார்க்கு, இனியன்ன, பெருஅமை, தனியே, நாணும், எள்ளின், துன்பத்திற்கு, தஞ்சம்.

மணக்:— அவர்நெஞ்சு, தஞ்சம், எள்ளின், நாணும், இனியன்ன, தனியே, பெருஅமை, கெட்டார்க்கு, துன்பத்திற்கு, உறுஅதவர்.

பரிதி:— அவர்நெஞ்சு, உறுஅதவர், கெட்டார்க்கு, இனியன்ன, நாணும், எள்ளின், துன்பத்திற்கு, பெருஅமை, தனியே, தஞ்சம்.

காளிங்:— அவர்நெஞ்சு, தஞ்சம், உறுஅதவர், கெட்டார்க்கு, நாணும், எள்ளின், இனியன்ன, துன்பத்திற்கு, பெருஅமை, தனியே.

# 131. புலவி.

## தொகுப்புரை :

[ அவர் அடைகின்ற துன்பத்தைச் சிறிது பார்ப்போம். ஆதலால் அவரைத் தழுவாது இருந்து, புலப்பாயாக. ஊடல என்பது கறிக்கு உப்பிட்டதுபோலாம், ஊடல் சிறிது நீளுமாயின உப்பு மிகுந்தாற்போலாம். ஊடிய மகளிரை ஊடல் நீக்கிக் கூடா திருத்தல் முன்பே துன்புறறவரை மேலும் துன்புறுத்தியதுபோலாம். மேலும், வாடிய கொடியை அடியறுததுவிட்டதுபோலாம். நீலம்போலும் கண்ணையுடைய மகளிர் மனத்துண்டாகும் ஊடலே நல்ல தகுதியுடைய தலைவர்க்கு அழகு. சிறுகோபமும், பெரும் புலவியுமாகிய இந்த இரணடும இல்லையாயின் காதல் பிஞ்சும், அளிந்த பழமும் போலப் பயனற்றதாம். புணர்சசி நீட்டியாதோ எனறு கருதுவதால் ஊடற்கண்ணும் ஒரு துன்பம் உணடு. 'இத்தலைவி நமக்கு நொந்தாள்' என்று உணரும் தலைவரை இல்லாதவிடத்து நொநது பயன் என்ன? நீர் நிழலோடு கூடியிருப்பின் குளிர்ச்சியாயிருக்கும். அதுபோல ஊடலும் உணர்ந்த காதலன் கண்ணே இனிது. நான் ஊடலில் வருந்தவிடும் தலைவரோடு கூடுவோம் என்கிறது என் மனம். அதற்குக் காரணம் அவரே ]

## அதிகாரப்பொருள் :

*பரிமே:— அஃதாவது இருவர் நெஞ்சும் புணர்ச்சி விரும்பாது புலக்கக்கருதியவழி ஒருவரோடு ஒருவர் புலத்தல். அதிகாரமுறைமையும் இதனனே விளங்கும.*

*மணக்:— புலவியாவது தலைமகனோடு தலைமகள் புலந்து கூறுதல் இது வெளிப்பட்டுநிகழ்தலின், அதன் பின் கூறப்பட்டது.*

1301. *புல்லா திராஅப் [1]புலத்தை அவருறும்*
*[2]அல்லனோய் காண்கம் சிறிது.* (க)

வாயிலாகச்சென்ற தோழி தலைமகள் வாயில் நேர்தற்பொருட்டு
அவளொடு நகையாடிச் சொல்லியது.

---

[1] *'புலத்தல்' காளிங் - பாடம். 'புலத்தி' மணக் - பாடம்.* [2] *'அல்லல் யாம்' மணக் - பாடம்.*

**உரைப்பகுதி :**

பரிமே:— அவர் உறும் அல்லல் நோய் சிறிது காண்கம் - அங்ஙனம் புலந்தால் காதலர் எய்தும் அல்லல்நோயினை யாம்சிறிது காணக் கடவோம்; புல்லாது இராப் புலத்தை - நீ அவரை விரைந்துசென்று புல்லாதே இத்தொழிலை மேலிட்டுக் கொண்டிருந்து புலப்பாயாக.

அல்லல்நோய் - துன்பத்தைச் செய்யும் காமநோய். சிறிது என்றாள், புலவியை நீளவிடலாகாது என்பதுபற்றி. புலத்தை என்புழி ஐகாரம் *"கடம்பூண்டொருகானீவந்தை" என்புழிப்போல முன்னிலைவினை விகுதி. புலத்தி என்பதூஉம் பாடம். புலவிக்குறிப்புக்கண்டு அவள் வழியளாய் நின்று நாமுற்ற வருத்தம அவரும் சிறிதுற்றறிதல் வேண்டும் என நகையாடி நேர்வித்தவாறு.

மணக்:— நம் காதலர் வந்தால் புல்லாதிருந்து புலத்தல்வேண்டும்; அவ்விடத்து அவருறும கலக்கத்தை யாம் சிறிது காண்பேமாக எ - று.

இது வாயில் வேண்டிச் சென்ற தோழி தலைமகள் புலவிக்குறிப்புக் கண்டு முகங்கொடாமைப்பொருட்டு இனிமை கூறியது.

பரிதி:— இராக்காலம் இன்று சற்று நேரம் புலக்காமலிருந்து நாயகர் வருத்தம் காணவேணும் எ - று.

காளிங்:— நம் காதலர் வந்தால் புல்லாது இருந்து புலத்தல் வேண்டும்; அவ்விடத்து அவர் உறும் கலக்கம் யாம் சிறிது காண்போமாக எ - று.

1302. உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். (௨)

புலவி ஒழிந்து வாயில் நேரும்வகை அவள் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— புலவி உப்பு அமைந்தற்று - புலவி கலவி இன்பம் செய்தற்கு வேண்டுமளவிற்றாதல் உப்புத் துய்ப்பனவற்றை இன்சுவைய

* கலித். 63 : 12.

ஆக்கற்கு வேண்டும் அளவிற்றாதல்போலும்; சிறிது நீளவிடல் அது மிக்கற்று-இனி அதனை அவ்வளவிற்சிறிது மிகவிடுதல் அவ்வுப்பு அளவின் மிக்காற்போலும்.

நீளவிடல் அளவறிந்து உணராது கலவிமேல் எழுந்த குறிப்பு அழுங்குமளவுஞ் செய்தல. சிறிது நீளவிடலாகாதென்றாள், நேர்விகின்றாளாகலின். உப்பு மிககவழித் துய்ப்பது சுவையின்றானாற்போலப் புலவி மிக்கவழிக் கலவி இன்பம் இன்றாம் என்றமையின், இது பண்புவமை.

மணக்:— நுகர்வனவற்றிற்கு உப்பமைந்தாற்போல இனிமை உண்டாககும் புலவி; அதனை நீளவிடல் அவ்வுப்பு சிறிது மிககாறபோல இன்னாதாம் எ - று.

இது வாயில் வேண்டிய தோழிக்குத் தலைமகள் மறுத்தவிடத்துப் புலவியை நீளவிடுதல் தகாது என்று அவள் கூறியது.

பரிதி:— கறிகாய் அளவு அறிந்து உப்பிட்டுச் சமைத்ததற்கு ஒக்கும். புலவியும் கலவியும் ஏறாமல் குறையாமல் சமனாயிருக்கவேணும் எ - று.

காளிங்:— நுகர்வனவற்றிற்கு உப்பு அமைந்தாற் போல இனிமை உண்டாம் புலவி; அதனை நீளவிடில் அவ்வுப்பு மிக்காற் போல இன்னாதாம எ - று.

மேற்கோள்பகுதி :

இளம்:— உணர்ப்புவயின் வாரா ஊடலுற்றோள்வயின், உணர்த்தல்வேண்டிய கிழவோன்பால் நின்று, தான் வெகுண்டாக்கிய தகுதிக்கண் தோழி கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 148.)

நச்:— தலைவன் பிறழ்ந்த இடத்து அவன்சென்று சேரும் தகைமை இல்லாமைககுக காரணமாகிய புலவியின்கண் அழுந்திய தலைவி பக்கத்தளாய் நின்று அவள் புலவியைத் தீர்த்தற்கண் தோழி கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 150.)

ஒப்புமைப்பகுதி :

“ இலவி னிதழ்ச்செய்ய வாய்மங்கை உப்பமைந் திட்டதுபோ
புலவி யதுமிகுந் தற்றாகு நீட்டிடல் பொன்மலர்த்தார்

நிலவிடு வார்சடைக் கோடீச்சு ரேசர் நெடுங்கிரிமேல்
பலவின் புகழ்மன்னர் உன்தாள் பணிந்தனர் பார்த்தருளே."
—கோடீச்சுரக். 414.

**முதுமொழிவெண்பாக்கள்:**

"நேர்கண்டாய் ஊடல் நிலவுகண்டாய் மன்மதனார்
தேர்கண்டாய் கோவைத் தினகரா - சேர்கண்டாய்." —தினகர. 135.

"அரன்வாயி லாகச்சென் றாரூரா ரோடு
பரவையார் ஊடலுணர் பணபின் - உரைசெய்யும்." —முதுமொழி. 184.

"நீளொயின்பால் செல்கெனமா னெஞ்சயர மாலூடி
மூளனர்கோட் பட்டாள் முருகேசா - கோளகனும்."
—முருகேசர். 131.

"சத்திய பாமைமலர் தந்திலனென் றாடவுடன்
சித்தமகிழ் வித்தான் சிவசிவா - நித்தமுணற்(கு)." —சிவசிவ. 131.

"ஓராப் பரவைக் குமாபதியைத் தூதாக்கித்
தீராப் புலவியையும் தீர்த்தாரே - ஆரூரர்." —திருத். 23.

1303. அலந்தாரை அல்லலநோய் செய்தற்றால் *தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல். (ரு)

பரத்தையரிடத்துநின்றும் வந்த தலைமகனொடு
தலைமகள் புலந்து சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல் - தம்மைப் பெறாது புலந்த மகளிரைப் புலவிநீக்கிக் கலவாது ஆடவர் சேறல்; அலந்தாரை அல்லல்நோய் செய்தற்று - பண்டே தனபமுற்று அழிந்தாரை அதன்மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற்போலும்.

பிறர்பாற்சேறலின் நம்மைப் பெறாது புலந்து ஊடியிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவிநீக்கிப் புல்லீராயின் அவர் ஆற்றார் என்பதாம்.

---

* 'காமம்' பரிப் - பாடம்.

பரிப்:— முன்பே கலக்கம் உற்று அழிந்தாரை அதன்மேலும் அல்லல் செய்யும் நோயைச் செய்தாற் போலும : காமத்தில் புலந்தாரை முயங்காது விடுதல எ - று.

இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் புலந்துழி அதனை அறிந்து அகம்புக்க தோழி தலைமகற்குச் சொல்லியது.

பரிதி:— நல்லோர்க்குத் துன்பம் செய்ததற்கு ஒக்கும் முடியப் பிணக்கறுத்துக் கூடாத இன்பம் எ - று.

காளிங்:— முன்பு கலக்கம் உற்று அழிந்தாரை அதன் மேலும் அல்லல் நோயைச் செய்தாற்போலும் காமத்தினால் புலந்தாரை முயங்காது விடுதல் எ - று.

## மேற்கோள்பகுதி :

இளம்:— புலத்தலும் ஊடலும் ஆகிய விடத்தும் சொலத்தகு கிளவி தோழிக்குரிய என்பதற்கு மேற்கோள். (தொல். பொருள். 155.)

நச்:— ஷை (தொல். பொருள். 157.)

1304. ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று. (௪)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— ஊடியவரை உணராமை - நும்மோடு ஊடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடாது கழிதல் - வாடிய வள்ளி முதல் அரிந்தற்று - பண்டே நீர் பெறாது வாடிய கொடியை அடியிலே அறுத்தாற் போலும்.

நீர் பரத்தையரிடத்திர் ஆயவழி எம்புதல்வரைக் கண்டு ஆற்றியிருக்கற்பாலமாய யாம் நம்மோடு ஊடுதற்கு உரியமல்லம், அன்மையின் எம்மை உணர்த்தல் வேண்டா, உரியராய் ஊடிய பரத்தையரையே உணர்த்தல் வேண்டுவது, அதனால் ஆண்டுச் சென்மின் என்பதாம்.

மணக்:— நும்மோடு ஊடிக்கண்டும் இவையிற்றால் வரும் பயன் இல்லை; நின்னோடு நெருநல் ஊடிய காமக்கிழத்தியரை ஊடல் தீராது பெயர்தல், வாடிய கொடியை அடியிலே அறுத்தாற் போலும் எ - று.

இது காமக்கிழத்தியரை ஊடல் தீராமை தீது; ஆண்டுப்போம் என்று தலைமகள் கூறியது.

பரிப்:— நும்மொடு ஊடினவரை ஊடல் தீராது வருதல் முன்பே வாடின கொடியைத் தூரிலே அரிந்தாற் போலும் எ - று.

இது தலைமகன் தன்னை ஊடல்தீர்ப்பச் செய்தவற்றைக் கண்டு, இவையிற்றால் ஈண்டுப் பயன் இல்லை. நின்னோடு நெருநல் ஊடிய காமக் கிழத்தியை ஊடல் தீராது பெயர்ந்தாய்; அது தக்கது அன்று; ஆண்டுப்போ என்று தலைமகள் கூறியது. எமக்கு மக்களை வளர்த்து அறம் நோக்குமது அல்லது காமத்தால் பயன் இல்லை எ - று

பரிதி:— ஊடிய நாயகரை உறவுசெய்யாமல் இருந்த நெஞ்சே! உன்னாலே நாயகர் பிரிந்தார். இனி வாடிய கொடிக்கு வேரற்றது ஒக்கும்; அழகு அழியும் எ - று.

காளிங்:— தம்மோடு ஊடினவரை ஊடல் தீராது வருத்துவது முன்பே வாடிய கொடியை வேர் முதலோடும் அரிந்தாற் போலும் எ - று.

## முதுமொழிவெண்பாக்கள் :

“ அன்பர் திருநீல கண்டர் அணியிழைபால்
இன்பம் துறந்தார் இரங்கேசா - முன்பாக.” —இரங். 131.

1305. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து. (ரு)

தலைமகளைப் புலவிநீக்கிக் கூடிய தலைமகன் தன்னுள்ளே சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— நலத்தகை நல்லவர்க்கு ஏர் - நற்குணங்களால் தகுதியுடையராய தலைவர்க்கும் அழகாவது; பூ அன்ன கண்ணார் அகத்துப் புலத்தகை - தம்பூவன்ன கண்ணார் நெஞ்சின்கண் நிகழும் புலவி மிகுதியன்றே.

சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தவறு இல்லார்க்கும் புலவி இனிது என்பான், நலத்தகை நல்லவர்க்கும் என்றான். அழகு

இன்பப் பயனைத் தலைப்படுதல். தான் நுகர்ந்த இன்பத்திற்கு ஏது வாகிய புலவியை வியந்து கூறியவாறு.

மணக்:— நலத்தகையினுனே நல்லாரான பரத்தையர்க்கு ஓரழகாம்; பூ வன்ன கண்ணார்மாட்டுப் புலத்தல் எ - று.

நமக்கு ஆகார்மாட்டுப் புலத்தல் தீது என்றவாறு. இது பரத்தை யோடு புலந்து கூறிய தலைமகட்குத் தோழி கூறியது.

*பரிதி:— நல்ல ஆபரணம் இராக்காலம் நல்ல பெண்மை உடையார்க்காம் நல்ல ... ... ... ம எ - று.

காளிங்:— பரத்தையரொடு புலந்து கூறிய தலைமகட்குத் தோழி சொல்லுமாறு நலத்தகையினுனே நல்ல கற்புடைய மகளிர்கள்மாட்டுப் புலத்தல தீது எனவே மற்றுப் பரத்தையர்கு அழகாம் பூவன்ன கண்ணார்மாட்டுப் புலத்தல் எ - று.

முதுமொழிவெண்பாக்கள்:

"கொண்ட பரவை கொடும்புலவி எல்லாம்வன்
றொண்டர்க்குப் பேரழகே சோமேசா - தண்டா." —சோமேசர். 131.

1306. துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. (சு)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— துனியும் புலவியும் இல்லாயின் - முதிர்ந்த கலாமாகிய துனியும் இளையகலாமாகிய புலவியும் இல்லையாயின்; காமம் கனியும் கருக்காயும் அற்று - காமம செவ்வி முதிர்ந்த பழமும் இளங்காயும்போலும்.

மிகமுதிர்ந்து இறும் எல்லைத்தாய கனி நுகர்வார்க்கு மிகவும் இனிமை செய்யாது ஆதலின் துனியில்லையாயின் கனியற்று என்றும், கட்டிளைமைத்தாய காய் நுகருஞ் செவ்வித்தன்றாகலின் புலவியில்லை யாயின் கருக்காயற்று என்றும் கூறினான். இவ்விரண்டும் வேண்டும் என்று வியந்து கூறியவாறு.

* இவ்வுரை விளங்கவில்லை.

மணக்:— உணராது நீட்டிக்கின்ற துனியும் உணர நீள்கின்ற புலவியும் இல்லையாயின், காமம் அழுகிய பழமபோலப் புளிக்கும்; காய் போலத் துவர்க்கும் ஆதலால் எ - று

இஃது உணர்தற்கு நல்லது உளதென்று தலைமகள் கூறியது.

பரிப்:— இது தலைமகள் புலவி நீட்டித்தவழித் துனி இல்லையாயின் பழம போல இனிமைதரும்; புலவி இல்லையாயின் காய்போலத் துவர்க்கும் ஆதலான் இஃது உணர்தற்கு நல்லளவு என்று கூறியது.

பரிதி:— துனியும் புலவியும் இல்லாத காமம் பழத்தைப்போட்டுக் காயைத் தின்றதற்கு ஒக்கும எ - று.

காளிங்:— தலைமகள் நீட்டித்த பெரும் பிணககு ஆகிய துன்பம் இல்லை ஆயின் கனிந்த பழம போல இனிமை தரும. மற்றுச் சிறு பிணக்காகிய புலவி இல்லையாயின் காமம பசுங்காய் போலத் துவர்க்கும் ஆதலால எ - று.

## ஒப்புமைப்பகுதி :

"முயங்காக்கால் பாயும பசலைமற் றாடி
உயங்காக்கால் உப்பின்றாம காமம - வயங்கோதம
நில்லாத் திரையலைக்கும் நீள்கழித்தண் சேர்ப்ப
புல்லாப் புலப்பதோர் ஆறு." —நாலடி. 391.

1307. ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொல் என்று. (எ)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— புணர்வது நீடுவது (கொல்) அன்றுகொல் என்று - இனிப் புணர்ச்சி நீட்டிக்குமோ நீட்டியாதோ என்று கருதலான்; ஊடலின் ஓர் துன்பம் உண்டு - இன்பத்திற்கு இன்றியமையாத ஊடலின் கண்ணேயும் ஒரு துன்பம் நிகழும்.

என்று என்னும் எச்சத்திற்குக் கருதலான் என்பது வருவிககப் பட்டது. சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கொல் என்பதனை நீடுவது

என்பதனுடனும் கூட்டுக. ஆங்கு என்பது அசைநிலை. ஊடல் கூடற்கண் விரைவித்தல் கூறியவாறு.

மணக்:— ஊடல் செய்யின் இன்பம் உண்டாயினும், அதன் கண்ணும் ஒரு துன்பம் உண்டு; புணருங்கால் அது நீட்டிக்குங்கொல்லோ? நீட்டியாதோ? என்று ஐயுறுதலால் எ - று.

இது தலைமகள் ஆற்றாமை வாயிலாகப் புலக்க, தலைமகன் அது கண்டு சொல்லியது.

பரிதி.— புலவிக்கு ஒரு துன்பம் உண்டு. புணர்வது நாட்செல்லும் என்னும் துயரம் அது எ - று

காளிங்:— ஊடற்செவ்வி இன்பம் உண்டாயினும் அதன் கண்ணும் ஒரு துன்பம் உண்டு. புணருங்கால் நீடுவது கொல்லோ நீடாது கொல்லோ என்னுதல எ - று.

மேற்கோள்பகுதி :

இளம்:— 'பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது, உயங்குவனள் கிடந்த கிழத்தியைக் குறுகி, அலகல் முன்னிய நிறையழி பொழுதின், மெல்லென் சீறடி புல்லிய இரவினும' என்ற தலைவன் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 144.)

நச்:— ஊடலை விரும்பிக்கூறிய தலைவன் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 146.)

1308. நோதல் எவன்மற்று நொந்தாரென் றஃதறியும்
*காதலர் இல்லா வழி. (அ)

உணர்ப்புவயின்வாரா ஊடற்கண் தலைமகன் தலைமகளோடு புலந்து சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— நொந்தார் என்று அஃது அறியும் காதலர் இல்லா வழி - இவர் நமபொருட்டாக நொந்தார் என்று அந்நோவினை அறியும் அன்புடையாரைப் பெறாவழி; நோதல் மற்று எவன் - ஒருவர் நோகின்ற தனால் பயன் என்ன!

* 'காதலவரில் வழி' மணக் - பாடம்.

அறிதல் ஈண்டு ஊடலை இனிது உணர்தல். மற்று வினைமாற்றின் கண் வந்தது. இவள் நங்காதலி அல்லள், அன்மையின் இந்நோய் அறியாள், அறியாமையின் நாம் புலக்கின்றதனாற் பயனில்லை எனத் தன் ஆற்றாமை உணர்த்தியவாறு.

மணக்:— யான் நோகின்றதனால் பயன் என்னை? இவர் நொந்தார் என்று நினைத்து, அதனை அறிந்துதீர்க்கும் காதலர் மனமில்லார் ஆகியவிடத்து எ - று.

இஃது உணர்ப்புவயின்வாரா ஊடற்கண் தலைமகன் புலந்துழி, அதனையறிந்து அகம்புக்க தோழி அவனுக்குச் சொல்லியது.

பரிதி:— காதலர் இல்லாவிடத்து நெஞ்சே! மயல் நோய் கொள்ளாதே. அவர் இருந்தாலல்லவோ உன் மயல் வருத்தம் அறிந்து விசாரிப்பார் எ - று.

காளிங்:— யான் நோகின்ற அதனால் பயன் என்னை? நொந்தார் என்று நினைந்து அதனை அறிந்து தீர்க்கும் அன்பு அவர் இலர் ஆகிய இடத்து எ - று.

1309. நீரும் நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது. (கூ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— நீரும் நிழலதே இனிது - உயிர்க்கின்றியமையாத நீரும் நிழலின்கண்ணதே இனிதாவது ஏனை வெயிலின்கண்ணது ஆகாது; புலவியும் வீழுநர்கண்ணே இனிது - அது போலக் கலவிக்கு இன்றியமையாத புலவியும் அன்புடையார்கண்ணே இனிதாவது, ஏனை அன்பிலார்கண் ஆகாது.

நிழற்கண் இருந்த நீர் குளிர்ச்சிமிகுதலாகம தணித்தலின் இனிதாயிற்று. வீழுநர் ஆற்றாமைக்கு நோதலும் கூடுதற்கண் வேட்கையும் உடையராவார். இவள் நம்மாட்டு அவ்விரண்டும் இன்மையின் இப்புலவி தானும் இன்னாதாகாநின்றது என்பதாம்.

*மணக்:— குளிர்ச்சியைத் தனக்கு இயல்பாக வுடைய நீரும நிழலின் கண்ணதேயாயின், இனிதாம்; அதுபோல, புலவியும் அன்பு உடையார்மாட்டேயாயின், இனிதாம் எ - று.

பரிப்:— மேல் புலவியின் கண் ஒரு துன்பம் உண்டு என்று தலைமகன் கூறிய சொற்கேட்டு அஃது இன்பமாவது அன்பு உடையார்க்கு : நுமக்கு அன்பின்மையால் துன்பம உண்டாயிற்று என்று தலைமகள் கூறியது.

பரிதி:— நிழலைச் சேர்ந்த நீர் நன்று; அதுபோல நாயகர் நல்லராகில் புலவி நன்று எ - று.

*காளிங்:— குளிர்ச்சியைத் தனக்கு இயல்பாக உடைய நீரும் நிழலின்கண்ணே இனிதாம். அது போலப் புலவியும் அன்புடையார் மாட்டே ஆயின் இனிதாம எ - று.

## குறிப்பு:

கீழ் உட்பகை அதிகாரத்து " நிழனீரும் இன்னாத இன்னா " (881) என்றார். அதற்குப் பரிமேலழகர் 'நிழலும் நீரும முன் இனியவாயினும பின் இன்னாதாயின் பெருங்கால பெருவயிறு முதலிய நோய் உண்டாக்கும்' என்று உரைகண்டார். ஈண்டு " நீரும் நிழலது இனிதே " என்றார். ஆண்டும, நிழலுக்கும நீருக்கும் இனிமையுண்டு; பின் இன்னாசெய்யுமாயின் தீது என்பதே வலியுறுக்கப பெற்றது. இதனால், வெப்ப நீக்கும்வரை நிழனீரும் இனிது என்பதே விளக்கப்பெற்றது. வெப்பமுற்றார்க்கல்லது நிழல்நீர் இனிமை பயவாது; விழுநர் இல்லையாயின் புலவியும் இனிமை பயவாது என்றமையின் முரணுதற்கே இடமின்மை தெளிவு.

—தொகுப்பாசிரியர்.

1310. ஊடல் உணங்க விடுவாரோ டென்னெஞ்சம்
கூடுவேம் என்ப தவா. (௧௦)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— ஊடல் உணங்க - தான் ஊடற்கண்ணே மெலியா நிற்கவும்; விடுவாரோடு கூடுவேம என்பது என் நெஞ்சம அவா - விட்டிருக்கவல்லாரோடு கூடக் கடவேம் என்று என் நெஞ்சம் முயறற்கு ஏது தன் அவாவே, பிறிதில்லை.

*இவ்விருவர் உரையும் சிறிதுமாற்றமும் இன்றி அப்படியே ஒத்திருப்பதுகாண்க.

அன்பும அருளும் இல்லாதாரை உடையர் என்றும் அவரோடு யாம் கூடுவம என்றும கருதி அதற்கு முயறல் அவாவுற்றார் செயலாகலின், கூடுவோம் என்பதவாவாம் என்றார். காரியம் காரணமாக உபசரிககப் பட்டது. இக்கூட்டம் முடியாது என்பதாம்.

மணக்:— என் புலவியைச் சாகவிட்டிருக்க வல்லாரோடு என் நெஞ்சு, கூடுவேமென்று நினைககின்றது தன்னுசைப்பாட்டால் எ - று.

இது புலவி நீங்கவேண்டுமென்ற தோழிக்குத் தலைமகள் புலவி தீர்வாளாய்ச் சொல்லியது.

பரிப்:— இஃது உணர்ப்புவயின் வாரா ஊடற்கண தலைமகன் புலந்தது கண்டு புலவி நீங்கவேண்டும் என்ற தோழிககுப் புலவி தீர்வான் சொல்லியது.

பரிதி:— ஊடற்கண் உணர்வு செய்யாமல் காமக் கலவியைக் கருத்தழித்தவரை, நெஞ்சே! நீ கூடுவோம் என்பது என்? எ - று.

காளிங்:— எமது புலவியைச் சாக உலத்தி விட்டவரோடு என் நெஞ்சம் கூடுவேன் என நினைக்கினறது எலது ஆசைப்பாடு எ - று.

புலவியின் நுண்ணிய புலவி என்று கூறினமையால் வேறு பகுத்து அதன்பின் கூறப்பட்டது மேலை அதிகாரம்.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— புல்லா, உப்பமைந், அலந்தாரை, ஊடி, நலத்தகை, துனியும, ஊடலின், நோதல், நீரும், ஊடல்.

மணக்:— புல்லா, நலத்தகை, உப்பமைந், நீரும், துனியும், ஊடி, நோதல், ஊடல், அலந்தாரை, ஊடலின்.

பரிதி:— நோதல், நீரும், ஊடல், ஊடி, அலந்தாரை, துனியும், உப்பமைந், புலலா, நலத்தகை, ஊடலின.

காளிங்.— புல்லா, நலத்தகை, உப்பமைந், ஊடலின், நீரும், துனியும், ஊடி, நோதல், அலநதாரை, ஊடல்.

# 132. புலவி நுணுக்கம்.

## தொகுப்புரை :

[ புறத்தொழுக்கம் உடைய தலைவ! உன்பார்வை பெண்தன்மை உடையார் பலரும் தம் கண்ணால் பொதுவாக நுகர்வதால் நான் பொருந்தமாட்டேன். நாம் ஊடியிருக்க அவர் தும்மினர். ஏன்தெரியுமா? 'நாம் ஆயுசு நூறு என்போம்' என்று எண்ணிக்கொண்டு. மாலையைச் சூடினாலும் நீர் வேறு ஒருத்திக்குக் காட்டச் சூடினீர் என்று ஊடுவாள. நம்போன்ற காதலர் எல்லாரினும் நாம் இருவரும் மிகுந்த காதலை உடையோம் என்றேனாக, அவள் 'மகளிர் யாரினும்' என்று எண்ணிக்கொண்டு ஊடினாள். இப்பிறப்பில் நாம் பிரியோம் என்றேன்; அவள் மிகக் கண்ணீர் அரும்பினள். நான் உன்னை இடைவிடாமல நினைத்துக்கொண்டேன் என்றேன், அவள் 'அப்படியானால் மறந்துதானே நினைத்திருப்பீர்கள் என்று ஊடினாளாகத்தழுவாள் ஆயினள். நான் தும்மினேன். அவள் ஆயுசு நூறு என்று வாழ்த்தினாள். உடனே எவள் நினைக்கத் தும்மினீர் என்று மறுத்து அழுதாள். நான் தும்மலையடக்க, தலைவியர் தங்களை நினைப்பதை எமக்கு மறைக்கிறீரோ என்று அவள் அழுதாள். அவள் ஊடியகாலத்து அவளைப் பணிந்தாலும் இப்படித்தானே எல்லாரையும் பணிவீர் என்று ஊடுவாள். இப்படி வாய்பேசினாலும், பணிந்தாலும்தான் ஊடுகிறாளே என்று அவள் அவயவங்களை மௌனமாகப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். அவள் எவள் உறுப்போடு எம் உறுப்பு ஒத்திருக்கிறது என்று எண்ணிப்பார்க்கிறீர் என்று ஊடினாள்.]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அது புலவியது நுணுக்கம் என விரியும். அஃதாவது தலைமகனும் தலைமகளும் ஓர் அமளிக்கண் கூடியிருந்துழி அவன்மாட்டுப் புலத்தற்காரணம் இல்லையாகவும் காதல் கைம்மிகுதலான் நுண்ணியதோர் காரணம் உளதாக உட்கொண்டு அதனை அவன்மேலேற்றி அவள் புலத்தல். காரணத்தின் நுணுக்கம காரியத்தின்மேல் நின்றது. அதிகார முறைமையும் இதனானே விளங்கும்.*

மணக்:— *புலவிநுணுக்கமாவது தலைமகன்மாட்டுத் தவறிலவாயினும், தன்காதல மிகுதியால சொல்லெச்சத்தினானும் குறிப்பெச்சத்தினானும் வேறுபடப் பொருள்கொண்டு, தலைமகள் புலந்து கூறுதல். இது செவ்வியிற்றோன்றுவது ஆதலின் நுணுக்கமாயிற்று.*

பரிப்:— *இது செவ்வையில் தோன்றுமையின் உள்ளுறை ஆயிற்று. புலவியினும் நுண்ணிய புலவி என்று கூறினமையால் வேறுபடுத்து அதன்பின் கூறப்பட்டது.*

1311. பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுஉண்பர்
நண்ணேன் *பரத்தநின் மார்பு. (க)

உலாப்போய்வந்த தலைமகன் பள்ளியிடத்தானாகத் தலைமகள் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— *பரத்த - பரத்தமையுடையாய், பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுஉண்பர் - நின்னைப் பெண்ணியல்பினை உடையார் யாவரும் தம் கண்ணால் பொதுவாக உண்பர்; நின் மார்பு நண்ணேன் - அதனால் அவர் மிச்சிலாய நின் மார்பினைப் பொருந்தேன்.*

*கற்பு நாணம் முதலிய நற்குணங்கள் இன்மையின் பரத்தையர்க்கு உள்ளது பெண்ணியற்கை மாத்திரமே என்னும் கருத்தால் பெண்ணியலார் என்றாள். பொதுவாக உண்டல் தஞ்சேரிச்செலவின் முறையான் அன்றி ஒருகாலத்து ஒருங்குநோக்குதல; அதுவும் ஓர்குற்றம். தாம் நோக்கி இனபுற்றவாறே அவரும் நோக்கி இன்புறுவர் என ஆசங்கித்து அவர்பால் பொறாமை எய்துதலின், நுணுக்கமாயிற்று.*

மணக்:— *பரத்தமையை உடையாய்! நின்மார்பைப் பெண்மை உடையார் எல்லாரும் தமக்குப் பொதுவாக நினைத்துக் கண்ணினாலே நுகராநிற்பர்; அதனால், யான் அதனைத் தீண்டேன் எ - று.*

*இது தலைமகள் புலவிகண்டு என்மாட்டுக் குற்றம் யாதோ என்று கூறிய தலைமகற்கு அவள் கூறியது.*

பரிதி:— *நாயகரே! நீ பவனிபோதுவையாகில் பார்த்த மாதர் உன் செவ்வியழகைக் கண்டு கண்ணினாலே போகம கொள்ளுவர். ஆதலால் உன் மார்பை யான் வேண்டேன் எ - று.*

காளிங்:— *பரத்தையரால் விரும்பப்பட்ட பரத்தைமையையுடையாய்! நின் மார்பு பெண்ணின் தகைமையை உடையார் எல்லாரும் பொதுவாக நினைத்துக் கண்ணினாலே நுகரா நிற்பர். அதனால் யான் அதனைத் தீண்டேன் எ - று.*

---

* 'பரத்தா' காளிங் - பாடம்.

**ஒப்புமைப்பகுதி :**

“ கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பதக்கென்(று)
ஒருங்கொப்பக் கொண்டானும் ஊரன் - ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடா(து)
என்னையும் தோய வரும்.” —நாலடி. 387.

**முதுமொழிவெண்பாக்கள் :**

“ பாருலா வுங்கண் படைத்தமின்னார் வீதிஎல்லாம்
சீருலா வந்தாய் தினகரா - ஊரிலுள்ள.” —தினகர. 136.

1312. ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து. (உ)

தலைமகன் நீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள்
பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— ஊடி இருந்தேமாத் தும்மினார் - யாம் தம்மோடு ஊடி உரையாடாதிருந்தேமாகக் காதலர் தும்மினார்; யாம் தம்மை நீடுவாழ்க என்பாக்கு அறிந்து - அது நீங்கித் தம்மை நீடுவாழ்க என்று உரையாடுவேமாகக கருதி.

தும்மியக்கால் வாழ்த்துதல் மரபாகலான், உரையாடல் வேண்டிற்று என்பதாம். இயல்பாக நிகழ்ந்த தும்மலைக் குறிப்பால் நிகழ்ந்ததாகக் கோடலின், நுணுககமாயிற்று.

மணக்:— தம்மோடு புலந்து உரையாடாது இருந்தேமாக; அவ்விடத்து யாம் தம்மை நெடிது வாழ்வீர் என்று சொல்லுவேம் என்பதனை அறிந்து தும்மினார்.

இது தலைமகள் தோழிக்குக் கூறியது.

பரிப்:— இஃது ஆற்றாமை வாயிலாகப் புக்க தலைமகன் புணர்ந்து நீங்கிய பின் அகம் புக்க தோழிக்கு அவர் செய்த களவு இது என்று தலைமகள் கூறியது.

பரிதி:— ஊடியிருக்கையில் நாயகர் தும்மினார்; நாயகி வாழ்த்தினால் ஊடல் தீரலாம என்று; அதறவறிந்து நாயகி தன் மங்கல நாணைத் தொட்டு மனத்திலே வாழ்த்தினாள் எ - று.

[1]காளிங்:— தம்மோடு புலந்து உரையாடாது இருந்தேம். அவ் விடத்துத் தும்மினார்: யாம் தம்மை நெடிது வாழ்வீர் என்று சொல்லு வோம் என்பதனை அறிந்து எ - று.

புலவி நீக்கிப் புணர்ந்த தலைமகன் மற்றுள்ள நாள்களில் இப் புணர்ச்சி பெரியதோர் இன்பம் உடைத்து என்றற்குக் காரணமாகிய ஊடலுவகை அறிவிக்கின்றது மேலை அதிகாரம்.

1313. கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீர் என்று. (௩)

தலைமகள் புலவிக்குறிப்பினைக் கண்டு நீவிர்கூடி ஒழுகாநிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— கோட்டுப்பூச் சூடினும் - யான் கோடுதலைச் செய்யு மாலையைச் சூடினேனாயினும்; ஒருத்தியைக காட்டிய சூடினீர் என்று காயும் - நும்மால் காதலிக்கப்பட்டாள் ஒருத்திக்கு இப்பூவணிகாட்டல் வேண்டிச் சூடினீர் என்று வெகுளாநிற்கும், இத்தன்மையாட்கு ஒரு காரணம் வேண்டுமோ!

கோடு என்பது முதனிலைத்தொழிற்பெயர். பூ ஆகுபெயர். வளைய மாகச் சூடினும் என்பதாம்; [2]"கோட்டங் கண்ணியும் கொடுந்திரை யாடையும்" என்றார் பிறரும். இனி அமமருதநிலத்துப்பூவன்றி வேற்று நிலத்துக கோட்டுப்பூவைச் சூடினேனாயினும ஈண்டையாள் பிறளொருத் திக்கு அவ்வேற்றுப்பூவணி காட்டல்வேண்டிச் சூடினீர் என்று வெகுளும் எனினும் அமையும்.

மணக்:— பக்கப்பூச் சூடினும் ஒருத்திக்குக் காட்டுதற்காகச் சூடினீர் என்று சொல்லிக் காயும் எ - று.

---

[1]"இனிவரும் குறள்களுக்கு இவர் உரை மணக்குடவர் உரையை அப்படியே ஒத்துள்ளது காண்டற்குரியது." [2]'புறம்' 275.

பக்கப்பூ - ஒப்பனைப்பூ. கோட்டுப்பூச் சூடினீர் என்பதற்கு வளைப் பூச் சூடினீர் எனினுமாம். இது கோலஞ்செய்யினும் குற்றம் என்று கூறியது.

பரிப்:— பக்கப் பூ - ஒப்பனைப் பூ. வளையப்பூச் சூடினும் என்றும் ஆம். அன்றியும கோட்டுப்பூச் சூடினேன் ஆயின் இப்பூ இந்நிலத்தில் உள்ளது ஒன்றல்ல; பிறர் நிலத்தில் உள்ளது என்று ஐயுற்று வெகுளும். இதனை நீர் சூடியதும் அந்நிலத்தில் உள்ளாள் ஒருத்தியை எனக்கு அறிவித்தற்பொருட்டு என்று சொல்லி என்றுமாம். கோட்டுப்பூ - மருத நிலம் அல்லாத நிலத்தில் உள்ள பூ. இது கோலம் செய்யினும் குற்றமாம் என்று கூறியது.

பரிதி:— செண்பகப்பூ, பாதிரிப்பூ, புன்னைப்பூச் சூடினும் குறிஞ்சி நிலத்து நாயகியை வேண்டிச் சூடினீர் என்று ஊடினாள் எ - று.

காளிங்:— பக்கப்பூச் சூடினும் காயும்; ஒருத்தியைக் காட்டுதற்காகச் சூடினீர் என்று எ - று.

பககப் பூ - ஒப்பனைககுச் சூடிய பூ; வளையப்பூச் சூடினும் என்றும் ஆம். அன்றியும், கோட்டுப் பூச் சூடினேன் ஆயின் இப் பூ இந்நிலத்து உள்ளது ஒன்றல்ல; பிறர்நிலத்துள்ளது என்று மிக வெகுளும்; இதனை நீர்த் சூடியது அந்நிலத்து உள்ளாள் ஒருத்தியை எனக்கு அறிவித்தற் பொருட்டு என்று சொலலி என்றும் ஆம். கோட்டுப் பூ - மருத நிலம் அல்லா நிலத்துப் பூ. தாளிப்பூ என்பாரும் உளர். கோலம செய்யினும் குற்றமாம் என்று கூறிற்று.

## மேற்கோள்பகுதி :

இளம்:— தலைவன் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 144.)

தெய்வச்:— ஒருத்திக்கு எனற்பாலது ஒருத்தியை என இரண்டாவதனோடும் மயங்கிவந்தது என்பர். (தொல். சொல். 107.)

## குறிப்பு :

இக்குறட்கு, கோடுதலையுடைய மாலையைச சூடினும் என்பர் பரிமேலழகர். பிறர், மரங்களின பூவைச சூடினும எனபா. புலவி மருததது உரிப்பொருளாதலானும, மருதத்தலைவி தன்தலைவன் மருதநிலபபூவை விட்டு வேற்றுப்பூவாகிய மரப்பூவைச்

சூடினும் அந்த நிலத்துப் பெண்ணைத் தலைவன் உணர்த்துகிறான் என ஊடினாள் என்பதே சிறந்த உரையாதல் காண்க. அன்றி, கோடு-மலையெனப் பொருள்கொண்டு புலவியிடத்ததாகிய மருதப்பூவை ஒழித்து, புணர்ச்சி உரிப்பொருள் கொண்ட குறிஞ்சிப்பூவைத் தலைவன் சூடி உணர்த்தக் கருத - தன்னை ஒழித்தும் தலைவற்குப் பிறள் புணர்ச்சி உண்டென உணர்த்தினாக உட்கொண்டு தலைவி ஊடினாள் என்றதும் சிறந்த கருத்தாகலாம்.

—தொகுப்பாசிரியர்.

1314. யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று. (௪)

**இதுவும் அது.**

**உரைப்பகுதி :**

பரிமே:— யாரினும் காதலம் என்றேனா - காமம் நுகர்தற்குரிய இருவராயினார் யாவரினும் யாம் மிக்க காதலையுடையேம் என்பது கருதி யாரினும் காதலம் என்றேனாக; யாரினும் யாரினும் என்று ஊடினாள் - நின்தோழி அது கருதாது, என்னால காதலிக்கப்பட்ட மகளிர் பலருள்ளும் நின்கண் காதலுடையேன் என்றேனாகக்கருதி, அம்மகளிர் யாரினும் என்கண் காதலுடையராயினீர் என்று சொல்லிப் புலந்தாள்.

தலைமகள் கருத்திற்குத் தன்மைப்பன்மை உயர்ச்சிக்கண் வந்தது. யான் அன்பு மிகுதியால் சொல்லியதனைக் கருத்து வேறுபடக் கொண்டதல்லது பிறிதுகாரணம் இல்லை என்பதாம்.

மணக்:— ஒருவனும ஒருத்தியுமாகி அன்பினால் புணர்ந்தார் யாவரினும் யாம் காதலுடையேம் என்று சொன்னேனாக, அதனை அவ்வாறு கொள்ளாது நீர் அன்புபட்டார் பலருள்ளும் யாரினும் யாரினும் அன்பு உடையீர் என்று சொல்லி ஊடினாள் எ - று.

பரிப்:— காதலுடையேம் என்று உளப்பாட்டுத் தன்மையாகக் கூறிய அதனை உயர்ச்சியாகக் கூறினான் ஆகக் கருதினாள். தலைமகன் வாயில் வேண்டின இடத்து நின் குற்றத்தினாலே ஊடல் மிக்கிருந்தாள் என்று கூறிய தோழிக்கு அவள் ஊடுதற்கு யான் குற்றம செய்யவேண்டா: யான் சொல்லுவனவும செய்வனவும எலலாம் குற்றமாயிருக்கும: அவள் குற்றமு ஆகக் கொண்டவற்றைக் கேள் என்று சொல்லுவான் முறபட அன்புடையேன என்று சொலலியது குற்றமாயிற்று என்று கூறியது.

பரிதி:— புலவியிலும் கூடின விகாரம் நன்றாய தென்றீர். முன் கூடிய மாதை நினைந்தீரோ என ஊடினாள் எ - று.

காளிங்:— ஒருவனும் ஒருத்தியும் ஆகிய அன்பினால் புணர்ந்தார் யாவரினும் யாம காதலுடையேம என்று சொன்னேனாக அதனை அவ்வாறு கொள்ளாது நீர் அன்புறப் பட்ட பலருள்ளும் யாரினும யாரினும் என் மேல் அன்புடையீர் என்று சொல்லி ஊடினாள் எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— என்றேனா - என்றேனாக.

**மேற்கோள்பகுதி :**

இளம்:— "நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளிப், பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித், தன்னின் ஆகிய தகுதிக்கண்ணும்" என்ற தலைவன் கூற்றினுக்கு மேற்கோள். (தொல். பொருள். 144.)

நச்:— தலைவிக்கு மடனழிய வந்ததற்கு மேற்கோள். (தொல் பொருள். 205.)

1315. இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள். (ரு)

இதுவும் அது.

**உரைப்பகுதி :**

பரிமே:— இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனா - காதல் மிகுதியான் இம்மையாகிய பிறப்பின்கண் யாம் பிரியேம் என்று சொன்னேனாக; கண் நிறை நீர்கொண்டனள் - அதனால் ஏனை மறுமையாகிய பிறப்பின்கண் பிரிவல் என்னும் குறிப்பினேனாகக் கருதி, அவள் தன் கண் நிறைந்த நீரினைக்கொண்டாள்.

வெளிப்படுசொல்லைக் குறிப்புச்சொல்லாகக் கொள்கின்றதல்லது என்பால் தவறு இல்லை என்பதாம் எ - று.

மணக்:— இப்பிறப்பிலே யாம பிரியோம என்று சொன்னேனாக; அதனாலே, மறுபிறப்பினகண பிரிவு உணடென்று கருதிக கண்ணிறைய நீர் கொணடாள.

பரிப்:— இது பிரியேன் எனினும் குற்றமாம் என்று கூறியது

பரிநி:— இந்தச் செனனத்திலே பிரியோம் என்றார். வருகிற செனனத்தில் பிரியவும் உள்ளவரோ என்று ஊடினாள் எ - று.

காளிங்:— இப்பிறவியில் யான் பிரியேன் என்று சொன்னேன்: அதனானே மறு பிறப்பின்கண் பிரிவு உண்டு என்று கருதிக் கண் நிறைய நீர் கொண்டனள் எ - று.

## மேற்கோள்பகுதி :

இளம்:— தலைவன் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 144.)

தெய்வச்:— எதிர்மறை எச்சத்திற்கு மேற்கோள்காட்டி, மறு பிறப்பிற் பிரிவேம் என நினைத்தாக கண்ணிறை நீர்கொண்டனள் எனப் பொருளுரைககவேண்டுதலின் எதிர்மறை, எஞ்சிநின்ற தன் எதிர்மறைப் பொருளொடு முடிந்தவாறு கண்டுகொள்க என்பர். (தொல். சொல். 428.)

நச்:— தலைவி ஊடற்குக் காரணம் என் என்று தோழி வினைய வழித் தலைவன கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 146.)

## முதுமொழிவெண்பாக்கள் :

"இன்பின் எழுமையுநீங் கேனென்னக் காந்திமதி
முன்பு புலந்தாள் முருகேசா - அன்பதனால்." —முருகேசர். 132.

"இப்பிறப்பி லேபிரியேன் என்றநள ஞேடூடல்
செப்பலரி தென்றே சிவசிவா - அப்படியே." —சிவசிவ. 132.

"சேர்ந்துமணம செய்யமறு சென்மமுனி பக்கல்வரும்
ஏந்திழையைப் போலும் இரங்கேசா - வாய்ந்தும்மை." —இரங். 132.

1316. உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள். (௬)

இதுவும் அது.

## உரைப்பகுதி :

பரிமே:— உள்ளினேன் என்றேன் - பிரிந்தகாலத்து நின்னை இடையின்றி நினைந்தேன என்னும கருததால யான் உளளினேன

என்றேன்; மற்று என் மறந்தீர் என்று என்னைப் புல்லாள் புலத்தக்கனள் - என, அதனை ஒருகால மறந்து பின் நினைததேன் என்றதாககக்கருதி, என்னை இடையே மறந்தீர் என்றுசொல்லி முன் புலவுதற்கு அமைந்தவள் அஃதொழிந்து புலத்தற்கு அமைந்தாள்.

மற்று வினைமாற்றின்கண் வந்தது. அருத்தாபத்திவகையால் மறத்தலை உட்கொண்டு புலந்தாள் என்பதாம்.

மணக்:— அவ்விடத்து எம்மை நினைத்தோம் என்றீர்; மறந்தார் அன்றே நினைப்பார்; ஆதலான், எங்களை மறந்தீர் என்று சொல்லி எம்மை முயங்காளாய்ப் புலவிக்குத் தகுதியாளாயினள் எ - று.

இது நினைத்தோம் எனினும் குற்றம் என்று கூறியது.

பரிதி:— நாயகரே! நீர் என்னை நினைத்தோம் என்றீர் ஆகையினால் மறந்தநாளும் உண்டென்று ஊடினாள் எ - று.

காளிங்:— நீர் பிரிந்த இடத்து எம்மை நினைந்தோம் என்றீர்; மற்று எம்மை மறந்தீர் என்று முயங்காளாய்ப் புலவித்தகுதியள் ஆயினள் எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— மறந்து என்று அருத்தாபத்தி காட்டியது காண்க.

ஒப்புமைப்பகுதி:

"மைக்குழல் ஒருத்தி காதில் வட்டப்பொன் ஓலை யூடே
திக்கயம அனையான் கொய்த செருந்திப்பூச செருகி நோக்கி
இக்குழை அழகி தென்றான் இடளங்கைக்(கு) இடுதி என்று
அக்குழை யோடும் வீசி அன்பனுக் (கு) அலக்கண் செய்தாள்."
—திருவிளை. தருமிக். 36.

முதுமொழிவெண்பாக்கள்:

"எல்லாரும் உய்வதற்கா யீசனுலாப் போதுதலும்
புல்லா துமையாள் புலந்தளவிற் - சொல்லாடும."  —முதுமொழி. 185.

1317. வழுத்தினாள் தும்மினே னாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று. (எ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— தும்மினேனாக வழுத்தினாள் - கூடியிருக்கின்றவள் யான் தும்மினேனாகத் தன்னியற்கைபற்றி வாழ்த்தினாள்; அழித்து யார் உள்ளித் தும்மினீர் என்று அழுதாள் - அங்ஙனம் வாழ்த்திய தானே மறித்து, நும்மை நினைத்து வருந்துகின்ற மகளிருள் யாவர் நினைத்தலால் தும்மினீர் என்று சொல்லிப் புலந்தழுதாள்.

வாழ்த்தலொடு புலத்தல் இயையாமையின்; அழித்து என்றான். அன்புடையார் நினைத்தவழி அந்நினைக்கப்பட்டார்க்குத் தும்மல் தோன்றும் என்பது மகளிர்வழக்கு. இல்வழக்கை உள்வழக்காகக் கருதிப் புலந்தாள் என்பதாம்.

மணக்:— யான் தும்மினேன்; அதற்காக வாழ்த்தினாள்; உம்மை யார் நினைக்கத் தும்மினீர் என்று சொல்லி மீட்டும் அழுதாள் எ - று.

இது தும்மினும் குற்றம் என்று கூறியது.

பரிதி:— நாயகர் தும்மக்கண்டு நாயகி மீளவும் நினைந்து அழுதாள் உமக்கு மனமகிழ்ந்த நாயகி யார் நினைக்க நினைந்து தும்மினீர். அதற்கு நான் வாழ்த்துச்சொல்லாது என்று ஊடினாள் எ - று.

காளிங்:— யாம் தும்மினேம் அதற்கு அவள் வாழ்த்தினாள்; வாய்விட்டு அழுதாள் உம்மை யார் நினைக்கத் தும்மினீர் என்று சொல்லி எ - று.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— அன்புடையார் நினைத்தவழி, நினைத்தவர்க்குத் தும்மல் தோன்றும் என்பது மகளிர் வழக்கு.

1318. தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று. (அ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— தும்முச் செறுப்ப - எனக்குத் தும்மல் தோன்றியவழி யாருள்ளித் தும்மினீர் என்று புலத்தலை அஞ்சி, அதனை யான் அடக்கினேன்; அங்ஙனம் அடக்கவும், நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ என்று அழுதாள் - நுமர் நும்மை நினைத்தலை எம்மை மறைக்கலுற்றீரோ என்று சொல்லிப் புலந்து அழுதாள்.

தும்மு என்பது முதனிலைத்தொழிற்பெயர். செறுப்ப என்புழி இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. எம்மை என்பது நும்மோடு யாதும் இயைபு இல்லாத எம்மை என்பதுபடநின்ற இசையெச்சம். இதனை வடநூலார் காகு என்ப. தும்மினும் குற்றம், ஒழியினும் குற்றமாயக்கால் செயற்பாலது யாது என்பதாம்.

மணக்:— தும்மல் தோற்ற, அதனை அடக்கினேன்; அதற்காக, நுமர் உள்ளினமையை எமக்கு மறைக்கின்றீரோ என்று சொல்லி அழுதாள் எ - று.

இது தும்மாது ஒழியினும் குற்றம் என்று கூறியது.

பரிதி:— தும்மல் உண்டாகக்கண்ட நாயகி அழுதாள். உமது நாயகி வாழ்த்தத் தும்முவதன்றி இவள் வாழ்த்தத் தும்ம ஒண்ணாது என்று ஊடினாள் எ - று.

காளிங்:— தும்மல் தோன்ற அதனை அடக்கினேன்; அதற்கு அழுதாள். நீர் நுமர் உள்ளினமையை எம்மை மறைத்தீரோ என்று சொல்லி எ - று.

**உரைவிளக்கப்பகுதி:**

நுண்:— தும்மு - முதனிலைத்தொழிற்பெயர்; உருமு, தெவ்வு, உரிஞு என்பனபோலும். எம்மை என்பது நும்மோடு யாதும் இயைபு இல்லாத எம்மை என்பதுபட நின்ற இசையெச்சம். இதனை வடநூலார் "காகு' என்பர்; தொனியும் என்பர்.

மேற்கோள்பகுதி :

இளம்:— தலைவன் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 144.)

பேரா:— புலவியுள் அழுதமங்கலத்திற்கு மேற்கோள். (தொல். பொருள். 312.)

1319. தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. (௯)

இதுவும் அது

உரைப்பகுதி :

பரிமே:— தன்னை உணர்த்தினும் காயும் - இவ்வாற்றான் ஊடிய தன்னை யான் பணிந்து உணர்த்துங்காலும் வெகுளாநிற்கும்; பிறர்க்கும் நீர் இந்நீரர் ஆகுதிர் என்று - பிறமகளிர்க்கும் அவர் ஊடியவழி இவ்வாறே பணிந்து உணர்த்தும் நீர்மையை உடையீராகுதிர் என்று சொல்லி.

இவள் தெளிவித்தவழியும் தெளியாள் என்பதுபற்றி என்மேல் ஏற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன், பணியஅதுதானும் புலத்தற்கு ஏதுவாய் முடிந்தது. இனி இவள்மாட்டுச் செய்யத்தகுவது யாது என்பதாம்.

மணக்:— தன்னை ஊடல் தீர்த்தற்கு உணர்த்தினும், பிறர்க்கும் நீர் இவ்வாறு செய்வீரே என்று சொல்லி வெகுளும் எ - று.

இது தன்னைப் போற்றினும் குற்றம் என்று கூறியது.

பரிப்:— இவை எட்டும் தலைமகன் கூற்று. இவை நெஞ்சொடு புலத்தலின் பின் கூறற்பாலது ஆயினும், புலவி நுணுக்கம் சேரச் சொல்லவேண்டும் ஆகலானும் இறந்தது காட்டல் என்னும் தந்திர வுத்தி யாகலானும் ஈண்டுக் கூறப்பட்டது.

காளிங்:— தன்னை ஊடல் தீர்க்கும் பொழுதும் வெகுளும்; பிறர்க்கும் இவ்வாறு செய்வீரே என்று சொல்லி எ று.

மேற்கோள்பகுதி .

இளம்:— தலைவன் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 144.)

நச்:— தலைவி ஊடற்குக் காரணம் என் என்று தோழி வினவ வழித் தலைவன் கூறியதற்கு மேற்கோள். (தொல். பொருள். 146.)

முதுமொழிவெண்பாக்கள்:

"சீவகன் மஞ்சரியைத் தாழ்த்துரைப்பச் சீறினளே
தூவாய்க் குணமாலை சோமேசா - ஆவகையே." —சோமேசர். 132.

1320. நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று. (௩௰)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— நினைத்து இருந்து நோக்கினும் காயும் - என்சொற்களும் செயல்களும் பற்றித் தான் வெகுடலான், அவற்றை ஒத்திருந்து தன் அவயவங்களது ஒப்பின்மையை நினைந்து அவற்றையே நோக்கினும், என்னை வெகுளாநிற்கும், அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி என்று - என் அவயவமனைத்தும் நோக்கினீர் அவற்றது ஒப்புமையான் எம்மகளிரை நினைந்தென்று சொல்லி.

யான் எல்லா அவயவங்களானும் ஒருத்தியோடு ஒத்தல் கூடாமையின் ஒன்றால் ஒருவராகப் பலரையும் நினைக்கவேண்டும்; அவரெல்லாரையும் யான அறியச்சொல்லுமின் என்னும் கருத்தால், அனைத்து நோக்கினீர் யாருள்ளி என்றாள். வாளா இருத்தலும் குற்றமாயிற்று என்பதாம்.

மணக்:— தனது உறுப்புக்களோடு வேறொன்றை உவமிக்க ஒண்ணுமையை எண்ணி நோக்க இருப்பினும், என் உறுப்பெல்லாம் நீர் காதலித்தவர்களில் யார் உறுப்புக்கு ஒக்கும் என்று நினைத்திருந்து நோக்கினீர் என்று சொல்லி வெகுளும் எ - று.

இது பார்க்கிலும் குற்றம் என்று கூறியது.

பரிதி:— நாயகரே இந்நேரமும் ஒருநினைவுகொண்டிருந்து என் முகம் நோக்கினீர். முன்னுளகூடிய நாயகி நலமும் கலவியும் நினைத்து அவள் நலத்துக்கு இவள் ஒவ்வாதென்றே நோக்கினீர் என்று ஊடினள் எ - று.

காளிங்:— தனது உறுப்புக்களோடு வேறு ஒன்றை உவமிக்க ஒண்ணுமையை நினைந்து நோக்கி யிருப்பினும் வெகுளும். என் உறுப்பு எல்லாம் நீர் காதலித்தவர்களில யார் உறுப்பை ஒக்கும் என்று நினைத்து நோக்கினீரென்று சொல்லி எ - று.

ஒப்புமைப்பகுதி:

" பரிவுற் றுய்ப்பயன் இன்றியும் பாவைமார்
முரிவுற் றூர்களின் மூர்ச்சனை செய்பவால்." —சீவக. 1627.

## குறள் வைப்புமுறை.

பரிமே:— பெண்ணியலார், ஊடி, கோட்டுப்பூ, யாரினும், இம்மை, உள்ளினேன், வழுத்தினள், தும்முச, தன்னை, நினைத்திருந்து.

மணக்:— யாரினும், இம்மை, வழுத்தினள், தும்முச், நினைத்திருந்து, கோட்டுப்பூ, தன்னை, உள்ளினேன், பெண்ணியலார், ஊடி.

பரிதி:— யாரினும், உள்ளினேன், இம்மை, நினைத்திருந்து, வழுத்தினள், தும்முச், ஊடி, பெண்ணியலார், தன்னை, கோட்டுப்பூ.

காளிங்:— யாரினும், இம்மை, உள்ளினேன், வழுத்தினள், தும்முச், நினைத்திருந்து, கோட்டுப்பூ, தன்னை, பெண்ணியலார், ஊடி.

# 133. ஊடலுவகை.

## தொகுப்புரை :

[அவரிடத்தில் தவறில்லையாயினும் அவா ஊடலுணர்த்தி தலையளிசெய்தல் ஊடுதலை மேலும் விளைவிக்கின்றது. ஊடலால் விளையும் துனியால் தலைவன் செய்யும் கருணை தவறுமாயினும் அதுவும்ஒரு பெருமையையே பெறும். நிலமும் நீரும்சேர்ந்தாலொத்த காதலரிடத்து ஊடலைப்போன்றதொரு இன்ப உலகம் உண்டோ ? தழுவிப் பிரியவிடாத புலவியில் என் மனத்தைப் பிளக்கும் படைகளாகிய பணிமொழியும் அடிபணிதலும் தோன்றுகின்றன. தவறு செய்திலராயினும் தலைவி ஊட அவள் தோளை அகலுதற்கண் சொல்லமுடியாத இன்பம் ஒன்று இருக்கிறது. உண்பதைக்காட்டிலும் உண்டபொருள் சீரணித்தல் இனிது; அதுபோலக் காதற்குப் புணர்தலைக்காட்டிலும் புலத்தல் இனிது; காதலர் இருவரில் ஊடலில் தோற்று அடிபணிந்தவரே வென்றவர். அது அப்போது தெரியாவிடினும புணர்ச்சிக்கண் தெரியும் இவள் நெற்றியில் வேர்வை தோன்றுமாறு புணர்தலால் உண்டாகிய இன்பத்தை மற்றொருமுறை ஊடிப்பெறுவோமோ ? இவள் நெடுநேரம் ஊடுக. இவளைப் பணிந்தும் இரந்தும் ஊடலுணர்த்த இந்த இராப்பொழுது நீட்டிக்குமாக ! காதல் நுகர்ச்சிக்கு இன்பம ஊடல; அந்த ஊடலுக்கு இன்பம் அளவு அறிந்து தணிந்து கூடுதலாம். ]

## அதிகாரப்பொருள் :

பரிமே:— *அஃதாவது அப்பெற்றித்தாய ஊடலால் தமக்குக் கூடலின்பம் சிறந்துழி அச்சிறப்பிற்கு ஏதுவாய அவ்வூடலைத் தலைமகள் உவத்தலும் தலைமகன் உவத்தலுமாம். அதிகாரமுறைமையும் இதனானே விளங்கும்.*

மணக்:— *ஊடலுவகையாவது தலைமகன் மற்றுள்ள நாள்கள் போலன்றி அன்றையிற் புணர்ச்சி பெரியதோர் இன்பமுடைத்தென்று உவத்தலும் தலைமகன் அதற்குக் காரணமாய ஊடலை வியந்து கூறுதலும் அவ்வண்ணமே தலைமகள் கூறுதலுமாம். இது மேலதனோடு இயையும்.*

பரி:— *ஊடலுவகையாவது ஊடலை உவந்து கூறியது. அஃதாவது புலவிநீககிப் புணர்ந்த தலைமகன் மற்றுள்ள நாள்கள் போலன்றி இப்புணர்ச்சிப் பெரியதோர் இன்பம் உடைத்து என்றற்குககாரணமாகிய ஊடலை உவந்து கூறுதலும், இவ்வண்ணமே தலைமகள் கூறுதலும். மேலதனோடு இயைபும் அது.*

பழைய:— அஃதாவது ஊடல் ஆற்றாமைக்குக் கூடல் இன்பம் சிறந்த ஊடலை இருவரும் அநுபவித்தல்.

1321. இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு. (க)

தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அங்ஙனம் நீ புலக்கின்றது என்னை என்றாட்கு அவள் சொல்லியது.

உரைப்பகுதி :

பரிமே:— அவர்கணுத் தவறு இல்லையாயினும்-அவர்மாட்டுத் தவறு இல்லையாயினும்; அவர் அளிக்குமாறு ஊடுதல் வல்லது - நமக்கு அவர் தலையளிசெய்கின்றவாறு அவரோடு ஊடுதலை விளைக்கவற்றாகின்றது.

அவர்க்கு என்பது வேற்றுமைமயக்கம். அளவிறந்த இன்பத்தர் ஆகலின் யான் எய்தற்பாலதாய இத்தலையளி ஒழிந்தாரும் எய்துவர் எனக்கருதி அதுபொறாமையான் ஊடல் நிகழாநின்றது எனபதாம்.

மணக்:— அவர்மாட்டுத் தவறில்லை ஆனாலும், அவர் செய்யும் அருள் ஊடுதலைச் செய்யவற்று எ - று.

இது துன்பம் பயப்பதாகிய புலவியைச் செய்கின்றது எற்றுக்கு என்று வினவிய தோழிகுத் தலைமகள் கூறியது.

பரிப்:— இவ் அருள் பிறர்க்கும் செய்வர் என்னும் கருத்தினானே ஊடவேண்டும் என்றவாறு ஆயிற்று. தலைமகன் புணர்ந்து நீங்கியவழித் தலைமகள் இன்பச் செவ்வி கண்டு இவ்வாறு இன்பம் நுகராது தவறு இல்லாதார்மாட்டுத் துன்பமாகிய புலவியைச் செய்கின்றது எற்றுக்கு என்று வினவிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

பழைய:— நாயகனிடத்துத் தவறு இல்லையாயினும் ஊடல் விளைப்பது அவரிடத்து மேன்மேலும் இன்பங் கொள்கைக்கு எ - று.

காளிங்:— அவர் நமக்குச் செய்த குற்றம் இல்லையாயினும் ஊடுதலைச் செய்யின மற்று அவரது அன்புமிகுதியால நாம் அவர் அளியைப் பெறுகுவோம் எ - று.

1322. ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும். (உ)

புலவாக்காலும் அத்தலையளி பெறலாயிருக்க அஃது இழந்து புலவியான் வருந்துவது என்னை என்றாட்கு அவன் சொல்லியது.

**உரைப்பகுதி:**

பரிமே:— ஊடலின் தோன்றும் சிறுதுனி - ஊடல் ஏதுவாக நம்கண் தோன்றுகின்ற சிறிய துனிதன்னால்; நல்லளி வாடினும் பாடு பெறும் - காதலர்செய்யும் நல்ல தலையளி வாடுமாயினும் பெருமை எய்தும்.

தவறின்றி நிகழ்கின்ற ஊடல் கடிதின் நீங்கலின் அத்துன்பமும் நில்லாது என்பாள் சிறுதுனி என்றும், ஆராமைபற்றி நிகழ்தலின் அதனான் நல்லளி வாடாது என்பாள் வாடினும் என்றும், பின்னே பேரின்பம் பயக்கும் என்பாள் பாடுபெறும் என்றும் கூறினாள். அது வருத்தமெனப்படாது என்பதாம்.

மணக்:— ஊடலில் தோன்றும் சிறியதுனி, மிக்க அருள் பெறாது ஒழியினும் அழகு உடைத்து எ - று.

புணராது ஒழியினும இன்பமாம் என்று கூறியவாறு.

பரிதி:— ஊடலில் தோன்றும் சிறுதுனி இருந்த ஊடலும் சற்றே அன்பு பெறினும் பாடுபெறும் எ - று.

பழைய:— ஊடலேதுவாகத் தன்னிடத்தில் தோன்றும் சிறிய துன்பம் தன்னால் நாயகன் செய்யும் அன்பு வாடுமாயினும் உடனே பேரின்பத்தைக கொடுக்கும் எ - று.

காளிங்:— ஊடலின்கண் தோன்றுகின்ற சிறிய துனி மிக்க அருள் பெறாது ஒழியினும் அழகு உடைத்து எ - று.

புணர்தல் இன்பம் என்றார்; இது புணராது ஒழியினுமாம் என்று கூறப்பட்டது.

**மேற்கோள்பகுதி:**

இளம்:—தலைவன் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 144.)

1323. புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து. (ங)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— நிலத்தொடு நீர் இயைந்தன்னாரகத்துப் புலத்தலின் - நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர்மாட்டுப் புலத்தல்போல; புத்தேள் நாடு உண்டோ - நமக்கு இன்பந்தருவதொரு புத்தேளுலகம் உண்டோ? இல்லை.

நீர் தான் நின்ற நிலத்தியல்பிற்றாமாறுபோலக் காதலரும் தாம் கூடிய மகளிரியல்பினர் ஆகலான் அதுபற்றி அவரோடு புலவி நிகழும் என்பாள் நிலத்தொடு நீரியைந்தன்னாரகத்து என்றும், அவர் நமக்கும் அன்னராகலின் அப்புலவி பின்னே பேரின்பம் பயவாநின்றது என்பாள் புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ என்றும் கூறினாள். உவமம் பயன் பற்றி வந்தது.

மணக்:— நிலனும் நீரும் பொருந்தினாற்போல, ஒன்றுபட்ட நெஞ்சுடையார்மாட்டுப் புலத்தல்போல இன்பம் தருவதொரு புத்தேள் உலகம் உண்டோ? எ - று.

நிலத்தொடு நீரியைதலால் அவை வெப்பமும் தட்பமும் கூடி இருக்குமாறுபோல, இன்பமும் துன்பமும் கூட அனுபவிப்பார்மாட்டு என்றவாறு.

பரிப்:— தலைமகன் புலந்து நீங்கியவழி நுமக்குப் புலவி நன்று ஆயிற்று என்று நகையாடிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

பரிதி:— கலவி இன்பத்தினும் இன்பம் உண்டோ தேவர் உலகத்தினும்; அது எங்ஙனமோ எனில் அன்புள்ள நாயகரிடத்தில் புலவி எ - று.

பழைய:— நிலத்தொடு நீர் கலந்தாற்போல ஒற்றுமையுள்ள நாயகன் நாயகியிடத்து ஊடலைப் போல் இன்பம், தேவலோகத்தும் இல்லை.

காளிங்:— நிலனும் நீரும் பொருந்தினாற் போல, ஒன்று பட்ட நெஞ்சுடையார் புல்லிப் புலத்தல் போல இன்பம் தருவது ஒரு தேவர் உலகு உண்டோ? எ - று.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— பயனுவமை காண்க.

1324. புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை. (௪)

அப்புலவி இனி யாதான் நீங்கும் என்றாட்குச் சொல்லியது.

**உரைப்பகுதி :**

பரிமே:— புல்லி விடாப் புலவியுள் தோன்றும் - காதலரைப் புல்லிக் கொண்டு பின் விடாமைக்கு ஏதுவாகிய அப்புலவிக்கண்ணே உளதாம்; என் உள்ளம் உடைக்கும் படை - அதன்மேற்சென்ற என் உள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம்.

புலவியுள் என்னும் ஏழாவது வினைநிகழ்ச்சிக்கண் வந்தது. என் உள்ளம் உடைக்கும் படைக்கலம் என்றது வணக்கத்தையும் பணிமொழியையும். படைக்கலம் என்றாள், அவற்றான் அப்புலவியுள்ளம் அழிதலின். புலவிநீங்குந்திறம் கூறியவாறு.

மணக்:— என் உள்ளத்தை அழிக்கும் கருவி, புல்லினவிடத்து விட்டுப் புலந்தவிடத்துத் தோன்றும் எ - று.

அது புணர்ந்த பின்பு தோன்றுமையால், அதனைக் கெடுக்கும் இன்பமுடைத்தென்று கூறியவாறு. படை - பணிமொழி. இவை எட்டும் தலைமகன் கூற்று.

பரிப்:— புல்லின இடத்துத் துனியர்ம்படி இவளைப் பொருந்தி விடாதே நிற்கின்ற புலவிக்கண்ணே வெளிப்படும் எனது உள்ளத்தைக் கெடுக்கும் படைக்கலம் போன்ற துன்பம் எ - று.

நீடுங்கால் புலவி துன்பம் எனவே புலவி கடிது நீங்கவேண்டும் என்றது. விட்டுப் புலந்த இடத்துத் தோற்றும் எனது உள்ளத்தை அழிக்கும் கருவி என்பதாம்.

அஃதாவது தலைமகள் புலவியால் கூறும் சொற்கள். அது புணர்ந்த பின்பு தோற்றுமையால் அதனைக் கேட்டால் இன்பம் உடைத்து என்று கூறியது.

இவை எட்டும் தலைமகன் கூற்று.

பழைய:— காதலரைப் புல்லிக்கொண்டு பிளவு விடாமைக்கு ஏதுவாகிய புலவிக்கண்ணே உள தாம் தன்னுள்ளத்தைக் கெடுக்கும் படைக் கலம் எ - று

காளிங்:— புல்லின இடத்து விட்டுப் புலந்த இடத்துத் தோன்றும்: எனது உள்ளத்தை அழிக்கும் கருவி என்றவாறு. அஃதாவது தலைமகள் புலவியால் கூறும் சொற்கள் புணர்ந்த பின்பு தோற்றுமையால் அதனைக்கேட்டல் இன்பம் உடைத்து என்று கூறியது.

இவை எட்டும் தலைமகன் கூற்று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண்:— புலவியுள் படைக்கலம் தோன்றும் என்பது, வினை நிகழ்ச்சிக்கண் வந்தது.

## மேற்கோள்பகுதி :

சுவாமி:— இருவரின் முடியும் ஒருவினைத் தொழிற்பெயர்க்கு மேற்கோள். (இ. கொ. 42.)

1325. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து. (ரு)

தலைமகளை ஊடல்நீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனாய்த்
தன்னுள்ளே சொல்லியது.

## உரைப்பகுதி :

பரிமே:— தவறு இலராயினும் தாம் வீழ்வார் மென்தோள் அகறலின் - ஆடவர் தமகண் தவறிலராயினும் உடையார்போல ஊடப் பட்டுத் தாம் விரும்பும் மகளிருடைய மெல்லியதோள்களைக் கூடப்பெறாத எல்லைக்கண்; ஆங்கு ஒன்று உடைத்து - அவர்க்கு அப்பெற்றியதோர் இன்பம் பயத்தல் உடைத்து.

உடையராயக்கால் இறந்த இன்பத்தோடு வரும் இன்பமும் எய்துவர் ஆகலின் அது மிக நன்று. மற்றை இலராயக்காலும் வரும்

இன்பத்தை இகழ்ந்ததில்லை என்னும் கருத்தால், தவறிலராயினும் ஆங்கொன்று உடைத்து என்றான். ஊடலினும் இன்பம் அளவிறத்தலின் கூறற்கரிது என்பான் அப்பெற்றியதொன்று என்றான். தவறின்றி ஊடியதூஉம் எனக்கு இன்பமாயிற்று என்பதாம்.

மணக்:— தாம் தவறிலராயினும், தாம் காதலிக்கப்பட்டாரது மென்தோள்களை நீங்குதலானே, அஃது ஓர் இன்பமுடைத்து எ - று.

இது குற்றம் உண்டாயினும் இல்லையாயினும், ஊடலில் கூடல் நன்று என்றது.

பரிதி:— நாயகர்பேரில் தவறில்லை ஆயினும் குற்றம் உண்டாக்கி ஊடுதல் காமத்துக்கு இன்பம் எ - று.

பழைய:— ஆடவர்தங்கண் தவறில்லையாயினும் தலைமகளை ஊடல் நீக்கித் தாம்விரும்பும் மகளிருடைய மெல்லிய தோள்களை அணைவதே இன்பம் எ - று.

காளிங்:— தாம் தவறு இல்லாராயினும் காதலிக்கப்பட்டாளது மென்தோள் நீங்குதலால் அஃது ஓர் இன்பம் உடைத்து ஆம் எ - று.

குற்றம் உண்டாயினும் இல்லை யாயினும் ஊடலால் கூடல் நன்று என்று கூறியது.

1326. உணலினும் உண்ட தறலினிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது. (௬)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— உணலினும் உண்டது அறல் இனிது - உயிர்க்கு மேல் உண்பதனினும் முன் உண்டது அறுதல் இன்பந்தரும்; காமம் புணர்தலின் ஊடல் இனிது - அதுபோலக் காமத்திற்கு மேல்புணர்தலினும் முன்னைத்தவறுபற்றி ஊடுதல் இன்பந்தரும்.

காமத்திற்கு என்புழிச் சாரியையும் நான்கனுருபும் விகாரத்தால் தொக்கன. பசித்துண்ணும்வழி மிக உண்ணலுமாய் இன்சுவைத்துமாம் அதுபோல அகன்று கூடும்வழி ஆராததுமாய்ப் பேரின்பத்ததுமாம் எனத் தன் அனுபவமபற்றிக் கூறியவாறு.

மணக்:— உண்பதினும் உண்டது அறுதல் உடம்பிற்கு இன்பமாம்; அதுபோல, காமத்திற்குப் புணர்தலினும் ஊடுதல் இன்பமாம் எ - று.

பசியினால் உண்ணும் உணவு இன்பம் தருவதுபோல, ஊடலினால் கூடல் இன்பம் தரும் என்றவாறு.

பழைய:— உயிர்க்கு மேல் உண்பது முன் உண்டது அறுதலின் இன்பந்தரும்; அதுபோலக் காமத்துககுமேல் ஊடல்நீங்கிப் புணருதல் இன்பந்தரும் எ - று.

காளிங்:— உண்டலினும் உண்டது அறுதல் உடற்கு இன்பம் ஆவது: அதுபோலக் காமத்திற்குப் புணர்தலினும் ஊடுதல் இன்பம் தரும் எ - று.

பசித்து உண்டான் உண்ணும் உணவு இன்பம் தருவது போல ஊடினால் கூடல் இன்பமாம்.

**உரைவிளக்கப்பகுதி :**

நுண்:— காமத்திற்கு என்பது, காமம எனச் சாரியையும், நான்கனுருபும் விகாரத்தால் தொக்கது.

**1327.** ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலில் காணப் படும். (எ)

இதுவும் அது.

**உரைப்பகுதி:**

பரிமே:— ஊடலில் தோற்றவர் வென்றார் - காமம் நுகர்தற்குரிய இருவருள் ஊடலின்கண் தோற்றவர் வென்றாராவர்; அது கூடலில் காணப்படும் - அஃது அப்பொழுது அறியப்படாதாயினும் பின்னைப் புணர்ச்சியின்கண் அவரால் அறியப்படும்.

தோற்றவர் - எதிர்தலாற்றாது சாய்ந்தவர். அவர் புணர்ச்சிக்கண் பேரின்பம் எய்தலின் வென்றாராயினார். மன்னும் உம்மும் அசைநிலை. யான் அதுபொழுது சாய்தலின் இதுபொழுது பேரின்பம் பெற்றேன் என்பதாம்.

மணக்:— ஊடலின்கண் எதிராது சாய்ந்தவர் வென்றார்; அவ் வெற்றியை நிலைபெறுநின்ற கூடலின்கண்ணே காணலாகும் எ - று.

பரிப்:— யான் சாய்ந்தேன் ஆயின் இப்பொழுது என்னது வெற்றி என்றவாறாயிற்று.

இது தலைமகள் ஆராமை கண்டு கூறியது.

பரிதி:— ஊடலிலே தோற்றவரையும் வென்றவரையும் கூடலில் காணப்படும் எ - று.

பழைய:— ஊடல்தோற்றாலும் இன்பம்; அது ஊடல்நீங்கிப் புணருங்காலையில் தோன்றும் எ - று.

காளிங்:— ஊடலின்கண் எதிராது சாய்ந்தவர் வென்றார்: அவ் வெற்றியை நிலைபெறுநின்ற கூடலின்கண்ணே காணலாகும் எ - று.

## ஒப்புமைப்பகுதி:

"தோற்றாரே வெல்வர் துணைமிசையார் கோட்டியானை
ஏற்றுக் கழல்தொடியார் மிக்காரை யாவரைவர்
போற்றுளி கூடல் கரி." —இன். 29.

## முதுமொழிவெண்பாக்கள்:

"காயும் புலவியில்வன் றோண்டார் கடைப்பட்டுத்
தோயுமின்பின் மேலானார் சோமேசா - ஆயுங்கால்." —சோமேசர். 133

1328. ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு. (அ)

இதுவும் அது.

## உரைப்பகுதி:

பரிமே:— நுதல் வெயர்ப்பக் கூடலில் தோன்றிய உப்பு - இதுபொழுது இவள் நுதல் வெயர்க்கும்வகை கலவியின்கண் உளதாய இனிமையை; ஊடிப் பெறுகுவம் கொல்லோ - இன்னும் ஒருகால் இவள் ஊடி யாம்பெறவல்லேமோ.

கலவியது விசேடம்பற்றி நுதல்வெயர்ப்ப என்றான். இனிமை கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிதலானாய இன்பம். இனி அப்பேறு கூடாது எனப் பெற்றதன் சிறப்புக் கூறியவாறு.

மணக்:— நுதல்வெயர்ப்பக்கூடிய கூட்டத்தாலே உண்டாகிய இன்பத்தை இன்னும் ஒருகால் ஊடிப்பெறுவோமோ? எ - று.

ஊடுதல் இருவர்க்கும் உண்டாமாதலால், பொதுப்படக்கூறினார். இஃது ஊடினார்க்கு அல்லது இன்பம் பெறுதல் அரிது என்றது.

பரிப்:— நுதலின் வெயர்ப்ப என்றான் புணர்ச்சிக்காலத்து வேகம் மிகுதலை.

பழைய:— இது பொழுது இங்ஙனம் நுதல் வேர்க்கும்வகை கலவியினுளதாதலின் இன்னம் ஒருக்கால் ஊடி யாம் பெறவல்லோமோ எ - று.

காளிங்:— இன்னம் ஒருகால் ஊடிப் பெறுவோம்கொல்லோ யாம்? நுதல் வியர்ப்பக் கூடின கூடலாலே உண்டாகிய இன்பம் எ - று.

உப்பு என்பது இனிமை.

## உரைவிளக்கப்பகுதி:

நுண்:— உப்பு - இனிமை.

1329. ஊடுக மன்னோ ஒளிஇழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா. (கூ)

இதுவும் அது.

## உரைப்பகுதி:

பரிமே:— ஒளி இழை ஊடுகமன் - ஒளியிழையினை உடையாள் இன்னும் எம்மோடு ஊடுவாளாக; யாம் இரப்ப இரா நீடுகமன் - அங்ஙனம் அவளூடி நிற்றற்கும் அதனை உணர்த்துதற்பொருட்டு யாம் இரந்து நிற்றற்கும் காலம்பெறும்வகை இவ்விரவு விடியாது நீட்டித்தல் வேண்டுக.

ஊடுக நீடுக என்பன வேண்டிக்கோடற்பொருள. மன் இரண்டும் ஆக்கத்தின்கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை. கூடலின் ஊடலே அமையும் என்பதாம்.

மணக்:— விளங்கிய இழையினை உடையாள் என்றும் ஊடுவாளாக வேண்டும்; யாம் இவளை இரந்து ஊடல் தீர்க்கும் அளவும் இராப்பொழுது நெடிதாக வேண்டும் எ - று.

இது மனவூக்கத்தின்கண் வந்தது.

பரிப்:— இது மன் ஆக்கத்தின்கண் வந்தது. என்றும் உளதாக வேண்டும் என்றதனால் கூடலினும் ஊடல் நன்று என்றது.

பழைய:— ஒளியிழையினை யுடையாள் இன்னம் மேன்மேலும் என்மேல் ஊடுவாளாக; அங்ஙனமே அவள் ஊடல் இரந்து நீக்குதற்கு இரவு விடியாது நீடித்திருக்கவேணும் எ - று.

காளிங்:— ஒள்ளிய இழையினை யுடையாள் ஊடுவாள் ஆக வேண்டும்: யாம் இவளை இரந்து ஊடல் தீர்க்கும் அளவும் இராப்பொழுது நெடிது ஆக எ - று.

உரைவிளக்கப்பகுதி:

நுண்:— ஊடுக, நீடுக என்பன வேண்டிக்கோடற்பொருள. மன் இரண்டும் ஆககத்தின்கண் வந்தன. ஓகாரங்கள் அசைநிலை.

மேற்கோள்பகுதி:

இளம்:— தலைவன் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 144.)

நச்:— ஊடலை விரும்பிக்கூறிய தலைவன் கூற்றிற்கு மேற்கோள். (தொல். பொருள். 146.)

பெருந்:— இது சிருங்காரம் என்னும் சுவை அணிக்கு மேற்கோள். (வீர. 154.)

1330. ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின். (௩௦)

இதுவும் அது.

உரைப்பகுதி :

பரிமே:— காமத்திற்கு இன்பம் ஊடுதல் - காமநுகர்ச்சிக்கு இன்பமாவது அதனை நுகர்தற்கு உரியராவார் ஆராமைபற்றித் தம்முள் ஊடுதல், அதற்கு இன்பம் கூடி முயங்கப் பெறின் - அவ்வூடுதற்கு இன்பமாவது, அதனை அளவு அறிந்து நீங்கித் தம்முள் கூடிமுயங்குதல் கூடுமாயின், அம் முயக்கம்.

கூடுதல் - ஒத்த அளவினராதல். முதிர்ந்ததுனியாயவழித் துன்பம் பயத்தலானும், முதிராத புலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும் இரண்டற்கும் இடையாகிய அளவறிந்து நீங்குதல் அரிது என்பதுபற்றிக் கூடிமுயங்கப்பெறின் என்றான். அவ்விரண்டு இன்பமும் யான் பெற்றேன் என்பதாம்.

ஈண்டுப் பிரிவினை வடநூல்மதம்பற்றிச் செலவு ஆற்றாமை விதுப்புப் புலவி என நால்வகைத்தாக்கிக் கூறினர். அவற்றுள் செலவு பிரிவாற்றாமையுள்ளும், ஆற்றாமை படர்மெலிந்திரங்கல் முதல் நிறை யழிதல் ஈறாயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின்விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பல் ஈறாயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடுபுலத்தல் முதல் ஊடல் உவகை ஈறாயவற்றுள்ளும் கண்டுகொள்க. அஃதேல் வடநூலார் இவற் றுடனே சாபத்தினைய நீக்கத்தினையும் கூட்டிப் பிரிவினை ஐவகைத்து என்றாரால் எனின், அஃது அறம்பொருளின்பம் என்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவு அன்மையானும், முனிவராணையான் ஒருகாலத்து ஓர் குற்றத்து உளதாவதல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டு ஒழிக்கப்பட்டது என்க.

மணக்:— காமத்திற்கு ஊடுதல் இன்பமாம்; அதன்பின் கூடிக் கலக்கப்பெற்றால், அதற்கு இன்பமாம் எ - று.

இது யாம் பெற்றேம்; பிறர் அதன் செவ்வியறியாமையால் பெறுதல் அரிது என்று கூறியது.

பழைய:— ஊடுதல் காமத்துக்கு இன்பம்; அந்தவூடல் நீங்கிக் கூடப் பெறுவாராயின் எ - று.

காளிங் :— காமத்திற்கு ஊடுதலே மிகவும் இன்பம் ஆம்; அவ்வூடுதற்கு இன்பமாவது அதன்பின் கூடிக கலக்கப்பெற்றால் எ - று.

## உரைவிளக்கப்பகுதி :

நுண் :— இதுவும் அது. காமநுகர்ச்சிக்கு இன்பமாவது அதனை நுகர்தற்குரியார் வாராமைபற்றித் தமமுள் ஊடுதலும், அவ்வூடுதற்கு இன்பமாவது அதனை அளவறிந்து நீங்கித தம்முட் கூடி முயஙகுதல் கூடு மாயின் அம்முயக்கமும் என்றவாறு. *கூடுதல் - ஒத்தஉணர்வினராதல். முதிர்ந்த துனியாயவழித் துன்பம் பயத்தலானும், முதிராத புலவியாய வழிக் கலவியின்பம் பயவாமையானும் இவ்விரண்டற்கும் அளவறிந்து நீங்குதல் அரிது என்பது பற்றிக் கூடி முயங்கப் பெறின் என்றான். அவ்விரண்டு இன்பமும் யான் பெற்றேன் என்பதாம்.

ஈண்டும் பிரிவினை வடநூலார் மதம்பற்றிச் செலவு, ஆற்றாமை, விதுப்பு, புலவி என நால்வகையாகக் கூறினர். அவற்றுள செலவு பிரிவாற்றாமையுள்ளும், ஆற்றாமை படர்மெலிந்திரங்கல் முதல் நிறை யழிதல் ஈறாயவற்றுள்ளும், விதுப்பு அவர்வயின்விதும்பல் முதல் புணர்ச்சி விதும்பல் ஈறாயவற்றுள்ளும், புலவி நெஞ்சொடு புலத்தல் முதல் ஊடல் உவகை ஈறாயவற்றுள்ளும் கண்டுகொள்க.

அஃதேல், வடநூலார் இவற்றுடனே சாபத்தினாய நீக்கத் தினையும் கூட்டிப் பிரிவினை ஐவகைத்து என்றாரால்எனின்? அஃது அறம், பொருள், இன்பம் என்னும் பயன்களுள் ஒன்றுபற்றிய பிரிவன்மை யானும், முனிவர் ஆணையான் ஒருகாலத்து ஒருகுற்றத்து உளதாவதல்லது உலகியல்பாய் வாராமையானும் ஈண்டு ஒழிக்கப்பட்டது என்ப.

## மேற்கோள்பகுதி :

சிவஞான :— ஊடலிறுதிக்கண் கூடல் ஒருதலை என்பதற்கு இக்குறளை மேற்கோள் காட்டுவர். (தொல், விருத், பக். 39.)

## ஒப்புமைப்பகுதி :

"வீழ்வார்ப் பிரிதலும் ஆங்கே புணர்தலும் தம்மில்
தருதல் தகையாதான் மற்று." —கலித். 92:7-9.

*இதற்கு மேற்பட்ட பகுதி பரிமேலழகர் உரையாகவே இருப்பது காண்க.

"கறங்கு பறைகாணு உறுஊனைக் காதல்
பிறங்கலை நாலாரும் அஃதே - திறம்இரங்கி
ஊடி உணர்வாரே தாமிசைவர் பல்காலம்
ாடிலதேர் இன்ப விருந்து." —இன். 28.

## முதுமொழிவெண்பாக்கள் :

"வெம்மனத்தில் ஊடல் விளைத்துடனே கூடிமதன்
செம்மனம்போல் வாரு தினகரா - தம்மனத்தால்." —தினகர. 137.

"தண்டி யுணர்த்தத் தலைவி புலவிதீர்ந்
தண்டிப் பெருமான் அணைந்தளவிற் - கண்டருளும்."
—முதுமொழி. 186.

"காதல்குண மாலைபிணக் கைத்தவிர்த்துச் சீவகன்றன்
மோதமிக்காள் கூடி முருகேசா - ஆதலினால்." —முருகேசர். 133.

"மான்மகள்பால் ஊடிமர மானுன் மழகளிற்றின்
தேனனையாள் காந்தன் சிவசிவா - ஏனெனின் அங்(கு)." —சிவசிவ. 133.

"சத்தியபா மாவூடல் தான்தணிப்பக் கற்பகத்தை
இத்தலத்தில் தந்தான் இரங்கேசா - சித்தசற்கும்." —இரங். 133.

## குறள் வைப்புமுறை.

**பரிமே :—** இல்லை, ஊடலிற்றோன்றும், புலத்தலின், புல்லி, தவறிலர், உணலினும், ஊடலிற்றோற்றவர், ஊடிப், ஊடுக, ஊடுதல்.

**மணக் :—** ஊடுக, ஊடலிற்றோற்றவர், உணலினும், ஊடுதல், ஊடலிற் றோன்றும், ஊடிப், தவறிலர், புல்லி, இல்லை, புலத்தலின்.

**பரிதி :—** ... ... ...

**காளிங் :—** ஊடுக, ஊடலிற்றோற்றவர், உணலினும், ஊடுதல், ஊடலிற் றோன்றும், ஊடிப், தவறிலர், புல்லி, இல்லை, புலத்தலின்.

**திருக்குறள் காமத்துப்பால் உரைவளம் முற்றியது.**

# திருக்குறள் முதற்குறிப்பகராதி

## காமத்துப்பால்

[எண்-பக்கஎண்]


அசையியல் 35
அணங்குகொல் 5
அரிதரோ 126
அரிதாற்றி 134
அலந்தாரை 318
அலரெழ 109
அலர்நாண 118
அவர்தந்தார் 166
அவர்நெஞ்சு 303
அழல்போலும் 222
அளித்தஞ்சல் 127
அறிகிலார் 105
அறிதோறறி 59
அறுவாய் 72
அனிச்சப்பூ 69
அனிச்சமும் 75
இமைப்பிற் 90
இம்மைப்பிறப்பில் 333
இருநோக்கு 24
இருந்துள்ளி 242
இலங்கிழாய் 266
இல்லைதவறவர் 342
இளித்தக்க 299
இனியன்ன 307
இன்கணுடைத் 124
இன்பங்கடல் 143
இன்னாதின 132
உடம்பொடுயி 81
உணலினும் 347
உண்டார்கண் 20
உப்பமைந் 316
உய்த்தலறிந்து 298
உரனசை 267
உவக்காணெங் 169
உவந்துறைவர் 91
உழந்துழந் 158
உள்ளக்களித் 291
உள்ளத்தார் 249
உள்ளம்போன் 149
உள்ளினுந் 190
உள்ளினேன் 334
உள்ளுவன்-உரைப் 168
உள்ளுவன்-மற 84
உறாஅதவர்க்கண்ட 305
உறாஅதவர்போல் 32
உறாஅதோ 111
உறாஅர்க் 187
உறுதோறு 53
ஊடலிற்றோற் 348
ஊடலிற்றோன் 343
ஊடலினுண்டா 322
ஊடலுணங்க 325
ஊடலுணர் 57
ஊடற்கண் 295
ஊடிப்பெறுகு 349
ஊடியவரை 319
ஊடியிருந்தே 329
ஊடுகமன் 350
ஊடுதல்காம 352
ஊரவர் 116
எழுதுங்கால் 295
எள்ளினிளி 311
எனைத்துநினைப் 197
எனைத்தொன் 191
ஏதிலார் 36
ஒண்ணுதற்கோ 18
ஒருதலையான் 183
ஒருநாளெழு 273
ஓஒவினிதே 157
ஓம்பினமைந் 128
கடலன்ன 102
கடாஅக்களிற் 16
கண்களவு 27
கண்டதுமன் 114
கண்டாங் 152
கண்டார் 12
கண்டுகேட்டு 41
கண்ணிறைந்த 279
கண்ணிற்றுனி 301
கண்ணின்பசப் 237
கண்ணுங்கொள 243
கண்ணுள்ளார் 87
கண்ணுள்ளிற் 86
கண்ணொடு 37
கதுமென 154
கயலுண்கண் 203
கரத்தலும் 139
கரப்பினுங் 278
கருமணியிற் 82
கலந்துணர் 245
கவ்வையாற் 112
களித்தொறு 113
கனவினான் 205
காணிற்குவளை 68
காணுங்கால் 297
காணகமற் 269
காதலரில்வழி 218
காதலர்தூதொடு 202
காதலவரில 241
காமக்கடல் 141
காமக்கடும்-உய்க் 98
காமக்கடும்-நீந்தி 145
காமக் கணிச்சி 253
காமமும் நாணும் 140
காமமுழந்து 94
காமமென 254
காமம் விடு 247
காலைக்கு 219
காலையரும்பி 221
குறிக்கொண்டு 31
கூடியகாமம் 268
கூற்றமோ 13
கெட்டார்க்கு 306
கொடியார்-உரைக் 232
கொடியார்-மின் 147
கொடும்புருவம் 14
கோட்டுப்பூ 330
சாயலும் 167
சிறுமை 227
செல்லாமை 122
செறாஅச்சிறு 34
செறிதொடி 283
செற்றவர்பின் 258

செற்றுரெனக் 244
செற்றூர்பின் 257
தஞ்சந்தமர் 313
தணந்தமை 229
தண்ணந்துறை 285
தந்நெஞ்சத் 194
தமமிலிருந் 54
தவறில 346
தனியேயிருந்து 309
தன்னையுணர்த் 338
தாமவீழ்வார்தம் 178
தாமவீழ்வார்மென் 47
தாமடே ண்டின் 119
தினைத்துணையும் 293
துஞ்சுங்கா ற 209
துப்பின் 142
தும்முசசெறுப்ப 337
துறைவன 130
துனியும 321
துன்பத்திற் 312
துன்னுத்துறந் 250
தெரிநதுணரா 153
தொடலைக் 99
தொடிநோக்கி 288
தொடியொடு 233
தொடிற்சுடின் 133
நகைஇயார் 186
நயந்தவர்க்கு 165
நயநதவர்நல்கா 229
நலத்தகை 320
நனவினுற்கண் 206
நனவினுனன்கீத 211
நனவினுனல்காக் 208
நனவினுனல்காதவ 204
நனவினுனல்காரை 210
நனவென 207
நன்னீரை 63
நாங்காதல் 182
நாணுமறந் 310
நாணென 259
நாணொடு 97
நிணநதீயில் 262
நிறையரியர் 104
நிறையுடையேன் 256
நினைத்திருந்து 339
நினைதொன்று 240
நினைப்பவர் 192
நீங்கிற்றெறூம் 49
நீருமகிழல 324
நெஞ்சததார் 89
நெய்யால் 117
நெருநற்று 287
நோக்கினுள்-நோக் 8
நோககினுள்-இறைஞ் 28
நோதலெவன் 323
நோனுவுடயபு 95
பசக்கமற் 174
பசந்தாள் 173
பசப்பென 175
படலாற்று 156
பணைநீங்கி 231
பண்டறியேன் 9
பதிமருண்டு 224
பரிந்தவர் 248
பருவரலும் 184
பனியருமபி 217
பன்மாயக் 260
பாடுபெறுதி 234
பாலொடு 78
பிணிகரு 45
பிணையேர் 19
பிரிநதவா 81
பிரிவுரைக்கும 129
புலத்தலிற் 344
புலப்பலென 261
புலப்பேன்கொல் 271
புல்லாதிரா 315
புல்லிக் 172
புல்லிவிடா அ 345
புன்கணணே 215
பெண்ணியலார் 328
பெணணினுற் 289
பெயலாற்று 155
பெரிதாறறி 284
பெறுஅமை 308
பெறினென்னும் 274
பேணுதுபெட்ப 294
பேணுதுபெட்டார் 159
பொருண்மாலை 225
மடலூர்தல் 101
மணியில் 281
மதியும் 70
மலரன்ன-அரு 110
மலரன்ன-முக 74
மலரினுமெல் 300
மலர்காணின் 64
மறப்பின் 196
மறைபெறல் 162
மறைப்பேன்மற் 255
மறைப்பேன்மன் 138
மற்றியான் 195
மன்னுயிர் 146
மாதாமுகம் 73
மாலை நோய் 220
மாலையோ 214
முகைமொக்குள் 282
முயக்கிடை 236
முயங்கிய 235
முறிமேனி 66
யாங்கண்ணிற் 106
யாமுமுளேம் 193
யாரினுங் 332
யானோக்கும் 30
வருகமற் 270
வழுத்தினு 336
வாராக்காற் 160
வாழ்தல் 83
வாழ்வார்க்கு 179
வாளற்று 265
விடாஅது 199
விளக்கற்றம 170
விளியுமென் 198
வினைகலந்து 272
வீழப்படுவார் 181
வீழுநர்வீழ 180
வீழுமிருவா 55
வீழ்வாரின் 185
வேட்டபொழுதி 51

# திருக்குறள் சொல் அகராதி

## காமத்துப்பால்

[எண்—குறள் எண்]


அ 1091, 1187
அஃது 1093, 1166, 1279, 1308
அகத்து 1163, 1180, 1305, 1323
அகம் 1305. 1323
அகலாத 1226
அகறல் 1325
அசை 1098
அஞ்சல் 1149, 1154
அஞ்சுதும் 1128
அஞ்சும 1152, 1295
அஞர் 1086, 1179
அட்டிய 1093
அடி 1279
அடிக்கு 1120
அடு 1090
அடுங்கால் 1166
அணங்கு 1081, 1082
அணி 1089, 1273
அணியிழை 1102
அத்து 1084, 1092, 1117, 1120, 1130, 1141, 1191, 1204, 1205, 1234, 1250, 1257, 1281, 1299, 1301, 1323, 1330,
அதற்கு 1124
அதன் 1289, 1330
அதனின் 1166
அதனினும் 1158
அதனை 1141, 1143
அது 1309, 1144, 1166, 1284, 1302, 1307
அம் 1107, 1259, 1299, 1300, 1310
அமர் 1125
அமர்க்கண் 1083
அமர்த்தன 1084
அமிழ்து 1106
அமைந்தற்று 1302
அமைந்தார் 1155
அமையல 1283
அமையும 1193
அமைவில 1178
அயர்கம் 1268
அரிது 1153, 1155, 1156, 1160, 1180, 1276
அரிந்தற்று 1304
அரியர் 1138
அரிவை 1107
அரும்பி 1223, 1227
அருமை 1142
அரோ 1153, 1256
அல் 1299, 1300
அல்லது 1090, 1131, 1159, 1168
அல்லம் 1209
அல்லர் 1300
அல்லல் 1160, 1301, 1303
அல்லவை 1286
அல்லால் 1095, 1183
அல்லை 1221
அல்வழி 1299, 1300
அலர்ந்தார் 1303
அலர் 1141, 1142, 1146, 1149, 1291, 1301
அவர் 1152, 1155, 1156, 1182. 1183, 1184, 1188, 1204, 1206, 1236. 1242, 1244, 1249, 1261, 1293, 1297, 1298, 1321,
அவர்க்கண்ட 1177
அவர்க்காணாது 1178
அவர்க்கு 1321
அவர்மாட்டு 1199
அவள 1093, 1113 1279
அவா 1310
அவிர்மதி 1117
அவை 1105
அழல் 1228
அழிந்து 1317
அழுதாள் 1317, 1318
அளவில் 1187
அளி 1192, 1209. 1322
அளிக்கும 1192, 1321
அளித்து 1154, 1168, 1256
அளியர் 1138
அற்றம 1186
அற்றால 1145, 1148
அற்று 1107, 1192, 1261, 1302, 1304, 1306
அற்றே 1288
அறல் 1326
அறு 1295
அறிகிலார் 1139
அறிதோறு 1110
அறிந்த 1143
அறிந்தது 1226
அறிந்து 1128, 1287, 1312
அறிந்தேன் 1083
அறியலம 1257
அறியா 1116
அறியாது 1142
அறியாமை 1110

அறியார் 1141
அறியும 1101, 1308
அறியேன் 1083. 1125, 1207
அறிவது 1255
அறிவல் 1129
அறிவிப்ப 1233
அறிவில்லார் 1140
அறிவுடையார் 1153
அறு 1117
அறுக 1177
அறை 1180
அன் 1083
அன்பின்மை 1276
அன்று 1092. 1180, 1255, 1307
அன்றே 1208, 1258,
அன்ன 1119, 1122, 1137, 1142, 1143, 1260, 1267, 1294, 1305
அன்னது 1082
அன்னம 1120
அன்னள் 1124
அன்னார் 1323
அன்னை 1147
அனிச்சம 1111, 1115, 1120
அனைத்து 1129, 1208, 1320
ஆ 1163, 1183, 1250, 1312, 1315
ஆக 1127, 1128, 1147, 1242,1249,1263,1317
ஆகாதது 1291
ஆகி 1218, 1227, 1228
ஆகுதிர் 1319
ஆங்கு 1307, 1325
ஆங்கே 1215
ஆண்டு 1098, 1279
ஆண்மை 1133
ஆதல 1291
ஆம் 1298
ஆய் 1081, 1262
ஆயன் 1228
ஆயிடை 1179
ஆயிழை 1124
ஆயின் 1119 1156, 1216, 1306, 1321, 1325
ஆர் 1105, 1179, 1180
ஆர 1265
ஆருயிர் 1141
ஆல் 1084, 1110, 1107, 1141, 1144, 1148, 1152, 1155, 1180, 1184, 1192, 1210, 1213, 1215, 1216, 1219, 1220, 1257, 1280, 1302, 1303.
ஆவர் 1165, 1189, 1218, 1207
ஆவார் 1299
ஆள் 1105, 1119, 1125, 1142,
ஆளா 1230
ஆளும 1252
ஆறற 1209
ஆற்று 1174, 1175
ஆறறி 1160, 1276
ஆற்றுபவர் 1165
ஆற்றுமோ 1159
ஆறு 1321
ஆறறேன் 1162,
ஆன் 1083, 1108, 1196, 1214, 1217, 1219, 1220
இ 1085, 1129, 1130, 1142, 1150, 1162, 1169, 1176, 1227, 1319
இஃது 1161
இகந்து 1130 1271,
இசையும 1199
இது 1173
இட்டு 1260
இடத்து 1124, 1153,1285
இடம் 1123
இடர் 1176,
இடும்பை 1295
இடை 1108, 1239
இம்மை 1315
இமைப்பின் 1126, 1129
இயற்கு 1098
இயன்றன 1106
இயைந்து 1329
இரண்டு 1247,
இரப்ப 1212, 1329
இரவு 1280
இரா 1168, 1169, 1301, 1329
இரு 1091
இருதலை 1196
இருந்தது 1243, 1296
இருந்து 1107, 1296,1320
இருந்தேம் 1312
இருவர்க்கு 1108
இல் 1092, 1107, 1123, 1158, 1164, 1174, 1188, 1191, 1198, 1202, 1234, 1243, 1247, 1260, 1273, 1281, 1293. 1297, 1327
இல்லா 1308
இல்லாயின் 1306
இல்லை 1123, 1131, 1168, 1216, 1321
இல 1100
இலங்கிழாய் 1262
இலர் 1325
இலராக 1242
இலேன் 1226
இவக்காண் 1185
இவர் 1182,
இவள் 1091, 1104, 1112, 1188,
இவளே 1188
இவை 1109, 1244
இழத்தும் 1250

இழந்து 1144
இழாய் 1262
இழை 1114, 1329
இழைந்து 1177
இளி 1288
இளிவு 1298
இறந்த 1215
இறந்து 1138, 1254
இறவா 1157
இறை 1157
இறைஞ்சினள் 1093
இறைப்பவர் 1161
இன் 1087, 1103, 1105, 1106, 1115, 1132, 1139, 1163, 1169, 1198, 1201, 1209, 1210, 1214, 1216, 1217, 1219, 1220, 1277, 1280, 1281, 1289, 1290, 1299, 1307, 1314, 1322, 1330
இன்கண் 1152
இன்சொல் 1198
இன்பம் 1166, 1330
இன்மை 1209, 1276
இன்றி 1253, 1262
இன்று 1090, 1133, 1252
இன்றேன் 1144
இன்னு 1288
இன்னுது 1158, 1196
இன்னும் 1250, 1263
இனன் 1158
இனி 1083
இனிது 1103, 1108 1145, 1176, 1196, 1199, 1201, 1202, 1309, 1326,
இனிய 1199
இனியார் 1158
ஈந்தது 1142
உ 1281
உக்க 1270
உட்கும் 1088
உடம்பு 1122, 1132, 1163
உடைக்கும் 1251, 1258, 1324
உடைத்து 1082, 1085, 1152, 1173, 1276, 1280, 1325
உடைந்தது 1088
உடைந்து 1270
உடைய 1299, 1300
உடையாள் 1089
உடையேம் 1250
உடையேன் 1133 1254
உண்கண் 1091, 1113, 1172, 1174, 1212
உண்டல் 1128, 1145
உண்டது 1326
உண்டற்றால் 1107
உண்டார் 1090
உண்டாரும் 1214
உண்டு 1098, 1101 1117, 1164, 1213 1245, 1271, 1273, 1274, 1281, 1307
உண்டே 1164
உண்டேல் 1151,
உண்டோ 1154, 1260, 1323
உண்ணும் 1084, 1221
உண்பர் 1311
உண்மை 1212
உண்மையான் 1153
உணங்க 1310
உணர்த்தின் 1319
உணர்த்தும் 1246
உணர்தல் 1109
உணர்ந்த 1277
உணரப்படும் 1096
உணல் 1326
உணரா 1172
உணராமை 1304
உணராய் 1246
உப்பு 1302, 1328
உம் 1088, 1097 1100, 1101, 1116, 1120, 1127, 1132, 1136, 1137, 1153, 1162, 1183, 1201, 1204, 1207, 1208, 1228, 1244, 1261, 1275, 2277, 1278, 1281, 1282, 1283, 1288, 1289, 1290, 1291, 1297, 1306, 1309, 1311, 1313, 1319, 1320, 1321, 1322, 1325, 1326
உய்க்கும் 1134
உய்த்தல் 1287
உய்வு 1174
உயல் 1174, 1212
உயிர் 1084, 1106, 1121, 1124, 1163, 1168, 1209, 1213, 1230, 1293
உயிர்த்து 1101
உயிரும் 1132
உயிரிடை 1122
உரன் 1263
உரை 1151
உரைக்கும் 1156, 1235
உரைக்கோ 1181
உரைத்தலும் 1162
உரைத்து 1237
உரைப்பது 1184
உரைப்பாய் 1300
உலகத்து 1197
உலகு 1103
உலந்த 1174
உவக்காண் 1185
உவந்து 1130
உழக்கும் 1135, 1175, 1229
உழந்து 1131, 1137, 1177
உழப்பது 1172

உழை 1249
உள் 1130, 1177, 1274, 1324
உள்நீர் 1177,
உள்வழி 1170
உள்ள 1206, 1281
உள்ளத்தார 1249, 1274
உள்ளது 1091, 1274
உள்ளம 1130, 1170, 1207, 1263, 1270, 1324
உள்ளல் 1243, 1318
உள்ளார் 1127
உள்ளி 1230, 1243, 1249, 1264, 1317, 1320,
உள்ளின் 1126, 1201, 1207
உள்ளினேன் 1316
உள்ளும் 1298
உள்ளுவன் 1125, 1184
உள்ளுவேன் 1136
உள 1099, 1101
உளம் 1204
உளர் 1178, 1204
உளேன் 1167,1206,1263
உற்ற 1206, 1239, 1256
உற்றன 1179
உற்றார் 1097, 1255
உற்றால் 1247
உற்று 1101, 1290
உறாஅர் 1097
உறாதவர் 1245, 1292, 1296
உறாதோ 1143
உறார்க்கு 1200
உறின் 1270
உறு 1275
உறுதோறு 1106
உறுநோய் 1200
உறும் 1301
உறுவது 1259, 1271
உறைவர் 1130, 1244
ஊக்க 1298
ஊடல் 1109, 1284, 1307, 1310, 1312, 1326
ஊடாமை 1282
ஊடி 1260, 1312, 1328
ஊடியவர் 1304
ஊடினள் 1314
ஊடுக 1329
ஊடுதல் 1321, 1330
ஊர் 1129, 1130, 1142, 1150, 1158
ஊர்தல் 1136
ஊர்வது 1185
ஊரவர் 1147, 1220
ஊரார் 1180
ஊரும் 1182
ஊற்றுநீர் 1161
ஊறிய 1121
எடுக்கும 1150
எண்ணி 1298
எதிர் 1082
எம 1126, 1180, 1185, 1204, 1205, 1217, 1222, 1278, 1318
எம்மிடை 1122
எம்மை 1205
எமக்கு 1142, 1176, 1291
எய்தின்று 1240
எயிறு 1121
எரி 1148
எரு 1147
எல்லாம் 1168,1227,1266
எல்லார் 1311
எல்லாரும் 1139
எவ்வம் 1241
எவன் 1089, 1165, 1171, 1172, 1195, 1207, 1235, 1291, 1308,
எழ 1141
எழுதும் 1285
எழுதேம் 1127
எழுநாள் 1269 1278
எற்று 1256
என் 1081, 1088, 1136, 1139, 1163, 1168, 1170, 1175, 1181, 1182, 1185, 1189, 1209, 1213, 1230, 1235, 2237, 1243, 1244, 1246, 1248, 1252, 1254, 1262, 1264, 1265, 1284, 1292, 1296, 1297, 1310, 1316, 1324,
என்கண் 1174
என்ப 1280
என்பது 1083, 1188, 1293, 1310
என்பர் 1220
என்பார் 1188,1293,1312
என்பேன் 1254
என்ற 1148
என்றவர் 1154
என்றார் 1149
என்று 1112, 1114, 1139, 1248, 1298, 1307, 1308, 1313, 1317, 1319, 1320
என்றும் 1130
என்றேன் 1315, 1316
என்ன 1100, 1122
என்னது 1138
என்னும் 1270
என்னும் 1104, 1129, 1130, 1134, 1156, 1182, 1251
என்னை 1256
என 1173, 1190, 1216, 1236, 1245, 1252, 1257, 1259, 1292,
எனக்கு 1151,
எனல் 1148, 1260
எனின் 1189, 1190, 1194, 1199
எனை 1316
எனைத்து 1202,1208,1241

ஏ 1088, 1099, 1101, 1102, 1105, 1108, 1121, 1134, 1139, 1164, 1176, 1186, 1187, 1190, 1191, 1193, 1202, 1204, 1215, 1237, 1241, 1243, 1244, 1245, 1247, 1283, 1285, 1287, 1290, 1291, 1293, 1296
ஏங்கி 1248
ஏங்குபவர் 1269
ஏதில 1089
ஏதிலர் 1129, 1130, 1234,
ஏதிலார் 1099
ஏம் 1278
ஏமப்புணை 1164
ஏமம் 1131, 1164
ஏர் 1089, 1098, 1272, 1305
ஏறு 1137
ஏறும் 1132, 1133
ஐ 1083, 1085, 1132, 1146, 1200, 1213, 1217, 1219, 1222, 1230, 1236, 1238, 1244, 1250, 1252, 1256 1265, 1283, 1296, 1303, 1312, 1313, 1318
ஐம்புலன் 1101
ஒக்கின் 1100
ஒக்கும் 1112
ஒடு 1100, 1121, 1122, 1133, 1134, 1206, 1211, 1235, 1294, 1323
ஒண்டொடி 1101
ஒண்ணுதல் 1240
ஒத்தி 1119
ஒரு 1091, 1095
ஒருத்தி 1313
ஒருதலையான் 196
ஒருநாள் 1146, 1266, 1269
ஒருவர்கண் 1197
ஒல்லா 1136, 1271
ஒல்லை 1096
ஒல்வதோ 1149
ஒவ்வேம் 1114
ஒழிய 1231
ஒழுகுவான் 1197
ஒள் 1088, 1125
ஒளி 1118, 1329
ஒற்றி 1261
ஒன்று 1091, 1202, 1216, 1241, 1247, 1252, 1255, 1257, 1271, 1273, 1274, 1275, 1325
ஒன்றும் 1241
ஓ 1081, 1088, 1089, 1098, 1117, 1161, 1170, 1171, 1176, 1178, 1184, 1195, 1204, 1206, 1221, 1222, 1237, 1241, 1245, 1247, 1252, 1253, 1254, 1257, 1258, 1260, 1267, 1293, 1318, 1323, 1328,
ஓடு 1310
ஓம்பல் 1155
ஓம்பின் 1155
ஓம்பு 1149
ஓர் 1153, 1307
ஓவா 1205
கட்படாம் 1087
கடல் 1137, 1166, 1175, 1200
கடாக்களிறு 1087
கடும்புனல் 1134, 1167
கண் 1083, 1084, 1085, 1086, 1087, 1090, 1092, 1095, 1099, 1100, 1101, 1103, 1112, 1114, 1119, 1125, 1126, 1127, 1136, 1142, 1153, 1170, 1171, 1175, 1176, 1177, 1178, 1179, 1180, 1210, 1231, 1232, 1239, 1243, 1244, 1252, 1261, 1267, 1271, 1283, 1285, 1290, 1292, 1305, 1309, 1315,
கண்ட 1292
கண்டது 1146, 1171
கண்டதூஉம் 1215
கண்டபின் 1265
கண்டபொழுது 1215
கண்டவிடத்து 1285
கண்டற்று 1110
கண்டார் 1084, 1090
கண்டால் 1246
கண்டு 1101, 1250, 1259
கண்டும் 1291
கண்ணார் 1180, 1305
கண்ணார 1265
கண்ணாள் 1119, 1125, 1142
கண்ணின் 1140, 1280, 1311
கணிச்சி 1251
கதவு 1251
கதுப்பு 1105
கதுமென 1173
கயல் 1212
கரத்தல் 1162
கரப்பாக்கு 1127, 1129
கரப்பின் 1271
கருக்காய் 1306
கருமணி 1123
கரை 1167

கலங்கிய 1116
கலங்கினள் 1290
கலத்தல் 1259 1276
கலந்தற்று 1121
கலந்தார் 1212
கலந்து 1246, 1268
கலப்பேன் 1267
கலம் 1262
கலுழ்வது 1171
கலுழும் 1173
கவ்விது 1144
கவ்வை 1144
கவிழ்ந்து 1114
கவின் 1234, 1250
கழியும் 1169, 1262
கள் 1145, 1201, 1238, 1281, 1288
கள்வ 1288
கள்வன 1258
கள்ளம் 1184, 1275
களம் 1234
களவு 1092
களித்தல் 1281
களித்தார் 1288
களிதொறும் 1145
களிறு 1087
கனங்குழை 1081
கனவு 1211, 1213, 1214. 1216, 1217, 1219, 1220
கனவும் 1215
கனி 1191, 1306
கா 1163 1196
காட்டா 1171
காட்டிய 1313
காண் 1204, 1.94
காண்க 1265
காணகம் 1301
காணடல் 1213
காண 1119, 1140, 1210, 1281
காணப்படும் 1327
காணல் 1244
காணா 1285
காணாக்கால் 1286
காணாதவர் 1219
காணாது 1283
காணார் 1220
காணான் 1197
காணின் 1112, 1114
காணும் 1112, 1286
காணேம் 1285
காதல 1118, 1195 1242, 1249. 1298
காதலம் 1314
காதலர் 1099, 1150, 1185, 1208, 1211, 1216, 1217, 1234, 1246, 1278, 1308,
காதலவர் 1126, 1127, 1128, 1219, 1249
காம்பு 1272
காமக்கடல் 1164
காமக்கடும்புனல் 1167
காமநோய 1159, 1175, 1255, 1280
காமம் 1090, 1092, 1109, 1110, 1131, 1134, 1137, 1138, 1139, 1144, 1145, 1148, 1167 1191, 1196, 1201. 1202, 1214, 1247, 1251, 1252, 1253, 1254, 1257, 1264 1281, 1282, 1289, 1306, 1326, 1330.
காமன் 1197
காமுற்றார் 1133
காய்தி 1246
காய்வு 1246
காயார் 1208
காயும் 1313, 1319, 1320,
காரிகை 1262. 1272
கால் 1115, 1179, 1270, 1285, 1286
காலை 1226, 1235
காழ் 1191
கிடந்தேன் 1187
கு 1089, 1113, 1115, 1117, 1123, 1124, 1151, 1180, 1181, 1211, 1212, 1228, 1235, 1237, 1260, 1269, 1272, 1281, 1288, 1291, 1293, 1299, 1305, 1319, 1321, 1330,
குணம் 1125
குவளை 1114
குழல் 1228
குறிகொண்டு 1095
குறிப்பு 1097, 1253
குறு 1135
குறுகுங்கால் 1104
குறுந்தொடி 1135
கூடல 1284, 1327
கூடி 1330
கூடிய 1264
கூடியார் 1109
கூடுவேம் 1310
கூற்றம் 1085
கூற்று 1083
கூறல 1236
கெட்டார் 1293
கெட 1266
கெடும் 1203
கெழீஇயிலார் 1194
கேடு 1101
கேள் 1222
கேளிர் 1267
கை 1238
கைமாறு 1183
கையிகந்து 1271
கைவிடல 1245
கொடிய 1169
கொடியர் 1236
கொடியார் 1169, 1217, 1235, 1237.

கொடு 1264
கொடும் 1086
கொடுமை 1169, 1235
கொண்கன் 1186, 1265-6, 1283, 1285.
கொண்டற்று 1146
கொண்டன்னது 1082
கொண்டனள் 1315
கொண்டார் 1183, 1195, 1205
கொல் 1081, 1103, 1154, 1165, 1171, 1197, 1203, 1204, 1205, 1207, 1211, 1220, 1235 1307,
கொல்லும் 1228
கொலை 1234
கொள் 1233
கொள்ளாக்கடை 1195
கொள்ளும் 1092
கொள 1244
கோட்டுப்பூ 1313
கோடா 1086
கோடு 1264
கோல் 1285
கௌவை 1143, 1147, 1148, 1150
சாதல் 1124
சாயல் 1183
சால 1233
சாற்றுவேன் 1212
சிலர் 1289
சிறக்கணித்தாள் 1095
சிறப்பு 1208
சிறிது 1301, 1302
சிறு 1097. 1322
சிறுமை 1231
சினைப்பது 1203
சுடல் 1159
சுடின் 1159
சுடும் 1207
சூடினீர் 1313
சூடினும் 1313
சூழ்வது 1276
சூழ்வார் 1294
செம்பாகம் 1092
செய்த 1175, 1176, 1235
செய்தது 1250, 1279
செய்தல் 1226
செய்தலால் 1201
செய்தற்று 1303
செய்தார் 1243
செய்தார்க்கு 1167
செய்து 1275, 1294
செய்ப 1195
செய்யல 1086
செய்யின் 1283
செய்யும் 1208
செய்வேன் 1211
செயின் 1257. 1288
செருக்கு 1193
செல்கிற்பின் 1170
செல்லா 1255
செல்லாமை 1151
செல்லும் 1269
செல்வாய் 1248
செல்வார் 1185
செலல் 1293
செவ்வி 1293
செவ்விக்கு 1199
செற்றவர் 1256
செற்றார் 1097, 1245, 1255
செறாஅ 1097
செறாஅய் 1200
செறார் 1092, 1096
செறிதொடி 1275
செறிதோறும் 1110
சென்ற 1261
சென்றது 1284
சென்றார் 1231, 1263, 1269, 1278
சென்றாரை 1210
சென்றேன் 1259, 1284
சேண் 1231, 1269
சேயிழை 1110
சேறல் 1256
சேறி 1244, 1249, 1292
சொல் 1096, 1097, 1147
சொல்லாய் 1241
சொல்லி 1280
சொல்லுவ 1232
சொலினும் 1096
சொற்கள் 1100
சோரும் 1234
ஞாட்பு 1088
தக்க 1288
தக்கது 1173
தக்கனள் 1316
தகை 1182
தஞ்சம் 1300
தண் 1104, 1239
தண்டா 1171
தண்ணம் 1277
தணந்தமை 1233, 1277
தந்தார் 118[illegible]
தந்தாள் 1135
தந்து 1089, 1182, 1183,
தம் 1107, 1191, 1205. 1303,
தம்மை 1312
தமது 1107
தரற்கு 1214
தரும் 1162, 1273
தலைப்படுவார் 1289
தவ் 1144
தவறாய 1286
தவறு 1154, 1286, 1321, 1325
தளிர்ப்ப 1106
தன் 1102, 1144, 1319
தனி 1296
தாக்கணங்கு 1082
தாம் 1103, 1140, 1150, 1169, 1171, 1176, 1191, 1194, 1195, 1202. 1299, 1300, 1325
தாமரை 1103

தாமரைக்கண்ணான் 1103
தாமே 1173
தாழ் 1251
தான 1094, 1102, 1215, 1290
தானே 1082
திகழ்தரும 1273
திகழ்வது 1273
திங்கள 1146
திரு 1123
திறம 1184, 1298
தின்னும 1244
தினிய 1296
திணைத்துணை 1282
தீ 1104, 1159, 1260
தீண்டலாவ 1106
தீர்க்கும் 1241, 1275
தீரா 1201
து 1083
துகில் 1087
துஞ்சா 1179
துஞ்சின் 1212
துஞ்சுங்கால் 1218
துணை 1168 1222, 1234, 1282 1297
துணையாக 1263
துப்பு 1165
துமமல் 1203, 1253
துமமினா 1312
துமமினீர் 1317
துமமினேனை 1317
துமமு 1318
துயா 1135, 1165, 1256, 1275
துயில் 1103
துயிறறி 1168
துவ்வாய் 1294
துறந்தமை 1157
துறநதாா 1188, 1250
துறைவன் 1157, 1277
துன்பம 1166, 1233, 1299, 1307
துன்னு 1260
துனி 1233, 1294, 1306, 1322
துனித்து 1290
தூங்கும 1163
தூது 1211, 1228
தூவி 1120
தூறறுகொல் 1157
தூற்றா 1190
தெரிந்து 1172
தெளித்த 1154
தெறாஉம 1104
தேய்நத 1261
தேறியார் 1154
தேன் 1121
தொடி 1135 1234,-6, 1238, 1275, 1279
தொடில் 1159
தொல் 1234-5
தொழில் 1252
தோடு 1105
தோழி 1284
தோள் 1103, 1105, 1106, 1113, 1218, 1233-7 1262, 1265, 1272, 1279 1325,
தோளவள் 1113
தோற்றம 1084, 1153
தோற்றவர் 1327
தோன்றல் 1119
தோனறி 1253
தோன்றிய 1328
தோன்றும 1322, 1324
நக 1173
நகுப 1140
நகும 1094, 1095, 1098
நகை 1274
நசை 1156 1199, 1263
நட்டார் 1293
நட்பினுள் 1165
நட்பு 1122
நடுகது 1086
நண்ணார் 1088
நண்ணேன் 1311
நம 1220, 1258
நமமின் 1277
நமகது 1195, 1231
நயந்தவர் 1181, 1232
நயப்பித்தாள் 1189, 1190
நல் 1111, 1133, 1247, 1322
நல்கா 1217
நல்காதவர் 1213
நல்காமை 1181; 1190, 1232
நல்கார் 1199, 1148
நல்காரை 1214
நல்குவா 1150, 1156
நலவ 1115
நல்லவர் 1305
நலாணமை 1133-4
நலத்தகை 1305
நறு 1090
நறுமலர் 1231
நன்று 1190, 1235
நனவு 1213, 1220
நாடி 1214
நாடு 1323
நாண 1089, 1132,-4, 1163, 1183, 1247, 1257, 1297
நாண 1149
நாணார் 1205
நாணின 1231
நாணு 1162, 1251
நாம 1195
நாள் 1169 1206, 1233, 1261, 1256, 1269, 1278
நாறறம 1113, 1274
நிணம 1260
நிலம 1323
நிலன் 1094, 1114
நிழல 1309
நிற்கும 1141
நிற்பேம 1260
நிறுத்து 1132, 1174

நிறை 1138, 1251, 1254, 1315
நிறைந்த 1117, 1272, 1282
நின் 1151, 1222, 1271, 1288, 1294, 1311
நின்று 1197
நின்னினும் 1111
நினைத்து 1241, 1320
நினைந்தக்கால் 1296
நினைந்து 1209
நினைய 1202
நினைப்பவர் 1203
நினைப்பின 1208
நினையார் 1203
நீ 1123, 1221. 1242, 1249, 1291, 1293
நீக்கி 1132, 1260
நீங்கலார் 1216,-7
நீங்கி 1234
நீங்கில் 1104
நீங்கின் 1155
நீங்கும் 1124, 1265
நீடு 1312
நீடுக 1329
நீடுவது 1307
நீத்தக்கால் 1149
நீத்தார் 1220
நீத்து 1262
நீந்தல 1170
நீந்தி 1167
நீந்தும் 1164
நீப்பின் 1154
நீர் 1093, 1121, 1147, 1161, 1174, 1177, 1309, 1315, 1319, 1323
நீர்த்து 1143
நீர்மை 1272
நீரா 1319
நீஎள் 1111
நீரை 1111
நீள 1302
நீளும் 1147
நுசுப்பு 1115
நுதல் 1083, 1123, 1238, 1250, 1328
நுதுப்பேம் 1148
நுணணியர் 1126
நுமர் 1318
நூல் 1273
நெகிழ 1236
நெஞ்சத்தார் 1128. 1218
நெஞ்சம் 1204, 1205 1299, 1300
நெஞ்சினுர் 1260
நெஞ்சு 1237, 1241,-50 1252, 1259, 1264, 1284, 1291, 1300
நெஞ்சே 1112
நெடிய 1169
நெய் 1148
நெருஞ்சி 1120
நெருநல் 1273
நேர்ந்தேன் 1181
நொந்தார் 1308
நொந்து 1236
நோக்க 1098
நோக்கம் 1085
நோக்காக்கால் 1094
நோக்காமை 1095
நோக்கி 1093, 1094, 1173, 1279
நோக்கிய 1172
நோக்கினுள் 1082, 1093
நோக்கினீர் 1320
நோக்கினும் 1320
நோக்கு 1082, 1091 1099, 1100, 1320,
நோக்குதல் 1082, 1099
நோக்கும் 1094, 1097, 1114
நோதல் 1308
நோய் 1091, 1147, 1160, 1162, 1171, 1174, 1176, 1226, 1227, 1241, 1248, 1255, 1266, 1280, 1301, 1303
நோய்க்கு 1102
நோயை 1102
நோவது 1242
நோவர் 1219
நோவல் 1236
நோனு 1132, 1163
பகல் 1227
பசக்க 1189
பசந்த 1181
பசந்தது 1238
பசந்தாள் 1188
பசந்து 1232
பசப்பு 1182, 1184, 1185, 1186 1187, 1190, 1239, 1240, 1265
பசலை 1183
பசையினள் 1098
பட்டது 1140, 1176
பட்டாங்கு 1189
பட்டு 1297
படர்தரும் 1229
படல் 1136, 1175
படா 1115
படாதி 1210
படாம 1087
படாவாறு 1140
படும 1138, 1254,
படை 1228, 1258, 1324,
பண்டு 1083, 1133
பண்பு 1181
பணிமொழி 1121, 1258
பணை 1234
பதி 1229
பதியில் 1116
பயந்து 1192
பயன் 1109, 1100
பரத்த 1311
பரிதல் 1243
பரிந்தவர் 1218
பரிந்து 1172, 1243

பருவரல் 1197
பருகுவன் 1266
பருவரார் 1126
பலர் 1112, 1119, 1141, 1149, 1160
பழம் 1120
பழி 1285
பறை 1115, 1180
பனி 1223, 1232
பனை 1282
பாக்கியம் 1141
பாகம் 1092
பாடு 1237, 1322
பாத்து 1107
பாம்பு 1146
பாய்பவர் 1287
பார்க்கும் 1186
பார்வல் 1152
பால 1121
பாவாய 1123
பிணிக்கு 1102
பிணை 1085, 1089
பிரிந்தவர் 1248
பிரியலம் 1315
பிரிவு 1152, 1153, 1155, 1156, 1158, 1160, 1295
பிற 1102, 1181, 1184
பிறப்பு 1315
பிறர் 1319
பின் 1160, 1218, 1255, 1256, 1265, 1293
பீடு 1088
பீழிப்பது 1217
புடை 1187
புணர்தல் 1109, 1326
புணர்ந்து 1260
புணர்வது 1307
புணர்வு 1152, 1155
புணை 1134, 1164
புத்தேள் 1323
புருவம் 1086
புல்ல 1316
புல்லா 1303
புல்லாது 1301
புல்லாள் 1316
புல்லி 1187, 1324
புல்லினேன் 1259
புல்லுதல் 1290
புல்லுவேன் 1267
புலத்தக்கனள் 1316
புலத்தகை 1305
புலத்தல் 1323
புலத்தை 1301
புலந்தார் 1303
புலந்து 1246, 1287
புலப்பல் 1259
புலப்பேன் 1267
புலவி 1302, 1306, 1309, 1324
புற்கென்ற 1261
புன்கண் 1152, 1222
புனல் 1287
பூ 1112, 1115, 1305
பூசல் 1237
பெட்டாங்கு 1293
பெட்டார் 1178
பெட்ப 1257, 1276, 1283
பெண் 1272
பெண்ணியலள் 1311
பெண்ணின் 1137, 1280
பெண்டகை 1083, 1084
பெண்மை 1258, 1280
பெய்தாள் 1115
பெயர்ந்தேன் 1187
பெயல் 1174
பெரிது 1092, 1166, 1272, 1276
பெரு 1239
பெருந்தக்கது 1137
பெருந்தகைமை 1255
பெற்ற 1109, 1143
பெற்றக்கால் 1270
பெற்றவா 1191
பெற்றார் 1191
பெற்றாள் 1104
பெறல் 1180
பெறாஅது 1143, 1198
பெறாமை 1295
பெறின் 1270, 1295, 1330
பெறுகுவம் 1328
பெறுதல 1190
பெறுதி 1237
பெறும் 1322
பேணாது 1178, 1283
பேணியார் 1257
பேதை 1084, 1106, 1238, 1239, 1248, 1272, 1274
பேதைக்கு 1136
பேதைமை 1242
பேர் 1083, 1190
பேரமர்க்கண் 1083
பைதல் 1172, 1175, 1197, 1229, 1233, 1243, 1266
பைந்தொடி 1234, 1238
பைய 1098
பொது 1099, 1311
பொதுநோக்கு 1099
பொய் 1246
பொய்த்தல் 1287
பொருள் 1230
பொழுதின் 1105
பொழுது 1221
பொறேன் 1247
போகார் 1126
போதாய் 1123
போல் 1090, 1097, 1118, 1180, 1186, 1222, 1228, 1253, 1273, 1274, 1285, 1237
போல 1095, 1099, 1117, 1159, 1161, 1196, 1234
போலும் 1105, 1232, 1233
போழ்து 1229

போழப்படா 1108
போன்று 1097, 1170, 1203
மகிழ் 1201
மகிழ்செய்தல் 1090
மடந்தை 1116, 1122, 1273
மடநோக்கு 1089
மடம் 1297
மடல் 1131, 1132, 1133, 1135, 1136, 1137,
மடவரல் 1085
மணந்த 1233
மணந்தார் 1221, 1226
மணி 1123
மணியில் 1273
மதி 1116, 1117, 1118, 1119, 1210, 1229
மயில் 1081
மருண்மாலை 1222,
மருந்து 1091, 1102, 1241, 1275
மருள் 1222, 1230
மலர் 1112, 1119, 1142, 1231, 1289
மலரும் 1227
மழை 1239
மற்று 506, 1122, 1151, 1155, 1166, 1178, 1206, 1294, 1308, 1316
மறக்கல்லா 1294
மறந்திர் 1316
மறந்து 1284
மறந்தேன் 1297
மறப்பின் 1125, 1207, 1262
மறப்பு 1125, 1207
மறு 1117
மறுகு 1139
மறுகும் 1139
மறை 1138, 1180, 1254,
மறைத்திர் 1318
மறைப்பின் 1086
மறைப்பேன் 1161, 1253
மன் 1086, 1102, 1125, 1138, 1161, 1165, 1168, 1170, 1178, 1184, 1189, 1206, 1207, 1212, 1253, 1254, 1265, 1266, 1284, 1329
மன்ற 1136
மன்று 1138, 1254
மன்னும் 1146, 1164, 1327
மனை 1268
மா 1107
மாட்டு 1110
மாண் 1114
மாணா 1297
மாதர் 1081, 1087, 1117, 1118 1120
மாயக்கள்வன் 1258
மாயா 1230
மாயும் 1230
மார்பு 1288, 1311
மாலும் 1081
மாலை 1135, 1221, 1222, 1228, 1229, 1230, 1233, 1235, 1236, 1237
மிக்கற்று 1302
மிகும் 1161
மீன் 1116
முகம் 1117, 1118, 1119
முகன் 1116
முகை 1274
முத்தம் 1113
முதல் 1304
முயக்கு 1107, 1108, 1186, 1239
முயங்கப்பெறின் 1330
முயங்கிய 1238
முலை 1087
முறி 1113
முறுவல் 1113
முன்கை 1157
முன்னம் 1277
மூன்றும் 1085
மெல் 1103, 1111, 1265, 1279
மெல்ல 1094
மெல்லிது 1289
மென்தோல் 1325
மேல் 1087, 1182, 1266,
மேலர் 1218
மேனி 1113, 1185, 1189, 1278
மொழி 1258
மை 1112
மையாத்தி 1112
யாண்டு 1104
யாது 1211
யாப்பினுள் 1093
யாம் 1111, 1123, 1140, 1150, 1171, 1204, 1245, 1278, 1312, 1329
யாமத்து 1136
யாமத்தும் 1167, 1252
யார் 1249, 1194, 1299, 1314, 1317, 1320
யார்க்கு 1181
யாரினும் 1314
யான் 1094, 1098, 1125, 1161, 1167, 1184, 1206, 1212, 1235, 1247, 1253, 1254
வந்த 1211
வரல் 1201, 1263
வரவு 1151, 1165, 1264
வரின் 1179, 1267, 1282
வருந்தினார்க்கு 1131
வருநாள் 1269
வரும் 1233, 1234
வருக 1266
வல் 1151
வல்லது 1321

வல்லையேல் 1118
வல்வரவு 1151
வலி 1131
வழி 1234, 1299, 1300, 1308
வழுத்தினாள் 1317
வள்ளி 1304
வளர 1233
வளி 1108, 1239
வளை 1157, 1277
வற்று 1187
வன்கண்ணது 1222
வன்கண்ணர் 1156
வன்கணார் 1198
வாடிய 1234, 1235; 1304
வாடின் 1322
வாடு 1237
வாய் 1100, 1117
வாரா 1179
வாராக்கால் 1179
வாரும் 1232
வால் 1121
வாழ்க 1312,
வாழ்தல் 1124, 1158
வாழ்வார் 1151, 1160
வாழ்வார்க்கு 1157, 1192
வாழ்வாரின் 1198
வாழி 1111, 1118, 1210, 1221, 1222, 1242
வாழிய 1200
வாழுநம் 1193
வாள் 1261
வானம் 1192
விட 1118
விடல் 1302, 1303, 1324
விடாது 1210
விடின் 1159
விடு 1247
விடும் 1153
விடுவார் 1310
விதுப்பு 1290
விரல் 1161
விருந்து 1211, 1268
விரைந்து 1218
விழிக்குங்கால் 1218
விழைந்து 1177
விளக்கு 1186
விளியும் 1209
வினை 1268
வீங்கிய 1233
வீழ்த்த 1251
வீழ்பவள் 1111
வீழ்வார் 1103, 1191, 1192, 1194, 1198, 1202, 1325
வீழ்வார்க்கு 1192
வீழ 1191
வீழப்படார் 1194
வீழப்படுவார் 1194
வீழப்படுவார்க்கு 1193
வீழுநர் 1193, 1309
வீழும் 1108, 1123
வெய்து 1128
வெயர்ப்ப 1328
வெள்ளநீர் 1170
வெளிப்படுந்தோறும் 1145
வெளி 1113
வென்றார் 1327
வென்றீக 1268
வேட்ட 1105, 1145
வேண்டி 1177, 1256
வேண்டின் 1150
வேண்டும் 1150, 1282
வேந்தன் 1268
வேபாக்கு 1128
வேய் 1113
வேல் 1113
வேலை 1221
வேறு 1209
வைத்து 1269

உ

குருபாதம்

# தருமபுர ஆதீன வெளியீடுகள்

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 1. | குருஞானசம்பந்த சுவாமிகள் தாலாட்டு சமூகமாலை முதலியன | 1924 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1944 |
| 2. | நித்திய கன்மநெறி மூலம் | 1927 |
| 3 | திருமுல்லைவாயிற் புராணம் | ,, |
| 4. | திரிபதார்த்தரூபாதி தசகாரிய அகவல் | ,, |
| 5. | சித்தாந்த நிச்சயம் | 1928 |
| 6. | சம்பிரதாய தீபம் | ,, |
| 7, | வருணாச்சிரம சந்திரிகை (வடமொழி) | 1930 |
| 8. | சிகாரத்தின மாலை | ,, |
| 9. | திருப்பதிகமும் பஞ்சரத்தினமும் | ,, |
| 10. | தசமணிமாலை | ,, |
| 11. | ஞானசம்பந்த குருராயவட்டகமும், சந்திரகலாமாலையும் | ,, |
| 12, | திருவையாற்றுப் புராணம் | ,, |
| 13. | சிவானந்தபோத சாரம் | 1931 |
| 14 | சோடசகலாப் பிராசாத சட்கம் | ,, |
| 15. | சைவசன்யாச பத்ததி (வடமொழி) | 1932 |
| 16. | சிவபோகசாரமும், சொக்கநாத வெண்பாவும் ஆங்கிலத்துடன் | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1936 |
| | ,, மூன்றும் பதிப்பு | 1950 |
| 17. | சிவப்பிரகாசக்கட்டளை—ஆங்கிலத்துடன் | 1932 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1939 |
| 18. | 23-வது மகாசந்நிதானத்தின்மீது பலர் பாடிய தோத்திரப் பாடல்கள் | 1933 |
| 19. | திருத்துருத்திப் புராணம் மூலமும் வசனமும் | ,, |
| 20 | ஞானசரிதை | 1934 |
| 21. | முத்திநிச்சயம்—சிற்றுரையுடன் | ,, |
| 22. | அறிவானந்த சமுத்திரம் | ,, |
| 23. | பண்டாரமும்மணிக்கோவை குறிப்புரையுடன் | 1937 |
| 24, | இந்துமத பாலபாடம் | ,, |
| 25, | சிதம்பரச் செய்யுட்கோவை உரையுடன் | ,, |
| 26. | திருவையாற்றுத் தலமகிமைச் சுருக்கம் | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 27. | கிளிவிடுதூது | 1937 |
| 28. | திருமுலைப்பால் சிறப்பு | 1939 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1941 |
| 29. | பதி பசு பாசத்தொகை | 1940 |
| 30 | ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர் நான்மணிமாலை | ,, |
| 31 | திருபுவனத் தலமகிமைச் சுருக்கம் | ,, |
| 32. | கீர்த்தித் திருவகவல் | 1941 |
| 33. | ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் வரலாறும் பாசுரங்களும் | ,, |
| 34. | வைத்தீஸ்வரன்கோயில் தேவாரம் திருப்புகழ் | ,, |
| 35. | திருத்தொண்டத் தொகையும் அசபாநடன பதிகமும் | ,, |
| 36. | குங்குலியக்கலய நாயனார் அன்பின்திறம் | ,, |
| 37, | திருக்கடவூர்த் தேவாரம் திருப்புகழ் | ,, |
| 38, | திருவையாற்றுத் தேவாரம் திருவாசகம் திருப்புகழ் | ,, |
| 39 | புள்ளிருக்குவேளூர்ப் புராணம் | ,, |
| 40. | சித்தாந்த சைவ வினாவிடை | ,, |
| 41. | நால்வர் சரித்திரமும் அற்புதத் தேவாரத்திரட்டும் | ,, |
| 42. | ஆச்சாள்புரத் தலவரலாறு | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1943 |
| 43 | திருவையாற்றுத் தலவரலாறு | 1941 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1943 |
| | ,, மூன்றாம் பதிப்பு | 1950 |
| 44, | சுப்பிரமணியர் திருவவதாரமும் கந்தர்கலி வெண்பாவும் | 1941 |
| 45 | தருமபுர ஆதீனம் மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு | ,, |
| 46. | சிவபூஜாவிதி | ,, |
| 47, | சைவாநுட்டானவிதி | ,, |
| 48. | திருக்கடவூர் உலா குறிப்புரையுடன் | ,, |
| 49. | திருப்பாடல்கள் | 1924 |
| 50. | விநாயகர் அகவல்கள் | ,, |
| 51. | சீகாழித் தலவரலாறு | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1950 |
| 52. | மெய்கண்டசாத்திரம் மூலம் | ,, |
| 53. | திருக்கற்குடித் தலவரலாறு | 1943 |
| 54, | நீதிநெறிவிளக்கம் (உரைவளத்துடன்) | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1949 |
| 55. | திருவாரூர் நான்மணிமாலை மூலமும் வசனமும் | 1943 |
| 56. | சகலகலாவல்லிமாலை உரையுடன் | ,, |
| 57. | கந்தரனுபூதி | ,, |
| 58. | குத்தாலத் தலவரலாறு | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 59. | குறுக்கைத் தலவரலாறு | 1943 |
| 60. | திருப்புவனத் தலவரலாறு | ,, |
| 61. | திருக்கடவூர்த் தலவரலாறு | ,, |
| 62. | புள்ளிருக்குவேளூர்த் தலவரலாறு | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1949 |
| 63. | திருப்பனந்தாள் தலவரலாறு | ,, |
| 64. | 24-வது மகாசந்நிதானம் பத்தாண்டு ஆட்சி மலர் | ,, |
| 65 | அப்பர் சுவாமிகள் புராணம் C K S விரிவுரையுடன் | 1944 |
| 66. | மெய்கண்டான் சித்தாந்த மகாநாடு திருமுறைத் திருநாள் நிகழ்ச்சிகள் | ,, |
| 67. | சிவஞானபோத சூத்திரக் கட்டுரை | ,, |
| 68. | ஞானசம்பந்தர் வழங்கிய ஞானவுரை | 1945 |
| 69. | சிவப்பிரகாசம் ஆங்கில மொழிபெயர்ப்புடன் | ,, |
| 70. | தருமபுர ஆதீன நூல்நிலையப் புத்தகப்பட்டி | ,, |
| 71. | புள்ளிருக்குவேளூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1946 |
| 72. | பஞ்சாவரணத் தோத்திரங்கள் | 1945 |
| 73. | சிதம்பரத்துத் திருப்பதிகங்கள் | ,, |
| 74 | தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா | ,, |
| 75. | திருவேட்களத் திருப்பதிகங்கள் | ,, |
| 76. | திருநெல்வாயில் திருப்பதிகம் | ,, |
| 77. | திருக்கழிப்பாலைத் திருப்பதிகங்கள் | ,, |
| 78 | திருநாரையூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 79. | தருமபுர ஆதீன ஆவணிமூலத் திருநாள் | ,, |
| 80. | ஆச்சாள்புரத் திருப்பதிகம் | ,, |
| 81 | திருமயேந்திரப்பள்ளித் திருப்பதிகம் | ,, |
| 82 | திருத்துருத்தித் திருப்பதிகங்கள் | 1945 |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1946 |
| 83. | திருமங்கலக்குடித் திருப்பதிகங்கள் | 1945 |
| 84. | திருக்கோளிலித் திருப்பதிகங்கள் | ,, |
| 85. | திருக்கடவூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1946 |
| 86. | சிவஞானபோதம் ஆங்கில மொழிபெயர்ப்புடன் | 1945 |
| 87. | சோமவார விரதம் | ,, |
| 88. | திருநீறு | ,, |
| 89. | உருத்திராக்கம் | 1945 |
| 90. | ஐந்தெழுத்து | ,, |
| 91. | கந்தர் ஷஷ்டி விரதச் சிறப்பு திருமுருகாற்றுப்படையுடன் | 1946 |
| | இரண்டாம் பதிப்பு | 1949 |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 92. | திருவருட்பயன் ஆங்கில மொழிபெயர்ப்புடன் | 1946 |
| 93. | தென்திருமுல்லைவாயில் திருப்பதிகம் | ,, |
| 94. | ஆண்டாள் திருப்பாவை | ,, |
| 95. | திருக்கலிக்காமூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 96. | தருமபுர ஆதீனப் பாடசாலைகளின் நிர்ணயவிதிகள் | ,, |
| 97. | திருநெல்வேலித் திருப்பதிகம் | ,, |
| 98 | திலகவதியார் (உரைநடை) | ,, |
| 99. | சீகாழித் திருப்பதிகங்கள் | ,, |
| | ,, இரண்டாம் பதிப்பு | 1948 |
| 100. | திருக்கோலக்காத் திருப்பதிகங்கள் | 1946 |
| 101. | திருக்குருகாவூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 102. | திருச்சாய்க்காட்டுத் திருப்பதிகம் | ,, |
| 103. | திருப்பல்லவனீச்சரத் திருப்பதிகங்கள் | ,, |
| 104. | திருவெண்காட்டுத் திருப்பதிகங்கள் | ,, |
| 105. | கீழைத்திருக்காட்டுப்பள்ளித் திருப்பதிகம் | ,, |
| 106. | சித்தாந்தத் திரயம் ஆங்கில மொழிபெயர்ப்புடன் | ,, |
| 107. | ஸ்ரீகண்டன் ஓர் சிறு நாடகம் | 1946 |
| 108. | திருமுலைப்பால் திருவிழாச்சிறப்பு | ,, |
| 109. | முத்திநிச்சயப்பேருரை (வெள்ளியம்பலவாணமாபாடியம்) | ,, |
| 110. | மிருகேந்திரம் தமிழ்மொழிபெயர்ப்புடன் | ,, |
| 111. | நடராஜ சதகம் | ,, |
| 112. | உண்மைவிளக்கம் ஆங்கில மொழிபெயர்ப்புடன் | ,, |
| 113. | திருக்கண்ணார்கோயில் திருப்பதிகம் | , |
| 114. | சுவாமிநாதசுவாமி தோத்திரங்கள் | ,, |
| 115. | திருநள்ளாற்றுத் திருப்பதிகங்கள் | ,, |
| 116. | திருக்கடைமுடித் திருப்பதிகம் | ,, |
| 117. | திருப்பறியலூர்த் திருப்பதிகம் | ,, |
| 118. | திருவிளநகர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 119. | திருநின்றியூர்த் திருப்பதிகம் | ,, |
| 120. | திருஆக்கூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 121. | திருக்கடவூர்மயானத் திருப்பதிகங்கள் | ,, |
| 122. | மாயூரத் திருப்பதிகங்கள் | ,, |
| 123. | திருநீடூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 124. | திருப்புன்கூர்த் திருப்பதிகங்கள் | 1947 |
| 125. | திருஅன்னியூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 126 | திருத்தருமபுரத் திருப்பதிகம் | ,, |
| 127. | ஆலயவழிபாடு -தோத்திரங்களுடன் | ,, |
| 128. | திருவேள்விக்குடித் திருப்பதிகங்கள் | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 129. | திருஎதிர்கொள்பாடித் திருப்பதிகம் | 1947 |
| 130. | திருமயிலாப்பூரத் திருப்பதிகம் | ,, |
| 131. | திருஒற்றியூரத் திருப்பதிகங்கள் | ,, |
| 132. | திருஞானசம்பந்தர் புராணம் முதல்நூறுபாடல்கள் C. K. S. விரிவுரையுடன் | ,, |
| 133. | திருமணஞ்சேரித் திருப்பதிகங்கள் | ,, |
| 134. | இருபா இருபஃது ஆங்கில மொழிபெயர்ப்புடன் | ,, |
| 135. | திருக்குறுக்கைத் திருப்பதிகங்கள் | ,, |
| 136. | தருமபுர ஆதீனப் பாடசாலை ஆறுவது ஆண்டு அறிக்கை | ,, |
| 137. | திருக்கருப்பறியலூரத் திருப்பதிகங்கள் | ,, |
| 138. | 25-வது மகாசந்நிதானம் முதலாண்டு ஆட்சி அறிக்கை | ,, |
| 139. | திருக்குரக்குக்காத் திருப்பதிகம் | ,, |
| 140. | திருஅஞ்சைக்களத் திருப்பதிகம் | ,, |
| 141. | திருப்பழமண்ணிப்படிக்கரைத் திருப்பதிகம் | ,, |
| 142. | திருவாழ்கொளிபுத்தூரத் திருப்பதிகங்கள் | ,, |
| 143. | திருஓமாம்புலியூரத் திருப்பதிகம் | ,, |
| 144. | சிவபோகசாரம் விரிவுரையுடனும் ஆங்கிலமொழிபெயர்ப்புடனும் | ,, |
| 145. | திருக்கானாட்டுமுள்ளூரத் திருப்பதிகம் | ,, |
| 146. | துள்ளிவருகுதுவேல் | ,, |
| 147. | திருக்கடம்பூரத் திருப்பதிகங்கள் | ,, |
| 148 | திருஅவிநாசித் திப்பதிகம் | ,, |
| 149. | திருமுருகன்பூண்டித் திருப்பதிகம் | ,, |
| 150. | திருவெம்பாவைத் திருப்பதிகம் விளக்கத்துடன் | ,, |
| 151. | திருவலஞ்சுழித் திருப்பதிகங்கள் | ,, |
| 152. | 25-வது மகாசந்நிதானம் இரண்டாவதாண்டு ஆட்சி அறிக்கை | 1948 |
| 153. | திருப்பந்தணைநல்லூரத் திருப்பதிகங்கள் | ,, |
| 154. | திருக்கஞ்சனூரத் திருப்பதிகம் | ,, |
| 155. | திருக்கோடிகாத் திருப்பதிகங்கள் | ,, |
| 156. | திருவாப்பாடித் திருப்பதிகம் | ,, |
| 157. | சிவஞானசித்தியார் சுபக்கம் ஆங்கில மொழிபெயர்ப்புடன் | ,, |
| 158 | அபிராமி அந்தாதி விரிவுரையுடன் | ,, |
| 159. | திருச்சேய்ஞலூர்த் திருப்பதிகம் | ,, |
| 160. | பண்டாரசாத்திரம் முதல் தொகுதி | ,, |
| 161. | நல்வழி | ,, |
| 162. | சுவாமிநாதன் பிரபாவம் | ,, |
| 163. | திருத்துதேவன்குடித் திருப்பதிகம் | ,, |
| 164. | இன்பம் | ,, |
| 165. | அறுபத்துமூவர் | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
| --- | --- | --- |
| 166. | திருவியலூர்த் திருப்பதிகம் | 1948 |
| 167 | மெய்கண்ட நூற்பொருட்சிறப்பு | ,, |
| 168. | திருக்கொட்டையூர்த் திருப்பதிகம் | ,, |
| 169. | திருஇன்னம்பர் திருப்பதிகம் | ,, |
| 170, | பழநி தண்டாயுதபாணி தோத்திரங்கள் | ,, |
| 171, | 25-வது மகாசந்நிதானம் மூன்ருவதாண்டு ஆட்சி அறிக்கை | ,, |
| 172. | திருப்பாதிரிப்புலியூர்த் திருப்பதிகம் | ,, |
| 173. | திருப்புறம்பயத் திருப்பதிகம் | ,, |
| 174, | திருவிசயமங்கைத் திருப்பதிகம் | ,, |
| 175, | சைவத் திருமுறைகள் வசன நூல் | ,, |
| 176. | அமைதி | ,, |
| 177. | திருவைகாவூர்த் திருப்பதிகம் | ,, |
| 178. | திருச்சிவபுரத் திருப்பதிகம் | ,, |
| 179, | மதுரைத் திருப்பதிகம் தலவரலாற்றுடன் | ,, |
| 180. | திருப்பரங்குன்றத் திருப்பதிகம் | ,, |
| 181. | திருவடகுரங்காடுதுறைத் திருப்பதிகம் | ,, |
| 182, | திருப்பழனத் திருப்பதிகம் | 1949 |
| 183, | திருக்குறள் கதைகள் எண்பது | ,, |
| 184. | சிதம்பரம் - பதிகங்களுடன், | ,, |
| 185, | திருப்பெரும்புலியூர்த் திருப்பதிகம் | ,, |
| 186. | 24-வது மகாசந்நிதானம் பத்தாண்டுவிழா நிகழ்ச்சி | ,, |
| 187. | திருநெய்த்தானத் திருப்பதிகம் | ,, |
| 188. | திருக்கண்டியூர்த் திருப்பதிகம் | ,, |
| 189. | திருவாரூர் பதிகங்களுடன் ஆராய்ச்சிநூல் | ,, |
| 190. | திருவாலம்பொழில் திருப்பதிகம் | ,, |
| 191 | தாயுமானவர் மடல் குறிப்புரையுடன் | ,, |
| 192. | ஆதீனக்கோயில்கள் - கல்வெட்டாராய்ச்சியுடன் | ,, |
| 193. | திருத்தொண்டர் கீதம் | ,, |
| 194 | திருமழபாடித் திருப்பதிகங்கள் | ,, |
| 195. | திருமுருகாற்றுப்படையும், கோளறு திருப்பதிகமும் | ,, |
| 196, | ஆபதுத்தாரணர்மாலை—அஷ்டோத்திரசதநாமங்களுடன் | ,, |
| 197, | திருப்பழுவூர்த் திருப்பதிகம் | ,, |
| 198, | அபிராமி அந்தாதி மூலம் | ,, |
| 199. | திருக்கானூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 200. | திருஅன்பிலாலந்துறைத் திருப்பதிகம் | ,, |
| 201. | திருத்தினைநகர்த் திருப்பதிகம் | ,, |
| 202. | திருவாசகம்; நூலாராய்ச்சி குறிப்புரைகளுடன் | ,, |
| 203. | ஆதீனப் பல்கலைக்கல்லூரி 3-வது ஆண்டு அறிக்கை | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 204. | சிவாலய தத்துவமும் கும்பாபிஷேக மகத்துவமும் | 1949 |
| 205, | திருமாந்துறைத் திருப்பதிகம் | ,, |
| 206, | தருமபுர ஆதீன பிரசாரவாகன முதல்ஆண்டு அறிக்கை | ,, |
| 207. | வாரவழிபாடு | ,, |
| 208. | திருவானைக்காத் திருப்பதிகங்கள் | ,, |
| 209 | சைவம் ஆங்கிலக்கட்டுரைகள் | ,, |
| 210. | திருவிடைமருதூர்த திருப்பதிகங்கள | ,, |
| 211. | தமிழ் இசை | ,, |
| 212, | திருவாவடுதுறைத் திருப்பதிகஙகள் | ,, |
| 213 | திருவீழிமிழலைத் திருப்பதிகங்கள் | 1950 |
| 214 | சிவராஜ்யா ஆஙகிலக்கட்டுரைகள் | ,, |
| 215, | திருசெம்பொன்பள்ளித் திருப்பதிகம் | ,, |
| 216, | கும்பகோணம் திருப்பதிகஙகளுடன் | ,, |
| 217 | திருவாரூர் மும்மணிக்கோவை C K S விரிவுரையுடன் | ,, |
| 218. | திருக்கருகாவூரத திருப்பதிகஙகள் | ,, |
| 219. | திருப்பாற்றுறைத் திருப்பதிகம் | ,, |
| 220 | முததமிழ்முழக்கம் தமிழ்க்கட்டுரைகள் | ,, |
| 221. | திருப்பைஞ்ஞீலித் திருப்பதிகங்கள் | ,, |
| 222 | திருப்பாச்சிலாசசிராமத திருப்பதிகங்கள் | ,, |
| 223. | காசியாத்திரை | ,, |
| 224 | திருச்சிராப்பள்ளித திருப்பதிகங்கள் | ,, |
| 235. | திருமூக்கீச்சரத திருப்பதிகம் | ,, |
| 226, | திருாங்கோய்மலைத் திருப்பதிகம் | ,, |
| 227 | சைவத்தின் மறுமலர்ச்சி | ,, |
| 228. | திருவாட்போக்கித திருப்பதிகம் | ,, |
| 229. | திருக்கடம்பந்துறைப் திருப்பதிகம் | ,, |
| 230, | செநதமிழ முருகன் | ,, |
| 231. | திருப்பராய்த்துறைத் திருப்பதிகங்கள் | ,, |
| 232. | 25-வது மகா சந்நிதானம் 4-வது ஆண்டு ஆட்சி அறிக்கை | ,, |
| 233 | திருக்கற்குடித் திருப்பதிகங்கள் | ,, |
| 234. | திருக்குறள் — அறத்துப்பால் உரைவளம் | ,, |
| 235. | திருஎறும்பியூர்த திருப்பதிகங்கள் | ,, |
| 236. | 25-வது மகா சந்நிதானம் 5-வது ஆண்டு ஆட்சி அறிக்கை | ,, |
| 237, | திருவெம்பாவையும் திருப்பள்ளி எழுச்சியும் | ,, |
| 238. | திருநெடுங்களத் திருப்பதிகம் | ,, |
| 239. | மேலைத்திருக்காட்டுப்பள்ளித திருப்பதிகங்கள் | 1951 |
| 240. | திருஇரும்பூளைத திருப்பதிகம் | ,, |
| 241. | திருவேதிகுடித திருப்பதிகங்கள் | ,, |

| எண் | பெயர் | வருஷம் |
|---|---|---|
| 242. | திருத்தென்குடித்திட்டைத் திருப்பதிகம் | 1951 |
| 243. | திருப்புள்ளமங்கைத் திருப்பதிகம் | ,, |
| 244. | திருக்கேதீச்சரம், திருக்கோணமாமலைத் திருப்பதிகங்கள் | ,, |
| 245. | சச்சபுடவெண்பா தாளசாஸ்திர நூல் | ,, |
| 246. | திருச்சக்கரப்பள்ளித் திருப்பதிகம் | ,, |
| 247. | திருக்கோட்டூர்த் திருப்பதிகம் | ,, |
| 248. | திருப்பாலைத்துறைத் திருப்பதிகம் | ,, |
| 249. | தருமபுர ஆதீனம் 24-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக சுவாமிகள் இலவச மருத்துவநிலையத் திறப்புவிழா நிகழ்ச்சி | ,, |
| 250. | அசபாநடனப் பதிகம் | ,, |
| 251. | திருச்சத்திமுற்றத் திருப்பதிகம் | ,, |
| 252. | திருப்பட்டீச்சரத் திருப்பதிகம் | ,, |
| 253. | திருச்சோற்றுத்துறைத் திருப்பதிகங்கள் | ,, |
| 254. | திருக்குறள் - பொருட்பால், உரைவளம் | ,, |
| 255. | திருஇராமேச்சரத் திருப்பதிகங்கள் | ,, |
| 256. | திருப்பூந்துருத்தித் திருப்பதிகங்கள் | ,, |
| 257. | திருநாகேச்சரத் திருப்பதிகங்கள் | ,, |
| 258. | 25-து மகாசந்நிதானம் 6-வது ஆண்டு ஆட்சி அறிக்கை | ,, |
| 259. | திருநல்லூர்த் திருப்பதிகங்கள் | ,, |
| 260. | நித்தியபூசா லக்ஷணசங்கிரகம் | ,, |
| 261. | திரு-ஆவூர்பசுபதீச்சரத் திருப்பதிகம் | ,, |
| 262. | திருப்பழையாறைவடதளித் திருப்பதிகம் | 1952 |
| 263. | திருத்தென்குரங்காடுதுறைத் திருப்பதிகங்கள் | ,, |
| 264. | திருநீலக்குடித் திருப்பதிகம் | ,, |
| 265. | திருஞானசம்பந்தர் அற்புதங்கள் அஷ்டோத்திரங்களுடன் | ,, |
| 266. | திருவைகன்மாடக்கோயில் திருப்பதிகம் | ,, |

# செய்தித்தாள்கள் சொல்லுகின்றன.

## அறத்துப்பாலைப்பற்றி...

சைவ ஆதீனங்கள் காலத்துக்கேற்ற தமிழ்ப்பணியாற்ற முன்வந்திருப்பது போற்றுதற்குரியது. இப்பொழுது திருக்குறள் பதிப்பு ஒன்றைக் கொண்டுவர முயற்சிசெய்து வருகிறது. இப்பதிப்பு, தருமபுர ஆதீனத்தார் வெளியிட்ட நீதிநெறி விளக்கப் பதிப்பைப்போல் திருக்குறளைப்பற்றிய எல்லா விஷயங்களையும் (Variorum Edition) கொண்டதாயிருக்கும்.........

—ஈழகேசரி.

தருமபுர ஆதீனத்தார் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்துவரும் அரிய தொண்டு அனைவரும் அறிந்ததே! அவ்வப்போது வெளியிட்டுவரும் அரிய நூல்கள், தமிழ்ப் பிரியர்களுக்கு இன்பம் அளித்து வருகின்றன. இப்பொழுது, தீபாவளிப் பண்டிகைக்கு என்று ஒரு இனிய பிரசாதமென, திருவள்ளுவ தேவ நாயனாரின் வாழ்க்கைச் சாணையில் ஒளி தீட்டப்பெற்ற அறிவு மணிகளான திருக்குறளை, அற்புதமாக அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்கள். அதன் அட்டைக்குப் போடப்பட்டுள்ள வர்ண அங்கிமீது இந்தியாவின் தென்பாகத்தில் அமர்ந்திருக்கும் திருவள்ளுவர் உருவமும், அவரது திருக்குறள் பிரான்சு, இங்கிலாந்து, ஜெர்மனி, ருஷ்யா, இத்தாலி, தென் அமெரிக்கா, சைனா, ஸ்பெயின் ஆகிய நாடுகளில், அந்தந்த நாடுகளில் அந்தந்தப் பாஷையில் வெளியிடப் பட்டுள்ளன என்பதைக் காட்டுவதற்கான குறிகளும் தென்படுகின்றன.........

இது ஒரு அரிய வெளியீடு. ஒவ்வொரு தமிழனது மனையிலும் இருக்க வேண்டிய வெளியீடு. மிகச் சிறந்தமுறையில் இதனைப் பைண்டு செய்திருக்கிறார்கள்.

—நாரதர்.

.........தருமபுர ஆதீனகர்த்தர்கள் பல்லாண்டுகளாகத் தமிழ்மொழி, கல்வி, சமயம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக அரும்பணிகள் ஆற்றிவருகின்றனர். அரிய நூல்கள் பலவற்றை நல்லதாளில் அழகாகப் பதிப்பித்து வெளியிட்டிருப்பதன் மூலம் அவர்கள் செய்துள்ள சேவையைத் தமிழ்ப்பெருமக்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. சமீபத்தில் அவர்கள் வெளியிட்ட திருவாசகப்பதிப்பை நாம் ஏற்கனவே இப்பகுதியில் பாராட்டி எழுதியிருந்ததை வாசகர் அறிவர். இப்போது வெளிவந்துள்ள திருக்குறள் உரைவளம் என்னும் அழகிய நூலும் அவர்களின் சேவையைப் பெருமைப் படுத்துகிறது என்று துணிந்து கூறலாம்.

இன்று தமிழ் மக்களிடையே திருக்குறளின்பால் பேரார்வம் பொங்கி வழிகின்றது. திருக்குறளைப் பண்டிதர் பாமரர் அனைவரும் படித்துப் பயனடைய வேண்டி, உரையுடன் கூடிய பல பதிப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இப்

பதிப்புகளின் காரணமாகத் திருக்குறள் வாசகர்களின் தொகையும் பெருகிவருகிறதென்றே துணிந்து கூறுவோம். இந்தச் சந்தர்ப்பத்திலே தருமபுர ஆதீனத்தார் தாமும் ஒரு புதிய பதிப்பை வெளியிட்டுள்ளார்கள். பலபதிப்புகளுக்குக்கிடையே ஒன்றென இருந்துவிடாமல் பல தனிச் சிறப்புகளுடன் விளங்குகின்றது. முதலாவது நல்ல தாளிலும் பெரிய எழுத்திலும் வாசகர் விருப்புடனும் அநாயாசமாகவும் படிக்கும்வகையிலும் அழகுறப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. தமிழர் போற்றும் பெரு நூலொன்றை இவ்வண்ணமாகப் பதிப்பிக்கவேண்டும் என்று எடுத்துக்காட்டுவது போல அமைந்துள்ளது இப்பதிப்பு.. . உண்மையில் இது உரைவளமேயாகும்.

—சுதேசமித்திரன்.

. .. மடாலயங்கள் எவ்வளவு நல்ல தொண்டுபுரிந்து வந்திருக்கின்றன என்பதற்கு ஓர் அருமையான அத்தாட்சி இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது

'திருக்குறள் – உரைவளம்' என்னும் நூல் கண்ணைக்கவரும் தோற்றத்துடன் தமிழன்பர்களுக்கு அரும்பெரும் விருந்தாக வெளிவந்திருக்கிறது. வெளியிட்டவர்கள் தருமபுர ஆதீனத்தார்,

மேலட்டையில் திருவள்ளுவரின் தவ வடிவம் திகழ்கிறது. வள்ளுவர் பாரதத்தாயின் அருந்தவப் புதல்வர் என்பதைக் குறிப்பிட இந்தியாவின் படம் பின்னணியில் திகழ்கிறது. திருக்குறள் என்னென்ன தேசத்துப் பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறதோ, அந்தந்தத் தேசங்களின் படங்கள் இந்தியாவின் படத்தைச் சுற்றிலும் திகழ்கின்றன. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற பாரதியாரின் வாக்குக் கீழே பொறிக்கப் பட்டிருக்கிறது. மொத்தத்தில், இந்த நூலின் அட்டையே சிந்தனைக்கு ஓர் அரிய விருந்தாக அமைந்திருக்கிறது.

—கல்கி.

. . பல்வேறு நூல்களைப்புரட்டிப்பார்க்கும் சிரமமில்லாமல் குறள்களின் கருத்துக்களை எளிதில் உணர்வதற்கு இந்நூல் பெரிதும் பயன்படும். பதிப்பாசிரியர் ஸ்ரீ தண்டபாணி தேசிகரின் ஆழ்ந்த புலமையும் பரந்த அறிவும் ஆராயச்சித் திறனும் வெளிப்படுகின்றது. . இப்புத்தகம் பெரிய அளவில் பருமனான எழுத்தில் வாசிப்பதற்கு உற்சாகம் ஏற்படும் வகையில் அச்சிடப்பட்டுள்ளது. எல்லா அம்சங்களிலும் சிறந்துவிளங்குகிறது தருமபுர ஆதீனம் இங்ஙனம் செய்துவரும் தமிழ்ப்பணி மிகவும் பாராட்டத்தக்கது. . ......

—தினமணி.

.. .திருக்குறளோ பெரும்பாலும் இன்றும் புதுமையானது; என்றும் புதுமையானது. இந்நூலுக்கு இப்புதியபதிப்பு, தருமபுர ஆதீன கர்த்தரின் பிறந்த நாள் அணிவிழா மலராக மலர்ச்சிப்பெற்றிருப்பதுடன், தமிழகம் கொண்டாடி வரும் மறுமலர்ச்சித் திருவிழாவுக்கே ஓர் அணி மலராகவும் மணம் தருவதாகும்..........

தருமபுர ஆதீனம் பொதுவாகத் தமிழ்ப்பணியும், சிறப்பாகச் சைவத்திற்கு மறுமலர்ச்சிப் பணியும் செய்துவருவதைத் தமிழன்பர்களும் ஆஸ்திக அன்பர்களும் பாராட்டிவருகிறார்கள் என்பதில் ஐயமில்லை.... ..

—ஆனந்தவிகடன்.

The Dharmapuram Adhinam has included propagation of Tamil literature by means of valuable publications of ancient books on morals, ethics and religion in its scheme of religious emancipation of the land. The present publication surpasses many of its predecessors in size, beauty and value.

No other book in Tamil has attracted grater attention of scholars than the Kural of Valluvar. It is reputed to have possessed ten commentaries of which only a few are available at present. The vast amount of literature that has grown round the work in the shape of Kural Venbas such as Somesar Muthumozhi Venba, Siva Siva Venba and the like, the very many translations of the texts in various Indian and foreign languages and the extraordinary influence which it had in later Tamil literature warrant the preparation of a variorum edition of the work of a comprehensive and thorough nature. Any labour in that line will be amply rewarded. It is happy to find that the present publication is a beginning towards that end. It gives in one volume the commentaries of Parimelazhagar, Manakkudavar, Paruthiyar and Kalingar. The available other commentaries are clubbed under one comprehensive heading 'Old Commentaries' among modern commentators Kavirajapandithar is referred to in footnotes.

The learned editor has added explanatory notes on the above commentaries elaborating the grammatical hints shown in them, has given extracts from other works in Tamil where Kural thought and word are handled and has shown parallel quotations from other literary works. Thus much help has been attempted to be given to the reader who desires to have a full grasp of the great master's thought and to do research work in the work. Introductory chapters on the life of the author and commentators are written and an attempt has been made to analyse under various heads the cultural topics mentioned in the work. An index is added arranging difficult words occurring in the text, it would have been more useful if idems had also been added to the list.

—The Hindu.

.... . இப்பெரிய நூல் வெகுசுந்தரமாக அச்சிடப்பட்டிருக்கிறது. புத்தகத்தின் முகப்பு அட்டை பல வண்ணங்களுடனும் வள்ளுவர் திருவுருவத்துடனும் கண்கவர் வனப்புடன் திகழ்கிறது.........

—திருத்தம்

ஆதீனத்திலிருந்து வெளிவந்துள்ள திருக்குறள் உரைவளம் என்பது இதுவரை வெளியான எல்லாப்பிரதிகளையும்விடப்பல்லாற்றானும் பாராட்டப்பெறும் பான்மை யுடையதாய் இருக்கிறது. செவ்விய பெரிய எழுத்துக்களால் வெள்ளிய வொள்ளிய தாளில் தெள்ளிய முறையில் அச்சிடப்பெற்றுக் கண்கவா வனப்புடைய தாய்க் கட்டப்பெற்றுக் காட்சியளிக்கின்றது.

திருக்குறளை வாசிக்கும் புலவர்கட்கும், பிறருக்கும் பல உரையாசிரியர் கருததுக்களையும் ஒருசேர உணர்ந்து கோடற்கும், அவற்றில் பொதிந்துள்ள நயங்கள் விளங்குதற்கும் 'இந்த உரைவளம்' பெரிதும் துணையாய் நின்று உதவத்தக்க தாகும் தமிழுலகிற்குச செயயதக்க உதவிகளுள சாலச்சிறந்ததாயுளள கலை வளஙகளுள், இததகைய திருக்குறள் உரைவளததைப் புலவர் உலகம் பலவாறு புகழ்ந்து போற்றக்கூடிய முறையில் தொகுக்க முன்வந்த திரு. தண்டபாணிதேசிகரது கல்வி கேள்வி யறிவு, ஆராய்ச்சிததிறன், அயரா உழைப்பு முதலியவை அறிஞருலகம் உளளத்து உவந்து பாராட்டுதற்கு உரியனவேயாம். .. .. .

—யதார்த்தவசனி.

..... திருக்குறளின் எத்தனையோ பதிப்புகள் வெளிவந்திருக்கின்றன. எல்லாவற்றிலும் இது மிக மிக மேன்மையான பதிப்பு. உயர்ந்த காகிதத்தில் வெகு அழகாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதுமாததிரமல்ல, திருக்குறள் நல்ல முறையில் ஆராய்சசி செய்யப்பட்டு ஆஙகாஙகு மற்றும் பல நூல்களிலிருந்து மேற்கோளும் தரப்பட்டிருக்கிறது.

எல்லா அம்சங்களிலும் பூரணததுவம் பெற்ற இப்பதிப்பு வெளியீடு தமிழுக்குச செய்யப்பட்டுள்ள சிறந்தசேவை என்பதில் சந்தேகமில்லை. தருமபுர ஆதீனகர்ததர் அறத்துப்பாலையடுத்து மற்றபால்களையும் வெளியிட்டு இச்சேவையை விரைவில் பூர்த்தி செயவார்கள் என்று நம்புகிறோம்.

—தினசரி.

One book which can bring together writers and readers is Tirukkural. Fortunately many books are published on Valluvar's couplets. Hardly a month passes without a publication on the ethics of this great work. Of all the editions that have been brought out Tirukkural - Uraivalam, containing the Arathupal with the ten ancient commentaries, is the most magnificent. Sri-la-Sri Subramanya Deshikar the Chief of Dharmapuram Mutt, has done an immense service to Tamil literature by bringing together all that is said by scholars on the couplets. .

—The Indian P. E. N.

பரிமேலழகர் முதலிய பழைய உரையாசிரியர்களின் உரை, ஒப்புமைப்பகுதி, மேற்கோள விளக்கம், குறிப்புகள ஆகியவற்றோடு இப்பதிப்பு அழகாகப் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. பல காலமாக ஆராய்ந்து தொகுதத உழைப்பும், ஆழ்ந்து பயின்ற

பயிற்சியும், பல நூல்களைப் படித்து நோக்கிய புலமையும் சேர்ந்தாலன்றி இத்தகைய பதிப்பை வெளியிட இயலாது..........

—கலைமகள்.

## பொருட்பாலைப்பற்றி...

.........திருக்குறள் அறத்துப்பால் உரைவளம் சிறந்தமுறையில் வெளி வந்து ஆண்டொன்று கழிவதற்கிடையில் 70 அதிகாரங்கொண்ட பொருட்பால் அந்த அறத்துப்பாலைக்காட்டிலுஞ் சிறந்த முறையில், 'கிரவுன்' பிரமாணத்தாள் நான்குபக்கங்கொண்ட 1120 பக்கங்களுடன் உயர்ந்தகாகிதத்தில் தெளிவான முறையில் அச்சிட்டு வனப்புவாய்ப்பக் கட்டப்பெற்று வெளிவந்ததென்றால் மேற்படி தம்பிரான் சுவாமிகள், வித்துவான் என்னுமிருவருடைய கருமமாற்றுந் திறனை என்னென்றுசொல்லிப் பாராட்டுவது! காமத்துப்பால் உரைவளமும் ஆண்டவ னருளால் விரைவில் வெளிவருமெனத் தமிழுலகம் எதிர்பார்த்திருக்கலாகும்......

—இந்துசாதனம்.

.........இப்பதிப்பு இல்லாவிடில் திருக்குறளின் பல பெரியோரது உரைகள் வெளிவராது மாய்ந்தே போய்விடக்கூடியதா யிருக்கும். இதனை வெளியிட ஆணை தந்த தருமபுர ஆதீன மகாசந்நிதானங்கள் இதுபோலப் பலப்பல தமிழ்ப் பணிகளும் சைவப்பணிகளும் செய்து வருகின்றார்கள், அவர்கள் நீடு வாழ்க. இத்திருப்பணியில் அரிய சேவை செய்து தமிழுலகத்தைக் கடமைப்படுத்தியுள்ளவர் ஷை ஆதீனம் வித்துவான் ஸ்ரீ தண்டபாணி தேசிகராவர். அவரும் இத்தகைய பெரும் பணிகள் செய்து நீடு வாழ்க.......

—சித்தாந்தம்.

.........பெரும்பொருட்செலவில், இவ்வெளியீட்டை உதவிய ஆதீனத்திற்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது, எதையெடுத்தாலும் நினைக்கக்கூட முடியாத அளவுக்கு விலையேறியிருக்கிற இந்நாளில், இத்தகையதொரு அழகான பெரிய-பயனுடைய புதிய முறையமைந்த பதிப்பைத் தமிழகம் பெற்றிருப்பது, பெறற் கரிய பேறாகும்.......

— செட்டிநாடு.

.........தற்போது திருக்குறள் உரைவளம் பொருட்பால் நூலொன்றுவெளி யிட்டுள்ளார்கள், இந்நூல் இதுகாறும் பற்பல அறிஞர்களால் எழுதப்பட்ட உரைக ளனைத்தையும் கொண்டு உயரிய கருத்துக்களோடு விளங்குகிறது. இத்தகைய நூலொன்று இதுகாறும் யாரும் வெளியிட்டதில்லை. தமிழுலகுக்கு இஃது ஓர் சிறந்த பயன் விளைவிக்கும் பணியாகும். நூல் நவீனமுறையில் கண்ணைக்கவரும் வனப் புள்ளதாய் கருத்தையீர்க்கும் தகையதாய் மிளிர்கின்றது. இத்தகைய பணிபல மேலும் புரிந்து தருமையாதீனம் விளங்கத் தனிமுதல் கடவுளைத் தாழ்ந்து இறைஞ்சுதும்.......

—தொண்டன்.

.திருக்குறளை எல்லா உரைகளுடன் பகல விளக்கங்களுடன் ஒரே நூலில படித்துணரும்வாய்ப்பை இப்பெருமைவாய்ந்த பதிப்பின்மூலம் தமிழருக்கு அளித்திருக்கும் தருமபுர ஆதீனத்தாரை மீண்டும் வாழ்த்துகிறோம்.

—தினசரி.

.... 1120 பக்கங்களுக்கு மேற்கொண்ட இந்தநூல் தமிழ் மக்களுக்கு ஒரு பெரிய கருவூலம் என்றே சொல்லவேண்டும். தமிழராவார் யாவருக்கும் பயன்படும் நூல், அழகியபதிப்பு, அறிவுத திறத்தையும் உழைப்பையும் காட்டும் பதிப்பு, பதிப்பாசிரியரின் ஆற்றலைத தமிழ்நாடு நன்கு போற்றிப் பாராட்டும் என்பதில் ஐயமில்லை.

— கலைமகள்.

திருக்குறள் முழுமையும், அதற்குப பேராசிரியர்கள் பலர் அவ்வப் போது எழுதிய உரைகளையும் நன்கு ஆராய்ந்து அதனை ஆரப்பருகிவரும் புலவர் தண்டபாணி தேசிகா அவர்களைக்கொண்டு அறத்துப்பாலையும், பொருட்பாலையும், உரைவளததுடன் திருத் தருமபுர ஆதீனம் அழகிய நல்ல பதிப்பாக வெளியிட்டிருப் பது மகிழ்சசிக்குரிய செய்தியாகும். நூலின் பெருமைக்கேற்ற அழகும் அளவும் பெற்றிருப்பது அப்பதிபபிற்குரிய தனிசசிறப்பாகும்.

நூல் முழுவதும் ஒரே அறிவுக்களஞ்சியமாக விளங்குகிறது இந்நூல் ஆராயச்சி உணாவுள்ள அறிஞர்களுக்குப் பெருவிருந்தாகும். தமிழறிந்த ஒவ்வொருவருடைய இல்லங்களிலும் இருக்கவேண்டிய நூல்.......

— குருகுலம்.

. . . திருக்குறளின் பொருளாழத்தையும் கருததழகையும் கண்டு இன்புறப பலபழைய உரைகளையும் ஒருசேரத் தொகுத்துப் பார்ப்பது பயன்தரும் என்பதிலும் ஐயமில்லை. இத்தனிப்பெரும் பணியைத்தான் தொகுப்பாசிரியர் ஸ்ரீ தண்டபாணி தேசிகர் செய்து முடித்திருக்கின்றார். இப்பேருழைப்பு இப்போது 'திருக்குறள் - உரைவளம்' என்ற பெயரால் முதல் இரண்டு பகுதிகளாகிய அறததுப்பாலுக்கும் பொருட்பாலுக்கும் உரைவளமாயத் தருமபுர ஆதீன வெளியீடுகளாக வெளிவந்திருக்கிறது.......

—ஆனந்தவிகடன்.

.........It is certainly a valuable edition and contribution to the library of good books and enrichment of knowledge. The Thirukkural is fast becoming a source of universal moral guide, information and inspiration, and at a time when the thirst for literary and moral literature is great the head of the Dharmapuram Adhinam has done an immense and imperishable service to the country and the world by bringing out this second part of Commentary on the Thirukkural with the help of Tamil scholars of approved merit and declared competency ......

—Free Press.

... ... சுதந்தரக் குடியரசில் வாழும் தமிழ் மக்கள் குடிகளின் சிறப்பியல்பு களையும் ஒற்றுமையுடன் நடக்கவேண்டிய பண்பாட்டினையும் விளக்கும் திருக்குறள் உரைவளத்தால் உரிமை கடமைகளை உணர ஏதுவாகும் எனபதால் இதனைப் போற்றவேணடியதாகும் ...

—சுதேசமித்திரன்.

......The authorities of the Dharmapuram Adhinam have placed the Tamil world in eternal obligation to them by following up their edition of Arattuppal of Kural with this sumptuous publication, presenting the Porutpal. The services of the Adhinams for the promotion of Tamil Literature and culture are universally known. For almost five centuries these Mutts have been the repositaries of learning and philosophy and undeterred by invasions and political upheavals, they have continued to keep the torch of knowledge burning. The Dharmapuram Adhinam has specially distinguished itself by its establishment of Tamil and Sanskrit Colleges, publication of ancient works and issuing of religious Journals. This edition has been published under the direct inspiration and guidance of the 25th Mahasannidhanam, Sri-la Sri Subramanya Desiga Gnana Sambanda Paramacharya Swamigal.........

—Indian Express

.. .தமிழ், சைவம் இரண்டும் பேணும் தருமபுர ஆதீனத்தார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட செலவைப் பொருட்படுத்தாது இந்நூலைப் பதிப்பித்து உதவியது மிகவும் பாராட்டத்தக்கது .

— திருச்சி வானொலிநிலையம்.

. பதி பசு பாசமாகிய முப்பாற்பொருளையும் முறை முறை வழங்கும் பரமாசாரியராகிய தருமபுர ஆதீன கர்த்தரவர்கள் அறம் பொருள் இன்பமாகிய முப்பாற்பொருளையும் மக்கள் யாவரும் தெற்றெனத்தெளிய உரைவிகற்பங்களுடன் முறையே வழங்க முற்பட்டுச் செய்தக்க செய்த சிறப்புடையராயினார்கள். இவர்கள் உலக நலனொன்றே குறிக்கொண்டு செய்துவரும் ஒப்புரவுகளுள், தலையாய நூற் கொடையாகிய இதனினும் சிறந்தது பிறிதில்லை. தொன்றுதொட்டு இளைஞரன்ன வண்மையால் பெரும்புகழ் வாய்ந்த தருமபுர ஆதீனம் மேலும் அம்முறையே நெடிது நிலவுக.

—செந்தமிழ்.

# தருமபுர ஆதீனம் இயற்றிவரும் பணிகள்.

1. தேவாரபாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.
2. சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசை முறைகளைப் பயிற்றுவிப்பது.
3, சிவஞான நூல்களைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.
4, சமய நுணுக்கங்களை நூல்களாக வெளியிடுவது,
5. தலங்கள்தோறும் திருப்பதிகங்கள் உரையுடன் வெளியிடுவது,
6, அறிஞரைக் கொண்டு ஆலயந்தோறும் அறவுரை வழங்குவது.
7, பிரசார வாகனத்தின் மூலம் தமிழ்நாடெங்கும் சமயம் வளர்ப்பது.
8 ஆங்கிலக்கலாசாலையில் தமிழ்ப்பரிசு அமைப்பது.
9, ஆதீனக்கோயில்தோறும் பண்ணிசைத் தமிழ் வளர்ப்பது.
10 தமிழ்க்கல்லூரி நிறுவி வித்வான் தேர்விற்கனுப்புவது.
11. வடமொழிக் கல்லூரி நிறுவிச் சிரோமணித் தேர்விற்கனுப்புவது.
12, ஏழிசையும் இனிதோங்க இசைப்பிரிவு அமைப்பது
13 நூல் ஆராய்ச்சிகள் எழுதுவித்து வழங்குவது
14, விஞ்ஞான மெஞ்ஞான நூல்களை வெளியிட்டு வழங்குவது.
15. சமய நூல்களைத் தக்கமுறையில் வெளியிடுவது.
16. "ஞானசம்பந்தம்" என்னும் மாதப்பத்திரிகை வாயிலாகச்சமயஉண்மைகளை அறிவுறுத்துவது.
17. சமயக் கூட்டங்களுக்குத் தக்கன செய்வது.
18, தமிழ்ப்பணி சமயபபணி செய்பவர்க்குதவுவது.
19. தமிழ்நாட்டுத தல வரலாறுகளை எழுதுவித்து வழங்குவது.
20 புத்தகசாலையமைத்துப் பழந்தமிழ் நூல்களைப் பாதுகாப்பது.
21. நாடோறும் ஹரிஜன மாணவர்களுக்கு அன்னமளிப்பது
22. பொருளும் புத்தகமும் அளித்து ஏழை மாணவர்களுக்கு உதவுவது.
23. மாயூரததில் பிரசவ ஆஸ்பத்திரி கட்டியது.
24. குடிமக்கட்கு அடிக்கடி எண்ணெய் முழுக்கும் அன்னமும் அளித்து வருவது.
25. காந்தி நிதி, ஹரிஜன பண்டு, அகதிகள் நிவாரணநிதி,காசநோய் ஆஸ்பத்திரி உதவி நிதி முதலிய பற்பல பொதுஸ்தாபனங்கட்குப் பெருந்தொகையளிப்பது முதலியன.